In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சிவ புராணம்



EASWARI LIBRARY
Ph : 42636919, 28353199
www.easwarilibrary.in
e mail: easwarilibrary@gmail.com

கார்த்திகேயன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ சிவ புராணம்

எழுதியவர்

கார்த்திகேயன்

Easwari Library
001-E26787

கிரி

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Book Name : **SRI SHIVA PURANAM**
Language : Tamil
Copyright : GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
2nd Edition : May 2009
17th Reprint : September 2013
Pages : 432
Price : ₹ 100.00
ISBN No. : 978-81-7950-194-8
Book Size : Crown
Paper : Maplitho Copies : 1000
Published by : GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
Regd. Office : Modi Niwas, Opp.Post Office, Matunga, Mumbai - 19. ✆ (022) 2412 1344
Admn. Office : 134 (58/2), T.S.V. Koil Street, Mylapore, Chennai - 4. ✆ (044) 2464 3551

All rights reserved. This book, or parts thereof, may not be reproduced in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the Publisher.

Our Branches:

MATUNGA : Modi Niwas, Opp.Post Office, Matunga, Mumbai - 400 019.
✆ (022) 2412 2316, 2410 3140, 2411 8107

DOMBIVILI (E) : Seva Dham "A" Wing, Shripal Nagar, Rajaji Path, 4th Cross, (Madrasi Mandir), Opp.: Ponnu Guruvayurappan Temple, Dombivili (E), Thane Dist. 421 201. ✆ (0251) 244 9585

GOREGAON (W) : Shop No. 2, Siddhi Vinayak Apts, Sita Ram Mandir Road, Bangur Nagar, Mumbai-400 104. ✆ (022) 2876 7298

NERUL : S.I.E.S. Engineering & Computer College Complex, Anjaneyar Temple, Navi Mumbai - 400 706. ✆ (022) 2770 7664

CHEMBUR : Mythili Building, Plot No.72, Ground Floor, Road No.2, Pestom Sagar, Chembur, Mumbai - 400 089. ✆ (022) 25256011 / 25257012

MYLAPORE : 14 (Old 10), Sri Kapaleeswarar Sannadhi Street-600 004. ✆ (044) 2464 0376

NANGANALLUR : 14 (Old 8), 10th Street, Near Raghavendra Temple-600 061. ✆ (044) 2267 1335

ALWAR THIRUNAGAR : Shop : A, Plot No.17, Gandhi Road, (Opp.) Chinthamani Vinayagar Temple, Chennai - 600 087. ✆ (044) 2377 5483

KANCHIPURAM : 11/5B&146-B, Kamakshi Amman Sannadhi Street-631502. ✆ (044) 2722 4415

ANNANAGAR : Door No 179, Y Block, 1st Street, 6th Main Road, Annanagar, Chennai - 600 040. (Opp. Tower Park & Sri Ayyappan Temple). ✆ (044) 42666921

COIMBATORE : F6, T.M.House, 92, Thiruvenkatasamy Road, R.S.Puram-641 002.
✆ (0422) 254 1523

MADURAI : 15, North Tower Street, (Opp. Mottai Gopuram)-625 001. ✆ (0452) 262 8090

TRICHY : C-58, 5th Cross, Fort Station Road, Thillai Nagar - 620 018. ✆ (0431) 2740 772

SECUNDERABAD : Sri Subramanya Swami Devalayam, Padmarao Nagar, Skandagiri-500 061. ✆ (040) 2750 3046

BANGALORE : 23/3, 5th Cross, Sampige Road, Malleshwaram-560 003 ✆ (080) 2356 3001.

NEW DELHI : Shop No.6, 92 G/3, Baba Gangnath Market, Opposite Community Centre, Munirka Village, New Delhi - 110067. ✆ (011) 26165077 / 26165078

E-mail : sales@giri.in *Website : www.giri.in*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ பஞ்சாக்ஷர யந்த்ரம்



சிவ பஞ்சாக்ஷர - ஸ்தோத்ரம்

நாகே3ந்த்3ரஹாராய த்ரிலோசனாய
    ப4ஸ்மாங்க3ராகா3ய மஹேச்'வராய |
நித்யாய சு'த்3தா4ய தி3க3ம்ப3ராய
    தஸ்மை நகாராய நம: சி'வாய || 1

மந்தா3கினீ–ஸலிலசந்த3ன–சர்சிதாய
    நந்தீ3ச்'வர–ப்ரமத2நாத2–மஹேச்'வராய |
மந்தா3ரமுக்2ய–ப3ஹு–புஷ்ப–ஸுபூஜி3தாய
    தஸ்மை மகார–மஹிதாய நம: சி'வாய || 2

சி'வாய கௌ3ரீ–வத3னாப்3ஜ3ப்3ருந்த3
    ஸூர்யாய த3க்ஷாத்4வர–நாச'காய |
ஸ்ரீ நீலகண்டா2ய வ்ருஷத்4வஜா3ய
    தஸ்மை சி'காராய நம: சி'வாய || 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

எண்.	பொருள்	பக்கம்
1.	ஜோதிர் லிங்கம் தோன்றுதல்	5
2.	சிவ தத்துவம்	12
3.	உலகச் சிருஷ்டி	15
4.	தக்ஷன் கர்வ பங்கம்	17
5.	மன்மத தகனம்	21
6.	பர்ண சாலையில் புதிய காட்சி	29
7.	பார்வதி பரிணயம்	38
8.	தாருகன் வதமும் திரிபுர தகனமும்	57
9.	சிவலிங்க பூஜை	74
10.	கணேசன் திரு அவதாரம்	93
11.	கணபதி விவாகம்	108
12.	ஜோதிர் லிங்கங்களின் விவரம்	114
13.	பிரம்மஹத்தி தோஷம் நீங்கும் புண்ணிய தலம்	118
14.	அத்திரி ஆசிரமத்தில் கங்கை	127
15.	அ. தாருகாவனத்தில் திவ்விய நடனம்	135
	ஆ. அந்தகாசுரனுக்கு அருளிய ஈசன்	143
16.	ஆதி சைவர் மகிமை	145
17.	சந்திரனுக்கு அனுக்கிரகித்த சோமேசர்	149
18.	அ. உஜ்ஜயினி மகா காளேசர்	153
	ஆ. ஓங்கார லிங்கம்	156
19.	பத்ரிகாச்ரமத்தில் கேதாரேசுவரர்	158
20.	அ. பீமனை சம்ஹரித்த சங்கரர்	160
	ஆ. காசி க்ஷேத்திரம்	165

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21.	கோதாவரிப் பிரபாவம்	170
22.	இராவணன் பெற்ற சாபம்	181
23.	போகேசுவரரின் பக்தன்	184
24.	சேதுக்கரை இராமேசுவரர்	188
25.	பக்தைக்கு அருளிய குச்ரேசர்	190
26.	நரசிம்மருக்குத் தரிசனம் தந்த சரபர்	199
27.	உயிர் தியாகம் செய்த வேடுவன்	210
28.	அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறுதல்	213
29.	சிவனிடமிருந்து விஷ்ணு சக்கராயுதம் பெறுதல்	227
30.	சிவராத்திரி விரத மகிமை	229
31.	வேடன் பெற்ற ஞானம்	233
32.	சிவாலயத்தில் தீபம் ஏற்றுவதால் உண்டாகும் பலன்	242
33.	தேவியை விரும்பிய அரக்கன்	247
34.	நதி தீரத்தில் நல்லதோர் நாடகம்	251
35.	உஷா பரிணயம்	257
36.	சும்ப நிசும்பர் வதம்	269
37.	அமிர்தம கடைதல்	274
38.	காமன் கதை	284
39.	சிலாதருக்கு அருளுதல்	298
40.	சிவாலயம் எழுப்புதலால் அடையும் பலன்கள்	303
41.	நரகவேதனையும் தான விசேஷமும்	310
42.	புராணச் சிரவணம்	315
43.	பூதான விசேஷம்	318
44.	தல ஹஸ்தி தானம்	320
45.	சதுர்தசி விரத மகிமை	323
46.	துலா புருஷ தானம்	330

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

47.	அஷ்ட வக்கிரரின் மன உறுதி	337
48.	அருந்ததியின் சிறப்பு	341
49.	யமனிடம் வாதாடிய சாவித்திரி	343
50.	சிருஷ்டி விஸ்தாரம்	352
51.	பிதுர் தேவர்கள்	371
52.	அஷ்டமி விரத மகிமை	374
53.	ஈசன் சுடலையாண்டியான விருத்தாந்தம்	379
54.	சிவ க்ஷேத்திரங்கள்	382
55.	தந்தைக்கு உபதேசித்த ஹரிகேசன்	384
56.	பிரதாப மகுடன் முக்தி அடைந்தது	386
57.	வேடன் பெற்ற அருள்	387
58.	உபமன்யு அருள் பெறுதல்	390
59.	நாரதர் கர்வபங்கம்	393
60.	ஸ்ரீராமனைப் பரீக்ஷித்த பார்வதி	399
61.	சிவன் சந்திரசேகரராதல்	400
62.	ஜாலந்திரன் வதம்	402
63.	தேவர்கள் கர்வ பங்கம்	411
64.	அத்ரி முனிவருக்கு அருளுதல்	412
65.	க்ரஹபதி பெற்ற அனுக்கிரகம்	414
66.	ருத்ராட்ச மகிமை	419
67.	ருத்ராட்ச முகங்களும், அதன் பயன்களும்	421
68.	விபூதி மகிமை	425
69.	ஈசனின் ஐவகைத் தோற்றம்	426
70.	பஞ்சபூத ஸ்தலங்கள்	427
71.	நடன ஸ்தலங்கள்	427
72.	பன்னிரு ஜோதிர்லிங்கங்களின் விவரங்கள்	428

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ புராணம்

சிவ சிவ என்று ஒரு நாமம் சொல்லடா கெட்ட பாமரமே உனக்கதில் பாரம் என்னடா ? பொல்லாத யமன் வந்தால் விடமாட்டான் சாம்பசிவ தாசன் என்றால் தொடமாட்டான்.

- ஒரு பழம் பாடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. ஜோதிர் லிங்கம் தோன்றுதல்

ஒருசமயம் நைமிசாரண்ணியத்திலிருந்த முனிவர்கள் சூதமுனிவரைப் பணிந்து,"பரமபாகவத சிகாமணியே, தங்களிடம் ஒரு கோரிக்கை. தங்கள் திருவாக்கிலிருந்து அமுதமாகிற பகவத்விஷயங்களை எத்தனை எத்தனையோ கேட்டுப் பருகி நாங்கள் கிருதார்த்தர்களாகியுள்ளோம். புராணக் கடலாகிய தங்கள் பிரவசனங்களைக் கேட்கக் கேட்க, மேலும் அவற்றைக் கேட்டு ஆனந்திக்க வேண்டுமென்ற ஆவலே எழுகின்றது. கைலாசநாதனான சிவபெருமானுடைய தத்துவத்தையும், அவருடைய அனேக திரு அவதாரங்கள் பற்றிய அற்புத விருத்தாந்தங்களையும் அறிய விருப்பமுடையவர்களாயிருக்கிறோம். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூவகைத் தொழில்களுள் அழித்தலுக்குக் காரணகர்த்தாவாயிருக்கிற ஈசன், சிருஷ்டிக்கு முன்பு எவ்வாறு இருந்தார்; சிருஷ்டியின்போது எவ்வாறு இருந்தார்; பிரளயத்தின் போது எவ்வாறு இருந்தார் என்பது போன்ற விஷயங்களை எங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவரை வழிபட்டு அருட்கடாக்ஷம் பெறும் வழிமுறைகளையும் விளக்க வேண்டும்", என்று வேண்டினர்.

முனிவர்களின் இந்தக் கோரிக்கையைக் கேட்டு சூதமுனிவர் ஆனந்தப் பரவசமாகிச் சொல்லத் தொடங்கினார்.

"முனி சிரேஷ்டர்களே! உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நான் எப்போதும் காத்திருக்கிறேன். நீங்கள் இப்போது என்னைக் கேட்டதுபோல, முன்பு ஒரு சமயம் நாரதர் தம் பிதாவான பிரம்மதேவனிடம் கேட்டார். நான்முகனும் அவருக்கு அந்த விருத்தாந்தங்களைச் சொன்னார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகல லோகங்களிலும் சஞ்சரித்து வந்தபோது நாரதர், சிவபெருமானின் அனேகவித திருஉருவங்களைத் தரிசிக்க நேர்ந்தது. அந்த அந்தக் காலங்களில் ஈசன் அவ்வாறு அவதாரம் செய்ய நேர்ந்ததன் ரகசியங்களை அறிய எண்ணம் கொண்டு தம் பிதாவான பிரம்மதேவனிடம் வந்தார். அவரைப் பணிந்து வணங்கி, "தந்தையே ! பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனின் மகிமை அனைத்தும், தங்களால் சொல்லக் கேட்டிருக்கிறேன். லோக சஞ்சாரம் செய்துவரும் போது, சிவபெருமானின் அனேக வித திருஉருவங்களைத் தரிசித்தேன். அவருடைய அவதார ரகசியங்களை அறிய ஆவலாயிருக்கிறது. தாங்கள் தான் எனக்கு அவற்றை விவரித்துக் கூறவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

நான்முகனும் பெருமகிழ்ச்சி அடைந்தவராய், "நாரதா! சிவபெருமானின் மகிமைகளைக் கேட்ட மாத்திரத்திலேயே சகல பாபங்களும் நசித்துப் போய்விடும் எனச் சொல்லப் பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஈசனது தத்துவத்தை விஷ்ணுவினாலும் என்னாலும்கூட பூரணமாக அறிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் எனக்குத் தெரிந்தவரை உனக்குக் கூறுகிறேன்" என்று சொல்லி அந்த விருத்தாந்தங்களை எடுத்துச் சொன்னார், நான்முகன். "அவற்றை இப்போது நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன். கேட்டு ஆனந்தமடையுங்கள்" என்று சூதர், சிவபெருமானது அற்புத அவதார காரணங்களைக் கூறத் தொடங்கினார்.

"ஞானிகள் ஞானக் கண்கொண்டு பார்த்து மகிழும் பிரம்மம் என்பது அழிவற்றதாகும். அது ஸ்தூலமும் அல்ல; சூக்ஷமமும் அல்ல; சத்தியத்தையும் அறிவையும் உடையது அது. எல்லாம் அது; அதுவே எல்லாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பிரம்மத்திற்கு ஒரு இச்சை உண்டாயிற்று. அப்போது பிரம்மத்தினிடமிருந்து பிரகிருதி எனப்படும் மாயாதேவி தோன்றினாள். எட்டுக் கைகளும் பூரண சந்திரனின் பொலிவு கொண்ட முகவிலாசமும் உடைய அவள், நிகரற்ற அழகோடு அனேகவித ஆபரணங்களை அணிந்திருந்தாள். அவள் தோன்றிய அதே நேரத்தில் பிரம்மத்தினிடமிருந்து அழகிய புருஷனும் தோன்றினான்.

மாயாதேவியும், புருஷனும் ஒன்று சேர்ந்து தாங்கள் இருவரும் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமென்னவென்று ஆலோசித்து கொண்டிருக்கையில் ஓர் அசரீரி கேட்டது.

"உங்கள் சந்தேகத்துக்கான விளக்கம் தெரிய வேண்டு மானால் தவம் செய்யுங்கள்."

அசரீரி வாக்குப்படி இருவரும் கடுமையான தவம் மேற்கொண்டார்கள்.

வெகு காலம் சென்றது. ஒரு நாள் மாயாதேவியும் மாய புருஷனும் தங்கள் யோக நிஷ்டையிலிருந்து விழித்துக் கொண்டனர்.

கணக்கற்ற வருடங்கள் தவம் செய்திருப்பதைக் கண்டபோது அவர்களுக்கே ஆச்சரியமாயிருந்தது. அப்போது அவர்கள் தேகத்திலிருந்து ஜலப்பிரவாகமெடுத்தது. அப்பிரவாகம் சகல லோகங்களிலும் வியாபித்து எங்கும் ஒரே ஜலமயமாக நின்றது. மிகவும் களைப்பு அடைந்த அம்மகா புருஷன், பிரகிருதியோடு சேர்ந்து மகிழ்ச்சியோடு அனேக காலம் ஜலத்திலே நித்திரை செய்தான். அது முதல் அவனுக்கு நாராயணன் என்ற பெயர் விளங்கலாயிற்று. பிரகிருதி, நாராயணி என்ற பெயரோடு விளங்கினாள்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“பின்னர், பிரகிருதியிடமிருந்து மாறத் என்பது உண்டாயிற்று. மாறத்தினிடத்தில் ஸத்வம், தாமஸம், ராஜஸம் என்னும் முக்குணங்களும் உண்டாயின. அவற்றிலிருந்து சப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய பஞ்சதன் மாத்திரைகள் உருவாயின. இதிலிருந்து ஆகாசம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி எனப்படும் பஞ்ச பூதங்களும் உண்டாயின. பஞ்ச பூதங்களிடமிருந்து கர்மேந்திரியங்களான வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்களான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவையும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கும் உண்டாயின.

இந்த இருபத்து நான்கு தத்துவங்களையும் தன் சுவாதீனம் செய்து கொண்டு நாராயணன் ஜலத்திலே தூங்கும் போது, அவரது நாபியிலிருந்து அழகிய தாமரை மலர் ஒன்று தோன்றியது. எண்ணற்ற இதழ்களோடு கூடியதும் அனேக யோசனை அகலமும், உயரமும் உடையதாயும் நறுமணத்தோடு கூடியதுமான அம்மலரிலிருந்து ஹிரண்ய கர்ப்பரான நான்முகன் அவதரித்தார்.

மாயை காரணமாகப் பிரம்மதேவனுக்குத் தாம் யார் என்பதும், எங்கிருந்து வந்தோம் என்பதும், என்ன காரியத்துக்காகத் தாம் தோன்றியுள்ளோம் என்பதும் விளங்க வில்லை. எப்படியும் தம்மைத் தோற்றுவித்தவர் யார் என்பதைக் கண்டு கொள்ளவேண்டுமென்ற ஆவலில் அவர் தாமரை மலரின் அடிப்பாகத்திற்குக் காம்பின் வழியாக இறங்கத் தொடங்கினார்.

கீழே இறங்கிச் செல்லச் செல்ல, முடிவே இல்லாது பயணம் நீண்டது. எத்தனையோ வருட காலம் சென்றது. பிரம்மதேவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னமும் கீழே இறங்கிச் சென்று கொண்டிருந்தார். அவருக்குக் களைப்பு மேலிட்டது. கீழே செல்வதை நிறுத்தி விட்டு மேற்புறமாக ஏறத் தொடங்கினார். அங்கும் அவர் நாடிய காரியம் நிறைவேறவில்லை. இதழ்களுக்கிடையில் சுற்றிச் சுற்றி வந்தது தான் மிச்சம். யாரையும் காணவில்லை. அவர் மிகவும் சோர்வடைந்து மூர்ச்சையாகி விழுந்தார். அப்போது, "தவம் செய்தாயானால் நீ விரும்பும் காரியம் பூர்த்தியாகும்" என்று ஓர் அசரீரி எழுந்தது.

பிரம்மதேவன் பன்னிரண்டு வருடங்கள் தவம் செய்தார். அதன் முடிவில் சங்கு சக்ர பீதாம்பரதாரியாய் கோடி சூரியப் பிரகாசத்தோடு நாராயணன் அவருக்குக் காட்சி தந்தார்.

அவரைப் பார்த்ததும் நான்முகனுக்கு ஒன்றும் விளங்க வில்லை. நாராயணனைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டார்.

"வத்ஸ! உன்னைத் தோற்றுவித்தவன் நானே. ஸர்வ வியாபியான என்னை விஷ்ணு என்பர். உலக சிருஷ்டியின் நிமித்தம் உன்னைத் தோற்றுவித்தேன்" என்றார் நாராயணன்.

நான்முகன் 'கலகல' வென்று சிரித்தார்.

"நன்றாயிருக்கிறது உன் பேச்சு. சிருஷ்டித் தொழில் காரணமாக நான் உண்டாயிருக்க, என்னுடைய சம்பந்தம் இல்லாது நீ தோன்றியிருக்க முடியாது. அப்படியிருக்க என்னைப் பார்த்துக் 'குழந்தாய்' என்று கூப்பிட்டாயே, உனக்கு எவ்வளவு துணிவு இருக்க வேண்டும்?" என்றார், நான்முகன்.

நான்முகனின் வார்த்தைகளைக் கேட்டு, மோகனப் புன்னகை செய்தபடி, "நான்முகா, மாயையால் அலைப்புண்டிருக்கும் நீ, உண்மையை உணராது பேசுகின்றாய். உன்னை உண்டாக்கியவன் நானே. இருபத்து நான்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்துவங்களும் என்னுள் அடக்கம் என்பதை அறிந்து கொள். நான் இன்றி நீ இல்லை'' என்றார் விஷ்ணு.

விஷ்ணுவின் வார்த்தைகளை பிரம்மதேவன் ஏற்கவில்லை. தம் காரியத்துக்கு இடையூறு விளைவிக்க வந்திருப்பதாகவே அவரை எண்ணினார். அதனால் கடுமையான கோபம் அவரிடம் எழுந்தது. விஷ்ணுவிடம் சண்டைக்குப் போய் விட்டார். அப்போது இருவருக்குமிடையே கண்ணைப் பறிக்கும் ஜோதி ஒன்று தோன்றியது.

திடுக்கிட்ட இருவரும் விலகி நாற்புறமும் பார்த்தனர். அவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கோடி சூரியப் பிரகாசத்தோடு பிரம்மாண்டமான லிங்கம் ஒன்று அவர்களுக் கிடையே நிற்பது தெரிந்தது.

அப்போது விஷ்ணு பிரம்மதேவனைப் பார்த்து, "நான்முகா, நமது பூசலை சிறிதுநேரம் நிறுத்திக் கொள்வோம். இப்போது நம்மிடையே மூன்றாவது ஆசாமி ஒருவன் தோன்றியிருக்கிறான். அவன் யார் என்பதை நாம் முதலில் கவனிப்போம்'' என்றார்.

இருவரும் அந்த ஜோதி லிங்கத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அவர்களுக்குக் குழப்பமாகி விட்டது. அடி நுனி தெரியாது, பிரம்மாண்டமாக நிற்கும் அந்த லிங்கம் யார் என்பதை அறிய முடியாமல் விழித்தார்கள்.

"நான்முகா!'' என்று அழைத்தார் விஷ்ணு. "நீ ஹம்ஸமாக மாறி உயரே பறந்து சென்று இதன் நுனி எங்கிருக்கிறது என்பதை அறிந்து வா. நான் பாதாளலோகம் வரை சென்று இதன் அடிப்பாகத்தைத் தெரிந்து வருகிறேன்'' என்றார்.

அந்த க்ஷணமே விஷ்ணு, வெள்ளைப் பன்றியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருவெடுத்தார். மிகவும் பயங்கரத் தோற்றமுடைய அவ் வராகம் பூமியைக் குடைந்து கொண்டு கீழே சென்றது. அது முதல் அவருக்கு சுவேத வராகர் என்றும், அந்தக் கல்பத்துக்குச் சுவேத வராகக் கல்பம் என்றும் பெயர் விளங்கலாயிற்று.

விஷ்ணு பன்றியாகி பூமியினுள் சென்றதும் பிரம்மதேவன் ஹம்ஸமாகி உயரே செல்லத் தொடங்கினார்.

ஆயிரம் வருடங்கள் சென்றன. விண்ணுலகம் நோக்கிச் சென்ற பிரம்மதேவனும், பாதாள லோகம் சென்ற விஷ்ணுவும் இன்னமும் லிங்கத்தின் நுனியையும் அடியையும் காண முடியாது சென்று கொண்டிருந்தனர். அதற்குமேல் அவர்களால் செல்ல முடியவில்லை. தங்கள் முயற்சியைக் கைவிட்டு மிகவும் களைத்துப் போய்த் திரும்பினர். தங்கள் சக்தியைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த இருவரும் தங்களுக்கும் மேலாக ஒருவன் இருக்கிறான் என்பதை அறிந்து, மமதையை விட்டுப் பிரார்த்திக்கத் தொடங்கினர்.

"ஸ்வாமி, தாங்கள் யார் என்பதை நாங்கள் அறியோம். தாங்கள் எக்காரணம் பற்றி இந்த ரூபம் கொண்டீர்கள் ? தாங்கள் எங்களுக்குத் தோற்றம் அளித்து அருட்கடாக்ஷம் புரிய வேண்டும்" எனப் பிராத்தித்தனர்.

அப்போது 'ஓம்' என்ற சப்தம் தோன்றியது. எங்கிருந்து அந்தச் சத்தம் வருகின்றது என்பதை அறிய முடியாது திகைத்து நிற்கும்போது, எதிரில் பிரம்மாண்டமாக நிற்கும் அந்த லிங்கத்தின் தென்பாகத்தில் முதலாவதும் அழிவில்லாததுமான அக்ஷரத்தையும், அதன் வடபாகத்தில் உகாரத்தையும், அவ் விரண்டிற்கும் இடையில் மகாரத்தையும், உயரத்தில் 'ஓம்' என்ற சப்த விசேஷத்தையும் கண்டனர். முதலெழுத்தாகிய அகாரம் சூரியமண்டலம் போலவும், இரண்டாவது எழுத்தாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உகாரம் அக்கினியின் பிரகாசம் போலவும், நடுவிலிருக்கும் மூன்றாவது எழுத்தாகிய மகாரம் சந்திரமண்டலம் போலவும் விளங்க அதன்மேல் ஸ்படிகம் போல் ஒளியோடு கூடிய பரம்பொருளைக் கண்டனர். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அதியாச்சரியமான அழகோடும் ஐந்து முகங்களோடும், பத்துக் கரங்களோடும் அனேகவித ஆபரணங்களை அணிந்துகொண்டு கம்பீரமாகப் பரம்பொருளாகிய சிவபெருமான் ஸர்வ லக்ஷணங்களோடு அவர்கள் முன்பு தோன்றினார்.

2. சிவ தத்துவம்

ஜோதிர் லிங்கத்தினின்று வெளிப்பட்டுக் காட்சி தந்த சிவபெருமானைக் கண்டதும் நான்முகனும் விஷ்ணுவும் கை கூப்பி அவரை வணங்கினர்.

"பிரபோ, தாங்கள் யார்? எங்களுக்கு ஒன்றும் விளங்க வில்லையே. கருணை கூர்ந்து எங்களுக்கு விளக்க வேண்டும்" என்று பணிவோடு வேண்டினர்.

அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்த ஈசன் சொல்லலுற்றார்.

"உங்கள் இருவருக்கும் மூலகாரணம் நான். சிவம் என்றும் பிரம்மம் என்றும் நான் அழைக்கப்படுவேன். அனைத்துமே என் வடிவம்தான். என் சம்பந்தமின்றி எதுவும் உண்டாவதில்லை, அண்ட சராசரங்களும் என்னால் தோற்றுவிக்கப் பட்டனவையே."

இவ்வாறு தெரிவித்த ஈசன், கை கூப்பியபடி நிற்கும் நான்முகனைப் பார்த்து, "பிரம்மதேவா உலக சிருஷ்டிக்காக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என் ஆக்ஞையால் விஷ்ணு உன்னைத் தோற்றுவித்தார்'' என்றார். பின்னர், விஷ்ணுவைப் பார்த்து, "நாராயணா, சிருஷ்டிகளின் பாதுகாப்புக்காக நீ என்னால் உண்டாக்கப் பட்டாய் என்பதை அறிந்துகொள். என்னுடைய இன்னொரு அம்சமே ருத்திரன். அவன், அழிவுக்குக் காரணமானவன். பிரகிருதியிடமிருந்து பிரம்மாணி என்னும் சக்தி தோன்றிப் பிரம்மனை அடைவாள். அவ்வாறே லக்ஷ்மி தோன்றி உன்னைச் சேர்வாள். காளி ருத்திரனை அடைவாள். நீங்கள் மூவரும் உங்கள் சக்தியரோடு சேர்ந்து சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம் எனப்படும் மூவகைக் காரியங்களையும் கவனித்து வருவதற் காவே என்னால் தோற்றுவிக்கப்பட்டவர்கள்'' என்றார்.

அப்போது விஷ்ணு மறுபடியும் ஈசனை வணங்கி, "பிரபோ! எங்களைத் தோற்றுவித்ததற்கான காரணங்களை விளக்கிக் கூறினீர்கள். இருப்பினும் நாங்கள் என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும், அதற்கான சக்தியை நாங்கள் எவ்வாறு அடைவோம்? போன்றவற்றை விவரிக்க வேண்டுகிறோம்'' என்று பிரார்த்தித்தார்.

அவர் வார்த்தைகளால் மகிழ்ச்சியுற்ற ஈசனும் "ஓம் தத்வமசி'' எனப்படும் மகா வாக்கியத்தையும், மிருத்தியுஞ் ஜயம், பஞ்சாக்ஷரம், சிந்தாமணி, தக்ஷிணாமூர்த்தி மந்திரம் ஆகிய மகாமந்திரங்களையும், விஷ்ணுவுக்கு உபதேசித்தார். பின்னர், சுவாசமார்க்கமாக வேதத்தையும் அவருக்கு உபதேசித்தார். அவற்றைக் கிரகித்து விஷ்ணுவும் சுவாச மார்க்கமாகவே நான்முகனுக்கு உபதேசம் செய்தார்.

பிறகு மறுபடியும் எதிரிலிருக்கும் ஈசனைப் பணிந்து, "பிரபோ, தங்களுடைய தரிசன பாக்கியத்தால் கிருதார்த்தர் களான நாங்கள், எக்காலத்தும் தங்களிடம் இடைவிடாத பக்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டிருக்குமாறு அருள வேண்டும். தங்களை எந்த விதமாகத் தியானித்தால் தாங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்" என்று கேட்டார் விஷ்ணு.

"நாராயணா! இப்போது நான் உங்களுக்கு எவ்வாறு காட்சி தருகின்றேனோ, அதே தோற்றத்தில் லிங்கத்தில் இருப்பதாக எண்ணித் தியானம் செய்தால் போதும். என்னைத் தியானிப்பவர்களுக்கு நான் சகல காரிய சித்தியையும் அளிப்பேன். பிரம்மன் என் வலது பக்கத்திலும், விஷ்ணுவாகிய நீங்கள் என் இடது பக்கத்திலும், ருத்திரன் இதயத்திலுமாக இருப்பீர்கள். மூவரும் என் வடிவமேயன்றி வேறு அல்ல. சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம் ஆகிய முத்தொழில்களும் நடைபெறவே, நான் மூவராக பிரிந்திருக்கிறேன். நீங்கள் சிவ ரூபத்திலிருந்து உண்டானவர்கள். சத்தியமாயும், ஞானரூபமாயும், அழிவு என்பதே இல்லாததுமான என்னுடைய சிவரூபமே ஆதி காரணம் ஆகும். உங்களால் உண்டாக்கப்படும் உலகங்களுக்கு சுகம் ஏற்படவும், உங்களைப் பார்த்து உலகத்தார் பூஜிக்கவும் நீங்கள் இந்த லிங்க ரூபத்தை என்றும் குன்றாத பக்தியோடு பூஜித்து வாருங்கள். என் அருளால் உங்களுக்குச் சர்வ வல்லமைகளும் உண்டாகும்."

இவ்வாறு கூறிய ஈசன், அவர்களுக்கு அனேக வரங்களைக் கொடுத்து அனுக்கிரகம் செய்துவிட்டு மறைந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. உலகச் சிருஷ்டி

சிவபெருமானுடைய அனுக்கிரகத்தால் சர்வ சக்திகளையும் பெற்ற பிரம்மதேவன், தம்முடைய பணியைச் செய்ய, பிரளயமாக எங்கும் வியாபித்து நிற்கும் ஜலத்தை அடைந்தார். முதலில் தம்மைத் தோற்றுவித்த விஷ்ணுவைத் தியானித்துப் பின்னர் ஈசனை மனத்தால் அஞ்சலி செய்து தமது சக்தியை நீரிலே விட்டார். அந்த க்ஷணமே அது இருபத்து நான்கு தத்துவங்களோடு கூடிய அண்டமாகத் தோன்றியது. அசைவு ஏதுமின்றி ஜடமாக இருந்த அதைக் கண்டதும் பிரம்ம தேவன் பெரிதும் வருத்தம் கொண்டு நாராயணனைக் குறித்துப் பன்னிரண்டு வருடங்கள் கடுமையாகத் தவம் செய்தார்.

நான்முகனின் தவத்தால் மகிழ்ச்சியுற்ற விஷ்ணு, அவர் முன்பு தோன்றி, "நான்முகா! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" என்று கேட்டார்.

நாராயணனைப் பல விதங்களிலும் தோத்தரித்த பிரம்ம தேவன், "பிரபோ ! ஈசன் ஆக்ஞைப்படி உலக சிருஷ்டியைத் தொடங்கிய நான், என் சக்தியைக் கொண்டு இந்த அண்டத்தைத் தோற்றுவித்தேன். ஆனால் இதுவோ உயிரற்ற ஜடமாக இருக்கிறது. தாங்கள்தான் இதற்கு உயிரூட்ட வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

பிரம்மதேவனின் பிரார்த்தனைக்கு இணங்கி நாராயணனும் அந்த அண்டத்துள் பிராணவாயுவாகப் பிரவேசித்தார். உடனே அண்டம், பாதாள லோகம் முதல் சத்திய லோகம் வரை வியாபித்துப் பிராணனை உடையதாக ஆயிற்று. பெரு மகிழ்ச்சியுற்றவராய் நான்முகன் சிருஷ்டியைத் தொடங்கினார்.

மனத்தால் சிலரைத் தோற்றுவித்தார் பிரம்மதேவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானஸப் புத்திரர்களான அவர்களோ ஊர்த்துவரேதஸாக விளங்கினார்கள். அதாவது தங்கள் சக்தியை வீணடிக்காமல் மனத்தைக் கட்டுப்படுத்தி ஞான மார்க்கத்தில் ஈடுபட்டவர்களாய் அவர்கள் விளங்கினார்கள். அதைக் கண்ட நான்முகனும் மறுபடியும் சிலரை உண்டாக்கினார். அவர்களும் இச்சையற்றவர்களாய், முன்னால் தோன்றியவர்களைப்போல் பகவத் தியானத்தில் லயித்து விட்டார்கள்.

பிரம்ம தேவனுக்கு பெரும் குழப்பமாகிவிட்டது. உலக சிருஷ்டி காரணமாகத் தம்மால் தோற்றுவிக்கப்பட்டவர்கள், அப்பணியில் ஈடுபடாது, ஞானமார்க்கத்தில் இறங்கி விட்டனரே என மிகவும் துக்கித்தார். அப்போது சிவனுடைய அம்சமாகிய ருத்திரன் அவர் முன்பு தோன்றினார்.

"நான்முகா, விசனம் ஏன்? நான் உனக்குத் துணை இருக்கிறேன்!" என்றார் ருத்திரன்.

பிரம்மதேவன் அவரை நோக்கிக் கரம் கூப்பி, "பிரபோ ! எனக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டும். முதலில் உண்டாக்கப் பட்டவர்கள் ஞான மார்க்கத்தில் சென்று விட்டனரே என்று மீண்டும் சிலரைத் தோற்றுவித்தேன். அவர்களும் எனக்குப் கட்டுப்பட மறுத்து, 'பகவானைத் தியானிக்கவே தங்களுக்கு விருப்பம்' எனக் கூறிவிட்டனர். சிருஷ்டியில் இடையூறு நேராது அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

"கவலையை விடுத்துச் சிருஷ்டியைத் தொடங்கலாம். இனி இடையூறு ஏதும் நேராது" என்று அருளிய ருத்திரன் கைலாசம் திரும்பினார்.

பின்னர், நான்முகன் மறுபடியும் ஈசனைத் தியானித்து சிருஷ்டியைத் தொடங்கினார். சப்த ரிஷிகளையும் தோற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வித்தார். தமது மடியிலிருந்து நாரதரை உண்டாக்கினார். தமது நிழலிலிருந்து கர்த்தம ரிஷியை தோன்றச் செய்தார். பிரம்மனின் பெருவிரலிருந்து தக்ஷப் பிரஜாபதி தோன்றினார்.

சப்தரிஷிகளில் ஒருவரான பிருகு முனிவரிடத்தில் மரீசி உண்டானார். மரீசி, காசியபரைத் தோற்றுவித்தார். காசியபர் மூலம் தான் உலகம் விருத்தி அடைந்தது.

தக்ஷப் பிரஜாபதிக்கு அறுபது பெண்கள் பிறந்தனர். அவர்களுள் பதின் மூன்று பேரைக் காசியபருக்கு மணம் செய்து கொடுத்தார். அவர்களுக்குத் தேவர்கள், அசுரர்கள் முதலானோர் பிறந்தனர். இன்னும் விருக்ஷங்களும், பக்ஷிகளும், சர்ப்பங்களும், பர்வதங்களும் அவர்களிடத்தில் உண்டாகி உலகெங்கும் வியாபித்தன.

4. தக்ஷன் கர்வ பங்கம்

தக்ஷனுக்கு பிறந்த அறுபது பெண்களில் ஸதிதேவியும் ஒருத்தி. அவளை ஈசனுக்கு மணம் செய்து கொடுத்தான் அவன். சகல தேவர்களாலும் வணங்கப் பெறும் கைலாச நாதனான ஈசன், தனக்கு மருமகனாகக் கிடைக்கப் பெற்றது கண்டு அவன் அளவில்லா ஆனந்தமடைந்தான். இந்த சம்பந்தத்தின் மூலம், தான் தேவர்களுக்கும் மேலான வனாகி விட்டோம் என்ற பெருமை அவனிடம் குடிகொண்டது. அதன் காரணமாக அவனிடம் மமதை உண்டாகிவிட்டது.

மமதையே அழிவுக்குக் காரணகர்த்தா என்பதைத் தக்ஷன் உணரவில்லை. ஒரு சமயம் அவன் கைலயங்கிரிக்குச் சென்ற போது ஈசன் தன்னைச் சரியாக கவனிக்கவில்லை என்று அவ்விடம் விரோதம் கொண்டான். கைலாசநாதன் தக்ஷப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரஜாபதியைத் தம்முடைய மாமனார் என்ற முறைக்குச் சிறிதும் பங்கம் வராது கௌரவம் அளித்து வந்தார். ஆனால் தக்ஷன் எண்ணியது போல் அவன் மகளை மணந்தது காரணமாக அவன் அவரினும் உயர்ந்தவனாகி விட்டான் என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. இதனால் இருவரிடையேயும் வேற்றுமை அதிகமாகியது.

ஈசனிடம் விரோதம் கொண்டு தன் இருப்பிடம் திரும்பிய தக்ஷன் விஷயத்தை அத்தோடு விட்டு விடவில்லை. ஈசன் தன்னைவிடத் தாழ்ந்தவன் என்பதை நிரூபித்து விடுவது என்ற உறுதியில் யாகம் ஒன்றைத் தொடங்கினான். அந்த யாகத்தில் ஈசனுக்கு அவிர்ப்பாகம் கிடையாதென்று முடிவு செய்தான். தேவர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பினான். பெண்களையும், மருமகன்களையும் யாகத்துக்கு வந்து கலந்து கொள்ளுமாறு சொல்லி அனுப்பினான். ஆனால் சிவனையும், ஸதி தேவியையும் மட்டும் அழைக்கவில்லை.

தந்தை செய்யப் போகும் பிரம்மாண்டமான யாகத்தைப் பற்றி ஸதி கேள்விப்பட்டாள். தந்தையிடமிருந்து அழைப்பு வரா விட்டாலும் யாகத்துக்கு தான் போக வேண்டுமென்று விருப்ப மேற்பட்டது தேவிக்கு. கணவனிடம் தன் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தாள்.

சிவபெருமானும் தக்ஷன் செய்யப்போகும் யாகம் பற்றி அறிந்திருந்தார். தமக்கு அவிர்ப்பாகம் இல்லையென்ற உறுதியோடு செய்யப்போகும் அந்த யாகம் நிறைவேறப் போவதில்லையென்றும் அழையா வீட்டுக்கு விருந்தாளியாகச் செல்வதால் அவமானம் ஏற்படும் என்றும் தெரிவித்து, தேவியைப் போக வேண்டாம் எனத் தடுத்தார். தேவியோ அதற்கு இணங்காது யாகத்துக்குப் புறப்பட்டாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகசாலையில் தேவியை யாரும் மகிழ்ச்சியோடு வரவேற்க வில்லை. கணவன் தெரிவித்ததுபோல் அவமானம் ஏற்பட்டதைக் கண்டு சீற்றமடைந்த தேவி, கைலயங்கிரி திரும்ப விரும்பாமல் அங்கேயே யாக குண்டத்தில் குதித்து தமது தேகத்தை விடுத்தாள்.

எவ்வளவோ தடுத்தும் கேளாமல் புறப்பட்ட தேவி, அங்கே அவமானமுற்று யாக குண்டத்திலேயே தன் தேகத்தை விடுத்து விட்டாள், என்பதை அறிந்த சிவபெருமான் சொல்ல முடியாத கோபம் அடைந்தார். அவரது கோபத்திலிருந்து வீரபத்திரன் தோன்றினான்.

“வீரபத்திரா! இப்போது தக்ஷன் யாகம் செய்யுமிடத்துக்குச் சென்று அவன் யாகத்தைத் துவம்சம் செய்து அவனையும் அழித்து வா!” என்று உத்திரவிட்டு அனுப்பி வைத்தார் ஈசன்.

அவ்வாறே புறப்பட்டுச் சென்ற வீரபத்திரன், தக்ஷனுடைய யாகசாலையை அடைந்தான். மிகவும் உக்கிரமான தோற்றத்துடன் யாக சாலையினுள் நுழைந்து, அதைப் பல விதங்களிலும் அழித்து நாசமாக்கினார். சிவனுக்கு அவிர்ப்பாகம் தராமல் நடத்தப்படும் யாகத்துக்கு வந்திருந்த இதர தேவர்களையும் அவன் விட்டுவைக்கவில்லை. அவர்களுக்குக் கொடுமைகள் பல இழைத்தான். தக்ஷனை இழுத்து வந்து அவன் தலையைத் துண்டித்து எறிந்தான்.

தண்டிக்கப்பட வேண்டியவன் தக்ஷனாக இருக்க, யாகத்துக்கு வந்திருந்த இதர தேவர்களும், முனிவர்களும் வீரபத்திரனால் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்ட முனிசிரேஷ்டர்கள், கைலாசநாதனைச் சரண் அடைந்து அவரைத் துதித்தனர். ஈசனும் அவர்கள் பால் கருணை கொண்டு அனைவரையும் உயிர்ப்பித்து அவரவர் இருப்பிடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



செல்ல அனுமதித்தார். தக்ஷனும் தன் தவற்றை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டான்.

யாக குண்டத்திலே தேகத்தை இட்ட ஸதிதேவி, ஜ்வாலையாக விளங்கினாள். இந்திரன் முதலான தேவர்கள் அந்த ஜ்வாலையை வழிபட்டனர். இந்த ஜ்வாலை, பூலோகத்தில் ஹிமவத் கிரியில் வந்து விழுந்தது. அந்த இடமே ஜ்வாலாமயமாக ஆயிற்று.

கணவனின் வார்த்தைகளைக் கேட்காமல் சென்றதால் அவமானமுற்ற ஸதி, தக்ஷனின் மகளாக இருக்கும் அந்தப் பிறவியில் மறுபடியும் ஈசனை அடைய விருப்பப்படாது, திரும்பவும் பூலோகத்தில் பிறந்து ஈசனை மணக்கவே ஆசைப் பட்டாள். இமவானின் வெகுநாளைய ஆசையை நிறைவேற்ற, அவன் புத்திரியாக அவன் மனைவி மேனையிடம் பார்வதியாக வந்து அவதரித்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. மன்மத தகனம்

சோணிதபுரியில் தாரன் என்னும் அசுரன் இருந்தான். அவன் மகன் தாரகன் என்பவன் ஒரு சமயம் தன்னுடைய ஆசிரியரிடம் சென்று, 'தேவர்கள் எல்லோராலும் பணிந்து கொண்டாடப்படக்கூடிய பராக்கிரமம் அடைய என்ன செய்யலாமென்று' கேட்டான். அவரும் பிரம்மதேவனைக் குறித்துக் கடுமையாக தவம் செய்யும்படி கூறினார்.

ஆசிரியரின் வார்த்தைப்படி தாரகன் தவம் செய்யப் புறப்பட்டான். மது என்னும் அசுரனுடைய அழகிய வனத்தில் இரு கைகளையும் உயரே தூக்கியபடி ஒரு காலை மடக்கிக் கொண்டு மற்றொரு காலைப் பூமியில் ஊன்றியவாறு நூறு வருடங்கள் தவம் செய்தான். பிரம்மதேவன் பிரத்தியக்ஷமாக வில்லை. அதன்பிறகு கால் பெருவிரலை மட்டும் ஊன்றியபடி ஜலத்தை மட்டுமே ஆகாரமாகக் கொண்டு தவம் செய்தான். அப்போதும் பிரம்மா அவன் முன்பு தோன்றவில்லை. பிறகு, காற்றை மட்டுமே உணவாகக் கொண்டும், நீரில் இருந்து கொண்டும், வெய்யிலில் இருந்தபடியும், பஞ்சாக்னியின் மத்தியில் இருந்தவாறும் அனேக ஆண்டுகள் தவம் செய்தான். அவன் சிரசிலிருந்து யோகாக்னி கிளம்பி தேவலோகம் வரை சென்று தகித்தது. அதன் வெப்பத்தைத் தாங்க மாட்டாது தேவர்கள் வருந்தினர். எல்லோரும் பிரம்ம தேவனிடம் சென்று பூலோகத்தில் தாரகன் மேற்கொண்டுள்ள தவத்தைப் பற்றியும் அதன் கொடுமை தாங்காது தாங்கள் தவிப்பதையும் முறையிட்டு அவனுக்கு வரங்கள் கொடுக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டனர்.

தேவர்களின் கோரிக்கை அர்த்தமற்றதாக இருந்தது. வரங்களைப் பெறும் வரையில் தாரகனும் தான் செய்யப் புகுந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவத்தை நிறுத்தப் போவதில்லை. நாளுக்கு நாள் அதன் உக்கிரம் அதிகமாகி தேவலோகத்துக்கே நாசம் வந்துவிடும் என தெரிந்ததும், கடைசியில் வேறு வழியின்றிப் பிரம்மதேவன் அசுரனுக்கு தரிசனம் கொடுத்து, "தாரகா! உன் தவத்தை மெச்சினேன், உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

தாரகன் அவரை வலம் வந்து வணங்கி, "பிரபோ ! தாங்கள் தயை கூர்ந்து நான் கேட்கும் இரண்டு வரங்களை அளிக்க வேண்டும். முதலாவது, எனக்கு இணையாகப் பராக்கிரமம் உள்ளவன் விண்ணுலத்திலும் சரி, மண்ணுலகத்திலும் சரி எங்குமே இருக்கக்கூடாது. இரண்டாவதாக, சிவபெருமானுடைய வீரியத்திலிருந்து உண்டாகின்ற பிள்ளையாலன்றி வேறு எவராலும் எனக்கு அழிவு கூடாது. இந்த இரண்டு வரங்களையே நான் விரும்பிக் கேட்கிறேன்" என்றான்.

பிரம்மதேவன் அவ்வாறே அவன் கோரிய இரு வரங்களையும் அளித்துவிட்டு மறைந்தார். அசுரன் பெருமகிழ்ச்சியோடு தன் பட்டணமாகிய சோணிதபுரிக்குத் திரும்பினான்.

தாரகன் கடுமையாகத் தவம் செய்து பிரம்மதேவனிடமிருந்து அழிவற்ற ஆசிகளைப் பெற்று திரும்பியிருக்கிறான் என்ற செய்தியை அறிந்ததும், உலகெங்கிலும் வியாபித்திருந்த அரக்கர்கள் அவனை வந்தடைந்து, அவனைத் தங்களது தலைவனாக ஏற்றுக் கொண்டனர். இதனால் கர்வம் அடைந்த அசுரன், பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் எனப்படும் நான்கு வருணத்தாரையும், தேவர்கள், யக்ஷர்கள், கிம்புருடர்கள் ஆகியோரையும் அடித்துத் துன்புறுத்தத் தொடங்கினான். அனைவரும் அவனுக்கு பணிந்தனர். இந்திரனிடமிருந்து உச்சைச்ரவஸ் எனப்படும் குதிரையும், யமனிடமிருந்து தண்டமும், வருணனிடமிருந்து உத்தமஜாதி குதிரைகளையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குபேரனிடமிருந்து கதை, நவநிதிகள் ஆகியவையும், மகரிஷிகளிடமிருந்து காமதேனுவையும் அவன் பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொண்டான். மற்றும் எங்கெல்லாம் உயர்ந்த பொருள்கள் இருந்தனவோ அவற்றை யெல்லாம், அவன் தனதாக்கிக் கொண்டான். ஸமுத்திரராஜன் அவனுக்குப் பயந்து தன் மடியிலிருந்த ரத்தினங்களைக் கொடுத்தான். அசுரனின் சௌகரியத்துக்கேற்ப சூரியன் உஷ்ணத்தைப் பரப்பினான். சந்திரன் சதா அசுரனின் பக்கத்திலேயே இருந்தான். வாயுவோ தன் சக்தியைக் காட்டப் பயந்து அசுரனின் விருப்பப்படி வீசினான். தேவர்களுக்கு அளிக்கப்படும் அவிர்ப்பாகமும், பிதுர்களுக்கு அளிக்கப் பட்டவையும் அசுரனையே அடைந்தன.

இந்தவிதமாகச் சகல லோகங்களையும் தன் ஆக்கினைக்கு உட்படுத்தி அசுரன்அட்டகாசம் செய்து வரும்போது, ஒரு நாள் தேவர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பிரம்மதேவனிடம் சென்று தங்கள் துயரை அறிவித்தனர்.

“பிரபோ! எங்களைக் காத்து ரக்ஷிக்க வேண்டிய தாங்கள் இவ்வாறு கவனிக்காதிருப்பது தர்மமா? தாரகனின் அட்டகாசங்களுக்கு இனியும் எங்களால் ஈடுகொடுக்க முடியாது. தேவரீர்தான் அவனை அழித்து எங்களை ரக்ஷிக்க வேண்டும்” என்று பிராத்தித்தனர்.

“தேவர்களே! அசுரனின் அழிவுக்கு நம்மால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. சிவபெருமானுடைய வீர்யத்திலிருந்து உண்டாகின்ற குமாரனால்தான் தனக்கு அழிவு ஏற்பட வேண்டும் எனத் தாரகன் வரம் பெற்றுள்ளான். ஈசனோ இமயபர்வதத்தில் யோக நிஷ்டையில் அமர்ந்திருக்கிறார். அவர் நிஷ்டையைக் கலைப்பது என்பது சாமானிய காரியமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவராக எப்போது கண் விழிப்பார் என்பதும் தெரியாது. அவருடைய பணிவிடைக்காக இமவான், தன் குமாரத்தியான பார்வதியை இரு தோழிமாரோடு நியமித்திருக்கிறான். கைலாசநாதனது நிஷ்டை கலைந்து பார்வதியும் அவரும் ஒன்று சேர்வார்களானால் அசுரனின் அழிவுக்குக் காரண பூதரான குமாரர் அவதரிப்பார்'' என்று தெரிவித்தார் நான்முகன்.

அவர் வார்த்தைகளைக் கேட்டு மிகவும் சந்தோஷம் அடைந்தவர்களாய் தேவர்கள் தங்கள் இருப்பிடம் திரும்பினர். அடுத்தபடியாகக் கைலாசநாதரின் நிஷ்டையைக் கலைத்து அவரையும் பார்வதியையும் ஒன்று சேர்க்க என்ன வழி என்பதை அவர்கள் ஆலோசித்தனர். அப்போது தேவேந்திரன் மனத்தால் மன்மதனை நினைத்தார்.

அந்த க்ஷணமே மன்மதன் தன் மனைவி இரதியோடு அவர் முன்பு வந்து நின்றான். இந்திரனை வணங்கி "அமரர் கோனே, என்னால் ஆகவேண்டிய காரியம் என்ன ?'' என்று கேட்டான் மன்மதன்.

''மன்மதா, மகரத்வஜா! உன்னால் ஓர் அரிய காரியம் முடிய வேண்டியிருக்கிறது. தேவர்களுக்கு ஆப்தனாக விளங்கும் உன்னால்தான் அக்காரியம் செய்யமுடியும். எனக்கும் உன்னைவிட நெருங்கிய நண்பன் வேறு எவருமில்லை. எதிரிகளை அழிப்பதற்காகப் பிரம்மதேவன் எனக்கு இரண்டு அஸ்திரங்களைக் கொடுத்தார். ஒன்று வஜ்ஜிராயுதம், மற்றொன்று உன்னையே எனக்கு உதவியாகத் தோற்று வித்திருக்கிறார். வஜ்ஜிராயுதத்தைவிட உன்னை மேம்பட்டதாக உயர்த்திக் கூறலாம். ஏனெனில் வஜ்ஜிராயுதம் கூட தன் சக்தியை இழந்து நிற்பதுண்டு. ஆனால் நீயோ தோல்வி என்பதையே கண்டதில்லை. உன் மன்மத பாணங்களுக்குப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணியாதவர் யார் இருக்கிறார்கள் ?'' என்றெல்லாம் இந்திரன் தம்முன் நிற்கும் மன்மதனைப் புகழ்ந்தான்.

தேவேந்திரனின் புகழ்ச்சி நிறைந்த வார்த்தைகளால் உள்ளம் களிப்புற்ற மன்மதன் அவனைப் பார்த்து, "தேவராஜா, நீ உண்மையைத்தான் எடுத்துச் சொல்கிறாய், நான் என்ன செய்ய வேண்டுமென்பதைச் சொல். இப்போதே அதை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். உன் பதவிக்கு ஆபத்து உண்டாகும்படி யாராவது தவத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா ? அவர்கள் இருக்குமிடத்தைச் சொல். உடனே அங்குச் சென்று அத்தவத்தைக் கலைத்து உனக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தை நிவர்த்திக்கிறேன். என் மன்மத பாணங்களுக்கு அடிமை யாகாத உள்ளம் கிடையாது. கைலாசநாதனே கூட அதற்குப் பணியக் கூடியவர்'' என்று பெருமையாகக் கூறினான்.

"மன்மதா! எங்கள் உள்ளத்தில் இருப்பதைத் தான் நீயும் சொல்லுகிறாய். உலகத்தில் கொடையாளிக்குப் பஞ்சம் ஏற்படும் போதும், வீரனுக்கு யுத்தத்திலும், நண்பனுக்கு ஆபத்துக் காலத் திலும் தான் தங்கள் உறுதியைக் காட்டக்கூடிய சந்தர்ப்பம் உண்டாகிறது. பெரும் துன்பத்தில் இருக்கும் தேவர்களுக்கு உன் உதவி இன்றியமையாததாக இருக்கிறது. நீ செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிக் கூறுகிறேன், கேள். தாரகன் என்னும் அசுரன், சிவபெருமானுடைய வீரியத்தில் இருந்து தோன்றும் குமாரனால் தான், தனக்கு அழிவு ஏற்பட வேண்டும் என்று வரம் பெற்றுள்ளதால், அவனை அழிக்க எங்களால் எதுவும் செய்ய முடியாதிருக்கிறது. ஈசனோ ஹிமாசலத்தில் யோக நிஷ்டையிலிருக்கிறார். அவருக்குப் பணிவிடை செய்ய, இமவான் தன் குமாரத்தி பார்வதி தேவியை இரு தோழிகளுடன் பணித்துள்ளான். அவருடைய யோகம் கலைந்து, தேவியிடம் மோகம் கொள்ளும்படி நீ செய்ய வேண்டும். தேவர்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துயரம் நீங்க இந்த உதவியை நீ செய்தாக வேண்டும்" என்று அவனைக் கேட்டுக் கொண்டான் இந்திரன்.

மன்மதனும் அவ்வார்த்தைகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு மனைவியோடும், நண்பன் வசந்தனோடும் ஹிமாசலத்துக்குப் புறப்பட்டான்.

மன்மதன் இமய பர்வதத்துக்கு வந்தபோது சிவபெருமான் கண்களை மூடி யோக நிஷ்டையிலமர்ந்திருந்தார். அப்போது வசந்த காலம். எங்குப் பார்த்தாலும் மரங்களும் கொடிகளும் மலர்களைச் சொரிந்திருந்தன. பக்ஷி ஜாதிகள் ஆனந்தமாகக் கூவிக்கொண்டும் பறந்து கொண்டுமிருந்தன.

வனத்திலிருந்து மலர்களைக் கொய்து எடுத்து வந்த பார்வதி தேவி, சிவபூஜைக்குத் தயாராகிக் கொண்டிருந்தாள். எழில் பொங்கும் அவள் சௌந்தர்ய ரூபத்தைக் கண்ட மன்மதன் இதுவே தகுந்த தருணமென்று எண்ணி, கையில் பிடித்திருந்த வில்லை வளைத்து நாணேற்றிப் பாணங்களை எய்தான்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்லிலிருந்து புறப்பட்ட பாணங்கள், யோகத்தில் அமர்ந்திருக்கும் சிவபெருமானைத் தாக்கியதும் அவர், நிஷ்டை கலைந்து கண்களைத் திறந்தார். எதிரே அற்புத ரூப சௌந்தர்யத்தோடு நிற்கும் பார்வதியைக் கண்டதும் அவளை அடைய அவர் உள்ளம் விழைந்தது.

அடுத்தக் கணமே அவருக்கு அந்த எண்ணம் மாறியது. யோகத்தில் அமர்ந்திருந்த தம்மைக் கண் விழிக்கச் செய்தது யார் என்பதை அறிய நாற்புறமும் பார்த்தார். பக்கத்திலே கரும்பு வில்லுடன் நிற்கும் மன்மதனைக் கண்டதும் அவருக்குச் சொல்லவொண்ணாக் கோபம் உண்டாயிற்று. எவராலும் வெற்றி கொள்ள முடியாத தம்மை, ஒரு கணத்தில் மன்மதன் வெற்றி கொண்டு விட்டானே என்பதை நினைத்தபோது அவர் கோபம் பன்மடங்காகியது. அப்போது அவரது நெற்றிக் கண்ணிலிருந்து ஜ்வாலையோடு கூடிய அக்கினி வெளிப்பட்டது. மன்மதன் அதில் எரிந்து சாம்பலாகி விட்டான். சிவபெருமான் இனி அங்கு அமர்ந்து யோகம் செய்ய முடியாதென்று வேறு இடம் சென்றார். பார்வதி தேவியும் ஈசனின் வடிவிலே லயித்தவளாய், அவர் நினைவால் அலைக் கழிக்கப்பட்ட மனத்தோடு பெற்றோரிடம் திரும்பினாள்.

இது இப்படியிருக்க, கணவனுக்கு நேரிட்ட கதி கண்டு, இரதி தேவி ஆறாத்துயரம் கொண்டாள். வனத்திலே அவள் தலைவிரி கோலமாகக் கீழே விழுந்து புரண்டு அழுதாள்.

“தேவர்களே! உங்களுக்கு நான் என்ன துரோகம் செய்தேன்! ஏன் இப்படி என்னை வஞ்சித்துவிட்டீர்கள்? உங்கள் கஷ்டங்கள் நீங்குவதற்காகத்தானே அவரை அனுப்பி வைத்தீர்கள்? இப்போது நான் அவரை எவ்வாறு அடைவேன்?” என்றெல்லாம் கதறினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“ஹே பிரபோ! சர்வேச்வரா! இது நியாயம் தானா? என் கணவர் என்ன தவறு செய்தார்? தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களுக்கு நன்மை செய்யவே இப்பணியை அவர் மேற்கொண்டார். இது தவறென்றால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தேவர்கள் அன்றோ” என்று பிரலாபித்தாள்.

இரதி தேவியின் அழுகுரலைக் கேட்டு அந்த வனமே துயரம் கொண்டது. செடி கொடிகள் தங்கள் பூரிப்பை விட்டு, வாடித் தலைகுனிந்து நின்றன. பட்சிகளும், மிருகங்களும் குதூகலத்தை விட்டு விட்டுச் சோகமே உருக் கொண்டன.

தேவர்களும் விவரிக்க முடியாத துயரம் அடைந்தனர். அனைவரும் இந்திரனின் தலைமையில் ஒன்று கூடி ஈசனை அடைந்தனர்.

“சர்வேச்வரா! தாங்கள் தான் அபயமளிக்க வேண்டும். தங்கள் யோகத்தைக் கலைக்க மன்மதன் மேற்கொண்ட காரியம், தங்களிடம் அவன் திறமையைக் காட்டுவதற்காக அல்ல. பிரபோ! தாரகாசுரனால் நாங்கள் பட்டு வரும் அவதியைக் குறைக்கவே இந்தக் காரியத்தில் அவன் இறங்க நேர்ந்தது. உலகம் க்ஷேமமுற வேண்டும் என்பதற்காகவே அவன் இக்காரியத்தில் ஈடுபட்டான். தேவரீர் கோபம் கொள்ளக் கூடாது. இரதி தேவி படும் துயரை எங்களால் சகிக்க முடியவில்லை. தயவு செய்து மனமிரங்கி அவனை உயிர்ப்பித்துத் தர வேண்டும்” என்று பிராத்தித்தனர்.

“தேவர்களே! இரதியின் துக்கத்தை நான் அறிவேன். இருப்பினும் நடந்தது நடந்ததுதான். மன்மதனை உயிர்ப்பிப்பது என்பது இயலாத காரியம். ருக்மிணிபதியான கிருஷ்ணன் துவாரகையில் வசிக்கும் காலத்தில், அவளிடத்தில் பிரத்தியும்னன் என்ற பெயரோடு மன்மதன் பிறப்பான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்போதுதான் அவனுக்கு உருவம் ஏற்படும். அதுவரை அவன் அருவமாகவே இருந்து வருவான். பிரத்தியும்னன் பிறந்து வளர்ந்து வரும் சமயத்தில் ஒரு நாள், சம்பரன் என்னும் அசுரன் இரதியை அபகரித்துச் செல்வான். மன்மதனும் சம்பரனை யுத்தத்தில் அழித்து அவனுடைய அளவற்ற திரவியங்களோடு இரதியை அழைத்துக் கொண்டு துவாரகை அடைவான். இரதியும் அதுவரை அவன் பட்டணத்தில் இருந்து வரட்டும்'' என்று அருளினார், சிவபெருமான். அவர் வார்த்தைகளைக் கேட்ட தேவர்களும், இரதிதேவியும் துக்கத்தை விட்டு ஒருவாறாக மனத்தைத் தேற்றிக் கொண்டு தங்கள் இருப்பிடத்துக்குத் திரும்பினர்.

6. பர்ண சாலையில் புதிய காட்சி

ஈசனின் வடிவிலே உள்ளத்தைப் பறி கொடுத்தவளாய் பெற்றோர்களிடம் திரும்பிய பார்வதி, அவர் நினைவாகவே வாடினாள். ஊண் உறக்கம் இல்லாது தோழிகளுடன் உத்தியான வனத்துக்கு வந்தாலும், மனம் பொழுது போக்குகளில் ஈடுபடவில்லை. சிவபெருமானையே மணப்பது என்று உறுதி கொண்டாள் தேவி.

இப்படி இருந்து வரும்போது ஒருநாள் நாரத முனிவர் அங்கு வந்தார். பார்வதி அவரை வரவேற்றுப் பலவாறு உபசரித்தாள். பூரித்து விளங்கிய தேவி, உற்சாகமின்றி வாடிய முகத்தோடு இருப்பதைக் கண்டு அதன் காரணத்தை வினவினார் நாரதர்.

“மகரிஷே, கைலாசநாதன் யோகத்தில் அமர்ந்திருந்த போது அவருக்குப் பணிவிடை செய்து வரும் பொறுப்பை என் தந்தையார் எனக்கு அளித்திருந்தார்கள். ஈசனின் திருவடிவம் என் உள்ளத்தில் அழியா வடிவமாகப் பதிந்து விட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரையன்றி வேறு யாரையும் என் உள்ளம் ஏற்காது. தயவு செய்து அவரை அடையும் மார்க்கத்தைத் தாங்கள் எனக்குக் காட்டவேண்டும்'' என்று வேண்டினாள்.

''உன் விருப்பம் நிறைவேற வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. சிவனைக் குறித்துத் தவம் செய். அவரும் மகிழ்ச்சி அடைந்து உன் வேண்டுகோளை நிறை வேற்றுவார்'' என்று சொல்லி நாரதர் கைலாசநாதனைக் குறித்துத் தவம் செய்யும் வழிகளை அவளுக்கு விளக்கி விட்டுச் சென்றார்.

நாரதர் சென்றதும், பார்வதி தோழிகளை அழைத்துத் தன் விருப்பத்தை இமவானிடம் தெரிவிக்குமாறு அனுப்பினாள்.

பார்வதியின் விருப்பத்தைத் தோழிகள் வந்து கூறிய போது இமவான் அளவில்லா ஆனந்தமடைந்தான்.

''தேவர்கள் அனைவராலும் கொண்டாடப்படும் கைலாச நாதனே, என் குமாரத்திக்கு ஏற்ற மணாளனாவார். அவரைக் கைப்பிடிக்கக் குழந்தை கடுமையான தவம் மேற்கொள் வதாகக் கூறுகிறாளே ? அதை அவள் தாய் மேனை அனுமதிக்க மாட்டாளே, அவள் சம்மதித்துவிட்டால் எனக்கென்ன ஆக்ஷேபணை ?'' என்றான்.

அவன் எதிர்ப்பார்த்தவாறே மேனை அதற்கு உடன்பட வில்லை. உடனே மகளை அழைத்து, அவள் செய்யப் போகும் காரியம் சரியல்ல, என தன் ஆட்சேபத்தைத் தெரிவித்தாள்.

''பார்வதி, இங்கே உனக்கு என்ன குறை ? எதற்காக நீ தவம் செய்யக் காட்டுக்குப் போக வேண்டும் ? கைலாசநாதன் யோகத்தில் அமர்ந்திருந்த போது அவருக்குப் பணிவிடை செய்து வந்தாயே, அப்போது அவருக்கு உன்னிடம் மகிழ்ச்சி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டாகவில்லை என்றால், இப்போது மட்டும் எப்படி உண்டாகப்போகிறது ? உன் மலரினும் மென்மை நிரம்பிய தேகம் அதைத் தாங்காது. இம்மாதிரி நமக்கு ஏற்காதக் காரியங்களை விட்டுவிட்டு மற்ற வேலைகளைக் கவனி'' என்றாள் மேனை.

தாய் கூறிய புத்திமதிகள் எதுவுமே, பார்வதி எடுத்த முடிவை மாற்ற இயலவில்லை. ஈசனைக் குறித்துத் தவம் மேற்கொள்ளத் தன்னை அனுமதிக்காவிடில், தான் அதே ஏக்கத்தில் இருந்து உயிரை விட்டு விடுவதாகக் கூறினாள் பார்வதி. பெண்ணின் மன உறுதியைக் கண்ட மேனை, முடிவில் அவள் விருப்பத்துக்குச் சம்மதித்தாள்.

அழகிய மலைச் சிகரம் ஒன்றில் பர்ணசாலை அமைத்துக் கொடுத்தான் இமவான். குமாரத்திக்கு உதவியாக அவளது இரண்டு தோழிகளையும், அவளோடு பர்ணசாலையில் இருக்க செய்தான். பர்ண சாலையைச் சுற்றிலும் கனி தரும் மரங்களை யும், அழகிய மலர்ச் செடிகளையும் பயிராக்கினாள் பார்வதி. கடுமையாகத் தவம் மேற்கொண்டாள். பர்ணசாலைக்கு வரும் அதிதிகளை அவள் உபசரிக்கத் தவறுவதில்லை.

ஈசனைக் குறித்துத் தேவி மேற்கொண்டுள்ள தவத்தை அறிந்த தேவர்கள் கைலாசநாதனிடம் சென்று பிரார்த்தித்தனர்.

“சர்வேச்வரா ! தங்களை மணாளனாக அடையும் எண்ணம் கொண்டு இமவானின் புத்திரி கடுமையாகத் தவம் மேற்கொண்டுள்ளாள். உலகம் க்ஷேமமுற தேவியின் விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்ற வேண்டும்'' என்று எல்லோருமாகச் சிவபெருமானை வேண்டினர்.

“வானவர்களே ! விரைவிலேயே பார்வதிக்குத் தரிசனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடுத்து அவள் விருப்பத்தை நிறைவேற்றுவேன்'' என்று அபயம் அளித்தார் சிவன்.

தேவர்கள் சென்றதும், முதிய அந்தணரைப் போன்று வடிவம் கொண்டு, பார்வதி தவம் செய்யும் பர்ணசாலையை அடைந்தார் ஈசன்.

பர்ண சாலைக்கு யாரோ அதிதி வந்திருப்பதைக் கண்டதும் தோழியர் இருவரும் அவரை அன்போடு வரவேற்று பார்வதியிடம் அழைத்து வந்தனர். தேவி அவரை வணங்கி அர்க்கியம் முதலானவைகளைக் கொடுத்து உபசரித்தாள்.

"சுவாமி, பிரயாணத்தால் மிகவும் களைப்படைந்துள்ளீர்கள் போல் தோன்றுகிறது. தாங்கள் இங்குத் தங்கி இளைப்பாறி நாளை போகலாம்'' என்று வேண்டினாள் பார்வதி.

பரமனும் அதற்கு உடன்பட்டவராய் பர்ண சாலையில் தங்கினார். நடந்து வந்த களைப்பு நீங்கச் சிறிதுநேரம் தூங்கி எழுந்தார். தேவியும் அவர் பாதங்களை மெல்ல வருடியபடி தரையில் அமர்ந்திருந்தாள்.

உறக்கம் நீங்கி அந்தணர் எழுந்ததும், அவருக்குத் தீர்த்தம் முதலியன கொண்டு வந்து கொடுத்து உபசரித்தாள்.

"சுவாமி, தாங்கள் யார் என்று சொல்லவில்லையே! இந்தத் தள்ளாத வயதில் இம்மலைப் பிராந்தியத்தில் பிரயாணம் செய்து வரக் காரணம் என்ன? உங்களைச் சேர்ந்தோர் யாரும் கிடையாதா?'' என்று கேட்டாள் பார்வதி.

"குழந்தாய், நான் என்ன சொல்வேன்? நானோர் ஏழை அந்தணன். உற்றார் உறவினர் யாரும் இல்லை. வயிற்றுப்பாடு இருக்கிறதே. சும்மா உட்கார வைத்து யார் சாப்பாடு போடுவார்கள்? ஏதோ ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிறேன். இந்த வழியாக வரும்போது நீ இங்கு பர்ணசாலை அமைத்துக் கொண்டு தவம் செய்வதாகச் சொல்லக் கேட்டு, உன்னைப் பார்த்துச் செல்லலாம் என வந்தேன்'' என்று சிவபெருமான் மெல்ல தாம் வந்த காரியத்தைத் தொடங்கினார்.

''குழந்தாய்! என்னைக் கேட்டாயே, உன் விஷயம் என்ன? உடலை வருத்தும் கடுமையான தவம் மேற்கொள்ளும் வயதா உனக்கு? உன் சௌந்தர்யத்துக்கு ஏற்ற கோலமா நீ கொண்டிருக்கிறாய்? உன் வயதில் உள்ள பெண்கள் எத்தனையோ ஆபரணாதிகளை அணிந்து கொண்டு சிட்டுக் குருவிகளைப் போன்று குதூகலமாக இருக்கவில்லையா? நீ ஏன் இப்படிக் குடிசையில் அடைந்து கிடக்கிறாய்? இந்தத் தோல் ஆடை உனக்கு ஏற்றதில்லையே. 'கல கல'வென்று சப்திக்கும் வளையல்களை அணிய வேண்டிய உன் கரங்களில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலர் வளையங்கள். அழகாக, வாசனைத் தைலங்களால் சீவி முடித்துப் பலவகையாக அலங்கரிக்கப்படவேண்டிய உன் கேசம், இப்படி அலங்காரம் ஏதுமின்றி வாரி முடிக்கப்பட்டிருக்கிறதே. இந்தக் கோலம் எதற்காக ? உன் உள்ளத்தில் இருப்பது தான் என்ன ? உன் குணப் பண்புகளுக்கேற்பத் தகுந்த நாயகனை அடைவதற்காக நீ இந்தத் தவம் மேற்கொண்டிருந்தால், இதை இப்போதே நிறுத்தி விடு. உன் போன்ற சௌந்தர்ய தேவதைகளுக்கு இது ஏற்றதல்ல'' என்றார்.

முதியவரின் வார்த்தைகளைக் கேட்ட தேவி நாணத்தால் தலை குனிந்தவளாய், தோழியை பார்த்துக் கண் ஜாடை காட்டினாள்.

''சுவாமி, அரச குமாரி தவம் மேற்கொண்டிருப்பது எதற்குத் தெரியுமா ? கைலாசநாதனைக் கணவனாக அடைய வேண்டும் என்ற விருப்பத்தால் தான்'' என்றாள் தோழி.

அவள் வார்த்தைகளைக் கேட்டதும் அந்தணரான ஈசன் 'கல கல' வென்று சிரித்தார்.

தேவியின் முகத்தில் கடுகடுப்பு நிறைந்தது.

''எதற்கடி அவர் சிரிக்கிறார் ? இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது ? காரணத்தைக் கேள்'' என்றாள் தோழியிடம்.

''குழந்தாய் ! சிரிப்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன ? உன் குலம் என்ன ? அந்தஸ்து என்ன ? உங்கள் குலத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்ள எத்தனையோ பேர் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வரமாட்டார்களா ? அப்படி என்ன உனக்கு அழகு இல்லையா ? உன் அழகுக்கு ஈடு சொல்ல யாருமே இல்லையெனலாம்...''

தேவி அவர் பேச்சில் குறுக்கிட்டாள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“கைலாசநாதனிடம் என்ன குறை கண்டார் என்பதைக் கேளடி!” என்று தோழியை அதட்டினாள்.

“பார்வதி, உன் விருப்பம் எப்படி இருக்கிறது தெரியுமா? நறுமணம் கமழும் சந்தனம் இருக்க, அதை விட்டு விட்டுச் சேற்றை அள்ளிப்பூசிக் கொள்வது போல் இருக்கிறது. யானை வாகனமிருக்க, எருமை வாகனமாகவும், கங்கா ஜலமிருக்கக் கிணற்று நீரைப் பருகவும், சூரிய ஒளியை விட்டு விட்டுப் பூச்சிகளின் மினுமினுப்பையும், அழகிய பட்டு வஸ்திரமிருக்க தோலால் ஆகிய ஆடையையும், வீட்டு வாசத்தை விட்டுக் கானக வாசத்தையும் விரும்பி ஏற்றுக் கொள்வது போல விசித்திரமாக இருக்கிறது. எத்தனையோ தேவர்கள் இல்லையா? அவர்களில் ஒருவரையும் பிடிக்காது இந்தச் சுடலையாண்டியிடம் உனக்கு எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது ? கருவண்டுகளை நிகர்த்த உன் இருவிழிகளுக்கு அம் முக்கண்ணனின் விழிகள் ஈடு சொல்ல முடியுமா? அதிசயமாக நெற்றியிலும் ஒரு கண். பார்க்க அசிங்கமாக இல்லை. அவருக்கென்ன சந்தனாதி வாசனைத் தைலங்கள் கிடைக்கவில்லையா? சாம்பலைப் பூசிக் கொண்டு திரிகிறாரே. விலங்கின் தோலை உடலில் சுற்றிக் கொண்டு, கைகளில் நெளியும் பாம்புகளையும் அணிந்து கொண்டிருக்கிறார். அவர் தான் இப்படி இருக்கிறாரென்றால் அவரைச் சுற்றியுள்ளவர் களோ பூதம் பிசாசங்கள்...”

பார்வதியின் கண்கள் ‘ஜிவு ஜிவு’ என்று சிவந்தன.

“சுவாமி...!” என்று அதட்டிக் கூப்பிட்டாள்.

“உங்களை இன்னாரென்று அறியாது அழைத்து உபசரித்து விட்டேன். நீங்கள் சிவத்துவேஷி என்பது இப்போதுதான் தெரிகிறது...” என்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பார்வதி, எனக்கொன்றும் சிவனிடம் துவேஷமில்லை. எத்தனையோ தேவர்கள் இருக்கிறார்களே; அவர்களுள் ஒருவரை விரும்பி அடையாது, இந்தப் பித்தனை விரும்புகிறாயே என்று தான் சொல்ல வந்தேன்" என்றார் அவர்.

"பெரியவரே, அந்தப் பித்தன் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் நீங்கள் இப்படிச் சொல்லியிருப் பீர்களா? ஏதோ மற்ற தேவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னீர்களே? அந்த தேவர்கள் அனைவருமே சிவனால் உண்டாக்கப்பட்டவர்கள் தாமே? சகல புவனங்களும் கைலாச நாதனின் படைப்புகளாய் இருக்கும்போது அவர் நினைத்த மாத்திரத்தில் அவருக்கு ஆபரணங்கள் கிடைக்காமலா போய்விடும்? பட்டுப் பீதாம்பரங்கள் அவருக்கு இல்லையா என்ன? வேண்டுமென்று நினைத்த மாத்திரத்தில் வந்து குவிந்து விடுமே. சாம்பலைப் பூசிக் கொண்டு சுடலையில் பித்தனாக ஆடுகிறார் என்றால் உங்களைப் போன்ற அறிவிலிகளின் பித்தத்தைப் போக்கத்தான். சர்வ லோக சரண்யமான கைலாசநாதனுக்குப் பிறப்பு இறப்பு உண்டா? பரப்பிரம்மமான அவரிடமிருந்தல்லவா மற்றவை தோன்றி யுள்ளன. சகல தேவர்களும் அடிபணிந்து வணங்கும் அவரை நான் விரும்பியதில் தவறொன்றும் இல்லை" என்று சொன்ன பார்வதி, தோழியின் பக்கம் திரும்பி, "ஸகி, அவருடைய உண்மைச் சொரூபத்தை அறிந்த பிறகும் நாம் அவருக்கு இருப்பிடம் கொடுக்கக்கூடாது. அவரைச் சீக்கிரம் இங்கிருந்து வெளியேறச் சொல். சிவ நிந்தையைக் காது கொடுத்துக் கேட்ட பாபம் நீங்க, நீராடிப் பூஜை செய்ய வேண்டும்" என்றாள்.

அந்தணர் வடிவிலிருந்த ஈசன் மெல்ல சிரித்தபடி எழுந்திருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"குழந்தாய் ! நீ போகச் சொல்லி விட்ட பிறகு நான் ஏன் இங்கே தங்க வேண்டும் ? நான் போய் வருகிறேன், பார்வதி !" என்று சொல்லியபடி அவள் அருகில் வந்தார்.

"சீக்கிரம் போய் விடுங்கள்! உங்களைப் பார்ப்பது கூட என் விரதத்துக்குப் பங்கம் விளைவித்து விடும்" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள், பார்வதி.

"பார்வதி! வெகுநேரம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தால் கழுத்து வலிக்கும். நான் செல்வதற்கு முன் நன்றாக என்னை ஒருமுறை திரும்பிப்பார்!" என்றவராய் பர்ண சாலையின் வாயிலை அடைந்தார்.

அடுத்தக்கணம் தோழியர் இருவரும், "ஹோ!..." என்று திடுக்கிட்டு அலறியதைக் கேட்டு முகத்தைத் திருப்பிய பார்வதி சிறிது நேரம் ஸ்தம்பித்து விட்டாள்.

அங்கே அந்தணரைக் காணவில்லை. ரிஷப ரூபராய் பரமசிவன் காட்சி கொடுத்தார்.

பார்வதியின் கைகள் இரண்டும் கூப்பின.

"சுவாமி... தாங்களா...!" என்று மனதிலிருப்பதைச் சொல்ல முடியாது குழறினாள்.

"ஆம், பார்வதி! சற்று முன்பு அந்தணராக வந்தது நான் தான். என்னைக் குறித்துத் தவம் செய்யும் உன் மன உறுதியைச் சோதிக்கவே அவ்வாறு வந்தேன்!" என்றார் ஈசன்.

கண்கள் ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்க, ஈசனைப் பல விதங்களிலும் ஸ்தோத்திரம் செய்தாள்.

"பிரபோ! அடியாளின் எண்ணத்தை நிறைவேற்றத் தரிசனம் தந்தீர்களோ! உற்றார் உறவினர் மகிழ என்னைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாங்கள் கை பிடிக்க வேண்டும். பிரபோ, சர்வேசா! என் விருப்பம் நிறைவேற அனுக்கிரகம் செய்ய வேண்டும்!" என்று வேண்டினாள் பார்வதி.

"பர்வத ராஜகுமாரி! அவ்வாறே செய்கிறேன். போதும் உன் தவம். அரண்மனைக்குத் திரும்பு. விரைவிலேயே உன்னைத் திருமணம் பேச உன் தந்தையைச் சந்திக்கிறேன்" என்று அருளி மறைந்தார் சிவபெருமான்.

பார்வதி அடைந்த மகிழ்ச்சியை விவரிப்பது இயலாத காரியம். தோழிகளை அணைத்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினாள்.

7. பார்வதி பரிணயம்

பார்வதிக்குத் தரிசனம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து கிளம்பிய ஈசன் நேராக காசி க்ஷேத்திரத்தை அடைந்தார். மனத்திலே சப்த ரிஷிகளையும் நினைத்தார். அவர் நினைத்த மாத்திரத்திலேயே சப்த ரிஷிகளும் அருந்ததியோடு அங்கு வந்து சேர்ந்தனர்.

"சர்வேசா! நாங்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன? எந்தக் காரியத்தை உத்தேசம் செய்து எங்களை மனத்தால் நினைத்து வரவழைத்தீர்கள்?" என்று அஞ்சலி செய்து வேண்டினர்.

"முனிசிரேஷ்டர்களே! உங்களால் ஒரு காரியம் நடக்க வேண்டியிருக்கிறது. தாரகாசுரனால் தேவர்களும் முனிவர்களும் சொல்லொணாக் கொடுமைக்காளாகி வருகின்றனர். எனக்குப் பிறக்கும் குமாரனாலே தனக்கு அழிவு வேண்டும் என வரம் பெற்றுள்ளான் அசுரன். அவனை அழித்துத் தேவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துயரைத் துடைக்கக் குமாரன் அவதரிக்க வேண்டும். பர்வதராஜனாகிய இமவான் புத்திரியான பார்வதி என்னையே மணக்க வேண்டுமென்று கடுமையாகத் தவம் செய்துள்ளாள். ஆகவே, நீங்கள் பார்வதியின் பெற்றோரை சந்தித்து நம் விருப்பத்தை பக்குவமாக அவர்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களின் சம்மதத்தைப் பெற்று வாருங்கள்'' என்றார், ஈசன்.

மஹாதேவனின் உள்ளக் கிடக்கையை அறிந்த முனிவர்கள் எழுவரும், கிடைத்தற்கரிய பாக்கியமாக அப்பணியைச் சிரமேற் கொண்டு புறப்பட்டனர்.

கோடிசூரியப் பிரகாசமாய் முனிவர்கள் எழுவரும் ஆகாய மார்க்கமாக வந்து இறங்கியபோது, இமவான் அளவில்லா ஆனந்தம் கொண்டு மனைவியோடு ஓடிவந்து அவர்களை எதிர்கொண்டு அழைத்தான்.

“தவசிரேஷ்டர்களே! நான் எத்தனையோ மகத்தான புண்ணியங்களைச் செய்திருக்கவேண்டும். அதன் காரண மாகவே புண்ணியாத்மாக்களான உங்கள் பாததுளி என் கிருகத்தில் படும் பாக்கியம் ஏற்பட்டது. உங்கள் எழுவரையும் ஒருங்கே தரிசிக்கும் பேறு சாமானியமாகக் கிடைக்குமா!'' என்றெல்லாம் பலவாறாகப் புகழ்ந்து போற்றினான் இமவான். பின்னர் அவர்களை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று உபசரித்தான்.

“பர்வதராஜனே! எங்களைத் தரிசித்த காரணத்தால் கிருதார்த்தனாகி விட்டேன் என்று மகிழ்ந்து கொண்டாடினாயே, இப்போது உன்னைத் தேடி மாபெரும் பாக்கியம் ஒன்று வந்துள்ளது. அதனால் உன் வம்சமே விளங்கப் போகிறது. கைலாசநாதனான சிவபெருமான் தங்கள் குமாரத்தி பார்வதி தேவியை மணம் புரிய விருப்பம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிவித்துள்ளார். தங்கள் குமாரத்தியும் அவரையே நாதனாக வரித்துள்ளாள். தங்களிடம் அவர் விருப்பத்தைத் தெரிவித்து உங்கள் அனைவருடைய சம்மதத்தையும் பெற்று வருமாறு எங்களை அனுப்பி வைத்தார்'' என்றனர்.

மகரிஷிகளின் வார்த்தைகளைக் கேட்டதும் பர்வதராஜன் புளகாங்கிதமடைந்தான்.

“பெரியோர்களே! உங்கள் வார்த்தைகள் என்னைப் பெரிதும் மகிழ்ச்சியூட்டுகிறது. கைலாசநாதனை மருமகனாகப் பெறுவது என் முன்னோர்கள் செய்த புண்ணிய கர்மாக்களின் பலனே என்று நினைக்கிறேன். என் மனைவியின் அபிப்பிராயமும் தெரிந்து கொள்ள வேண்டாமா?'' என்று மேனையைப் பார்த்தான்.

மேனையின் முகம் சிறிது வாட்டமடைந்திருந்தது. ஆரம்பத்திலிருந்தே அவளுக்கு இந்த விஷயத்தில் விருப்பமில்லை. மகளின் பிடிவாதம் காரணமாகவே அவள் ஒதுங்கி இருக்க நேர்ந்தது.

அவள் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் எண்ணத்தை அறிந்த முனிவர் எழுவரும், “அம்மா, மேனை! சர்வேச்வரனான சிவபெருமானைச் சாதாரணமாக எண்ணாதே. தேவர்களுக்கும் கிட்டாத பாக்கியம் உங்களுக்குக் கிடைத்துள்ளது'' என்றனர்.

அருந்ததி, மேனையை அப்பால் அழைத்துச் சென்று ஈசனின் குணாதிசயங்களைப் பலவாறாக எடுத்துக் கூறி அவள் மனம் சம்மதிக்கச் செய்தாள். மனைவியின் விருப்பத்தையும் பெற்றுவிட்ட இமவான் தம் புத்திரியை அழைத்து வந்து ரிஷி புங்கவர்களையும், அருந்ததியையும், நமஸ்கரிக்கச் செய்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"குழந்தாய் பார்வதி! உன் விருப்பப்படியே கைலாசநாதன் விரைவில் வந்து உன் கைப்பற்றுவார்!" என்று ஆசீர்வதித்தனர்.

பின்னர் எல்லோருமாகக் கூடிப் பேசித் திருமணத்துக்கு ஒரு சுபதினத்தைக் குறித்தனர். அங்கிருந்து அவர்கள் புறப் படும் போது இமவான் அவர்களை விட்டுப் பிரிய மனமில்லாது தவித்தான். சப்த ரிஷிகளும் அவனை அனேக விதங்களில் சிலாகித்துப் பேசிப் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டனர்.

காசியை அடைந்ததும் சப்த ரிஷிகளும் சர்வேச்வரனை அடைந்து இமவானின் அரண்மனையில் நடந்தவற்றை விவரித்துத் திருமணத்துக்கான தேதியையும் அறிவித்தனர்.

"முனிசிரேஷ்டர்களே! திருப்தி ஏற்படும்படியாகத்தான் செய்தி கொண்டு வந்துள்ளீர்கள். இதே போல் நீங்கள் அனைவரும் திருமணத்தைச் சிறந்த முறையில் நடத்திக் கொடுக்க வேண்டும்" என்றார் சிவபெருமான்.

சப்த ரிஷிகளுக்கும் விடை கொடுத்து அனுப்பி விட்டுக் கைலாசம் திரும்பிய ஈசன், நாரதரை வரவழைத்தார்.

"பிரம்மபுத்திரா! இமவானின் குமாரத்தி பார்வதி தேவியை மணம் முடிப்பதென்று நிச்சயித்திருக்கிறேன். சகல தேவர் களுக்கும் செய்தி அனுப்பித் திருமணத்துக்கு வரவழைக்க வேண்டிய பொறுப்பு உன்னைச் சேர்ந்தது. முனிவர்கள், சித்தர்கள், கிம்புருடர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் எல்லோரையும் எப்படியெப்படி அழைக்க வேண்டுமோ அதன்படி கவனித்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

நாரதர், ஈச்வரனை நமஸ்கரித்து அவர் ஆசி பெற்றுப் புறப்பட்டார். அந்த க்ஷணமே அவர் பார்வதி பரமேசுவரன் திருக் கல்யாணம் பற்றித் தேவர்கள் முதலானவர்களை அழைக்கப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புறப்பட்டார். யார் யாரை நேரில் சென்று அழைக்க வேண்டுமோ அவர்களை நேரில் சென்று கல்யாணத்துக்கு வந்திருந்து நடத்தி வைக்குமாறு அழைத்தார். ஓலை அனுப்ப வேண்டியவர்களுக்குத் தகுந்த தூதுவர்கள் மூலம் அனுப்பி வைத்தார். செய்தி அனுப்ப வேண்டியவர்களுக்கும் செய்தி விடுத்தார். இப்படியாக ஒருவரைக்கூட மறக்காமல் எல்லோரையும் கல்யாணத்துக்கு வந்து கலந்து கொள்ளுமாறு அழைத்தார்.

இமவானாகிய பர்வதராஜனின் பட்டணம் திமிலோகப் பட்டது. மக்களுக்கு உற்சாகம் சொல்லி முடியாது. அரசனுடைய ஏற்பாடுகளில் தாங்களும் .மும்முரமாக ஈடுபட்டனர்.

வீதிகள்தோறும் அழகு நிறைந்த தோரணங்கள் கட்டப் பட்டிருந்தன. ஆங்காங்கே பிரம்மாண்டமான பந்தல்கள் போடப்பட்டிருந்தன. திறந்தவெளிகளில் எல்லாம் பெரிய பெரிய கொட்டகைகள் போடப்பட்டு வரப்போகும் விருந்தினர்களுக்காகத் தயாராக இருந்தன. எங்கே திரும்பினாலும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் கரை புரண்டோடியது. கல்யாணம் என்ற செய்தியைக் கேட்ட நாளிலிருந்து மக்கள் ஒவ்வொரு நாளையும் கோலாகலமாகக் கொண்டாடி வந்தார்கள்.

அரண்மனை சொர்க்கலோகமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. வண்ண வண்ணப் பட்டாடைகளையும் ஆபரணாதிகளையும் அணிந்து கொண்டு பெண்கள் போவதையும் வருவதையும் பார்க்கப் பார்க்கச் சலிப்பே ஏற்படவில்லை. உலகெங்கிலுமுள்ள பர்வதங்கள் அனைத்தும் மானுடரூபம் தாங்கி, பர்வதராஜனுக்கு உதவ வந்து சேர்ந்தன. நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு அனைவரும் வேலை செய்தனர். ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுத் திருமணமாகவே எண்ணி நிறைந்த உள்ளத்தோடு கல்யாண ஏற்பாடுகளில் கலந்து கொண்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பர்வதராஜன், மகிழ்ச்சியால் பூரித்துப் போய் ஒரு சுற்று பெருத்து விட்டான் எனலாம். திருமணத்துக்காக வந்து குவியும் நண்பர்களையும், உறவினர்களையும் ஏற்பாடுகளின் நடுவில் கண்டு குசலம் விசாரித்து வந்தான்.

இங்கே இவ்வாறிருக்கக் கைலாசத்திலும் ஏற்பாடுகள் தடபுடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இந்திரன் முதலான தேவர்களும், கந்தர்வர்களும், அப்ஸரஸ் ஸ்திரீகளும் கைலாசத்தில் வந்து கூடினர். பிரம்மதேவர் சரஸ்வதி ஸகிதமாக ஹம்ஸ வாகனத்தில் சகல ரிஷகளும் புடை சூழ வந்து சேர்ந்தார். வைகுந்தத்திலிருந்து விஷ்ணு சர்வாபரணபூஷிதராய் வந்து சேர்ந்தார். அஷ்ட வசுக்கள், துவாதச ஆதித்தர்கள், திக்பாலகர்கள் ஆகியோரும் தங்கள் தங்கள் பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தனர்.

மங்கள நீராடலுக்குப் பிறகு சிவபெருமான் மாப்பிள்ளைக் கோலத்தில் தயாரானார். திருமுடியிலிருந்த பிறைச்சந்திரன் கிரீடத்தின் மத்தியில் அழகிய ஆபரணமாகத் திகழ்ந்தான். நெற்றிக்கண் திலகமாகப் பிரகாசித்தது. இடுப்பிலே அணிந்திருந்த தோல் ஆடை, அழகிய பட்டாடையாக மாறியது. காதுகளில் அணிந்திருந்த சர்ப்பங்கள் இரத்தின குண்டலங்க ளாயின. அவ்வாறே கைகளிலும் கால்களிலும் அணிந்து கொண்டிருந்த சர்ப்பங்களும் பொன்னாபரணங்களாகப் பிரகாசித்தன. விஷ்ணு, பிரம்மன் முதலானோர் சர்வேச்வரனை தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப அலங்காரம் செய்தனர்.

குறித்த வேளையில் சிவகோஷம் எட்டுத் திசைகளிலும் எதிரொலிக்க, மணமகன் கோஷ்டியினர் இமவானின் பட்டணத்துக்குக் புறப்பட்டனர். பூதகணங்களும் தேவர்களும் சிவநாமத்தைப் பஜனை செய்து கொண்டு முன்னால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்றனர். அப்ஸரஸ் ஸ்திரீகள், ஈசுவரனின் குணாதிசயங்களைப் போற்றிப் புகழ்ந்து பாடி ஆடியபடி சென்றனர். மத்தளம், மிருதங்கம், சங்கம், எக்காளம் முதலான வாத்தியங்கள் முழங்கின. ஆதிசேஷன் தன் ஆயிரம் முகங்களாலும் சங்கத்வனி முழங்கினான். வாயு தேவன் ஆலவட்டம் பிடித்தான். அக்கினி தூபம் ஏந்தினான், வருணன் பூர்ண கும்பம் ஏந்தினான். குபேரன் வழியெங்கும் நவநிதிகளை இறைத்தான். நாகராஜர்கள் மாணிக்கதீபம் ஏந்தி வந்தனர். வேதங்கள் பகவானின் திருவடியைத் தாங்கின. கங்கை முதலான புண்ணிய நதிகள் பகவானுக்குச் சாமரம் வீசின, குண்டோதரன் பகவானுக்குக் குடை பிடித்தான். விஷ்ணுவும், பிரம்மாவும் இரு பக்கங்களிலும் வந்தனர். ரிஷிகளும் முனிவர்களும் வேத கோஷம் செய்தபடி பின்தொடர்ந்தனர். நந்திதேவர் பொற்பிரம்பைக் கையிலேந்திக் கூட்டத்தினரை ஒழுங்காக நடத்திச் சென்றார். இத்தனை கோலாகலத்தோடு சர்வாலங்கார பூஷிதராகச் சிவன், ரிஷப வாகனத்தில் அமர்ந்து புறப்பட்டார்.

கைலயங்கிரியிலிருந்து பகவான் தம் கணங்கள் புடை சூழப் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறாரென்றும் நகரைச் சமீபித்து விட்டாரென்றும் செய்தி கேட்டுப் பர்வதராஜனின் அரண்மனையில் பரபரப்பு மிகுந்தது. பகவானைத் தகுந்த முறையில் எதிர்கொண்டழைக்க இமவான் எல்லோரையும் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஊரும் உலகமும் ஒருங்கே கொண்டாடும் சிவனைப் பார்க்க விரும்பிய மேனை, உப்பரிகையின் உச்சியில் ஏறி நின்றாள். அவள் அருகில் நின்ற நாரதர் தூரத்தே வந்து கொண்டிருக்கும் சங்கரனின் கோஷ்டியினரைக் காட்டிக் கொண்டிருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கந்தர்வரும், தேவதாசிகளும் புடைசூழ அலங்காரமாக வந்து கொண்டிருந்த கந்தர்வராஜன் விசுவாவசுவைக் கண்ட மேனை, நாரதரிடம், "மகரிஷி! இதோ வருகின்றாரே, அவர்தானே பார்வதியை மணக்கப் போகும் பரமன்?" என்று கேட்டாள்.

நாரதர் சிரித்து விட்டார்.

"ஏன் சுவாமி, சிரித்தீர்கள்?" என்று கேட்டாள் மேனை.

"தேவி, இவன் யார் தெரியுமா? ஈசனின் சந்நிதானத்தில் கீதம்பாடும் கந்தர்வராஜன் விசுவாவசு!" என்றார் நாரதர்.

மேனை ஆச்சர்யத்தால் ஒருகணம் ஸ்தம்பித்துப் போய் விட்டாள். சந்நிதானத்தில் இசைபாடும் இவனே இத்தனை சௌந்தர்யவானாக இருப்பானாகில், சங்கரன் எப்படித் தோன்றுவாரோ என்று வாயைப் பிளந்தாள். எல்லோரும் புகழ்வதற்கேற்ப, பார்வதி யாராலும் அடைய முடியாத பாக்கியத்தைத் தான் அடைந்திருக்கிறாள் என்று எண்ணிய போது அவள் உள்ளம் நிறைந்தது.

அடுத்தபடியாக யக்ஷர்கள் புடைசூழ குபேரன் வந்தான்.

"இவர் தானா, சுவாமி?" என்று கேட்டாள் மேனை.

"இல்லை, அம்மா! இவன் நவநிதிகளுக்கும் அதிபதியான குபேரன்!" என்றார் நாரதர்.

குபேரனைத் தொடர்ந்து வந்த வருணன், தர்மராஜன், இந்திரன் முதலானோரையும் ஒவ்வொருவராக 'இவர் தான் பரமசிவனா?' என்று கேட்டு வந்தாள் மேனை. அவள் கேட்ட போதெல்லாம் நாரதர் "இல்லை" என்று மறுத்துக்கூறி அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் எடுத்துச் சொல்லி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தார். அவர் கூறுவதைக் கேட்கக் கேட்க மேனையின் உற்சாகம் கட்டுக்கடங்காமல் இருந்தது. 'பார்வதி, உனக்குக் கிடைத்துள்ள பாக்கியம் இதுவரை யாருக்கும் கிடைத்ததில்லை. இனி யாருக்கும் கிடைக்கப் போவதும் இல்லை' என்றெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்தாள்.

சகல தேவர்கள் சூழ்ந்து வர, கண்ணைப் பறிக்கும் பிரகாசத்தோடு வந்த சூரியனைக் கண்டதும், மேனை கண்களை அகலவிரித்து, "மகரிஷி! இவர் தானா நீங்கள் புகழ்ந்து போற்றும் பரமேச்வரன் ?" என்று கேட்டாள்.

"மேனை, இவன் தான் சூரியன். இவர்களெல்லாம் பகவானை எப்போதும் அடிபணிந்து போற்றக் கூடியவர்கள். அவரது ஆக்ஞைக்குட்பட்டுச் சதா காலமும் இயங்கி வருகிறார்கள்" என்றார்.

மேனைக்குப் பெருமை தாங்கவில்லை. தன்னைச் சுற்றி ஒரு தரம் பார்த்துக் கொண்டாள். குனிந்து அரண்மனை வெளி முற்றத்தைப் பார்த்தாள். அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்த பெண்களைப் பார்த்ததும் அவள் நெஞ்சம் பெருமையால் நிமிர்ந்தது. "ம்.... இருங்கள் நீங்களும் என்னைப் போல் தான் ஏமாந்து போகப் போகிறீர்கள் !" என்று சொல்லிக் கொண்டாள்.

சந்திரனுக்கு பின்னால் ஹம்ஸவாகனத்தில் நான்முகன் வந்தார்.

"சுவாமி, சகலகலாவல்லவராகத் தோற்றமளிக்கும் இவர் தானா ஈசன் ?" என்று கேட்டாள் மேனை.

"சிருஷ்டி கர்த்தாவான நான்முகன் இவரே!" என்றார் நாரதர்.

அடுத்தாற்போல் சங்கு சக்ரகதாதாரியாய், நீலமேக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சியாமள வர்ண ரூபரான விஷ்ணு, கருட வாகனத்தில் வந்ததைக் கண்ட போது மேனை துள்ளிக் குதித்தாள்.

"மகரிஷி! நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டாம். இவரே பார்வதியை மணக்க வரும் பரமேச்வரன்!" என்று குதூகலத்தோடு கூறினாள்.

"அம்மா, மேனை! நீ நினைப்பது போல் இல்லை!" என்று நாரதர் சொன்னதும் அவள் திடுக்கிட்டுப் போய் அவரைப் பார்த்தாள்.

"என்ன சொல்லுகிறீர்கள் சுவாமி?" என்று கேட்டாள் மேனை.

"ஆம், அம்மா! க்ஷீராப்தி சயனரான விஷ்ணு இவர். ஈசன் இன்னமும் வரவில்லை" என்றார் நாரதர்.

மேனையின் உள்ளம் குதிநடை போட்டது.

"சுவாமி இவ்வளவு பேருக்கும் மேம்பட்டவரா சிவன்?" என்று கேட்டாள்.

"வாஸ்தவம், தேவி. கைலாசநாதன் இவர்கள் எல்லோருக்கும் மேம்பட்டவர். தினமும் விஷ்ணு பிரம்மாதியரால் வணங்கப்படுபவர்" என்றார் நாரதர்.

அடுத்து பிரகஸ்பதி, ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்கள் புடை சூழ வந்தார். அவருக்குப் பின்னால் பூதகணங்கள் சூழ்ந்திருக்க, ரிஷப வாகனத்தில் வந்தார் சங்கரன்.

இத்தனை நேரமாக ஆனந்தத்தால் அலைபாய்ந்து கொண்டிருந்த மேனை, அவர்களைச் சரியாகப் பார்க்கவே இல்லை. அவர்களுக்கும் அப்பால் யார் வருகிறார்கள் என்று எழும்பிப் பார்த்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோலாகலமாக வந்து கொண்டிருந்த கூட்டம் குறையத் தொடங்கிவிட்டது. ரிஷப வாகனத்தில் வருபவருக்கு அப்பால் ஒரு சில முனிவர்கள் வேத கோஷமிட்டு வந்தனர். ஏன் அதோடு கூட்டம் முடிந்து விட்டது? கைலாசநாதன் அவர்களை முன்னே செல்ல விட்டுப் பின்னால் தனியாக வருகிறாரோ என்று எண்ணினாள் அவள். எல்லோருக்கும் மேம்பட்டவரான அவர் கூட்டத்தோடு கூட்டமாக எப்படி வருவார்? தனியாக இருப்பதுதான் உகந்தது என அவள் உள்ளம் மகிழ்ச்சியோடு விடை அளித்தது.

எழும்பி எழும்பிக் கண்ணுக்குத் தெரிந்த தூரம் வரை பார்க்கும் மேனையைக் கண்ட நாரதர், "மேனை, இன்னும் என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

"சுவாமி சிவனைக் காணவில்லையே! அவர் தனியாக வருவாரா?" என்று கேட்டார்.

"தேவி, சிவனை நீ பார்க்கவில்லையா? அதோ போகிறாரே! அவரைப் பார்த்த பிரமிப்பில் நீ பேசவில்லை என்றல்லவா நான் எண்ணியிருக்கிறேன்" என்றார் நாரதர்.

"நான் பார்க்கவில்லையே, சுவாமி. சிவன் எங்கே போகிறார்?" என்று பரபரப்போடு கேட்டாள் மேனை.

"அதோ, தேவி!.... ரிஷப வாகனத்தில் செல்கிறாரே அவர்தான்!" என்று சங்கரனைக் காட்டினார் நாரதர்.

மகரிஷி சுட்டிக் காட்டிய திசையில் பார்த்த மேனை ஒரு கணம் தன் செயலிழந்து நின்று விட்டாள்.

ஐந்து முகங்களோடும் பத்துக் கரங்களோடும், ஜடை அவிழ்ந்து நாற்புறமும் தொங்க, இடுப்பிலே தோல் ஆடையும், கைகளிலும் காதுகளிலும் சர்ப்பங்களை ஆபரணங் களாகவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்து, உடலெங்கும் விபூதி விளங்க, கழுத்திலே காபாலிக மாலையும், கைகளில் கங்காளமும், சங்கமும், உடுக்கும், மானும், மழுவும், சூலமும், டமருகமும், அக்கினியும் ஏந்திப் பூதகணங்கள் புடைசூழ ரிஷப வாகனத்தில் செல்லும் சங்கரனைக் கண்டதும் அவள் மூச்சே நின்றுவிட்டது எனலாம். இந்த ஆண்டியையா எல்லோரும் போற்றிப் புகழ்ந்தனர் ? இவரா அவளுடைய மருமகனாக வரப்போகிறவர் ?

மேனையின் உள்ளத்தில் இத்தனை நேரமும் கும்மாளமிட்டுக் கொண்டிருந்த உற்சாகம் இருந்த இடம் தெரியாது அடங்கிப் போய் விட்டது. எந்தக் கணத்திலும் உடைந்து சுக்கு நூறாகி விடக்கூடிய அளவுக்கு துக்கம் அவள் இதயத்தில் நிறைந்தது. பிறர் எள்ளி நகையாடக் கூடிய நிலைக்கு அவள் வந்து விட்டாளே என்பதை நினைக்கும் போது அவள் கண்களில் நீர்முட்டியது. 'ஏன்டி மேனை, சர்வ லக்ஷணங்களோடு கூடிய இத்தனை பேர்களில் இந்த ஆண்டியையா உன் மகளுக்குத் தேர்ந்தெடுத்தாய் ?' என்று அவள் தோழிகளும் உறவினர்களும் கேட்டால், அவள் என்ன பதில் சொல்வாள் ? அவளால் துக்கத்தை அடக்க முடிய வில்லை. இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு 'ஓ' வென்று குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள்.

பதில் ஏதும் சொல்லாது மேனை அழத்தொடங்கியதும் நாரதர் திடுக்கிட்டு "மேனை, இது என்ன ? எதற்காக அழுகிறாய் ?" என்று கேட்டார்.

"சுவாமி ! நான் மோசம் போய் விட்டேன். எல்லோருமாகச் சேர்ந்து என்னை மோசம் செய்து விட்டனர். கைலாசநாதனை என் குமாரத்தி மணப்பதால் எங்கள் கௌரவம் பல விதங்களிலும் உயரக்கூடும் என்றெல்லாம் கூறினீர்களே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவாமி! இந்த ஆண்டியை என் மகள் மணப்பதால் எங்கள் கௌரவம் எந்த விதத்தில் உயரப் போகிறது? அதல பாதாளத்திற்கல்லவா போய்விடும்! பிறர் எள்ளி நகையாடக் கூடிய நிலையில் அல்லவா என்னை வைத்து விட்டீர்கள்?'' என்று விசித்தபடி கேட்டாள் மேனை.

"மேனை, என்ன வார்த்தை பேசுகிறாய்? சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம் ஆகிய மூன்றுக்குமே காரண கர்த்தாவான சிவபெருமான் யாருக்கும் எந்தவிதத்திலும் குறைந்தவரல்ல. இதை உணராது நீ துக்கப்படுவது சரியல்ல'' என்றார்.

மேனை நாரதரின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டவளாகத் தெரியவில்லை. 'ஓ' வென்று கதறியபடி உப்பரிகையிலிருந்து இறங்கி ஓடி வந்தாள். 'மேனை அழுது கொண்டு வருகிறாள்' என்ற செய்தியை உடனடியாக இமவானுக்குத் தெரியப்படுத்தினர்.

கைகால்கள் வெலவெலக்க ஒன்றும் புரியாதவனாய் ஓடி வந்தான் இமவான்.

நாதனைக் கண்டதும் மேனையின் துக்கம் மேலும் அதிகமாகி விட்டது.

"நாதா, என்னை மோசம் செய்துவிட்டார்கள்? எல்லோருமாக வஞ்சித்து விட்டார்கள்'' என்று அலறியபடி ஓடி வந்து அவன் பாதங்களில் விழுந்து கதறினாள்.

பர்வதராஜன் மனைவியை இரு கைகளாலும் தாங்கி மெல்லத் தூக்கி நிறுத்தினான்.

"மேனை, என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்?'' என்று பரபரப்போடு கேட்டபடி அவள் கண்களிலிருந்து வழிந்தோடும் நீரைத் துடைத்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“நாதா ! நமக்கு வரப்போகும் மருமகனைப் பாருங்கள். இந்த ஆண்டிதான் நமக்குக் கிடைத்தாரா ? சப்தரிஷிகள் என்னென்னவோ புகழ்ந்தார்களே! அவ்வளவும் வெறும் புகழ்ச்சி தானே! கையையும் காலையும் பாருங்கள், சுவாமி! இத்தனை படாடோபத்தோடு இருக்கும் அவருக்கு ஆபரணங்களா கிடைக்கவில்லை. சர்ப்பங்களை அணிந்து கொண்டிருக்கிறாரே! இவரோடு நம் குமாரத்தி எவ்வாறு வாழ்க்கை நடத்துவாள் ? கொஞ்சமாவது யோசிக்க வேண்டாமா ?” என்று மாலை மாலையாகக் கண்ணீரை உகுத்தாள்.

“மேனை, அவரது தோற்றத்தைக் கண்டா நீ இவ்வாறு துக்கிக்கிறாய் ? இங்கே வந்து குழுமியிருக்கும் சகல தேவர்களும் சர்வாலங்கார பூஷிதர்களாக இருக்கும் போது, அவரது இந்த எளிய தோற்றம் உன் அறிவை மயக்கி விட்டது தேவி. அண்ட சராசரங்களுமே அவரிடம் ஐக்கியம் என்பதை நீ அறியாயோ ? இந்தத் தேவர்கள் எல்லோருமே அவரது சக்தியால் விளங்குகின்றார்கள் என்பதை மறந்து விட்டாயா ? அவரது ஆத்ம சொரூபத்தை நம்மாலெல்லாம் காண முடியுமா ? ஞானிகள் எத்தனையோ வருடங்கள் கடும் தவம் செய்தும் காண முடியாது தவிக்கிறார்களே !” என்று ஆறுதல் வார்த்தைகள் சொன்னான் இமவான்.

“இவையெல்லாம் என் திருப்திக்குச் சொல்லும் வார்த்தை களே அன்றி வேறில்லை” என்று குமுறினாள் மேனை.

அப்போது அங்கே வந்த சப்தரிஷிகளும் மேனையை நெருங்கி, “தேவி, துயரம் வேண்டாம். இமவான் கூறிய வார்த்தைகள் அனைத்தும் உண்மையே. பகவானின் ஆத்ம சொரூபத்தை ஞானக்கண் கொண்டுதான் காண முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விதையிலிருந்து செடி உண்டாகி, வளர்ந்து விருக்ஷமாகி அனேகக் கிளைகளுடனும், இலை, காம்பு, பூ முதலியவற்றாலும் விளங்குவதுபோல, தேவர்கள், நாங்கள் எல்லோருமே அப்பரப்பிரம்மத்தினிடமிருந்து உண்டானவர்களே!" என்று சொல்லி அவளைத் தேற்றினர்.

அப்போதும் மேனையின் துக்கம் நீங்கியதாகத் தோன்ற வில்லை. பார்த்தார் நாரத முனிவர். நேராகச் சங்கரனிடம் சென்றார்.

"சர்வேச்வரா! இதென்ன திருவிளையாடல்? கைலாசத் திலிருந்து புறப்படும்போது சர்வாலங்கார பூஷிதராகத் தோற்றமளித்துப் புறப்பட்ட தாங்கள், மேனையின் பார்வைக்கு ஏன் வேறு விதமாகத் தோற்றமளித்தீர்கள்? அதன் காரணமாக மேனை பெரும் துக்கத்துக்கு ஆளாகிவிட்டிருக்கிறாள். அவள் உள்ளம் சமாதானம் அடையும்படியாகத் தாங்கள் திருக்கோலம் கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

"நாரதா, அவள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அஞ்ஞானத்தை வெளிப்படுத்தவே, அவ்வாறு அவள் கண்களுக்குத் தோற்றமளித்தேன். இப்போதே போய் அவளை அழைத்து வா!" என்றார் சங்கரன்.

நாரதரும் மகிழ்ச்சியோடு அரண்மனைக்கு ஓடினார்.

அங்கே இன்னமும் மேனையை விஷ்ணு, பிரம்மா முதலானோர் தேற்ற முயன்று கொண்டிருந்தனர். ஓடி வந்த நாரதர், "மேனை, இப்போது வந்து பார் உன் மருமகனை. உன் துக்கம் போன இடம் தெரியாது போய் விடும். பகவானின் திவ்விய சொரூபத்தை இப்போது பார்" என்று கூப்பிட்டார். மேனையோ இருந்த இடத்தை விட்டு நகரவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"என்னைத் திருப்திப்படுத்த என்னென்னவோ சொல்லு கிறீர்கள். இதனாலெல்லாம் என் உள்ளம் ஆறுதல் அடைந்து விடுமா?" என்றாள் குமுறிய உள்ளத்துடன்.

"மேனை என் வார்த்தையை நம்பு. உன் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அஞ்ஞானத்தை வெளிப்படுத்த வேண்டியே பகவான் உன் கண்களுக்குத் தம் சொரூபங்களில் ஒன்றைக் காட்டினார். இப்போது வந்து அவரது திவ்விய மங்கள ரூபத்தைக் காண்பாய்! என்று மீண்டும் அவளை வற்புறுத்தினார் நாரதர்.

வேண்டா வெறுப்போடு மேனை அவரோடு சென்றாள். அவளைப் பின்தொடர்ந்து, இமவானும் மற்ற தேவர்களும் சென்றனர்.

அரண்மனை வாயிலை அடைந்த மேனை மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

அவள் பார்வை அப்படியே நிலைத்து நின்று விட்டது. சற்று முன்பு கண்ட ஆண்டி எங்கே? ரிஷபவாகனத்தின் மீது இருக்கும் புதிய மனிதர் யார்? ஐந்து முகங்களும், பத்துக் கரங்களும் எங்கே போயின? திருமுகம் ஒன்றோடும், இரு கைகளுடன் கம்பீரமாக அமர்ந்திருக்கும் அந்த இளைஞன் யார்? அந்த இளைஞனைச் சுற்றி அதென்ன ஒரே பிரகாசம்? அங்குக் குழுமியிருந்த தேவர்களில் எவரையும் அவனுடைய அழகுக்கு இணையாகச் சொல்ல முடியாது!

மேனையின் உள்ளம் சிலிர்த்தது. திரும்பித் தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்துக் கொண்டாள். விஷ்ணு பிரம்மாதி தேவர்கள் இருகரங்களையும் கூப்பி, "ஹர ஹர சங்கரா!" என்று கோஷமிட்டனர். மேனையின் இரு கரங்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அவளையறியாமல் கூப்பின. கண்களிலிருந்து நீர் பெருக, "பிரபோ! அடியாளை மன்னித்து விடுங்கள்!" என்று பிரார்த்தித்தாள்.

பக்கத்திலே நின்றிருந்த இமவான் "எங்கே பூர்ணகும்பம்? எடுத்து வாருங்கள்" என்று துரிதப்படுத்தினான். விஷ்ணு, ரிஷபத்திலிருந்த பகவானைப் பிரார்த்தித்தபடி கைலாகு கொடுத்து அவரைக் கீழே இறக்கினார். இமவான் ஓடி வந்து அவரது பாதங்களில் விழுந்து வணங்கினான்.

"பிரபோ, நான் தன்யனானேன்?" என்று மகிழ்ச்சியோடு கூறி, மேனையின் கையிலிருந்து தீர்த்த பாத்திரத்தை வாங்கிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவானின் கால்களை அலம்பினான். நறுமணம் கமழும் மலர்களைக் கொண்டு அர்ச்சித்து, பாதத்திலிருந்து வழிந்தோடும் நீரைக் கைகளில் எடுத்துத் தன் தலைமீது ப்ரோக்ஷித்துக் கொண்டு மேனையின் தலையிலும் தெளித்தான்.

“சர்வேசா! தாங்கள் என் குமாரத்திக்கு வாக்குக் கொடுத்த படி அவளை ஏற்றுக் கொண்டு எங்களை அனுக்கிரகிக்க வேண்டும்” என்று அஞ்சலி செய்து வேண்டினான் இமவான்.

“அவ்வாறே செய்வேன்” என்று அருளினார் சங்கரன்.

பின்னர் மணமகன் கோஷ்டியாருக்கு என ஏற்பாடு செய்திருந்த அரண்மனைக்கு அவர்களை அழைத்துச் சென்று உபசரித்தான். அவர்கள் சௌகரியங்களைக் கவனித்துக் கொள்ள ஆயிரக்கணக்கானவர்களை ஏற்பாடு செய்திருந்தான்.

பட்டணம் முழுவதுமே குதூகலத்தில் மூழ்கியிருந்தது. எங்கே திரும்பினாலும் நிருத்தியமும் கீதமும் வந்திருந்த விருந்தினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. யாரைப் பார்த்தாலும் பகவானின் திவ்விய மங்கள சொரூபத்தையே வர்ணித்துக் கொண்டிருந்தனர்.

கங்கை முதலான புண்ணிய நதிகள், இமவானின் அரண்மனைக்கு வந்து பார்வதியை மங்கள நீராட்டி சௌந்தரிய தேவதையாக அலங்கரித்தன. லக்ஷ்மியும், சரஸ்வதியும் இரு புறங்களிலும் தாங்கிப் பிடித்தவாறு பார்வதியை மணமேடைக்கு அழைத்து வந்தனர்.

பந்தலில் இருந்தவர்கள் தேவியின் ரூபலாவண்யத்தைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டனர். மணமகன்–மணமகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருவருடைய அழகும் ஒன்றுக்கொன்று இணையாக விளங்குவதைக் கண்டு பிரமித்தனர்.

பிரம்மதேவன் புரோகிதராக முன்னின்று நடத்த மேனை நீர் வார்த்துக் கொடுக்க, இமவான் பார்வதியைக் கன்யா தானம் செய்து கொடுத்தார்.

"சர்வேச்வரா, என் குமாரத்தியை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று பகவானை வேண்டினார்.

சங்கரன் முகமலர்ச்சியோடு பார்வதியின் கையைப் பற்றித் தம் பக்கத்தில் அழைத்து வந்து அமர்த்திக்கொண்டார். துந்துபிகள் முழங்கின. பிரம்மன் அக்கினி வளர்த்து மந்திரங்களைச் சொல்லி, பந்தலில் குழுமியிருந்தோரின் மகிழ்ச்சி நிறைந்த ஆரவாரத்துக்கிடையே ஈசன், தேவியின் கழுத்திலே திருமாங்கல்யதாரணம் செய்தார். வேத கோஷங்கள் வான்முகட்டை எட்டின. தேவர்கள் மலர்மாரி பெய்தனர். மங்கையர் மங்கல கீதம் இசைத்தனர்.

இமவான் மேனையுடன், வந்திருந்த ஒவ்வொரு தேவர்களையும் அவரவர் பரிவாரங்களோடு நேரில் போய் சந்தித்து உபசரித்தான். நந்திகேச்வரரின் மேற்பார்வையில் விருந்து பரிமாறப்பட்டது. பலவகைப்பட்ட ருசிமிக்க உணவு வகைகளை, வந்தவர்கள் அனைவரும் வயிறார உண்டனர். விருந்துக்குப் பின்னர் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது.

தேவர்கள் தங்கள் தங்கள் தேவியரோடு வந்து, மண மேடையை அலங்கரித்துக் கொண்டிருந்த பார்வதி பரமேச்வரரை வலம் வந்து வணங்கி அவர்களது ஆசி பெற்றுப் புறப்பட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைவரும் புறப்பட்ட பிறகு, ஈசனும் பார்வதியுடன் கைலாசத்துக்குப் புறப்பட்டார். இமவானும் மேனையும் குமாரத்தியை விட்டுப் பிரிய மனமில்லாமல் நீர் துளிக்கும் கண்களோடு எல்லைவரை உடன்சென்று அவர்களை வழி அனுப்பிவிட்டுத் திரும்பினர்.

கைலயங்கிரி திரும்பிய பரமேச்வரன் தேவியுடன் ஆனந்தமாகக் காலத்தைக் கழிந்து வந்தார்.

8. தாருகன் வதமும் திரிபுர தகனமும்

வருடங்கள் நகர்ந்தன. தேவர்கள் பொறுமை இழக்கத் தொடங்கினர். எந்தக் காரியத்தை உத்தேசித்து அவர்கள் கைலாசநாதனின் திருமணத்துக்கு முயற்சித்தார்களோ அந்தக் காரியம் நிறைவேறாது தாமதப்பட்டு வந்தது. காலம் சீக்கிரமே கனியும் என்று எதிர்பார்ப்புடன் நாட்களைக் கடத்தி வந்தனர். நாட்கள் கடந்தனவே ஒழிய குமாரனின் அவதாரம் நிகழவில்லை.

இனியும் தாமதிக்க முடியாது என்ற நிலைக்கு வந்து விட்ட தேவர்கள், அக்கினி பகவானைப் பார்த்து, "அக்கினி தேவா, நீதான் ஈசனிடம் சென்று குமாரக் கடவுளின் அவதார அவசியத்தை அவருக்கு நினைவூட்ட வேண்டும்" என்று வேண்டினர்.

அக்கினியும் அவர்கள் கோரிக்கைக்கு இணங்கி புறாவாக வடிவம் கொண்டு கைலயங்கிரிக்குப் பறந்து சென்றார்.

தேவியோடு ஆனந்தமாகப் பொழுதைப் போக்கி வந்த பரமேச்வரன் அங்கு வந்த புறாவைக் கண்டதும், "யாரடா வந்திருப்பது ?" என்று கேட்டபடி கோபமாக எழுந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்போது அவரிடமிருந்து வீரியம் வெளிப்பட்டது. அடுத்த கணம், வந்திருப்பது அக்கினி தேவன் என்பதும், அவன் வந்த நோக்கம் குமாரக் கடவுளின் அவதார நிமித்தம் என்பதையும் அறிந்த ஈசன், சாந்தமடைந்து தம்முடைய வீரியத்தைக் கொண்டு சென்று கங்கையில் விடுமாறு தெரிவித்தார்.

அக்கினியும் அவ்வாறே புறா வடிவத்தோடு, ஈசனின் வீரியத்தை அவர் ஆணைப்படி, கங்கையில் விட்டார். கங்கையாலும் அதன் உக்கிரத்தை தாங்க முடியாமல் போனதால் அது தர்ப்பைப் புற்கள் வளர்ந்திருந்த சரவணப் பொய்கை எனப்படும் மடுவில் அதை சேர்த்தது. அந்த க்ஷணமே அழகிய ரூபத்தோடு குமாரன் தோன்றினான்.

அப்போது மடுவுக்கு நீராட வந்த கன்னியர் அறுவர், புற்களிடையே நீரில் மிதக்கும் குழந்தையைக் கண்டு ஓடி வந்து, 'என் குமாரன்' என்று தூக்க வந்தனர். அவர்களிடையே பூசலை உண்டாக்க விரும்பாத சிவகுமாரன் ஆறு முகங்களோடு அவர்களுக்குத் தோற்றமளித்தான். ஒவ்வொருவரும் அவரை வாரி எடுத்து முலைப்பால் கொடுத்தனர். அதன் காரணமாக அவருக்கு ஷண்மாதுரன் (ஷண்முகன்) என்ற பெயர் விளங்கலாயிற்று. மேலும் குமாரக் கடவுளுக்குப் பார்வதி **மைந்தன்,**



In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்கினி புத்திரன், ஸ்கந்தன், சரவணபவன், கங்காபுத்திரன் என்ற நாமங்களும் விளங்கலாயின.

கன்னியர் அறுவரும் குமாரனை அன்போடு வளர்த்து வந்தனர். குமாரனின் அவதாரத்தையும், கன்னியர் அறுவரிடம் அவர் வளர்ந்து வருவதையும் நாரதர் மூலம் அறிந்த பார்வதி ஈசனோடு புறப்பட்டுச் சென்று மகனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். குமாரன்அவதரித்து விட்டான் என்பதைக் கேட்ட தேவர்களும் அங்கு வந்து கூடினர். எல்லோரும் தேவியையும் குமாரனையும் பலவாறு தோத்திரங்கள் செய்து வணங்கி, அவனைத் தங்களது தலைவனாக ஏற்றுக் கொண்டு தாருகனோடு யுத்தத்துக்குப் புறப்படுமாறு வேண்டினர்.

பரமன், குமாரனுக்கு அனேக வித அஸ்திரங்களைக் கொடுத்து, யுத்தத்தில் அசுரனை வெற்றி கொள்ளுமாறு அருளினார். தேவியும் தமது சக்தியை மைந்தனுக்கு அளித்தாள். விஷ்ணு பிரம்மாதியரும் தங்கள் அஸ்திரங்களைக் குமாரக் கடவுளுக்கு அளித்து, அவர் தலைமையில் தங்கள் பரிவாரங்களுடன் யுத்தத்துக்குப் புறப்பட்டனர்.

தேவர்கள் பயத்தை விடுத்து யாரோ ஒரு சிறுவன் தலைமையில் யுத்தத்துக்கு வருகிறார்கள் என்பதை அறிந்தபோது தாருகன் பெரும் சீற்றம் கொண்டான். உடனே வீரர்களைத் திரட்டிக் கொண்டு அவனும் யுத்த சன்னத்தமானான்.

நகருக்கு வெளியே அசுரப் படைகளும் தேவர் படைகளும் சந்தித்துக் கொண்டன. மிகவும் பயங்கரமான யுத்தம் தொடங்கியது. அசுரன் எத்தனையோவித மாய உருக்களைக் கொண்டு குமாரனுடன் போரிட்டான். குமாரக் கடவுளும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வப்போது தமது அஸ்திரங்களால் அசுரனின் மாயத் தோற்றத்தை வெளிப்படுத்தித் திக்குமுக்காடி ஓடும்படி செய்தார். ஒரு நாள், இரண்டு நாள் என்று ஆரம்பித்த யுத்தம் பத்து நாட்கள் வரை நீடித்தது. அசுரன் கொஞ்சமும் சளைக்காது சிவகுமாரனோடு யுத்தம் செய்தான். யுத்தத்தை மேலும் நீடிக்க விரும்பாத குமாரக் கடவுள், பத்தாவது நாள் தம் பெற்றோர்களை மனத்தால் தியானித்து, அசுரனின் அழிவு நிறைவேறப் பிரார்த்தித்துக் கொண்டு அஸ்திரம் ஒன்றை விடுத்தார். அசுரனின் மாயாஜாலங்களை அது அழித்து, முன்னேறிச் சென்று அவனைத் தாக்கி, அவன் உயிரைக் குடித்துத் திரும்பியது.

தாருகன் அழிந்தான் என்பதை அறிந்தபோது, தேவர்கள் ஆனந்தப் பரவசமாகி ஓடி வந்து குமாரக் கடவுளின் அடிபணிந்து துதித்தனர். முனிவர்கள் பலவாறு குமாரனின் பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்தனர். பயம் ஒழிந்து சகல லோகங்களிலும் நிம்மதி ஏற்பட்டது.

தாருகன் வதத்தால் ஏற்பட்ட நிம்மதி, அதிக காலத்துக்குத் தொடர்ந்து இருக்கவில்லை.

தாருகனின் புத்திரர்களான வித்யுன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் அம்மூவரும், தந்தையின் மரணத்துக்குப் பிறகு தேவர்களைப் பழி வாங்க வேண்டுமென்று பிரம்ம தேவனைக் குறித்துத் தவம் மேற்கொண்டனர். கணக்கற்ற வருடங்கள் உடலைப் பலவிதத்திலும் வருத்திக் கொண்டு அவர்கள் காற்றையே உணவாக்கிக் கடுமையாகத் தவம் செய்தனர்.

அவர்கள் மேற்கொண்டிருக்கும் தவத்தை மேலும் நீடிக்க விட்டால், சகல லோகங்களும் யோகாக்கினியில் தகிக்கப்பட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடும் என்பதை உணர்ந்த பிரம்மன் அவர்கள் முன்பு காட்சி தந்து, "அசுர குமாரர்களே! உங்களுக்கு வேண்டிய வரம் என்ன ?" என்று கேட்டார்.

"பிரபோ! எங்களுக்கு யாராலும் எந்த வழியிலும் மரணம் சம்பவிக்காதிருக்குமாறு அனுக்கிரகிக்க வேண்டும்" என்று மூவரும் நான்முகனை வேண்டினர்.

"அசுரகுமாரர்களே! உங்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ள முடியாததாயிருக்கிறது. பிறப்பு என்று இருந்து விட்டால் மரணம் சம்பவித்துத்தான் ஆகும். யாராலும் அதைத் தடுக்க முடியாது. ஆகவே வேறு வரம் ஏதாவது கேளுங்கள்" என்றார் சதுர்முகன்.

மூவரும் சிறிது ஆலோசித்துப் பின்னர் பிரம்மதேவனை வணங்கி, "பிரபோ! நாங்கள் கேட்ட அந்த வரத்தைக் கொடுக்க முடியாதென்றால் நாங்கள் விரும்பும் இந்த வரத்தையாவது எங்களுக்கு அளிக்கவேண்டும். நினைத்த மாத்திரத்தில் பறந்து செல்லும் வலிமையுடைய பொன், வெள்ளி, இரும்பாலான மூன்று பட்டணங்கள் எங்களுக்குக் கிடைக்க அருள வேண்டும். அம்மூன்றும் ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை ஒன்று சேர வேண்டும். அவ்வாறு மூன்று பட்டணங்களும் ஒன்று சேர்ந்துள்ள சமயத்தில் ஒரே பாணத்தால் அவற்றை ஒருங்கே அழிக்கக் கூடிய சக்தி உள்ள ஒருவனாலேதான் நாங்கள் கொல்லப்பட வேண்டும். இந்த வரத்தைத் தாங்கள் எங்களுக்கு அருள வேண்டும்" என்று வேண்டினர்.

நான்முகன் அவர்கள் கேட்ட வரத்தை அளித்தார். பின்னர் தேவதச்சனான மயனை அழைத்துச் சகல வசதிகளோடு மூன்று பட்டணங்களையும் நிர்மாணித்து அசுர குமாரர்களிடம் ஒப்படைக்குமாறு சொல்லிவிட்டுத் தம் இருப்பிடம் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மன் இட்ட உத்தரவுப் பிரகாரம் மயன் பொன், வெள்ளி, இரும்பாலான பட்டணங்களை நிர்மாணித்தார். தாரகாக்ஷனுக்கு பொன்னாலான பட்டணத்தையும், கமலாக்ஷனுக்கு வெள்ளியாலான பட்டணத்தையும், வித்யுன்மாலிக்கு இரும்பாலான பட்டணத்தையும் அளித்தான். பொன்னாலான பட்டணமாகிய காஞ்சனபுரி சுவர்க்கத்திலும், வெள்ளியாலான இரசிதபுரி வானவெளியிலும், இரும்பாலான ஆயசபுரி பூமியிலும் சஞ்சரிக்கும் சக்தி பெற்றிருந்தன.

அசுரகுமாரர்கள் மூவரும், தங்கள் பட்டணங்களில் உற்றார் உறவினரோடு குடியேறினர். உலகெங்கிலும் இருந்த அரக்கர்கள் அவர்களை அடைந்தனர்.

ஆயசபுரியான இரும்புப் பட்டணத்திற்கதிபதியான வித்யுன்மாலி, நினைத்த மாத்திரத்தில் தன் பட்டணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு சென்றான். இவ்விதமாக அவன் உலகின் பல பாகங்களிலும் சுற்றினான். திடீர் திடீரென உயரே எழுந்து பறந்து சட்டென்று பட்டணத்தை கீழே இறக்குவான். பட்டணத்தின் அடியில் சிக்கிக் கொண்ட மக்களும் பிராணிகளும் கூட்டம் கூட்டமாக உயிரை இழந்தனர். எந்தச் சமயத்தில் பட்டணம் தங்கள் மீது இறங்குமோ என்ற பயத்தில் பூலோகவாசிகள் நடுங்கி வந்தனர். அதனால் அவர்கள் தங்கள் கர்மாக்களைச் சரிவரச் செய்ய முடியாது தவித்தனர். தர்மாசாரங்கள் நசியத் தொடங்கின.

பூலோகத்தில் யாகம் முதலான கர்மாக்கள் சரிவர நடக்காததால், தேவர்களுக்குக் கிடைத்து வந்த அவிர்ப்பாகம் குறைந்து விட்டது. அதனால் அவர்கள் வலிமை குன்றியவர்களானார்கள். அது மட்டுமல்ல; அவர்களால் நிம்மதியாக நடமாடவும் முடிய வில்லை. எந்த நேரத்தில் வானமார்க்கமாகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பறந்து செல்லும் அசுர பட்டணங்கள் தங்கள் மேல் விழுமோ என்ற பயம் அவர்களையும் பீடித்திருந்தது.

எல்லோருமாகப் பிரம்மலோகம் சென்று நான்முகனைச் சரண் அடைந்தனர்.

“அன்புமிக்கத் தேவர்களே! அசுரர்கள் மூவரும் எளிதில் அழிக்க முடியாதவாறு வரம் பெற்றுள்ளனர். நாராயணனைக் கேட்போம். அவரால் இதற்கொரு உபாயம் காண முடியும்” என்று கைவிரித்த நான்முகன், தேவர்களை விஷ்ணுவிடம் அனுப்பி வைத்தார்.

க்ஷீராப்தி சயனரான மகாவிஷ்ணுவும் தேவர்களின் துயரைக் கேட்டுத் தானும் வருந்தினார்.

“தேவர்களே! அசுரர்களை அழிப்பதானது நம்மால் இயலாத காரியம். ஆதிபரம்பொருளான சிவபெருமான் ஒருவரே அவர்களை அழிக்கவல்லவர். அவரை ஆராதித்து அனுக்கிரகம் பெறுவோம்” என்று சொன்ன விஷ்ணு, தேவர்களைச் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்யுமாறு சொன்னார். தேவர்களும் அவரையே முன்னின்று பூஜையைக் குறைவின்றி நிறைவேற்றித் தருமாறு வேண்டினர்.

நாராயணனும் அதை மகிழ்ச்சியோடு ஏற்று சிவ லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். தேவர்களும் அவரோடு தூய உள்ளத்தோடு தங்கள் துயரம் நீங்கப் பரமேச்வரனைத் தியானித்து சிவலிங்கத்தைப் பூஜை செய்தனர்.

பூஜையின் முடிவில் சிவலிங்கத்தினின்று கோர ரூபத்தோடு எண்ணற்ற பூதங்கள் தோன்றி, தேவர்களைப் பணிந்து நின்றன.

“சிவானுக்கிரகம் பெற்ற பூதகணங்களே! நீங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைவரும் இப்போதே புறப்பட்டுச் சென்று முப்புரங்களையும் எரித்து விட்டு வாருங்கள்'' என்றார் விஷ்ணு.

பூதகணங்கள் அசையாது நிற்பதைக் கண்ட விஷ்ணு ஆச்சரியத்தோடு அவைகளைப் பார்த்தார்.

“ஏன் நிற்கிறீர்கள்? இப்போதே புறப்படுங்கள்'' என்றார்.

“பிரபோ, அசுரர் மூவரும் ஈசனிடம் பக்தி பூண்டவர்கள். அவன் பட்டணத்திலிருப்பவர்களும் சிவபூஜை செய்பவர்கள். அவர்கள் எவ்வளவு பாவியாக இருந்தாலும் தாமரை இலைத் தண்ணீர் போல, அவர்களுடைய பாபங்கள் அவர்களை நெருங்க முடியாது இருக்கின்றன. அந்த இடத்தில் எங்களால் எதுவும் செய்ய முடியாதே!'' என்றன பூதகணங்கள்.

“அப்படியானால் நீங்கள் போகலாம். வேறு உபாயம் பற்றித்தான் யோசிக்க வேண்டும்!'' என்றார் விஷ்ணு.

பூதகணங்கள் மறைந்ததும் தேவர்களைப் பார்த்து, “நீங்கள் அனைவரும் ஒன்று கூடி அந்தப் பரம்பொருளைத் தியானியுங்கள். அவர் அனுக்கிரகம் இருந்தால் தான் நாம் தொடங்கும் காரியம் சாதகமாக முடியும்'' என்றார்.

தேவர்கள் நாராயணனைப் பணிந்து விடைபெற்றுச் சென்றனர். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பரமேச்வரனைத் தியானித்தனர். இதனிடையில் விஷ்ணு ஒரு தனியிடத்தில் ஏகாந்தமாகத் தியானத்தில் அமர்ந்தார். அப்போது அவரிடமிருந்து ஒரு மாயாபுருஷன் தோன்றினார். மேலும் நால்வரை உண்டாக்கி அப்புருஷனுக்குச் சிஷ்யர்களாகப் பணித்தார்.

“பிரபோ! நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிவிக்கலாம்'' என்று அவர்கள் ஐவரும் நாராயணனின் தாள் பணிந்தனர்.

“இப்போதே நீங்கள் புறப்பட்டுச் சென்று அசுரன் தாருகன் புத்திரர்களான தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி ஆகியோருடைய பட்டணங்களை அடைந்து, அங்குள்ள மக்களுக்கும், அசுரர்களுக்கும் இதமான வார்த்தைகளைச் சொல்லி அவர்கள் மனத்தை மயக்கி, சிவபூஜையிலிருந்து வழுவும்படி செய்ய வேண்டும். சிவபூஜையை அலட்சியப் படுத்துவதன் மூலம் அவர்கள் தாங்கள் அடைந்திருக்கும் பகவத் அனுக்கிரகத்தின் வலிமை குறைந்தவர்களாக வேண்டும்'' என்றார் நாராயணன்.

அதே சமயம் “பிரபோ! பன்னகசயனா!... சகல புவனங்களும் தங்களால் ரக்ஷிக்கப்பட வேண்டும்'' என்று பிரார்த்தித்தபடி அங்கே வந்து சேர்ந்தார் நாரதர்.

அவரைக் கண்ட நாராயணன் மகிழ்ச்சி அடைந்து, “நாரதா! நல்ல சமயத்தில் தான் வந்திருக்கிறாய். இங்கு உள்ள மாயா புருஷர்கள் என்னால் தோற்றுவிக்கப்பட்டவர்கள். தாருகனின் குமாரர்கள் மூவரும் செய்து வரும் அட்டகாசங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அசுரர்களும் அவனைச் சேர்ந்தோர்களும் சிவபூஜை தவறாது செய்து வருகின்றபடியால் அவர்களை எந்தத் தேவர்களாலும் அசைக்க முடியாது. அவர்கள் தாங்கள் செய்து வரும் நித்திய கர்மாக்களை விடுத்து சிவபராதிகளாக மாறுவதற்காக இவர்களைத் தோற்றுவித்து அங்குச் சென்று பிரசாரம் செய்யுமாறு சொல்லியிருக்கிறேன். நீயும் உடன் சென்று இவர்களுக்குத் தேவையான உதவி செய்ய வேண்டும்'' என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பிரபோ, தங்கள் விருப்பம் என் சித்தம்" என்று பணிந்த நாரதர், அவரது ஆசி பெற்று அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

விஷ்ணுவால் தோற்றுவிக்கப்பட்ட மாயா புருஷன் மதாசாரியாராகவும் அவனுடன் வந்த நான்கு பேரும் அவருடைய பிரதம சீடர்களாகவும் நாரதரோடு வித்யுன் மாலியின் ஆயசபுரியுள் நுழைந்தனர். நாரதர் அவர்களை நேராக அசுரனின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்.

நாரதரைக் கண்டதும் வித்யுன்மாலி அவரை வரவேற்று உபசரித்தான்.

"சர்வலோக சஞ்சாரியான நாரதமுனிவரே! ஏது இவ்வளவு தூரம்? காரியம் ஏதுமின்றி இங்கே வரமாட்டீர்களே!" என்று கேட்டான்.

"வித்யுன்மாலி! இப்படிச் சஞ்சாரித்துக் கொண்டு வரும் போது இந்த ஆசாரியாரைச் சந்தித்தேன். பகவத் விஷயமாகப் பிரசாரம் செய்து வருவதாகவும் உன் பட்டணத்துக்கும் போக வேண்டும் என என்னிடம் விருப்பம் தெரிவித்தார். போகும் வழியில் இங்கு அழைத்து வந்து விட்டுவிட்டுச் செல்லலாமென வந்தேன்" என்றார் நாரதர்.

வித்யுன்மாலி மாயாபுருஷனையும் அவனுடன் சிஷ்யர்களாக வந்திருந்த நால்வரையும் வரவேற்று நன்கு உபசரித்தான்.

"வித்யுன்மாலி, இந்த மனிதர் சாதாரணமானவரல்ல, மிகுந்த பக்திமான். தர்மோபதேசம் செய்வதில் இவருக்கு நிகர் இல்லை எனலாம். நானே இவருடைய உபதேசத்தைக் கேட்டு மனம் களித்து இவரிடம் தீக்ஷை பெற்றேன்" என்றார் நாரதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“அப்படியா, சுவாமி! ...” என்று ஆச்சரியத்தோடு கேட்டான் அசுரன்.

“ஆம், நீயும் இவரிடம் தீக்ஷை பெற்றால் உன் மகிமை மேலும் பிரகாசிக்கும் என்பது என் அபிப்பிராயம்!” என்றார் நாரதர்.

பட்டணத்தை நினைத்த மாத்திரத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டு சென்று கூட்டம் கூட்டமாக மக்களைக் கொலை செய்து வந்த வித்யுன்மாலி, அந்தப் பாபம் காரணமாக புத்தி கூர்மை மழுங்கி இருந்ததால் நாரதருடைய வார்த்தைகளில் பொதிந்துள்ள மர்மத்தை உணர்ந்து கொள்ள முடியவில்லை. மேலும் விஷ்ணுவின் உத்தரவினால் அவர்களோடு ஜேஷ்டாதேவியும் பட்டணத்தில் நுழைந்திருந்தாள்.

நாரதரின் வார்த்தைகளில் மயங்கிய வித்யுன்மாலி, மாயா புருஷனை வணங்கி, “சுவாமி, அடியேனுக்கும் தீக்ஷை செய்விக்க வேண்டும்” என்று பிரார்த்தித்தான்.

மாயாபுருஷன் அசுரனின் வேண்டுகோளை ஏற்று அவனுக்குத் தர்மோபதேசம் செய்தான். அசுரனின் கொடுமை நிறைந்த உள்ளத்துக்கு இதமளிக்கும் வகையில், தர்மங்களை இருபொருள் படும் வகையில் எடுத்துக் கூறினான். விக்கிரக ஆராதனை தேவை இல்லை எனப் பல மேற்கோள்களுடன் எடுத்துக் காட்டினான் மாயாபுருஷன். பூஜை, வழிபாடு முதலானவை, செலவுக்குத் தான் வழி கோலுமே தவிர மற்ற வழிகளில் உதவக் கூடியவை அல்ல எனத் தெரிவித்தான். இன்னும் பல வகைகளில் அசுரன் மனம் களிக்கும் வகையில் எடுத்துச் சொல்லி வந்தான்.

அபரிமிதமான பாபங்களால் முடிவுக்காலத்தை நெருங்கிக் கொண்டிருந்த அசுரன், மாயா புருஷனின் வார்த்தைகளில் மதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயங்கினான். அவன் உபதேசங்களை வேத வாக்காக எடுத்துக் கொண்டான். அத்துடன் மட்டுமல்ல, தன் பட்டணத்தில் இருப்பவர்களுக்கும் அத்தர்மத்தை உபதேசிக்கச் செய்தான். தன்னுடைய சகோதரர்கள் இருவருடைய பட்டணங்களுக்கும் மாயாபுருஷனை அனுப்பி அங்கும் உபதேசம் செய்யச் சொன்னான்.

விஷ்ணுவால் அனுப்பப்பட்ட மாயா புருஷன், அசுரப் பட்டணங்கள் மூன்றிலும் விதைத்துவிட்டு வந்தவை, நன்கு முளைத்துத் துளிர்விடத் தொடங்கின. மக்கள் சிவபூஜையை விட்டுவிட்டனர். நல்ல காரியங்களில் செலவிட்டு வந்த பொழுதைத் தர்மத்துக்கு விரோதமான காரியங்களில் செலவழித்தனர். இதனால் தர்மம் நசிந்து அதர்மம் மேலோங்கியது.

இது இவ்வாறிருக்க, சிவபெருமானைத் தியானித்துத் தவம் மேற்கொண்ட தேவர்களுடன் விஷ்ணுவும் சேர்ந்து கொண்டார். அவர்கள் செய்யும் சிவநாமபஜனை கைலாசம் வரை சென்று மோதியது. ஈசன் மகிழ்வுற்றுத் தேவர்கள் முன்பு தோன்றினார்.

“உங்களுக்கு என்ன வேண்டும்? என்னைக் குறித்துத் தவம் மேற்கொண்டதன் காரணம் என்ன?” என்று வினவினார்.

“பிரபோ, சர்வேச்வரா! தாருகனின் குமாரர்களான அசுரர்கள் மூவரும், தங்கள் தவப் பயனால் நினைத்த மாத்திரத்தில் பறந்து செல்லும் திரிபுரங்களில் இருந்து கொண்டு, எங்களுக்கும் பூலோக வாசிகளுக்கும் இழைத்து வரும் கொடுமைகள் சொல்லி முடியாது. சதா பயத்தில் இருக்கும் முனிவர்களாலும் பூலோகவாசிகளாலும் தங்கள் கர்மாக்களைச் சரிவரச் செய்ய முடியாதிருக்கின்றது. அதனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாங்கள் வலுகுன்றி விட்டோம். சுலபத்தில் சாதிக்க முடியாத அழிவைக் கேட்டுப் பெற்றுள்ள அசுரர்களை எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆயிரம் வருடங்களுக்கொருமுறை முப்புரங்களும் ஒன்று சேரும் போது, ஒரே பாணத்தால் அவற்றை அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவனே தங்களை அழிக்கவல்லவன் என அவர்கள் வரம் பெற்றுள்ளார்கள். மகேச்வரா! எங்களைத் தோற்றுவித்தத் தாங்களே எங்களை இத்துயரிலிருந்து மீட்டுக் காக்க வேண்டும்'' என்று கோரினர்.

மகாவிஷ்ணு பலவித ஸ்தோத்திரங்களால் ஈசனைப் புகழ்ந்து போற்றி ''கைலாசநாதா! மாயையால் ஒரு புருஷனைத் தோற்றுவித்து நான்கு சீடர்களோடு அசுரனின் பட்டணங்களுக்குச் சென்று தர்மோபதேசம் செய்யும் மார்க்கமாக அதர்மத்தை அவர்களுக்கு உபதேசித்து அதில் அவர்களை நாட்டம் கொள்ளுமாறு செய்திருக்கிறேன். தங்களைக் குறித்து அவர்கள் செய்து வந்த பூஜைகள் அனைத்தும் நின்றுவிட்டன. மேலும் தங்களுக்கு அபசாரம் செய்வது போல் தங்கள் மூர்த்தங்களை அலட்சியப் படுத்தியிருக்கின்றனர். தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டும். அசுரர்களின் அழிவு தங்களால் தான் சாதிக்கக் கூடியது''என்று விக்ஞாபித்தார்.

ஈசனின் முகம் மலர்ந்தது, ''துயரத்தை இப்போதே விடுங்கள். அசுரர்களின் அழிவு நெருங்கிவிட்டது. அவர்களது அட்டகாசத்தை நானும் கவனித்து வருகின்றேன். என்னைக் குறித்துச் செய்து வந்த பூஜையின் பலன், இதுவரை அவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து வந்தது. இப்போது அந்தப் பாதுகாப்பு அகன்று விட்டது. அவர்கள் அதர்மங்களால் சூழப்பட்டிருக்கிறார்கள். முப்புரங்களும் ஒன்று சேர ஆயிரம் வருடங்கள் நாம் காத்திருக்க வேண்டியதில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசுரர்களோடு யுத்தம் செய்யத் தகுந்த இரதம் ஒன்றைத் தயார் செய்யுங்கள். இரதம் தயாராகிவிட்டால் அப்போதே அசுரர்களின் அழிவுக்காலம் தொடங்கிவிட்டது என்பதை அறியுங்கள்'' என்று அருளி மறைந்தார்.

சகலமான தேவர்களும் ஆனந்தத்தால் நிறைந்த உள்ளத்தோடு ஈசனைப் பலவாறு துதித்து, தேவ தச்சனான விசுவகர்மாவை அழைத்து இரதம் உருவாக்கும் வேலையை அவனிடம் ஒப்படைத்தனர். விசுவகர்மா மகிழ்ச்சியோடு விஷ்ணு பிரம்மாதி தேவர்களின் பரிபூரண ஆசிபெற்று இரதத்தை உருவாக்குவதில் முனைந்தான். விரைவிலேயே அசுரர்களுடன் யுத்தத்துக்குச் செல்ல ஈசன் ஆரோகணிக்க வேண்டிய இரதம் பிரமிக்கத்தக்க வகையில் உருவாகியது.

அசுரர்களை வதம் செய்வதற்காக ஈசன் ஏறிச் செல்ல இருக்கும் இரதமாக தேவர்கள் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டனர்.

சூரியர், சந்திரர் இருவரும் இரதத்தின் சக்கரங்களானார்கள். அஸ்தகிரியும், உதயகிரியும் இருசுகளாயினர். மந்திரகிரியே இரதமாகியது. ஆகாயம் கொடுமுடியாகியது. தேவர்கள் இரதத்தின் அலங்காரப் பொருள்களானார்கள். நக்ஷத்திரங்களும் திரைச்சீலை மற்றும் அனேக அலங்காரப் பொருள்களாக விளங்கின. விந்தியமலை குடையாகியது. பிரம்மதேவன் கடிவாளத்தைக் கையிலேந்தி சாரதியானார். பிரணவம் குதிரைகளை ஓட்டிச் செல்லும் சாட்டையாக மாறியது. வேதங்கள் நான்கும் குதிரைகளாயின. மேருமலை வில்லாக, வாசுகி அதன் நாணாகியது. சரஸ்வதி வில்லின் நுனியிலே 'கலகல' வொலிக்கும் சிறு மணிகளாக விளங்கினாள். விஷ்ணு பாணமானார்.

இந்த விதமாக இரதம் தயாரானதும் தேவர்கள் சிவபெருமானைத் தியானித்தனர். பகவானும் யுத்தத்துக்குப் புறப்படும் அலங்காரங்களோடு அவர்கள் முன் தோன்றி இரதத்தில் ஆரோகணித்தார். முனிசிரேஷ்டர்கள், பகவானின் மங்கள சொரூபத்தைத் தரிசித்து 'ஜய ஜய' என்று கோஷமிட்டு நல்வாக்கு அருளினர். தேவியும் திரிபுர சம்காரத்தைக் காணவேண்டுமென்று ஈசனின் அருகில் வந்து அமர்ந்தாள். கங்கை முதலான புண்ணிய நதிகள், பார்வதி பரமேச்வரருக்குச் சாமரம் வீசின.

இரதத்தில் ஆரோகணித்த சங்கரன், "ம், இரதம் புறப்படட்டும்" என்று பிரம்ம தேவனுக்கு அனுமதி அளித்தார். நாற்புறமும் தொங்கிக் கொண்டிருந்த மணிகள் 'கல கல" வென்று சப்திக்க இரதம், அசுரகுமாரர்களின் பட்டணங்களை நோக்கிச் சென்றது. சாரணர், சித்தர் முதலானோர் மலர் மாரி பெய்தனர்.

அசுரப் பட்டணத்தை நெருங்கியதும் ஈசன் வில்லை வளைத்து ஹூங்காரம் செய்தார். அந்தச் சப்தத்தில் அண்ட சராசரங்களும் கிடுகிடுத்தன. தனித்தனியே இருந்த திரிபுரங்களும் காந்தத்தால் ஒன்றையொன்று ஆகர்ஷிப்பது போல் ஈசனின் ஹூங்கார சப்தத்தின் வேகத்தால் தானாக ஒன்று சேர்ந்தன.

"பிரபோ! இதுவே தகுந்த சமயம்!" என்று சாரதியம் செய்த பிரம்ம தேவன் கூறினார்.

பாணத்தை நாணிலே இருத்திய சிவபெருமான் பெரும் கோபத்தோடு நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதிலிருந்து புறப்பட்ட தீ ஜ்வாலை முப்புரங்களையும் 'திகு திகு' வென

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எரியச் செய்தது. பரமேச்வரன் வில்லை வளைத்துப் பாணத்தை எய்தார். இமைக்கும் நேரத்தில் வில்லிலிருந்து புறப்பட்ட பாசுபதாஸ்திரம் முப்புரங்களையும் அடியோடு நாசமாக்கி அதிலிருந்தோர் அனைவரையும் அழித்துத் திரும்பியது.

“ஜய விஜயீபவ!” என்ற கோஷம் அண்டசராசரங்களிலும் எதிரொலித்தது. பிரம்மன், விஷ்ணு முதலானோர், பெரும் சீற்றத்தோடு ருத்திரமூர்த்தியாய் கனல் கக்கும் விழிகளோடு நிற்கும் சிவபெருமானைப் பார்த்துத் தேகம் நடுங்கியவர்களாய் பிரார்த்தித்தனர்.

“பிரபோ, சர்வேசா, சர்வலோக சரண்யா, பார்வதி நாதா! அசுரர்கள் மூவரும் அழிந்துவிட்டனர். தேவர்களை ரக்ஷிக்கத் தாங்கள் மேற்கொண்ட காரியம் நிறைவேறி விட்டது. தேவர்கள் பயம் நீங்கியவர்களாய் தங்களை அடிபணிந்து வணங்குகிறார்கள். மகேஸ்வரா, கோபத்தை விடுத்து சாந்தம் கொள்ள வேண்டும்! அப்போதுதான் சகல புவனங்களும் பிழைக்கும்” என்று நெஞ்சுருகிப் பிரார்த்தித்தனர்.

தேவர்களும் பகவானின் உள்ளம் களிப்படையும்படி அவர் நாமங்களைப் பூஜித்தனர்.

விஷ்ணு முதலானோரின் பிரார்த்தனைகளால் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைய, பகவான் கோபத்தை விட்டுச் சாந்தமடைந்தார். தேவர்கள் அவர் பாதங்களில் தலை தாழ்த்திப் பணிந்தனர். ஈசன் அவர்களுக்கு அனேக வரங்களை அளித்து அனுக்கிரகம் செய்துவிட்டு, தேவியுடன் கைலாயம் திரும்பினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. சிவலிங்க பூஜை

ஈசனின் மகிமைகளைக் காணக் காண தேவர்கள் அவர் அருள்கடாக்ஷம் தங்களுக்கு என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்பினர். அவரை ஆராதித்துத் தினமும் பூஜிக்க தங்களுக்குச் சிவலிங்கங்கள் கிடைக்கச் செய்யுமாறு விஷ்ணுவைப் பிரார்த்தித்தனர். அவர்கள் கோரிக்கையை ஏற்று, தேவதச்சனை அழைத்து, "தேவதச்ச, சகல காரணபூதரான சிவபெருமானின் திரு அருட்பிரசாதம் என்றும் கிடைக்கும்படி செய்ய, அவரைத் தினமும் ஆராதித்து வர, தேவர்களாகிய நாங்கள் விரும்புகிறோம். ஆகவே எங்கள் அந்தஸ்துக்கேற்ப ஒவ்வொருவருக்கும் சிவலிங்கங்கள் செய்து அளிக்க வேண்டும்" என்றார்.

தேவதச்சனாகிய விசுவகர்மா அவ்வாறே ஒவ்வொரு தேவருக்கும் அவரவர் அந்தஸ்துக்கேற்ப சிவலிங்கங்கள் செய்து அளித்தான்.

இந்திரனுக்குப் பத்மராகத்தால் செய்யப்பட்ட லிங்கம் கிடைத்தது. குபேரனுக்கு ஸ்வர்ண லிங்கமும், யமனுக்கு கோமேதக லிங்கமும் கொடுக்கப்பட்டன. வருணன் நீல லிங்கத்தைப் பெற்றான். விஷ்ணு இந்திர நீலத்தால் செய்யப்பட்ட அழகிய லிங்கத்தைப் பெற்றார். பிரம்மனும் ஸ்வர்ணத்தால் செய்யப்பட்ட லிங்கத்தைப் பெற்றார். அஷ்ட வசுக்களும் விசுவ தேவர்களும் வெள்ளியாலான லிங்கத்தைப் பெற்றார்கள். வாயுவுக்குப் பித்தளை லிங்கம் கிடைத்தது. பார்த்திவ லிங்கத்தை அசுவினி தேவர்கள் பெற்றார்கள். பார்த்திவ லிங்கம் மணியால் செய்யப்பட்டது. பிராமணர்கள் ஸ்படிக லிங்கத்தைப் பெற்றார்கள். துவாதசாதித்தர்களுக்கும், சோமனுக்கும் முத்து லிங்கத்தை வழங்கினான். இலக்குமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவிக்கு தாமிர லிங்கத்தையும், வஜ்ர லிங்கத்தை அக்னிக்கும் வழங்கினான். மயன் சந்தன லிங்கம் பெற்றான். அனந்தன் முதலிய நாகராஜர்கள் பவள லிங்கத்தையும், தைத்தியர்களும், அரக்கர்களும் கோமய லிங்கம் எனப்படும் சாணத்தால் செய்யப்பட்ட லிங்கத்தையும் பெற்றார்கள். பிசாசங்களுக்கு இரும்பு லிங்கம் கிடைத்தது. பார்வதி தேவிக்கு நவநீத லிங்கத்தைக் கொடுத்தான் விசுவகர்மா. நிருதி, மரத்தால் செய்யப்பட்டதான தாரு லிங்கத்தை அடைந்தான். யோகிகள் பஸ்ம லிங்கத்தைப் பெற்றார்கள். சாயாதேவி மாவினால் செய்யப்பட்ட லிங்கத்தையும், சரசுவதி இரத்தின லிங்கத்தையும், யக்ஷர்கள் தயிரால் செய்யப்பட்ட லிங்கத்தையும் பெற்றனர். இந்த விதமாக விசுவகர்மா தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவரவர் கௌரவத்துக் கேற்ப லிங்கங்ளைத் தயாரித்து அளித்தான். அவர்களும் அவனால் கொடுக்கப்பட்ட லிங்கங்களைப் பயபக்தியோடு பெற்றுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். சிலர் அவற்றைத் தலைகளில் தாங்கி ஆனந்தக் கூத்தாடினார்கள். மற்றும் சிலர் அவற்றை மார்போடு சேர்த்து அணைத்துத் தங்கள் உள்ளங்களில் இருத்திக் கொண்டதாக ஆனந்தப்பட்டனர். 'ஹரஹர சம்போ, சங்கரா' என்ற கோஷம் எட்டுத் திசைகளிலும் சென்று மோதி எதிரொலித்தது. அவர்களுக்கிடையே தென்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கைக் கண்ட விஷ்ணு, தம்மை மறந்து ஈசனைத் தியானித்தார். மகிழ்ச்சிக்கிடையில் எவரும் வழிதவறி நடந்து சிவபராதிகளாகி விடக்கூடாதென்று அவர்களுக்குச் சிவ பூஜை பற்றி உபதேசிக்க முன்வந்தார் நான்முகன்.

எத்தனையோ பிறவிகளில் மானிடப் பிறவி அரிது. மானிடனாகப் பிறந்தவன், அவனவன் குலத்திற்கேற்ப விதிக்கப்பட்ட கர்மாக்களை விடாது கடைபிடித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரவேண்டும். ஆயிரம் கர்மாக்களைச் செய்வதைவிடத் தீர்த்த யாத்திரை விசேஷமாகச் சொல்லப்பட்டது. தவம் மேற்கொள்வது அதனிலும் மேம்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. தியானம் இன்னும் மேலானதாகக் குறிக்கப்பட்டுள்ளது. தியானத்தின் மூலம் ஒருவன் பரப்பிரம்மத்தைத் தன் இதயத்திலேயே தரிசிக்கிறான். அவன் பிரம்மஸ்வரூபமாகவே ஆகிவிடுகிறான்.

பரமானந்தத்தை உண்டு பண்ணுவதும், பரிசுத்தமானதும், அழிவு இல்லாததும், நிஷ்களமானதும் சர்வபரிபூரணமானது மான சிவலிங்கத்தை அவன் தன் மனத்திலேயே காண்கிறான். இது இருவகைப்படும். பாஹ்ய லிங்கம் என்றும், அந்தர லிங்கம் என்றும் அழைப்பர். அதாவது, ஸ்தூலமான கண்ணுக்குப் புலப்படக்கூடியது பாஹ்ய லிங்கம் என்றும், சூக்ஷமமான ஞானக் கண்ணுக்குப் புலப்படக்கூடியது அந்தர லிங்கம் என்றும் பொருள்படும்.

அஞ்ஞானிகளுக்குப் பாஹ்ய லிங்க பூஜையே நியமிக்கப் பட்டிருக்கிறது. ஞானிகளுக்கு விக்கிரக ஆராதனை தேவையில்லை. உயரே செல்ல படிகள் அவசியம். அதுபோல ஞானம் இல்லாதவனுக்கு விக்கிரக ஆராதனை அவசியமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. பக்தியோடு பூஜித்தால் தான், ஒருவன் தான் கோரிய பலனை அடைவான். இல்லையேல் அவன் செய்யும் வழிபாடு வியர்த்தமாகும். அது மட்டுமல்ல, சிரத்தையின்றிப் பூஜை செய்வதால் அவன் கீழான நிலையையே அடைவான்.

உருவ வழிபாடு மூலம் ஒருவன் தான் செய்த பாபங்களை ஒழித்த பின்னரே, ஞானமார்க்கத்தில் பிரவேசிக்க முடியும். யோகீஸ்வரர்களுக்கு ஞானமும், ஞானத்தை அடைய திடமான பக்தியும், பக்திக்குப் பிரதிமா பூஜையும், பூஜைக்கு ஸத்குருவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைவதும், ஸத்குருவை அடைய சத்சங்கத்தோடு உறவும் படிப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வழிகளைத் தவறாது பின்பற்றுபவன் நிச்சயம் யோகீஸ்வரனாக விளங்கு வான். அவனுக்கு எப்போதும் பகவத்தரிசனம் கிடைக்கும். பேதமின்றி அவன் எல்லா மனிதர்களிடமும் தன்னையே காண்பான். சிவரூபமாயிருக்கும் அவனைக் கண்ட மாத்திரத்திலேயே சகலவிதமான பாபங்களும் நசிந்துப்போகும்.

கிரஹஸ்தாச்ரமத்தில் இருப்பவனுக்குப் பிரதிமா பூஜையே விதிக்கப்பட்டிருக்கிறது. வேரிலே ஊற்றப்படும் நீர் எப்படி தண்டு வழியாகக் கிளை, இலை மற்றும் இதர இடங்களுக்கும் பரவுகிறதோ அதைப்போல் சகலபுவன காரணரான சிவபெருமானைப் பூஜிப்பதால் தேவர்கள் அனைவரும் திருப்தி அடைவர். சிவனைப் பூஜை செய்யாது தேவர்களைப் பூஜிப்பதால் யாதும் பயனில்லை. அது மரத்தின் கிளைகள் மீது விடப்படும் நீரைப் போன்று வியர்த்தமாகிவிடும்.

தினமும் சூரியோதயத்துக்கு முன்பு எழுந்திருந்து பகவானைத் துதித்து தேகசுத்தி செய்து கொண்டு பின்னரே நீராடவேண்டும். நீராடுவதுபற்றி சாஸ்திரங்களில் எத்தனையோ விதிமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை, சிரார்த்த தினம், கிரகண தினங்கள், மஹாதானம் செய்யும் காலம், உபவாச தினங்கள் ஆகிய நாட்களில் வெந்நீரில் நீராடுவது கூடாதாம். அதே போல எண்ணெய் ஸ்நானத்துக்கும் விதிகள் உள்ளன.

ஞாயிற்றுக்கிழமை எண்ணெய் ஸ்நானம் செய்தால் ரோகம் உண்டாகும்; திங்கட்கிழமை தேஜஸை அளிக்கும்; செவ்வாய்க் கிழமை ஆயுள் குறைவு படும். புதன்கிழமை லக்ஷ்மி கடாக்ஷம் கிட்டச் செய்யும். வியாழக்கிழமை ஸ்நானம் செய்வதால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தரித்திரம் பீடிக்கும். வெள்ளிக்கிழமை தேகசுகம் கெடும். சனிக்கிழமை அன்று எண்ணெய் ஸ்நானத்தால் சுகம் ஏற்படும். எண்ணெய் ஸ்நானம் செய்யக் கூடாதென்று விதிக்கப்பட்ட நாட்களில் செய்யவேண்டிய அவசியம் நேரிட்டால் அந்தத் தோஷம் நீங்கச் சில பரிகாரங்களும் சொல்லப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமையில் புஷ்பமும், செவ்வாய்க்கிழமையில் சிறிது மண்ணும், வியாழக்கிழமை அருகம் புல்லும், வெள்ளிக் கிழமை ஒரு துளி ஜலமும் எண்ணெயில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம்.

நீராடி, புத்தாடை உடுத்தி, நிர்மலமான மனத்தோடு பூஜைக்கு உட்கார வேண்டும். வெறும் தரையில் அமரக் கூடாது. மரத்தால் செய்யப்பட்ட பலகையைப் போட்டு அதன்மீது தூய்மையான வஸ்திரம் விரித்து அமரவேண்டும். மான்தோல் மிகவும் விசேஷமானது. நெற்றியில் திலகமிட்டுக் கொள்வது மிகவும் அவசியமானது. திலகமின்றிச் செய்யப்படும் பூஜை எவ்வித பலனையும் அளிக்காது. கங்கையைத் துதித்து மந்திர பூர்வமாக மூன்று தரம் ஆசமனம் செய்து பூஜையைத் தொடங்க வேண்டும்.

முதலில் விநாயகரைச் சிவந்த மலர்களால் பூஜித்துப் பின்னர் முறைப்படி நந்திகேச்வரர், துவாரபாலகர்களான மகோதரர்கள், பார்வதி ஆகியோரைப் பூஜித்து, கடைசியில் லிங்கரூபத்தில் சிவபெருமானைப் பூஜிக்கத் தொடங்க வேண்டும்.

முறைப்படி சிவபெருமானை மந்திரங்களைச் சொல்லி லிங்கத்தில் ஆவாகனம் செய்து, அர்க்யம் முதலியன விட்டு, அத்தர், பன்னீர், சந்தனம் முதலிய பரிமள திரவியங்களால் அபிஷேகிக்க வேண்டும். பிறகு சுத்த நீரால் அபிஷேகம் செய்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திலகம் இட்டு, மலர்களைச் சமர்ப்பிக்க வேண்டும். தாமரை, கொன்றை, ஆத்தி, மல்லிகை, ரோஜா, வில்வம், தர்ப்பை, அறுகு, கருவூமத்தை, துளசி ஆகியவற்றால் மகேச்வரனை அர்ச்சிக்க வேண்டும்.

அர்ச்சனை முடிந்ததும் தூப, தீப, நைவேத்தியங்கள் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு பகவானுக்குக் கற்பூர ஆரத்தி காட்டி உங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றும்படி பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும். பின்னர் பஞ்சாக்ஷர ஜபம் செய்து சிவ ஸ்தோத்திரங்களைச் சொல்லி புஷ்பாஞ்சலி செய்து பூஜையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

தாமரை மலர், வில்வம், சதபத்திரம் ஆகியவற்றால் அர்ச்சிப்பவன் பெரும் தனத்தை அடைவான். பரிசுத்தமான பத்துகோடி மலர்களால் சிவனைப் பூஜிப்பவன், ராஜபோகத்தை அடைவான். ஐம்பதினாயிரம் மலர்களால் பூஜிப்பவன், ரோக நிவர்த்தி அடைவான். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கப் பன்னிராயிரத்து ஐந்நூறு மலர்களைக் கொண்டு அர்ச்சிக்க வேண்டும். சத்துரு பயம் நீங்கப் பத்தாயிரம் மலர்களால் அர்ச்சிக்க வேண்டும். கோடி மலர்களைக் கொண்டு அர்ச்சித்தால் ஞானம் உண்டாகும். ஐந்து கோடி மலர்களால் அர்ச்சிப்பவனுக்கு, முக்தி கிடைக்கும். அரைக் கோடி மலர்களால் அர்ச்சித்து, மிருத்யுஞ்சய மந்திரத்தை ஐந்து லட்சம் தடவை ஜபித்தால் சிவபெருமான் பிரத்தியட்சமாவார்.

லட்சம் அறுகம் புல்லால் அர்ச்சனை செய்பவனுக்குத் தீர்க்காயுசு ஏற்படும். லட்சம் கருவூமத்தையால் அர்ச்சித்தால் புத்திரப் பிராப்தி உண்டாகும். லட்சம் சரவீர புஷ்பங்களால் அர்ச்சிப்பவனுக்கு சர்வ ரோகங்களும் நீங்கிவிடும். மல்லிகை, அழகிய மனைவியையும், மலைமல்லி, தானிய சம்பத்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடுக்கும். செண்பகம், தாழம்பூ ஆகிய இரு மலர்களும் சிவபூஜைக்கு உகந்ததல்ல.

தாழை எவ்வாறு சிவபூஜைக்கு தகுதியில்லாமல் போயிற்று என்பதை இந்த புராண சம்பவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி பிதுர்வாக்கிய பரிபாலனம் நிமித்தமாகத் தம்பி லக்ஷ்மணனுடனும் மனைவி சீதையுடனும் கானகம் வந்த போது ஒரு சமயம் பல்குநதி தீரத்தில் தங்கியிருந்தார். அப்போது ஒரு நாள் ராமரின் பிதாவான தசரதனின் சிரார்த்த தினம் வந்தது.

தந்தைக்குச் சிரார்த்தம் செய்ய ஸ்ரீராமர் பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று அரிசி முதலானவற்றைச் சேகரித்து வரும்படி லக்ஷ்மணனை அனுப்பி வைத்தார். புறப்பட்டுச் சென்ற லக்ஷ்மணன் வெகு நேரமாகியும் வராதது கண்டு ராமர் அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டார்.

சிரார்த்த காலம் சமீபித்து விட்டது. இருவரும் திரும்பி வரவில்லை. சீதை தவியாய்த் தவித்தாள். குறித்த நேரத்தில் சிரார்த்தத்தை முடிக்காவிடில் அன்றைய தினம் வியர்த்தமாகி விடும் என்று வேதனைப்பட்டாள்.

தர்பசம், இங்குதி ஆகிய பழங்களைக் கொண்டுவந்து வேக வைத்து அவற்றால் கிடைக்கும் மாவினால் பிண்டம் செய்து பிதுர்களுக்குச் சமர்ப்பித்தால் சிரார்த்தம் செய்த பலன் கிட்டும் என சாஸ்திரத்தில் ஒரு விதி இருக்கிறது. சிரார்த்த காலம் முடிந்து விடப்போகிறதே என்று தவித்த சீதை, அந்த விதியை நினைவுக்குக் கொண்டுவந்து அவ்வாறே இங்குதிப் பழங்களைக் கொண்டு வந்து அக்கினியில் வேகவைத்து மாவு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்துப் பிண்டம் செய்து தயாராக வைத்தாள். அந்த நேரத்தில் ராம லக்ஷ்மணர்கள் திரும்பி வந்தாலும் சமைக்க நேரமாகி விடுமல்லவா!

பிண்டத்தைத் தயார் செய்ததும் சீதை, 'பிதுர்கள் வர நேரமாகிவிட்டதே, கிராமத்துக்குச் சென்றவர்கள் இன்னும் திரும்பவில்லையே' என்று வருந்தினாள். அப்போது அவள் முன்பு தேஜோமயமாகப் பிரகாசிக்க பிதுர்கள் தோன்றினர்.

“சீதே! பிண்டத்தை எங்களுக்குச் சமர்ப்பிக்கலாம். மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறோம்” என்று தசரதர் கேட்டார்.

“சுவாமி! என் கணவர் செய்யவேண்டிய காரியத்தை நான் செய்யலாமா? அவர் இல்லாத நேரத்தில் நான் செய்த காரியத்தை அவர் எவ்விதம் நம்புவார்?” என்று வருத்தத்தோடு கேட்டாள் சீதை.

“சீதே! வருத்தப்பட வேண்டாம். காலம் கடந்து விடாமலிருக்க நீயே உன் கையால் எங்களுக்குப் பிண்டம் சமர்ப்பிக்கலாம். அதற்குத் தகுந்த சாட்சிகளை வைத்துக் கொள் போதும்” என்றார் தசரதர்.

அவ்வாறே பல்குநதி, பசு, அக்கினி, தாழை ஆகிய நால் வரையும் சாட்சிகளாக வைத்துக் கொண்டு சீதை பிதுர்களுக்குப் பிண்டம் சமர்ப்பித்தாள். அவர்களும் அதைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு போய்ச் சேர்ந்தனர்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கிராமத்துக்குச் சென்றிருந்த ராம லக்ஷ்மணர் இருவரும் சாமான்களோடு திரும்பி வந்தனர்.

“சீதே! நேரம் ஆகிவிட்டது. மேலும் தாமதம் செய்யாமல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரைவில் சமையல் முடிக்க வேண்டும். அதற்குள் நாங்களும் நீராடித் திரும்புகிறோம்'' என்றார் ராமர்.

அப்போது சீதை அவரைப் பார்த்து, "நாதா! சிரார்த்தம் குறித்த காலத்தில் முடிந்துவிட்டது. நீங்கள் இப்போது செய்ய வேண்டிய அவசியமில்லை'' என்று சொல்லி நடந்ததைக் கூறினாள்.

"அதெப்படி முடியும், சீதை? கர்த்தாக்கள் நாங்கள் இல்லாமல் அது நடந்ததாக ஆகாதே!'' என்றார் ராமர்.

"பிதுர்கள் அதிக நேரம் காத்திருக்க முடியாதென்றனர். அவர்களின் பரிபூரண சம்மதத்தின் பேரில்தான் பிண்டம் அளித்தேன். சாட்சிகளும் இருக்கின்றன'' என்று சொன்ன சீதை பல்குநதி, பசு, அக்கினி, தாழை ஆகிய நான்கையும் சாட்சிகளாகக் கூறினாள்.

ராமருக்கு ஆச்சரியமாயிருந்தது, அப்படியும் நடந்திருக்குமா என்பதை அறிய சாட்சிகள் நால்வரையும் அழைத்துக் கேட்டார். பகவான் செய்ய வேண்டிய ஒரு காரியத்தில் அவர் வருவதற்குள் அவசரப்பட்டுக் கொண்டு சீதை முடித்து விட்டதற்குத் தாங்கள் சாட்சிகளாக இருந்தோம் என்பதை அறிந்தால் அவர் கோபிப்பாரே என்ற பயத்தில் அவை நான்கும் தங்களுக்கு எதுவும் தெரியாதென்று சொல்லி விட்டன.

ராமருக்குக் கோபம் வந்துவிட்டது. அந்த நேரத்தில் மனைவியிடம் கடிந்து பேசக் கூடாதென்று, சமையலை முடிக்குமாறு சொல்லிவிட்டு நீராடித் தமது காரியங்களைத் தொடர்ந்தார். சங்கல்பம் செய்துகொண்டு பிதுர்களைச் சிரார்த்த பிராம்மணர்களில் ஆவாகனம் செய்யும்போது, வானிலே அசரீரி ஒன்று கேட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஹே ராமா, நீ ஏன் இரண்டாம் முறை எங்களைச் சிரார்த் தத்துக்கு அழைக்கிறாய்? நாங்கள் ஒரு முறை சீதையின் கையால் பிண்டம் அளிக்கப்பட்டுத் திருப்தி அடைந்து விட்டோம்" என்று பிதுர்கள் அசரீரிபோல் அறிவித்தனர்.

அதைக் கேட்ட பின்னரே ராமர் நடந்ததை உணர்ந்து சாந்தமானார். அதே நேரத்தில் கணவர் தன்னை நம்பாதிருக்க நேரிட்டதே என்று சீதை வேதனைப்பட்டாள். அதற்குக் காரணமாக இருந்த பல்குநதி, பசு, அக்கினி, தாழை ஆகிய நான்கையும் அவைகளின் நடத்தைக்காகச் சாபமிட்டாள்.

"உங்களைச் சாட்சிகளாக வைத்துக் கொண்டு நான் சிரார்த்தத்தை முடித்திருக்க, நீங்கள் அதை என் கணவருக்குத் தெரிவிக்காமலிருந்து வீட்டீர்களே! பல்கு நதியே, நீ அந்தர்வாஹிநியாக, அதாவது பிரவாகமே இல்லாது போகக் கடவது! பசுவே, உன் வாய் யோக்கியமாக இல்லாது போய் விட்டதால் உன் முகத்தில் இருக்கும் லக்ஷ்மீகரம் உன் பின் பக்கத்தில் போகக்கடவது. தாழம்பூவே! என்னால் பூஜிக்கப்படும் சிவபெருமானுக்கு நீ உகந்ததாக இல்லாமல் போகக்கடவது. அக்கினி தேவனே, எல்லா தேவர்கட்கும் முகஸ்வரூபியாக விளங்கும் நீ, ஸர்வ பக்ஷகனாகக் போகக்கடவது. சுத்தம் அசுத்தம் என்ற பாகுபாடு இன்றி அசுத்தத்தையும் ஸ்வீகரிக்கக் கூடியவனாக ஆகக்கடவது" என்று சபித்தாள் சீதை. அச்சாபம் காரணமாகவே சிவபூஜைக்குத் தாழம்பூ உகந்தது அல்ல எனக் கூறப்படுகிறது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செண்பக மலர் சாபம் பெற்றதற்கும் புராண கதை உண்டு.

ஒருசமயம் கோகர்ணேச்வரர் எனத் திருப்பெயரொடு தென் திசையில் விளங்கிவரும் சிவபெருமானைத் தரிசிக்க வேண்டுமென்று நாரதர் வந்தார். அவ்வாறு அவர் வரும் போது சிவபெருமானின் சந்நிதானத்துக்கு எதிரில் செண்பக விருக்ஷ மொன்றையும், அதில் மலர்ந்திருக்கும் மலரைப் பறிக்க வந்திருந்த அந்தணன் ஒருவனையும் கண்டார். நாரதர் மீட்டிக் கொண்டுவந்த இனிய இசையில் மயங்கிய அந்தணன், சிறிது நேரம் தன் வேலையை மறந்து அங்கேயே நின்றான்.

அவனைப் பார்த்த நாரதர், "நீ யாரப்பா ? எதற்காக இங்கு வந்திருக்கிறாய் ?" என்று கேட்டார்.

அவனோ உண்மையைக் கூறாது, மலர் பறிக்கத் தான் கொண்டு வந்திருந்த பாத்திரத்தைக் காட்டி, "நான் பிச்சை யெடுக்க வந்திருக்கிறேன், ஐயா!" என்றான்.

அதற்குப் பிறகு நாரதரும் உள்ளே சென்று ஈசனைத் தரிசனம் செய்து விட்டு வெளியே வந்தார். அதே சமயம் அந்தப் பிராமணனும் செண்பக மலர்களைப் பறித்துச் சென்று பகவானை அர்ச்சித்து விட்டு வெளியே வந்தான்.

"என்னப்பா, புறப்பட்டு விட்டாய் ?" என்று கேட்டார் நாரதர்.

தான் செய்யும் காரியத்தை எவரும் அறியக் கூடாதென்று அந்தப் பிராமணன் அவரிடம் உண்மையைக் கூறாது, "ஐயா! பிச்சையெடுக்க வந்த எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே வேதனையோடு திரும்பிச் செல்கிறேன்" என்று கூறினான்.

நாரதர் சாமானியமானவரா ? அவர் முக்காலமும் உணர்ந்த ஞானியல்லவா! அந்தணன் பொய்யுரைத்தான் என்பதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞான திருஷ்டியின் மூலம் உணர்ந்து கொண்டார் அந்த திரிலோக சஞ்சாரி. அவருக்குக் கோபம் வந்தது. நேராகச் செண்பக விருக்ஷத்திடம் சென்று, "ஏ விருக்ஷமே! இந்தப் பிராமணனுக்கு எத்தனை மலர்கள் கொடுத்தாய்?" என்று கேட்டார்.

அந்தப் பிராமணன் தன் செய்கையை யாருக்கும் உரைக்கக் கூடாதென்று ஏற்கனவே அதனிடம் கேட்டுக் கொண்டிருந்த படியால் அந்த விருக்ஷம் பதில் ஏதும் சொல்லாது இருந்துவிட்டது.

நாரதர் நேராகச் சிவபெருமானுடைய சந்நிதானத்தை அடைந்தார். அங்கே திருவுருவத்தின் முன்பு செண்பக மலர் அர்ச்சிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். அவற்றை எண்ணிய போது நூற்றியொரு மலர்கள் இருப்பதைக் கண்டார்.

நாரதரின் கோபம் உச்சத்தை எட்டியது. அதே சமயம் இன்னொரு பிராமணன் மலர்களை எடுத்துக்கொண்டு வந்தான். அவனைக் கண்டதும் நாரதர், "வேதியனே, எக்காரணம் கொண்டு சிவனைப் பூஜிக்க வந்தாய்? இங்கு ஏற்கெனவே பூஜைகள் நடத்தப்பட்டிருக்கின்றனவே, இவை யாரால் நடத்தப்பட்டவை?" என்று கேட்டார்.

"சுவாமி, நான் பிறவாப் பேரின்பம் அடைய வேண்டி சிவ பூஜை செய்து வருகிறேன். எனக்கு முன்பு வந்திருந்தவனோ தினமும் ஈசனை நூற்றியொரு செண்பக மலர்களால் பூஜித்தால் அரசனிடம் நல்ல மதிப்பு ஏற்படும் என்பதை அறிந்து அவன் பூஜிக்கத் தொடங்கி, அவ்வாறே அரசனிடம் நன் மதிப்பைப் பெற்றான். தினமும் அந்தணர்களுக்குத் தானம் செய்யும்போது மேற்பார்வையிடக் கூடிய அதிகாரத்தைப் பெற்றான். செண்பக மலர்களால் அர்ச்சிப்பதன் மூலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடையக்கூடிய பலன்களை அறிந்த அவன், விடாது அர்ச்சனை செய்து வருகின்றான். இருப்பினும் அவன் உள்ளத்தில் நேர்மை கிடையாது. பேராசை நிறைந்திருக்கிறது. அதன் காரணமாக, அவன் மற்ற பிராமணர்களை மிகவும் கொடுமைப்படுத்தி வருகிறான். அவன் நட்பைப் பெற்று அவன் சொல்படி கேட்பவர்களுக்கு மட்டுமே அரசாங்கத்தில் தானம் முதலியன கிடைக்கும்'' என்று வருத்தத்தோடு தெரிவித்தான்.

செண்பக மலர்களால் பகவானை பூஜித்து நற்பலன் அடைந்த அந்தப் பிராமணன், இவ்விதம் பேராசை காரணமாகப் பிறருக்குத் தீங்கு இழைத்து வருகிறானே என்று எண்ணி நாரதர் வருந்திக் கொண்டிருந்தபோது, அங்கே அந்தண ஸ்திரீ ஒருத்தி வந்தாள். அவள் நேராகப் பகவானை நெருங்கித் தரையில் குனிந்து அவரை நமஸ்கரித்து எழுந்தாள். இரு கரங்களையும் கூப்பி, கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருக, "சர்வேச்வரா! எங்களைக் காப்பாற்ற வழியே கிடையாதா? அந்தத் துஷ்டனின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றனவே. அதற்கு ஒரு முடிவு கிடையாதா?'' என்று நெஞ்சம் உருகும் வண்ணம் பிரார்த்தித்தாள்.

நாரதர் அவளை மெல்ல அணுகி, "தாயே! உனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டம் என்ன? சொல்லு'' என்று கேட்டார்.

அந்த அம்மாள் நாரதரை நமஸ்கரித்து, "ஐயா, நான் நம்பியிருக்கும் இந்தக் கோகர்ணேசுவரரே நேரில் வந்திருப்பதாக உணருகிறேன். நாங்கள் பரம ஏழைகள். என் கணவருக்கு கால் முடமாகி எங்கும் அதிகமாக நடமாட முடியாதிருக்கிறது. வீட்டிலே வயசு வந்த பெண் இருக்கிறாள். அவளுக்கு கல்யாணம் செய்து கொடுத்தாக வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஆகவே வேறு வழியின்றி தானங்கள் வாங்கத் தொடங்கினார்; அரசாங்கத்தில் ஒரு துஷ்டன் இருக்கிறான். அவன் பிறந்தது அந்தணக் குலத்தில் என்றாலும் அதற்குரிய குணப்பண்புகள் கொஞ்சமும் இல்லாதவன். ஏதோ எங்கள் நிலையைக் கண்டு மனம் இரங்கி உதவுவது போல் அரண்மனைக்கு அழைத்துச் சென்று அரசரிடம் தானம் பெற்றுக் கொடுத்தான். ஆனால் அதில் பாதி தனக்குரியது என்று பிடிவாதமாக பிடுங்கிக் கொண்டு விட்டான். ஏதோ கொஞ்சமாவது கிடைக்கிறதே என்று நாங்களும் பேசாதிருந்து விட்டோம். இப்போது அவன் அட்டகாசம் அதிகமாகி விட்டது. இதையே அவன் ஒரு தொழிலாகக் கொண்டுவிட்டான். அரசனிடம் எவ்வளவோ முயன்றும் புகார் செய்ய முடியவில்லை. அவனை மீறிக் கொண்டுதான் எதுவும் அரசனுக்கு எட்ட முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இன்று அரண்மனையில் என் கணவருக்கு உபய கோமுகி தானம் கிடைத்தது. பசுவின் கர்ப்பத்திலிருந்து கன்றின் முகம் வெளிவரும் சமயம் அந்தணர்களுக்கு பசுவைக் கன்றோடு தானம் செய்வது பெரும் பாவங்களையெல்லாம் போக்கவல்லது எனச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அந்தத் தானம் வாங்குவதும் பெரும் பாபமாகும். சாதாரணமாக யாரும் அதை வாங்க முன் வரமாட்டார்கள். நிறையப் பணம் கிடைக்கும் என்று சொல்லி என் கணவரை அழைத்துச் சென்று அந்தத் தானம் வாங்கிக் கொடுத்தான். எங்கள் நிலைமையைக் கருதி நாங்களும் அதற்குச் சம்மதித்துச் சென்றோம்.

வீட்டுக்குத் திரும்பியதும், பின்னாலேயே அந்தப் பிராமணன் வந்துவிட்டான். வழக்கப்படி தானம் கொடுக்கப்பட்ட பொருள்களில் தனக்குப் பாதி உரியது எனப் பொன்னிலும், பொருள்களிலும் பாதியைப் பிடுங்கிக் கொண்டுவிட்டான். அதுமட்டுமல்ல; அந்தப் பாவி பசு மாட்டிலும் தனக்கு உரிமை உண்டு என்று சண்டை போடுகிறான். நாங்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்கவில்லை.

தானம் வாங்கிய பசுவை விலை மதிப்பதும், அதைப் பிறரோடு பங்கிட்டுக் கொள்வதும் பெரும் தோஷமாகும். இதை அவன் நன்கு உணர்ந்திருந்தும் பிடிவாதம் பிடிக்கிறான். அதற்கொரு மதிப்புப் போட்டு அதில் பாதியைத் தனக்குக் கொடுத்து விட வேண்டுமென்று சண்டை செய்கிறான்.

பசுவைப் பற்றி நம் சாஸ்திரங்கள் எப்படியெல்லாம் புகழ்கின்றன! பசுவின் உடலிலே சகல தேவர்களும் சாந்நித்தியம் பெற்றிருக்கிறார்கள் அல்லவா?

பசுவின் வலது கொம்பில் கங்கை இருக்கிறாள். இடது கொம்பில் யமுனை இருக்கிறாள். மத்திய பாகத்தில் சரஸ்வதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருக்கிறாள். முன் காலில் பிரம்மன் வீற்றிருக்கிறான். பிந்திய பாகத்தில் ருத்திரன் தன் பரிவாரங்களோடு இருக்கிறான். பின் பக்கத்தில் விஷ்ணு இருக்கிறார். பசுவின் பக்கங்களில் அனேக புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன. வயிற்றின் வலது பக்கத்தில் மகரிஷிகளும், இடது பக்கத்தில் சகலமான தேவர்களும் இருக்கிறார்கள். வயிற்றின் கீழ்ப்பாகத்தில் புண்ணிய நதிகளும், குளம்பில் வேதங்களும் இடம் கொண்டிருக்கின்றன. பசுவின் பால் மடியில் சமுத்திரங்கள் இருக்கின்றன. இன்னும் இதுபோல் எத்தனையோ சொல்லப் பட்டிருக்கின்றன.

பசுவை வலம் வந்து வணங்கினால் பூமியை வலம் வந்த பலன் கிடைக்கும். கோதானத்துக்குச் சிறந்த பலன்களைச் சொல்லியிருக்கிறார்கள். கோதானம் செய்பவன் பூதானம் செய்த பலனை அடைவானாம். பிராயச்சித்தமே கிடையாது என்று சொல்லப்படும் பாவங்கள் கூட கோதானத்தில் நீங்கி விடக்கூடும். சாணமும் கோமூத்திரமும் உட்கொள்வதால் சகல பாவங்களும் நீங்கப் பெறுவான்.

பசுவைத் தரிசிப்பதாலேயே சில பாபங்கள் நீங்கிவிடும். அதைத் தியானித்துப் பூஜிப்பதோ இன்னும் மேலான பலன்களைக் கொடுக்கக் கூடியதாம். கொம்புக்குப் பொன், குளம்புக்கு வெள்ளி, புட்டத்திற்குத் தாமிரம், நேத்திரத்துக்குப் பவளம், கழுத்துக்கு ஆபரணம், உடலுக்கு வஸ்திரம் ஆகியவற்றால் அலங்கரித்து, பால் கறக்க வெண்கலப் பாத்திரத்தோடும், கொழு கொழுவென்று இருக்கக்கூடிய கன்றோடு, நன்றாக பால் கறக்கும் இளம் பருவமும் அழகும் கொண்ட பசுவை, அதை வைத்துப் பராமரிப்பவனும், நித்ய கர்மங்களை ஒழுங்காகச் செய்து கொண்டிருப்பவனும் சாஸ்திரங்களை உணர்ந்தவனுமான அந்தணனுக்குத் தானம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்வாராகில், அவ்வாறு தானம் செய்பவனுக்கு எல்லா விதமான நன்மைகளும் உண்டாகும். தானம் பெற்றுக் கொண்டவன் செய்துள்ள புண்ணியத்தில் எட்டில் ஒரு பங்கு தானம் கொடுத்தவன் அடைவான். கோதானம், பூதானம், வித்யா தானம் இம்மூன்றும் ஒருவனின் நூற்றொரு தலைமுறைகளைச் சொர்க்கவாசத்துக்கு அழைத்துச் செல்லக் கூடியவை யென்றால் இன்னும் விவரிப்பதற்கு என்ன இருக்கிறது ?

சுவாமி, இவ்வளவு தூரம் சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருப்பதை அந்தத் துஷ்டனாகிய பிராமணன் அறிய மாட்டானா, என்ன ? அப்பேர்பட்டவன் செய்துவரும் பூஜையைப் பகவான் எவ்வாறு ஏற்றுக் கொள்கிறார் ?'' என்று மனமுருகக் கூறினாள்.

நாரதரின் உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. ஈசனைப் பார்த்து "பிரபோ ! இந்த அக்கிரமத்தை நீங்கள் இன்னமும் அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்களா ?'' என்று பிரார்த்தித்தார்.

"நாரதா ! அவன் பெரும் பாவியாக இருக்கலாம். ஆயினும் சிவபூஜை செய்து சிவபக்தனாக விளங்கி வருகின்றான். அதனால் முதலில் தான் செய்த பாவங்களுக்குப் பலனை அனுபவித்துப் பின்னர் சிவபூஜை செய்த பலன் அனுபவிக்கட்டும்'' என்றார் சிவபெருமான்.

நாரதர் உடனே அந்தப் பிராமணனைத் திரும்பவும் ஆலயத்துக்கு வரவழைத்தார்.

"அடே அயோக்கியா, பகவத் ஆராதனை மூலம் கிடைத்த நல்ல பதவியை நீ துஷ்பிரயோகம் செய்து வந்திருக்கிறாய். உன் மூலம் தானம் பெற்றுச் செல்பவர்களின் பொருள்களில் ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதியை பலாத்காரமாக அபகரித்து வந்திருக்கிறாய் ! உன் செய்கை அரக்கத்தன்மை வாய்ந்ததால் நீ அரக்கனாகப் போகக்கடவாய்'' என்று சபித்தார்.

நாரதரின் சாபத்தைக் கேட்ட அவன் மிகவும் நடுநடுங்கி விட்டான். அதுகாறும் மமதை கொண்டு திரிந்து வந்த அவன் அப்போதுதான் தன் செய்கைகளின் விளைவை உணர்ந்தான். கண்களில் நீர் ஆறாக வழிய, நாரதரின் கால்களில் விழுந்து கதறித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். நாரதரும் அவன் மீது இரக்கம் கொண்டு "வேதியரே! நீ செய்து வந்த அக்கிரமங்களுக்கான பலனை அனுபவித்துதான் ஆக வேண்டும். அதனால் விராடன் என்ற பெயரில் அரக்கனாகக் கானகத்தில் திரிந்து வரும் காலத்தில் உனக்கு ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் தரிசனம் கிடைக்கும். அதனால் உன் பாவங்கள் அழிக்கப்படும். அரக்கப் பிறவி நீங்கி, நீ சிவ பூஜை செய்த பலனை அடைந்து திவ்விய ரூபத்தைப் பெறுவாய்'' என்றார்.

பின்னர், நாரதர் செண்பக மரத்தினிடம் சென்று "ஏ விருக்ஷமே! நான் கேட்ட போது நீ பதில் கூறாதிருந்து விட்டாய். அதன் பலனால் இன்று முதல் உன் மலர் சிவ பூஜைக்கு உகந்ததாக இல்லாது போகட்டும்'' என்று சபித்தார்.

நாரதர் சாபத்தால்தான் செண்பக மலரைச் சிவ பூஜைக்கு உபயோகப்படுத்துவதில்லை.

சிவ பூஜைக்குப் பின்னர் இருபது அந்தணர்களுக்கு அன்னம் அளிப்பது மிகவும் விசேஷமாம். நூற்றெட்டுத் தரத்துக்கும் குறையாமல் ருத்திர காயத்திரி ஜபிக்க வேண்டும்.

பகவானுக்கு அபிஷேகம் செய்யும்போது சல்லடைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்களை உடைய தாராபாத்திரத்தால் அபிஷேகம் செய்தால் எத்தனையோ நன்மைகள் உண்டாகும். சதருத்திரம், ஏகாதசருத்திரம், ருத்திரம், புருஷஸூக்தம், மிருத்யுஞ்சயம், காயத்திரி, சிவ நாமங்கள் இவற்றைச் சொல்லி அபிஷேகிக்கலாம். சுத்தமான தீர்த்தத்தால் செய்யப்படும் தாரா பூஜையால் சந்தான விருத்தியும் கஷ்டங்கள் நீங்கி சுகமும் உண்டாகும். நெய்யைக் கொண்டு செய்யப்படும் அபிஷேகத்திற்கு சர்வரோக நாசம் பலனாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வமிச விருத்தியும் ஏற்படுமாம். சர்க்கரை கலந்த பாலை அபிஷேகித்தால் மந்திரப் பிரயோகங்கள் மூலம் உண்டாகும் கெடுதல்கள் எதுவும் அண்டாது.

வாசனைத் திரவியங்களோடு கலந்த தயிரை அபிஷேகிப்பதால் சத்துருக்கள் அழிவர், தேன் அபிஷேகம் வியாதிகளை நீக்க வல்லது. கருப்பஞ்சாறு சகலமான துக்கங்களையும் நீக்கிச் சந்தோஷத்தை உண்டாக்கும்.

இவ்வாறு எத்தனையோ விதமாகப் பலன்கள் சிவ பூஜைக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. கணபதி, சுப்பிரமணியர் ஆகிய இருவரோடு கூடிய பார்வதி பரமேச்வரனை ஒருமுறை பூஜித்தாலும் இம்மையில் துன்பங்கள் ஒழிந்து மறுமையிலும் நற்கதி ஏற்படும்.

இந்த விதமாக பிரம்மதேவர் சிவபூஜை செய்வது பற்றி விளக்கிக் கூறிவிட்டுத் தமது லோகம் திரும்பினார். விண்ணவரும் மண்ணவரும் சிவபெருமானைப் பலவிதங்களில் போற்றிப் புகழ்ந்து அவரை பயபக்தியோடு ஆராதித்து வரத் தொடங்கினர்.

******

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. கணேசன் திரு அவதாரம்

ஒரு சமயம் பார்வதி தன் தோழியர் ஜயை, விஜயை இருவருடன் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது விஜயை தேவியைப் பார்த்து, "அம்மா, தங்களுக்கென ஒரு வேலையாள் தனியாக இருக்க வேண்டும். ஈசனுக்கு எத்தனையோ கணங்கள் இருக்கின்றன. அவர்களில் சிலரே தங்களுக்கும் சேவை செய்ய நியமிக்கப்பட்டிருக் கின்றனர்; அவர்கள் ஈசனின் கட்டளைக்கு அடிபணியக் கூடியவர்கள் அன்றோ ? நம் கட்டளையை மட்டும் ஏற்றுப் பணி செய்யக் கூடிய ஒருவன் நமக்கென இருக்க வேண்டாமா ?" என்றாள்.

அந்தச் சமயத்தில் தேவி தோழியின் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் அதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் விரைவிலேயே ஏற்பட்டது.

அன்றையதினம் தேவி, அந்தப்புரத்தில் நீராடிக் கொண் டிருந்தாள். அச்சமயம் பார்வதியைக் காணவேண்டுமென்று வந்த ஈசனை வாசலிலிருந்த நந்திதேவர், "தேவி நீராடுகிறார், தற்போது செல்ல வேண்டாம்" என்று சொல்லியும் கேளாமல், உள்ளே சென்றார். எதிர்பாராத நிலையில் நாதனைச் சந்திக்க நேர்ந்ததால், தேவி பெரிதும் பரபரப்பு அடைந்து விட்டாள். அதற்கேற்ப அவள் தோழியரும், "அம்மா, இம்மாதிரி நேரக் கூடாதே என்றுதான் அன்று நாங்கள் சொன்னது. நம்முடைய ஆளாக இருந்திருப்பானாகில் ஈசனை உள்ளே விட்டிருக்க மாட்டான் அன்றோ. நந்திதேவர் எவ்வாறு கைலாசநாதனைத் தடுத்து நிறுத்துவார் ?" என்று அவள் குழம்பிய உள்ளத்துக்குத் தூபமிட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் சொல்வதுபோல் பார்வதிக்கும் தன் கட்டுப்பாட்டில் இயங்கும் பணியாள் ஒருவன் தேவை என்பது விளங்கியது. கையிலே ஜலத்தை எடுத்துத் தன் உடலில் தேய்த்து உருட்டி எடுத்தாள். சிவபெருமானைத் தியானித்து அவரைப் போலவே பிரணவ ஸ்வரூபியான ஒரு புத்திரனைத் தோற்றுவித்தாள். மங்கள ரூபத்தோடு தேஜோமயமாய் விளங்கும் அவனுக்குக் கணண் என்று பெயர் கொடுத்து, "குமாரா, நீ என்னால் தோற்றுவிக்கப்பட்ட பிரிய மைந்தன். உன் சேவை எனக்கு இருக்க வேண்டுமென்றே உன்னைத் தோற்றுவித்தேன். என் அனுமதியின்றி நீ எவரையும் அந்தப்புரத்தில் நுழைய விடாது காத்து வரவேண்டும்" என்றாள்.

கணனும் தேவியை வணங்கி, "அம்மா, தாங்கள் இட்ட பணியை மகிழ்ச்சியோடு ஏற்று, அவ்வாறே நடந்து வருவேன்" என்றான்.

பார்வதி பெருமகிழ்ச்சியோடு புத்திரனை அணைத்து முத்தமிட்டு, அவன் வேலைக்கு உதவியாகத் தண்டம் ஒன்றும் கொடுத்தாள். அன்றிலிருந்து கணன், தாயின் அந்தப்புரத்தைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சிவபெருமான் தேவியின் அந்தப்புரத்துக்கு வந்தபோது நிலைமை சரியில்லாதிருந்தது. வாயிலில் இருந்த கணன் முன்வந்து ஈசனைத் தடுத்து நிறுத்தினான்.

"சுவாமி, தேவியார் நீராடச் சென்றிருக்கிறார்கள். இப்போது உள்ளே போகக் கூடாது" என்றான்.

என்றைக்குமில்லாது அன்றையத் தினம் தம்மை யாரோ அன்னியன் தடுத்து நிறுத்தியதைக் கண்டதும் ஈசன் ஆச்சரியமுற்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



"அடே! நான் யார் தெரியுமா? சங்கரன்!" என்றார் சிவன்.

அவனோ அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

"இப்போது யாரும் உள்ளே செல்ல முடியாது" என்றான் உறுதியோடு.

"அடே, நீ யார் என்னைத் தடுத்து நிறுத்த? உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? உன்னை வேலைக்கு அமர்த்தியிருக்கிறாளே அவளுடைய கணவன் நான்" என்று சொன்ன சிவன், அவனை ஒதுக்கிவிட்டு உள்ளே செல்ல முற்பட்டார்.

"சிவனானாலும் அனுமதிக்க மாட்டேன்" என்று தன் தண்டத்தினால் சிவனை தடுத்தார், கணன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இப்போது யாரையும் உள்ளேவிடக் கூடாது என்பது தேவியாரின் கண்டிப்பான உத்தரவு. சற்றுப் பொறுத்தால் நீராடித் திரும்பி விடுவார்கள்" என்றான்.

சிவபெருமானுக்குக் கோபம் வந்துவிட்டது. தம்மோடு வந்திருந்த கணங்களைப் பார்த்தார்.

"இந்த மூர்க்கனுக்கு நாம் யாரென்று தெரியவில்லை. நம்மிடமே வாதாடுகின்றான். இவனுக்குத் தகுந்த பாடத்தைக் கற்பியுங்கள்" என்று சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்று விட்டார்.

சிவகணங்கள் கையில் தண்டத்தோடு நிற்கும் கணனைப் பார்த்து நையாண்டி செய்தனர்.

"அடே, நாங்கள் யார் தெரியுமா? சிவகணங்கள். எங்கள் பராக்கிரமம் தெரியாது விளையாடுகின்றாய் !" என்றனர்.

"அதிகப் பேச்சு வேண்டாம். நீராடித் திரும்பும் வரை யாரையும் உள்ளே விடவேண்டாம் என்பது தேவியின் உத்தரவு. நானோ காவல்காரன். உத்தரவுப்படி நடக்கக் கடமைப்பட்டவன். இங்கே யாரும் நிற்காதீர்கள். ஓடிப் போய் விடுங்கள்" என்றான்.

அவன் வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் ஏளனமாகச் சிரித்தனர்.

"அற்பப் பதரே! உனக்கு அத்தனை ஆணவமா? சரியான பாடம் கற்பிக்காது நாங்கள் இங்கிருந்து நகர மாட்டோம்" என்று கொக்கரித்தபடி அவனை நெருங்கி நாற்புறமும் தாக்கத் தொடங்கினர்.

தேவியால் தமக்களிக்கப்பட்ட தண்டத்தை கைகளில் மாற்றி மாற்றிச் சுழற்றிக் கொண்டு கணன் சிவகணங்களிடையே புகுந்து அவர்களை அடித்து விரட்டினான். அவன் தாக்குதலைச் சமாளிக்க முடியாது அவர்கள் திரும்பி ஈசனை அடைந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“பிரபோ, பார்ப்பதற்கு அவன் சாதாரணமாகத் தோன்றினாலும் மிகுந்த பராக்கிரமம் உடையவனாக இருக்கிறான். ஒருவனாகவே இருந்து கொண்டு எங்கள் அனைவரையும் பக்கத்தில் நெருங்க விடாது சுழன்று சுழன்று விரட்டி அடித்து விட்டான்'' என்றனர்.

அவர்கள் வார்த்தையைக் கேட்ட நந்திதேவர் அவர்கள் மீது சீறி விழுந்தார்.

“உங்களுக்கு வெட்கமாக இல்லை? அவன் அடித்து விரட்டினான் என்று சொல்லிக் கொண்டு திரும்பி வந்திருக்கிறீர்களே!'' என்று கடிந்து பேசியவராய் அவர்களை மீண்டும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

நந்தி தேவர் தலைமையில் சிவகணங்கள் மறுபடியும் சண்டைக்கு வருவதைக் கண்டதும் ஒரு கணம் திடுக்கிட்டான் கணன். அவர்களை எதிர்ப்பது எங்ஙனம்? தன்னைத் தோற்றுவித்த தேவியை மனத்தில் தியானித்தான்.

“தேவி! தங்கள் கட்டளைப்படி நான் என் பணியை நிறைவேற்றி வருகிறேன். சிவகணங்கள் அத்துமீறி என்னோடு சண்டைக்கு வருகிறார்கள். தாங்கள் தான் அவர்களை எதிர்க்கும் சக்தியை எனக்கு அளிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

கணனை நெருங்கிய சிவகணங்கள் ஆக்ரோஷமாகக் கத்திக் கொண்டே அவனை அடிக்கத் தொடங்கினர். கணன் தேவியை மறுபடியும் தியானித்துப் பிரார்த்தித்தபடி தண்டத்தை சுழற்றி அவர்களைத் தாக்கினான். அவனால் கொடுக்கப்படும் அடிகள் ஒவ்வொன்றும் கணங்களைக் கிறுகிறுத்து விழச் செய்தன. அவன் உடலில் விழும் ஒவ்வொரு அடிக்கும் பதிலாக பத்துப் பதினைந்து கணங்கள் தரையில் சாய்ந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்திதேவர் பிரமித்து விட்டார். கணன் சாதாரணமானவன் அல்லன் என்பதை உணர்ந்தார். அவன் ஒருவனாகவே அத்தனை பேரையும் எதிர்ப்பதைக் கண்ட போது அவனை வெல்வது சுலபமான காரியம் அல்ல என்பதை அறிந்தார். விரைவில் சிவகணங்கள் அனைவரையும் அடித்து வீழ்த்தி விடுவான் என்று தோன்றியது. சிவபெருமானிடம் திரும்பிச் சென்று அங்குள்ள நிலவரத்தைத் தெரிவித்தார்.

இதற்குள் செய்தி தேவலோகமெங்கும் பரவி விட்டது. யாரோ ஒருவன் சிவகணங்களை எதிர்த்துத் தாக்கி விரட்டி அடிப்பதாக கேள்விப்பட்டு விஷ்ணு, பிரம்மன் முதலானோர் கைலாசத்துக்கு ஓடிவந்தனர். அந்தச் சமயத்தில்தான் நந்தி தேவர் அங்கே வந்து கணனின் பிரதாபத்தை விவரித்தார்.

சிவனுக்கு அளவுக்கதிகமாகக் கோபம் வந்து விட்டது. தாமே நேரில் வருவதாகக் கூறி புறப்பட்டார். அவரோடு விஷ்ணு, பிரம்மா, இந்திரன் ஆகியோரும் புறப்பட்டனர்.

அந்தப்புர வாயிலில் ஏதோ குழப்பம் நிலவுவதாகத் தோன்றவே, பார்வதி, தோழியர் இருவரையும் அழைத்து என்ன விஷயமென்று பார்த்து வருமாறு அனுப்பினாள். அவர்கள் இருவரும் வாயிலுக்கு வந்து பார்த்துவிட்டுத் திரும்பினர்.

"தேவி, நம் கணன் தனக்கிடப்பட்ட வேலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறான். ஈசன் வந்த போது தாங்கள் நீராடச் சென்றிருப்பதாகவும், சிறிது பொறுத்து வருமாறு தெரிவித்தானாம். அவருக்குக் கோபம் வந்து விட்டதாம். தம்மோடு வந்திருந்த சிவகணங்களை அழைத்து அவனுக்குத் தாம் யார் என்பதை விளக்குமாறு சொல்லி விட்டுப் போய்விட்டாராம். சிவகணங்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு அடிக்க ஆரம்பிக்கவே, தாங்கள் அளித்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தண்டத்தைக் கொண்டே அவர்களை விரட்டி அடித்தானாம். அடிபட்டு ஓடிய சிவகணங்கள் நந்திதேவரை அழைத்து வந்தனராம். அவராலும் கணனை ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்போது விஷ்ணு, பிரம்மா முதலானோர் சண்டைக்கு வருகிறார்களாம். உடலெங்கும் அடிபட்டிருந்தும் கணன், "யார் வேண்டுமானாலும் வரட்டும்!" என்று வீரத்தோடு சவால் விடுகிறான்" என்றனர்.

தோழியர் வார்த்தையைக் கேட்ட பார்வதி பெருமிதம் அடைந்தாள். அதே சமயம் சிவகணங்களின் அடாத செய்கை பற்றிக் கோபமும் உண்டாயிற்று. மனத்தால் இரண்டு சக்திகளைத் தோற்றுவித்தாள்.

"வாயிலில் கணன் சிவகணங்களை எதிர்த்து நிற்கிறான். நீங்கள் இருவரும் இப்போதே சென்று அவனுக்கு ஆபத்து ஏதும் வராமல் காப்பாற்றுங்கள்" என்று கட்டளையிட்டாள்.

"அப்படியே, தேவி!" என்று இரு சக்திகளும் பார்வதியைப் பணிந்து புறப்பட்டனர்.

விஷ்ணு, பிரம்மன் முதலானோரோடு சிவபெருமான் புறப்பட்டதும் ஆறுமுகனும் தந்தையை நெருங்கிப் பணிந்தான்.

"தந்தையே! நான் சென்று வருகிறேன்" என்று அனுமதி கேட்டான், ஆறுமுகன்.

"சிவகணங்களை விரட்டி விட்ட மமதையில் நிற்கும் அந்த அற்பனுக்குத் தகுந்த பாடம் கற்பித்து வா, குமரா!" என்று ஈசன் ஆசீர்வதித்தார்.

மயூர வாகனத்திலேறி வந்த சுப்பிரமணியனைக் கண்டதும் கணன் சற்று தயங்கினான். தேவியின் மைந்தனல்லவா வந்திருப்பது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதே சமயம் கணனுக்கு உதவியாகப் பார்வதி தோற்றுவித்த சக்திகள் இருவரும் பக்கத்தில் வந்து நின்றனர். இமைக்கும் நேரத்தில் அவர்கள் இருவரும் பூதாகாரமான உடலைக் பெற்று ஹுங்காரம் செய்தனர். அவர்களைக் கண்ட மாத்திரத்திலேயே சிவகணங்கள் நடுநடுங்கினர். கணன் ஒருவனாக இருக்கும் போதே அவனை வெற்றி காண முடியவில்லை. அப்படியிருக்க, அவனுக்கு உதவியாக பயங்கர சக்திகள் இருவர் வந்திருக்கின்றனரே !

மனம் குழம்பும் சிவகணங்களைத் தைரிய வார்த்தைகள் சொல்லித் தேற்றியவாறு ஆறுமுகன் அஸ்திரங்களைப் பொழிந்தான். அவற்றுள் ஒன்று கூட கணனை நெருங்க வில்லை. அவனை நெருங்குவதற்கு முன்னரே சக்திகள் இருவரும் பாய்ந்து அந்த அஸ்திரங்களை விழுங்கினர். அந்த வேடிக்கையைக் கண்டு சிரித்துக் கொண்டு நின்றான் கணன்.

ஆறுமுகனுக்கு வியப்புத் தாங்கவில்லை. எப்படியெல்லா மோ அஸ்திரங்களை மாற்றி மாற்றி எய்தார். ஒன்றுகூடக் கணனை நெருங்கவில்லை. கை களைத்து விட்டது.

தூரத்தே நின்று கொண்டு அவர்கள் யுத்தம் செய்வதைக் கவனித்துக் கொண்டிருந்த விஷ்ணு ஈசனிடம், "பரமேச்வரா! அவனை அற்பமாக எண்ணக்கூடாது. மாயாஜாலத்தில் சிறந்தவனாக இருப்பான் போல் தோன்றுகிறது. இரு சக்திகளைத் தோற்றுவித்து நாம் எய்யும் பாணங்களை விழுங்கச் செய்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனை நாம் வஞ்சகமாகத்தான் வீழ்த்த வேண்டும். நான் அவனோடு போரிட்டு அவன் கவனம் பூராவும் என்னிடம் இருக்குமாறு செய்து கொள்ளுகிறேன். தாங்கள் அந்தச் சமயத்தில் அவனை வீழ்த்தி விடலாம்" என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசன் அதற்குச் சம்மதிக்கவே, விஷ்ணு சக்கராயுதத்தை எடுத்துக் கொண்டு ஆறுமுகனுக்கு உதவியாக யுத்தத்தில் இறங்கினார். விரைவிலேயே சக்திகள் இருவரும் விஷ்ணுவின் அஸ்திரங்களுக்குப் பலியாயினர். தன்னந்தனியாகத் தண்டத்தைக் கையில் பிடித்துக்கொண்டு நிற்கும் கணனைக் கண்டதும் ஆக்ரோஷமாகத் தமது சக்கராயுதத்தை ஏவினார்.

தீ ஜ்வாலையுடன் உக்கிரமாக நெருங்கி வரும் சக்கரத்தைக் கண்டதும் கணன், தேவியை மனத்தில் தியானித்தான்.

"தாயே ! நீதான் இத்தருணத்தில் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தபடி தன் கையிலிருந்த தண்டத்தை ஓங்கி வீசினான்.

கணன் வீசிய தண்டம் சீறிவரும் சக்கரத்தை வழியிலேயே தடுத்துப் பொடி பொடியாக்கி விட்டது.

விஷ்ணுவுக்கு அபரிமிதமாகக் கோபம் வந்து விட்டது. அடுத்த கணமே மற்றொரு சக்கரத்தை ஏந்திக்கொண்டு கணனை நெருங்கினார். அதற்குள் சிவகணங்கள் அனைவருமாக சூழ்ந்து கணனை தாக்க, சிவபெருமான் கணன் மீது தனது திரிசூலத்தை வீசி வீழ்த்தினார். கணனது தலை துண்டிக்கப்பட்டது.

எங்கும் ஒரே ஆரவாரம், தங்களுக்கு இதுவரை எதிர்ப்புக் காட்டி வந்தவன் வீழ்ந்து விட்டான் என்றதும் சிவகணங்கள் மகிழ்ச்சியால் குதித்தனர். தேவர்கள் சிவகோஷம் எழுப்பினர்.

வெளியே கேட்கும் ஆரவாரம் அந்தப்புரத்தின் உள்ளே இருந்த தோழிகளைத் திடுக்கிட வைத்து. வாசலுக்கு ஓடி வந்தனர். கணன் உயிரிழந்து கிடப்பதையும் சிவகணங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெற்றிக் களிப்பில் இருப்பதையும் கண்டு பரபரப்போடு உள்ளே ஓடினர்.

"அம்மா ! நம் கணன் இறந்து விட்டானம்மா! தேவர்கள் அவனை அழித்து விட்டனர்!" என்று நெஞ்சம் பதைபதைக்கக் கூறினார்கள்.

"என்ன ?... கணன் இறந்து விட்டானா ?..." என்று திடுக்கிட்டுக் கேட்டாள், பார்வதி.

"ஆம்... தேவி!... கணன் வஞ்சகத்தால் கொல்லப்பட்டான்" என்றொரு குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினர் மூவரும்.

அங்கே நாரதர் நின்று கொண்டிருந்தார்.

"பிரம்மபுத்திரா, என்ன சொன்னாய் ?..." என்று கேட்டாள் பார்வதி.

"ஆம் தேவி! கணனைத் தேவர்கள் வஞ்சகமாகக் கொன்று விட்டனர். விஷ்ணு தாங்கள் தோற்றுவித்த சக்திகளை அழித்து விட்டுக் கணனுடன் போருக்குச் சென்றார். கணனுடைய முழுக்கவனமும் விஷ்ணுவிடம் இருக்கும்போது கைலாசநாதன் சூலத்தை ஏவி அவனை அடித்து வீழ்த்தி விட்டார்."

நாரதரின் வார்த்தைகளைக் கேட்ட பார்வதி ரௌத்திரா காரமாகி விட்டாள்.

"வஞ்சகத்தால் என் குமாரனை அழித்த தேவர்களை என்ன செய்கிறேன் பார்!" என்று சீறினாள்.

தேவியின் கோபத்திலிருந்து ஆயிரக்கணக்கான சக்திகள் தோன்றினர்.

"இப்போதே சென்று தேவர்களை அழித்து நிர்மூலமாக் குங்கள்!" என்று உத்தரவிட்டாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியின் கோபத்தைக் கிளறிவிட்டு விட்டு நாரதர் தேவர்களிடம் வந்தார். அவர்களோ நின்று பேசக்கூட நேரமின்றி ஓடினர். தேவியால் அனுப்பப்பட்ட சக்திகள், தேவர்களிடையே புகுந்து அவர்களை அடித்தும் உதைத்தும் துரத்தின. சக்திகளின் பிடிகளில் சிக்கிக்கொண்ட தேவர்களும், சிவ கணங்களும் கொசுவைப் போன்று நசுக்கி எறியப்பட்டனர்.

சற்று முன்பு வரை மகிழ்ச்சி மட்டுமே நிரம்பியிருந்த அந்த இடத்தில் இப்போது கூச்சலும் குழப்பமுமே நிறைந்திருந்தன. சக்திகளின் பிடியில் அகப்படாத சிவகணங்களும் தேவர்களும் ஓடிவந்து சிவபெருமானைச் சரண் அடைந்தனர்.

“பிரபோ, சர்வேசா ! தேவி பெரும் கோபத்தில் இருக்கிறாள். கணன் இறந்த செய்.நி கேட்டவுடன், அவர்களின் கோபம் எல்லை மீறிப்போய் விட்டது...” என்றார் நாரதர்.

நாரதரின் வார்த்தைகளைக் கேட்ட தேவர்கள் மேலும் நடுங்கினர்.

“கைலாசபதே ! எங்களைக் காப்பாற்ற வேண்டும் ” என்று அனைவரும் ஒரு முகமாகச் சிவனை வேண்டினர். ஈசனும் பிரம்மனை அழைத்துத் தேவியைச் சமாதானம் செய்யுமாறு அனுப்பினார்.

விஷ்ணு, இந்திரன் மற்றும் முக்கியமான தேவர்கள் சிலரை அழைத்துக் கொண்டு பிரம்மதேவன் தேவியிடம் வந்தார். பலவித ஸ்தோத்திரங்களால் தேவியைப் போற்றிப் புகழ்ந்து வணங்கினர்.

“தேவி, சாந்தம் கொண்டு எங்களைக் காப்பாற்ற வேண்டும். தேவர்களும் சிவகணங்களும் தங்களால் அனுப்பப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்திகளால் அழிக்கப் படுகின்றனர். அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்'' என்று வேண்டினர்.

தேவியோ அவர்கள் கோரிக்கைக்கு இணங்க மறுத்து விட்டாள்.

“இப்போது எல்லோரும் ஓடி வருகிறீர்களே, யுத்தம் நடப்பதற்கு முன்பு நீங்கள் தலையிட்டு அதைத் தவிர்த்திருக்கலாமே. என் குமாரனை வஞ்சகத்தால் அழித்து விட்டு, இப்போது சமரசத்துக்கு வருவது எவ்விதம் ஏற்கக் கூடியதாகும் ? என் குமாரனை உயிர்ப்பிக்க வழி காணுங்கள். அதன் பிறகே மற்றவை பற்றி யோசிக்கலாம்'' என்று உறுதியாகச் சொல்லி விட்டாள்.

அதன் பிறகு பிரம்மதேவன், தேவர்களுடன் ஈசனிடமே திரும்பி வந்தார்.

“பிரபோ! குமாரன் உயிர் பிழைத்தால்தான் தேவி சாந்தமடைவார்கள் போல் தோன்றுகிறது. தங்களையே எதிர்த்த குற்றத்தை மன்னித்துக் கணனை எழுப்பித் தரவேண்டும். கணனை உயிருடன் கண்டால் தேவியின் கோபம் பஞ்சாக பறந்து விடும்'' என்றார் பிரம்மதேவன்.

பிரம்மதேவனின் கோரிக்கையை விஷ்ணு மற்றும் தேவர்களும் ஆமோதித்தனர். குமாரன் பிழைத்து எழுந்தால் தான் தேவர்கள் அழிவிலிருந்து மீள முடியும் என்ற நிலைமை ஆகி விட்டது.

அனைவருடைய வேண்டுகோளை ஏற்று ஈசன், வடக்கு திசையில் காணப்படும் முதல் விலங்கின் தலையைக் கொய்து வரும்படி பணித்தார். அவ்விதமே கொண்டு வரப்பட்ட யானை ஒன்றின் சிரசை கணனுக்குப் பொருத்தினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதுபோல் தரையிலிருந்து எழுந்திருந்த கணனை ஓடிப் போய் இரு கைளாலும் வாரித் தூக்கிக் கொண்டார் பிரம்மதேவர்.

மற்றும் சக்திகளால் உயிர் இழந்த தேவர்களும் சிவகணங்களும் உயிர்பெற்று எழும்படியும் செய்தார்.

"குமாரா! உன் பராக்கிரமம் கண்டு நாங்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தோம். உன்னைக் காண வேண்டுமென்று தேவி துடித்துக் கொண்டிருக்கிறாள். வா, இப்போதே நாம் அங்குச் சென்று உன் அன்னையைத் தரிசிப்போம்" என்று சொல்லி அவனைப் பார்வதியிடம் அழைத்துச் சென்றார். அவர் பின்னால் தேவர்களும் தேவியின் புகழ் பாடிச் சென்றனர்.

ஈசனால் கொல்லப்பட்ட குமாரன் உயிர் பெற்று வருவதைக் கண்டதும் பார்வதியின் கோபம் மறைந்துவிட்டது.

"குமாரா!..." என்று ஆவலோடு ஓடி வந்து அவனைத் தூக்கி அணைத்து முத்தமிட்டாள்.

"தேவி, தங்கள் கருணை பொழியும் முகத்தைக் காணும் போது, நாங்கள் விவரிக்க இயலாத ஆனந்தம் அடைகிறோம்!" என்று போற்றினர் தேவர்கள்.

"குமாரா ! வெளியே உன் தந்தை காத்திருக்கிறார். அவரைத் தரிசித்து அவர் அனுக்கிரகத்தைப் பெறுவோம்!" என்று சொல்லி, பார்வதி குமாரனை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

தேவர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். விரோதம் நீங்கி பாசம் பிணைக்கப் போகும் அந்தக் கண் கொள்ளாக் காட்சியைக் காண சிவ நாமங்களைப் பூஜித்துக் கொண்டே, தேவியோடு புறப்பட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவனை நெருங்கிய பார்வதி, குமாரனோடு அவரை மும்முறை வலம் வந்து வணங்கினாள்.

"பிரபோ! சந்தர்ப்ப வசத்தால் நடக்கக் கூடாதது நடந்து விட்டது. அதைத் தாங்கள் மறந்துவிட வேண்டும். இதோ தங்கள் குமாரன் கணன். எங்களை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பணிவோடு பிரார்த்தித்தாள்.

கணன் ஈசனை மீண்டும் வணங்கி "தந்தையே! என் செய்கையை மன்னிக்கும்படி பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்" என்றான்.

சிவபெருமானின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. மகனை வாரி எடுத்துத் தம் மடி மீது அமர்த்திக் கொண்டார்.

"குமாரா ! உன் பராக்கிரமம் வெளிப்படவே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது" என்று சொன்ன சங்கரன், தேவர்களைப் பார்த்து, "இவன் என் குமாரன்!" என்றார்.

தேவர்களின் ஆரவாரம் விண்ணை எட்டியது. அந்த ஆரவாரம் ஓய்ந்ததும் ஈசன் மீண்டும் தேவர்களைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

"தேவர்களே! என் குமாரனாகிய கணன் இன்று முதல் என் கணங்களுக்குத் தலைவன். கணங்களின் தலைவனாகிய இவன், கணபதி என்ற நாமத்தோடு விளங்குவான். இவனே எல்லோருக்கும் முதல்வன், அனைவரும் கணனை வணங்க வேண்டும். எந்தக் காரியத்துக்கும் முன்னதாகக் கணபதியை வணங்க வேண்டும். இவ்விநாயகனை முதலில் பூஜித்து நம்மை பின்னால் பூஜித்தால்தான் நாமே மகிழ்வோம். இவனைப் பூஜிக்காதவர்களுக்கு காரியங்கள் சித்தியாகாது!" என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானின் வார்த்தைகளைக் கேட்ட சிவகணங்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் ஆரவாரம் செய்தனர். கணனை வணங்கி அவனைத் தங்களுடைய தலைவனாக ஏற்றுக் கொண்டனர். விஷ்ணு, பிரம்மன், இந்திரன் முதலான தேவர்களும் கணனை வலம் வந்து வணங்கித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

"குமாரா, உன்னை வணங்கும் சகலமான பேருக்கும் அவர்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்து அனுக்கிரகம் செய்து வர வேண்டும். உனக்குச் சகல சக்திகளும் கிடைக்குமாறு அருளுகிறேன். கணபதி, கணேசன், என்ற நாமங்களோடு விக்கினங்களை நிவர்த்தி செய்வதன் காரணமாக விக்கினஹந்தா என்ற பெயரையும் பெற்று விளங்கி வருவாயாக!" என்று அருளினார் சங்கரன்.

தேவி மகிழ்ச்சி மிகுதியால், கண்களில் ஆனந்த பாஷ்யம் பெருக குமாரனை அணைத்து முத்தமிட்டாள்.

"குமாரா! உன்னைச் சிவப்பு நிற மலர்களால் பூஜிப்பவர்களுக்குச் சகல காரிய சித்தியும் அளிப்பாயாக!" என்று அனுக்கிரகம் செய்தாள் பார்வதி. பின்னர், தான் தோற்றுவித்த சக்திகள் அனைத்தையும் தன்னோடு ஐக்கியமாகும்படி செய்தாள்.

பாத்திரபத மாதம் சுக்கிலபக்ஷம் சதுர்த்தி அன்று சந்திரோதய சமயத்தில், முதல் ஜாமத்தில், உச்சஸ்த கிரக பஞ்சக யோகத்தில், பார்வதி கணனைத் தோற்றுவித்ததால் அந்தச் சமயத்தில் அன்று முதல் விரதம் இருந்து, மறு வருஷம் அந்த தினம் வரை பிரதி சதுர்த்திகளிலும் விரதத்தை நியமமாகக் கடைப்பிடித்து, கணபதியைப் பூஜித்து வருபவர்களுக்குச் சகல சௌக்கியங்களும் கிடைக்குமாறு சிவபெருமான் அனுக்கிரகம் செய்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. கணபதி விவாகம்

கைலயங்கிரியில் பார்வதி பரமேச்வரர் இருவரும் புத்திரர்களோடு ஆனந்தமாக இருந்துவரும் நாளில், குழந்தைகளுக்கு விவாகம் செய்து வைக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டனர். அதைப் பற்றி அறிந்த குமாரனும் கணேசனும் தனக்கே முதலில் விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று கேட்டனர். அவர்கள் போட்டியைக் கண்டு பார்வதி, பரமேச்வரர் இருவரும் சங்கடத்தில் ஆழ்ந்தனர்.

அவர்களிடையே எழுந்துள்ள இந்தப் போட்டியைத் தவிர்க்க சங்கரன் ஒரு யோசனை தெரிவித்தார். அதாவது இருவரில் யார் முதலில் பூலோகத்தைச் சுற்றிக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கே முதலில் திருமணம் செய்து வைப்பதாகத் தெரிவித்தார். அதைக் கேட்ட மாத்திரத்திலேயே ஆறுமுகன் மயிலேறி பூபிரதக்ஷிணத்திற்குப் புறப்பட்டார்.

கணேசனுக்கோ சகோதரனோடு போட்டி போட முடியாதென்று தெரிந்துவிட்டது. ஆகவே யோசித்தார். பின்னர், நீராடி நியம நிஷ்டையோடு தாய் தந்தையரை அணுகினார்.

"நீங்கள் இருவரும் இப்படி ஆசனத்தில் அமருகிறீர்களா?" என்று சற்று பணிவோடு கேட்டார்.

"எதற்குக் குமாரா?" என்று கேட்டாள் பார்வதி.

"உங்கள் இருவரையும் ஒன்றாகச் சேர்த்துப் பூஜிக்க விரும்புகிறேன்" என்றார் கணேசன்.

அவர் வார்த்தைப்படி பார்வதி பரமேச்வரர் இருவரும் ஆசனங்களில் வந்து அமர்ந்தனர். கணேசன் அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருவரையும் பூஜித்து மன நிறைவோடு ஏழு முறை வலம் வந்து வணங்கினார்.

“தந்தையே, எனக்கு விரைவில் மணம் முடிக்க வேண்டும்” என்று பிரார்த்தித்தான்.

“குமாரா! நான் சொன்ன சொல்லை மறந்து விட்டாயா? பூமியை வலம் வந்தால் திருமணம் செய்து வைக்கிறேன். குமரன் உன்னை முந்தி விடுவான். சீக்கிரமாகப் போ” என்றார் சங்கரன்.

“ஆம், குமாரா! சீக்கிரம் புறப்பட்டுப் போய் வா” என்றாள் பார்வதி.

“அம்மா, தந்தை சொல்வது போலத்தான் தாங்களும் கூறுகிறீர்கள். நான் உங்கள் விருப்பப்படி நடந்து கொண்டு விட்டேனே” என்றான் கணேசன்.

பார்வதிக்கு அவன் கூறுவது விளங்கவில்லை.

“என்ன சொல்லுகிறாய், குழந்தாய்?” என்று கேட்டாள் பார்வதி.

“ஒரு முறை அல்ல; ஏழு முறை பூமியை வலம் வந்து நிற்கிறேன்” என்றான் கணேசன்.

“அதெப்படி குழந்தாய்?” என்று கேட்டாள் பார்வதி.

கணேசன் ஈசனை மீண்டும் பணிந்து வணங்கி விட்டுச் சொன்னான்.

“தந்தையே, வேதங்கள் என்ன கூறுகின்றன என்பதை மறந்து விட்டீர்களா? மாதா பிதாவைப் பூஜித்துப் பிரதக்ஷிணம் செய்து வணங்கினால் அவன் பூபிரதக்ஷிணம் செய்த பலனை அடைவதாக வேதங்கள் சொல்லவில்லையா? தீர்த்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாத்திரையில் கிடைக்கும் பலனை ஒருவன் வீட்டிலிருக்கும் தன் தாய் தந்தையரைப் பூஜிப்பதால் அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் பாதங்களை அலம்பி அந்தத் தீர்த்தத்தை தெளித்துக் கொண்டால் கங்கா தீர்த்தத்துக்குச் சமம் என்றும் கூறப்பட்டுள்ளது. வேதங்கள் தங்கள் திருமுகத்திலிருந்து உண்டானவை அல்லவா. தங்களை வலம் வந்தது பூமியைப் பிரதக்ஷிணம் செய்ததற்கு ஒப்பாகாது என்றால் வேதங்கள் பொய் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா ?"

கணேசனின் சாதுர்ய மிகுந்த வார்த்தைகளைக் கேட்ட பார்வதி பரமேச்வரர் இருவரும் களிப்புற்று அவனை இழுத்து அணைத்துக் கொண்டனர்.

"குமாரா ! உன் அறிவுத் திறனை எவ்வாறு புகழ்வது என்றே தெரியவில்லை. சத்தியமான வார்த்தைகளைத்தான் கூறினாய். உன் விருப்பத்தை இப்போதே நிறைவேற்றுகிறேன்" என்றார் சிவபெருமான்.

விசுவரூபனுடைய புத்திரிகளான சித்தி புத்தி இருவரையும் கணேசனுக்கு மணம் செய்து வைப்பதென்று முடிவு செய்யப் பட்டது. தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன. எல்லோரும் வந்திருந்து மகிழ்ச்சி தெரிவிக்கக் கணேசனின் திருமணம் கோலாகலமாக நடந்தது. சித்தியிடம் லக்ஷம் என்னும் பெயருள்ள குமாரனும், புத்தியிடம் லாபம் என்னும் குமாரனும் உண்டானார்கள்.

இது இப்படியிருக்க, பூமியை வலம் வரச் சென்ற குமரன், தான் மேற்கொண்ட காரியத்தை முடித்துக் கொண்டு கைலாயம் திரும்பினார். கலகமே தம் பேச்சாகக் கொண்ட நாரதர் அவரைச் சந்தித்து, "குமரா ! உன்னைப் பார்க்க எனக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவ்வளவு வருத்தமாக இருக்கிறது தெரியுமா? உன்னை பூமியை வலம் வருமாறு அனுப்பிவிட்டுக் கணேசனுக்கு இரு பெண்களை மணம் முடித்து விட்டார்கள் உன் பெற்றோர்கள். இது நன்றாகத் தோன்றவில்லை. இது பெருத்த அநியாயம் அல்லவா! இவ்வாறு அநியாயம் செய்தவர்கள் முகத்தில் விழிக்கவே கூடாது என்று சாஸ்திரம் சொல்கிறது'' என்று சொல்லி குமரனின் உள்ளத்தில் கோபத்தை உண்டாக்கி விட்டுப் போய்விட்டார்.

குமரனின் வருத்தம் எல்லை மீறிவிட்டது. கணேசனுக்குத் தான் முதலில் திருமணம் செய்ய வேண்டும் என்ற விருப்ப மிருந்தால் அதை வெளிப்படையாகச் சொல்லியிருக்கலாமே! அவ்விதம் சொல்லாமல் தன்னை பூபிரதக்ஷிணத்துக்கு அனுப்பி விட்டுத் திருமணத்தை நடத்தி விட்டனரே! என வருந்தினார்.

அதை நினைக்க நினைக்க அவன் உள்ளம் குமுறியது. வேண்டுமென்ற செய்த செயலாக எண்ணினான் குமரன். கோபத்தால் அவன் உடல் துடித்தது. கைலாயத்தில் நுழைய அவனுக்கு விருப்பமில்லை. ஆடம்பரமான உடைகளைக் களைந்து எறிந்தார். கோவணத்தை அணிந்து கொண்டு தாய் தந்தையிடம் சென்றார்.

"நீங்கள் செய்வது நியாயம்தானா என்பதை யோசித்துப் பாருங்கள். என் கோரிக்கையை நிறைவேற்ற உங்களுக்கு விருப்பமில்லை எனில் முதலில் கணேசனுக்குத்தான் விவாகம் எனச் சொல்லியிருக்கலாமே. இப்படி என்னை வஞ்சித்திருக்க வேண்டாம். இனி எனக்குத் திருமணமும் தேவை இல்லை; இந்த ஆடம்பரமும் வேண்டாம். என்னை யாரும் கொண்டாடவும் வேண்டியதில்லை'' என்று சொல்லி விட்டுக் கோபமாகப் புறப்பட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்வதி பரமேச்வரர் இருவரும் அவனைத் தடுத்து நிறுத்தினர்.

"குமரா! வீண் கோபம் கொள்ளாதே. நாங்கள் சொன்னது உண்மைதான். அதன்படி நீயும் பூமியை வலம் வரச் சென்றாய். ஆனால் கணேசனோ தன் அறிவின் மூலம் உன்னை முந்தி விட்டான். தாய் தந்தையரைப் பூஜித்து வலம் வந்து நமஸ்கரித்தால் ஒருவன் பூபிரதக்ஷிணம் செய்த பலனை அடைவான் என்று வேதம் கூறுகிறது. அதன்படி அவன் எங்கள் இருவரையும் பூஜித்து ஏழுமுறை பிரதக்ஷிணம் செய்து தனக்குத் திருமணம் செய்து வைக்கும்படி கூறினான். இப்போது நீயும் பூமியை வலம் வந்துவிட்டாய். உனக்கும் திருமணம் செய்து வைக்கிறோம். சாந்தம் கொள்" என்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறுமுகனோ பெற்றோர்களின் வார்த்தையை ஏற்றுக் கொள்ளவில்லை; அவர்கள் தடுத்தும் நிற்காமல் அங்கிருந்து புறப்பட்டு கிரவுஞ்ச மலைக்குச் சென்று அங்கேயே தங்கி விட்டார். அது முதல் குமரக் கடவுளுக்கு குமாரப் பிரம்மசாரி என்ற பெயர் நிலவத் தொடங்கியது.

கார்த்திகை பௌணர்மி, குமரக் கடவுளுக்கு மிகவும் விசேஷமானது. அன்றையத் தினம் தேவர்களும் முனிவர்களும் கிரவுஞ்ச கிரிக்குச் சென்று ஆறுமுகனைத் தரிசித்து மகிழ்ந்தனர். அன்று குமரக் கடவுளைத் தரிசிப்பவர்கள், பாபங்கள் ஒழிந்து தங்கள் மனோபீஷ்டம் நிறைவேறப் பெறுவர்.

குமரன் கோபித்துக் கொண்டு போனது பார்வதிக்கு மிகவும் மனவேதனையைக் கொடுத்தது. புத்திரனைக் காண வேண்டுமென்று அவளும் கிரவுஞ்சகிரிக்குச் சென்று விட்டாள். சிறிது காலத்தில் சிவபெருமானும், மல்லிகார்ஜுனன் என்ற பெயரில் ஜோதிர்லிங்க ரூபத்தில் கிரவுஞ்ச மலைக்கு வந்தார்.

பெற்றோர் இருவரும் தன்னைத் தேடி வந்து விட்டனர் என்பதைக் கண்டதும் குமரன் அங்கிருந்து புறப்பட்டு வேறிடம் செல்லும் விருப்பம் கொண்டான். ஆனால் தேவர்கள் அவனைப் பலவாறு போற்றிப் புகழ்ந்து அவ்வாறு கோபித்துக் கொண்டு செல்லக் கூடாதென்றும் மனச் சாந்தியோடு அங்கேயே தங்க வேண்டுமென்றும் பிரார்த்தித்தனர். குமரனும் அவர்கள் கோரிக்கைக்கு ஏற்ப அங்கேயே தங்கினார். கோபம் நீங்கி அவர் உள்ளம் சாந்தமடைந்தது.

அமாவாசை அன்று சிவபெருமானும், பௌர்ணமி தினம் பார்வதியும் குமரனைக் காண கிரவுஞ்ச மலைக்கு வந்து செல்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. ஜோதிர் லிங்கங்களின் விவரம்

நைமிசாரண்யவாசிகளான முனிவர்களுக்கு சூதர் மேலும் சிவமகாத்மியத்தைக் கூறத் தொடங்கினார்.

சிவபெருமானின் திவ்விய சரிதங்களை ஒருவன் கேட்பா னாகில் அவன் சகல பாபங்களும் நீங்கிப் பரிசுத்தனாவான். அவன் மூலம் அவன் வம்சமே விளங்கும்.

நெற்றியில் விபூதியும், கழுத்தில் ருத்திராக்ஷமும் கொண்டு சதா சிவநாமங்களை உச்சரிப்பவனை ஒருவன் தரிசிப்பானாகில், கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் சந்திக்கும் திருவேணி சங்கமத்தில் நீராடிய பலன் கிட்டும். அவனிடத்தில் சிவநாமமே கங்கையாகவும், விபூதியே யமுனையாகவும், ருத்திராக்ஷமே சரஸ்வதியாகவும் விளங்குவதாகச் சொல்லப்படுகிறது.

ஆயிரத்தொருநூறு ருத்திராக்ஷங்களை ஒருவன் தரிப்பானாகில் அவன் ருத்திர ஸ்வரூபியாக விளங்குவான். ஐந்நூற்றைப்பது ருத்திராக்ஷங்களால் கிரீடம் செய்து அணிபவன் சிவ சாந்நித்தியத்தை அடைவான். உபவீதமாகத் தரிப்பதானால் முந்நூற்று அறுபது ருத்திராக்ஷங்களை அணிய வேண்டும். முக்திக்கு, சிகையில் மூன்றும், இரு காதுகளிலும் ஐந்து அல்லது ஆறும், கழுத்தில் நூற்றொன்றும், புஜத்தில் பதினொன்றும், இரு காதுகளைச் சுற்றிலும் பதினொன்றும், மணிக்கட்டில் பதினொன்றும், பூணூலில் மூன்றும் அணிய வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. ருத்திராக்ஷ மணிகளைக் கொண்டு ஒருவன் நூறு முறை சிவநாமங்களை ஜபிப்பானாகில், ஆயிரம் முறை ஜபித்த பலனை அடைவான்.

ருத்திராக்ஷங்களிலும் பலவகை இருக்கின்றது. ஒரு முகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடையது சகல காரிய சித்தியை அளிக்கும். இரு முகம் கொண்டது லக்ஷ்மி கடாக்ஷத்தை அளிக்கவல்லது. மூன்று முகம் உள்ளது, நினைத்த காரியத்தை விருத்தி செய்யும். நான்கு முகங்களை உடையதோ சதுர்வித புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடியதாகும். ஐந்து முகங்களோடு கூடியதோ சகல பாபங்களையும் போக்கி விடும்.

ருத்திராக்ஷங்களில் ஒருமுக மணி கிடைப்பது அரிதாம். அப்படிக் கிடைக்கும் பட்சத்தில், அது இலந்தம்பழம் அளவு இருக்குமானால் சுகம் அதிகமாகும். நெல்லிக்காய் அளவாக இருந்தால் துக்கங்கள் நீங்கும். கடலை அளவு உள்ளது மிகவும் விசேஷமானது. இம்மையில் சகல போகங்களையும் மறுமையில் மோக்ஷத்தையும் கொடுக்கவல்லது. குன்றுமணி அளவு உள்ளது காரிய சாதகம் செய்யும்.

ருத்திராக்ஷங்களை அணிய விரும்புபவன், அவற்றைப் பொருள் கொடுத்தே பெறவேண்டும். பிறரிடமிருந்து தானம் வாங்கக்கூடாது. பணம் கொடுத்து வாங்கச் சக்தியில்லாதவன் தன் புண்ணியத்தைத் தத்தம் செய்தாவது பெற வேண்டும். ருத்திராக்ஷமாலை அணிந்தவனைப் பார்த்தால் பூதப் பிரேத பிசாசங்கள் ஓடிவிடும்.

ருத்திராக்ஷ மகிமையைச் சொல்லி வந்த சூதர் அடுத்து ஜோதி லிங்கங்களைப் பற்றிக் கூறத் தொடங்கினார்.

ஜோதிர்லிங்கங்கள் பன்னிரண்டு உண்டு. சௌராஷ்டிரத்தில் சோமநாத லிங்கம் இருக்கிறது. ஸ்ரீசைலத்திலுள்ள லிங்கத்துக்கு மல்லிகார்ச்சுன லிங்கம் என்று பெயர். உஜ்ஜயினியில் மகாகாள லிங்கமும், ஓங்கார லிங்கமும் இருக்கின்றன. ஹிமோத்திரியில் கேதார லிங்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளது. டாகினியில் பீமசங்கர லிங்கமும், காசியில் விச்வேச்வர லிங்கமும், கோதாவரி தீரத்தில் திரியம்பக லிங்கமும், சிதாபுரத்தில் வைத்தியநாத லிங்கமும் இருக்கின்றன. நாகேசுவர லிங்கம் தாருகாவனத்திலும், இராமேசுவர லிங்கம் சேதுவிலும், மஹாராஷ்டிரத்திலுள்ள வெரூலில் குச்மேச லிங்கம் உள்ளன.

ஜோதிர்லிங்கங்கள் பன்னிரண்டின் பெயரையும் எவனொருவன் விடியற்காலத்தில் எழுந்திருந்து பயபக்தி யோடு ஜபிக்கிறானோ அவன் பாபங்களிலிருந்து விடுபட்டுக் காரிய சித்தியை அடைவான். இவற்றைப் பூஜிப்பவர்கள் பிறவி ஒழிந்து பகவானின் சந்நிதானத்தை அடைவார்கள்.

"மனத்தால் நினைத்தாலே பாபங்கள் விலகக்கூடிய பஞ்ச பூதலிங்கங்கள் ஐந்து ஆகும்.

காஞ்சீபுரத்தில் பிரதிவி மயமான ஏகாம்பர லிங்கம் இருக்கிறது. காவேரி தீரத்தில் உள்ள ஜம்புகேச்வரத்தில் அப்பு மயமான ஜம்புகேச்வர லிங்கம் உள்ளது. அக்கினி மயமான அருணாசல லிங்கம் அருணாசலம் எனப்படும் திருவண்ணா மலையில் இருக்கிறது. தக்ஷிண கைலாயம் என்று புகழ்பெற்ற சுவர்ணமுகீ தீரத்தில் உள்ள திருக்காளத்தியில், வாயு மயமான ஸ்ரீகாளத்தி லிங்கமும், பூலோக மகா கைலாயம் என்ற புகழ்பெற்ற தில்லையில் ஆகாய மயமான திருமூல லிங்கமும் உள்ளது. இவ்வைந்து லிங்கங்களின் பெயரைக் கேட்டாலும், சொன்னாலும் மனத்தில் நினைத்தாலும் அப்போதே அவன் புனிதமடைகிறான் என்றும் சொல்லும்போது, கண்ணாரக் கண்டால் பலனை விவரிக்க வேண்டுமா?

ஜோதிர்லிங்கம் பன்னிரண்டுக்கும் உபலிங்கங்கள் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோமநாத லிங்கத்துக்கு உபலிங்கம், மஹீநதி சமுத்திர சங்கம தீரத்தில் உள்ள அந்தகேசலிங்கம் ஆகும். பிருகு பர்வதத்துக்குச் சமீபத்திலுள்ள ருத்திர லிங்கம் மல்லிகார்ச்சுன லிங்கத்தின் உபலிங்கமாம். அதே போல, மகாகாள லிங்கத்திற்குத் துக்தேச லிங்கமும், ஓங்காரேசுவர லிங்கத்திற்குக் கர்த்தமேச லிங்கமும், உப லிங்கங்களாகச் சொல்லப்பட்டுள்ளன. யமுனை தீரத்தில் உள்ள பூதேச லிங்கம், கேதார லிங்கத்திற்கு உபலிங்கமாகும். பீமசங்கர லிங்கத்திற்கு பீமேசுவர லிங்கம், விசுவேச்வர லிங்கத்திற்குச் சரஸ்யேச்வர லிங்கமும், திரியம்பக லிங்கத்திற்குச் சித்தேச்வர லிங்கமும் வைத்தியநாத லிங்கத்திற்கு வைஜநாத லிங்கமும், நாகேசுவர லிங்கத்திற்கு, ஜில்லிகா சரஸ்வதி சங்கமத்திலிருக்கும் பூதேசுவர லிங்கமும், இராமேசுவர லிங்கத்திற்குக் குப்தேச்வர லிங்கமும், குஸ்மேச லிங்கத்திற்கு வியாக்கிரேசுவர லிங்கமும் உபலிங்கங்களாகும்.

இவை தவிர இன்னும் சில முக்கிய லிங்கங்கள் உள்ளன. கங்காதீரத்தில் கிருத்திவாசேச லிங்கம், விருத்த காலகேச லிங்கம், திலபாண்டேசுவர லிங்கம், தசாசுவமேத லிங்கம் ஆகியவை உள்ளன. கங்காசாகர சங்கமத்தில் சங்கமேசுவர லிங்கம், யமுனை தீரத்தில் கோதூமேசுவர லிங்கம், பிருந்தாவன சமீபத்தில் நீலேசுவர லிங்கம், கல்லகி தீரத்தில் கடுகேச லிங்கம், புஷ்கர நதி தீரத்தில் பூரேச லிங்கம், பல்குநதி தீரத்தில் மண்டகேச லிங்கம், கோமதி நதி சங்கமத்தில் சித்த நாதேசுவர லிங்கம், பத்தனம் எனப்படும் பாட்னாவில் தூரேச லிங்கம், மிருகேச லிங்கம், ஜகந்நாத லிங்கம் ஆகிய லிங்கங்கள் விசேஷமாகச் சொல்லப்பட்டவை. நர்மதை நதி தீரத்திலும் அநேக லிங்கங்கள் இருக்கின்றன. நர்மதை நதியே சிவரூபமாகப் போற்றப்படுவதாகும். அங்குள்ள மலைகளில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆவர்த்தேசர், பத்மேசர், சிம்ஹேசர், ஸுமேசர், குமாரேசர், புண்டரீகேசர், மண்டபேசர், தீக்ஷணேசர், துந்தரேசர், சூலேசர், கும்பேசர், குபேரேசர், சோமேசர், நீலகண்டேசர், மங்களேசர், நந்திகேசர் ஆகிய லிங்கங்கள் உள்ளன. அவற்றுள் நந்திகேசர் கோடி பிரம்மஹத்திகளையும் போக்கடிப்பார் எனப் போற்றப் படுகிறார். நர்மதையில் ஸ்நானம் செய்பவர்கள் சகல பாவங்களும் நீங்கப் பெறுவர்.

13. பிரம்மஹத்தி தோஷம் நீங்கும் புண்ணியத் தலம்

நர்மதை நதி தீரத்தில் கர்ணகி என்றொரு நகரம் இருக்கிறது. அப்பட்டணத்தில் வசித்து வந்த அந்தணன் ஒருவன், காசி யாத்திரை போக விருப்பம் கொண்டான். அவனுக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் இருவரையும் பத்திரமாகப் பாதுகாத்து வரும்படியும் விரைவிலேயே தான் திரும்பி விடுவதாகவும் மனைவியிடம் சொல்லி, விடைபெற்றுக் கொண்டு அவன் புறப்பட்டான்.

காசியை அடைந்ததும் அந்தப் பிராம்மணன் அங்கே சிறிது காலம் தங்க விரும்பினான். அவ்வாறு இருந்து வரும் போது ஒரு நாள் அவன் காலம் முடிந்து விட்டது.

கணவன் காசியில் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் மனைவி பெரிதும் துக்கித்தாள். கணவனைப் பிரிந்து வாழ அவளுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. இருந்தாலும், தன்னை நம்பி பாதுகாப்பில் விட்டுச்சென்ற இரு குமாரர்களையும் வளர்த்து ஆளாக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க அவள் உள்ளம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே அவர்கள் நலனுக்காகவே அவள் உயிர் வாழ வேண்டியதாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாட்கள் கடந்தன. பிள்ளைகள் இருவரும் வளர்ந்து பெரியவர்களானார்கள். அவர்களுக்குத் தகுந்த பெண்களைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தாள் அவள். சொத்துக்களை இருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தன் செலவுக்கும் சிறிது வைத்துக் கொண்டாள்.

காலம் உருண்டோடியது. தனக்கு அந்திம காலம் நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள் அவள். தான் அதிக நாட்கள் உயிரோடிருக்க முடியாதென்பதை உணர்ந்ததும், தனக்காக வைத்திருந்த பொருளைத் தரும காரியத்தில் செலவிட்டாள். அவள் நடமாட்டம் ஒடுங்கியது; படுத்த படுக்கையானாள். கண் பார்வை மந்தமாகியது; காது கேட்கவில்லை; பேசக்கூட முடிய வில்லை. ஆகாரம் இறங்காததால் உடல் நாறாக மெலிந்து விட்டது.

தாய் படும் வேதனையைக் கண்ட புதல்வர் இருவரும் மனம் வருந்தினர். எத்தனையோ தருமங்கள் செய்தும், தாய் தன் அந்திமக் காலத்தில் இவ்வாறு வருந்த நேருகிறதே எனத் துக்கித்தனர். ஒருநாள் புதல்வர் இருவரும் படுக்கையில் கிடந்த தாயை நெருங்கி “அம்மா, ஏதோ ஒரு குறைதான் உன்னை இப்படி வருத்துகிறது. மனத்தில் எது இருந்தாலும் அதைச் சொன்னால் எங்களால் இயன்றவற்றைச் செய்வோம்” என்று கேட்டனர்.

“குழந்தைகளே, எனக்குப் பெரிய மனக்குறை ஏதும் இல்லை. உங்கள் தந்தையார் காசியில் காலகதி அடைந்து மோக்ஷத்தைப் பெற்றார். அவரோடு சென்று கங்கா ஸ்நானம் செய்யவேண்டும் என விரும்பினேன். அன்றைய சூழ்நிலையில் அது நிறைவேறவில்லை. அவரோடு சென்றிருந்தால் நானும் காசியிலேயே உயிரை விட்டிருப்பேன். காசியில்தான் மரணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிட்டவில்லை. நான் இறந்த பின்னர் என் எலும்புகளை எடுத்துச் சென்று கங்கையில் சேர்ப்பீர்களா? அது ஒன்றுதான் என் உள்ளத்தில் நிறைந்திருக்கிறது!'' என்றாள் அவள்.

''அம்மா, நீ கொஞ்சம் கூடச் சந்தேகப்பட வேண்டாம். நாங்கள் சொன்ன காரியத்தைச் செய்யாது விடமாட்டோம் என்பது உனக்கே தெரியும். உன் எலும்புகளை அவசியம் கங்கையில் சேர்ப்பிப்போம்'' என்றனர் புதல்வர் இருவரும்.

அவள் தன் மூத்த மகனான சுவாதனை அழைத்து, ''சுவாதா, நீதான் பெரியவன். ஆகவே நீதான் கங்கையை அடைந்து என் அஸ்தியைக் கரைக்க ண்டும்'' என்றாள்.

அவனும் அவ்வாறே செய்வதாக அவளுக்கு வாக்குக் கொடுத்தான். அந்த மன நிறைவிலே அவளும் இவ்வுலக வாழ்வை நீத்தாள்.

தாய்க்குச் செய்யவேண்டிய கருமங்களை ஒரு குறைவு மில்லாது செய்து முடித்தான் சுவேதன். முதல் மாசியத்துக்குப் பிறகு, சேமித்து வைத்திருந்த தாயின் எலும்புகளை ஒரு துணியில் முடிந்து கொண்டு காசிக்குப் புறப்பட்டான். அவனோடு துணைக்காக ஒரு வேலைக்காரனும் புறப்பட்டான்.

காலையில் புறப்பட்ட இருவரும் அஸ்தமிக்கும் வேளையில் ஒரு கிராமத்தை அடைந்தனர். அன்றிரவு அக்கிராமத்திலுள்ள அந்தணன் ஒருவனின் வீட்டில் தங்கி காலையில் மீண்டும் புறப்பட நிச்சயித்தனர்.

சுவேதன் நீராடி சந்தியாவந்தனம் முதலானவற்றை முடித்துக் கொண்டு சிவ நாமங்களை ஜபித்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் வீட்டுக்காரன் பால் கறக்கப் பசுவின் கன்றை அவிழ்த்து விட்டான். அடுக்களையில் இருந்த மனைவியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைத்துப் பால் கறக்குமாறு சொல்லி விட்டுக் கன்றை பிடித்துக் கொண்டு பசுவிடம் சென்றான். கன்று அவன் காலை மிதித்து விட்டது. அதனால் வலி பொறுக்க முடியாத அவன் கம்பினால் கன்றைப் பலமுறை அடித்துவிட்டான். அப்போதும் அவன் கோபம் தீரவில்லை. பாலைக் கறந்து கொண்டதும், பாலூட்ட விடாமல் கன்றைப் பிடித்து இழுத்துக் கட்டி விட்டான்.

கன்று படும் கஷ்டத்தைக் கண்டு பசு அழுதது. அதைக் பார்த்த கன்று "அம்மா, ஏதோ கர்ம வசத்தால் நான் இன்று இத்துன்பம் அடைந்தேன். அதற்காக நீ ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது.

"குழந்தாய், நீ வேதாந்தம் பேசுகிறாய். எனக்கு அது தெரியாததல்ல. முன் ஜன்மத்தில் சிரித்துக் கொண்டே செய்த பாவத்தை இந்த ஜன்மத்தில் அழுதுகொண்டே அனுபவிக்க வேண்டும். இருப்பினும் சம்சார மாயை ஒன்று இருக்கிற தல்லவா, அதில் சிக்காதவர் யார்? நான் படும் அவஸ்தையை அவனும் உணர்ந்தால் என் துக்கம் தீரும். நாளை காலையில் பால் கறக்க அவன் குமாரன் உன்னை அவிழ்த்துவிட்டு என்னிடம் வருவான். அவனை என் கொம்புகளால் முட்டிக் கொன்று விடப் போகிறேன். அவன் தகப்பனுக்கு அப்போது தெரியும் என் வேதனை!" என்றது பசு.

"அம்மா, என்ன காரியம் செய்யப் போகிறாய் நீ? நினைத்துப் பார்த்தாயா? பிரம்மஹத்தியை வலியத் தேடிக் கொள்ள முடிவு செய்துவிட்டாயா? ஏற்கனவே நாம் செய்த கர்மாக்களுக்குத் தான் இப்போது அனுபவிக்கிறோமே. இன்னும் வேறு பாவம் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமா?" என்று பதைபதைத்துக் கேட்டது கன்று.

"குழந்தாய், உனக்குத் தெரியாது. நீயோ சிறுவன். என்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மடியில் பால் இருப்பினும் உன்னை நெருங்கவிடாது, கட்டிப் போட்டிருக்கிறானே அந்தப் பாவி, தாயுள்ளம் என்ன வேதனைப் படுகிறது என்பது அவனுக்குத் தெரியுமா ?'' என்றது பசு.

கன்று வேதனையோடு சிரித்தது.

"அம்மா உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. நீ என் தாய், நான் உன் மகன், இந்த உறவு எல்லாம் எதுவரை ? அவரவர் செய்த கர்மங்களுக்கு ஏற்ப பிறவிப் பயனை அடைந்து துன்பமோ இன்பமோ அடைகிறார்கள். அப்படியிருக்க என் பொருட்டு நீ எதற்காகப் பிரம்மஹத்தியைத் தேடிக் கொள்ள வேண்டும்'' என்றது.

"குழந்தாய், நான் உறுதியாக இந்த முடிவுக்கு வந்தாகி விட்டது. பிரம்மஹத்தி தோஷத்துக்காக நான் பயப்படவில்லை. வரட்டும்; என் வெண்மை உடல் கருமையாகிவிடும். அந்தத் தோஷத்தை நீக்கிக் கொள்ளும் மார்க்கம் எனக்குத் தெரியும். அதன்படி கருமையாகிவிட்ட என் உடலை மறுபடியும் வெண்மையுடையதாகச் செய்துவிட முடியும்'' என்றது.

பசுவுக்கும் கன்றுக்கும் நிகழ்ந்த வாதத்தைக் கேட்ட சுவாதன் பெரிதும் ஆச்சரியமடைந்தான். அவனுக்குத்தான் மிருக பாஷை தெரியுமே! விடியற்காலையிலேயே எழுந்து பிரயாணப்பட வேண்டுமென்று நினைத்திருந்தான். பசுவின் வார்த்தைகளைக் கேட்ட அவனுக்கு அந்த நிகழ்ச்சியைக் காண வேண்டுமென்று விருப்பம் உண்டாயிற்று. மேலும் பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கிக் கொள்ளும் மார்க்கம் தனக்குத் தெரியுமென்று பசு கூறியதைக் கேட்டது முதல், அந்த வழியைத் தானும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவன் துடித்தான். ஆகவே, விடியற்காலைப் பிரயாணத்தைத் தள்ளிப் போட்டு விட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடியற்காலையில் வீட்டுக்காரன் வந்து சுவாதனை எழுப்பினான்.

"ஐயா, சூரியோதயத்துக்கு முன்னரே புறப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தீர்களே, மறந்து விட்டீர்களா? எழுந்திருங்கள்" என்று எழுப்பினான்.

"வேலைக்காரனுக்கு ஓய்வு போதவில்லை. நேற்று பிற்பகல் அதிக நேரம் இளைப்பாறவில்லை. அதனால் மிகவும் சோர்வாக இருப்பதாகச் சொன்னான். ஆகவே, கொஞ்சம் மெதுவாகவே புறப்படலாம் என்றிருக்கிறேன்" என்றான் சுவாதன்.

அதற்குப்பிறகு வீட்டுக்காரன், தன் மகனை அழைத்து, மாடு பால் கறப்பதற்காக கன்றை அவிழ்த்து விடச் சொல்லி விட்டு வெளியே சென்றான். பையனும் எழுந்து வந்து கன்றை அவிழ்த்துவிட்டு விட்டுப் பசுவை நெருங்கினான். அவன் எதிர்பாராத நேரத்தில் பசு ஒரு பாய்ச்சல் பாய்ந்து அவனைக் கொம்புகளால் குத்தித் தூக்கி எறிந்தது. பையன் குடல் சரிந்து 'ஐயோ!' என்று அலறிக் கொண்டே தரையில் விழுந்தான்.

மைந்தனின் கூக்குரல் கேட்டு உள்ளிருந்து அவன் தாய் ஓடி வந்தாள். பக்கத்து வீடுகளிலிருந்து ஆட்கள் ஓடிவந்து இரத்த வெள்ளத்தில் மிதந்த பையனைத் தூக்கினர். அதற்குள் அவன் ஆவி பிரிந்து விட்டிருந்தது.

செய்தி கேட்டு வீட்டுக்காரன் அலறிக் கொண்டு ஓடி வந்தான். மைந்தன் பிணமாகக் கிடப்பதைக் கண்டு அவன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு புலம்பினான். பசுவைக் காணக் காண அவன் ஆத்திரம் பன்மடங்காகியது. மூங்கில் தடியால் பசுவை அடித்து நொறுக்கி, அதை வீட்டை விட்டு விரட்டினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மஹத்தி தோஷத்தால் உடல் கருமையாகி விட்டப் பசு அந்தணன் வீட்டை விட்டுப் புறப்பட்டு வெகு வேகமாகச் சென்றது. சுவாதன் அதையே கவனித்துக் கொண்டு அதனை பின்தொடர்ந்து சென்றான். சேவகனும் அவனைப் பின் தொடர்ந்தான்.

அந்தணன் வீட்டை விட்டு புறப்பட்ட பசு நேராக நர்மதை தீரத்தை அடைந்தது. அங்கே நந்திகேச்வரர் சாந்நித்தியம் கொண்டிருக்கும் இடத்தை அடைந்து நதியில் நீராடி வெளிப் பட்டது. கரையேறியதும் அதன் கருமை வெண்மையாகி இருந்தது.

அதைக் கவனித்த சுவாதன் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தவனாய், 'ஆஹா, இந்த க்ஷேத்திரத்தில் இவ்வளவு மகிமை குடி கொண்டிருக்கிறதா!' என்று வியந்தான்.

அப்போது அவன் முன்பு சர்வாலங்கார பூஷிதையான பெண் ஒருத்தி தோன்றினாள்.

"ஐயா, தாங்கள் யார்? எங்கு போகிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

சுவாதன் அவளிடம் எதையும் மறைக்கவில்லை. தான் ஊரை விட்டுப் புறப்பட்ட காரணத்தையும், வழியில் அந்தணன் வீட்டில் நடந்த சம்பவத்தையும், பசுவைப் பின் தொடர்ந்து தான் வந்ததையும், பிரம்மஹத்தி தோஷத்தால் கருமை அடைந்திருந்த பசுவின் உடல், நதியில் நீராடியதன் காரணமாகத் தோஷம் நீங்கி, வெண்மையாகியதைக் கண்டு தானும் நதியில் நீராடிப் புண்ணியத்தை அடையப் போவதாகத் தெரிவித்தான்.

அதைக் கேட்ட அந்தப் பெண் முகம் மலர, "ஐயா, இந்த இடத்தின் விசேஷம் சொல்ல முடியாது. நந்திகேச்வரர் தம்மைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தரிசிப்பவரின் சகல பாவங்களையும் நீக்கி அஷ்ட ஐசுவரியங்களையும் அளிக்கிறார். நீ கங்கைக்குச் சென்று உன் தாயின் அஸ்தியைச் சேர்க்கக் கிளம்பி வந்தாய். உன் பிரயாணம் இதோடு முடிவடைந்துவிட்டது. இன்று வைசாக சுத்த சப்தமி நாள். இன்றைய தினம் கங்கா தேவியே நந்திகேச்வரரைத் தரிசிக்க இங்கு வருகிறாள். நர்மதையில் அவள் நீராடிப் பகவானைப் பூஜிக்க வருகிறாள். ஆகவே, நீ நர்மதையிலேயே உன் தாயின் எலும்புகளைச் சேர்ப்பித்து விடலாம். கங்கையில் சேர்த்த பலனைப் பெற்று உன் தாய் திவ்விய தேகம் அடைந்து விண்ணுலகம் செல்வாள். "முன்பு ஒரு சமயம் ருஷிகை என்பவள் இங்குத் தினமும் நீராடி நந்திகேச்வரரை ஆராதித்து வந்தாள். அவள் இளம் வயதிலேயே கணவனை இழந்துவிட்டபடியால், உள்ளத்தில் பகவானை இருத்தி, சதா அவன் நினைவிலேயே காலத்தைக் கழித்து வந்தாள்.

"பக்கத்திலிருந்த மூடன் என்னும் அரக்கன் அவளைச் சிவபூஜை செய்யாது இருக்குமாறு தொந்தரவு செய்து வந்தான். அவளோ அவன் வார்த்தைகளைச் சிறிதும் சட்டை செய்யாது பூஜையை நடத்தி வந்தாள். நர்மதை நதியைக் கங்கையாகப் பாவித்து பூஜை செய்து நீராடியும் பகவானை வழிபட்டும் வந்தாள்.

"எவ்வளவு சொல்லியும் அந்தப் பெண் தன் வார்த்தைகளைக் கேட்காமல் சிவபூஜை செய்வதைக் கண்ட அந்த அரக்கன் கோர ரூபத்தை எடுத்துக் கொண்டு அவளை நெருக்கிப் பயமுறுத்தினான். ருஷிகை தான் பூஜித்து வந்த சிவலிங்கத்தை அணைத்தபடி, "சர்வேசா, இந்த அரக்கன் என்னைப் பூஜை செய்யவிடாது அச்சுறுத்துகிறானே. பக்தர்களைக் காத்து ரக்ஷிக்கும் பிரபுவான தாங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நந்திகேச்வரர் அங்குப் பிரத்தியக்ஷமாகி அரக்கனைத் துரத்தி அவளைக் காப்பாற்றினார். பின்னர் அவள் பூஜித்து வந்த லிங்கத்திலேயே சாந்நித்தியம் கொண்டார். ருஷிகை பூஜித்து வந்த கங்கையும் அவள் முன்பு தோன்றி "உனக்கு வேண்டிய வரம் கேள்" என்றாள். அவள் கங்கையை வணங்கி, "தாயே, என் பூஜையை ஏற்று என் முன் தோன்றிய உன் கருணையை எவ்வாறு போற்றுவது? இன்று வைசாக சுத்த சப்தமி நாள். இன்று என் முன்பு தோன்றியது போல் ஒவ்வொரு வருஷமும் இங்கு நீ பிரத்யக்ஷமாகி நர்மதையில் நீராடும் பக்தர்களுக்கு கங்கையில் நீராடிய பலனை அளிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். கங்கை அவ்வாறே செய்வதாக அவளுக்கு வரமளித்துச் சென்றாள். அதன்படி ஒவ்வொரு வருஷமும் வைசாக சுத்த சப்தமி அன்று கங்கை பிரத்யக்ஷமாகிறாள். ஆகவே நீ உன் தாயாரின் அஸ்தியை இன்றைய தினம் இங்கேயே சேர்ப்பிக்கலாம்" என்று சொன்ன அந்த மாது மறுபடியும் அவனைப் பார்த்து "ஐயா! நான்தான் கங்கை, நர்மதையில் கலப்பதற்காக வந்திருக்கிறேன்" என்று சொல்லி மறைந்தாள்.

சுவாதன் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவில்லை. பகவானின் கருணையை எண்ணி வியந்தவனாய் முறைப்படி செய்ய வேண்டியவற்றைச் செய்து தாயின் எலும்புகளை நதியில் சேர்ப்பித்தான்! அதே நேரத்தில் அவன் தாய் திவ்விய ரூபம் பெற்று வானிலே தோன்றினாள்.

"மைந்தா! இன்று உன் செய்கையால் நான் பூரண திருப்தி அடைந்து மேலுலகம் செல்கிறேன். உனக்கு சர்வ மங்களங்களும் உண்டாகட்டும்" என்று வாழ்த்திவிட்டு மறைந்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன நிறைவோடு சுவாதன் நீராடி நந்திகேச்வரரைத் தரிசித்து அவரைப் பூஜித்து ஊர் திரும்பினான்.

14. அத்திரி ஆசிரமத்தில் கங்கை

நந்திகேச்வர லிங்கத்தின் மகிமையை உரைத்த சூதர், நைமிசாரண்ய வாசிகளுக்கு மேலும் அனேக லிங்கங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

வியாசேசுவரர், அசேசுவர், பண்டாரேசுவரர், ஹாங்கரேசுவரர், சுரேசுவரர், பூதேசுவரர், சையமேசுவரர், ஆகியோரைத் தரிசித்த மாத்திரத்திலே பாபங்கள் நசித்து விடுமாம்.

தப்திநதி தீரத்திலும் அனேக லிங்கங்கள் இருக்கின்றன. குமாரேசுவரர், சித்தேசுவரர், ஸ்தநேசுவரர், ராமேசுவரர், ரூஷீசுவரர், பம்பேசுவரர், நந்தேசுவரர், பஞ்ச புஞ்ஜேசுவரர் ஆகிய லிங்கங்களைத் தரிசிப்பவன் சர்வாபீஷ்டங்களும் நிறைவேறப் பெறுவான். பூர்ண நதி தீரத்தில் பூர்ணகேசுவரரும், விரேசுவரரும் இருக்கின்றனர். கோதாவரி நதி தீரத்தில் கபாலேசுவரர், சக்கரேசுவரர், சந்திரேசுவரர், தௌதபாபேசுவரர், பீமேசுவரர், சூரியேசுவரர் ஆகியோர் இருப்பிடம் கொண்டுள்ளனர். திருப்திகா நதி தீரத்திலே, திரியம்பகேசுவரர், கோகர்ணேசுவரர், நாருகேசுவரர், ராமேசுவரர், நந்தேசுவரர், விமலேசுவரர், கண்டகேசுவரர் ஆகியோரைத் தரிசிக்கலாம். இவர்களைப் பூஜித்தால் ஞான மார்க்கத்தில் ஈடுபாடு உண்டாகும். திருப்திகா நதி கடலிலே சேரும் சங்கமத்தில் தர்மேசுவர லிங்கம் இருக்கிறது.

மேற்குக் கடற்கரையிலே சித்தேசுவரர், பிவேசுவரர், அந்தகேசுவரர் இருக்கின்றனர். அற்புதாசலத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரேசுவரர், நர்த்தமேசுவரர், கோடீசுவரர் ஆகியோரைக் காணலாம். கௌசிகா நதி தீரத்திலே அசலேசுவரர், நாகேசுவரர், அநந்தேசுவரர், யோகேசுவரர், வைத்திய நாதேசுவரர், கோடீசுவரர், சப்தேசுவரர், பத்ரேசுவரர், சண்டீசுவரர், சங்கமேசுவரர் ஆகியோரை வழிபடலாம்.

தென் திசையில் காமதம் என்றொரு வனம் இருக்கிறது. அங்கே பிரம்மாவின் புத்திரரான அத்திரி முனிவர் தம் மனைவி அனுசூயையோடு தவம் செய்து வந்தார்.

ஒரு சமயம் எங்கும் மழை பெய்யவில்லை. தொடர்ந்து பல ஆண்டுகளாக மழை பெய்யாததால் வறட்சி உண்டாயிற்று. குளம், ஆறு, கிணறு ஆகிய நீர் நிலைகளில் தண்ணீர் சுத்தமாக வற்றி விட்டது. பயிர்ப் பச்சைகள் கருகின. பசுமை என்பதே பார்க்க முடிய வில்லை. அதன் காரணமாக உஷ்ணக் காற்று வீசத் தொடங்கியது. ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். ஆடுமாடுகள் மடிந்தன. தண்ணீர் கிடைக்காததால் மக்கள் நித்திய கர்மாக்களை விட்டனர்.

அத்திரி முனிவரின் ஆசிரமத்திலும் இந்தக் கஷ்டம் நீடித்தது. முனிவரின் சிஷ்யர்கள் அங்கே தங்க முடியாது வெளியிடங்களுக்குப் போய்விட்டனர். அனுசூயை மட்டும் கணவனோடு இருந்தாள். அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு சிவபூஜையும் நடத்தி வந்தாள். மண்ணைக் கொண்டு சிவலிங்கம் செய்து அதற்குத் தினமும் பூஜை செய்து வந்தாள். தண்ணீர் வற்றிப்போய் செடிகொடிகள் கருகியதும் அனுசூயை பூஜைக்கு வேண்டிய மலர் முதலானவை கிடைக்காமல் கஷ்டப்பட்டாள். இருப்பினும் அதற்காக அவள் பூஜையை நிறுத்தி விடவில்லை. மானசீகமாகவே சிவலிங்கத்துக்குப் பூஜை செய்து வந்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்திரி முனிவர் கண்ணை மூடி யோகத்தில் அமர்ந்து விட்டார். அனுசூயைக்கு வேலை எதுவும் இல்லை. ஆகவே அவளும் தன்னுடைய சிவலிங்கத்தைக் கணவனின் முன்பு நிறுத்தி, இருவரையும் வலம் வந்து வணங்கித் தானும் யோகத்தில் அமர்ந்தாள்.

நாட்கள் மெதுவாக நகர்ந்தன; ஒரு வருடம், இரண்டு வருடம் என்று ஐம்பத்து நான்கு வருடங்கள் ஓடிவிட்டன. அவர்களுடைய தவத்தைக் கலைக்க ஒரு சில அரக்கர்கள் முனைந்தனர். ஆனால் அவர்களால் முனிவரையும் அவர் பத்தினியையும் நெருங்க முடியவில்லை. அனுசூயையின் பதிவிரதைத் தன்மையால் அவள் உடலிலிருந்து வீசிய யோகாக்கினி, அரக்கர்களை நெருங்க விடாது தடுத்து நிறுத்தியது.

அத்திரி முனிவரும், அனுசூயையும் செய்யும் தவத்தைப் பற்றித் தேவர்கள் அறிந்தனர். அதைக் காண அவர்கள் காமதம் எனப்படும் அவ்வனத்துக்கு ஓடி வந்தனர். யோகத்தில் அமர்ந்திருக்கும் முனிவரையும், அவர் முன்பு கண் மூடித் தியானத்தில் இருக்கும் பதிவிரதையையும் கண்டு அவர்கள் மகிழ்ச்சி கொண்டனர். அவர்களைப் பலவிதத்திலும் பாராட்டித் திரும்பினர்.

ஆனால் சிவபெருமானும், கங்கையும் மட்டும் திரும்ப வில்லை. தம்மை உள்ளன்போடு பூஜித்த அவர்களுக்கு அருள வேண்டுமென இருவரும் காத்திருந்தனர்.

நிஷ்டையிலிருந்து கண் விழித்த அத்திரி முனிவர், “அனுசூயா, ஆசமனத்துக்கு நீர் கொண்டு வா” என்றார்.

தியானம் கலைந்த அனுசூயை, “இதோ கொண்டு வருகிறேன், சுவாமி” என்று சொல்லி, பாத்திரத்துடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிரமத்துக்கு வெளியே வந்தாள். அங்கு தண்ணீர் ஏது ? பல காலமாக எங்கும் வறட்சி நீடிப்பது அவளுக்குத் தெரியாதா என்ன ? "கணவரின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாதிருக்கிறதே!" என்று மனத்தில் வேதனையோடு எண்ணித் துக்கித்தாள்.

அப்போது அவள் முன்பு கங்கை தோன்றினாள்.

"அனுசூயா, உனக்கு என்ன வேண்டும்? கேள், தருகிறேன்" என்றாள்.

"அம்மா, நீங்கள் யார்?" என்று கேட்டாள் அனுசூயை.

"அனுசூயா, நான் தான் கங்கா தேவி, உன் பதிவிரதா தர்மத்தையும், நீ கணவனையும், சிவலிங்கத்தையும் பூஜை செய்யும் விதத்தையும் காண வந்தேன்" என்றாள் கங்கை.

"தேவி, உங்களைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது பற்றி என் உள்ளம் எல்லையில்லா ஆனந்தம் அடைகிறது. என் கணவர் நிஷ்டை கலைந்து ஆசமனம் செய்ய நீர் வேண்டும் எனக் கேட்டார். எங்கும் நிலவும் வறட்சியால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக்கிடைக்கவில்லை. எனக்குக் கொஞ்சம் நீர் வேண்டும்" என்று விண்ணப்பித்தாள் அனுசூயை.

"பூமியில் ஒரு சிறு குழியை உன் கையால் தோண்டு, நீ விரும்பியபடி தண்ணீர் கிடைக்கும்" என்றாள் கங்கை.

மகிழ்ச்சியோடு அனுசூயை பூமியில் தோண்ட, அந்தச் சிறு குழியிலிருந்து 'குபுகுபு' வென்று நீர் குமிழிட்டு வெளிப்பட்டது. பாத்திரத்தில் நீரை நிரப்பிக்கொண்ட அனுசூயை பணிவோடு கங்கையை வலம் வந்து வணங்கி, "தேவி, ஒரு விண்ணப்பம். எங்கள் தவம் நிறைவேறும் வரை தாங்கள் இங்கு இருக்க வேண்டும்" என்று வேண்டினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கங்கை மெல்லச் சிரித்தபடி, "அனுசூயா, உன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமானால், உன் கணவருக்குப் பணிவிடை செய்து அடைந்த பலனில் ஒரு மாதத்துக்கான பலனை எனக்குத் தரவேண்டும். தருவாயா?" என்று கேட்டாள்.

அனுசூயை பெரிதும் சந்தோஷித்தபடி, "அவ்வாறே ஒரு மாதப் பலனை உங்களுக்குத் தந்தேன்" என்று தத்தம் செய்தாள். பின்னர், நீர் மொண்டிருந்த பாத்திரத்துடன் ஆசிரமத்துக்குத் திரும்பினாள்.

ஆசமனம் செய்த அத்திரி முனிவருக்கு வியப்பாக இருந்தது. இத்தனை காலமாக அவர் உபயோகித்து வந்த தண்ணீரைப் போல் அல்லாமல் மிகுந்த ருசியோடு அல்லவா இருக்கிறது. அன்றையத்தினம் கொண்டு வந்த நீர்! மனைவியை அழைத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“பிரியே! இன்று நீ கொண்டு வந்த நீர், புதிய ருசியோடு விளங்குகிறதே. இது நம் ஆசிரமத்தில் கிடைக்கக் கூடிய நீர் அல்ல. எங்கிருந்து கொண்டு வந்தாய்?” என்று கேட்டார்.

அனுசூயை பதில் சொல்லாது தலையைத் தாழ்த்தியபடி நின்றிருந்தாள். தன் பதிவிரதா தர்மத்தைப் புகழ்ந்து கங்கையே வந்திருக்கிறாள் என்று சொல்வதால் கணவனின் முன்னிலையில் தன்னை உயர்த்திக் கூறுவதாக ஆகிவிடுமே என்று பயம் அவள் மனத்தில் நிறைந்திருந்தது. முனிவரோ மீண்டும் அவளைக் கேட்டார்.

தயங்கித் தயங்கி அனுசூயை நடந்ததைத் தெரிவித்து, “பிரபோ, என்னை மன்னிக்க வேண்டும்” என்று வேண்டினாள்.

மனைவியின் வார்த்தைகளைக் கேட்ட முனிவர் அதி ஆச்சரியமடைந்தார்.

“பிரியே, கேட்கவே வியப்பாக அல்லவா இருக்கிறது. முனிவர்களுக்கும் ஞானிகளுக்கும் கிட்டாத பாக்கியம் உனக்கு ஏற்பட்டுள்ளது கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியுற்றாலும், பூரணமாக நம்ப முடியாதிருக்கிறது. கங்கையை எனக்குக் காட்டுவாயா?” என்றார்.

அனுசூயை கணவனை வணங்கி, தான் நீர் எடுத்த இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றாள். குழியிலிருந்து நீர் குமிழிட்டுக் கிளம்புவதைக் கண்ட அவர் பரவசமாகி விட்டார்.

“பிரியே! உன்னைப் போல் பாக்கியசாலி இருந்திருக்க முடியாது. கங்காதேவியே உனக்குப் பிரத்தியக்ஷமாகி இருக்கிறாள் என்றால் என் தவம் பூர்த்தியாகி விட்டதாக ஆகிறது” என்று மகிழ்ச்சியோடு கூறிய முனிவர் கங்கா நீரிலே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீராடி, ஆசமனம் முதலான செய்து கங்கையை மனத்தால் தியானித்தார்.

அப்போது கங்காதேவி அவர்கள் முன்பு சர்வாலங்கார பூஷிதையாகத் தோன்றினாள். முனிவரும் அவர் பத்தினியும் அவளை வலம் வந்து நமஸ்கரித்தனர்.

"அனுசூயா, என் வாக்குப்படி உன் கணவரின் தவம் பூர்த்தியாகும் வரை இங்கிருந்து விட்டேன். சற்று முன்பு முனிவர் தம் வாயாலேயே தவம் பூர்த்தியாகி விட்டதாகச் சொல்லவில்லையா? இனி நான் திரும்பிச் செல்லலாமா" என்று கேட்டாள்.

அனுசூயை அவளை மறுபடியும் நமஸ்கரித்து அஞ்சலி செய்தாள்.

"தேவி, உலகிலே மக்கள் படும் துயரம் சகிக்க முடிய வில்லை. தொடர்ந்து மழையில்லாததால் எங்கும் வறட்சியாகி பயிர்ப் பச்சைகள் கருகிவிட்டன. தாங்கள் தயவு செய்து இங்கே நிலைத்து இருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். முனிவரும் அங்கேயே தங்கும்படி கங்கையைப் பலவாறு வேண்டினார்.

"அனுசூயை, நான் என்றும் இங்கேயே நிலைத்திருக்க வேண்டுமானால், கணவனைப் பூஜித்து அடைந்துள்ள உன் பலனில் ஒரு வருஷப் பலனை எனக்கு அளிக்கச் சம்மதிப்பாயா? தானம், புண்ணிய தீர்த்த ஸ்நானம், யாகம் ஆகியவற்றால் அடையும் பலனைக் காட்டிலும், பதி விரதையைத் தரிசிப்பவர்கள் மேலான பலனை அடைவார்கள். ஆகவே தினமும் உன்னைத் தரிசித்துக் கொண்டே இங்கிருப்பேன்" என்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கம், இரும்பு, சந்தனம் இம்மூன்றும் தன்னை வருத்திக் கொண்டாவது பிறருக்கு நல்லதைக் கொடுக்கின்றன. உயர்ந்தவர்கள் இத்தன்மை வாய்ந்தவர்கள். அதுபோலவே அனுசூயையும் மகிழ்ச்சியோடு கங்கைக்குத் தன் பதி சேவையின் பலனில் ஒருவருடப் பலனைத் தத்தம் செய்தாள். கங்கையும் ஆனந்தத்தோடு அங்கேயே நிலைத்து விட்டாள்.

அப்போது அனுசூயை பூஜித்து வந்த சிவலிங்கத்திலிருந்து ஈசன் ஐந்து திருமுகங்களோடு எழுந்து அவர்களுக்கு காட்சி தந்தார்.

"அனுசூயை, உன் பூஜையால் நான் மகிழ்ச்சி அடைந் துள்ளேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

முனிவரும் அனுசூயையும் ஈசனையும், கங்கையையும் ஒருங்கே வலம் வந்து வணங்கி ஸ்தோத்திரங்களால் துதித்தனர்.

"பிரபோ, சர்வேசுவரா, எங்கள் மீது கருணை கொண்டு தாங்கள் தோன்றியிருக்கும் பட்சத்தில், தாங்கள் இந்த ஆசிரமத்திலேயே என்றும் இருந்து மக்களுக்கு சகல சுகங்களையும் அருளி வரவேண்டும்" என்று பிராத்தித்தனர்.

ஈசன் அவர்கள் கோரிக்கையை ஏற்று அவ்வாறு அருளி மறைந்தார். சர்வேச்வரனும் கங்காதேவியும் அத்திரி ஆசிரமத்தில் இருப்பிடம் கொண்டதால் ஆசிரமம் தழைத்து விளங்கத் தொடங்கியது. வெளியிடங்களிலிருந்தெல்லாம் முனிவர்கள் அந்த வனத்தில் தவம் செய்து முக்தி பெற வேண்டுமென்று வந்து கூடினர். எல்லோரும் பகவானை ஆராதித்து வழிபட்டனர். ஈசனும் அவர்கள் பூஜைக்கு மகிழ்ந்து நாட்டிலே நிலவி வந்த வறட்சி நீங்க மழை பொழியச் செய்தார். பயிர்ப் பச்சைகள் தோன்றின. மக்கள் குதூகலத்தோடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவானை ஆராதித்து மகிழ்ச்சியில் திளைத்தனர். அத்திரி முனிவர் வேண்டிக் கொண்டதன் பேரில் அந்த ஆசிரமத்தில் இருப்பிடம் கொண்ட ஈசன் அத்திரீசுவரர் என்று போற்றப்பட்டார்.

15. அ. தாருகாவனத்தில் திவ்விய நாடகம்

ஒரு சமயம் தேவதாரு வனம் எனப்பட்ட தாருகா வனத்திலுள்ள முனிவர்கள் யாகமே எல்லாப் பலனைக் கொடுக்கக் கூடியதென்றும், யாகத்தைத் தவிர வேறு ஆண்டவன் இல்லை என்றும் எண்ணம் கொண்டு பகவானை மறந்து இருந்தனர். அதே போல முனிபத்தினிகள் கற்பு ஒன்றே சிறந்தது எனக் கொண்டு பகவானை ஆராதிப்பதை விட்டு விட்டனர். அவர்கள் அறியாமையை நீக்க ஈசன் விருப்பம் கொண்டார்.

மகாவிஷ்ணுவை அழைத்து அழகிய பெண்ணைப் போன்று உருவம் எடுத்துக் கொள்ளச் செய்தார். விஷ்ணுவும் அவ்வாறே தம்மைப் பலவாறு அலங்கரித்துக் கொண்டு கண்டோர் மயங்கும் பெண் வடிவைக் கொண்டார்.

“இப்படியே புறப்பட்டுச் சென்று தாருகா வனத்தில் யாகம் செய்யும் முனிவர்கள் முன்னிலையில் நடமாடி அவர்கள் உள்ளத்தில் மோகம் உண்டாகச் செய்” என்றார் ஈசன்.

விஷ்ணு தாருகாவனத்தை அடைந்தார். அங்கே யாகம் செய்யும் முனிவர்கள் முன்பு, வீணையில் இனிய நாதம் எழுப்பினார். இன்னிசையால் கவனம் ஈர்க்கப்பட்ட முனிவர்கள் தாங்கள் செய்து வந்த யாக காரியங்களை நிறுத்திவிட்டு நாதம் எங்கிருந்து வருகிறதென்று சுற்றும்முற்றும் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் பார்வை, பெண் வடிவிலே வந்திருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷ்ணுவின் மீது பட்டதும் அங்கேயே லயித்துவிட்டது. அத்தனை அழகு வடிவம் கொண்ட பெண்ணை அவர்கள் அதுவரைப் பார்த்ததே இல்லை. அவள் மீது வைத்த பார்வையை மீட்கச் சக்தியின்றி அவளையே பார்த்தபடி இருந்தனர். அவர்களுடைய உள்ளங்கள் தம்மிடம் அடிமையாகி விட்டன என்பதை உணர்ந்து மெல்ல இசைத்தபடி அங்கிருந்து நகர்ந்தார் விஷ்ணு.

முனிவர்கள் தாங்கள் செய்து வந்த யாகத்தை மறந்தனர். தம் மனைவியரை மறந்தனர். பெண்ணாக வந்திருக்கும் விஷ்ணுவோடு புறப்பட்டு விட்டனர். அவர்கள் உள்ளங்களில் அந்த மோகன வடிவமே நிறைந்திருந்தது. அவள் அழகைப் பற்றிய நினைவே அவர்கள் சிந்தனையில் குடி கொண்டிருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகசாலையில் இருந்த முனிவர்கள், விஷ்ணுவின் மாயையில் சிக்கி அவர் புறப்பட்ட அதே நேரத்தில் சிவ பெருமான் பரதேசியைப் போன்று வேடம் கொண்டு திகம்பரராய் கையில் ஓடு ஏந்தி உடுக்கை அடித்துப் பாடியபடி முனிவர்களின் இல்லங்களுக்குச் சென்றார். ஒவ்வொரு வீடாக ஏறி உடுக்கையின் நாதத்துக்கேற்பப் பாடிக் கொண்டு பிக்ஷை கேட்டார்.

யாரோ பரதேசி பிச்சை கேட்டு வந்திருக்கிறான் என்று வெளியே வந்த முனி பத்தினிகள் ஒருகணம் திகைத்து விட்டனர். பிச்சைக்கு வந்திருப்பவனின் சுந்தர வடிவத்தைக் கண்டதும் அவர்கள் உள்ளங்களில் கள்ளம் புகுந்துவிட்டது. அவனைப் பார்க்கப் பார்க்க அவர்கள் உள்ளங்களில் இன்பம் ஊற்றெடுத்தது. அவனோடு பேசுவதிலேயே அவர்கள் ஓர் இன்பம் கண்டனர். பகவானின் மாயையல்லவா?

சிவபெருமான் அங்குள்ள முனிவர்கள் அத்தனை பேருடைய வீடுகளிலும் ஏறி இறங்கி முனி பத்தினிகளின் மனத்திலே ஆசைக் கனல் கொழுந்துவிட்டெரியச் செய்தார். அவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு பல விதமாக உரையாடினர். மனத்துக்கு இதமான பாடல்களைப் பாடும்படி வற்புறுத்தினர். தேனிலே அமர்ந்த ஈயைப் போன்று அவர்கள் சிவபெருமானை விட்டுப் பிரிய மனமின்றித் தவித்தனர். அவர்களுடைய மனநிலையை அறிந்த ஈசன், மெல்ல அங்கிருந்து தவச் சாலையை நோக்கி நகர்ந்தார். முனி பத்தினிகளுக்கு அவர் புறப்பட்டு விட்டாரே என்ற வருத்தம்.

“இருப்பா! அதற்குள் புறப்பட்டுவிட்டாயே...!” என்று அவரை மேலும் பாட்டுக்கள் பாடும்படி வற்புறுத்தினர். ஈசனோ மெல்ல அவர்கள் வற்புறுத்தலுக்கு இணங்குவது போல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிற்பதும் உடனே புறப்பட்டுச் சிறிது தூரம் நகர்வதுமாக இருந்தார். முனி பத்தினிகளும் தங்கள் இல்லங்களை மறந்து அவரோடு புறப்பட்டு வந்தனர்.

அப்போது எதிர்புறமாக மற்றொரு கூட்டம் வந்தது. அவர்கள் வேறு யாருமல்ல, விஷ்ணுவின் மாயையில் சுழன்று அவர் பின்னால் வந்த முனிவர்கள்தான். விஷ்ணுவின் மோகன வடிவத்தைக் கண்களால் பருகி ஆனந்தித்து அவர் பின்னாலேயே வந்து கொண்டிருந்த முனிவர்கள் தூரத்தே வந்து கொண்டிருக்கும் பெண்களின் கூட்டத்தைக் கண்டதும் திடுக்கிட்டனர். அவர்களில் ஒருவர், அக்கூட்டத்தில் முனி பத்தினிகள் இருக்கிறார்கள் என்று அறிவித்ததும் மற்றவர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர்.

யாரோ பரதேசி ஒருவன் உள்ளத்து உணர்ச்சிகளை எழுப்பும் பாடல்களைப் பாடுவதும் அவன் பாட்டைக் கேட்டு முனிபத்தினிகள் மெய் மறந்து அவனைப் புகழ்வதையும் பார்த்த முனிவர்களுக்குச் சொல்ல முடியாத கோபம் எழுந்தது.

“அடே தூர்த்தா! என்ன காரியம் செய்கிறாய்? ஆண்கள் இல்லாத நேரத்தில் பெண்களிடம் இச்சையாகப் பேசி அவர்கள் மனத்திலே உணர்ச்சியைத் தூண்டுகிறாயே! உன்னை என்ன செய்கிறோம் பார்” என்று கடிந்து பேசி அவனைப் பலவாறு சபித்தனர்.

அவர்கள் சாபம், பிக்ஷாடனராக வந்திருந்த பகவானை ஒன்றுமே செய்யவில்லை. ஈசன் சிரித்தபடி அவர்களைப் பார்த்தார்.

“இப்போது என்ன ஆயிற்று” என்று கேட்டார்.

அப்போதுதான் முனிவர்களுக்கு மெல்லச் சந்தேகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோன்றியது. வந்திருப்பது பெரிய யோகியாக இருக்கலாமோ என்று எண்ணினர்.

"ஐயா, நீங்கள் யார்? எதற்காக இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டனர்.

"முனிவர்களே, நானும் உங்களைப் போன்று ஒரு முனிவனே. இவ்வனத்தில் நீங்கள் ஒன்றுகூடித் தவம் செய்து வருவதாகக் கேள்விப்பட்டு நானும் இங்கே தங்கி தவம் மேற்கொள்ளலாமென்று என் மனைவியுடன் வந்தேன். ஆகாரத்திற்காக யாசித்துக் கொண்டே இந்த ஆசிரமத்தில் நுழைந்தேன்..."

"உங்கள் மனைவி எங்கே?" என்று கேட்டனர் முனிவர்கள்.

"அதோ! உங்கள் மத்தியில்தான் இருக்கிறாள்!..." என்று பெண் வடிவிலே நிற்கும் விஷ்ணுவைச் சுட்டிக் காட்டினார். பின்னர் அவரை நெருங்கி, "இவ்வளவு நேரமாக எங்கே சென்றாய்? ஆற்றுக்குப் போய்விட்டு வருகிறேன் என்று சொல்லிச் சென்றாயே!" என்று கேட்டார்.

"ஆற்றங்கரையிலே கூட்டம் இருந்தது. அதனால் சற்று தாமதமாயிற்று. திரும்பி வரும்போது உங்களைக் காண வில்லை. யாகசாலை பக்கம் போயிருப்பீர்களோ எனப் பார்த்து வந்தேன்" என்றாள் விஷ்ணு தேனினும் இனிய பெண் குரலில்.

"ஐயா!... " என்று கூப்பிட்டனர் முனிவர்கள்.

"என்ன?..."

"தவம் செய்ய விருப்பம் தெரிவித்தீர்கள். இந்தப் பாதகியை அனுப்பிவிட்டுத் தாங்கள் எங்களோடு வாருங்கள்" என்று அழைத்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அதெப்படி முடியும்? அவள் என் மனைவி அல்லவா? தவிர, மனைவியோடு தவம் செய்வதுதான் சிறந்ததெனச் சொல்லப்பட்டுள்ளதே!...

"ஐயா, தாங்கள் கூறுவது ஒருவிதத்தில் சரிதான். ஆனால் தங்கள் மனைவியோ களங்கமுள்ளவள். பிற ஆடவர்களிடம் சிரித்துப் பேசி அவர்களோடு இன்ப வார்த்தைகளை உரையாடுகிறாள். ஆகவே அவள் ஒதுக்கப்பட வேண்டியவளே!..." என்றனர் முனிவர்கள்.

ஈசன் 'கலகல' வென்று சிரித்தார்.

"மிகவும் நன்றாயிருக்கிறது உங்கள் பேச்சு. என் மனைவி களங்கமுள்ளவள் எனக் கூறும் உங்கள் யோக்கியதை மட்டும் என்ன? உங்கள் மனைவியர் மட்டும் கற்பிற் சிறந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ? திகம்பரனாகிய என்னை அவர்கள் தலை நிமிர்ந்து பார்க்கலாமா? பார்க்கவே கூடாதென்றால் என்னைச் சூழ்ந்து கொண்டு உணர்ச்சி மயக்கமாக வார்த்தையாடுவதை என்னவென்று கூறுவது? உங்கள் யோக்கியதை இப்படி இருக்கிறது. இந்த இடத்தில் தவம் செய்தால் என் குறிக்கோள் நிறைவேற மார்க்கமே கிடையாது. நான் வருகிறேன்" என்று கோபம் கொண்டவர் போல நடித்து விஷ்ணுவையும் அழைத்துக் கொண்டு வேகமாக நடந்தார். இருவரும் நேராக வசிஷ்டரின் ஆசிரமத்தை அடைந்து அவரிடம் விடைபெற்றுத் திரும்பினர்.

மறுநாளே தாருகாவனத்து முனிவர்களுக்குக் கேடுகாலம் ஆரம்பமாகி விட்டது. முனிவர்கள் நோய் வாய்ப்பட்டனர். அதன் காரணமாக அவர்களால் நித்திய கர்மாக்களைச் சரிவர செய்ய முடியவில்லை. ஆசிரமத்தில் லக்ஷ்மீகரம் போய் விட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைதி நிரம்பிய வாழ்க்கை மாறி தினமும் வேதனைப்பட்டுத் தவித்தனர்.

நாளுக்கு நாள் இந்த நிலைமை மேலும் மோசமடைந்தது. காரணம் தெரியாது தவித்த முனிவர்கள் எல்லோருமாகப் பிரம்மதேவனை அடைந்து தங்களுக்கு நேர்ந்துள்ள துயரைத் தெரிவித்தார்கள்.

“முனிசிரேஷ்டர்களே! பகவானுக்குச் செய்த அபசாரமே உங்களை இப்படித் துன்புறுத்துகிறது. யாகமே எல்லாவற்றையும் கொடுக்கவல்லது என்றும், வேறு கடவுள் இல்லை என்றும் நீங்கள் எண்ணியிருந்தீர்கள். உங்கள் மனைவியரோ கற்பிற் சிறந்தது வேறு இல்லை என பகவானை ஆராதிப்பதை விட்டு விட்டனர். உங்கள் அறிவிலே படிந்திருந்த மயக்கத்தை நீக்கவே பகவான் கைலாசநாதன் மஹா விஷ்ணுவோடு பிக்ஷாடனராகத் தாருகா வனம் வந்திருந்தார். நீங்களோ அவரது உண்மைச் சொரூபத்தை உணராது உங்கள் மனைவியரை நெறி கெட்டு நடக்குமாறு பரதேசி தூண்டினான் என்று சபித்தீர்கள். அதன் பலனைத்தான் நீங்கள் இப்போது அனுபவிக்கிறீர்கள்” என்றார் பிரம்மதேவன்.

முனிவர்களுக்கு அப்போதுதான் உண்மை புரிந்தது. சர்வேசுவரன் அவ்வளவு நெருக்கத்தில் இருந்தும் அவரை உணராது போனோமே என்று அவர்கள் வருந்தினர். மறுபடியும் பிரம்மதேவனை வணங்கி, “பிரபோ ! நாங்கள் இத்தனை காலமாக அறியாமையால் பகவானை மறந்து இருந்து விட்டோம். இப்போது தான் எங்கள் கண்கள் திறந்தன. எங்கள் தவறுக்கு நாங்கள் பெரிதும் வருந்துகிறோம். எங்களை மன்னித்து நாங்கள் கடைத்தேறும் மார்க்கத்தைத் தாங்கள் தான் காட்டவேண்டும்” என்று பிரார்த்தித்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மதேவன் அவர்களுக்குச் சிவலிங்கம் ஒன்றைக் கொடுத்து, பஞ்சாக்ஷர மந்திரத்தையும் உபதேசித்தார்.

“நீங்கள் இந்த லிங்கத்தை எடுத்துச் சென்று தினமும் தவறாது ஆராதித்து பஞ்சாக்ஷரியை ஜபித்து வந்தீர்களானால் சிவபெருமானின் அருள் பெறுவீர்கள்'' என்றார்.

முனிவர்கள் சிவலிங்கத்தைப் பக்தியோடு பெற்றுத் தங்கள் இருப்பிடம் கொணர்ந்து பிரதிஷ்டை செய்தனர். தினமும் லிங்கத்துக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, மலர்களைக் கொண்டு அர்ச்சித்து, பஞ்சாக்ஷரியை ஜபித்து வந்தனர். அவர்கள் பூஜையில் மகிழ்ச்சி அடைந்த ஈசன், மறுபடியும் விஷ்ணுவோடு பிக்ஷாடன கோலத்தில் தாருகாவனம் வந்தார்.

இம்முறை அவரைப் பார்த்து முனிபத்தினிகள் சித்தம் பேதலிக்கவில்லை. அவரைப் பக்தியோடு வரவேற்று கால் அலம்பி பிக்ஷை இட்டனர். முனிவர்களும் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தோட பகவானையும் விஷ்ணுவையும் வேத கோஷங்களால் வரவேற்று அர்க்கியம் முதலானவைகளைக் கொடுத்து உபசரித்தனர்.

முனிவர்களின் உபசரிப்பிலே பெரிதும் மகிழ்வுற்றுக் கைலாசநாதன் அவர்களுக்குத் தமது திவ்விய ரூபத்தைக் காட்டி அவர்கள் துயரம் நீங்குமாறு அருளினார். முனிவர்கள் அவரைப் பணிந்து என்றும் அங்கேயே இருக்க வேண்டுமென்று வேண்ட, சிவபெருமான் அவ்வாறு சம்மதித்து, நாகேசர் என்ற திருநாமத்தோடு அவர்கள் பூஜித்து வந்த லிங்கத்திலே சாந்நித்தியம் அடைந்தார்.

******

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ. அந்தகாசுரனுக்கு அருளிய ஈசன்

ஹிரண்யகசிபுவின் சகோதரனான ஹிரண்யாக்ஷன் என்ற அசுரனுக்குப் பிறந்த மகன் அந்தகாசுரன். அவன் பிரம்மதேவனைக் குறித்துத் தவம் செய்து தன் ஆயுள்வரை மூவுலகங்களையும் வென்று ஆட்சி செய்யும் வரம் பெற்றான். அதைக் கொண்டு அவன் தேவர்களை வென்று தனக்கு அடிபணியும்படி செய்து அட்டகாசத்தோடு இருந்து வந்தான். தேவர்கள் அவனால் துன்புறுத்தப்பட்டாலும் அடிக்கடி பெரும் சேனையோடு வந்து அவனை எதிர்த்து வந்தனர். அதனால் அவன் தான் வசித்து வந்த மந்தரமலையை விட்டுச் சமுத்திரக் கரையில் நிருதித் திக்கில் பாதாள நகரம் ஒன்றைச் சிருஷ்டித்து அதில் தன் பரிவாரங்களுடன் தங்கினான். அங்கிருந்து அடிக்கடி வெளிப்பட்டுத் தேவர்களைக் கொடுமைப்படுத்தி வந்தான்.

அவன் துன்பம் பொறுக்க மாட்டாத தேவர்கள் ஒன்று கூடிச் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். அவர்கள் படும் துயரத்தை அறிந்த ஈசனும் பரிவாரங்களுடன் அவர்கள் யுத்தத்துக்குப் புறப்பட்டால் தானும் அவர்களோடு வருவதாகத் தெரிவித்தார். அவ்வாறே தேவர்கள் புதிய தெம்புடன் படை திரட்டிக் கொண்டு அந்தகாசுரனுடன் போருக்குச் சென்றனர்.

பாதாள நகரை அடைந்த தேவர்கள் அட்டகாசம் செய்து அசுரனைப் போருக்கு அழைத்தனர். அடிவாங்கிக் கொண்டு ஓடும் தேவர்கள் தைரியமாகத் தன்னுடைய நகரின் வாசலுக்கே வந்து யுத்தத்துக்கு அழைப்பதைக் கண்டதும் அசுரன் சொல்லொணாச் சீற்றம் கொண்டான். உடனே தன்னுடைய வீரர்களுடன் வெளிப்பட்டுத் தேவர்களுடன் போர் புரிந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடிவு வழக்கம் போல்தான். தேவர்கள் அவனுடைய பராக்கிர மத்துக்கு முன்பு நிற்க மாட்டாது சிதறி ஓடினர். அவர்களை ஓட ஓடத் துரத்திவிட்டு நகருக்குத் திரும்பினான் அந்தகாசுரன்.

தேவர்களோடு வந்திருந்த சிவபெருமான் அசுரன் நகரை விட்டு வெளிப்பட்டு யுத்தத்துக்குச் சென்றதும் அவன் நகரத்தில் நுழைந்து காத்திருந்தார். அசுரன் தேவர்களை வெற்றி கொண்டு திரும்பியபோது அவன் முன்பு எதிர்ப்பட்டுத் தமது சூலாயுதத்தால் அவன் மார்பிலே குத்தினார்.

கைலாசநாதனே, தன்னைத் தாக்கினார் என்பதை அறிந்த போது அந்தகாசுரன், தான் படும் வேதனையையும் மறந்து, மகிழ்ச்சியோடு பகவானை அனேக ஸ்துதிகளால் துதித்தான். அவன் செய்கை ஈசனுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது.

"அந்தகா, உனக்கு என்ன வேண்டும்? கேள்" என்று கேட்டார்.

"பிரபோ! தங்களிடம் எனக்கு என்றும் மாறாத பக்தி உண்டாகும்படி அனுக்கிரகிக்க வேண்டும்" என்று கோரினான் அசுரன்.

ஈசனும் அவன் கோரிக்கையை நிறைவேற்றி அவனைத் தமது கணங்களின் தலைவர்களுள் ஒருவனாக்கினார். பின்னர் அங்கிருந்த இதர அசுரர்களை அழித்துத் தேவர்களுக்கு நேர்ந்திருந்த துன்பத்தை அறவே ஒழித்தார். அந்தகாசுரனால் துதிக்கப்பட்டுத் திருப்தி அடைந்த ஈசன் அந்தகேசுவரர் எனப் போற்றப்பட்டார்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. ஆதி சைவர் மகிமை

சைவர்கள் ஏழு வகையானவர் எனச் சொல்லப்படுகிறது. அதாவது அநாதி சைவர், ஆதி சைவர், மஹா சைவர், அநு சைவர், அவாந்தர சைவர், பிரவர சைவர், அந்ய சைவர் எனப்படுவர்.

அநாதி சைவர் எனப்படுபவர் சிவபெருமானே. ஆதிசைவர் சிவத்விஜர் ஆவர். மஹா சைவர் சத்திரியர்; அவாந்தர சைவர் நான்காம் வருணத்தாரும், பிரவர சைவர் சவர்ணாம் பஷ்ட மத்யஸ்த குலாலரும் ஆவர். அந்ய சைவர் இதர ஜாதியாவர். ஆதி சைவர்* சிவபெருமானுடைய ஊர்த்துவ முகத்தினின்று தோன்றியவர்களாம். அந்தணர்களான அவர்கள், சதாசிவ மூர்த்தியாலேயே தீக்ஷை செய்யப் பெற்றவர்களாம்.

ததீசி என்ற பெயருடைய ஆதி சைவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானிடம் அபரிமித பக்தி கொண்டு நியமம் தவறாது பகவானை ஆராதித்து வந்தார். அவருக்கு ஒரு புத்திரன் இருந்தான். அவனுக்குத் தக்க வயது வந்ததும் ஒரு பெண்ணை மணம் செய்து வைத்தார் ததீசி.

அவன் தந்தையைப் போல் சிவபெருமானிடம் பக்தி பூண்டு சிவபூஜை செய்து, பிறர்க்கு தீக்ஷை செய்து வந்தான். இருப்பினும் அவனுக்குத் தன் மனைவியிடம் அபரிமித மோகம் இருந்தது.

ஒரு சமயம் ததீசி அயலூர் செல்ல வேண்டி நேரிட்டது. அவர் தன் மகனை அழைத்து, தான் சென்று திரும்பும் வரை சிவபூஜையை நியமப்படி செய்துவருமாறு சொல்லிச் சென்றார்.

(*கௌசிகர், காசிபர், பரத்வாஜர், அத்திரி, கௌதமர் ஆகிய ஐந்து முனிவரும் சதாசிவனின் பஞ்ச முகங்களால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீக்ஷை செய்யப்பட்டவர்களாம். அவர்கள் குலத்தில் பிறந்தவர்களே ஆதி சைவர்கள் என்றும் சொல்லப்படுகிறது.)

அப்போது சிவராத்திரி தினம் வந்தது. அன்றையத் தினம் வழக்கம்போல அவன் உபவாசம் இருந்து ஒவ்வொரு காலத்திலும் சிவலிங்கத்துக்கு அபிஷேகம், அர்ச்சனை முதலியன செய்து வந்தான். அன்றிரவு மூன்றாங் கால பூஜை முடிந்து நாலாங்கால பூஜைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. மனைவியிடம் கொண்டிருந்த அபிரிமித மோகத்தால் அவன் மனத்தில் சிறிது களங்கம் ஏற்பட்டுவிட்டது. அதனோடு அவன் நான்காம் கால பூஜையையும் செய்து முடித்தான். அதனால் சினம் கொண்ட ஈசன் அவன் சித்தம் பேதலிக்குமாறு செய்துவிட்டார். அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதால், அவனுடைய நான்கு பிள்ளைகளில் மூத்தவன், சிவபூஜையை மேற்கொண்டு நடத்தி வந்தான்.

வெளியூர் சென்ற ததீசி திரும்பியதும், அங்கே நடந்த சம்பவங்களை அறிந்து பெரிதும் வேதனை அடைந்தார். தன் குமாரன் திடீரென்று பைத்தியம் பிடித்து அலைய வேண்டிய காரணமென்னவென்று அறிய சிவபூஜையின் போது பகவானை வேண்டினார். பகவானும் அவருக்குக் குமாரனின் களங்கமடைந்த உள்ளத்தைத் தெரிவித்தார்.

ததீசி அடைந்த வருத்தத்திற்கு அளவே இல்லை. தம் குலப் பெருமைக்குக் களங்கம் ஏற்படும் வகையில் குமாரன் நடந்து கொண்டுவிட்டானே என வருந்தினார். இந்தச் சமயத்தில் இவ்வளவுக்கும் காரணமான அவர் மருமகள் இறந்துவிட்டாள். இருப்பினும் தம் மகன் செய்த தவறுக்குத் தகுந்த பரிகாரம் செய்ய வேண்டுமென்று விரும்பினார் அவர். அவனுக்காகத் தான் தினமும் சிவபூஜையும் பார்வதி பூஜையும் செய்து வந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ததீசி செய்து வந்து பூஜையில் திருப்தி அடைந்த தேவி, அவர் முன்பு தோன்றி, "ததீசி, நீ கவலைப்பட வேண்டாம். ஆதி சைவர்களாகிய நீங்கள் என் புத்திரர்கள் அல்லவா? உன் குமாரனின் தவற்றை மன்னித்து அருளும்படி ஈசனிடம் வேண்டிக் கொள்கிறேன்" என்று அருளினாள்.

ஈசனும் அதற்குச் சம்மதித்துக் குமாரனை நெய்யில் ஸ்நானம் செய்யச் செய்து, யக்ஞோபவீதம் தரித்து சிவகாயத்ரியையும், சிவ பஞ்சாக்ஷரியையும் உபதேசம் பெற்றுக் கொள்ளுமாறு செய்தார். பதினாறு முறை ஜபித்த உடனேயே அவன் பாவங்கள் அகன்று புத்தி தெளிவுற்றான். பகவான் மேலும் அவர்களுக்கு அனேக வரங்களை அளித்துத் தம்மை பூஜிக்கும் பெருமையையும் அவர்களுக்கு அருளினார். ஆதிசைவரை எவனொருவன் பூஜிக்கிறானோ அவன் சிவபெருமானையே பூஜித்த பலனை அடைவான் என்றும் அனுக்கிரகித்து மறைந்தார்.

இப்படி ஆதி சைவர்களின் பெருமையை விளக்கும் மற்றொரு கதையைப் பார்ப்போம்.

அந்தகேசுவர நகரத்தை பத்திரன் என்னும் அரசன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் தினமும் ஆயிரம் வேதியருக்கு அன்னம் அளித்து வந்தான். அவன் சிவபெருமானிடம் குன்றாத பக்தி கொண்டவன்.

ஒருநாள் சர்வேச்வரன் அவன் முன்பு தோன்றி "பத்திரா, இதோ இந்தக் கொடியை உன் அன்ன சாலையின் உச்சியில் தினமும் விடியற்காலையில் கட்டி வை. எப்போது சத்புருஷன் உன்னிடம் அன்னம் பெறுகிறானோ அப்போது இந்தக் கொடி கீழே விழும்" என்று சொல்லி கொடி ஒன்றைக் கொடுத்து மறைந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்று முதல் அவன் தினமும் விடியற்காலையில் கொடியை அன்னச் சத்திரத்தில் கட்டிவிட்டு, வரும் வேதியர்களுக்கு அன்னம் வழங்குவான். தினமும் இவ்வாறு நடந்து வந்தது. ஒரு நாள்கூட கொடி கீழே விழவில்லை.

இப்படியிருக்கும்போது ஒருநாள் அரசனிடம் அன்னம் பெற ஆதி சைவ வேதியன் ஒருவன் வந்தான். அவனுக்கு அன்னம் கொடுத்த உடனேயே கொடி கீழே விழுந்தது. அரசன் ஆச்சரியமுற்று அவனைப் பெரிதும் கொண்டாடினான்.

பக்கத்திலிருந்த அந்தணர்கள் அதை ஆட்சேபித்தனர்.

"அரசே! நீர் சந்தோஷப்படுவது போல் எதுவும் நடக்க வில்லை. இந்த ஆதிசைவன் எங்களோடு சேர்க்கப்படக் கூடியவன் அல்ல. எங்களுக்கும் கீழானவன். நாங்கள் அன்னம் பெற்ற பின்னரே அவன் பெறவேண்டும். அப்படியிருக்க முன்னதாகப் பெற்றதால், அதைப் பொறுக்கமாட்டாது கொடி விழுந்துவிட்டது. அவ்வளவுதானே தவிர, இவன் ஒன்றும் சத்புருஷன் அல்ல!" என்றனர்.

"ஐயா, நீங்கள் சொல்வதை நான் ஏற்க முடியாது. வேண்டுமானால் மீண்டும் பரீட்சிக்கலாம். நாளை, முதலில் நீங்கள் அன்னம் பெறுங்கள். பின்னர் இவன் பெறட்டும். கொடி எப்போது விழுகிறது என்பதைப் பார்க்கலாம்" என்றான், அரசன்.

அவர்களோ அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனாலும், அரசன் தொடர்ந்து, வழக்கப்படி கொடியை உயரக்கட்டி அன்னம் வழங்கி வந்தான். இப்படியாக நடந்துவரும்போது மற்றொரு நாள் ஆதி சைவர் ஒருவர் வந்தார். அவர் அன்னம் பெற்றதும் கொடி கீழே விழுந்தது. அப்போதுதான் அவர்கள் ஆதிசைவருடைய பெருமையை அறிந்து கொண்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசுவர அனுக்கிரகம் பெற்ற அவர்கள் பிறரால் பூஜிக்கத் தகுந்தவர்கள் என்பதை உணர்ந்து அவர்களைப் போற்றிக் கொண்டாடினார்கள்.

17. சந்திரனுக்கு அனுக்கிரகித்த சோமேசர்

தக்ஷனுக்குப் பிறந்த பெண்களில் அசுவினி முதல் ரேவதி வரையுள்ள இருபத்து ஏழு பெண்களும் சந்திரனுக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டனர். சந்திரன் தன் மனைவியர் அனைவரிடத்திலும் ஒரே மாதிரியாக அன்பு காட்டவில்லை. அவர்களுள் ரோகிணி என்பவளிடமே அவனுக்கு அதிகப் பிரியம். அவளிடமே அவன் அதிகமாக இருக்கத் தொடங்கினான்.

இது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. கணவனிடம் கோபித்துக் கொண்டு தந்தை வீட்டுக்கு வந்து தக்ஷனிடம் முறையிட்டனர். தக்ஷன் சந்திரனை அழைத்துப் பேசினான். சத்குலத்தில் பிறந்து கலாநிதி எனப் பெயர் கொண்டுள்ள அவன், "மனைவியர் இருபத்து ஏழு பேரில் ஒருத்தியிடம் மட்டும் அதிகப் பிரியம் கொண்டிருப்பது அழகல்ல", என்று எடுத்துரைத்து அனேக புத்திமதிகள் சொன்னான்.

சந்திரனோ மாமனாரின் வார்த்தைகளைக் கொஞ்சமும் ஏற்கவில்லை. தன் போக்குப்படியே நடந்து வந்தான். அதைக் கண்ட தக்ஷன் பெரிதும் கோபம் கொண்டான். நியாயமற்ற முறையில் சந்திரன் நடந்து கொள்வதை விரும்பாத தக்ஷன் அவன் கலைகள் குறைய வேண்டுமென்று சாபம் கொடுத்து விட்டான்.

தக்ஷன் அளித்த சாபம் அந்த க்ஷணமே சந்திரனைப் பீடித்தது. சந்திரனின் கலைகள் குறையத் தொடங்கியதும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் பிரகாசம் மங்கி விட்டது. சந்திரனுக்கு நேர்ந்த கதியைக் கண்டு தேவர்கள் திடுக்கிட்டனர். எல்லோரும் பிரம்ம தேவனிடம் சென்று சந்திரனை மன்னித்து அவன் சாபம் நீங்க அருளுமாறு வேண்டினர்.

"தேவர்களே! தக்ஷன் கொடுத்த சாபத்தை மாற்றும் சக்தி எனக்கில்லை. சந்திரன்மீது தவறு இருக்கும்போது நாம் குறுக்கிடுவது நியாயமுமல்ல. சந்திரனின் போக்கே இப்படித் தான். முன்பொரு முறை பிரகஸ்பதியின் மனைவியான தாரையிடம் மோகம் கொண்டு அவளை அடைய வேண்டுமென்று விரும்பி கவர்ந்து சென்றான். அத்துடன் பிரகஸ்பதியின் கோபம் தன்னை ஒன்றும் செய்யாதிருக்க அவரோடு சண்டைக்கு வந்து விட்டான். தேவர்கள் ஓடிச் சென்று அவன் தந்தையான அத்திரி முனிவரை அழைத்து வந்தனர். அவர் வந்து நல்ல வார்த்தைகள் சொன்னதும், தாரையைக் கொண்டு வந்து பிரகஸ்பதியிடம் விட்டான். அவரோ தாரை கருவுற்றிருக்கிறாள் என்றும் களங்கமுடையவளை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் கோபித்தார். குழந்தை பிறந்ததும் தாரையைப் புனிதமாக்கிப் பிரகஸ்பதியிடம் சேர்ப்பிப்பதற்குள் பெரும் கஷ்டமாகி விட்டது. தவறுக்கான தண்டனையை அனுபவித்தால்தான் திருந்த முடியும்" என்றார் பிரம்மதேவன்.

"பிரபோ, அவ்வாறு சொல்லக்கூடாது. சந்திரனின் கலைகள் குறைவதால் பூலோகவாசிகள் கஷ்டப்பட நேரும். அவன் செய்த தவறுக்குத் தகுந்த பரிகாரம் சொன்னால் அதைச் செய்யும்படி அவனிடம் கூறுகிறோம்" என்று வேண்டினர் தேவர்கள்.

"பிரபாச க்ஷேத்திரத்துக்குச் சென்று சிவலிங்கத்தைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜை செய்து மிருத்தியுஞ்சய மந்திரத்தை ஜபித்து வருவானாகில் பகவான் அவனுக்கு அருளக் கூடும்'' என்று தெரிவித்தார் பிரம்மதேவன்.

தேவர்கள் சந்திரனை அழைத்து பிரபாச க்ஷேத்திரம் சென்று சிவபூஜை செய்யுமாறு தெரிவித்தனர். சந்திரன் அவர்கள் கூற்றுப்படி பிரபாச க்ஷேத்திரத்தை அடைந்தான். அங்கே உள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி நியம நிஷ்டைகளோடு சிவலிங்கத்தில் பகவானைத் தியானித்துப் பூஜைகள் செய்தான். பின்னர் நிர்மலமான உள்ளத்தோடு மிருத்தியுஞ்சய மந்திரத்தை ஜபித்து வந்தான்.

ஆறு மாதங்கள் சென்றன. ஈசன் மகிழ்ச்சியடைந்தவராய் சந்திரன் முன் தோன்றினார்.

''சந்திரா, உனக்கு வேண்டியது என்ன ?'' என்று கேட்டார்.

''பிரபோ, தக்ஷப் பிரஜாபதியின் சாபம் காரணமாக நான் கலைகள் குறைந்து பிரகாசமின்றி இருக்கிறேன். என் பிரகாசம் முன்னைப் போல் ஆக அருள வேண்டும்'' என்று கோரினான் சந்திரன்.

''அந்தண சாபம் மாற்ற முடியாதது அன்றோ, இருப்பினும் அதில் ஒரு மாற்றம் செய்கிறேன். உன் கலைகள் பதினைந்து தினங்கள் குறைந்து கொண்டே வரும். பின்னர் பதினைந்து தினங்களுக்கு அது வளர்ந்து வரும்''என்று அனுக்கிரகித்தார்.

''பிரபோ! மற்றொரு வேண்டுகோள். தாங்கள் எனக்கு அனுக்கிரகித்ததன் நினைவாக இந்த க்ஷேத்திரத்தில் சோமேசர் என்ற நாமத்தோடு விளங்கி பக்தர்களின் மனோ பீஷ்டங்களை நிறைவேற்றி வரவேண்டும்'' என்று பிரார்த்தித்தான் சந்திரன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசன் அவன் கோரிக்கைக்குச் சம்மதித்தார். அன்று முதல் அவர் சோமேசர் என்ற நாமத்தோடு அந்த க்ஷேத்திரத்தில் சாந்நித்தியம் கொண்டுள்ளார். சந்திரன் நீராடிய தீர்த்தத்துக்கு சந்திரகுண்டம் என்ற பெயர் விளங்கலாயிற்று. அதில் நீராடினால் ரோகங்களிலிருந்து நிவர்த்தி கிடைக்கும். அந்த க்ஷேத்திரத்தை வலம் வருபவன் பூபிரதக்ஷிணம் செய்த பலனை அடைவான். சோமேசரைத் தரிசித்து வழிபட்டால் பிராயச் சித்தங்கள், சொல்லப் படாத பாபங்கள் கூட நசித்து விடுமாம்.

18. அ. உஜ்ஜயினி மகாகாளேசர்

க்ஷிப்பிராநதி தீரத்தில் அவந்திகாபுரி என்றொரு பட்டணம் இருக்கிறது. அப்பட்டணத்தில் வேதப்பிரியன் என்றொரு பிராமணன் இருந்தான். அவன் சிவபெருமானிடம் இடையறா பக்தி கொண்டவன். சிவபூஜை செய்து தினமும் பகவானை ஆராதித்து வந்தான்.

அவனுக்கு நான்கு புதல்வர்கள். தேவபிரியன், மேதன், சுவிரதன், தருமவாதி ஆகிய அந்நால்வரும் தந்தையைப் போன்று சிவபூஜையில் பக்தி நிரம்பியவர்கள்.

அவ்வூருக்குப் பக்கத்திலே ரத்தினமாலா என்றொரு பர்வதம் இருக்கிறது. அதில் தூஷணன் என்னும் அரக்கன் இருந்தான். அவன் பிரம்மதேவனைக் குறித்துக் கடும் தவம் செய்து அளவில்லா பராக்கிரமத்தை அடைந்திருந்தான். அதனால் செருக்குற்ற அவன் அந்தப் பகுதியிலுள்ளவரை அடித்தும் துன்புறுத்தியும் வந்தான். தவம் செய்யும் முனிவர்களை மிரட்டி அவர்கள் தவத்துக்கு இடையூறு பல செய்தான். அவ்வாறே பகவானை பூஜிப்பவர்களையும் மிரட்டி, அடித்துப் பூஜை புனஸ்காரங்களை விட்டு விடுமாறு வற்புறுத்தி வந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருசமயம் தூஷணன் தன்னுடைய மந்திரிகளுடன் அவந்தி பட்டணத்தில் நுழைந்து அங்குள்ளவர்களை அடக்கித் தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்தான். அந்தணர்களை நித்திய பூஜைகளைச் செய்யக்கூடாதென்று கட்டுப்பாடு செய்தான். இதனால் கலக்கமுற்ற வேதியர்கள் வேதப்பிரியனின் புதல்வர்கள் நால்வரும் சிவபூஜை செய்து வரும் இடத்தை அடைந்து அவர்களிடம் முறையிட்டனர்.

"பகவானிடம் இடைவிடாது பக்தி பூண்டு அவரது அருட்கடாக்ஷத்துக்குப் பாத்திரராயிருக்கும் பெரியோர்களே, நீங்கள் தான் எங்களை ரக்ஷிக்க வேண்டும். தூஷணன் எங்களைத் துன்புறுத்தி வருகிறான். அவனுக்குப் பயந்து நித்திய பூஜைகளைக்கூடச் செய்ய முடியாமல் தவிக்கிறோம். அவன் அழிவுக்கு ஒரு வழி செய்யவேண்டும்" என்று வேண்டினர்.

"பேரன்புடையவர்களே, நாங்களும் உங்களைப் போன்று மானிடர்களே. அரக்கனை அழிக்கும் சக்தி எங்களுக்குக் கிடையாது. நம் அனைவரையும் காத்து ரக்ஷிக்கும் சர்வேச்வரன் இருக்கிறார். அவர் மீது பாரத்தைப் போட்டு விட்டு நாம் நமக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்து வருவோம். நம்மை ரக்ஷிப்பது அவர் பொறுப்பல்லவா?" என்றனர் நால்வரும்.

பின்னர் அவர்களையும் தங்களோடு சேர்த்துக் கொண்டு பூஜையில் ஈடுபட்டனர்.

தூஷணன் மந்திரிகளுடன் அட்டகாசம் செய்து கொண்டு அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டு பட்டணமே நடுங்கும்போது அங்கே கொஞ்சமும் பயமின்றி அவர்கள் சிவ பூஜையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டதும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. இடிபோன்ற முழக்கத்தோடு அவர்களை நெருங்கி, "என்ன காரியம் செய்கிறீர்கள்? இம்மாதிரி பூஜைகள் எனக்குப் பிடிக்காதென்றும் இவற்றைச் செய்யக்கூடாதென்றும் நான் கட்டளையிட்டதை நீங்கள் கேட்கவில்லையா?" என்று சீறினான்.

அரக்கனைக் கண்ட மாத்திரத்திலயே எல்லாரும் நடுங்கினர். ஆனால், வேதப் பிரியனின் புதல்வர் நால்வரும், யாரும் பயப்பட வேண்டாமென்றும், பகவானைத் தியானித்துப் பூஜையில் ஈடுபடுமாறும் சொல்லியிருந்தனர். ஆகவே, அரக்கனின் கோபத்தை அவர்கள் லட்சியம் செய்யவில்லை.

தூஷணன் குதியாய்க் குதித்தான். "அவர்கள் எல்லோரையும் நசுக்கிக் கொல்லுங்கள்" என்று தன்னுடன் வந்திருந்த மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் பயங்கரமாக கொக்கரித்துக் கொண்டு சிவபூஜையில் நுழைந்தனர்.

சிவலிங்கங்களைச் செய்ய மண் தோண்டி எடுக்கப்பட்ட இடம் நீர் நிரம்பிக் குளமாக இருந்தது. அதிலிருந்து 'கிடுகிடு'க்கும் சப்தத்தோடு மகாகாளேசர் தோன்றி அரக்கனைப் பார்த்து ஹுங்காரம் செய்தார். அந்த க்ஷணமே அரக்கனும் அவனைச் சேர்ந்தவர்களும் அழிந்தனர்.

அவந்தி பட்டணத்து மக்கள் பெரு மகிழ்ச்சியோடு வந்து பகவானைப் பலவிதங்களிலும் துதித்துக் கொண்டாடினர். தம்மைப் பூஜித்து வந்த அவர்களுடைய மனோபீஷ்டங்கள் நிறைவேற அருளி மறைந்தார் சிவபெருமான்.

******

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆ. ஓங்கார லிங்கம்

ஒரு சமயம் நாரதர் திவ்ய க்ஷேத்திரங்கள் பலவற்றையும் தரிசித்துக் கொண்டு வரும்போது கோகர்னேசுவரரை வழிபட்டு விந்தியகிரியை அடைந்தார். நாரதரைக் கண்டதும் விந்திய மன்னன் அவரை வரவேற்று உபசரித்து, தான் எவ்விதக் குறையுமின்றி இருப்பதாகப் பெருமையோடு பேசினான். அவன் மனத்தில் கர்வம் குடிகொண்டிருப்பதை உணர்ந்த நாரதர், அதை எவ்விதம் குறைப்பது என்று பலவாறாக நினைத்து பெருமூச்செறிந்தார்.

“என்ன சுவாமி ? ஏன் பெருமூச்சு விடுகிறீர்கள் ?” என்று கேட்டான் விந்திய மன்னன்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"விந்தியா, நான் என்ன சொல்வேன்? நீயோ ஒரு குறைவுமின்றி இருப்பதாகக் கூறுகிறாய். உன்னை விட மேரு மலை பெரிதாக இருப்பதாகவும், தேவர்கள் முதலானவர்கள் அதில் விருப்பமுடன் வசித்து வருகிறார்களாமே?" என்று கூறினார் நாரதர்.

நாரதர் விடைபெற்றுச் சென்றதும் அவர் கூறிய வார்த்தைகள் விந்திய மன்னனிடம் நன்கு வேலை செய்யத் தொடங்கின. மேருவையும்விட உயர்ந்த நிலையைத் தான் அடைய வேண்டும் என விரும்பினான் அவன்.

ஓங்கார ரூபமான யந்திரம் ஒன்று வரைந்து அதில் மண்ணால் செய்த சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து அதற்குப் பக்தியோடு பூஜை செய்து வந்தான்.

ஆறு மாதங்கள் இருந்த இடத்தைவிட்டு அசையாது சிவலிங்க பூஜை செய்தான்.

சர்வேச்வரன் அவனுடைய பக்திக்கு மெச்சி அவன் முன்பு தோன்றி "விந்தியா, நீ கோரும் வரம் யாது?" என்று வினவினார்.

"பிரபோ, எல்லோரையும்விட உயரமாக வளரும் சக்தியை எனக்கு அளிக்க வேண்டும்" என்று வேண்டினான் விந்தியன்.

ஈசன் சற்று நேரம் யோசித்தார். அவன் கேட்கும் வரத்தால் உலகில் உள்ளவருக்குத் துன்பமே விளையும் என்பதை உணர்ந்தார். இருப்பினும் அவன் பூஜை செய்ததால் அவன் கோரிய வரத்தைக் கொடுக்காமலிருக்கவும் கூடாது. ஆகவே அவன் விரும்பியபடி வரம் அளித்து, அதற்கு ஓர் கட்டுப்பாடும் வைத்தார்.

"விந்திய மன்னா! நீ கேட்டபடி வளரக்கூடிய சக்தியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உனக்கு அளித்தேன். அதனால் நீ மமதை கொள்வாயானால் என் அடியார் ஒருவரால் நீ சிறியதாக அடக்கப்படுவாய்" என்றார்.

அப்போது தேவர்கள் சிவபெருமானை வணங்கி, "பிரபோ, விந்தியனுக்கு அனுக்கிரகம் செய்த தாங்கள் இந்த தலத்திலேயே எழுந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். ஈசுவரன் அதற்குச் சம்மதித்து அங்கேயே எழுந்தருளினார்.

ஓங்கார யந்திரத்தில் சுயம்புலிங்கமாகவும், விந்தியன் பூஜித்த பார்த்திவ லிங்கத்தில் பகவான் ஓங்காரேசுவரர், அமரேசுவரர் என்ற பெயரில் விளங்கி வருகிறார். தேவர்கள் அவர்கள் இருவரையும் பூஜித்து அனேக வரங்களைப் பெற்று சென்றனர்.

19. பத்ரிகாச்ரமத்தில் கேதாரேசுவரர்

பிரம்ம தேவருடைய புத்திரர்களில் ஒருவர் ஸ்வாயம்புமனு என்பவர். அவருடைய பிள்ளை பிரியவிரதன். அவனுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தனர். பிரியவிரதன், தான் ஜீவித்திருக்கையிலேயே பிள்ளைகளுக்குப் பாகம் பிரித்துக் கொடுத்து விட வேண்டுமென்று விரும்பினார். மேருமலையை ரதத்திலேறி ஒரு முறை பிரதக்ஷிணம் செய்து ஏழு தீவுகளாகப் பிரித்தான். ஒவ்வொரு தீவையும் ஒவ்வொரு பிள்ளைக்குக் கொடுத்தான்.

மூத்த புதல்வனான ஆக்நீத்ரனுக்கு ஜம்பூத்வீபத்தைக் கொடுத்தார். அவன் வெகு காலம் புகழோடு ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு பின் அவன் மகன் நாபி அரசனானான். நாபிக்கு ரிஷபன் முதலான ஒன்பது குமாரர்கள் பிறந்தனர். ரிஷபனுக்கு பரதன் மற்றும் நூறு புத்திரர்கள் பிறந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபனும் அவன் சகோதரர்களுக்குப் பாகம் பிரித்துக் கொடுக்க ஜம்பூத்வீபத்தை ஒன்பது கண்டங்களாகப் பிரித்துக் கொடுத்தான். ரிஷபனுக்குப் பிறகு மூத்தவனான பரதன் அரசன் ஆனான். அவன் ஆண்ட கண்டமே பரதகண்டம் ஆகும். எல்லாக் கண்டங்களிலும் சிறந்து விளங்கும் பரதக் கண்டத்தில் பத்ரிகாச்ரமத்தில் விஷ்ணு, லோக சம்ரக்ஷணைக்காக நர நாராயணர்களாக வந்து அவதரித்தார்.

நர நாராயணர் இருவரும் கைலாசநாதனின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்காக மண்ணால் சிவலிங்கம் அமைத்து பக்தியோடு பூஜை செய்து வந்தனர். பகவானும் அவர்கள் பூஜையில் திருப்தி கொண்டு அவர்களுக்குத் தரிசனம் தந்து, "என்ன வரம் வேண்டும்?" எனக் கேட்டார்.

"பிரபோ? எங்களுக்குத் தரிசனம் கொடுத்ததன் நினைவாகத் தாங்கள் இங்கே எழுந்தருள வேண்டும்" என்று வேண்டினர் அவர்கள். ஈசனும் மகிழ்வோடு அவர்கள் விருப்பத்தைக் கேட்டுக் கேதாரேசுவரர் என்ற பெயரோடு அங்கே எழுந்தருளினார்.

கேதாரேசுவரரைப் பூஜிப்பவர்கள் சகல துக்கங்களும் நீங்கப் பெற்று நிம்மதி அடைவார்கள். பத்ரிகாச்ரமம் சென்று கேதாரேசுவரரைத் தரிசிப்பவனுக்கு மறு பிறப்புக் கிடையாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

௨௦. அ. பீமனை சம்கரித்த சங்கரர்

பீமன் என்ற பெயரை உடைய அசுரன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள், தன் தாய் கற்கடியைப் பார்த்து, "அம்மா, என் தந்தை யார்? அவர் எங்கிருக்கிறார்? அவரை நான் பார்த்தது கூடக் கிடையாதே. நீ மட்டும் தனித்து இருக்கக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

அவளும், "குழந்தாய், என் முதல் கணவர் விராடன். அவர் இராமனால் கொல்லப்பட்டார். என் தந்தை கற்கடனும், தாய் புஷ்கனி இருவரும், தவம் செய்து கொண்டிருந்த மகரிஷி ஒருவரை சாப்பிட எண்ணம் கொண்டு நெருங்குகையில், யோகாக்னியில் தகிக்கப்பட்டு இறந்து போனார்கள். அதன்பிறகு நான் மட்டும் தனித்து திரிந்து வந்தேன். அப்போது தான் உன் தந்தை என்னைக் கண்டு மோகித்தார். அவர் பெயர் கும்பகர்ணன். இலங்காதிபதி இராவணேசுவரனுக்குச் சகோதரனாவார். என்னை இங்கு விட்டுச் சென்ற பிறகு உன் தந்தை திரும்ப வரவேயில்லை. அயோத்தியைச் சேர்ந்த இராமன் என்னும் அரசன் உன் தகப்பனையும், இராவணேசுவரனையும் போரிலே கொன்று விட்டார்' என்றாள்.

தாயின் மூலம் விஷயங்களை அறிந்த போது பீமன் கடுமையான கோபம் கொண்டான். 'தன் தந்தையைக் கொன்ற இராமனைத் தேடிக் கொல்லாது விடுவதில்லை' என்ற சங்கல்பத்துடன் பிரம்மதேவனைக் குறித்துத் தவம் மேற் கொண்டான். ஒற்றைக் காலில் நின்று அன்னபானாதிகளை ஒழித்து ஏகாக்கிர சிந்தையுடன் அவன் மேற்கொண்ட தவத்தைக் கண்டு தேவர்கள் நடுங்கினர். அவனிடமிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிளம்பிய யோகாக்கினியால் தேவலோகமே தகிக்க ஆரம்பித்தது. அவன் கோரும் வரத்தை அளித்துத் தங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யுமாறு தேவர்கள் பிரம்மதேவனை வேண்டினர்.

பிரம்மதேவன், அசுரன் முன்பு தோன்றி அவன் விரும்பும் வரம் யாதெனக் கேட்டார்.

"பிரபோ, எனக்கு அளவிட முடியாத பலத்தை அளிக்க வேண்டும்'' என்று கோரினான் பீமன்.

பிரம்மதேவன் அவன் கோரியதைக் கொடுத்து மறைந்தார்.

வரத்தின் காரணமாக அபரிமிதமான பலத்தை அடைந்த பீமன் தாயிடம் வந்தான்.

"அம்மா! இனி என்னை எவராலும், ஜெயிக்க முடியாது. நம் குலத்தின் அழிவுக்குக் காரணமாக இருந்த தேவர்கள் எல்லோரையும் என்ன செய்கிறேன் பார்'' என்று சூளுரைத்துப் புறப்பட்டான்.

காலரூபத்தை அடைந்த பீமன், அந்நாட்டு அரசன் பிரிய தர்மனைப் பிடித்து சிறையிலடைத்து அவன் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். ஒவ்வொரு நாடாகச் சென்று அரசர்களை வதைத்தும் துன்புறுத்தியும் தனக்குப் பணியுமாறு செய்த அவன் கவனம் தேவர்கள் பக்கம் திரும்பியது.

அசுரனின் பராக்கிரமத்தின் முன்பு தேவர்களால் நிற்க முடியவில்லை. ஓடி ஒளிந்தார்கள். பீமன் சகல லோகங் களுக்கும் தானே அரசனாகத் திகழ்ந்தான்.

அசுரனால் விரட்டப்பட்ட தேவர்கள் மகாகோச நதி தீரத்தில் ஒன்று கூடினார்கள். அசுரனின் கொடுமைகளில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்து தப்ப, சிவபெருமானைச் சரண் அடைவதே வழி என்பதை உணர்ந்து சிவபூஜை செய்யத் தொடங்கினர். அவர்கள் பூஜையால் உள்ளம் களிப்புற்று கைலாசநாதன் தரிசனம் கொடுத்தார்.

“மகேச்வரா! பீமனால் நாங்கள் அளவில்லா துயரங்களை அனுபவிக்கிறோம். அவனிடமிருந்து எங்களை ரக்ஷிக்க வேண்டும்” என்று பிரார்த்தித்தார்கள்.

“தேவர்களே, கவலை வேண்டாம். அவன் அழிவு நெருங்கி கொண்டிருக்கிறது. விரைவில் அவன் சம்ஹரிக்கப்படுவான்” என்று அனுக்கிரகித்து மறைந்தார்.

இது இப்படியிருக்க, பீமனால் சிறையிலடைக்கப்பட்டிருந் தாலும் பரமேசுவரனிடம் கொண்டிருந்த பக்தியிலிருந்து சிறிதும் மாறவில்லை பிரியதர்மன். சிறையிலேயே மண்ணால் சிவலிங்கம் அமைத்துத் தன் மனைவி தக்ஷிணையுடன் பூஜை செய்து வந்தான். தான் நம்பியிருக்கும் ஈசன், எப்படியும் தன்னைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையை அவன் இழக்கவில்லை.

பிரியதர்மன் சிவபூஜை செய்து வருவதைப் பார்த்த காவலர் சிலர், ஓடிச் சென்று பீமனிடம் அந்த விஷயத்தைத் தெரிவித்தனர். பீமனின் கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்துவிட்டன. உடைவாளை உருவிக் கொண்டு சிறைச் சாலைக்கு ஓடிவந்தான்.

பிரியதர்மனும் அவன் மனைவியும் பக்தியோடு சிவபூஜையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டதும் அவன் ஆத்திரம் பன்மடங்காகி விட்டது.

“அடே! என்ன காரியம் செய்கிறாய்?” என்று சீறியபடி அரசனை நெருங்கினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரியதர்மன் கொஞ்சமும் தைரியத்தை இழக்காமல் "சர்வலோக சரண்யனான பரமேச்வரனை ஆராதித்து வருகிறேன்" என்றான்.

அதைக் கேட்டுக் 'கலகல' வென்று நகைத்த அசுரன் "அடே, என்னை விட பலசாலியா அவன்?" என்று ஏளனம் செய்தான்.

"அதில் என்ன சந்தேகம் இருக்கிறது? ஈசுவரனை விட மேலான தெய்வம் இல்லை. உன் செருக்கை விட்டு அவரைப் பணிந்து அவருடைய பக்தர்களுக்கு இடர் செய்வதை நிறுத்து. இல்லையேல் உன்னையே அழித்துவிடுவார்" என்றான் பிரியதர்மன்.

"என்னையும் விட மேலானவன் யாரும் இல்லை அற்பப் பதரே, அந்த லிங்கத்தைத் தூர எறிந்து விடு" என்றான் பீமன்.

அரசனோ அவன் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாது பகவத் தியானத்தில் இருந்தான்.

"அடே, நான் சொல்லுவதைக் கேட்காது அலட்சியம் செய்கிறாயா?" ஏன்று கத்தினான் அசுரன்.

அப்போதும் பிரியதர்மன் அசையவில்லை. "பிரபோ, உன்னையே நான் நம்பியிருக்கிறேன். நீதான் என்னை ரக்ஷிக்க வேண்டும்" என்று கண்மூடிப் பிரார்த்தித்தான்.

"உன் தெய்வம் என்ன செய்கிறது என்பதைத்தான் பார்ப்போமே!" என்று எள்ளி நகையாடிய அசுரன், உடைவாளை ஓங்கி அரசனை வெட்டப் போனான்.

அப்போது கிடுகிடுக்கும் பயங்கர சப்தத்தோடு பரமேச்வரன், அரசன் பூஜித்து வந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டுத் தமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகபாசத்தை ஏவினார். இமைக்கும் நேரத்தில் அது அசுரனின் உடைவாளைத் தாக்கித் தவிடுபொடியாகும்படி செய்து விட்டது.

"அடே! என் பக்தனுக்குத் துன்பம் விளைவிக்க எண்ணினால் அழிந்து போவாய். ஓடிவிடு" என்றார் ஈசன்.

பீமனோ அண்டம் கிடுகிடுக்கக் கோரமாகச் சிரித்தபடி தன்னிடமிருந்த சூலாயுதத்தை ஏவினான். அதையும் பகவான் பொடிப் பொடியாக்கினார்.

உடனே அசுரன் மாயையால் அனேக அரக்கர்களைத் தோற்றுவித்து, பலவித அஸ்திரங்களால் பகவானைத் தாக்கினான். ஈசனும் கணங்களை வரவழைத்து அரக்கர்களை எரித்தார். அவர்கள் இருவரும் புரியும் யுத்தத்தைக் கண்டு அண்ட சராசரங்களும் கிடுகிடுத்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்த்தார் நாரதர். மெல்ல ஈசனை நெருங்கி, "பிரபோ, இதென்ன விளையாட்டு? அரக்கனை அழிக்க இத்தனை பெரிய யுத்தம் வேண்டுமா? உலகமே நடுங்குகிறது. விரைவில் அரக்கனை அழிக்க வேண்டும்" என்று வேண்டினார்.

ஈசன் பெரும் கோபத்தோடு ஹுங்காரம் செய்தார். அந்த க்ஷணமே அசுரனும் அவனால் தோற்றுவிக்கப்பட்ட வீரர்களும் நெருப்பில் மடியும் பூச்சிகளைப் போன்று அழிந்தனர். தேவர்கள் பூமாரி பெய்தனர். பகவானைப் பலவிதங்களிலும் தோத்தரித்தனர்.

கைலாசநாதன் அரசனையும் அவன் மனைவியையும் சிறையிலிருந்து விடுவித்து, மீண்டும் ராஜ்ஜியாபிஷேகம் செய்வித்து அனேக வரங்களை அருளி மறைந்தார். அவன் பூஜை செய்த சிவலிங்கத்திலேயே பகவான், பீமசங்கரர் என்னும் திருநாமத்தோடு என்றும் எழுந்தளியிருக்கிறார்.

20. ஆ. காசி க்ஷேத்திரம்

பரப்பிரம்மத்திலிருந்து உண்டான பிரகிருதியும், விஷ்ணுவும், 'தங்களைத் தோற்றுவித்தவர் யார்' என்பதையும், 'தாங்கள் செய்ய வேண்டிய காரியம் என்னவென்பதையும்' அறியாது குழம்பிய போது, 'தவம் செய்து சிருஷ்டியைத் தொடங்கு' என்றொரு அசரீரி கேட்டது. அவ்வாறே அவர்கள் தவம் செய்ய தீர்மானித்தனர். ஆனால் எந்த இடத்தில் அமர்ந்து தவம் செய்வது என குழம்பினர். மறுபடியும் அவர்களுக்கு அசரீரி கட்டளையிட்டது.

கோடி சூரியப் பிரகாசத்தோடும் பஞ்சக்குரோச விஸ்தீர்ணத்தோடும் கூடிய நகரம் ஒன்று பரமாத்மாவால் தோற்றுவிக்கப்பட்டு ஆகாயத்தில் உள்ளது என்றும் அங்கே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்று தவம் செய்யுமாறு அவர்களுக்கு அசரீரி தெரிவித்தது. அவர்களும் அங்கே தவம் செய்தனர். கடுமையான தவத்தினால் விஷ்ணுவின் உடல் இளைத்துப் போய் அவருடைய உடலிலிருந்து வியர்வைப் பெருகத் தொடங்கியது. அந்த நீர், பிரபஞ்சம் முழுவதும் வியாபித்தது.

விஷ்ணுவுக்கு ஒன்றும் புரியவில்லை. பகவானைத் தியானித்தார். அப்போது சிவபெருமானின் ஒரு காதிலிருந்து மணி ஒன்று அவர் முன்பு விழுந்தது. அந்த இடமே மணிகர்ணிகை என்ற பெயருடன் விளங்கத் தொடங்கியது. அதன் பின் விஷ்ணுவிடமிருந்து பிரம்மதேவன் தோன்ற, உலக சிருஷ்டி தொடங்கியது.

விஷ்ணுவின் வியர்வையினால் மூடப்பட்ட அந்த ஆகாய நகரம், ஈசனின் திரிசூலத்தால் தாங்கி நிறுத்தப்பட்டிருந்தது. விஷ்ணுவும், பிருகிருதியும் தங்கி தவம் செய்து அந்த நகரத்தைப் பூமத்தியிலே இறக்கினர். அந்த நகரமே காசி க்ஷேத்திரமாகும். கர்மங்களை நாசஞ் செய்வதால் அதற்குக் காசி என்று பெயர் விளங்கிற்று. இதர ஸ்தலங்களில் சாரூப்பிய முக்தி கிட்டும். இந்த க்ஷேத்திரத்திலோ சாயுஜ்யம் என்னும் முக்தி உண்டாகுமாம்.

காசியில் இறப்பவர்களுக்கு மறுபிறவி என்பதே இல்லை. இறப்பவர்களின் செவிகளிலே பகவானே தாரக மந்திரத்தை உபதேசித்து அவர்களுக்கு முக்தி அளிக்கிறார்.

காசி க்ஷேத்திரத்தின் பிரபாவம் எத்தனையோ உண்டு.

ஒரு சமயம் பரமசிவன் சஞ்சரித்துக்கொண்டு வரும்போது பிரம்மலோகத்தை அடைந்தார். பிரம்மதேவன் ஓடிவந்து பகவானை வரவேற்று அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜித்து உபசரித்தார். சிவபெருமானைப் பலவிதங்களிலும் ஸ்தோத்தரித்தார்.

பிரம்மதேவனுடைய ஐந்து திருமுகங்களில் நான்கு முகங்கள் மட்டுமே பகவானைப் புகழ்ந்து பாடின. ஐந்தாவது முகம் புகழ்வதற்கு மாறாகச் செருக்குடன் பகவானை நிந்தித்தது.

ஈசனின் உள்ளம் சிறிது வேதனை அடைந்தது. பிரம்ம தேவனின் புனிதத் தன்மையை அந்த ஐந்தாவது முகம் கெடுத்து விடுகிறதே என வருத்தப்பட்டார். அதை அனுமதித்தால் அது பிரம்மனுக்குத்தான் துன்பம் என்பதால், அவரை நெருங்கிக் கைவிரலால் அதைக் கிள்ளி எறிந்தார்.

கிள்ளப்பட்ட பிரம்மனின் ஐந்தாவது தலை, பகவானின் கைவிரலில் அப்படியே ஒட்டிக்கொண்டு விட்டது. பிரம்மஹத்தி தோஷம் அவரைப் பிடித்ததால் தலை, விரலை விட்டு அகலவில்லை.

பிரம்மதேவனுக்கு சரஸ்வதியின் சாபம் ஒன்று இருந்தது. அவளைச் சிருஷ்டித்தபோது அவளுடைய அபரிமிதமான அழகையும், அறிவையும் கண்டு அவளைத் தாமே அடைய எண்ணினார் பிரம்மதேவன். சரஸ்வதியைத் தம்மை மணக்கும்படி கூறியபோது அவள் சம்மதிக்கவில்லை.

“பிரபோ தாங்கள் கூறுவது விசித்திரமாக அல்லவா இருக்கிறது. தங்களால் சிருஷ்டிக்கப்பட்ட நான், தங்களுடைய மகள் அல்லவா. அப்படியிருக்கத் தங்களுக்கு எவ்வாறு தாரமாக முடியும்?” என்று மறுத்தாள்.

பிரம்மதேவன் அவளை வற்புறுத்தி மணந்து கொண்டு விட்டார். அப்போது அவள் “என்னை மகளே என்று அழைக்க வேண்டிய வாயால் மனைவியாக அழைத்த தோஷத்துக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னால் ஒரு சமயம் கைலாசநாதனால் தகுந்த சிக்ஷை பெறுவீர்கள்'' என்று சாபம் கொடுத்தாள். அதன் காரணமாகவே பிரம்மனின் ஐந்தாவது சிரம் சிவனை நிந்தித்ததும், அவரால் கிள்ளப்பட்டது.

பிரம்மஹத்தி தோஷம் நீங்க சிவபெருமான் பல க்ஷேத்திரங்களுக்கும் விஜயம் செய்தார். எங்குச் சென்றாலும் கைவிரலில் ஒட்டிக்கொண்டிருந்த பிரம்மதேவனின் சிரம் நீங்கவில்லை. கடைசியாக அவர் காசியை அடைந்தார். அங்கு சென்றவுடன் விரலில் ஒட்டிக் கொண்டிருந்த சிரம் விழுந்து விட்டது. பகவானுக்குச் சந்தோஷம் ஏற்பட்டது. அந்த ஸ்தலத்திலே நித்தியவாசம் கொண்டார். பிரம்மனின் சிரம் விழுந்த இடத்துக்குக் கபாலமோசனம் என்று பெயர் விளங்கி வருகிறது.

சகலமான பாபிகளும் காசியில் இறக்க நேர்ந்தால் அவர்கள் பாபங்கள் ஒழிந்து முக்தியை அடைவர். யாவருக்கும் முக்தி கொடுப்பதால் அரிமுக்தம் என்ற பெயரும் இந்நகருக்கு விளங்குகிறது. அதாவது தன்னிடத்தில் வருபவர்களைக் கைவிடாது முக்தியளித்து ரக்ஷிக்கிறது என்று பொருளாம். நைமிசாரண்யம், குருக்ஷேத்திரம், கங்காத்துவாரம், புஷ்கரம் ஆகிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால்தான் முக்தி கிடைக்கும். அந்த இடங்களில் இறந்தால் முக்தி கிட்டாது. பிரயாகையில் இறந்தால் முக்தி கிட்டுமென்றாலும், காசியில் பகவான் நித்தியவாசம் செய்து வருவதால் பிரயாகைக்கும் மேலான இடத்தைப் பெற்றுள்ளது.

காசி நகரம் க்ஷேத்திர மகிமை, தீர்த்த மகிமை, மூர்த்தி மகிமை ஆகிய மூன்றையும் உடையது. குபேரன் அந்த க்ஷேத்திரத்தில் பகவானை ஆராதித்து உயர் பதவியைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றான். விஷ்ணு, லக்ஷ்மி, பிரம்மதேவன் மற்றும் தேவர்களும் வியாசர் முதலான யோகிகளும் அங்கே பகவானைப் பூஜித்து அனுக்கிரகம் பெற்றுள்ளனர்.

காசி க்ஷேத்திரத்தில் கோப்பிரேக்ஷகம் என்றொரு இடம் இருக்கிறது. அங்குள்ள லிங்கம் கோப்பிரேக்ஷகேச்வரர் என்ற பெயரால் விளங்குகிறது. பிரம்மதேவனால் பிரதிஷ்டை செய்யப் பட்ட மூர்த்தியாகும் அது.

கபிலாஹ்ரதம் என்னுமிடத்திலும் சிவலிங்கம் ஒன்றுள்ளது. பிரம்மதேவன் அந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய முற்பட்டபோது பக்கத்திலிருந்த விஷ்ணு, அந்த லிங்கத்தை வாங்கி அவர் பிரதிஷ்டை செய்து பூஜை செய்தார். தான் பூஜிப்பதற்காக வைத்திருந்த லிங்கத்தை விஷ்ணு எடுத்து வழிபட்டு விட்டாரே என பிரம்மதேவனுக்கு வருத்தம். அதை உணர்ந்த விஷ்ணு, "நான்முகா, உன்னைவிட சிவனிடம் அதிகப் பிரீதி உடையவன் நான். அதனால் தான் நான் பூஜை செய்தேன். இருப்பினும் உன் பெயராலேயே இரண்யகர்பேசர் (பிரம்மனுக்கு இன்னொரு பெயர்) என்று இவர் விளங்கட்டும் " என்றார்.

பிரம்மதேவன் மகிழ்ச்சியடைந்தார். இருந்தாலும் அவருக்கு மனதில், தானே ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்து கொண்டே இருந்தது. உடனே செயல் படுத்தியும் விட்டார். மற்றொரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட ஆரம்பித்தார். அதிலும் பகவான் ஐக்கியம் கொண்ட தால் அவர் வீனேசுவரர் என்ற பெயரில் விளங்கலானார்.

இன்னும், புலியாக உருவெடுத்து வந்து தேவர்களைத் துன்புறுத்திய அரக்கனைச் சிவபெருமான் அழித்து வியாக்கிரேசுவரர் என்ற பெயருடன் ஓரிடத்தில் விளங்குகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பர்வதராஜன் பிரதிஷ்டை செய்த லிங்கத்துக்கு சைலேசுவர லிங்கம் என்று பெயர்.

வருணா, ஆசி என்னும் இரு நதிகளும் கலப்பதால் அந்த க்ஷேத்திரத்திற்கு வாரணாசி என்ற பெயரும் உண்டு. அந்தச் சங்கமத்தில் பிரம்மன் பிரதிஷ்டை செய்த சங்கமேசுவரர் இருக்கிறார். இன்னும் மத்தியமேசுவரர், ஜம்புகேசுவரர், கிருத்திவாகேசுவரர், விருத்தகாளேசுவரர், ஆகியோரும் அங்கே இருக்கின்றனர். சுக்கிரனால் பூஜிக்கப்பட்ட சுக்கிரேசுவரரும் இருக்கிறார்.

காசி க்ஷேத்திரத்தில் பாபம் செய்பவன் பிசாசு ரூபமே அடைவான். அந்த க்ஷேத்திரத்தில் வசித்து அங்கேயே உலக வாழ்வை நீத்தலானது சாதாரணமாகக் கிட்டக்கூடியது அன்று. முக்தித் தலங்கள் என்று கொண்டாடப்படும், ஏழு தலங்களில் ஆறு தலங்களான மதுரை, மாயை, காஞ்சி, அவந்தி, துவாரகை, அயோத்தி ஆகியவற்றைத் தரிசிப்பவனுக்கே மறு ஜன்மத்தில் காசியில் பிறக்கும் பாக்கியம் கிட்டும்.

அங்கே பகவான், விசுவநாதர் என்ற திருநாமத்தோடு பார்வதி சமேதராய் என்றும் அருளாட்சி செய்து வருகிறார்.

21. கோதாவரி பிரபாவம்

ஒரு சமயம் கௌதம முனிவர், தம் பத்தினி அகல்யையுடன் பிரம்மகிரியில் அகண்ட தவம் ஒன்று செய்தார். அப்போது பயங்கர வறட்சி ஏற்பட்டு உலக மக்கள் மிகவும் கஷ்டப் பட்டனர். குடிக்க நீர் கிடைக்காது அவர்கள் வருந்தினர்.

மக்கள் படும் துன்பத்தைக் கண்ட கௌதமர் அவர்களுக்கு உதவ வேண்டுமென்று வருண தேவனை ஜபித்தார். அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜபத்தால் மகிழ்ச்சி அடைந்த வருணன், அவர் முன்பு தோன்றி, "அவர் கோரும் வரம் என்ன"வென கேட்டான். முனிவர், மக்களுக்கு நன்மை உண்டாக மழை பொழிய வேண்டுமென்று வேண்டினார்.

"முனிசிரேஷ்டரே! பகவானின் ஆக்ஞைக்குட்பட்டே நான் நடந்து வருகிறேன். அவர் மழை பெய்யாதிருக்கும்படி சொல்லி யிருக்க, அவர் வார்த்தையை மீறி நடப்பது என்னால் முடியாத காரியம். வேறு ஏதாகிலும் கேளுங்கள்" என்றான்.

"வருணதேவா, உலக மக்களுக்கு நன்மை ஏற்படும் பொருட்டே பகவான் என் போன்ற முனிவர்களுக்கும் ஞானி களுக்கும் தவம் முதலான கர்மங்களை நியமித்திருக்கிறார். பிறர் படும் துன்பத்தைக் கண்டு நாங்கள் எவ்வாறு பொறுத்திருக்க முடியும்? கற்பக விருக்ஷமும் சத்ஜனங்களும் ஒன்றாகக் கருதக் கூடியவர்கள். பிறருக்கு ஏற்படும் துக்கத்தை நீக்க முயற்சிக்க வேண்டியது சத்ஜனங்கள் கடமையாகும். இப்பூவுலகம் முழுமையும் ஆதிசேஷன் ஒருவனால் மட்டுமே தாங்கப்பட்டு வருவதாக நினைக்க வேண்டாம். பிறர் துயரைத் துடைக்க முயற்சிக்கும் எத்தனையோ புண்ணியாத்மாக்களும் சேர்ந்தே தாங்குகின்றனர். ஆகவே, எனக்கு வேறு எதுவும் வேண்டாம். மக்களுக்குக் குடிக்க நீர் வேண்டும். என் பேரில் கருணை கொண்டால் எனக்கு அந்த உதவி செய்யலாம்" என்றார் முனிவர்.

கௌதமரின் வார்த்தைகளால் சந்தோஷமடைந்த வருணன், "முனிவரே,' உங்கள் விருப்பப்படியே நடக்கும். ஒரு குளம் வெட்டுங்கள். அதில் நீர் நிறைந்திருக்கும், எடுக்க எடுக்க நீர் வற்றாதிருக்கும். அக்குளம் சிறந்த புண்ணிய தீர்த்தமாக உங்கள் பெயரால் கௌதம தீர்த்தம் என்றே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளங்கி வரட்டும். அதன் கரையில் செய்யப்படும் சத்காரியங்களின் பலன் அனந்தமாகப் பெருகும்'' என்று அருளி மறைந்தான்.

கௌதம முனிவருக்கு வருணதேவன் அனுக்கிரகம் செய்த விஷயம் நாலா பக்கங்களிலும் பரவியது. அதைக் கேட்ட முனிவர்கள் மிகுந்த களிப்போடு கௌதம முனிவரின் ஆசிரமத்துக்கு வந்து கூடினர். அந்த ஆசிரமத்தில் செய்யப் படும் தவம் சிறந்த பலனை அளிக்கக்கூடும் என்றிருக்கும் போது அவர்கள் அந்த இடத்தைவிட்டு வேறு இடம் செல்வார்களா?

இது இப்படியிருக்க, ஒரு சமயம் கௌதமரின் சிஷ்யர்கள் நீர் கொண்டுவரத் தடாகத்துக்கு வந்தனர். அங்கே ரிஷி பத்தினிகள் பலர் கூடியிருந்தனர். அவர்கள் கௌதமரின் சிஷ்யர்களை நீர் எடுக்கவிடவில்லை. 'தங்கள் காரியங்கள் அனைத்தும் முடிந்து கரையேறிய பிறகே அவர்கள் நீர் எடுக்கலாம்' என்று தடுத்தனர். ஸ்திரீகளை எதிர்த்து நீர் எடுக்க விரும்பாத சிஷ்யர்கள், ஆசிரமம் திரும்பி அகல்யையிடம் நடந்ததைத் தெரிவித்தனர். அகல்யை, சிஷ்யர்களுடன் தடாகத்துக்கு வந்து, அந்த பெண்கள் செய்தது சரியல்ல என்று கடிந்து பேசி, சிஷ்யர்களை நீர் எடுத்துச் செல்லுமாறு செய்தாள்.

சிஷயர்களுக்கு அகல்யை பரிந்து கொண்டு பேசியது ரிஷி பத்தினிகளுக்கு பொறுக்கவில்லை. தங்கள் கணவன்மார் களிடம் அகல்யை வேண்டுமென்றே தங்களை நிந்தித்துப் பேசினாள் என்றும், குளத்து நீரை அவள் எடுத்த பின்னரே மற்றவர் உபயோகிக்கலாமென்று கண்டித்தாள் என்றும் சொன்னார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகாயோகீஸ்வரரான கௌதமரின் பத்தினியான அகல்யை ஒருபோதும் அவ்வாறு நடந்து கொள்ளமாட்டாள் என்று முனிவர்கள் எண்ணினர். மேலும் அனைவரின் உபயோகத்துக் காகத்தானே கௌதமர் வருணனை தியானித்து நீர் கிடைக்கப் பெற்றார்? ஆகவே, அவர்கள் அந்தக் குற்றச்சாட்டைக் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை.

இது முனி பத்தினிகளுக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டி விட்டது. எப்படியாவது ஒரு விரோதத்தை உண்டாக்கி விடுவது என்று சங்கல்பித்துக் கொண்டார்கள். தினமும் கௌதமரின் சிஷ்யர்கள் வந்ததும் அவர்களைப் பரிகாசப் படுத்தி நீரை எடுக்க விடாது அனுப்பி வந்தனர். சிஷ்யர்களும் ஒவ்வொரு நாளும் ஆசிரமம் திரும்பி அகல்யையை அழைத்து வந்தே நீர் கொண்டு சென்றனர். அவர்கள் செய்கை பெண்களின் குண நலன்களுக்கு ஏற்றதல்ல என்பதை எடுத்துச் சொல்லி அகல்யை கடிந்து கொள்வாள். முனி பத்தினிகளும் அன்றாடம் தங்கள் கணவர்களிடம் அகல்யையைப் பற்றி ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி வந்தனர்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். அதே போல முனி பத்தினிகளின் குற்றச்சாட்டைக் கேட்டுக் கேட்டு, ஒருவேளை அப்படியிருக்குமோ என்று சந்தேகிக்கத் தொடங்கினர். அதற்கேற்ப கௌதமரிடம் விரோத மனப்பான்மை கொண்டிருந்த ஓரிருவர் அந்தக் குற்றச்சாட்டுகளுக்குத் தூபம் போட்டனர்.

ஒருநாள் முனிவர்கள் அனைவரும் ஒன்று கூடி இப்பிரச்சினையைப் பற்றி விவாதித்தனர். 'தன்னால் ஏற்பட்ட குளத்தில் வேறு எவரும் நீரெடுக்கக் கூடாது என்று அகலிகை மூலம் மறைமுகமாக எதிர்ப்பு காட்டுகிறார் போலிருக்கிறது'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற முடிவுக்கு வந்தனர், முனிவர்கள். கௌதமரை அந்த ஆசிரமத்திலிருந்து எப்படியாவது விரட்டி விடுவதென்றும், அப்போதுதான் அவர்களால் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியுமென்றும் தீர்மானித்தனர்.

கௌதமரை விரட்டுவதென்றால் சாமானியமா? அவர்கள் விநாயகரை ஆராதித்தனர். அருகம்புற்களால் அவரை அர்ச்சித்து வழிபட்டனர். அவர்கள் பூஜைக்கு மகிழ்ந்து விநாயகரும் தரிசனம் கொடுத்தார்.

"விக்கினராஜா! கௌதமர் ஆசிரமத்தில் இருப்பது எங்களுக்குப் பலவிதங்களிலும் தடையாயிருக்கிறது. ஆகவே அவரை ஆசிரமத்திலிருந்து வெளியேற்ற வகை செய்ய வேண்டும்" என்று வேண்டினர் முனிவர்கள்.

"முனி சிரேஷ்டர்களே, என்ன காரியம் செய்தீர்கள்? உங்கள் கோரிக்கை நியாயமானது அல்ல. இதனால் உங்களுக்குத்தான் துன்பங்கள் நேரிடும். மகானுபாவரான கௌதமருக்கு இடையூறு செய்ய எண்ணினால் நீங்கள்தான் அபசாரம் செய்தவர்களாவீர்கள். வேறு ஏதாவது கேளுங்கள், தருகிறேன்" என்றார் விநாயகர்.

முனிவர்களோ பிடிவாதமாகத் தாங்கள் கேட்ட வரத்தைத் தான் கொடுக்க வேண்டுமென்றனர்.

"முனிவர்களே, நீங்கள் பெண்கள் வார்த்தையை உண்மையென்று எடுத்து கொண்டதால் இம்மாதிரி வரம் கேட்கிறீர்கள். கௌதமர் பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றே அத்தடாகத்தை உண்டாக்கினார்" என்றார் விநாயகர்.

அப்போதும் முனிவர்கள் தங்கள் பிடிவாதத்தை விட வில்லை. விநாயகர் யோசித்தார். நூறு சாதுக்களுக்கு நடுவே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு துஷ்டன் இருந்தால் அவனும் சாதுவாகிவிடுவான். அதே போன்று நூறு துஷ்டர்களுக்கிடையே ஒரு சாது இருப்பானாகில், சங்கதோஷத்தால் அவனும் துஷ்டனாகி விடுவான். அந்த நிலையில்தான் கௌதமர் இருக்கிறார். துஷ்டர்களாகிய முனிவர்களின் மத்தியில் அவர் இருந்தால் அவருடைய மகிமைக்கும் களங்கமேற்பட்டுவிடும். ஆகவே அவரை அங்கிருந்து வெளியேற்றுவது என்று எண்ணினார் விநாயகர்.

“முனிவர்களே! என்னைப் பூஜித்த பலனால் நீங்கள் கோரிய வரத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆனால் இதனால் கௌதமருக்கே கீர்த்தி பெருகும். விரைவிலேயே அவரை இங்கிருந்து வெளியேற்ற வகை செய்கிறேன்” என்று சொல்லி மறைந்தார் விநாயகர்.

அங்கிருந்து புறப்பட்ட விநாயகர் கௌதமரின் ஆசிரமத்தை அடைந்தார். ஒரு கிழப் பசுவைப் போல் உருவெடுத்து ஆசிரமத்தில் வளர்ந்திருந்த பயிர்களிடையே புகுந்து மேயத் தொடங்கினார்.

பயிர்களின் நடுவே பசு மேய்வதைக் கண்ட கௌதமர் அதை விரட்டியபடி ஒரு பிடி புல்லைப் பிடுங்கி அதன் மீது ஏறிந்தார். புல் உடலின் மீது பட்டதுதான் தாமதம். பசு கீழே விழுந்து கால்களை உதைத்துக் கொண்டு உயிரை விட்டு விட்டது.

பதறிப் போய் விட்டார் கௌதமர். கோஹத்தி தோஷம் சம்பவித்து விட்டதே என்று துடித்தார்.

அதைக் கண்ட முனிவர்களும் முனிபத்தினிகளும் அவரைச் சூழ்ந்து கொண்டு பலவாறாகக் குறை கூறத் தொடங்கினர். பெரும் பாவத்தை சம்பாதித்துவிட்டீர்கள். இனி இங்கு தங்கும் தகுதியை நீங்கள் இழந்துவிட்டீர்கள். அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கே தங்கும் வரை எந்த நற்காரியத்தையும் செய்யக் கூடாதென்றும் அப்படிச் செய்யப் புகுந்தால் பாவியிருக்கும் அந்த இடத்துக்கு பகவான் வரமாட்டார் என்றும் கூறினார்கள்.

முனிவர்களின் தூஷணைகளைக் கேட்டுக் கௌதமர் மிகவும் மனம் நொந்தார். அவர்கள் கூறுவதுபோல் தான் அங்கிருக்கக் கூடாதென்று எண்ணி அங்கிருந்து புறப்பட்டு ஒரு குரோச தூரம் சென்று அப்பால் தங்கினார்.

பதினைந்து நாட்கள் சென்றன. எந்த முனிவரும் முனி பத்தினியும் அவர்களைப் பார்ப்பது இல்லை; அவர்களோடு பேசுவதும் இல்லை. எதிர்ப்பட நேர்ந்தால் பெரும் பாவியைப் பார்ப்பது போல் முகத்தைத் துணியால் மூடிக் கொண்டு சென்றனர்.

கௌதமரின் உள்ளம் வேதனையால் துடித்தது. அம்முனிவர்களை அழைத்துத் தூரத்திலிருந்தபடியே வணங்கி, "பெரியோர்களே, நான் பாபி என்பதை மறுக்கவில்லை. ஆயினும் அதற்காக நீங்கள் எனக்கு அனுக்கிரகம் செய்யாது இருப்பது சரியா ? பெரியவர்கள் மூலமாகப் பிராயச்சித்தம் தெரிந்து கொண்டு செய்தால் தான் அதன் பலன் சித்திக்கும். ஆதலால் என் பாபத்தைப் போக்க ஏதேனும் மார்க்கம் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டார்.

அவர்கள் கௌதமரின் நிலையைக் கண்டு மகிழ்ச்சி கொண்டவர்களாய், "கௌதமரே! உமது பாபத்துக்குத் தகுந்த பிராயச்சித்தம் இருக்கிறது. இந்த உலகம் முழுமையும் நீர் செய்த பாபத்தைச் சொல்லிக் கொண்டு வலம் வரவேண்டும். பசிக்கும் போது "பயிரில் மேய்ந்த பசுவைக் கொன்று கோஹத்தி தோஷம் சம்பாதித்துக் கொண்ட பாவி, பிக்ஷைக்கு வந்திருக்கிறேன்" என்று சொல்லி ஏழு வீடுகளில் ஏழு கவளம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னம் வாங்கி உண்ண வேண்டும். பின்னர் இங்கு வந்து ஒரு மாசகாலம் சாந்திராயண விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அதாவது சந்திரனின் கலைகள் உயரும்போது தினமும் ஒரு கவளமாக ஆகாரத்தை அதிகமாக்கிக் கொண்டும் பின்னர் கலைகள் குறையும்போது குறைத்துக் கொண்டும் விரதம் இருக்க வேண்டும். அதன் பிறகு பிரம்மகிரியை நூற்றொரு முறை வலம் வரவேண்டும். அப்போது தான் நீங்கள் புனிதத் தன்மை பெறுவீர்கள். இல்லையேல் இன்னொரு முறை இருக்கிறது. பிரம்மகிரியைப் பதினொரு முறை வலம் வந்து சத்கும்பாபிஷேகம் செய்து கொண்டால் உங்கள் உடல் புனிதமாகும். பிறகு கங்கையை வரவழைத்துக் கோடி லிங்க அர்ச்சனை செய்தால் உங்கள் தோஷம் நீங்கும்'' என்றனர்.

கௌதமர் அவர்கள் வார்த்தைகளை விநயத்தோடு ஏற்று கிரிவலம் வந்து சத்கும்பாபிஷேகம் செய்து கொண்டார். அதன் பிறகு கோடி லிங்கார்ச்சனை செய்யத் தொடங்கினார். அகல்யையும் கணவரோடு சிவபூஜை செய்து வந்தாள். ஈசன் அவர்கள் பூஜையில் திருப்தி கொண்டவராய் பார்வதியோடு ரிஷப வாகனத்தில் எழுந்தருளினார்.

''பிரபோ, கைலாசபதே ! என்னைச் சூழ்ந்துள்ள கோஹத்தி தோஷத்திலிருந்து விடுபட கங்கையைத் தருவிக்க வேண்டும்'' என்று வேண்டினார் கௌதமர்.

''மகரிஷே, கங்கை வரவேண்டிய அவசியமே இல்லை, என்னை தரிசித்த மாத்திரத்திலேயே உம்மைப் பீடித்திருந்த தோஷங்கள் அனைத்தும் நீங்கிவிட்டன. இத்தோஷம் மற்ற முனிவர்களால் வஞ்சகமாக உம்மீது திணிக்கப்பட்டதாகும்'' என்று கூறிய ஈசன், முனிபத்தினிகள் அவதூறு சொன்னதி லிருந்து நடந்ததைத் தெரிவித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பிரபோ, அவர்களைக் குறைகூற வேண்டாம். அவர்கள் அவ்விதம் எனக்கொரு இடையூறு உண்டாக்கியதனால் அன்றோ தங்கள் தரிசனம் கிட்டப் பெற்றேன். ஒரு வழியில் அவர்கள் எனக்கு நன்மை செய்தவர்களே ஆவார்கள்" என்றார் கௌதமர்.

கௌதமரின் நல்லெண்ணத்தைப் போற்றிய சிவபெருமான் கங்கையை அழைத்தார். கங்கை ஒரு பெண்ணுரு எடுத்து அவர்கள் முன் வந்து நின்றாள்.

முனிவர் கங்கையை வலம் வந்து நமஸ்கரித்து, "தாயே, என் பாபங்களைப் போக்கி என்னைக் கிருதார்த்தராகச் செய்" என்று பிரார்த்தித்தார்.

முனிவரின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு ஈசன் கங்கைக்குச் கூற, கங்காதேவியும் அவ்வாறே முனிவரைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரிசுத்தமாக்கித் திரும்பிச் செல்ல முற்பட்டாள். சிவபெருமான் அவளை அழைத்து, வைவசுத மன்வந்தரத்தில் வரும் கலிகாலம் முடியும் வரை அங்கே இருந்து பக்தர்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வருமாறு தெரிவித்தார்.

"பிரபோ, நான் காசியில் இருக்க வேண்டியவளல்லவா? எவ்வாறு இங்கு தங்குவது?" என்று கேட்டாள் கங்கை.

"தேவி, நீ இங்கும் அங்கும் இரு இடங்களிலும் இருப்பாயாக. இங்கு நீராடுபவர்களுக்குக் கங்கையில் நீராடும் பலனை அளிப்பாயாக" என்று அருளினார் சிவபெருமான்.

"பிரபோ, தாங்களும் பார்வதி தேவியாருடன் இங்கு தங்குவதானால் நானும் இங்கிருக்கிறேன்" எனறாள் கங்கை.

சிவபெருமான் அதற்கு இணக்கம் தெரிவிக்கவே, கங்கா தேவி, கௌதமரின் விருப்பத்தை ஏற்று அங்கே எழுந்தருளிய தால் கோதாவரி என்ற பெயரோடு சாந்நித்தியம் கொண்டாள். பகவானும் பார்வதியோடு அந்தத் தீரத்தில் திரியம்பகேஸ்வர லிங்கம் என்ற பெயரோடு இருப்பிடம் கொண்டு தம்மைப் பூஜிக்கும் பக்தர்களின் கோரிக்கையை நிறைவேற்றி வருகிறார்.

பிரம்மகிரியிலிருக்கும் அத்தி மரத்திலிருந்து புறப்பட்ட கோதாவரி பிரவாகமெடுத்து ஓடினாள். அவளுக்குக் கௌதமி என்றொரு பெயரும் உண்டு. கௌதமருக்குப் பகவான் அருளிய செய்தி கேட்டு சகல புண்ணிய தீர்த்தங்களும் கோதாவரியில் வந்து நீராடி மேண்மை பெற்றன.

கோதாவரி தோன்றிய இடத்துக்குக் கங்காத்துவாரம் என்று பெயர். கௌதமர் தம் மனைவியோடு நீராடி கிருதார்த்தரானார்.

இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட ஆசிரமத்து முனிவர்களும் தாங்களும் கிருதார்த்தர்களாக விரும்பி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனைவியரோடு வந்தனர். அந்தத் துராத்மாக்கள் வருவதை அறிந்ததும் கோதாவரி கோபமுற்றாள். கௌதமருக்கு இடர் விளைவித்த அவர்கள் நீராடினால் தனக்குத்தான் தோஷம் சம்பவிக்குமென்று எண்ணி அவள் மறையத் தொடங்கினாள்.

அதைப் பார்த்த கௌதமர் பெரிதும் துக்கித்து, "தாயே, கோபமுற வேண்டாம். எனக்கு அளித்த பலனை அவர்களுக்கும் அளிக்க வேண்டும்" என்று வேண்டினார்.

"அவர்கள் துஷ்டர்கள். ஒரு தவறும் செய்யாத உம்மைத் துன்புறுத்திய துராத்மாக்கள்" என்றாள் கோதாவரி.

"தாயே, உன்னை மறுபடியும் வேண்டிக் கேட்கிறேன். அவர்கள் செய்த காரியத்தினால் அல்லவா உன்னையும் சர்வேச்வரனையும் தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. அவர்கள் அயோக்கியர்களாவே இருப்பினும் என் ஆசிரமத்தில் இருப்பவர்களாததால் என் பொருட்டு அவர்களை மன்னித்து அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

"மகிரிஷி! உங்கள் வேண்டுகோளை ஏற்பதானால் ஒரு நிபந்தனைக்கு அவர்கள் உட்பட வேண்டும். உங்களைப் பரிகாரம் செய்ய பிரம்மகிரியைப் பதினோரு முறை வலம் வரச் செய்தார்களல்லவா? அவர்களும் பதினோரு முறை பிரம்மகிரியை வலம் வந்த பின்னரே நீராடலாம்" என்றாள் கோதாவரி.

முனிவர்களும் முனிபத்தினிகளும் தங்கள் அபசாரத்தை நன்கு உணர்ந்து வருந்தி, பிரம்மகிரியைப் பதினோரு முறை வலம் வந்து கோதாவரியில் நீராடிப் புனிதமானார்கள். முனிவர்கள் நியமப்படி தர்ப்பையால் பவித்திரமணிந்து நீராடிய இடம் குசாவர்த்தம் எனப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீராமன் கோதாவரி நதியின் பெருமையை உணர்ந்து அதன் தீரத்தில் உள்ள பஞ்சவடியில் ஒரு மாத காலம் தங்கியிருந்தார்.

22. இராவணன் பெற்ற சாபம்

ஒரு சமயம் இராவணன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யத் தொடங்கினான். கைலாசநாதன் அவனுக்குப் பிரத்தியக்ஷமாகவில்லை. ஆகவே ஹிமாலயத்தின் தென் பக்கத்தில் ஒரு காட்டில் குண்டம் தோண்டி அக்கினி வளர்த்து சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து ஹோமம் செய்தான். அப்போதும் பகவான் அவனுக்கு தரிசனம் தரவில்லை.

இராவணன் தன்னுடைய தலைகளில் ஒவ்வொன்றாக அறுத்து ஹோம குண்டத்தில் இட்டு ஹோமம் செய்தான். ஒன்பது தலைகளும் அறுக்கப்பட்டு ஹோமாக்கினியில் இடப்பட்டு விட்டது. எஞ்சியிருந்த பத்தாவது தலையை அறுப்பதற்காக உடை வாளை ஓங்கிய போது சிவபெருமான் அங்கே தோன்றி அவன் கையைத் தடுத்தார்.

"இராவணா, என்ன வரம் வேண்டும் கேள்" என்றார்.

"சர்வேசுவரா, தாங்கள் என் மீது கருணை உள்ளவரா யிருப்பீராகில் சத்ருக்களால் கொல்ல முடியாத பலத்தைக் கொடுப்பதோடு, வெட்டுண்ட தான் ஒன்பது சிரங்களும் மீண்டும் தோன்ற அருள் வேண்டும்" என்று வேண்டினான்.

சிவபெருமானும் அவ்வாறே அருளி மறைந்தார். இராவணன் மகிழ்ச்சியோடு தன் பட்டணம் திரும்பினான்.

இராவணன் சிவபெருமானைத் திருப்தி செய்து வரம் பெற்றதைக் கேள்விப்பட்ட முனிவர்கள் மிகவும் துக்கித்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனால் தங்களுக்கு என்னென்ன துன்பங்கள் நேருமோ என வருந்தினர்.

அவர்கள் துக்கித்துக் கொண்டிருக்கையில் அந்த வழியாக நாரதர் வந்தார். முனிவர்கள் மனக் கஷ்டத்திலிருப்பதைக் கண்டு, அவர்களை விசாரித்தார். முனிவர்கள் நடந்ததைத் தெரிவித்துத் தங்களுக்கு இனி போறாத காலம்தான் என்று வருந்தினர்.

"முனிவர்களே வருத்தப்படாதீர்கள். உங்கள் பயம் நீங்க நான் ஒரு வழி செய்கிறேன்" என்று ஆறுதல்கள் பலசொல்லி அவர்களைத் தேற்றிவிட்டு நாரதர் புறப்பட்டார்.

இராவணன் செல்லும் வழியில் ஓரிடத்தில் வீணையை மீட்டி இசைத்துக் கொண்டிருந்தார் நாரதர். இராவணன் வருவதைக் கண்டதும் அவனை நெருங்கி, "இலங்கேசா! எங்கே போய்விட்டு வருகிறாய்! மிகவும் குதூகலத்தோடு காணப்படுகிறாயே" என்று கேட்டார்.

இராவணன் தான் சிவனைக் குறித்துத் தவம் செய்து வரம் பெற்றுச் செல்வதைத் தெரிவித்தான்.

"இராவணா, பகவானை எவ்வாறு மகிழ்வித்தாய்? எனக்குச் சொல்லேன்" என்று கேட்டார் நாரதர்.

"மகிரிஷி, இமயமலையில் கைலாசநாதனைக் குறித்துக் கடும் தவம் செய்தேன். ஈசன் பிரசன்னமாகவில்லை. அதன் பிறகு ஹோமகுண்டம் வளர்த்து அதில் என் சிரங்களை ஒவ்வொன்றாக அறுத்து அக்கினியிலிட்டு ஹோமம் செய்தேன். பகவான் சந்தோஷமடைந்து பிரத்திபக்ஷமானார்" என்றான் இராவணன்.

"ஓ, அப்படியா ?... என்றார் நாரதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“ஆம், மகரிஷி ஒன்பது தலைகளை அறுத்து அக்கினியிலிடும் வரை அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. பத்தாவது தலையை அறுக்கும் போது அவர் தோன்றி என் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார். கைலாசநாதனைக் கண்களால் தரிசித்து ஆனந்தம் கொண்டேன். சத்ருக்களால் ஜெயிக்க முடியாத பலத்தையும், வெட்டுண்ட சிரங்கள் மீண்டும் முளைக்கவும் வரம் பெற்றேன். எனக்குக் காட்சி தந்த கோலத்திலே என்றும் விளங்கவேண்டும் என்று வேண்டினேன். அவரும் வைத்தியநாதேசுவரர் என்ற பெயரோடு விளங்குவ தாக அருளினார்” என்றான் இராவணன் பெருமையோடு.

நாரதரின் முகம் வாடியது “இராவணா, கைலாசநாதனை நம்புவது சரியல்ல, அவர் உனக்கு மனப்பூர்வமாக வரங்களைக் கொடுத்திருக்கிறாரா என்று பரீக்ஷை செய்து பார்க்க வேண்டாமா ? நான் ஒன்று சொல்கிறேன். சிவபெருமான் இடம் கொண்டிருக்கும் கையிலயங்கிரியை உன் இருபது கைகளாலும் பெயர்த்து எடு. எவ்வித சிரமுமின்றி நீ அதைப் பெயர்த்துத் தூக்கிவிட்டாயானால் கைலாசநாதனின் அருள்படி அபரிமிதமான பலத்தை நீ அடைந்திருக்கிறாய் என்பது விளங்கும்” என்றார்.

நாரதருடைய வார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் வஞ்சகத்தை உணராத இராவணன், வேகமாகக் கைலயங் கிரியை அடைந்தான். தன் பலம் முழுமையும் உபயோகித்து இருபது கரங்களால் மலையை அசைத்துப் பெயர்த்தான்.

அப்போது சிவபெருமான் கணங்களோடு கொலுவில் அமர்ந்திருந்தார். தேவர்கள் பகவானை தரிசிக்க வந்து கூடியிருந்தனர். இராவணன் மலையை அசைத்தபோது எங்கும் கிடுகிடுவென்று ஆடியது. ஆசனத்தில் அமர்ந்திருந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர்கள் உருண்டு விழுந்தனர். விஷ்ணு பிரம்மாதியர் நிலை தடுமாறி விழுந்தனர்.

பகவானின் பக்கத்தில் அமர்ந்திருந்த பார்வதி "பிரபோ, இதென்ன ? இராவணனுக்கு வரம் கொடுத்ததை நம்மிடமே பரிசோதிக்கிறானே" என்றாள்.

ஈசன் பெரும் கோபம் கொண்டார். "இராவணா, என்னிடமே உன் பலத்தைச் சோதிக்கத் துணிந்தாயா ? எந்தக் கரங்களால் கைலயங்கிரியைக் பெயர்க்க முயற்சித்தாயோ அந்தக் கரங்களை வெட்டி எறிந்து, உன்னைச் சம்கரிக்க ஒரு புருஷன் தோன்றுவான்" எனச் சாபமிட்டார். அதைக் கேட்ட நாரதர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

மலையை அசைத்த இராவணன் ஈசுவர சாபத்தைப் பற்றி அறியாது, பகவான் தனக்கு மனப்பூர்வமாகவே வரம் கொடுத் திருக்கிறார் என்று மகிழ்ச்சி அடைந்து கையிலயங் கிரியை அதன் இடத்தில் நிறுத்திவிட்டு இலங்காபுரி திரும்பினான்.

23. போகேசுவரரின் பக்தன்

தாருகை என்றொரு அரக்கி இருந்தாள். அவள் பார்வதியைப் பூஜை செய்து பெரும் வலிமை பெற்றிருந்தாள். அத்துடன் அவள் உபயோகத்துக்கென ஒரு வனமும், நினைத்த மாத்திரத்தில் அந்த வனத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு எடுத்துச் செல்லும் வல்லமையும் பெற்றிருந்தாள். அவளைக் கண்ட மாத்திரத்திலேயே மக்கள் நடுங்கினர். அரக்கி தன் மனம் போனபடி சஞ்சாரம் செய்து சாதுக்களைக் கொடுமைப்படுத்தினாள். அவள் கணவன் தாருகன் முனிவர்களையும் அந்தணர்களையும் மிரட்டி நித்திய கர்மாக்களைச் செய்யவிடாது தடுத்திருந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லோருமாக ஒன்று சேர்ந்து ஔர்வ முனிவரிடம் சென்று முறையிட்டனர். ஔர்வ முனிவர் மகாதேஜஸ்வி, சிவ பெருமானிடம் என்றும் குன்றாத பக்தி உடையவர். அனுதினமும் ஈசனை வழிபடத் தவறமாட்டார். அவரைச் சரண் அடைந்து அரக்கர்களின் கொடுமையிலிருந்து காப்பாற்றும்படி வேண்டினர்.

சாதுக்கள் படும் வேதனையைக் கண்டு முனிவர் கண்ணீர் வடித்தார்.

“பெரியோர்களே, கவலைப்பட வேண்டாம். அந்த அரக்கர்கள் இனி உங்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள். உங்களுக்கு எந்தத் தீங்கு இழைத்தாலும் அவர்கள் அப்போதே சாம்பலாகிவிடுவர்” என்று அபயம் கொடுத்து அரக்கர்களுக்குச் சாபமிட்டார். முனிவர்களும் மகிழ்ச்சியோடு ஔர்வ முனிவரின் ஆசிரமம் அருகிலேயே இருந்துகொண்டு நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றி சிவபூஜையில் ஈடுபட்டு வந்தனர்.

ஔர்வ முனிவரின் சாபத்தைக் கேட்டுத் தாருகை பெரிதும் விசனம் கொண்டாள். அவள் கொட்டம் அடங்க வேண்டியதாகி விட்டதே. ஆகவே அவள் அந்த இடத்தை விட்டுத் தன்னுடைய வனத்தோடு மேற்குக் கடற்கரையில் ஓரிடத்தில் போய்த் தங்கினாள். சமுத்திர மார்க்கமாக வரும் வியாபாரி களைப் பிடித்து வந்து அவர்களிடமிருந்து பொருள்களைக் கைப்பற்றிக் கொண்டு சிறையில் அடைத்து வைப்பாள்.

அவ்வாறு தாருகையால் சிறையில் அடைக்கப்பட்ட வைசியர்களில் சுப்பிரியன் என்பவனும் ஒருவன். அவன் மிகுந்த சிவபக்தன். சிறையில் தன்னோடு அடைக்கப்பட்டிருப்பவர் களையும் சிவபக்தர்களாக்கினான். அவர்கள் அரக்கியைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பற்றிய பயம் கொஞ்சமுமில்லாது சிறையிலேயே சிவலிங்கத்தை செய்து அதற்கு நாள்தோறும் பூஜை செய்து வந்தனர்.

பகவான் அவர்கள் பூஜையால் மனம் மகிழ்ந்து அவர்கள் முன்பு தோன்றினார்.

சுப்பிரியன் பகவானை மும்முறை வலம் வந்து அவர் பாதங்களில் பணிந்து பலவகையாகத் துதித்தான். பின்னர் "பிரபோ! இந்தச் சிறையிலிருந்து எங்களுக்கு எப்போதுதான் விடுதலையோ? தாங்கள் தான் அனுக்கிரகிக்க வேண்டும்" என்று வேண்டினான்.

சிவபெருமான் பாசுபதாஸ்திரத்தை அவனுக்கு அளித்து, "இந்த அஸ்திரம் உங்களை அரக்கர்களிடமிருந்து காப்பாற்றும்!" என்று அருளி மறைந்தார்.

சிறையினுள் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் காவலர்கள் அறிந்தனர். உடனே விஷயம் தாருகையிடம் தெரிவிக்கப்பட்டது. அனேக ஆயுதங்களை எடுத்துக் கொண்டு சிறைக்கு வந்தனர் அரக்கர்கள்.

"அடே மூடர்களா, எங்களுடைய இடத்திலிருந்து கொண்டே உங்களுக்கு இத்தனை துணிவா? உங்களை என்ன செய்கிறோம், பார்!" என்று சீறியபடி அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

சுப்பிரியனோ மற்றவர்களைப் பயப்படாதிருக்கும்படி சொல்லி, மனத்திலே கைலாசநாதனைத் தியானித்து அவரால் கொடுக்கப்பட்ட பாசுபதாஸ்திரத்தை அரக்கர்களை நோக்கி எய்தான். இமைக்கும் நேரத்தில் எதிர்த்து வந்த அரக்கர்கள் யாவரும் அழிந்து போனார்கள். சுப்பிரியன் தன்னோடு சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுதலை செய்வித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதற்குள் தாருகைக்குச் சிறைச்சாலையில் நடைபெற்ற அரக்கர்களின் அழிவு பற்றிய செய்தி கிடைத்தது. பரமசிவனால் அளிக்கப்பட்ட பாசுபதாஸ்திரத்தை வைத்திருக்கும் வரையில் சுப்பிரியனை ஒன்றும் செய்ய முடியாதென்பதை அறிந்தாள். அவனால் மேலும் அரக்கர் குலம் அழிந்து போவதைத் தடுக்க எண்ணம் கொண்டவளாய், பார்வதியைக் குறித்துத் தவம் மேற் கொண்டாள்.

தாருகை பார்வதியிடம் அளவில்லா பக்தி கொண்டிருந்த படியால் அவளுக்குத் தேவியின் தரிசனம் விரைவிலேயே கிட்டியது.

“மகேசுவரி தாயே, எங்கள் குலம் அழிந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. தாங்கள் தான் எங்கள் மீது கருணை கொண்டு அவ்வாறு ஏற்படாதிருக்க அனுக்கிரகிக்க வேண்டும்” என்று வேண்டினாள்.

“தாருகை வருத்தப்படாதே. என் நாதனிடம் தெரிவித்து ஆவன செய்கிறேன்” என்று உறுதிமொழி கொடுத்து மறைந்தாள் தேவி.

சிவபெருமான் அதை அறிந்தபோது மிகவும் சீற்றமடைந்தார்!

“தேவி என்ன காரியம் செய்துவிட்டாய்? அந்தத் துஷ்டர்களின் வம்சம் அழியாமலிருக்க வழி செய்வதாக வாக்குக் கொடுத்து விட்டாயே” என்றார்.

“நாதா! தாருகை என் பக்தை. அவள் கேட்கும் வரத்தைக் கொடுக்காமலிருக்க முடியாதே. தாங்கள் தான் இதற்கொரு வழி காணவேண்டும்” எனத் தெரிவித்தாள் பார்வதி.

“தேவி, உன் விருப்பப்படி நான் சம்மதிக்கிறேன். கலியுகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடிந்து கிருதயுகத்தின் ஆரம்பத்தில் நைஷதபட்டணத்தில் மகாசேனராஜன் மகனாக வீரசேனன் என்பவன் தோன்று வான். அவன் என்னிடம் அதிக பக்தி கொண்டு பன்னிரண்டு வருஷம் சிவபூஜை செய்து என் அருளால் சகல வல்லமையும் பெறுவான். மரத்தால் மீன் போன்ற படகு ஒன்று செய்து அதன் பக்கங்களில் ஈயத்தகடு அடித்து அதில் ஏறி சமுத்திரத்தைக் கடந்து தாருகையிருக்கும் வனத்தை அடைவான். அங்கே ஓர் தனியிடத்தில் கோவில் கொண்டுள்ள என்னை ஆராதித்துப் பாசுபதாஸ்திரத்தை அடைவான். அதைக் கொண்டு அவன் தாருகையை அழித்து வெற்றியோடு திரும்புவான். அதுவரை நான் அங்கே போகேச்வரராக எழுந்தருளியிருப்பேன்'' என்றார் சிவபெருமான்.

24. சேதுக்கரை இராமேசுவரர்

அயோத்தி மன்னரும், தந்தையுமான தசரத சக்கரவர்த்தியின் வார்த்தையைக் காப்பாற்ற ஸ்ரீராமன், தம்பி லக்ஷ்மணனுடனும், மனைவி சீதையுடனும் காட்டுக்கு வந்தார். பஞ்சவடிதீரத்தில் அவர்கள் இருந்து வரும் போது, இலங்காதிபதியான இராவணேசுவரன் சீதையைக் கவர்ந்து சென்று அசோக வனத்தில் சிறை வைத்தான்.

அரக்கனை அழித்து, மனைவியை மீட்டுவர ஸ்ரீராமன் வானர சேனைகளுடன் சேது சமுத்திரக் கரையை அடைந்தார். சமுத்திரத்தைக் கடப்பதற்கான மார்க்கத்தை அறிய எண்ணம் கொண்டவராய் வானரவீரர்களுடன் சில நாட்கள் அங்கே தங்கினார்.

ஒரு நாள் அவருக்குத் தாகமாக இருக்கவே ஜலம் கொண்டு வருமாறு அருகிலிருந்தவரைக் கேட்டார். வானர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரர்கள் ஓடிச் சென்று புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டு வந்து அவர் முன்பு வைத்தனர். சிவபூஜை செய்யாமல் அவர் எதுவும் உண்ணுவதில்லை. புண்ணிய தீர்த்தத்தைக் கண்டதும் சிவபூஜை செய்ய அவருக்கு எண்ணம் உண்டாயிற்று.

மண்ணைக் கொண்டு வந்து சிவலிங்கம் செய்து அதைப் பிரதிஷ்டை செய்தார். அபிஷேகம் முதலானவை செய்து மலர்களால் அர்ச்சித்தார்.

சர்வேச்வரன் அவருடைய பூஜைக்கு மகிழ்ந்து அவர் முன்பு தோன்றினார்.

"ஸ்ரீராமா, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்? நான் தருகிறேன்" என்றார்.

கைலாசநாதனைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்த ஸ்ரீராமன் "பிரபோ, இந்த சமுத்திரத்தைக் கடந்து செல்லும் சக்தியை எங்களுக்கு அளிக்க வேண்டும். இராவணன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கள் பக்தன். எனக்கு இழைத்த அபசாரத்துக்காக அவனைத் தண்டிக்க வந்துள்ளேன். என் விருப்பம் தடையேதுமின்றி நிறைவேற அனுக்கிரகம் செய்ய வேண்டும் இதுவே என் கோரிக்கை'' என்று பிரார்த்தித்தார்.

“ஸ்ரீராமா! இராவணன் என்னுடைய பக்தனாக இருந்தாலும் முன்பு ஒரு சமயம் கைலயங்கிரியைப் பெயர்த்து எடுத்து எனக்கு அபசாரம் செய்ததற்காக, உன்னால் அழிக்கப்பட ஒரு சாபம் கொடுத்துள்ளேன்'' என்று கூறிய ஈசன், ஸ்ரீராமன் கோரிய வரங்கள் நிறைவேற அனுக்கிரகம் செய்து அவரால் பூஜிக்கப்பட்ட லிங்கத்தில் இராமேசுவரர் என்ற பெயரோடு சாந்நித்தியம் கொண்டார்.

25. பக்தைக்கு அருளிய குச்மேசர்

தேவகிரி என்ற பர்வதத்துக்கு அருகே உள்ள அக்கிரகாரத்தில் பாரத்துவாஜ க்ஷேத்திரத்தில் பிறந்த சுதன்மன் என்னும் அந்தணன் இருந்தான். அவன் மனைவி சுதேகை. கற்பில் சிறந்தவளாகத் திகழ்ந்தாள். கணவன் மனைவி இருவருக்கும் தர்ம மார்க்கத்தில் அதிக ஈடுபாடு உண்டு. நித்திய கர்மாக்களை விடாது நடத்தி வந்தனர். அதிதிகளை உபசரிப்ப திலும், துன்பப்படுபவர்களுக்கு உதவுவதிலும் அவர்கள் பிரக்யாதி பெற்றிருந்தனர். தம்பதிகள் இருவரும் சிவபெரு மானிடம் பக்தி பூண்டு அவரைத் தினமும் வழிபட்டு வந்தனர்.

இத்தனை நற்குணங்களுடன் கூடியவர்களாக இருந்தாலும் புத்திரப்பேறு இல்லாது அவர்கள் வருந்தினர்.

சுதேகை அவ்விஷயத்தில் பெரிதும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். கணவனிடம் தன் குறையைப் பற்றி அடிக்கடி கூறி வருந்தினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பிரியே! எனக்கு மட்டும் இதில் வருத்தமில்லை என எண்ணுகிறாயா? நாம் செய்யாத தர்மம் இல்லை. ஏனோ, பகவான் நமக்கு இந்த ஜன்மத்தில் அந்தப் பாக்கியத்தை அளிக்கவில்லை. சம்சார மாயையில் சிக்கித் திரும்பத் திரும்ப பிறவிச்சுழலில் அகப்படுவதை விட்டு பகவானின் பாதார விந்தங்களில் மனத்தைச் செலுத்து" என்று அவளுக்குப் பலவாறு ஆறுதல் சொன்னான் சுதன்மன்.

ஒருநாள் தெரிந்தவர் ஒருவர் வீட்டுக்கு அவர்கள் இருவரும் சென்றிருந்தனர். அவ்வீட்டுப் பெண்களுடன் சுதேகை உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர்களில் ஒருத்தி அவளை மலடி என இடித்துக் கூறிவிட்டாள். அதனால் வேதனை அடைந்த சுதேகை வீடு திரும்பியதும் தன் நிலை பிறர் பரிகசிக்கும்படியாக இருக்கிறதெனச் சொல்லிக் கண்ணீர் விட்டாள்.

"சுதேகை, பிறர் எதைச் சொன்னாலும் அதை நாம் லட்சியம் செய்யக்கூடாது. அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக நாம் என்ன செய்யமுடியும்?" என்று கேட்டான் சுதன்மன்.

"சுவாமி, இப்படி ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத இந்த ஜென்மம் எதற்கு? அதைவிட நான் உயிரை விடுவதே மேல்" என்று விரக்தியோடு கூறினாள் சுதேகை.

அதைக் கேட்டு பதைபதைத்துவிட்ட சுதன்மன், "பிரியே, அம்மாதிரி ஏதும் அவசரப்பட்டு முடிவு தேடிக் கொண்டு விடாதே. இன்று பூஜை முடிந்ததும் பகவானையே கேட்போம்" என்று தேற்றினான்.

அன்றைய பூஜை முடிந்ததும் இருமலர்கள் கொண்ட பொட்டலங்களைப் பகவானின் பாதங்களில் சமர்ப்பித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விட்டுப் பக்தி சிரத்தையோடு வேண்டிக்கொண்டு ஒரு பொட்டலத்தை எடுத்தான். அதைப் பிரித்ததும், பிள்ளை இல்லை என்பதை அறிவிக்கும் மலரே இருப்பதைக் கண்டனர்.

சுதேகை மனம் ஒடிந்து விட்டாள். அதற்காக அவனை மறுமணம் செய்து கொள்ளுமாறு தூண்டினாள்.

"சுவாமி! நான்தான் பிள்ளையில்லாத மலடியாக இருக்கிறேன். அதற்காக உங்கள் வம்சம் சந்ததியற்று அழிந்து போக வேண்டுமா? நல்ல பெண்ணாக ஒருத்தியைப் பார்த்து மணம் செய்து கொள்ளுங்கள்" என்றாள்.

"சுதேகை, என்ன வார்த்தை கூறினாய்? உன்னை விட்டு இன்னொருத்தியுடன் இல்லறம் நடத்துவதா? இனி அந்த யோசனையை மறந்துவிடு" என்று கடிந்து கொண்டான் சுதன்மன்.

சுதேகையோ கணவனை விடவில்லை. திரும்பத் திரும்ப வற்புறுத்தினாள்.

"சுவாமி என்பொருட்டுத் தாங்கள் தோஷமுடையவராக இருக்க வேண்டாம். எப்படியும் மணம் செய்து கொண்டு சந்ததியை விருத்தி செய்யுங்கள். வேறு பெண்ணுடன் இல்லறம் நடத்த வேண்டுமே என வருந்த வேண்டாம். என் சகோதரன் குமாரத்தி குசுமை இருக்கிறாள். அவளை மணந்து கொள்ளுங்கள்" என்றாள்.

சதன்மன் சிரித்தான்.

"சுதேகை ஏதோ ஒரு வேகத்தில் நீ இப்படிப் பேசுகிறாய். நன்றாக யோசனை செய்தால் நீயே இதற்குச் சம்மதிக்க மாட்டாய். உன் வார்த்தைப்படி நான் வேறு பெண்ணை, ஏன் குசுமையையே, மணந்து கொள்ளுகிறேன் என்று வைத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள். நாளடைவில் அவளிடமே உனக்கு அசூயை உண்டாகும். அவளுக்குப் பிள்ளை பிறந்து விட்டாலோ, நான் உன்னைக் கவனிக்காது அவளிடமே சுற்றுகிறேன் என எண்ணுவாய். அதனால் நம் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்படும். இதெல்லாம் வேண்டாத வீண் வேலைகள்'' என்றான்.

“சுவாமி, நான் எல்லாவற்றையும் யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். வேறு பெண்ணாக இருந்தால் நீங்கள் சொல்வது போல் நடக்கலாம். குசுமை என் சகோதரன் மகள் அல்லவா! அவளிடம் நான் ஒருபோதும் விரோதம் பாராட்டமாட்டேன். என் விருப்பத்துக்குச் சம்மதியுங்கள்'' என்றாள் அவள்.

மனைவியின் வற்புறுத்தலுக்கு இணங்கி சுதன்மன் குசுமையை மணந்தான். வீட்டிற்குப் புதுமணப் பெண்ணை அழைத்து வந்தபோது சுதேகை அவளைப் பிரியத்தோடு வரவேற்றாள். அவளை மிகவும் அன்போடு நடத்தி வந்தாள். எல்லா வேலைகளையும் தானே செய்து வந்தாள்.

சுதன்மன் குசுமைக்கும் சிவபூஜையைப் போதித்து நாள் தவறாது பூஜை செய்து வருமாறு சொன்னான். குசுமை ஒவ்வொரு நாளும் புதிதாக மண் எடுத்து வந்து நூற்று ஒரு லிங்கங்களைச் செய்து அவற்றைப் பூஜை செய்வாள். பூஜை முடிந்ததும் லிங்கங்களை அருகிலுள்ள தடாகம் ஒன்றுக்கு எடுத்து சென்று அங்கே சேர்த்து வந்தாள்.

இப்படியாகத் தினமும் நடந்து வந்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் குசுமை பூஜித்து வந்த லிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து லக்ஷத்தை எட்டியது. அதனால் சந்தோஷமடைந்த சிவபெருமான் அவள் கர்ப்பமுறும்படி அனுக்கிரகித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குசுமை கருவுற்று அழகிய ஆண்மகவைப் பெற்றாள். அக்குழந்தைக்கு சுப்பிரியன் என்று பெயரிடப்பட்டது. சுதன்மன் அடைந்த மகிழ்ச்சியை விவரிக்க முடியாது. குழந்தையிடம் அதிகப் பிரியம் கொண்டு அவனைக் கொஞ்சினான்.

நாட்கள் செல்லச் செல்ல, சுதேகை உள்ளத்தில் மெல்ல பொறாமை தலை தூக்கியது. தனக்குக் கிட்டாத பாக்கியத்தைக் குசுமை பெற்றிருப்பதால் அவளிடமே கணவன் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதாகவும் அதனால் தன்னை அலட்சியப்படுத்தி வைத்திருப்பதாகவும் எண்ணத் தொடங்கினாள். அவள் உள்ளத்திலே தலைதூக்கிய பொறாமைத் தீ பரவுவதற்கு ஏற்ப சில சம்பவங்களும் நடந்தன. சுதன்மன் வீட்டுக்கு வந்தவர்கள் எல்லோரும் குழந்தையைக் கொண்டாடியதோடு குசுமையைப் பாராட்டிச் சென்றனர். அந்த வார்த்தைகளைக் கேட்கும்போது அவள் உள்ளம் வேதனையால் துடித்தது.

குமாரன் வளர்ந்து பெரியவனானான். அவனுக்குத் தகுந்த இடத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து மணம் செய்து வைத்தனர் பெற்றோர்கள்.

வீட்டிலே நிலவும் சந்தோஷம் சுதேகைக்குப் பொறுக்க வில்லை. தான் புத்திர பாக்கியம் இன்றி அனைவராலும் ஒதுக்கப்பட்டிருக்க, இளையாள் எல்லோராலும் கொண்டாடப் படுகிறாளே என்று உள்ளூர மருகினாள்.

மூத்தவள் மகிழ்ச்சியின்றி ஏதோ பறி கொடுத்தவளைப் போன்று துக்கத்தோடு நடமாடுவதைக் கண்ட குசுமை ஒரு நாள் அவளிடம் இதை பற்றி விசாரித்தாள்.

"அக்கா, உங்களுக்கு என்ன குற்ற இருக்கிறது ? ஏன் இவ்வாறு வருத்தப்பட்டு வருகிறீர்கள் ? வீட்டிலே மழலைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்வம் நடமாடவில்லையே என்று வருந்தி என்னை மணம் செய்து கொள்ளச் செய்தீர்கள். உங்கள் எண்ணமும் நிறைவேறியது. குமாரன் பெரியவனாகி அவனுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டோம். நமக்கு இனி ஒரு குறையும் இல்லை. சதா பகவானின் நினைவிலேயே லயித்திருப்பதுதான் நமக்குள்ள காரியம்'' என்று அறிவுறுத்தினாள் குசுமை.

சுதேகை அவளுக்குத் தகுந்த பதில் சொல்லவில்லை. ஏதோ சமாதானம் கூறி அனுப்பிவிட்டாள். பொறாமையால் நிறைந்த மனதோடு தன் அறிவையும் இழந்துவிட்டாள் என்றே சொல்லலாம். இளையாளின் குமாரன் உயிரோடு இருக்கும் வரை தனக்கு நிம்மதி ஏற்படாதென்று தீர்மானித்து அவனைக் கொன்றுவிடுவது என்று முடிவு செய்தாள்.

ஒரு நாள் இரவு யாரும் அறியாது மகனும் அவன் மனைவியும் படுத்துறங்கும் அறைக்குள் நுழைந்தாள் சுதேகை. இருவரும் அயர்ந்து நித்திரையிலிருந்தனர்.

சுதேகை மனத்திலே சிறிதும் இரக்கம் இல்லாதவளாய் குமாரனைப் பல துண்டுகளாகச் சேதித்து அந்தத் துண்டுகளை எடுத்துச் சென்று ஒருவரும் அறியாமல் குசுமை பூஜித்த லிங்கங்களைச் சேர்ப்பித்து வைத்திருக்கும் தடாகத்தில் போட்டுவிட்டு வந்துவிட்டாள்.

காலையில் கண் விழித்த மருமகள், பக்கத்திலே படுத்திருந்த கணவனைக் காணாது திடுக்கிட்டு எழுந்தாள். எங்கும் இரத்தம் தேங்கியிருப்பதையும் மாமிசத் துண்டுகள் சிதறிக் கிடப்பதையும் கண்ட அவள் பதைபதைத்து உள்ளே ஓடினாள்.

குசுமையும் சுதன்மனும் சிவபூஜையில் ஈடுபட்டிருந்தனர் பெரியவளான சுதேகை உள்ளே ஏதோ காரியத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈடுபட்டிருந்தாள். அவளிடம் ஓடிவந்த மருமகள், "அம்மா, உங்கள் குமாரரைக் காணவில்லை. படுக்கையில் ஒரே இரத்தமாகத் தேங்கிக் கிடக்கிறது. அங்கங்கே மாமிசத் துண்டுகள் இரைந்து கிடக்கின்றன" என்றாள்.

"ஐயையோ, என்ன நடந்து விட்டது ?... தெய்வமே !.." என்று பதைபதைத்து அழுவதுபோல் நடித்தாள் சுதேகை.

சிவபூஜை முடிந்து குசுமையும் சுதன்மனும் எழுந்துவர இரண்டு ஜாமங்கள் ஆயின. சுப்பிரியனுக்கு நேர்ந்த கதியைக் கேட்டபோது அவர்கள் இருவரும் மனமொடிந்து போய்விடவில்லை.

"சாக்ஷாத் கைலாசநாதனே நமக்குக் குழந்தையைக் கொடுத்தான். அவனைப் பாதுகாப்பது அவனுடைய பொறுப்பல்லவா ? குமாரனுக்கு என்ன துன்பம் நேர்ந்திருந்தாலும் அவனை எழுப்பித் தருவது பகவானுடைய பொறுப்பு. நம் வசத்தில் எதுவும் இலலை" என்றனர்.

வழக்கம்போல குசுமை தான் பூஜை செய்த லிங்கங்களை எடுத்துக் கொண்டு தடாகத்தில் சேர்ப்பித்து வரப்புறப்பட்டாள். லிங்கங்களைச் குளத்திலே சேர்ப்பித்து விட்டுத் திரும்பிய போது "அம்மா" என்று அழைக்கும் குரல் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினாள் குசுமை.

குளத்தின் நடுவிலிருந்து சுப்பரியன் எழுந்து வருவதைக் கண்டாள். குசுமைக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"அம்மா, நான் தான் சுப்பிரியன். இறந்து போன நான், உன் பூஜாபலத்தால் உயிர் பெற்று எழுந்து வருகிறேன். நானும் உன்னுடன் வீட்டுக்கு வருகிறேனம்மா !" என்று கூறினான் சுப்பிரியன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குசுமை ஆனந்தத்தால் உள்ளம் பூரிக்க ஓடிபோய் மகனை அணைத்துக் கொண்டாள். அப்போது தடாகத்திலே ஏதோ சப்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தனர். நீரிலிருந்து சிவபெருமான் தோன்றினார்.

"குசுமை, இத்தனை காலமாக என்னைப் பூஜித்து வந்த நீ ஒருபோதும் துயரமடைய நான் அனுமதிக்கமாட்டேன். சுதேகை உன்மீது பொறாமை கொண்டு, சுப்பிரியனைக் கொன்று உடலைத் துண்டுகளாகச் சேதித்துத் தடாகத்தில் எறிந்து விட்டாள். என் அனுக்கிரகத்தால் உன் மகன் பிழைத்து எழுந்தான். அந்தப் பாதகி தான் செய்த கொடுமைக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டும். சூலாயுதத்தால் அவள் உடலைத் துண்டு துண்டாக வெட்டி எறியப்போகிறேன்" என்றார்.

குசுமை மகனை அருகில் இழுத்து நிறுத்தி பகவானைப் பணியும்படி தெரிவித்தாள். பின் அவளும் நமஸ்கரித்து, "பிரபோ தங்கள் தரிசன பாக்கியத்தால் நாங்கள் தன்யர்களானோம். சுதேகை என் கணவரின் மூத்த மனைவி என்ற உறவோடு என் அத்தையுமாகிறாள். அவள் செய்த அபசாரங்களைத் தாங்கள் என் பொருட்டு மன்னித்து அவளுக்கும் அருள வேண்டும். அவள் செய்த அபசாரத்தால் தான் தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றோம். தங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அவள் மனத்தில் உள்ள களங்கம் நீங்கிவிடும்" என்று வேண்டினாள் குசுமை.

"குசுமை! உன் வார்த்தைகளைக் கேட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியுறுகிறேன். உனக்கு இன்னல்களை இழைத்த சுதேகைக்கு நல்லது செய்ய வேண்டுமென்று கோரும் உன் நல்ல எண்ணத்தைப் பாராட்டுகிறேன். இன்னும் ஏதாகிலும் விருப்பமிருந்தால் கேள்" என்றார் ஈசன்.

"பிரபோ, அப்படியானால் இன்னொரு வரம் கொடுங்கள். எனக்குத் தரிசனம் கொடுத்த கோலத்திலேயே இங்கு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள வேண்டும்'' என்றாள்.

பகவான் அவ்வாறே அருளி, அந்தத் தடாகத்தையே ஆலயமாகக் கொண்டு குஸ்மேசர் என்ற திருநாமத்தோடு அங்கே எழுந்தருளினார்.

குசுமை மிகுந்த ஆனந்தத்தோடு குமாரனை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினாள்.

சுப்பிரியனைக் கண்டதும் சுதேகையின் முகம் வெளிறி விட்டது. அவளைப் பயப்பட வேண்டாமென்று குசுமை தேற்றி, நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்தாள். அதைக் கேட்டதும் சுதன்மன் முதலானோர் வியப்படைந்து பகவானைத் தியானித்து அவரது அருட்கடாக்ஷத்தைப் போற்றினர். ஈசன் அவர்களுக்கும் தரிசனம் கொடுத்து சுகத்தோடு வாழ்ந்து வருமாறு அருளினார். சுதேகை, மனத்திலுள்ள பொறாமை நீங்கியவளாய் கணவன், குசுமை, சுப்பிரியன், மருமகள் ஆகியோருடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தாள்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. நரசிம்மருக்குத் தரிசனம் தந்த சரபர்

ஒரு சமயம் சனகாதி முனிவர்கள் மஹாவிஷ்ணுவைத் தரிசனம் செய்ய வைகுந்தம் வந்தனர். அப்போது வாயிற் காவலர்களான ஜய விஜயர் இருவரும் முனி குமாரர்களை உள்ளே செல்லக் கூடாதென தடுத்து நிறுத்தி விட்டனர். அதனால் கோபமுற்ற அவர்கள், காவலர் இருவரையும் வைகுந்தப் பதவியை இழந்து பூலோகத்திலே மானிடனாகப் பிறந்து துன்புறும்படி சபித்து விட்டனர்.

இதை அறிந்தபோது விஷ்ணு வருத்தமடைந்து ஜய விஜயர் இருவரையும் கடிந்துகொண்டு முனி குமாரர்களிடம் மன்னிப்புக் கோரும்படி கூறினார். அவரும் சனகாதி முனிவர்களை சாந்தப்படுத்தி அவர்கள் இருவரையும் மன்னித்து அருளுமாறு தெரிவித்தார்.

“பிரபோ, அவர்கள் செய்த குற்றத்துக்கான தண்டனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். இருப்பினும் ஒரு மாறுதல் செய்யலாம். உங்கள் பக்தர்களாக ஏழு ஜென்மமெடுத்துப் பின்னர் உங்களை வந்து அடையட்டும். அல்லது உங்களுக்கு விரோதியாக மூன்று ஜென்மங்கள் எடுத்து உமது கையால் அழிக்கப்பட்டு வைகுந்தத்தை அடையட்டும். இதில் எது விருப்பமோ அவ்வாறு செய்யலாம்” என்றனர் முனிவர்கள்.

ஏழு ஜென்மங்கள் விஷ்ணுவை விட்டுப் பிரிந்திருக்க விரும்பாத அவர்கள் இருவரும் மூன்று ஜென்மங்கள் அவருக்கு விரோதியாக இருந்து அவரால் அழிவு பெறுவதையே விரும்பினர். அவ்வாறே ஜய விஜயர் இருவரும் காசிபர் வமிசத்தில் ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்னும் பெயருடைய அசுரர்களாக வந்து பிறந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹிரண்யாக்ஷன் தேவர்களைத் துன்புறுத்த எண்ணி உலகத்தையே பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு சமுத்திரத்துக்கு அடியில் போய் ஒளிந்து கொண்டு விட்டான். தேவர்கள் நாராயணனிடம் சென்று முறையிட, அவரும் அரக்கனிடமிருந்து உலகத்தை மீட்க எண்ணி, பிரம்மதேவனின் நாசியிலிருந்து வராஹ உருவம் எடுத்து அவதரித்தார்.

வராஹ உருவம் எடுத்த நாராயணன் அரக்கனைத் தேடிக் கொண்டு சமுத்திர தீரத்துக்கு வந்தார். அங்கே நாரதர் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

நாரதர் விஷ்ணுவை அறிந்து கொண்டு அவரை துதித்தார். நாராயணன் அவரிடம், "நாரத மகரிஷி, ஹிரண்யாக்ஷனைத் தேடிக் கொண்டு வந்துள்ளேன். நான் பாதாளலோகம் சென்று திரும்பும் வரை இந்த நீரை பானம் செய்து வைத்திருக்க வேண்டும்" என்றார்.

"பிரபோ அப்படியே செய்கிறேன்" என்ற நாரதர் சமுத்திர நீர் அனைத்தையும் உள்ளங்கையிலே ஏந்தி ஆசமனம் செய்து வாயிலே நிறுத்திக் கொண்டார்.

சமுத்திர நீர் வற்றிவிடவே அடியினுள் பதுங்கியிருந்த அரக்கன் வெளிப்பட்டான். நாராயணன் அவனுடன் யுத்தம் செய்து அவனைக் கொன்று உலகத்தை மீட்டு வந்தார். நாரதரும் வாயிலே வைத்திருந்த நீரை வெளிப்படுத்த மீண்டும் சமுத்திரத்தில் நீர் நிறைந்தது.

தன்னுடைய சகோதரன், விஷ்ணுவால் அழிக்கப்பட்ட செய்தியைக் கேட்டபோது ஹிரண்யகசிபு சீற்றம் அடைந்தான். தேவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று பிரம்மதேவனைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



குறித்து அனேக ஆண்டுகள் தவம் செய்தான். அவனுடைய கடுந்தவத்தால் விண்ணுலகம் தகிக்கப்பட்டது. அதைக் கண்ட பிரம்மதேவன் அரக்கன் முன்பு தோன்றி, "ஹிரண்யகசிபு, உனக்கு வேண்டிய வரம் என்ன ? " என்று கேட்டார்.

"சுவாமி, உங்களால் உண்டாக்கப்பட்ட இவ்வுலகத்தில் எவராலும், எந்த வகை ஆயுதத்தாலும், இரவிலும், பகலிலும் சரி எனக்கு மரணம் சம்பவிக்கக் கூடாதென்று அனுக்கிரகிக்க வேண்டும்'' என்றான் ஹிரண்யன்.

பிரம்மதேவன் அவன் கோரிய வரத்தை அளித்தார்.

ஹிரண்யகசிபு தன்னுடைய பட்டணமான சோணித புரிக்குத் திரும்பியதும் உலகிலுள்ள அரக்கர்களை எல்லாம் ஒன்று கூட்டித் தன்னுடைய ஆக்கினையை ஏற்கச்செய்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன் சகோதரனைக் கொன்ற விஷ்ணுவிடம் துவேஷம் கொண்டு நாட்டிலே யாகம் முதலான காரியங்கள் எதையும் செய்யக் கூடாதென்று கட்டளை இட்டான். அவன் உத்தரவை மீறி நடப்பவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுக் கொடுமைக்கு உள்ளானார்கள்.

ஹிரண்யகசிபுவின் அழிவின் நிமித்தம், அவரின் மகனாக பிரகலாதன் அவதரித்தார்.

பிரகலாதன் பிறக்கும்போதே மகாவிஷ்ணுவிடம் பக்தி கொண்டவனாக விளங்கினான். சதா அவர் நினைவே அவன் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

ஐந்தாவது வயதில் பிரகலாதனை வித்தியாப்பியாசம் செய்ய உபாத்தியாயரிடம் அழைத்துச் சென்றான் ஹிரண்யகசிபு. அங்கே முதலில் ஹிரண்யாய நம: என்று ஹிரண்யனை வணங்கிவிட்டே பாடம் ஆரம்பிப்பது வழக்கம். அவ்வாறு ஹிரண்யன், கட்டளையிட்டு நடத்தச் செய்திருந்தான். பிரகலாதனோ 'ஓம் நமோ நாராயணாய' என்றே சொன்னான்.

பக்கத்திலிருந்த ஹிரண்யனின் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்தன. அதைக் கண்ட உபாத்தியாயர் நடு நடுங்கி "குழந்தே, உன் தகப்பனார்தான் சகல லோகங்களுக்கும் அதிபதியாகத் திகழ்கிறார். அவரை வணங்கிய பின்னர்தான் பாடம் தொடங்க வேண்டும். எங்கே, ஹிரண்யாய நம: என்று சொல்லு'' என்றார்.

"சகல புவனங்களுக்கும் நாராயணனல்லவா அதிபதி. அவனல்லவோ ஜகத்ரக்ஷகன். என் தந்தை வெறும் மானிடப் பிறவி தானே'' என்றான் பிரகலாதன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹிரண்யன் அபரிமித கோபத்தால் சீறினான்.

“பிரபோ, பதட்டப்படக் கூடாது. முதல் நாள் அல்லவா? குழந்தை ஏதோ தெரியாது உளறுகிறான். நான் சரிப்படுத்தி விடுகிறேன்” என்றார் உபாத்தியாயர்.

ஹிரண்யன் மகனை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றான்.

சில நாட்களுக்குப் பிறகு, ஹிரண்யன் ஒருநாள் தன் குமாரனை அழைத்துவரச் செய்தான். அவனை மகிழ்ச்சியோடு தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, “குமாரா பள்ளியில் என்ன கற்றுக் கொண்டாய்?” என்று கேட்டான்.

“அப்பா, ‘ஓம் நமோ நாராயணாய’ என்ற தாரக மந்திரத்தைத் தவிர கற்பதற்கு என்ன இருக்கிறது?” என்று பதில் அளித்தான் பிரகலாதன்.

கோபம் கொண்ட ஹிரண்யன், உபாத்தியாயரை வர வழைத்துக் கேட்க, அவரோ பிரகலாதன் நாராயணனிடம் கொண்டுள்ள ஈடுபாட்டை விட மறுக்கிறான் என்றும், மற்ற பிள்ளைகளையும் கெடுத்து குட்டிச் சுவராக்கி நாராயணனைக் குறித்துப் பஜனை செய்யச் சொல்லுகிறானென்றும் தெரிவித்தார். இனி பள்ளிக்கு அனுப்புவதில் பலனில்லை என்பதை அறிந்த ஹிரண்யன், மனைவி கயாதுவை அழைத்து, “கயாது, உன் மகனுக்கு நாராயண பித்து பிடித்திருக்கிறது. நீதான் அவனைச் சரியான வழிக்குக் கொண்டுவர வேண்டும்” என்று ஒப்படைத்தான்.

கயாது குமாரனை அழைத்துச் சென்று விஷ்ணுவைத் துவேஷிக்குமாறு பலவிதங்களிலும் எடுத்துச் சொன்னாள்.

“அம்மா, சர்வலோக ரக்ஷகனான நாராயணன் என் தந்தையினும் மேம்பட்டவரன்றோ? நாராயணனை துதித்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறவிப் பேற்றை ஒழித்து முக்தியைப் பெறலாமே. அதை விட்டு விட்டு நரஸ்துதி செய்யுமாறு சொல்லுகிறீர்கள்'' என்றான் பிரகலாதன்.

கயாது தன்னால் முடிந்தவரை குமாரனின் மனத்தை மாற்ற முயற்சித்தாள். அவள் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. வேறு வழியின்றிக் கணவனிடம் அழைத்து வந்து விட்டு விட்டாள்.

ஹிரண்யனின் கோபம் அளவுக்கு மீறிவிட்டது. மந்திரிகளை அழைத்தான்.

“அமைச்சர்களே, இவன் நம் குலத்தை அழிக்க வந்த நெருப்பு எனத் தோன்றுபடி நடந்து கொள்கிறான். இவனை அழைத்துச் சென்று நெருப்பிலே தள்ளியோ, கூரிய ஆயுதங்களால் உடலைத் துண்டித்தோ, நீரிலே தள்ளியோ, விஷம் கொடுத்தோ தண்டியுங்கள். இவனை விட்டு வைத்தால் நமக்குத்தான் அழிவு'' என்றான்.

மந்திரிகள் அரக்கனின் கட்டளைப்படி பிரகலாதனை இழுத்துச் சென்று ‘திகு திகு' வென்று எரியும் நெருப்பிலே தள்ளினார்கள். பிரகலாதனுக்கு நெருப்பு குளிர்ச்சியாக இருந்தது. ஒன்றுமே நடக்காததுபோல் எழுந்து வந்தான். மலையுச்சியிலிருந்து அவனை உருட்டித் தள்ளினர். கீழே விழுந்த பிரகலாதன் பஞ்சுப் பொதிமேல் விழுந்தவன் போல ஒரு காயமுமின்றி எழுந்து வந்தான். விஷத்தைக் கொடுத்துக் குடிக்க செய்தனர். அதுவோ அவனைக் கொல்வதற்குப் பதிலாக உடலுக்கு அபரிமித காந்தியைக் கொடுத்தது. பலவித ஆயுதங்களைக் கொண்டு அவனை அடித்தனர். அந்த அடிகள் புஷ்ப ஹாரங்களாக விழுந்தன. கல்லில் அவனையும் சேர்த்துக் கட்டி நீரிலே தள்ளினர். கல்லோ நீரில் மிதந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் என்ன செய்த போதிலும் பிரகலாதன் நாராயண ஸ்மரணத்தை விடவில்லை. மந்திரிகள் அவனை அழைத்து வந்து ஹிரண்யனிடம் விட்டு நடந்ததைத் தெரிவித்தனர்.

ஹிரண்யன் மறுபடியும் உபாத்தியாயரை அழைத்து மற்றப் பிள்ளைளோடு இவனையும் பேதம் பாராமல் அடித்து மிரட்டிப் பாடம் சொல்லிக் கொடுக்குமாறு ஒப்படைத்தான். உபாத்தியாயரும் பிரகலாதனை அழைத்துச் சென்று இதமான வார்த்தைகள் சொன்னார்.

"பிரகலாதா! உன் தந்தையோ மூவுலகங்களுக்கும் அதிபதி. அவரை மிஞ்சக் கூடியவர் மூவுலகங்களிலும் எவருமில்லை. அவருக்குப் பின், நீதான் நாட்டின் அரசனாகப் போகிறாய். அவருடைய மனத் திருப்திப்படி நடக்கக் கூடாதா? விஷ்ணு தியானத்தைவிட்டு நல்ல பிள்ளையாக விளங்கு" என்று சொன்னார்.

ஆனால் எந்தப் பலனும் இல்லை. பிரகலாதன் விஷ்ணு தியானத்தை விட்டுவிட மறுத்துவிட்டான். அது மட்டுமல்ல; தன்னுடன் படிக்கும் மற்ற மாணவர்களுக்கும் ஞான மார்க்கத்தை உபதேசிக்கத் தொடங்கினான். உலகில் உள்ள யாவுமே அழியக் கூடியதென்றும், அழியா வஸ்துவாகிய நாராயணனிடம் மனத்தைச் செலுத்த வேண்டுமென்றும் சொல்லித் தந்தான்.

உபாத்தியாயருக்கு இது தெரிந்துவிடவே, பிரகலாதனை அழைத்துக் கடிந்து கொண்டார்.

"அடே பிரகலாதா, தந்தையின் சொல்லைத் தட்டக் கூடாதென்று சாஸ்திரங்கள் சொல்லவில்லையா? ஏன் இப்படித் தவறி நடக்கிறாய்?" என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஐயா, நீர் சொல்வது வாஸ்தவமானதே. ஒருவன் அஞ்ஞானியாயிருக்கும் வரையில் தான் சரீர, சம்பந்தத்தால் உண்டான தந்தை அவனுக்குப் பிதாவாக இருப்பார். அவன் ஞானியாகிவிட்டாலோ அவனுக்குப் பிதா பரப்பிரம்மமல்லவா? என் ஞானத் தந்தையைத் தியானிப்பது எவ்வாறு தவறாகும்?" என்று கேட்டான் பிரகலாதன்.

உபாத்தியாயர் பார்த்தார். ஞானம் மிகுந்துவிட்ட பிரகலாதனை ஒருபோதும் திருத்த முடியாதென்பதை உணர்ந்தார். அவனை அழைத்து வந்து ஹிரண்யனிடமே விட்டுவிட்டார்.

ஹிரண்யன் மந்திரி குமாரர்களை அழைத்து அவர்களோடு பழகச் செய்து அவன் மனத்தை மாற்ற முயன்றான். அதுவும் பலன் தரவில்லை. கோபத்தால் உடல் துடிக்க அவனை அழைத்து, "பிரகலாதா, நான் இத்தனை செய்தும் நீ இன்னமும் உன் பிடிவாதத்தை விடாதிருக்கிறாய். உலகில் எந்தக் காரணங்களுக்காக நாராயணனை வேண்டுவார்களோ, அந்த உயர்ந்த பதவியை என்னால் நீ அடைந்திருக்கிறாய். சகலமான தேவர்களும் என் கட்டுப்பாட்டுக்குட்பட்டே நடக்கிறார்கள். அப்படியிருக்க, நீ கூறும் விஷ்ணு என்னைவிட எப்படி மேலானவனாகிவிட முடியும்? எங்கே அந்த விஷ்ணு? காட்டு" என்றான்.

"அப்பா, விஷ்ணு உன்னைவிட எத்தனையோ விதங்களில் மேலானவர். அவரோடு உன்னை ஒப்பிட முடியுமா? ஏற்றத் தாழ்வுகள் பல இருக்கின்றன. இரத்தினத்துக்கும் சோற்றுப் பருக்கைக்கும், குயிலுக்கும் தவளைக்கும், சந்தனத்துக்கும் சேற்றுக்கும், சூரியனுக்கும் மின்மினிப் பூச்சிக்கும் உள்ளதுபோல் உனக்கும் விஷ்ணுவுக்கும் ஏற்றத் தாழ்வுகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருக்கின்றன. நீயோ அகங்காரி; அழிவுடையவன்; பிறரைத் தூஷிப்பவன். அவரோ சாந்தசீலர், அழிவற்றவர், தன்னைத் தூஷிப்பவனையும் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டால் காப்பாற்றுபவர். இந்த அண்ட சராசரங்கள் முழுமையிலும் விஷ்ணு வியாபித்திருக்கிறார். தூணிலும் இருப்பார்; துரும்பிலுமிருப்பார்; உன்னிலும் இருக்கிறார்; என்னிடமும் இருக்கிறார்..."

பிரகலாதனின் பேச்சு, ஹிரண்யனின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது. மீசை படபடவென்று துடிக்க ஆயுதத்தால், "அடே, இந்தத் தூணிலிருப்பாரா உன் விஷ்ணு ?" என்று எதிர்புறமிருந்த தூணைக் காட்டினான்.

"அவர் எங்கும் இருக்கிறார் அப்பா. அவர் இல்லாத இடமே கிடையாது" என்றான் பிரகலாதன்.

"விஷ்ணு இங்கு இருப்பாராகில் வெளியே வரட்டும்" என்று கர்ஜித்தபடி தூணை ஆயுதத்தால் அடித்தான் ஹிரண்யன்".

'மடார்' என்ற சப்தத்துடன் தூண் இரண்டாகப் பிளந்தது. உள்ளிருந்து விஷ்ணு நரசிம்ம அவதாரத்தோடு வெளிப்பட்டார்.

இடுப்புக்குக் கீழே மனித உருவோடும், அதற்குமேல் சிங்கத்தின் உருவத்தோடும், பிடரிமயிர் நாற்புறமும் பறந்து சிலிர்க்க, கண்கள் அனல் பறக்க விஷ்ணு, நரசிம்மராக வெளிப்பட்டார். அவரைக் கண்டதும் ஹிரண்யன் ஆயுதத்தை ஓங்கிக் கொண்டு சண்டையிடச் சென்றான். அண்ட சராசரங்களும் கிடுகிடுக்கக் கர்ஜித்தவராய் விஷ்ணு அவனோடு ஒரு முகூர்த்தம் யுத்தம் செய்தார். மாலை மங்கி சந்தியா வேளை வந்தது. இரவுமின்றி பகலுமின்றி உள்ள அந்த நேரமே அவனை வதைப்பதற்கு ஏற்ற சமயம் என எண்ணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனை இரு கைகளாலும் வாரி எடுத்தார். உள்ளுமின்றி வெளியுமின்றி வாயிற்படியின் மேல் அமர்ந்து தொடையில் அவனைக் கிடத்தினார். ஆயுதங்களால் மரணம் கூடாதென அவன் வரம் கேட்டிருப்பதால் தமது கூரிய கைவிரல் நகங்களா லேயே அவன் உடலைக் கிழித்து ஒரு சொட்டு இரத்தம் கூட பூமியில் விழாது உறிஞ்சிவிட்டு உடலை மாலையாக அணிந்து கொண்டார்.

எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம் நிறைந்தது. தேவர்கள் பூமாரி பெய்தனர். அப்சரஸுகள் நிருத்தியம் செய்தனர். முனிவர்கள் வேதகோஷமிட்டனர்.

நரசிம்மராக அவதரித்த விஷ்ணு, ஹிரண்யனின் சம்ஹாரத்துக்குப் பின்னரும் சாந்தமடையவில்லை. அரக்கனின் சம்ஹாரத்துக்காக அவர் கொண்ட உக்கிரம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டோரை நடுங்க வைத்தது. எவரும் அவரை நெருங்கப் பயந்தனர். தேவர்கள் ஒன்றுகூடித் தேவேந்திரனை அவரருகில் செல்லுமாறு கோரினர். விஷ்ணு சாந்தமடைந்தால்தான் தானே உலகம் க்ஷேமமுறும்!

இந்திரனும் அவரை நெருங்கப் பயந்தான். லக்ஷ்மியைத் துதித்து அவளே தற்சமயம் விஷ்ணுவை நெருங்கக் கூடியவள் என்று கூறினான்.

லக்ஷ்மியும் பயந்தாள். இதுபோன்ற கோர ரூபத்தைத் தான் இதுவரைக் கண்டதில்லை எனத் தெரிவித்து பிரகலாதனையே அனுப்புமாறு சொல்லி விட்டாள்.

தேவர்கள் பிரகலாதனைத் துதிக்க, பிரகலாதன் அனேக விதங்களால் நாராயணனை ஸ்தோத்தரித்தான். நரசிம்மர் பிரகலாதனை வாரி எடுத்துத் தம்மடிமீது அமர்த்திக் கொண்டார்.

அப்போதும் அவருடைய உக்கிரத்தைத் தாங்க மாட்டாத வர்களாய்த் தேவர்கள் சிவபெருமானைப் பிரார்த்தித்தனர்.

''கையிலாசநாதா, ஹிரண்யனைச் சம்ஹரிக்கத் தோன்றிய விஷ்ணுவின் உக்கிரத்தன்மை கொஞ்சமும் குறையவில்லை. அதன் உஷ்ணத்தை எங்களால் தாங்க முடியவில்லை. முன்பொருமுறை ஆலகால விஷம் பரவியபோது அதை உண்டு எங்களைக் காப்பாற்றவில்லையா? இப்போதும் தாங்கள் தான் எங்களை ரக்ஷிக்க வேண்டும்'' என்று வேண்டினர்.

கைலாசநாதன் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சரபமாக உருவெடுத்தார்.

மிருகம் மற்றும் பறவையின் ரூபத்தில் இறக்கைகளோடு பிரசன்னமானார் ஈசன். சரபேஸ்வரராக வந்த ஈசன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உக்கிரத்தோடு இருக்கும் நரசிம்மரை நெருங்கி, "நாராயணா, ஹிரண்ய சம்காரம் முடிந்ததல்லவோ?" என்று கேட்டார்.

கைலாசநாதனைக் கண்டதும் விஷ்ணுவின் உக்கிரம் குறைந்து சாந்தம் உண்டாயிற்று. பகவானை வலம் வந்து வணங்கி அவரோடு ஐக்கியமானார். பின்னர் சிவபெருமான் பிரகலாதனுக்கும் தேவர்களுக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்து அந்தர்த்தியானமானார்.

அடுத்த பிறவியில் ஜய, விஜயர், இராவணன், கும்பகர்ணனாகப் பிறந்தனர். விஷ்ணு ஸ்ரீராமனாக அவதரித்து அவர்களைச் சம்ஹரித்தார்.

மூன்றாவது ஜன்மத்தில் அவர்கள் இருவரும் சிசுபால தந்தவக்கிரராகப் பிறந்தனர். நாராயணன் கிருஷ்ணனாகத் தோன்றி அவர்களை அழித்தார்.

27. உயிர்த் தியாகம் செய்த வேடுவன்

அற்புதம் என்னும் ஒரு மலை இருக்கிறது. அதில் ஆகுகன் என்னும் வேடன் தன் மனைவி ஆகுதி என்பவளுடன் வசித்து வந்தான். பக்கத்திலே சிவாலயம் ஒன்றிருந்தது. நாள்தோறும் வேடனும் அவன் மனைவியும் சிவாலயம் சென்று பகவானைத் தரிசித்து அவரை வழிபட்டு வருவது வழக்கம். ஆகுகன் ஆலயத்தினுள் உள்ள சிவலிங்கத்துக்கு அர்ச்சனை முதலியன செய்கையில் அவன் மனைவியோ ஆலயத்தின் வெளியில் இருந்த ஒரு லிங்கத்தை அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தாள்.

ஒருநாள் மாலைப் பொழுதில் அந்தப் பக்கமாக ஜடாதரர் என்ற சிவயோகி வந்தார். அங்கே சிவாலயம் ஒன்றிருப்பதைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டு சற்று நின்றார். அவரைக் கண்ட ஆகுதி அருகில் வந்து வணங்கி, ‘‘சுவாமி, தாங்கள் எங்கு போக வேண்டும்? இரவு நெருங்கிவிட்டது. தாங்கள் இன்றிரவு இங்கே தங்கிச் செல்லலாம்’’ என்றாள்.

அவள் பெண்ணாகையால் அவளோடு பேசுவது கூடாது எனப் பேசாமலிருந்தார். அப்போது சிவாலயத்தினுள்ளிருந்து ஆகுகன் வெளிப்பட்டான். யோகியைப் பார்த்ததும் அவரை நெருங்கி, ‘‘சுவாமி, தாங்கள் யார்? தங்களுக்கு என்ன வேண்டும்? தெரிவித்தால் நான் ஏற்பாடு செய்கிறேன். தங்களைப் பார்த்தால் தெய்வம் போலத் தோன்றுகிறீர்கள்’’ என்றான்.

‘‘அப்பனே, நானோர் யோகி. பிரயாணப்பட்டு வரும்போது இங்கே வந்து சேர்ந்தேன். வனாந்திரமாயிருக்கும் இவ்விடத்தில் இரவை எப்படிக் கழிப்பது என்று யோசிக்கிறேன். இரவு தங்க இடம் கொடுத்தால், அதுவே போதும்’’ என்றார் யோகி.

‘‘சுவாமி, எனக்குப் பரம சந்தோஷம். என்னுடைய குடிலுக்கு வாருங்கள்’’ என்று மகிழ்ச்சியோடு அவரைத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றான் ஆகுகன்.

இரவு யோகியார் குடிசையினுள் இருக்கட்டுமென்றும், அவர்கள் இருவரும் வெளியே இருக்கலாமென்றும் ஆகுகன் மனைவியிடம் தெரிவித்தபோது யோகி அதை ஆக்ஷேபித்தார். பெண்ணை வெளியே விட்டுவிட்டுத் தான் உள்ளிருக்க அவர் மறுத்துவிட்டார். அதன்மீது யோகியும், ஆகுகியும் குடிசையினுள் இருக்க வெளியே ஆகுகன் வில்லுடன் காவல் இருந்தான். நடு இரவில் அந்த வழியாக வந்த புலி ஒன்று வேடனை அடித்துக் கொன்று விட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடிந்ததும் வெளியே வந்த யோகியும் வேடனின் மனைவியும் ஆகுகனுக்கு நேர்ந்திருந்த கதியைக் கண்டு திடுக்கிட்டனர். யோகி பெரிதும் விசனமுற்றார். தன் பொருட்டு வெளியே இருக்க நேர்ந்ததால்தான் வேடன் உயிர் இழந்தான் என்று துக்கித்தார்.

ஆகுகி அவரை நமஸ்கரித்து "சுவாமி, தாங்கள் துக்கப்பட வேண்டாம். அந்தண யோகி ஒருவருக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்து நற்கதியை அடைந்திருக்கிறார் என் கணவர். அதைக் குறித்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். என் கணவரின் உடலோடு உடன்கட்டை ஏற அனுமதிக்க வேண்டும்" என்று வேண்டினாள்.

யோகி வருத்தத்தோடு தீமுட்டி வேடுவச்சி உடன்கட்டை ஏறுவதற்கு வேண்டிய காரியங்களைக் கவனித்தார். 'திகு திகு' வென்று எரியும் தீயிலே கணவனின் உடலைக் கிடத்தி அக்கினியை மும்முறை வலம் வந்து பகவானை மனத்தில் தியானித்து தீயினிடைப் புக எத்தனித்தாள். அப்போது சிவபெருமான் அங்கே பிரத்தியக்ஷமாகி ஆகுகியின் கையைப் பிடித்து நிறுத்தினார்.

"ஆகுதி, நீ விதர்ப்ப தேசத்தரசன் வீரராஜனுக்குப் புத்திரியாக தமயந்தி என்ற பெயரில் பிறப்பாய். உன் கணவன் நிஷத ராஜன் வீரசேன மகாராஜன் குமாரனாக நளன் என்ற பெயரோடு பிறப்பான். இந்த ஜன்மத்தில் உங்கள் பிரிவுக்குக் காரணமான இந்த யோகி, அன்னப் பறவையாகப் பிறந்த உங்கள் இருவரிடையே திருமணம் நிறைவேறத் தூது செல்வார்" என்று அருளி மறைந்தார் சிவபெருமான்.

பின்னர், ஆகுதி அளவில்லா ஆனந்தத்துடன் உடன்கட்டை ஏறினாள். சிவபெருமான் அவர்களுக்கு அருளிய கோலத்தோடு அசலேசுவரர் என்ற பெயரோடு அங்கே விளங்கி வருகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

28. அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறுதல்

துரியோதனனால் சூதாட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட பாண்டவர்கள், திரௌபதியோடு நாட்டை விட்டுக் காட்டிற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் ஒவ்வொரு இடமாகச் சஞ்சரித்துக் கொண்டு இறுதியில் துவைதவனத்தை அடைந்தனர். சூரியனால் அளிக்கப்பட்ட அக்ஷயபாத்திரம் இருந்ததால் அவர்கள் ஆகாரத்துக்குக் கஷ்டம் ஏதுமின்றி வாழ்ந்து வந்தனர்.

காட்டில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அவர்களுக்கு மேலும் துன்பங்கள் இழைக்க வேண்டுமென எண்ணி, துர்வாச முனிவரைத் தூண்டி, பாண்டவர்களிடம் பிக்ஷைக்குப் போகு மாறு அனுப்பினான் துரியோதனன். துர்வாசர் பதினாயிரம் சிஷ்யர்களுடன் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார்.

முனிவரைக் கண்டதும் தருமர் ஓடிவந்து வரவேற்று வணங்கினார்.

"தருமா, நாங்கள் மிகவும் பசியோடு வந்திருக்கிறோம். எங்களுக்கு அறுசுவையோடு கூடிய உணவை அளிக்க வேண்டும்" என்று கேட்டார்.

தருமராஜன் "முனிசிரேஷ்ட, நான் பாக்கியவானானேன்" என்றார். "உணவை தயாராக வைத்திருங்கள். நானும், என் சிஷ்யர்களும் நீராடிவிட்டு வந்து விடுகிறோம்' என்றபடி நதிக்கு நீராடச் சென்றார்.

முனிவரோ முன்கோபமுடையவர். அவர் கேட்டு முடியாதென்று மறுத்து விட்டால் அப்போதே சபித்து விடுவார். ஆகவே, முனிவர் அன்னமளிக்க வேண்டுமென்று கேட்ட போது தருமராஜன் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முனிவர் நீராடச் சென்ற பிறகுதான் தருமராஜன் அந்த இக்கட்டிலிருந்து எப்படி விடுபடுவது என்று தெரியாமல் தவித்தார். முனிவர் வந்த வேளையோ அகால வேளையாகும். அவர்கள் ஏற்கனவே அன்னபானாதிகளை முடித்துக் கொண்டு, அக்ஷய பாத்திரத்தை அலம்பிக் கவிழ்த்து விட்டார்கள். அதைக் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு முறைதான் உணவைப் பெற முடியும். இப்போது என்ன செய்வது ? முனிவர் திரும்பி வந்ததும் சாப்பாட்டுக்கு ஏதும் ஏற்பாடுகள் செய்யாதிருப்பதைக் கண்டு அவர்களைச் சபிக்கப் போகிறார். இந்த நிலையைத் தானே துரியோதனன் எதிர்பார்த்தான். அவ்விதம் முனிவரின் சாபத்தைப் பெறுவதற்கு முன்பு உயிரை விட்டுவிடுவதே மேல் எனத் தோன்றியது அவருக்கு. திரௌபதியோ கிருஷ்ணனைத் தியானித்து, இந்த இக்கட்டான நிலையிலிருந்து அவர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமெனப் பிரார்த்தித்தாள்.

திரௌபதியின் பிரார்த்தனையைக் கேட்ட கிருஷ்ணன் அடுத்த க்ஷணம் அங்கே வந்து சேர்ந்தார். திரௌபதி நடந்ததைத் தெரிவித்து முனிவர் நதியிலிருந்து திரும்பும் நேரமாகி விட்டதென்று கண்ணீர் விட்டாள்.

“திரௌபதி, வருத்தப்படாதே, உள்ளே சென்று அக்ஷய பாத்திரத்தை எடுத்துவா” என்றார் கிருஷ்ணன்.

“சுவாமி, அதைக் கழுவி வைத்துவிட்டேனே” என்றாள் திரௌபதி.

“பரவாயில்லை, எடுத்துவா” என்றார் கிருஷ்ணன்.

திரௌபதி உள்ளே சென்று பாத்திரத்தை எடுத்து வந்தாள். அதை வாங்கி உன்னிப்பாக பார்த்த கிருஷ்ணன் ஒரு ஓரத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒட்டிக் கொண்டிருந்த சிறிய கீரையை எடுத்து உள்ளங்கையில் வைத்துக்கொண்டார்.

“திரௌபதி, உத்திரணியால் ஜலம் எடுத்துக் கீரையின் மேல் விடு” என்றார்.

திரௌபதி ஜலம்விட்ட மாத்திரத்திலேயே, கிருஷ்ணன் அனுக்கிரகத்தால் முனிவருக்கும் அவருடைய பதினாயிரம் சிஷ்யர்களுக்கும் தேவையான அறுசுவையோடு கூடிய உணவு ஆசிரமத்தில் நிறைந்துவிட்டது. நீராடித் திரும்பிய முனிவர்களும் சிஷ்யர்களும் அதைப் போன்ற சுவையான உணவை இதுவரைச் சாப்பிட்டிராததால் வயிறு முட்டச் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தனர். பாண்டவர்களின் மனோபீஷ்டம் தடையின்றி நிறைவேறும் என அனுக்கிரகித்துச் சென்றார் துர்வாசர்.

முனிவர் அகன்றதும் தருமர், கிருஷ்ணனின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

“கிருஷ்ணா, உன் அனுக்கிரகம் மட்டும் இல்லாதிருக்குமானால் என் நிலைமை மோசமாகப் போயிருக்கும். துர்வாசரிடம் சாபம் பெறுவதைக் காட்டிலும் அவர் வருவதற்குள் உயிரை விட்டிருப்பேன்” என்றார்.

“தருமா, எல்லாம் சிவபெருமானுடைய அனுக்கிரகம் தான். துவாரகையிலிருக்கும் போது உபமன்யு முனிவர் எனக்குச் சிவபூஜை உபதேசித்தார். வடுககிரியில் ஏழு மாதம் தீக்ஷை பெற்றுச் சிவபூஜை செய்து தியானித்தேன். சிவனும் எனக்குத் தரிசனம் தந்து சத்துருக்களை வெல்லும் சக்தியை அளித்தார். நீங்களும் சிவபூஜை செய்யுங்கள். அவர் அனுக்கிரகத்தால் உங்களுக்கு வரும் துன்பங்கள் பனிபோல் நீங்கும். எனக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருளியதன் காரணமாகப் பகவான் அங்கே வில்வேசுவரர் என்ற பெயரில் எழுந்தருளியிருக்கிறார்'' என்றார் கிருஷ்ணன்.

ஒருநாள் வேதவியாசர், பாண்டவர்கள் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார். அவரை வரவேற்று நன்கு உபசரித்தார் தருமர்.

''முனிசிரேஷ்ட, இந்தக் கானகத்தில் உள்ள வசதிகளைத் கொண்டு ஓரளவுக்குத்தான் உங்களை உபசரிக்க முடிந்தது. இதுவே அஸ்தினாபுரமாக இருந்திருந்தால் இன்னும் மேன்மை யாகக் கௌரவித்திருப்போம். தங்களை நன்கு கௌரவிக்க முடியவில்லையே என வருந்துகிறோம்'' என்றார் தருமர்.

''தருமா ஏன் விசனப்படுகிறாய்? எனக்கு உங்கள் நிலைமை தெரியாதா என்ன? திருதராஷ்டிரன் கண்களைத் தான் இழந்தான் என்றால் அறிவையுமல்லவா இழந்திருக்கிறான். நீங்கள் யார்? துரியோதனனைப் போன்று அவன் புத்திரர்கள் தானே. அவனுக்குப் பிறக்கவில்லை, இருக்கட்டுமே. பாண்டு அவன் சகோதரன்தானே. துரியோதனாதியர் தவறு செய்து உங்களுக்குக் கொடுமைகள் பல இழைத்த போது, அவனாவது குறுக்கிட்டுத் தடுக்க வேண்டாமா? நல்லவர்களைப் பகவான் என்றும் கைவிட மாட்டார். அதர்மத்தின் கை ஓங்கியிருந்தாலும் முடிவில் தர்மமே ஜெயிக்கும். நீங்கள் சிவபூஜை செய்யுங்கள். கைலாசநாதன் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார்'' என்றார் வியாசர்.

தருமர் அவரைப் பணிந்து ''ஸர்வக்ஞ, தாங்கள் கூறிய வார்த்தைகளால் நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். கிருஷ்ணனும் சிவபூஜை செய்யுமாறு சொன்னார். தாங்களோ மகா யோகீஸ்வரர். தாங்கள் வந்திருப்பதே எங்கள் நல்ல காலத்தைக் குறிக்கிறது. தாங்களே எங்களுக்குச் சிவபூஜையை உபதேசிப்பதுதான் உத்தமம்'' என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாஸர் மனமகிழ்ந்தவராய், பாண்டவர்கள் ஐவரில் அர்ச்சுனனே சிவபூஜை செய்யத் தகுந்தவன் எனத் தெரிவித்தார். அர்ஜுனனை அழைத்து அவனுக்கு முதலில் இந்திர மந்திரத்தை உபதேசித்துப் பின்னர் சிவபூஜையை உபதேசித்தார்.

"அர்ஜுனா, உன்னை மட்டும் ஏன் தேர்ந்தெடுத்தேன் என்றால், அந்த பூஜையின்போது காட்ட வேண்டிய மன உறுதி உன்னிடம் உள்ளது. உன் பூஜையைக் கெடுப்பதற்காகவே பலர் தோன்றுவார்கள். இடையூறுகள் நேரக்கூடும். அப்போதெல்லாம் மனம் தளராது இருக்க வேண்டுவது அவசியம். முதலில் இந்திரனைத் திருப்தி செய்து பின்னர் சிவபூஜையைத் தொடங்கு" என்ற வியாசர், பிறர் கண்ணுக்குத் தெரியாமல் இருக்க ஓர் அரிய மந்திரத்தை அர்ஜுனனுக்கு உபதேசித்தார்.

அர்ஜுனன் வியாஸரையும் தருமரையும் வணங்கி அவர்களது ஆசிபெற்றுப் புறப்பட்டான். கிருஷ்ணாநதி தீரத்தில் இந்திரகீல பர்வதத்தில் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்தான். வியாஸர் தெரிவித்தது போன்று முதலில் இந்திரனை வணங்கி விட்டுச் சிவபூஜையைத் தொடங்கினான். பஞ்சஸூத்ரப் பிரகாரம் மண்ணால் சிவலிங்கம் அமைத்து அதற்கு அபிஷேகம் முதலான செய்து மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்தான். பின்னர் ஒரு காலை மடக்கிக் கொண்டு, மற்றொரு காலை ஊன்றி நின்றபடி சிவபெருமானைத் தியானிக்கத் தொடங்கினான்.

நாட்கள் செல்லச் செல்ல அர்ஜுனனின் தவம் கடுமையாகியது. அவனிடமிருந்து யோகாக்கினி புறப்பட்டு விண்ணில் சென்று தேவலோகத்தை எட்டியது. தேவர்களால் அந்த உஷ்ணத்தைத் தாங்க முடியவில்லை. இந்திரனிடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்று தெரிவித்தனர். இந்திரனுக்கு பரம சந்தோஷம். அவன் மகன் அல்லவா அர்ஜுனன். மகனுக்கு அனுக்கிரகம் செய்ய அப்போதே புறப்பட்டான் இந்திரன்.

தொண்டு கிழமாக வேடம் பூண்டு, நடக்க முடியாது தட்டுத் தடுமாறியபடி அர்ஜுனனிடம் வந்தான் இந்திரன்.

"யாரப்பா நீ? யாரைக் குறித்து இவ்வளவு கடுமையாகத் தவம் செய்கிறாய்?" என்று கேட்டான்.

அர்ஜுனனுக்கு வந்திருப்பது யார் என்பது தெரியவில்லை. பெரியவர் கேட்கிறாரே என்று, தான் அங்கு வந்து தவம் மேற்கொண்ட நோக்கத்தைத் தெரிவித்தான்.

"நல்ல வேலை செய்தாய் போ. இந்த வயதில் எத்தனையோ குதூகலமாக இருக்க வேண்டிய நீ, இப்படிக் கடுமையான தவத்தை மேற்கொள்ளலாமா? போக பாக்கியங்களோடு வாழத்தான் எல்லோரும் விரும்புவார்கள். அதை அடைய இத்தனைக் கடுமையாக தவம் மேற்கொள்ள வேண்டாம். இந்திரனைக் குறித்துத் தவம் செய்தால் போதும். விரைவிலேயே உனக்கு அவன் அனுக்கிரகம் கிட்டும்" என்றான் கிழவரின் வடிவிலே வந்திருந்த இந்திரன்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அர்ஜுனனுக்கே கோபம் வந்துவிட்டது.

"பெரியவரே, இன்னொரு தரம் அம்மாதிரி சொல்லாதீர்கள். சிவபெருமானின் தரிசனம் கிட்ட வேண்டுமென்று நான் எண்ணி இத்தவத்தை மேற்கொண்டுள்ளேன். அதை மாற்ற முடியாது. என்னைவிட எத்தனையோ வருடங்கள் மூத்தவர் என்ற காரணத்தால் நீங்கள் கேட்டதற்கு நான் பதிலளித்தேன். இனி ஒருகணமும் இங்கே தங்கி என் தவத்துக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம்" என்று கடிந்து கொண்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்த க்ஷணம் அங்கே முதியவரைக் காணவில்லை. தேஜோ மயமாக இந்திரன் நின்றிருந்தான்.

இந்திரனைக் கண்டதும் அர்ஜுனன் இரு கைகளையும் கூப்பி அவனை வணங்கினான்.

“தேவேந்திரா, வந்திருப்பது தாங்கள் என்பதை உணராமல் கடிந்து பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்” என்று வேண்டினான்.

“அர்ஜுனா, வருத்தப்படாதே. உன் மன நிலையைச் சோதிக்கவே நான் இவ்வாறு மாறு வேடத்தில் வந்தேன். நீ மேற்கொண்டிருக்கும் காரியம் தடங்கலின்றி நிறைவேறும்” என்று அருளிச் சென்றான் இந்திரன்.

சிவபெருமானைக் குறித்து அர்ஜுனன் கடும் தவம் இயற்றி வருகிறான் என்ற செய்தியைக் கேட்ட துரியோதனன், அடக்க முடியாத ஆத்திரம் கொண்டான். அர்ஜுனன் மேற் கொண்டிருக்கும் தவத்தைக் கலைத்து அதன் பலனை அடைய முடியாதபடி செய்ய வேண்டுமென்று எண்ணினான். உடனே மூகன் என்னும் அசுரனை அழைத்து, காட்டிலே கடுந்தவம் இயற்றிவரும் அர்ஜுனனிடம் சென்று அவன் தவத்தைக் கலைத்து இடையூறு செய்யுமாறு அனுப்பினான்.

இதைப்பற்றி அறிந்த தேவேந்திரன் கைலாசநாதனிடம் ஓடினான்.

“பிரபோ, அர்ஜுனன் தங்களைக் குறித்துக் கடுமையாகத் தவம் செய்கிறான். அவன் தவத்தைக் கலைக்கத் துரியோதனாதியர்கள் அரக்கனை ஏவி விட்டிருக்கின்றனர்” என்று முறையிட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இந்திரா, அர்ஜுனனுக்கு ஆபத்து வராது காப்பது என் பொறுப்பு" என்ற ஈசன் தேவியுடன் அப்போதே வேடுவவேடம் தாங்கி இந்தரகீல பர்வதத்தை அடைந்தார்.

துரியோதனனால் அனுப்பப்பட்ட மூகன், பன்றியாக வடிவம் கொண்டு வனத்திலுள்ள மரங்களையெல்லாம் சாய்த்துக் கொண்டும், மண்ணைக் கிளறி நாற்புறமும் வாரி இறைத்துக் கொண்டும் அட்டகாசத்துடன் அர்ஜுனனிடம் வந்தான்.

கோர உருவத்தோடு வரும் பன்றியைக் கண்ட உடனேயே அது சாதாரணக் காட்டு விலங்கு அல்ல என்பதை உணர்ந்தான் அர்ஜுனன். தவத்தைக் கெடுத்து இடையூறு விளைவிக்கும் நோக்கத்தோடு வந்திருக்கும் சத்துரு என்பதைத் தெரிந்து கொண்டான். ஆகவே, அவன் சிறிதும் தயக்கமின்றி காண்டீபத்தில் நாணேற்றி அம்பை எய்தான். அவன் எய்த அம்பு பன்றியின் மூக்கிலே பாய்ந்து அதன் வால்புறத்திலே வெளிப்பட்டு அம்பறாத் தூணியை அடைந்தது.

அதே நேரத்தில் அங்கு வந்த கைலாசநாதனும் அர்ஜுனனை நெருங்கும் பன்றியைத் தூரத்தில் இருந்தபடி அம்பால் அடித்தார். அவரால் எய்யப்பட்ட அம்பு பன்றியின் வால்புறத்தில் பாய்ந்து மூக்கின் வழியாக வெளிப்பட்டு பூமியில் விழுந்தது. அந்த க்ஷணமே மூகன் பயங்கரமாக அலறிக் கொண்டு தரையில் விழுந்து உயிர் விட்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் சிவகணங்களில் ஒருவன் பன்றியின் பக்கத்தில் விழுந்து கிடக்கும் அம்பை எடுத்துச் செல்ல அங்கே வந்தான். அவனைக் கண்டதும் அர்ஜுனன் முகம் சிவந்தவனாய், "யாரடா நீ? எங்கே வந்தாய்?" என்று அதட்டினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“ஐயா, எங்கள் தலைவர் இந்தப் பன்றியை அம்பால் அடித்துக் கொன்றார். தான் கொன்ற பன்றியையும் அதன் பக்கத்தில் விழுந்து கிடக்கும் அம்பையும் எடுத்து வருமாறு அனுப்பினார். அவற்றை எடுத்துச் செல்ல வந்துள்ளேன்” என்றான் அவன்.

அர்ஜுனன் ‘கடகட’ வென்று சிரித்தான் “என்ன சொன்னாய்? பன்றியைக் கொன்றது உங்கள் தலைவரா? நானல்லவா பன்றியை அடித்து வீழ்த்தியது” என்றான்.

“நீங்கள் சொல்வது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. காட்டிலே வேட்டையாட வந்தோம் நாங்கள். தூரத்தில் வரும் போதே பன்றி உங்கள் மீது பாயத் தயாராக இருப்பதைக் கண்டோம். நீங்கள் வில்லில் அம்பு பூட்டி எய்வதற்குள் பன்றி உங்கள் மீது பாய்ந்து விடும் என்பதை உணர்ந்து எங்கள் தலைவர் பன்றியை அடித்தார். அம்பிலே எங்களது சின்னம் தெரியக்கூடுமே. எங்களுடைய பொருளை எடுத்துச் செல்வதில் தவறென்ன இருக்கிறது?” என்று கேட்டான் அவன்.

“அம்பை எடுத்துச் செல்ல நான் அனுமதிக்க மாட்டேன்” என்றான் அர்ஜுனன்.

“ஏன்?”

“நான் ஒரு க்ஷத்திரியன். எந்த க்ஷத்திரியனும் தன் முன்பு வந்து விழுந்த அம்பைப் பிறர் எடுக்க அனுமதிக்க மாட்டான். இது என்னைச் சேர்ந்தது” என்றான் அர்ஜுனன்.

சிவபெருமானின் ஆளோ அர்ஜுனனின் வார்த்தைகளைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"உனக்கு இந்த அஸ்திரம் வேண்டுமா? அப்படியானால் என்னோடு வா. என் தலைவரிடம் அழைத்துச் செல்கிறேன். அவரிடம் வந்து கேள். இந்த அஸ்திரமல்ல; இதைப் போன்று இன்னும் அதிக சக்தி வாய்ந்த அஸ்திரங்களை உனக்குக் கொடுப்பார். தன்னிடம் யாசிப்பவர்களின் மனோபீஷ்டத்தை ஒருபோதும் நிறைவேற்றத் தயங்கமாட்டார்" என்றான் அவன்.

அர்ஜுனன் சீற்றம் கொண்டான்.

"அடே, என்ன வார்த்தை சொன்னாய்? உன்னோடு வந்து உன் தலைவனிடம் நான் அஸ்திரங்களை யாசிக்க வேண்டுமா? வேண்டுமானால் உன் தலைவரை இங்கு வந்து என்னிடம் யாசித்து இந்த அஸ்திரத்தைப் பெற்றுச் செல்லுமாறு சொல்" என்றான்.

"அது நடக்காத காரியம்" என்றான் அவன்.

"அப்படியானால் நானும் கொடுக்கத் தயாராக இல்லை. என்னிடம் போர் செய்து வெற்றி கொண்ட பிறகே இந்த அஸ்திரத்தை எடுத்துச் செல்லலாம்" என்றான் அர்ஜுனன் கடுங்கோபத்தோடு.

அந்த ஆசாமி திரும்பி சிவபெருமானிடம் ஓடி வந்தான். பிறகு அங்கிருந்து அடித்த பந்து போல அர்ஜுனனிடம் திரும்பி வந்தான்.

"ஐயா, எமது தலைவர் பெரும் கோபத்தோடு சண்டைக்குத் தயாராகி விட்டார். உங்களைவிட அவர் சகல விதங்களிலும் வல்லமை உடையவர். ஏன் இந்தப் பிடிவாதம்? பேசாமல் அம்பைக் கொடுத்து விடுங்கள். இடையூறின்றி உங்கள் தவம் முடிவுறும். இல்லையேல் வீணில் உயிரை இழக்க நேரிடும்" என்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்ஜுனன் கொஞ்சமும் கலங்கவில்லை. "அப்படியா? நானும் சண்டைக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவியுங்கள். க்ஷத்திரியன் தான் சொன்ன வாக்கை மீறமாட்டான். உங்கள் தலைவன் என்னைவிடப் பலசாலியாக இருக்கட்டும். அவனால் எனக்கு அழிவு ஏற்படட்டும். அதற்காக நான் கலங்கவில்லை. உங்கள் வார்த்தைக்குப் பணிந்து அம்பைக் கொடுத்து விடுவேனாகில், உயிருக்குப் பயந்து நடந்து கொண்டதாக என் சகோதரர்கள் ஏளனம் செய்வார்கள். அதைவிட யுத்தத்திலே உயிரை இழப்பது எவ்வளவோ மேல்" என்றான்.

அவன் ஈசனிடம் திரும்பிச் சென்று அர்ஜுனன் கொஞ்சமும் மனம் கலங்காது சண்டைக்குத் தயாராக இருப்பதைத் தெரிவித்தான். ஈசன் தன் கணங்களோடு யுத்தத்துக்கு வந்தார்.

கையில் வில்லோடு கம்பீரமாக வந்து நின்ற வேடர் தலைவனையும் அவனோடு வந்திருந்த ஆட்களையும் கண்டதும் அர்ஜுனன் மனத்தில் சிவபெருமானைத் தியானித்தான்.

"பிரபோ, தங்களைக் குறித்துத் தவம் இயற்றி வரும் எனக்கு இடையூறுகள் விளைவித்து என் தவத்தைக் கெடுக்க வந்துள்ளனர். பிரபோ, சர்வேசுவரா, தாங்கள்தான் என் விஷயத்தில் கருணை கொண்டு எனக்கு வரும் ஆபத்துக்களை நீக்க வேண்டும்" என்று பிரார்த்தித்து காண்டீபத்தைக் கையிலெடுத்தான்.

அர்ஜுனனின் பிரார்த்தனையை அறிந்து சிவபெருமான் மெல்லச் சிரித்தபடி, பார்த்து யுத்தம் செய்யுமாறு, சைகை செய்தார். சிவகணங்கள் பலவித அஸ்திரங்களை எய்து அர்ஜுனனைத் திக்குமுக்காடச் செய்தனர். அர்ஜுனனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரமாரியாக அம்புகளை விடுத்துக் கணங்கள் விடுத்த அஸ்திரங்களைத் தடுத்து அழித்தான்.

கணங்கள் களைத்துப் போயினர். அவர்கள் கை களைக்கும் நேரத்தில் அர்ஜுனனின் கை ஓங்கியது. அஸ்திரங்களைப் பல வகையாக எய்து கணங்களைச் சிதறி ஓடச் செய்தான்.

கணங்கள் சிதறி ஒடுவதைக் கண்ட சிவபெருமான் தாமே நேரிடையாக போரிட வந்தார். அர்ஜுனன் பயங்கர அஸ்திரங்களால் வேடுவர் தலைவனாக வந்திருக்கும் பகவானை அடித்தான். ஈசனோ, அவன் விடும் அஸ்திரங்களைத் தம்மை நெருங்கும் முன்னரே அழித்து அர்ஜுனனையே தாக்கினார். அவன் அணிந்திருந்த கவசத்தையும் அறுத்துத் தள்ளினார்.

பின்னர் இருவரும் வில்லையும் அம்புகளையும் எறிந்து விட்டுத் துவந்துவ யுத்தம் செய்தனர். ஒருவரோடு ஒருவர் வந்து மோதும்போது பூமியே அதிர்ந்தது. தேவர்கள் ஆகாசத்தில் வந்து கூடினர். பயங்கரமாகப் போரிடும் அவர்களைப் பார்த்து, இது எந்த அழிவில் போய் நிற்கப் போகிறதோ, என்று பயந்தனர்.

அர்ஜுனனுக்கு அருள வேண்டிய சமயம் வந்து விட்டதை அறிந்த சர்வேச்வரன் தாம் சிறிது களைத்துப் போவதுபோல் நாடகமாடினார். இதுவே எதிரியை வீழ்த்தச் சமயம் என்பதைக் கண்ட அர்ஜுனன் சட்டென்று தரையில் கிடந்த காண்டீபத்தைக் கையிலெடுத்து அதனால் பகவானின் தலையில் ஓங்கி அடித்தான்.

அர்ஜுனன் பகவானை அடித்த அடி பகவானின் தலையில் மட்டுமா விழுந்தது ? அண்டசராசரங்களிலும் உள்ள சகலமான ஜீவராசிகளுக்கும் அந்த அடி விழுந்தது. விண்ணிலே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூடியிருந்த தேவர்களுக்கும் விழுந்தது. ஆசிரமத்திலே இருந்த தருமர் முதலானோருக்கும் விழுந்தது. ஏன், அஸ்தினாபுரத்தில் இருந்த துரியோதனாதியருக்கும் கூட அடி விழுந்தது. பகவானை அடித்த அர்ஜுனனின் தலையிலும் அந்த அடி விழுந்தது.

திடுக்கிட்ட அர்ஜுனன் எதிரே இருக்கும் வேடனைப் பார்த்தான். வேடனைக் காணவில்லை. அங்கே சர்வேச்வரனான சிவபெருமான் புன்னகை பூத்தவராய் நின்றிருந்தார். அப்போதுதான், தன்னுடன் சண்டைக்கு வந்தது கையிலாசநாதனே என்பதை அவன் உணர்ந்தான்.

காண்டீபத்தைத் தூர எறிந்தான் அர்ஜுனன். இரு கைகளையும் கூப்பியவனாய்த் தரையில் மண்டியிட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“பிரபோ, தாங்கள் யார் என்பதை உணராது அடியேன் அபசாரம் இழைத்துவிட்டேன். என்னை மன்னித்து அருள வேண்டும்” என்று உள்ளம் உருகப் பிரார்த்தித்தான்.

சிவபெருமான் இருகைகளாலும் அவனை வாரியெடுத்து அணைத்துக் கொண்டார்.

“அர்ஜுனா, வருத்தப்படாதே! நீ பரமபக்தன். உன்னைப் பரீக்ஷிக்கவே நான் இந்த வேடத்தில் வந்தேன். என்னை அடித்ததற்காக வருத்தம் வேண்டாம். உன் பக்தியை உணர்த்தவே அந்த அடியை வாங்கிக் கொண்டேன். அது புஷ்பத்தால் அடித்தது போலவே எனக்கிருந்தது. உனக்கு வேண்டிய வரத்தைக் கேள். தருகிறேன்” என்றார்.

அர்ஜுனன் சிவனைப் பலமுறை வலம் வந்து வேதங்களால் அவர் உள்ளம் மகிழத் துதித்தான். ஒருவராலும் ஜெயிக்க முடியாத பாசுபதாஸ்திரத்தை அர்ஜுனனுக்கு அளித்தார் ஈசன்.

“அர்ஜுனா, இந்த அஸ்திரத்தால் நீ சத்துருக்களை வென்று சுகபோக வாழ்வை அடைவாயாக. உங்களுக்கு எந்தச் சமயத்திலும் கிருஷ்ணனின் சகாயம் கிடைக்கும். கிருஷ்ணன் என்னுடைய அம்சமே ஆவான்” என்று அனுக்கிரகித்து மறைந்தார்.

பாசுபதாஸ்திரத்தைப் பெற்ற அர்ஜுனன் மகிழ்ச்சியோடு சகோதரர்களிடம் திரும்பி நடந்தவற்றை விவரித்தான். அவர்களும் பகவானின் கருணாகடாக்ஷத்தை எண்ணி எண்ணி அவரைப் போற்றிக் கொண்டாடினர்.

❋❋❋❋❋❋

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

29. சிவனிடமிருந்து விஷ்ணு சக்கராயுதம் பெறுதல்

அர்ஜுனன் சிவ பூஜை செய்து, சிவபெருமானைக் குறித்துத் தவம் இயற்றிப் பாசுபதாஸ்திரம் பெற்றுவந்த செய்தியைக் கேட்ட கிருஷ்ணன் மனம் மகிழ்ந்து அவனைப் பாராட்டினார்.

"இனி உங்களுக்குத் துரியோதனாதியர்களைப் பற்றிய கவலை வேண்டாம். சிவபெருமானின் அருள் கடாக்ஷம் பெற்றவருக்கு எந்த காரியத்திலும் தோல்வியே இல்லை. எனக்குச் சக்கராயுதம் அளித்தவரே அவர்தான்" என்றார்.

மகாவிஷ்ணு சிவபெருமானிடம் சக்கராயுதம் பெற்ற விருத்தாந்தத்தை அறிய வேண்டுமென்று நைமிசாரணிய வாசிகள் விரும்பவே, சூதர் அதைச் சொல்லத் தொடங்கினார்.

ஒரு சமயம் அரக்கர்களின் பலம் அதிகமாயிருந்தது. அவர்களால் பலவிதங்களில் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் மகாவிஷ்ணுவைச் சரண் அடைந்தனர்.

"பிரபோ, பன்னகசயனா, தாங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

விஷ்ணு அவர்களுக்கு அபயம் அளித்து, "தேவர்களே, அரக்கர்களை அழித்து உங்களுக்கு ஏற்பட்டுள்ள இடைஞ்சலை நீக்க, நான் சர்வகாரண பூதரான சிவபெருமானை ஆராதித்து அவர் அருள் பெற்று வருகிறேன்" என்று கிளம்பினார்.

கைலயங்கிரியை அடைந்த விஷ்ணு, அங்கே ஓரிடத்தில் ஹோமகுண்டம் வளர்த்து சிவபெருமானைப் பார்வதியோடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரதிஷ்டை செய்து மானச சரஸில் வளர்ந்திருந்த தாமரை மலர்களால் அர்ச்சித்து வந்தார். ஆயிரம் தாமரைப் புஷ்பங்களைப் பறித்து வந்து பகவானின் ஆயிரம் நாமங்களையும் ஜபித்து, திருநாமம் ஒன்றுக்கு ஒரு மலராக அர்ச்சனை செய்தார்.

விஷ்ணுவின் பக்தியை பரிசோதிக்க விரும்பிய பகவான் அம்மலர்களில் ஒன்று குறையுமாறு செய்தார். அர்ச்சனை செய்து வந்த விஷ்ணு கடைசியில் ஒரு புஷ்பம் குறைவதைக் கண்டு திடுக்கிட்டார். அதற்காகப் பூஜையை நிறுத்திவிட விரும்பவில்லை. கண்களை மலருக்கு ஒப்பாகக் கூறுவதுண்டு. ஆகவே, குறையும் மலருக்குத் தம்முடைய ஒரு கண்ணையே ஈடாகச் செய்துவிடலாம் என்று எண்ணி ஒரு கண்ணைப் பெயர்த்தெடுக்க முயன்றார்.

சிவபெருமான் பிரத்தியக்ஷமாகி அவரது கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்.

"உன் பக்திக்கு மெச்சினேன், உன்னைப் பரீக்ஷிக்கவே மலர்களில் ஒன்றைக் குறையுமாறு செய்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

"பிரபோ, சர்வேச்வரா, உலகிலே அரக்கர்களின் உபத்திரவம் அதிகமாகி விட்டது. அவர்கள் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகமாகி வருத்துகின்றன. அரக்கர்களைச் சம்கரித்துத் தேவர்களைக் காக்கும் சக்தியைத் தாங்கள் அளிக்க வேண்டும்" என்று கோரினார் விஷ்ணு.

சுதர்சனம் என்ற சக்கராயுதத்தை விஷ்ணுவுக்கு அளித்து "இந்த அஸ்திரத்தால் அரக்கர்களை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றும் சக்தியை உனக்கு அளித்தேன்" என்றார் ஈசன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுதர்சனத்தைப் பெற்றுக் கொண்ட விஷ்ணு, சிவபெருமானைப் பணிந்து ஆயிரம் நாமங்களையும் கூறித் துதித்தார்.

“பிரபோ, என்னால் துதிக்கப்பட்ட இந்த ஆயிரம் நாமங்களையும் கூறி யாரொருவன் தங்களைத் துதிக்கிறானோ அவனுடைய பாபங்கள் அனைத்தும் நசித்துப் போக தாங்கள் அருள வேண்டும்” என்று பிரார்த்தித்தார் விஷ்ணு.

அவ்வாறே அருளி மறைந்தார் சிவபெருமான்.

30. சிவராத்திரி விரத மகிமை

மோக்ஷம் கொடுக்கவல்லதாக நான்கு சொல்லப் படுகின்றது. அவை, சிவார்ச்சனை, ருத்திரபாராயணம், அஷ்டமி சோமவாரம், கிருஷ்ண பக்ஷம் சதுர்தசி, அதாவது சிவராத்திரி தினம், பிரதோஷம் ஆகிய மூன்று நாட்களிலும் உபவாசம், காசியில் மரணம் ஆகியவையே ஆகும். இந்த நான்கிலும் சிவராத்திரி விரதமே விசேஷமானதாகும்.

மாசி மாதத்தில் வரும் கிருஷ்ண பக்ஷத்து சதுர்தசி அர்த்த ராத்திரியே, மகா சிவராத்திரி எனப்படும். அன்றிரவு பதினான்கு நாழிகையின்போது கோடி பிரம்மஹத்திகளையும் போக்கக் கூடியதாகப் பலன் சொல்லப்பட்டுள்ளது.

அன்றையத் தினம் காலையில் எழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு அருகிலுள்ள சிவாலயத்துக்குச் சென்று பகவானைத் தரிசித்து, “சர்வேச்வரா, இந்த மானிடப்பிறவி துக்கம் நிறைந்ததும், சாரமற்றதுமாக இருப்பதால் இதைப் பயனுடையதாக ஆக்க சிவராத்திரி விரதம் மேற்கொண்டுள்ளேன். விரதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூர்த்தியாகும் வரை எவ்வகையான தடங்கல்களும் உண்டாகாதிருக்குமாறு அனுக்கிரகிக்க வேண்டும்'' எனப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

அஸ்தமித்ததும் நீராடி பரிசுத்தமானதும் தோய்த்து உலர்ந்ததுமான வஸ்திரம் தரித்து பகவானைத் தியானித்து பூஜையை ஆரம்பிக்க வேண்டும். நான்கு ஜாமங்களிலும் நான்கு லிங்கங்களை மண்ணால் செய்து பூஜை செய்ய வேண்டும். வேதோக்தமான பிராமணர்களைக் கொண்டு மந்திரம் சொல்லி பூஜையைச் செய்து முடிக்க வேண்டும்.

பால், தயிர், நெய், தேன், சர்க்கரை ஆகியவற்றால் பகவானுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகத்திற்குப் பிறகு உலர்ந்த வஸ்திரத்தால் துடைத்து, சந்தனம், குங்குமம் சாத்தி, அக்ஷதை முதலானவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். நான்கு காலங்களுக்கும் நான்கு விதமாகச் சொல்லப் பட்டுள்ளன.

முதல் ஜாமத்தில் அரிசி, இரண்டாம் ஜாமத்தில் வால் கோதுமை எனப்படும் பார்லி, மூன்றாம் ஜாமத்தில் கோதுமை, நான்காம் ஜாமத்தில் அரிசி, உளுந்து, பயறு, தினை அல்லது ஏழு விதமான தான்யாட்சதையும் சமர்ப்பிக்க வேண்டும். அதேபோல், சதபத்திரம், தாமரை, கரவீரம் எனப்படும் அலரி புஷ்பங்களால் முதல் ஜாமத்திலும், தாமரை, வில்வம் ஆகியவற்றால் இரண்டாம் ஜாமத்திலும், ஆத்தி, அறுகு ஆகியவற்றால் மூன்றாம் ஜாமத்திலும், நறுமணம் கமழும் மலர்களால் நான்காம் ஜாமத்திலும், பகவானை அர்ச்சனை செய்ய வேண்டும். பகவானுக்கு நிவேதனமாக வைக்கப்பட வேண்டிய பலகாரங்களும் ஒவ்வொரு ஜாமத்துக்கும் ஒவ்வொருவிதமாகக் கூறப்பட்டுள்ளன. முதல் ஜாமத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுத்த அன்னம், கறி முதலானவற்றை நிவேதிக்க வேண்டும். லட்டு முதலிய பக்ஷண வகைகள் இரண்டாம் ஜாமத்தில் நிவேதிக்கப்பட வேண்டும். மூன்றாம் ஜாமத்தில் மாவால் செய்யப்பட்ட நெய் சேர்ந்த பலகாரங்களும், பாயஸமும் நிவேதிக்கப்பட வேண்டும். நான்காம் ஜாமத்தில் கோதுமையால் செய்யப்பட்ட பலகாரங்கள் நிவேதனமாக விதிக்கப்பட்டுள்ளன. பழவகைகளிலும் இந்த வேறுபாடுகள் உண்டு. முதல் ஜாமத்தில் வில்வப் பழமும், இரண்டாம் ஜாமத்தில் பலாப்பழமும், மூன்றாம் ஜாமத்தில் மாதுளம் பழமும், நான்காம் ஜாமத்தில் எல்லாவிதப் பழங்களும் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஜாமத்திலும் பூஜை முடிந்ததும் பிராமணர்களுக்கு தக்ஷிணை முதலியன கொடுத்து அன்னமளிக்க வேண்டும். அவரவர்கள் சக்திக்கேற்பத் தானங்கள் செய்யவேண்டும். பூஜை ஆரம்பத்தில் சங்கல்பித்து ஆவாஹனம் செய்த சிவலிங்கத்தைப் பூஜை முடிந்ததும் விசர்ஜனம் செய்துவிட வேண்டும்.

"சர்வாய க்ஷிதிமூர்த்தயே நம:
பாவாய ஜல மூர்த்தயே நம:
ருத்ராய தேஜோ மூர்த்தயே நம:
உக்ராய வாயு மூர்த்தயே நம:
பீமாய ஆகாயமூர்த்தயே நம:
பசுபதயே யஜமான மூர்த்தயே நம:
மஹா தேவாய ஸோமமூர்த்தயே நம:
ஈசாநாய சூர்ய மூர்த்தயே நம:

என்னும் அஷ்ட மந்திரங்களால் பூஜித்துப் புஷ்பாஞ்சலி செய்து மனோபீஷ்டத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜை முடிந்ததும் பொழுதை வீணே கழியும்படி செய்யக் கூடாது. சிவபெருமானுடைய புண்ணிய கதைகளைப் பிறர் சொல்லக் கேட்டோ, சிவநாம பஜனை செய்தோ நேரத்தைப் போக்க வேண்டும். பொழுது விடிந்ததும் நீராடி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சிவாலயம் சென்று பகவானைத் தரிசித்துப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். அதுமுதல் ஒவ்வொரு மாதமும் வரும் சிவராத்திரி தினம் விரதம் இருந்து பூஜை செய்து அடுத்த வருடம் மகாசிவராத்திரி அன்று விரதத்தை உத்தியாபனம் செய்து முடித்துக்கொள்ள வேண்டும்.

விரத உத்தியாபனம் அன்று அலங்கார மண்டபம் செய்து அதில் பார்வதி சமேதராகப் பகவானைப் பிரதிஷ்டித்துப் பூஜை செய்யவேண்டும். ஹோமம் வளர்த்து முதலில் நவக்கிரக சாந்திக்காக நவக்கிரக ஹோமம் செய்து பின்னர் நெய், பாயசம் முதலியவற்றால் ருத்திர மந்திரம் ஜபித்து ஹோமம் செய்ய வேண்டும். முடிவில் பொன்னால் சிவபெருமானையும், வெள்ளியால் பார்வதியையும் பிரதிமைகளாகச் செய்து, சிறிய கட்டிலில் மெத்தை, தலைகாணி வைத்து அதன்மீது ஏழு வகைத் தானியங்களைப் பரப்பி பிரதிமைகளை வைத்து வேதியனுக்குத் தானம் செய்ய வேண்டும். புரோகிதருக்கு வஸ்திரம் முதலான கொடுத்துக் கௌரவிக்க வேண்டும். சக்தி உள்ளவர்கள், பால் கொடுக்கக் கூடியதும், சாதுவுமான பசுவைக் கன்றோடு, குளம்புகளில் வெள்ளியும், கொம்பிலே பொன்னும் கட்டி, வெண்கலப் பாத்திரத்தோடு தானம் செய்யலாம். பூஜை முடிந்ததும் பன்னிரண்டு பேருக்குக் குறையாது பிராம்மண போஜனம் செய்விக்க வேண்டும்.

மறுநாள் அமாவாசை அன்று பிதுர்களுக்குப் பிண்டப் பிரதானம் செய்து பின்னர் பிராமணர்களுக்கு அன்னம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளிக்க வேண்டும். அமாவாசையில் அந்தணர்களுக்கு அன்னம் அளித்தால் அந்தப் பக்ஷம் முழுவதும் அதாவது பதினைந்து தினங்களிலும் அன்னம் அளித்த பலன் கிட்டும்.

31. வேடன் பெற்ற ஞானம்

கானகம் ஒன்றில் குருத்ருகன் என்னும் பெயருள்ள வேடன் இருந்தான். அவன் மகாகுரூரன், பிராணிகளைக் கொல்வதில் கொஞ்சமும் தயங்காதவன்.

ஒரு சமயம் அவன் குடும்பத்தார் ஆகாரமின்றிப் பசியால் வருந்த நேரிட்டது. கையிலிருந்த பொருள்களும் தீர்ந்து விட்டன. வேட்டையிலும் பெரிய மிருகங்கள் எதுவும் சிக்கவில்லை.

அன்றைய தினம் பொழுது விடிந்ததும், அவன் பெற்றோர்கள் அவனைப் பார்த்து எப்படியாவது அன்றைய தினம் ஆகாரத்துக்கு மிருகங்களை வேட்டையாடி வருமாறு சொன்னார்கள். பசியை அவர்களால் பொறுக்க முடியவில்லை. சாப்பிட்ட சொற்ப வகைகளும் பசியைத் தணிப்பதற்கு பதில் அதிகரிக்கச் செய்துவிட்டன.

அன்று சிவராத்திரி தினம். வேடன் வில்லை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். கானகம் முழுவதும் அவன் அலைந்தான். ஒரு மிருகம் கூட அவன் பார்வைக்குத் தட்டுப்படவில்லை. அஸ்தமிக்கும் பொழுதாகிவிட்டது. வெறும் கையுடன் வீடு திரும்புவதை அவன் விரும்பவில்லை. ஏதாகிலும் கொண்டு வருவான் என அவன் குடும்பத்தார் ஆவலோடு காத்திருப்பார்களே!

ஓர் தடாகத்தை அடைந்து அதன் தெளிந்த நீரை இரு கைகளாலும் வாரிப் பருகினான். பிறகு சிறிது நீரை ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாத்திரத்தில் நிரப்பிக்கொண்டு அதன் கரையிலிருந்த வில்வ மரம் ஒன்றில் ஏறிப் பதுங்கிக் கொண்டிருந்தான். இரவில் தாக சாந்திக்காக மிருகங்கள் தடாகத்துக்கு வரக் கூடுமென்றும், அப்போது அவற்றைக் கொன்று வீட்டுக்குக் கொண்டு செல்லலாமென்றும் எண்ணியிருந்தான். அன்றிரவு பூராவும் அவன் ஆகாரம் ஏதுமின்றி நித்திரையுமில்லாது கண் விழித்திருக்க வேண்டியிருக்கிறதே என்பதை நினைத்து வருந்தியபடி அமர்ந்திருந்தான்.

முதல் ஜாமத்தில் பெண் மான் ஒன்று நீர் அருந்த அங்கே வந்தது. அதைக் கண்ட வேடன் சந்தோஷம் அடைந்து வில்லில் அம்பைப் பூட்டினான். அந்த அசைவினால் அவன் கையில் பிடித்திருந்த பாத்திரத்திலிருந்து ஒரு சொட்டு ஜலம் தளும்பி



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கீழே மரத்தினடியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்தது. அதே சமயம் அவன் அமர்ந்திருந்த கிளையின் அசைவினால் அதிலிருந்து ஒரு வில்வதளம் உதிர்ந்து கீழிருந்த சிவலிங்கத்தின்மேல் விழுந்தது.

கிளையின் அசைவினால் ஏற்பட்ட சப்தத்தைக் கேட்டு திரும்பிய பெண்மான் "வேடா, என்ன காரியம் செய்யப் போகிறாய்?" என்று கேட்டது.

"மிருகமே, நானோ பெரிய குடும்பஸ்தன். என் வீட்டிலுள்ளவர்கள் பசியால் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆகாரம் தேடி வந்த எனக்கு இன்று முழுவதும் வியர்த்தமாகி விட்டது. ஒரு சிறு பறவை கூடக் கிடைக்க வில்லை. எப்படியும் தாக சாந்திக்காக எந்த மிருகமாவது தடாகத்துக்கு வருமென்று காத்திருந்தேன். நீ வந்து சேர்ந்தாய். உன்னைக் கொன்று எடுத்துச் சென்று என் வீட்டிலுள்ளவர் களின் பசியைப் போக்க வேண்டும்" என்றான் வேடன்.

"உன் வார்த்தைகளைக் கேட்க எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? இந்தப் பிறவி எடுத்து என்னதான் பிரயோசனம்? என் மாமிசத்தால் உன் குடும்பத்தினர் பசியின் கொடுமையிலிருந்து மீளப் போகிறார்கள் என்றால், அந்த பாக்கியம் எனக்குக் கிட்டியது பற்றி நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். பரோபகாரத்தால் அடையும் பலனைப் பற்றி எவ்வளவோ சொல்லுகிறார்கள். இந்த மாமிச உடல் இன்னொருவருக்காவது பிரயோசனப்படுகிறதே என்பதை நினைக்கும் போது என் மகிழ்ச்சி பன்மடங்கு அதிகமாகிறது. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் எனக்கு வருத்தமிருக்கிறது. எனக்குக் குட்டிகள் இருக்கின்றன. அவை இன்னும் தனியாக இரை தேடும் அளவுக்கு வளரவில்லை. ஆகவே, அவற்றைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திண்டாடவிட்டுச் செல்ல வேண்டியிருக்கிறதே என்பதை நினைத்தால் வருத்தம் உண்டாகிறது. எனக்கும் சிறிது அவகாசம் கொடு. நான் திரும்பிச் சென்று அக்குட்டிகளின் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பி வந்து விடுகிறேன். அதன் பின் என்னைக் கொன்று இறைச்சியை எடுத்துச் செல்லலாம்'' என்றது மான்.

வேடன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டது மான்.

''எவ்வளவு அழகாகப் பொய் சொல்லுகிறாய் என்பதை நினைக்கும்போது சிரிப்பு வராமல் என்ன செய்யும்? ஆபத்து நெருங்கிய காலத்தில் அதிலிருந்து மீள சாமர்த்தியமாகத்தான் பேசுகிறாய். உன்னை விட்டுவிட்டால் அப்புறம் திரும்பி வருவதேது?'' என்றான் வேடன்.

''ஐயா, என் வார்த்தையில் நம்பிக்கை வையுங்கள். நான் வார்த்தை தவற மாட்டேன். உயிருக்குப் பயந்து பொய் சொல்லுவதாக எண்ணாதீர்கள். இந்த உலகமே சத்தியத்தில் தான் நிலைத்திருக்கிறது. சூரிய சந்திரர்கள் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டே இயங்கி வருகிறார்கள். சத்தியத்துக்குக் கட்டுப் பட்டிருக்காவிடில் சமுத்திரம், பூமியை விழுங்கியிருக்காதா? நான் சத்தியமாகத் திரும்பி வருவேன். என்னை நம்பலாம். வார்த்தை தவறி நான் நடப்பேனாகில் பெரும் பாவம் என்னை அடையட்டும். வேதத்தை விற்கும் பிராமணன், மூன்று காலங்களிலும் சந்தியாவந்தனம் செய்யாத அந்தணன், கணவன் கட்டளையை மதித்து நடக்காத மனைவி, செய்த நன்றி மறந்து, நன்மை செய்தவனுக்கே தீமை செய்யும் அயோக்கியன், குருத்துரோகி, சிவத்துரோகி ஆகியோர் அடையும் பாபங்கள் என்னைச் சூழட்டும்'' என்றது மான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேடன் அதன் வார்த்தைகளை ஏற்று போய் வர அனுமதித்தான். மான் தாகசாந்தி செய்து கொண்டு காற்றினும் கடுகிய வேகத்தில் ஓடியது.

இரண்டாம் ஜாமத்தில் அங்கே மற்றொரு பெண் மான் வந்தது. முதல் ஜாமத்தில் வந்திருந்த மானோடு கூடப் பிறந்தது அது. இரண்டு மான்களும் ஒரே ஆண் மானை கணவனாக வரித்திருந்தன. இந்த இரண்டு பெண் மான்களும், ஆண் மானும் குட்டிகளோடு ஒரே இடத்தில் வசித்து வந்தன. தாகசாந்திக்காகச் சென்ற சகோதரியை வெகு நேரமாகியும் காணவில்லையே என்று தேடிக்கொண்டு அது குளக்கரைக்கு வந்தது. மானைக் கண்டதும் முன் போலவே அதைக் கொல்ல வேடன் வில்லை எடுத்தான். அப்போதும் அவன் வைத்திருந்த பாத்திரத்திலிருந்து சில துளிகள் நீரும் கிளையிலிருந்து வில்வதளமும் சிவலிங்கத்தின் மீது விழுந்தன.

வேடன் அம்பு எய்ய யத்தனிக்கும் போது மான் அவனைப் பார்த்து, "என்ன செய்யப் போகிறாய்" என்று வினவ, அவனும் அதைக் கொன்றுத் தன் குடும்பத்தாரின் பசியை தீர்க்கப் போவதாகக் கூறினான்.

பெண்மான் அவனைப் பார்த்து "ஐயா என் உடலால் சில உயிர்கள் பசியைத் தணித்து பிழைத்திருக்க முடியும் என்பதைக் கேட்டுச் சந்தோஷம் கொள்கிறேன். இந்த உபகாரமாவது செய்ய என்னால் முடிந்ததே என்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே. இருப்பினும் எனக்குச் சில குட்டிகள் இருக்கின்றன. அவற்றை என் கணவனிடம் ஒப்புவித்துப் பாதுகாக்குமாறு கூறிவிட்டு உடனே திரும்பி விடுகிறேன். அதுவரை எனக்கு அவகாசம் கொடு" என்று வேண்டியது.

"உன் வார்த்தையை நம்ப முடியாது. நீ ஏமாற்றி விடுவாய்" என்றான் வேடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஐயா, அப்படி எண்ணாதே. நான் வார்த்தைத் தவறி நடக்க மாட்டேன். என்னை நம்பு நான் மறுபடியும் உன்னிடத்தில் வராவிட்டால், அசத்தியமான வார்த்தைகள் சொன்னவர்கள், அதுவரை தாங்கள் செய்த புண்ணியங்களை இழந்து எந்த பாபத்தில் போவார்களோ, அந்தப் பாபத்தில் நானும் போவேன். பூமியை அடிக்கடி காலால் உதைப்பவரும், கற்புள்ள மனைவியை விட்டு, விலக்கான சோர ஸ்திரீயிடம் சென்ற வரும், வேதங்களில் சொல்லப்பட்டதற்கு மாறாக நடப்பவரும், விஷ்ணுவிடம் பக்தி கொண்டு சிவனைத் தூஷிப்பவரும், சிவனிடம் பக்தி கொண்டு விஷ்ணுவைத் தூஷிப்பவரும், தாய் தந்தையர்களின் வருஷாப்திகத்தை விட்டுவிட்டவரும், இதமான வார்த்தைகளைக் கூறிப் பின்னர் வஞ்சிப்பவர்களும் அடையும் பாபங்கள் என்னைச் சேரட்டும்" என்றது மான்.

வேடனும் அதன் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு முன்போலவே அதைப் போக விடுத்தான்.

இரண்டாம் ஜாமம் முடிந்து மூன்றாம் ஜாமம் தொடங்கியது. குளக்கரைக்கு வந்து சென்ற இரண்டு பெண்மான்களின் கணவனான ஆண் மான் அவை இரண்டையும் தேடிக் கொண்டு அங்கே வந்தது. நன்றாகக் கொழுத்திருந்த அதைப் பார்த்ததும் 'இதுவே நல்ல வேட்டை' என்று எண்ணியவனாய் வேடன் வில்லை எடுத்து அம்பைப் பூட்டினான். அப்போதும் அவனிடமிருந்த பாத்திரத்திலிருந்து ஜலம் தளும்பி ஒரு சொட்டு சிவலிங்கத்தின் மீது விழுந்தது. கிளையிலிருந்த சில வில்வ தளங்களும் சிவலிங்கத்தின் மீது உதிர்ந்தன.

வேடன் அம்பெய்ய யத்தனிப்பதைக் கண்ட ஆண் மான், "ஐயா, என்னை கொல்லப் போகிறாயா ?" என்று கேட்டது. வேடனும் முன் போலவே அதனிடம் தன் குடும்பத்தாரின் பசி தீர்க்கக் கொல்லப் போவதைத் தெரிவித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஐயா, தங்கள் குடும்பம் என் ஒருவனால் பிழைத்திருக்கு மென்றால் நான் பிறவியெடுத்ததானது வியர்த்தமாகவில்லை. எனக்குச் சில குட்டிகள் இருக்கின்றன. அவற்றை பாதுகாப்பாக ஒப்புவித்து விட்டு உடனே திரும்பி விடுகிறேன். அதுவரை எனக்கு அவகாசம் கொடு" என்று கேட்டது.

வேடன் அதற்குச் சம்மதிக்கவில்லை. "இப்படித்தான் இரண்டு மான்கள் சொல்லிவிட்டுச் சென்றன. அவை திரும்பி வரவே இல்லை. உன்னையும் விட்டுவிட்டு என் குடும்பத்தைப் பட்டினி கிடக்கும்படி விடச்சொல்கிறாயா ?" என்று கேட்டான்.

"ஐயா, உன்னை ஏமாற்றிவிட்டுத் தப்பித்துச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. உனக்கு எப்படி வேண்டுமானாலும் பிரமாணம் செய்கிறேன். பொய் சொல்லுகிறவன் அந்த க்ஷணத்திலே அவன் செய்த புண்ணியங்களை இழந்து விடுவான். நான் உண்மையே பேசுகிறேன். சந்தியாவந்தன காலத்திலும் சிவராத்திரியிலும் போஜனம் செய்பவன், பொய்சாக்ஷி சொன்னவன், அடகு வைத்த பொருளை அபகரித்துக் கொண்டவன், புசிக்கத் தகாதவற்றைப் புசித்தவன் ஆகியோர் அடையும் பாபங்கள் நான் வார்த்தை தவறுவேனாகில் என்னைப் பீடிக்கட்டும்" என்றது மான்.

வேடன் அதையும் போய் வர அனுமதித்தான். ஆண் மான் தன் இருப்பிடத்தை நோக்கி ஓட்டமாய் ஓடியது.

அங்கே இரண்டு பெண் மான்களும் கணவனுக்காகக் காத்திருந்தன. ஆண்மான் வந்ததும் மூன்றும் கூடி நடந்தவற்றைப் பரிமாறிக் கொண்டன.

பெண் மான்களில் மூத்தது "சகோதரி, நீ இங்கு இருந்து கொண்டு நம் குழந்தைகளையும் கணவரையும் காத்து வா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான் முதலில் வாக்குக் கொடுத்ததால் நானே வேடனுக்கு இரையாகச் செல்கிறேன்'' என்றது.

இளைய மானோ, "அக்கா, அதெப்படி நீ போக முடியும்? நான் இரண்டாவது தாரமல்லவா, உங்களுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருப்பதைத் தவிர என்ன வேலை இருக்கிறது? நீ இங்கிருந்து கணவரையும் குழந்தைகளையும் காப்பாற்றி வா. நான் போகிறேன்'' என்றது.

ஆண் மானோ, 'அவர்கள் இருவரும் அங்கிருக்கட்டும் என்றும், தானே போவதாகவும்', தெரிவித்தது. கடைசியில் மூன்றுமாக ஒன்றுகூடிக் குட்டிகளை வேறொரு மானிடம் ஒப்புவித்து விட்டு வேடனிடம் வந்தன.

இதற்குள் மூன்றாம் ஜாமம் முடிந்தது. நான்காம் ஜாமம் வந்துவிட்டது. மான்களைக் காணவில்லையே என்று வருத்தத்துடன் உட்கார்ந்திருந்த வேடன் அம்மூன்றும் ஒருங்கே வருவதைக் கண்டதும் மகிழ்ச்சியால் துள்ளினான். அப்போதும் அவன் கையிலிருந்த பாத்திரத்திலிருந்து சிறிது ஜலமும் மரத்திலிருந்து சில வில்வ தளங்களும் பகவானின் மீது விழுந்தன. அவன் ஜீவ வதை செய்யும் ஒரே உள்ளத்தைக் கொண்டிருந்தவனாகிலும், அன்றைய தினம் சிவராத்திரி தினமாகையால், சிவபெருமானை நான்கு ஜாமங்களிலும் உபவாசமிருந்து கண் மூடாது பூஜித்த பலனைப் பெற்றான். அப்போதே அவன் நல்லறிவு பெற்றுவிட்டான்.

"ஆஹா, கேவலம் மிருகங்கள். இருப்பினும் தாங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற எனக்கு இரையாக வந்துள்ளன. நானோ இவர்களை விட எத்தனையோ மேன்மையான மானிடப் பிறவியை அடைந்துள்ளேன். அந்தப் பாவங்களை எல்லாம் எப்படிப் போக்குவிப்பேனோ? நடந்தது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடந்துவிட்டது, இனியாகிலும் உத்தம வாழ்க்கை நடத்த வேண்டும்'' என்று எண்ணித் துக்கித்தவனாய் கையிலிருந்து வில்லை முறித்து எறிந்தான்.

“ஏ மிருகங்களே, நீங்கள் உத்தமமானவர்கள். வார்த்தையைக் காப்பாற்றச் சொன்னபடியே வந்துள்ளீர்கள். உங்களைக் கொல்ல மாட்டேன். ஏன், இனி ஜீவவதை செய்யவே மாட்டேன். நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள். உங்களால் என் மூட அறிவு அகன்றது'' என்றான்.

அதே சமயம் ஐந்து முகத்தோடு பகவான் கைலாசநாதன் அங்கே தோன்றினார்.

“வேடனே, சிவராத்திரி அன்று தெரிந்தோ தெரியாமலோ சிவபூஜை செய்தவர்கள் எப்பேர்ப்பட்ட பாபியாக இருந்தாலும் மோக்ஷத்தை அடைவார்கள். நான்கு ஜாமங்களிலும் உன்னால் நான் அபிஷேகம் செய்விக்கப்பட்டு வில்வ தளத்தால் அர்ச்சிக்கப்பட்டேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்'' என்றார்.

“பிரபோ, தங்கள் தரிசனம் கிட்டிய பிறகு எனக்கு வேறு என்ன வேண்டியிருக்கும் ? இத்தனை காலமாக அறியாமையின் காரணமாக ஜீவவதை செய்து வந்திருக்கிறேன் அந்தப் பாபங்கள் அகல அனுக்கிரகிக்க வேண்டும்'' என்று வேண்டினான் வேடன்.

சிவபெருமான் மகிழ்ச்சி அடைந்து அவனைப் பார்த்து மேலும் சொன்னார்.

“வேடா, இன்று முதல் நீ குகன் என்ற பெயரோடு விளங்கி வருவாய். உன் பெருமை நான்கு திசைகளிலும் பரவும். எல்லோரும் உன்னைக் கொண்டாடுவார்கள். அயோத்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னன் தசரதன் மைந்தனாகப் பிறந்து, தந்தை வாக்கைக் காப்பாற்றும் நிமித்தம் வனத்துக்கு வருவார் மகாவிஷ்ணு. அவரோடு உனக்குத் தோழமை ஏற்பட்டு உன் மகிமை மேலும் விளங்கும்'' என்று அருளினார்.

அப்போது மான்களின் குட்டிகளும் அங்கே வந்து சேர்ந்தன. தாயும் தந்தையும் நற்காரியத்துக்காக வேடனுக்கு இரையாகச் செல்லும்போது தங்களுக்கும் அந்தப் பாக்கியம் கிட்டட்டுமென்று குளக்கரைக்கு வந்து சேர்ந்தன. பகவான் மான்களுக்கும் அதன் குட்டிகளுக்கும் மோக்ஷத்தை அளித்து மறைந்தார்.

நைமிசாரணியவாசிகளுக்குச் சிவராத்திரி மகத்துவத்தை எடுத்துச் சொன்ன சூதர், மேலும் அதன் மகிமையை விளக்க இன்னொரு விருத்தாந்தத்தைச் சொல்லத் தொடங்கினார்.

32. சிவாலயத்தில் தீபம் ஏற்றுவதால் உண்டாகும் பலன்

அவந்தி பட்டணத்தில் கல்வி கேள்விகளில் சிறந்த பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் ஒழுக்க நெறிகளைச் சிறிதும் வழுவாது கடைப்பிடித்து வந்தார். அவருக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தனர். அவர்களுக்கு சுந்தி, வேதநிதி என்று பெயர்.

இருவரில் சுந்தி தந்தையைப் போல் ஒழுக்க நெறிகளைக் கொண்டவன். பெற்றோர்களின் முகம் கோணாது பணிவிடை புரிந்து வந்தான். இளையவனான வேதநிதியோ வேத சாஸ்திரங்களில் வல்லவனாயிருந்த போதிலும், பரஸ்திரீ லோலனாக விளங்கி வந்தான். சதா, வேசியர் வீட்டிலேயே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்து வந்தான். தாய் தந்தையர் எவ்வளவு கடிந்து பேசியும் அவன் திருந்துவதாயில்லை.

ஒரு நாள் பண்டிதருக்கு அரசாங்கத்தில் விலை மதிப்பற்ற சன்மானம் கிடைத்தது. அவருடைய அறிவுத் திறமையைப் பாராட்டி, விலைமதிப்பற்ற ரத்தினம் பதிக்கப்பெற்ற மோதிரம் ஒன்றைப் பரிசு அளித்துக் கௌரவித்தான் அரசன். அதைப் பெற்று வீடு திரும்பிய பண்டிதர் தம் மனைவியை அழைத்து அவளிடம் அதைக் கொடுத்து யாருக்கும் தெரியாது பத்திரப்படுத்தி வைக்குமாறு கூறினார்.

இளைய மகனான வேதநிதி இதைப்பற்றி அறிந்தான். ஒரு நாள் யாரும் அறியாமல் அந்த மோதிரத்தைக் களவாடிச் சென்று தன் மனத்துக்கு இனியவளான வேசிக்கு பரிசாக அளித்து விட்டான்.

சில நாட்களுக்குப் பின்னர், ஒருநாள் அந்த வேசி, அரசன் முன்னிலையில் நாட்டியமாடச் செல்கையில், அந்த மோதிரத்தை அணிந்து சென்றாள்.

நாட்டிய மாதின் விரலில் பண்டிதருக்குத் தான் அளித்த மோதிரம் இருப்பதைக் கண்ட அரசன் திடுக்கிட்டான். அவளை அழைத்து மிரட்டிக் கேட்டபோது பண்டிதரின் மகனால் தனக்குப் பரிசாக அளிக்கப்பட்ட விஷயத்தைத் தெரிவித்து விட்டாள்.

அரசனுக்குக் கோபம் வந்து விட்டது. உடனே பண்டிதரை வரவழைத்தான்.

“மன்னவா, என்னைப் பார்க்க வேண்டுமென்று அழைத்தீர்களாமே?” என்று வணங்கிக் கேட்டார் பண்டிதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“ஆம், பண்டிதரே, நான் தங்களுக்கு ஒரு மோதிரம் பரிசு கொடுத்தது நினைவிருக்கிறதா? அதைக் கொண்டு வாருங்கள். இன்னொன்று அதே போலச் செய்ய வேண்டும், செய்ததும் உம்மிடம் தந்து விடுகிறேன்” என்று தெரிவித்தான் அரசன்.

வீடுதிரும்பிய பண்டிதர் மனைவியிடம் மோதிரத்தைக் கேட்டார். மோதிரம் அகப்படவில்லை. வீடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை. அதுதான் வேசியிடமிருக்கிறதே!

அரண்மனை திரும்பிய பண்டிதர், அரசனிடம் மோதிரம் காணாமற் போய்விட்டதென்று தெரிவித்தார். அரசனோ மோதிரத்தை அவருக்குக் காட்டி அது வந்த விதத்தையும் விவரித்தார். பண்டிதருக்கு அவமானமாகி விட்டது.

சோர்ந்த முகத்தோடு வீடு திரும்பிய பண்டிதர், தன் இளைய மகனான வேதநிதியை அழைத்து, ‘இனி வீட்டிலே நுழையக் கூடாதென்று’ அடித்து விரட்டினார். தந்தையால் விரட்டப்பட்ட வேதநிதி வேசியின் வீட்டுக்குச் சென்றான். அங்கேயும் கதவு தாழிடப்பட்டிருந்தது. வீட்டைவிட்டு விரட்டப்பட்டான் என்பதை அறிந்ததும் அவனால் இனி தனக்குப் பிரயோசனம் எதுவுமில்லையென்று அவனைச் சேர்க்க மறுத்துவிட்டாள்.

வேதநிதி அனாதையானான். பகல் முழுவதும் அன்ன ஆகாரமின்றி அலைந்தான். அஸ்தமித்தபோது அவனுக்குப் பசிபொறுக்க முடியவில்லை. எங்காவது ஒரு கவளம் உணவு கிடைக்காதா என்று தவித்தான்.

அன்று சிவராத்திரி தினம். சிலர் சிவாலயம் சென்று பூஜை செய்துவர பூஜை பொருட்களுடன் போய்க் கொண்டிருந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்களைக் கண்ட வேதநிதி அவர்களோடு சென்றால் பூஜை முடிந்ததும் ஏதாவது ஆகாரம் கிடைக்கும் என்று அவர்களைத் தொடர்ந்து சென்றான். சிவாலயத்தை அடைந்த அவர்கள் பகவானுக்கு அபிஷேகம் முதலியன செய்து மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்தனர். பலகார வகைகள் பலவற்றை பகவானின் முன் படைத்து நிவேதனம் செய்தனர். முதற்கால பூஜை முடிந்ததும் அவர்கள் வீடு திரும்பி நீராடி இரண்டாம் கால பூஜைக்கான பூஜை பொருட்களை எடுத்து வரச் சென்றனர்.

வேதநிதிக்குப் பசி பொறுக்க முடியவில்லை. சந்நிதியின் முன்பு இருந்த ஒரு சிலரும் தூங்கி விழுந்து கொண்டிருந்தனர். மெல்ல கர்ப்பகிருகத்துக்குள் நுழைந்தான். விளக்கில் சுடர் மங்கலாயிருந்தது. ஆகவே அவன் தன் வேட்டியிலிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறிது துணியைக் கிழித்துத் திரியாக்கி, விளக்கிலிட்டு சுடரைத் தூண்டி விட்டான். விளக்கும் பிரகாசமாக எரியத் தொடங்கியது. அதன் ஒளியில் அங்கே படைத்திருந்த பலகாரங்களைத் தன் மேல் துணியில் வாரிக் கட்டிக் கொண்டு மெல்ல வெளியேறினான்.

அவன் செல்வதைக் கண்ட சிலர் 'திருடன் திருடன்' என்று கத்தினர். காவலர்கள் ஒடி வந்தனர். அவர்களிடம் அகப்பட்டு விடக் கூடாது என்று வேதநிதி ஓடத் தொடங்கினான். காவலர்கள் அவனைப் பிடிப்பது இயலாதென்பதை உணர்ந்து வில்லில் அம்பெய்தி அவனை அடித்தனர். துரதிர்ஷ்டவசமாக அவர்கள் எய்த அம்பு ஒன்று அவன் முதுகில் பாய்ந்து இருதயத்திலே செருகியது. 'ஆ' வென்று அலறிக் கொண்டு தரையில் விழுந்த வேதநிதி அப்படியே உயிரை விட்டான்.

பெரும்பாவியான அவனை நரகத்துக்கு அழைத்துச் செல்ல யமதூதர்கள் வந்தனர். அப்போது சிவகணங்கள் அங்கே வந்து அவர்களைத் தடுத்தனர்.

"இவனைக் கைலாசத்துக்கு அழைத்து வருமாறு சிவபெருமானுடைய உத்தரவு" என்றனர் கணங்கள்.

"அதெப்படி முடியும்? இவனோ பெரும்பாவி, பெற்றவர்களைக் காப்பாற்றாது வேசியர் வீட்டிலேயே காலம் முழுவதும் கழித்தவன். தான் கற்ற வித்தையை மறந்த துரோகி. இவன் நரகத்துக்கே அழைத்துச் செல்லப்பட வேண்டியவன்" என்றனர் யமதூதர்கள்.

"இருக்கலாம். ஆயினும் இன்று சிவராத்திரி தினம். இவனோ ஆகாரமின்றி உபவாசமிருந்திருக்கிறான். சிவாலயம் சென்று சிவபூஜையைக் கண்டிருக்கிறான். சாதாரண தினங்களிலே சிவாலயத்தில் தீபம் போடுபவர்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்தனையோ புண்ணியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கச் சிவராத்திரி அன்று அணைந்துவிட இருந்த தீபத்தைச் சுடர் விட்டு எரியச் செய்திருக்கிறான். எல்லாவற்றுக்கும் மேலாக இன்று இரவு இவன் இறந்திருக்கிறான். அதனால் இவன் செய்த பாபங்கள் நசிந்து விட்டன. சிவலோகம் செல்லும் பாக்கியம் இவனுக்குக் கிட்டியிருக்கிறது" என்றனர் சிவ கணங்கள்.

யமதூதர்களோ அதற்குச் சம்மதியாது தங்கள் தலைவனிடம் சென்று அனுமதி பெறவேண்டும் எனக் கூறி சிவகணங்களுடன் தர்மராஜனை அடைந்தனர். விஷயத்தை அறிந்ததும் தர்மராஜன் சிவகணங்களை வணங்கி, அவர்கள் கூறியபடி வேதநிதி சகல பாபங்களினின்றும் நீங்கியவனாகி விட்டான் எனக் கூறி அவர்களிடம் அவனை ஒப்படைக்க உத்தரவிட்டான். சிவகணங்கள் வேதநிதியைச் சிவலோகத்துக்கு அழைத்துச் சென்றனர். அடுத்த பிறவியில் அவன் கலிங்க நாட்டு மன்னனாக பிறந்து சகல போகங்களையும் அனுபவித்தான்.

33. தேவியை விரும்பிய அரக்கன்

ருரு என்னும் பெயரை உடைய அசுரன் ஒருவன் ஒரு சமயம் சிவபெருமானின் பத்தினியான தாக்ஷாயணியைக் கண்டான். லோகமாதாவின் அழகு, அரக்கனின் உள்ளத்தில் அப்படியே பதிந்து விட்டது. தேவியை எப்படியாவது அடைய வேண்டுமென்ற ஆவலில் பிரம்மதேவனைக் குறித்துக் கடுமையான தவம் மேற்கொண்டான்.

பிரம்மதேவன் அவன் தவத்துக்கு மெச்சி அவன் முன்பு தோன்றி, "உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பிரபோ, தாக்ஷாயணியை நான் மனைவியாக அடைய வேண்டும். சிவபெருமான் எனக்கு அடங்கியவராக இருக்க வேண்டும்" என்று கோரினான் அசுரன்.

அவன் வார்த்தைகளைக் கேட்ட பிரம்மதேவன் திடுக்கிட்டார்.

"அடே தூர்த்தா, என்ன வார்த்தை சொன்னாய்? லோகமாதா உனக்கு மனைவியாக ஆகவேண்டுமா? லோகரக்ஷகனான சிவபெருமான் உனக்கு அடங்கி நடக்க வேண்டுமா? இது எந்தக் காலத்திலும் நடக்க முடியாதது. என் வார்த்தையில் நம்பிக்கையில்லாவிடில் தேவியிடமே நேரில் சென்று உன் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள். அப்போதே சிவபெருமான் உன்னை சம்ஹரிப்பார்" என்று சொல்லி மறைந்தார் பிரம்மதேவன்.

அதைக்கேட்ட ருரு, அங்கிருந்து நேராக கைலயங்கிரிக்குச் சென்று பரமசிவனைக் குறித்துத் தவம் இயற்றினான். கடுமையான தவத்தை மேற்கொண்டுள்ள அவன் உடலிலிருந்து, யோகாக்கினி எழுந்து நாற்புறங்களையும் தகித்தது. சர்வேச்வரனான சிவபெருமான் அந்த யோகாக்கினியின் உஷ்ணத்தைத் தாங்கமாட்டாதவர் போலத் தாக்ஷாயணியை அழைத்துக் கொண்டு வேறு இடத்துக்குச் செல்ல யத்தனித்தார்.

அப்போது தேவி அவரைப் பார்த்து, "சுவாமி, ஏன் வேறிடத்தைத் தேடிப் போகவேண்டும்? இந்த உஷ்ணத்தை உம்மால் அடக்க முடியாதா என்ன? " என்று கேட்டாள்.

"தேவி, ருரு என்னும் அரக்கன் உன்னையே மனைவியாக அடைய வேண்டுமென்று தவம் செய்கிறான். அவன் கோரும் வரத்தை அளிக்க முடியாதிருக்கிறது. ஆகவே, இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோகாக்கினியிலிருந்து விலகி இருக்கவே வேறு இடம் நாடிச் செல்ல நினைத்தேன். நீயே அசுரனுக்குப் பிரத்தியக்ஷமாகி அவன் தவத்தை அழிக்க வேண்டும்'' என்றார் சிவபெருமான்.

அசுரன் கொண்டிருந்த தகாத ஆசையைக் கேட்டதும் தேவி கடுங்கோபம் அடைந்தாள். பார்க்கப் பயங்கர ரூபத்தோடு அரக்கியாக மாறிய தேவி, வனத்திலே திரிந்து கொண்டிருந்த மதம் பிடித்த யானையையும் சிங்கத்தையும் வதம் செய்து அவற்றின் தோலை உரித்து எடுத்து ஆடையாக அணிந்து கொண்டாள். பின்னர் அசுரனின் முன் சென்று, "அரக்கனே! இதோ நான் வந்திருக்கிறேன். எந்தத் தாக்ஷாயணியை அடைய வேண்டுமென்று! தவம் புரிகிறாயோ, அவளே இதோ உன் முன் நிற்கிறாள். கண்ணைத் திற'' என்றாள்.

கண்ணைத் திறந்து பார்த்த அரக்கன், அக்கோர ரூபத்தைக் கண்டதும், "நீ தாக்ஷாயணி அல்ல. அந்தச் சுந்தர ரூபத்துக்கும் இந்தக் கோர ரூபத்துக்கும் எத்தனை வித்தியாசம். இங்கே இனி ஒரு க்ஷணமும் நிற்காதே, உன்னை எரித்துச் சாம்பலாக்கி விடுவேன்'' என்று கர்ஜித்தான்.

"உன்னால் முடியாத காரியம் அது ? '' என்றாள் தேவி.

அசுரன் அண்டசராசரங்களும் கிடுகிடுக்கக் கர்ஜித்தவ னாய் தேவியை அடிக்க ஓடி வந்தான். தேவி அவனைத் தன்கை முட்டியால் ஓங்கி அடித்தாள். அசுரனோ மாயையால் பல அஸ்திரங்களைத் தருவித்துத் தேவி மீது எய்தான். தேவியும் அவன் விடுத்த அஸ்திரங்கள் அனைத்தையும் தவிடு பொடியாக்கி அவனைத் தன் கரங்களால் தூக்கி இரண்டாகக் கிழித்தாள். அவன் உடலிலிருந்து பூமியிலே சிந்திய ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் அவனைப் போன்ற பலசாலிகள் ஆயிரக் கணக்காகத் தோன்றினர். தேவி தன்னுடைய யோக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலத்தால் பதிலுக்கு அனேக சைனியங்களைப் படைத்தாள். அவர்கள் அரக்கர்களை அழித்து அவர்களுடைய இரத்தம் ஒரு துளிகூடப் பூமியில் சிந்தாது உறிஞ்சினர். ருரு மாயையால் வாயு ரூபம் கொண்டு சகல லோகங்களிலும் இமைக்கும் நேரத்தில் புகுந்து புறப்பட்டுத் தேவியின் கைகளில் சிக்காது ஓடினான்.

தேவியின் கோபம் பன்மடங்காகியது. விண்ணுக்கும் மண்ணுக்குமாகப் பெரும் உருவத்தோடு எங்கும் வியாபித்து நின்றாள் தேவி. அவள் விசுவரூபத்தைக் கண்டு தேவர்கள் நடுநடுங்கினர்.

மெல்ல நழுவப் பார்க்கும் அரக்கனைப் பிடித்து அவன் உடலைக் கை முட்டிகளால் பலமுறை குத்தினாள். அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடலிருந்து இரத்தம் கொப்புளித்தது. அப்படியே வாய் வைத்து உறிஞ்சினாள் தேவி. பின்னர் அவன் உடலைக் கிழித்து மாமிசத்தைப் புசித்தாள். அவன் மண்டையோட்டிலே சிறிது இரத்தத்தை ஏந்தி, சிவபெருமானிடம் வந்து நீட்டினாள். அசுர சம்காரத்தால் வெறி கொண்டிருந்த தேவியைச் சாந்தப்படுத்த அதை வாங்கிப் பருகிய ஈசன் அவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டு மகிழ்ச்சி நிறைந்த வார்த்தைகளைக் கூறினார். தேவி தாம் அணிந்திருந்த இரு தோல்களையும் ஈசனுக்கு அன்போடு கொடுத்தார். சிவபெருமான் அவற்றை வாங்கி, சிங்கத்தோலை இடையில் உடுத்திக் கொண்டும், யானைத் தோலை மேலுக்குப் போர்த்திக் கொண்டார். தேவியும் மகிழ்ந்து சாந்தமுற்றுத் தன் சுந்தர வடிவை அடைந்தாள்.

34. நதி தீரத்தில் நல்லதோர் நாடகம்

ஒரு சமயம் பாணாசுரனுடைய பட்டணமான சோணித புரிக்கு அருகே உள்ள நதி தீரத்தில் சிவபெருமான் எழுந்தருளினார். அவருடைய அற்புத கோலத்தைக் காண தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலானோர் அங்கு கூடினர். முனிவர்கள், பரமனின் திவ்விய கோலத்தைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியவர்களாய் வேதகோஷங்களால் பகவானைப் பணிந்து போற்றினர். தேவர்கள் பகவானின் திவ்விய நாமங்களை ஒலித்தனர். அப்சரசுகள் கண்ணுக்கு விருந்தாக அற்புத நாட்டியம் ஆடினர். கின்னரர்கள் கீதம் இசைத்தனர். எங்கும் மகிழ்ச்சி ஆறாகப் பெருகி ஓடியது.

அந்த நேரத்தில் தேவியும் அங்கிருந்தால் நல்லது என எண்ணினார் ஈசன். உடனே நந்திதேவரை அழைத்து, “இப்போதே கைலாசம் சென்று பார்வதியை அலங்கார பூஷிணியாக அழைத்து வா” என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்திதேவர் உடனே கையிலயங்கிரி சென்று தேவியிடம் சிவபெருமானுடைய விருப்பத்தைத் தெரிவித்துவிட்டு வந்தார். பார்வதி ஈசன் விருப்பப்படி தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள். திரும்பவும் பரமசிவனிடம் வந்து தேவி தயாராகிக் கொண்டிருப்பதாகக் கூறினார், நந்திதேவர்.

"நந்தீ, நீ சென்று பார்வதியை அழைத்து வா" என்று அவசரப்படுத்தினார் ஈசன்.

நந்திதேவர் மீண்டும் கைலாசத்துக்கு ஓடினார். பார்வதி தன்னுடைய தோழிகள் ஐவரை நந்தி தேவருடன் அனுப்பி வைத்து விரைவில் தான் வந்து சேருவதாகப் பரமசிவனிடம் தெரிவிக்குமாறு கட்டளையிட்டாள்.

சிவபெருமான் முன்பு கூடியிருந்த அப்சரசுகளிடையே தர்க்கம் ஒன்று நடந்தது. தங்களுக்குள் யார் சிறந்தவள் என்பதை அறிய அவர்கள் விரும்பினர். அவர்களிடையே ஒருமித்த முடிவு உண்டாகாததால் அவர்கள் சிவபெருமானையே கேட்பதென்று தீர்மானித்தனர்.

யார் பகவானை நெருங்கிக் கேட்பது?

இதைக் கவனித்துக் கொண்டிருந்த பாணாசுரன் மந்திரியான குபாண்டன் என்பவனின் மகள் சித்திரலேகைக்கு, தோழிகளுடன் சேர்ந்துகொண்டு ஒரு வேடிக்கை செய்ய விருப்பம் உண்டாயிற்று.

விஷ்ணுவின் தொடையிலிருந்து தோன்றியதால் ஊர்வசி என்ற பெயரைக் கொண்ட அப்சரசை நந்தி தேவரைப்போல் வேடம் புனையச் செய்தாள். கிருதாசி என்பவள் காளியாகவும், விசுவாசி என்பவள் சண்டிகையாகவும் வேடம் புனைந்தார்கள். அதேபோல் சாவித்திரியாக ப்லம்லோகையும், காயத்திரியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேனகையும் வேஷம் தரித்துக் கொண்டனர். ஜயை விஜையையாக ஸஹஜந்யா என்பவளும், புஞ்ஜகஸ்தலி என்பவளும் மாறினர். விநாயகராக கரதூஸ்தலி என்பவள் உருமாறினாள்.

சித்திரலேகை கௌரியாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அவளைப் பார்ப்பவர்கள் கைலாசத்திலிருந்து பார்வதிதான் வந்துவிட்டாளோ என எண்ணத் தோன்றும் விதத்தில் தோற்றம் அளித்தாள் அவள். அவளுடைய தோழிகள் கூடப் பிரமித்துவிட்டனர். அவ்வளவு தத்ரூபமாக அமைந்து விட்டது அந்த வேஷம்.

பின்னர் நந்தி தேவராக வேடம் புனைந்திருந்த ஊர்வசி, தோழிகள் பின் தொடர சித்திரலேகையை அழைத்துக் கொண்டு சிவபெருமானிடம் சென்றாள். அவர்களைக் கண்ட மாத்திரத்திலேயே அங்கு குழுமியிருந்த தேவர்களும், முனிவர்களும் எழுந்து நின்றனர். பார்வதி தேவியார் வந்துவிட்டார் என்ற பேச்சு எங்கும் பரவியது. அவர்கள் செல்லும் வழியில் இருந்த தேவர்களும் முனிவர்களும் வேதகோஷங்களை எழுப்பி வரவேற்றனர்.

ஊர்வசி நந்தி வேடம் தரித்திருந்த மற்றவர்கள் பின்னால் வர ஈசனை நெருங்கி வணங்கினாள்.

"பிரபோ, தங்கள் கட்டளைப்படி கைலாயத்திலிருந்து தேவியை அழைத்து வந்துள்ளேன்" என்று ஆண் குரலில் தெரிவித்தாள்.

சர்வ வியாபியான ஈசுவரனுக்குத் தெரியாதா அவர்கள் விளையாடுகின்றனர் என்பது? மகிழ்ச்சியோடு பொழுதைக் கழிக்க அங்கே கூடியிருக்கும் அந்நேரத்தில் அவர்களைக் கடிந்து கொள்ள விரும்பவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மை தானே வெளியாகும்போது அவர்கள் படும் அவஸ்தையைக் கண்டு களிக்க எண்ணம் கொண்டவராய், எதுவுமே தெரியாதது போல் இருந்தார்.

"தேவி, உன் வருகைக்காகத்தான் எல்லோரும் காத்திருக்கிறோம்" என்று சொன்னவராய் சித்திரலேகையைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று தன்னருகில் உட்காரச் செய்தார்.

தேவமாதர்கள் பார்வதி தேவியார்தான் அமர்ந்திருப்பதாக எண்ணி மலர்களைத் தூவி கீதம் இசைத்தனர். சித்திரலேகையின் நெஞ்சம் துணுக்குற்றது.

அதே சமயம் தொலைவில் ஏதோ ஆரவாரம் கேட்கவே அனைவரின் கவனமும் அங்கே திரும்பியது. சிவகணங்கள் புடைசூழ பார்வதி வருவதைக் கண்டதும் அனைவரும் பிரமித்தனர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சிவனருகே தேவி அமர்ந்திருக்கும் போது எதிரே வருவது எங்ஙனம்?

திரும்பி ஈசனைப் பார்த்தனர். அவரோ ஒன்றும் நடவாதது போல எதிர்கொண்டு சென்று தேவியை அழைத்து வந்து தன்னருகே நிறுத்தினார்.

சிவனருகிலே தன்னைப் போன்று ஒருத்தி அமர்ந்திருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டாள் பார்வதி. தன்னுடன் வந்திருந்த தோழிகளைப் போன்று சிவனின் அருகில் நின்று கொண்டிருந்த கிருதாசி போன்றவர்களைக் கண்டதும் அவள் குழப்பம் மேலும் அதிகரித்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இரண்டு விநாயகரைக் கண்டாள். இருவரில் யார் தன்னுடைய குமாரன் என்பது அவளுக்குப் புரியவில்லை. தன்னோடு கைலாயத்திலிருந்து வந்திருப்பவர்கள் வேடதாரிகளோ என்ற குழப்பம் எழுந்தது பார்வதிக்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்வதியை எதிரில் கண்டதும் சித்திரலேகை சப்தநாடியும் அடங்கியவளாகி விட்டாள். அவள் நினைத்திருந்ததே வேறு! தங்களைக் கண்டதும் தேவர்கள் பார்வதி தேவியார்தான் வந்து விட்டாள் என்று நம்பி எழுந்திருப்பார்கள் என்றும் அப்போது ஈசன் அவர்களுக்கு தாங்கள் போட்ட வேஷத்தை வெளிப்படுத்தி எல்லோரையும் திகைக்க வைப்பார் என்றே எதிர்பார்த்தாள் அவள்.

அந்த வேடிக்கை, அங்கே நிலவியுள்ள மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் மேலும் சந்தோஷத்தையே உண்டாக்கும் என்று எண்ணியே அவள் அத்திட்டத்தை மேற்கொண்டாள். ஆனால், ஈசனே அவளைப் பார்வதியாக அழைத்துச் சென்று மஞ்சத்தில் அமர்த்தியபோது அவளுக்குப் பெரும் சங்கடமாகிவிட்டது. அந்தப் பெரும் குழப்பத்திலிருந்து விடுபடுவது எவ்வாறு என்பதை உணராது தவித்தாள். தேவர்களும் தேவமாதர்களும் அவள் தவிப்பை வேறு விதமாக எடுத்துக்கொண்டு அவளுக்கு மேலும் உபசாரங்கள் செய்தனர். ஈசனின் முன்பு தன் மீது எல்லோரும் அபரிமிதமாக அன்பைச் சொரிகிறார்களே என்று நாணுவதாகவே அவர்கள் எண்ணினார்கள். ஈசன் அந்த விளையாட்டை மேலும் ஏன் தொடர்ந்து நடத்துகிறார் என்பதை அவள் அறியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் போது அவள் முன்பு பார்வதியே வந்து நிற்கும்போது எப்படியிருக்கும்? சித்திரலேகை தவித்துக் கண்ணீரால் தரையை கழுவி விட்டாள் என்றே சொல்லலாம். அந்தப் பயத்தில் அவள் கொண்டிருந்த மாயத்தோற்றம் தானாகவே மறைந்தது. அந்த நிலையிலேதான் அவள் தோழிகளும் இருந்தனர்.

உண்மை வெளிப்பட்டதும் தேவர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. எல்லோரும் தேவியையே வியப்புடன் நோக்கினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்திரலேகை உடல், பதட்டத்தால் துடித்தது. இரு கைகளையும் கூப்பியவளாய் விழிகளில் நீர் திரையிட எழுந்தாள்.

"தேவி, மன்னித்து விடுங்கள், வேடிக்கை செய்ய வேண்டும் என்று நினைத்தேன். வினையாக முடிந்து விட்டது. இவ்வளவு தூரத்துக்குப் போகும் என எதிர்பார்க்கவில்லை" என்று வாய் குழறச் சொன்னவள், அப்படியே பார்வதியின் கால்களில் விழுந்துவிட்டாள்.

பார்வதி, பக்கத்திலே நின்றிருந்த ஈசனைப் பார்த்தாள். அவர் முகத்திலே மெல்லிய புன்னகை மலர்ந்தது. அதைக் கண்டதும் தேவியின் உள்ளத்திலே எழுந்த கோபம் அகன்றது. குனிந்து சித்திரலேகையைத் தூக்கினாள்.

"தேவி, என் கணவரை என்னிடமே ஒப்புவித்துவிட வேண்டும்" என்று உடலைக் கூனிக் குறுகிக்கொண்டு சித்திரலேகையிடம் பார்வதி வரம் கேட்டபோது அவள் சிரித்து விட்டாள். பார்வதியும் மகிழ்ச்சியோடு அவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

தேவர்களும் தேவமாதர்களும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் பெரும் ஆரவாரம் செய்தனர்.

அங்கே நிலவிய சந்தோஷத்தைக் கண்டபோது பாணாசுரன் குமாரத்தியான உஷையின் உள்ளத்தில் சிறிது வருத்தம் ஏற்பட்டது. தனக்கொரு காதலன் இருப்பானாகில் அவனோடு எவ்வளவு மகிழ்ச்சிகரமாகப் பொழுதைப் போக்கியிருக்கலாம் என்றும் அந்தநாள் எப்போது வருமோ என்றும் நினைத்தபோது அவள் முகம் வாடியது.

பார்வதி இதைக் கவனித்தாள். அங்கே குழுமியிருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வளவு பேருடைய முகமும் மலர்ந்திருக்க, உஷை மட்டும் வேதனையோடு இருப்பதைக் கண்டதும் அவள் உள்ளத்தில் குமுறும் எண்ணத்தை அறிந்தாள். அவளைப் பக்கத்திலே இழுத்து நிறுத்திக் கொண்டாள்.

"ராஜகுமாரி, வருத்தப்பட வேண்டாம். உன் உள்ளத்தில் அலைபாயும் எண்ணத்தை நான் அறிவேன். மகிழ்ச்சியோடு இருக்கக்கூடிய காலம் விரைவில் வரும். இப்போதிருந்து ஏழாவது மாதத்தில் வைகாசி சுக்ல பக்ஷத்துவாதசி அன்றிரவு, நீ உபவாசமிருந்து அயர்ந்து நித்திரையிலிருக்கும்போது, உன்னை யார் அடைந்து இன்புறச் செய்கிறானோ அவனே உன் நாயகன் ஆவான்" என்று ஆசீர்வதித்தாள்.

உஷையின் வருத்தம் நீங்கியது. கண்கள் ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்க, அவள் தேவியைப் பணிந்து வணங்கினாள்.

35. உஷா பரிணயம்

பாணாசுரன் மிகுந்த சிவபக்தன். கடுமையான தவம் செய்து கணக்கற்ற வரங்களைப் பெற்றிருந்தான். அவனை மிஞ்சிய பலசாலி கிடையாது. தேவர்கள் அவனுக்குப் பணிந்து நடந்தனர்.

ஒரு சமயம் பாணாசுரன் மறுபடியும் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தான். அவன் தவத்துக்கு மெச்சி சிவபெருமான் அவனுக்குக் காட்சி தந்து, "உனக்கு வேண்டியது என்ன?" என்று கேட்டார்.

"பிரபோ, எனக்கு ஒரு குறைவும் இல்லை. தங்கள் அருள் கடாக்ஷம் பெற்ற எனக்குக் கிட்டாததுதான் என்ன? தேவர்களும் என்னைக் கொண்டாடுகின்றனர். எனக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிஞ்சிய வல்லமை கொண்டவன் யாருமில்லை. இத்தனை இருந்தும் உபயோகிக்க வழியில்லாது இருக்கிறது. என் தோள்கள் இரண்டும் தினவெடுக்கின்றன. எனக்கு இணையாகச் சண்டையிட ஒருவனும் பிறக்கவே இல்லையா? துருப்பிடித்துக் கிடக்கும் ஆயுதங்களைப் போல உறங்கிக் கிடைக்கும் என் சக்திகளை உபயோகிக்கக் கூடிய யுத்தம் எப்போது வரும்?" என்று கேட்டான் பாணாசுரன்.

ஈடு இணையற்ற பராக்கிரமத்தை உடைய பாணாசுரன் அதனால் ஏற்பட்ட கர்வத்தால் இவ்வாறு பேசுகிறான் என்பதை உணர்ந்த சிவபெருமான், "பாணாசுரா, உன் விருப்பம் விரைவிலேயே நிறைவேறப் போகிறது. தினவெடுக்கும் உன் தோள்களுக்கு நிறைய வேலை கொடுத்து, கடைசியில் அவற்றை அறுத்துத் தள்ளும் புருஷன் வருவான்" என்று சொல்லி மறைந்தார்.

சிவபெருமானின் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சி கொண்ட பாணாசுரன் தோள்களைத் தட்டிக் கொண்டு சென்றான்.

இவ்வாறு இருக்கும்போது, வைகாசி மாதம் வந்தது. சுக்லபக்ஷத் துவாதசி அன்று இரவு, உஷை உபவாசமிருந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பார்வதி தேவி அவளுக்கு அனுக்கிரகித்திருந்தபடி காரியங்களை நிறைவேற்ற முனைந்தாள்.

சிவபெருமான் ஏற்கனவே அறிவித்திருந்தபடி மன்மதன் துவாரகையில் கிருஷ்ணனின் புத்திரனாக பிரத்யும்னன் என்ற பெயரில் பிறந்திருந்தான். அவன் மகனான அநிருத்தனே உஷைக்கு ஏற்றக் கணவனாகத் தீர்மானித்த பார்வதி, இருவரையும் ஒன்று சேர்க்க எண்ணினாள். மாயையால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவாரகையிலிருந்து அநிருத்தனைத் தூக்கி வந்து அயர்ந்து நித்திரையிலிருக்கும் உஷையின் அருகில் விட்டாள்.

தந்தச்சிலை போன்ற அவளைக் கண்டதும் அநிருத்தன் ஒரு கணம் அசந்து போய் விட்டான். அவளைப் போன்ற அழகுப் பதுமையை அவன் கண்டதே இல்லை. அதே சமயம் கட்டிலிலிருந்த உஷையும் கண்விழித்து எழுந்தாள். எதிரே கட்டிளம் காளை ஒருவன் நிற்பதைக் கண்டதும் அவள் உள்ளம் இன்ப வெள்ளத்தில் திளைத்தது. விரகத்தால் உடல் சோர எழுந்திருந்தாள். அநிருத்தனும் அவளைக் கண்டதிலிருந்து அதே நிலையில்தான் இருந்தான். இருவரும் தங்களை மறந்தனர். ஒருவரில்லாது மற்றொருவர் இருக்க முடியாது என்ற அளவில் இருவருடைய உள்ளங்களும் இணைந்தன.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்காகக் காத்திருந்த தேவி உடனே தன் மாயையால் உஷையை மீண்டும் நித்திரையிலாழ்ந்திருக்கச் செய்து, அநிருத்தனை துவாரகையில் கொண்டு போய் விட்டு விட்டாள்.

கண் விழித்தபோது உஷையின் சிந்தனை முழுவதிலும் அநிருத்தனின் நினைவே ஆட்கொண்டிருந்தது. இங்குமங்கும் சுற்றிப்பார்த்து அவனைக் காணாது திகைத்தாள். "வைகாசி சுக்கிலபக்ஷ துவாதசி அன்றிரவு எந்த ஆடவன் உன்னைக் கூடுகிறானோ, அவனே உன் நாயகன்" என்று பார்வதி கூறியிருந்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

உஷையின் மனத்தில் அநிருத்தனின் உருவம் அழியாமல் பதிந்துவிட்டது. அவன் நினைவு அவளை வாட்டியது. கண்கள் அவனைத் தேடித் தேடி அலுத்து விட்டன. அவளுக்கு உணவில் மனம் செல்லவில்லை. தோழிகளோடு சரியாக பேசவும் இல்லை. உற்சாகமிழந்து அறையினுள்ளே கவிழ்ந்து கிடந்தாள். அவள் தளிர்மேனி வாடி விட்டது.

அரசகுமாரியிடம் ஓர் இரவுக்குள் நேரிட்ட இந்த மாற்றத்தைக் கண்டு தோழிகள் வியந்தனர். அவளை உற்சாகப்படுத்த என்னென்னவோ செய்தனர். கேலிப் பேச்சுகளைப் பேசினர். உஷையோ எதிலும் மனம் செல்லாமல் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள். அநிருத்தனின் நினைவு அவளை வாட்டி எடுத்தது. "அவன் யாரோ? எந்த நாட்டு அரசகுமாரனோ?" என்றெல்லாம் எண்ணி எண்ணி உருகினாள்.

மந்திரி குமாரத்தியான சித்திரலேகை, தோழியர்கள் அனைவரிலும் சற்று சூடிகையானவள். அரசகுமாரியின் சோர்வுக்குக் காரணத்தை ஊகித்துக் கொண்டாள். மெல்ல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உஷையைத் தனியே அழைத்துச் சென்று, அவளின் இந்த மாற்றத்துக்கான காரணத்தை தெரிவிக்குமாறு கேட்டாள். உஷை அவளிடம் இரவு, கனவு போல தோன்றி மறைந்த சம்பவத்தை விளக்கினாள்.

“சித்ரா, அந்த ராஜகுமாரன் எப்படி மறைந்தான் என்பது புரியவில்லை. அவன் போகும்போது என் உள்ளத்தையும் கொண்டு சென்று விட்டான். அவனைக் கண்டால்தான் என் இழந்த உற்சாகம் மீளும். இல்லையேல் அவன் நினைவிலேயே என் உயிர் பிரிந்து விடும்” என்றாள் உஷை.

சித்திரலேகை பலமுறை அவளைத் தூண்டித் தூண்டி அரசகுமாரனின் அங்க அடையாளங்களைத் தெரிவிக்கச் செய்தாள். அரசகுமாரி கூறக்கூற சித்திரலேகை நடு இரவிலே வந்து சென்ற அரசகுமாரன் துவாரகையிலிருக்கும் கிருஷ்ணனின் பேரனான அநிருத்தனே என்பதை அறிந்தாள்.

“ராஜகுமாரி, வருத்தப்படாதே. நான் இப்போதே நீங்கள் கூறிய அடையாளங்களைக் கொண்டு, வந்து சென்ற அரச குமாரன் யார் என்பதை அறிந்துவர ஏற்பாடு செய்கிறேன். என் ஊகம் சரியானால் அந்த ராஜகுமாரன் கிருஷ்ணனின் பேரனான அநிருத்தனாகவே இருக்க வேண்டும். நான் நினைப்பது தான் உண்மை என்பதானால் அந்த அரசகுமாரனை இங்கு அழைத்து வந்து உங்களிடம் சேர்ப்பிப்பது என் பொறுப்பு” என்றாள்.

தோழியின் உறுதிமொழிகளால் உஷை ஓரளவுக்கு வருத்தம் நீங்கியவளாய் அவள் முயற்சி வெற்றி பெறுமாறு பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டாள். சித்திரலேகை அன்றைக்கே இரகசியமாக ஒற்றர்களைத் துவாரகைக்கு அனுப்பி, இராஜகுமாரி குறிப்பிடும். அங்க அடையாளங்களை உடையவன் அநிருத்தன் தானா என்பதை அறிந்துவரச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்தாள். அவர்களும் விரைவிலேயே திரும்பி, அவள் குறிப்பிட்ட நபர் அநிருத்தனே என்பதை அறிவித்தனர்.

விஷயத்தை அறிந்தபோது உஷை உற்சாகத்தோடு தோழியை அழைத்து,"சித்ரா, இனி நீ எப்படி அரசகுமாரனை இங்கு அழைத்து வருவாய்? அப்பாவுக்குத் தெரிந்துவிட்டால் நம் எல்லோருக்கும் ஆபத்தல்லவா?" என்றாள்.

"ராஜகுமாரி, இன்றிரவு எப்படியாவது உங்கள் மனோ பீஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். இது உறுதி. ஆனால் ஒன்று மட்டும் கூறுகிறேன். விஷயம் அந்தப்புரத்தை விட்டுக் கொஞ்சமும் வெளிப்படாமல் இருக்குமானால் நீங்கள் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் மகிழ்ச்சியோடு இருக்கலாம்" என்றாள் சித்திரலேகை.

அன்றிரவு ஊரடங்கும் வரை காத்திருந்த சித்திரலேகை மாயாசக்தியால் துவாரகை சென்று அநிருத்தனின் அந்தப்புரத்தை அடைந்தாள். அங்கே கட்டிலில் அநிருத்தன் அயர்ந்து நித்திரையிலாழ்ந்திருந்தான். அவன் தூக்கம் கலையாது அப்படியே கட்டிலோடு தூக்கி வந்து உஷையின் கட்டிலருகில் விட்டாள்.

காதலனைக் கண்ட உஷை அடைந்த மகிழ்ச்சி சொல்லி முடியாது. அவன் கண் விழிக்கட்டுமென்று அருகில் அமர்ந்து விசிறிக் கொண்டிருந்தாள்.

பொழுது புலரும் நேரத்தில் அநிருத்தனின் நித்திரை கலைந்தது. அவன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்ததும் பக்கத்தில் உஷையைக் கண்டதும் திடுக்கிட்டு நாற்புறமும் திரும்பிப் பார்த்தான். தான் இருப்பது துவாரகையிலுள்ள தன் அந்தப்புரமில்லை என்பதை அறிந்தபோது அவனுக்கு வியப்பாக இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நான் எங்கிருக்கிறேன் ? எப்படி இங்கு வந்தேன் ?" என்று பரபரப்போடு உஷையைக் கேட்டான்.

"பிரபோ, தாங்கள் என் அந்தப்புரத்தில் இருக்கிறீர்கள். பாணாசுரன் குமாரத்தியான என் பெயர் உஷை என்பது" என்றாள் தலையைக் குனிந்தவாறு.

"துவாரகையிலிருந்த நான் இங்கு எப்படி வந்தேன் ?" என்று கேட்டான் அநிருத்தன்.

"நான் தங்களை என் தோழி சித்திரலேகை மூலம் இங்கு வரவழைத்தேன்" என்று கூறிய உஷை அனைத்து விஷயங்களையும் விவரித்தாள்.

உஷையின் மூலம் விவரங்களை அறிந்து அநிருத்தன் மிகுந்த ஆச்சரியமடைந்தான்.

"பிரியே, அன்றிரவு உன்னை நான் எப்படிச் சந்தித்தேன் என்பதே புரியவில்லை. உன்னைப் பிரிந்தது முதல் உன் நினைவே என்னை வாட்டி வருகிறது. நீ யார், எங்கிருக்கிறாய் என்ற விஷயங்களை அறியாது தவித்து வந்தேன். நாம் இருவரும் இணைவது தெய்வ சம்மதம் என்று தான் நினைக்கிறேன். அதன் காரணமாகவே இன்று நாம் மீண்டும் சந்திக்க நேர்ந்தது" என்றான் அநிருத்தன்.

அரசகுமாரியின் உற்சாகத்துக்குக் கேட்க வேண்டுமா ? சோகம் குடிகொண்டிருந்த அந்தப்புரத்தில் ஆனந்தம் நிறைந்தது. உஷை காதலனுடன் இன்பமாகப் பொழுதைக் கழித்து வந்தாள்.

நாட்கள் நகர்ந்தன. அந்தப்புரத்தில் நடந்துவரும் காதல் நாடகம் பற்றி மெல்லக் காவலர்களுக்குச் செய்திகள் தெரிய ஆரம்பித்தன. பலத்த காவலுக்கு உள்ளான அந்தப்புரத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடவன் எவ்வாறு நுழைந்தான்? அரசனுக்கு விஷயம் தெரியும் முன்பு தாங்களே தெரிவித்து விடுவது நல்லதென்று காவலர்கள் ஓடிச்சென்று பாணாசுரனிடம் விஷயத்தை அறிவித்தனர்.

அந்தப்புரத்தில் ஆடவன் ஒருவனுடைய நடமாட்டம் இருப்பதைக் கேட்டபோது அசுரன் மிகுந்த கோபம் அடைந்தான். அவன் எவ்வளவு துணிச்சலுள்ளவனாக இருந்திருந்தால் அசுரனுடைய அந்தப்புரத்தில் நுழைந்து இருக்க முடியும்? மந்திரி குபாண்டனை அழைத்தான்.

"இப்போதே சென்று, அவனைப் பிடித்து விலங்கிட்டு என் முன் இழுத்து வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

அரசனின் கட்டளைக்கு இணங்க தன்னைப் பிடித்துச் செல்ல மந்திரி வீரர்களுடன் வந்திருக்கிறார் என்பதைக் கேட்டபோது அநிருத்தன் கொஞ்சமும் கவலை கொள்ள வில்லை. தைரியமாக அவர்களை எதிர்த்தான். வீரர்களால் அவனை நெருங்க முடியவில்லை. தைரியத்துடன் நெருங்கிய ஒன்றிரண்டு பேர்களும் அவனால் அடிக்கப்பட்டுத் தரையில் வீழ்ந்தனர்.

அநிருத்தனின் பராக்கிரமத்தைக் கண்ட குபாண்டன் உடனே மேலும் வீரர்களை அனுப்பி அவனை எந்த விதத்திலாவது கைது செய்து வருமாறு உத்தரவிட்டான். அரக்க வீரர்களும் ஈட்டி முதலான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அநிருத்தன் இருக்குமிடத்தை அடைந்தனர்.

அநிருத்தன் அந்தப்புரத்திலிருந்த மரக்கட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு அவர்களை எதிர்த்தான். அந்த வீரர்கள் எறியும் ஈட்டிகளை லாகவமாகப் பிடித்து அதையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள்மீது திரும்பவும் எய்தான். வீரர்களால் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. திரும்பி ஓடினர்.

குபாண்டன் அரக்கனிடம் ஓடினான்.

“அரசே, அந்தப்புரத்தில் நுழைந்திருப்பது சாதாரண மானிடன் அல்ல. நம்முடைய விரோதிகளான தேவர்களே யாரையோ இங்கு அனுப்பி நமக்குத் துன்பம் விளைவிக்க முயன்றிருக்கின்றனர். நம்முடைய வீரர்கள் அனைவரையும் அவன் ஒருவனாகவே இருந்து எதிர்த்து விரட்டுகிறானென் றால் அவன் சாமர்த்தியத்தை உணர்ந்து கொள்ளலாம். நம் வீரர்கள் எறியும் ஈட்டிகளைப் பிடித்து அதையே அஸ்திரமாக்கி நம்முடைய வீரர்களை விரட்டியடிக்கிறான்” என்றான்.

அதைக் கேட்ட பாணாசுரன் மிகுந்த கோபம் அடைந்தவனாய்ப் புறப்பட்டான். நேராக அந்தப்புரத்தை அடைந்து அநிருத்தனைப் பிணைக்குமாறு நாகாஸ்திரத்தை ஏவிவிட்டான். கண்மூடிக் கண் திறப்பதற்குள் அஸ்திரம் அநிருத்தனைக் கட்டிவிட்டது.

“இவனை இழுத்துச் சென்று சிறையிலடையுங்கள்” என்று கட்டளையிட்டுவிட்டுத் திரும்பினான் பாணாசுரன். அசுர வீரர்கள் அநிருத்தனை சிறைக்கு இழுத்துச் சென்றனர்.

காராக்கிருகத்தில் அடைக்கப்பட்ட அநிருத்தன் பார்வதியைக் குறித்து உருக்கமாக வேண்டினான்.

“தேவி, உன்னையே சதாகாலமும் நம்பியிருக்கும் எனக்கு இந்தத் துன்பத்தை அளித்துவிட்டாயே. நானும் உஷையும் ஒன்று இணைவது உன்னுடைய அனுக்கிரகத்தில் தான் இருக்கிறது. எங்கள் இருவரையும் சேர்த்து வைத்ததே உன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முயற்சியால் தான். இன்று நான் அவளைப் பிரிந்து வாடுவதை நீ அறிந்திருப்பாய் என்றே நினைக்கிறேன்''

இவ்வாறு பலவிதமாக அநிருத்தன் தேவியைத் துதித்தான். அவன் மீது அன்பு கொண்டவளாய் தேவி அப்போதே சிறைச் சாலையை அடைந்து நாகாஸ்திரத்தின் கட்டுகளிலிருந்து அவனை விடுவித்து, உஷையின் அந்தப்புரத்தில் சேர்ப்பித்தாள்.

பலத்த காவல் இருந்தபோதிலும் அநிருத்தன் சிறைச் சாலை யிலிருந்து மாயமாக மறைந்து அந்தப்புரத்தை அடைந்து விட்டான் என்று கேள்விப்பட்டதும் அசுரன் சொல்லொனாச் சீற்றம் கொண்டான்.

“சிறு பிள்ளையாயிற்றே; விரைவில் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கோருவான் என்று சிறையில் அடைத்தேன். இனி அவனை ஒரு கணமும் உயிரோடு விட்டு வைக்கக் கூடாது” என்று கொதித்து எழுந்தான்.

இதற்குள் அநிருத்தனுக்கு நேர்ந்த அபாயத்தையும், அவன் அசுரனால் சிறையிலடைக்கப் பட்டிருப்பதையும் அறிந்த கிருஷ்ணன் பிரதியும்னனோடும், இதர வீரர்களோடும் சோணிதபுரிக்கு ஓடிவந்தார். பெரும் சேனையுடன் கிருஷ்ணனும் பிரத்தியும்னனும் வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்ததும் பாணாசுரன் தானும் யுத்தத்துக்குத் தயாரானான். குறுகிய நேரத்துக்குள்ளாகவே அசுர சேனைகள் வந்து குவிந்தன.

இரு தரப்பினருக்கும் கடுமையான யுத்தம் மூண்டது. கிருஷ்ணனுடன் வந்திருந்த வீரர்கள், அசுரசேனையில் புகுந்து வதம் செய்தனர். மாயாஜாலத்தில் வல்லவர்களான அசுர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரர்களை அதே மாயையாலே அழிக்கத் தலைப்பட்டனர் துவாரகையிலிருந்து வந்திருந்த வீரர்கள்.

பாணாசுரனின் கண்கள் கோவைப்பழம் போல் சிவந்து விட்டன. தினவெடுத்துக் கொண்டிருந்த இரு தோள்களையும் தட்டி விட்டுக் கொண்டு இரதத்திலேறி நேரிடையாக யுத்த களத்தில் நுழைந்தான்.

கிருஷ்ணன் அசுரனைத் தானே சந்திப்பதாக முன் வந்தார். மாறி மாறி அவன் விடுத்த அஸ்திரங்களைப் பயனற்றுப் போகச் செய்தார் கிருஷ்ணன். பின்னர் அவன் இருகைகளையும் துண்டித்து எறிந்தார். சக்கராயுதத்தை எடுத்து அசுரனின் ஆவியைக் குடிக்குமாறு ஏவ எத்தனித்தார். அப்போது யுத்தகளத்திலே கைலாசநாதரான சிவபெருமான் தோன்றி கிருஷ்ணனைத் தடுத்தார்.

“கிருஷ்ணா, சுதர்சனத்தைப் பிரயோகிப்பதை நிறுத்திக் கொள். பாணாசுரன் பரம பக்தன் ஆவான். தன்னை மிஞ்சக் கூடியவர் யாருமில்லை என்ற கர்வத்தில் தன்னோடு போர்புரிய எவனாவது பிறக்கமாட்டானா என்று கேட்டான். அவன் கர்வத்தை அடக்கி, அவன் கைகள் இரண்டையும் வெட்டித் தள்ளும் புருஷன் விரைவிலேயே தோன்றுவான் என அனுக்கிரகித்தேன். அதன் காரணமாகவே இந்த யுத்தம் நேரிட்டது. அவனுக்கு மிருத்தியு பயம் இல்லை என்று வரம் அளித்திருப்பதால் என் வாக்கு பொய்க்காதிருக்க அவனை விட்டுவிடு. அவன் ஆணவம் அழிந்துவிட்டது” என்றார்.

பாணாசுரன் கண்களிலிருந்து நீர் வழிந்தோட சிவபெருமானைத் துதித்தான். கிருஷ்ணன் அசுரனைக் கொல்வதை நிறுத்தி அவனுடன் வந்திருந்த வீரர்களை மட்டும் அழித்தார். பின்னர் அந்தப்புரத்திலிருந்து அநிருத்தன், உஷை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருவரையும் அழைத்துவரச் செய்து பிரத்தியும்னனிடம் ஒப்படைத்தார்.

நந்திதேவன் பாணாசுரனை நெருங்கி, "சிவபெருமானின் அருளால் உன் உயிர் பிழைத்தது. மீண்டும் அவரையே துதித்து அவரது சந்நிதானத்தில் நிருத்தியம் செய்து மகிழ்வித்தால் உனக்கு நற்கதி கிட்டும்" என்றார்.

பாணாசுரன் அதே கோலத்தோடு கைலாசநாதனின் சந்நிதானத்தை அடைந்தான். பகவானை அனேக ஸ்தோத்திரங்களால் துதித்து நிருத்தியம் செய்தான். ஈசனும் அவன்மீது கருணை கொண்டு அவனைப் பார்த்து "உனக்கு வேண்டிய வரம் என்ன?" என்று கேட்டார்.

"பிரபோ, என் உள்ளத்தில் நிறைந்திருந்த ஆணவத்தை அழித்துவிட்டீர்கள். என்னிடம் குடி கொண்டிருக்கும் அசுரத் தன்மை குறைந்து, நான் எல்லோரிடமும் விரோதமின்றி நட்போடு பழகக்கூடிய வழி வகுத்துத்தர வேண்டும். எனக்குப் பின் அநிருத்தனின் மகனாகப் பிறக்கப் போகிற விஸ்வஜித்தே சோணிதபுரிக்கு அரசனாக வேண்டும்" என்று கோரினான் அசுரன்.

ஈசுவரன் மகிழ்ந்தவராய், "அப்படியே ஆகட்டும்!" என்று அருளி அவனைத் தமது சிவகணங்களின் தலைவர்களுள் ஒருவனாக்கினார். அப்போதே அவன் வெட்டுண்ட கரங்கள் இரண்டும் புதிதாகத் தோன்றின. பாணாசுரன் இரு கரங்களையும் கூப்பி பகவானை உள்ளம் உருகத் துதித்தான்.

அநிருத்தன் வரலாற்றைச் சொன்ன சூதர், "முனிவர்களே, அநிருத்தனின் தந்தையான பிரத்தியும்னனும் இதைப்போன்ற சூழ்நிலையில் சிக்கிக்கொண்டது உண்டு. அதையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறுகிறேன் கேளுங்கள்" என்று சொல்லி விட்டு அந்த விருத்தாந்தத்தைத் தொடங்கினார்.

36. சும்ப நிசும்பர் வதம்

சிவபெருமான் அனுக்கிரகித்தபடி மன்மதன் பிரத்தியும்னன் என்ற பெயரில் கிருஷ்ணனின் மகனாகத் துவாரகையில் பிறந்து வளர்ந்து வந்தான். அதே சமயம் ரதிதேவி மயனுக்கு மகளாக பிறந்தாள். மாயாவதி என்னும் பெயரில் அவளை அன்புடன் அழைத்தனர். கண்டோரை மயக்கும் அழகை உடைய மாயாவதியைக் கண்ட சம்பரன் என்னும் அசுரன் அவளைத் தானே அடைய வேண்டுமென்று தூக்கி வந்து தன்னுடைய அரண்மனையில் வளர்த்து வந்தான். இரதியை அடைய பிரத்தியும்னன் வளர்ந்து வரும்போது, அரக்கனின் எண்ணம் நிறைவேறுமா? விதி அவனிடம் விளையாடியது. துவாரகையிலிருந்த பிரத்தியும்னனை அவன் யார் என்பதை உணராது தூக்கி வந்து தன் அரண்மனையிலேயே மாயாவதியுடன் வளர்த்து வந்தான்.

அசுரனின் அரண்மனையில் தன்னோடு வளர்ந்து வரும் மாயாதேவியே இரதிதேவி என்பதை அறிந்தபோது பிரத்தியும்னன் திடுக்கிட்டான். அவளை மணப்பதற்காக அல்லவா சம்பரன் வளர்த்து வருகிறான்! அதை எவ்விதம் அனுமதிப்பது? பிரதியும்னன் சம்பரனுடன் யுத்தத்துக்கு வந்து அவனைப் போரிலே கொன்று சம்பராரி என்ற பெயரை அடைந்து மாயாவதியை மீட்டுத் துவாரகைக்கு அழைத்துச் சென்றான்.

ஒரு நாள் பிரத்தியும்னன் உத்தியான வனம் ஒன்றில் உல்லாசமாக இருந்து வரும்போது, அவ்வழியே வந்த சும்பன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் அசுரன் அவனைக் கண்டான். கட்டிளம் காளையான அவனைக் கண்டதும் அப்படியே விழுங்கிவிட வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. இருப்பினும் சகோதரன் நிசும்பனுக்குக் கொடுக்கலாம் என்று பிரதியும்னனைத் தூக்கிச் சென்றான்.

அவனைக் கொண்டுபோய் நிசும்பனின் எதிரில் விட்டு, "அண்ணா, இதோ உன் ஆகாரத்துக்காக நல்ல இரையைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

நிசும்பன் அலட்சியமாகப் பிரத்தியும்னனை ஆகாயத்தில் தூக்கிப் பந்து போல எறிந்தான். உயரே சென்ற பிரத்தியும்னன் பக்கத்திலுள்ள அரக்கனின் உத்தியான வனத்திலே வந்து விழுந்தான்.

அந்த நேரத்தில் சும்பனின் குமாரத்தி லக்ஷ்மி உத்தியான வனத்தில் மகிழ்ச்சியோடு உலாவிக் கொண்டிருந்தாள். அவள் வரும் வழியிலேதான் பிரத்தியும்னன் மூர்ச்சித்து விழுந்து கிடந்தான். அவனைக் கண்டதும் லக்ஷ்மி பரபரப்போடு ஓடி வந்து தூக்கி அருகிலிருந்த மேடையில் படுக்க வைத்தாள். பக்கத்திலிருந்த தாமரைத்தடாகத்திலிருந்து நீர் மொண்டு வந்து அவன் முகத்திலே தெளித்து மூர்ச்சை தெளிய வைத்தாள்.

கண்விழித்து எழுந்த பிரத்தியும்னன் எதிரே அமர்ந்திருந்த மங்கையைக் கண்டதும் ஒன்றும் புரியாது விழித்தான்.

"அம்மணி, தாங்கள் யார்?..." என்று வினவினான் பிரத்தியும்னன்.

"ஐயா, என் பெயர் லக்ஷ்மி என்பது. என் தந்தையாகிய சும்பன் அரக்க குலத் தலைவனாவார். இது எங்கள் நந்தவனம். உலாவிக் கொண்டு வருகையில் பாதையில் மயங்கிக் கிடந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்களைக் காண நேர்ந்தது. தடாகத்திலிருந்து நீரைக் கொண்டு வந்து உங்கள் மயக்கத்தைத் தெளிய வைத்தேன்" என்ற அவள் தலையைத் தாழ்த்தியவாறு, "தாங்கள் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்? தெரிவிக்கலாமா?" என்று கேட்டாள்.

பிரத்தியும்னனின் மனத்திலே அவள் அழியா ஓவியமாகப் பதிந்துவிட்டாள்.

"லக்ஷ்மி, நான் துவாரகையைச் சேர்ந்தவன். என் பெயர் பிரத்தியும்னன் என்பது. பாண்டவர்களின் ஸஹ்யனான கிருஷ்ணனின் குமாரன். உத்தியான வனத்திலிருந்த என்னை உன் தந்தை தூக்கி வந்து தம் சகோதரரிடம் விட்டார். அவரோ என்னைப் பந்து போல் தூக்கி எறியவே இங்கு வந்து விழுந்திருக்கிறேன்" என்றான் அவன்.

லக்ஷ்மியின் கண்கள் கலங்கின.

"என் தந்தையின் அடாத செய்கைக்காக நான் பெரிதும் வருந்துகிறேன். தங்களுக்கு அவர் செய்த கொடுமைமையை மன்னித்து விடுங்கள். உங்களைத் துவாரகைக்குக் கொண்டு போய் சேர்ப்பிக்க ஆவன செய்கிறேன்" என்றாள் லக்ஷ்மி.

"உன்னை விட்டு விட்டுப் போகச் சொல்கிறாயா?" என்று கேட்ட பிரத்தியும்னன் எழுந்து நின்றவளின் கரத்தைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தான்.

"லக்ஷ்மியின் முகம் நாணத்தால் கவிழ்ந்தது. அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டு, "லக்ஷ்மி உன் தந்தையல்லவோ நம் இருவரையும் ஒன்று சேர்த்தார்" என்றான் பிரத்தியும்னன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருவரும் அங்கேயே காந்தர்வ முறைப்படி மணந்து கொண்டனர். அந்தச் சமயத்தில் சும்பன் அங்கே வந்து சேர்ந்தான். புதுமணத் தம்பதிகளாக நிற்கும் அவர்களைக் கண்டதும் அவன் உடல் கோபத்தால் துடித்தது.

"அடே, என்ன காரியம் செய்தாய்?" என்று கர்ஜித்தபடி அவர்களை நெருங்கினான்.

பிரத்தியும்னன் சரமாரியாக அம்புகளை விடுத்துச் சும்பனை நெருங்க முடியாது செய்தான். அசுரனின் உள்ளம் ஆத்திரத்தால் குமுறியது. நாகாஸ்திரத்தை விட்டு அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பிணைத்துக் கட்டினான்.

"அடே, சிங்கத்தின் குகையிலே சுண்டெலிக்கு அவ்வளவு துணிவா? உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று பல்லைக் கடித்தபடி அவர்களைக் கொண்டு போய் விந்திய மலையில் ஓரிடத்தில் காவலில் வைத்தான். பின்னர் சில நாட்களுக்கெல்லாம் இமயமலைச் சாரலில் விதஸ்தா நதி தீரத்தில் வஜ்ர பஞ்சரம் கட்டி அதில் காவலில் வைத்தான்.

பிரத்தியும்னன் பார்வதியைக் குறித்துப் பலவிதமாக வேண்டினான். அவன் உள்ளம் மகிழக் கண்ணீர் விட்டுக் கதறினான்.

தேவி அவனைக் கைவிடவில்லை. நாகணவாய்ப் பறவையாக மாறி பறந்து சென்று அவர்களை அடைந்தாள். அவர்களைப் பிணைத்திருந்த நாகாஸ்திரத்திலிருந்து விடுவித்தாள்.

காதலர் இருவரும் தங்களைப் பிணைத்திருந்த நாகாஸ்திரத்தின் கட்டுகளிலிருந்து விடுபட்டதும் தேவியைப் பணிந்து வணங்கினர். பார்வதி அவர்களுக்குத் தமது சௌந்தர்ய ரூபத்தைக் காட்டி அருளினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதற்குள் விஷயம் அறிந்து சும்பர், நிசும்பர் இருவரும் அசுரப்படைகளுடன் ஓடி வந்தனர். சௌந்தர்ய தேவதையாகப் பார்வதியைக் கண்டபோது அவர்கள் தாங்கள் வந்த காரியத்தை மறந்தனர். தேவியைத் தாங்களே அடைய எண்ணம் கொண்டு தங்களை மணக்குமாறு வேண்டினர்.

அந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபட பார்வதி ஓர் உபாயம் செய்தாள்.

“உங்கள் இருவருடைய கோரிக்கையையும் எப்படி நிறைவேற்ற முடியும் ? நீங்களே உங்களுக்குள் ஒரு முடிவுக்கு வாருங்கள். உங்கள் இருவரில் யார் பலவானோ அவனுடைய கோரிக்கையை நிறைவேற்றலாம். நீங்களே உங்களில் பலவான் யார் என்பதைக் கண்டு சொல்லுங்கள்” என்றாள்.

சும்பன் சகோதரனைப் பார்த்து, “அடே உன்னைவிடப் பலவான் நான். பேசாமல் இங்கிருந்து போய்விடு. எனக்குப் போட்டியாக வராதே” என்றான்.

நிசும்பனோ தம்பியின் வார்த்தைகளைக் கேட்டு ஆத்திரம் கொண்டவனாய், “உன்னைவிட நான் எத்தனையோ மடங்கு பலசாலி,தெரியுமா ? ”என்றான்.

“ இல்லை...! ” என்று கர்ஜித்தான் சும்பன்.

“பார்த்து விடுவோம் ?” என்று அவன்மீது பாய்ந்தான் நிசும்பன்.

அடுத்த க்ஷணம் இருவரும் ஒருவரையொருவர் மூர்க்கத்தோடு தாக்கிக் கொண்டனர். மலைச்சிகரங்களைப் பெயர்த்து எடுத்து அதனால் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டனர். முடிவில் இருவருமே அழிந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்வதி காதலர்களுக்கு அனுக்கிரகம் செய்து அவர்களைத் துவாரகையில் கொண்டு போய்ச் சேர்த்தாள்.

37. அமிர்தம் கடைதல்

முன்பு ஒரு சமயம் அரக்கர்கள் வலிமை மிகுந்து விளங்கினார்கள். அவர்கள் தேவர்களைத் துன்புறுத்தி அவர்களைப் பல கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள். தேவர்கள் ஒன்று கூடிப் பிரம்மதேவனைச் சரண் அடைந்தார்கள்.

"பிரபோ, தாங்கள்தான் எங்களை ரக்ஷிக்க வேண்டும். அரக்கர்கள் நாளுக்கு நாள் வலிமை கொண்டு எங்களை விரட்டி வருகிறார்கள். அவர்களை எதிர்த்து தாக்கும் சக்தி எங்களுக்கு இல்லை. எங்கள் மீது கருணை கொண்டு அரக்கர்களை வெல்லும் சக்தியும், அழிவில்லாத வாழ்வையும் அளிக்க வேண்டும்" என்று வேண்டினர்.

"தேவர்களே உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற என் ஒருவனால் மட்டும் முடியாது. பாற்கடலில் சயனித்திருக்கும் விஷ்ணுவையும் கேட்போம்" என்று சொல்லிப் பிரம்மதேவன் அவர்களை விஷ்ணுவிடம் அழைத்துச் சென்றார்.

அவர்கள் வேண்டுகோளைக் கேட்ட விஷ்ணு, "தேவர்களே, அரக்கர்களை வெல்லும் சக்தியும், நித்தியத்துவமும் பெறுவதற்கு ஓர் உபாயமிருக்கிறது. கடலில் உள்ள அமிர்தத்தை வெளிப்படுத்தி அதைப் பருகினால் உங்களுக்கு அழிவு என்பதே இல்லாது போய் விடும். ஆயினும் உங்களால் மட்டுமே இக்காரியத்தைச் செய்ய முடியாது. உங்கள் சகோதரர்களாகிய அசுரர்களும் இதற்கு பரிபூரணமாக ஒத்துழைக்க வேண்டும்" என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர்களின் முகம் வாட்டமடைந்தது.

“பிரபோ, அசுரர்களைக் கூட்டாகச் சேர்த்துக் கொண்டால் அவர்களும் அமிர்தத்தில் பங்கு கேட்கக்கூடுமே. அழிவற்ற வாழ்வை அசுரர்களும் அடைந்துவிட்டால் பிறகு எங்கள் கதி ?” என்றனர் வேதனையோடு.

“நீங்கள் அவர்களையும் உதவிக்கு அழைத்து வாருங்கள். பிறகு நடப்பதை நான் கவனித்துக் கொள்கிறேன்” என்றார் நாராயணன்.

தேவர்கள் ஆனந்தத்தோடு அசுரர்களிடம் ஓடினர்.

“அன்புமிக்க சகோதரர்களே, வாருங்கள். நாம் அழிவற்ற வாழ்வை அடைய சமுத்திரத்திலிருந்து அமிர்தத்தைக் கடைந்து எடுப்போம்” என்று அழைத்தனர்.

அழிவற்ற வாழ்க்கையை அடையும் மார்க்கத்தைக் கேட்டதும் அசுரர்கள் தேவர்களோடு தாங்கள் கொண்டிருந்த விரோதத்தை மறந்தனர். அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று வந்தனர்.

மந்திர மலையைக் கொண்டு வந்து மத்தாக நிறுத்தினர். வாசுகி தாம்புக் கயிறாக மாறியது. தேவர்கள் பாம்பின் வால் பக்கத்திலே நின்றார்கள். அசுரர்கள் தலைப்பக்கத்தில் நின்று வாசுகியைப் பிடித்துக் கொண்டனர். வால் பக்கத்தில் நிற்பதை அவர்கள் விரும்பவில்லை. மதிப்புக் குறைவு என்று தலைப் பக்கமே தங்களுக்கு வேண்டுமெனக் கேட்டனர்.

இருதரப்பினரும் மலையைக் கடையத் தொடங்கினர். நீரிலே மலை சரியாக நில்லாது அடிக்கடி சாய்ந்தது. விஷ்ணு கூர்மமாக உருவெடுத்து மலையின் கீழ் சென்று அதைத் தமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதுகிலே தாங்கிக் கொண்டார். அதன்பின் மலை சாயாது நின்றது.

தேவர்களும் அசுரர்களும் உற்சாகமாக மாறி மாறி வாசுகியை இழுத்துக் கடைந்தனர். நாட்கள் நகர்ந்தனவே ஒழிய கடலிலிருந்து அமிர்தம் வெளிவரவில்லை. தேவர்கள் அசுரர்களை உற்சாகப்படுத்தினர். தற்போது சிரமமாக இருந்தாலும் அமிர்தம் கிடைத்து விட்டால் அப்புறம் அழிவே இல்லையே. ஆகவே அவர்களும் சிரமத்தைப் பொருட் படுத்தாது மலையைக் கடைந்தனர்.

வாசுகியினால் பொறுக்க முடியவில்லை. மூச்சுவிடத் திணறினாள். தன்னுடைய ஆயிரம் முகங்களிலிருந்தும் விஷத்தைக் கக்கினாள்.

தலைப்புறமிருந்த அசுரர்களால் விஷத்தின் வேகத்தைத் தாங்க முடியவில்லை. அவர்கள் மேனி கருமை அடைந்தது. பிடியை விட்டுவிட்டு நாற்புறமும் ஓடினர். தேவர்களும் விஷப்புகையால் திண்டாடினார்கள்.

"பிரபோ, க்ஷீராப்தி நாதா!..." என்று விஷ்ணுவைத் துதித்தார்கள்.

விஷ்ணு வெளிப்பட்டு அவர்களைப் பயப்படாதிருக்குமாறு செய்து, விஷத்தைக் கட்டுப்படுத்த முயன்றார். அவராலும் முடியவில்லை. விஷம் பட்டதால் அவருடைய உடலும் கருமையாகிவிட்டது.

பிரம்மதேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. நாராயணனா லேயே விஷத்தின் கடுமையைக் குறைக்க முடியவில்லை என்றால் மற்றவர்கள் பாடு ஆபத்தாகி விடாதா? பயந்து போய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர்களை அழைத்துக் கொண்டு கையிலயங்கிரிக்கு ஓடினார்.

“பிரபோ, சர்வேசா, அமிர்தம் பெறும் நிமித்தம் பாற் கடலைக் கடையும் போது வாசுகி கடுமையைத் தாங்கமுடியாது ஆயிரம் முகங்களாலும் விஷத்தைக் கக்கி விட்டாள். அதன் வேகத்தை ஒருவராலும் தாங்கமுடியவில்லை. பிரபோ, சகல புவனங்களும் அழிந்து விடும் எனத் தோன்றுகிறது. தாங்கள் தான் எங்களை ரக்ஷிக்க வேண்டும்” என்று வேண்டினர்.

சிவபெருமான் அந்த ஆலகால விஷத்தைத் தம் கையில் ஆகர்ஷித்துக் கொண்டார்.

“தேவர்களே, இப்போது என்ன செய்வது? விட்டு விடட்டுமா? அல்லாது நானே சாப்பிட்டு விடட்டுமா?” என்று கேட்டார்.

“மகேச்வரா, தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. விஷத்தை வெளியிட்டால் மீண்டும் நாசம் அல்லவா உண்டாகும்” என்றனர் தேவர்கள்.

ஈசன் அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்தபடி உள்ளங்கையிலிருந்த கொடிய விஷத்தை அப்படியே விழுங்கினார். பக்கத்திலிருந்த பார்வதி சட்டென்று ஈசனின் கழுத்தைப் பிடித்துக் கொண்டார்.

“நாதா, என்ன காரியம் செய்து விட்டீர்கள், அண்ட சரா சரங்களும் தங்கள் உதரத்தில் அடக்கமில்லையா? விஷத்தை விழுங்கி விட்டீர்களே!” என்று பதைபதைத்துக் கேட்டாள்.

தேவியின் கைப்பட்ட மாத்திரத்திலேயே விஷம் கீழிறங்காது தொண்டையிலேயே தங்கிவிட்டது. தேவர்கள் அடைந்த ஆச்சரியம் சொல்லி முடியாது. பகவானை நீலகண்டன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும், ஸ்ரீகண்டன், நஞ்சுண்டன் என்றும் துதித்துக் கொண்டாடினார்கள்.

கொடிய விஷத்தால் ஏற்படவிருந்த அபாயம் நீங்கியதும் அசுரர்களும் தேவர்களும் மறுபடியும் மலையைக் கொண்டு கடலைக் கடைந்தனர்.

கடலிலிருந்து லக்ஷ்மி தோன்றினாள். ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்கும் முகக் காந்தியோடு சர்வாபரண பூஷிதையாக வெளிப்பட்ட அவளை விஷ்ணு ஏற்றுக் கொண்டார். அடுத்தாற் போல் தன்வந்தரி வெளிப்பட்டார். அவர் அனைவருக்கும் மருத்துவனாக ஆனார்.

அதன்பின்னர் சந்திரசூரியர், கல்பகத்தரு, உச்சைசிரவசு, காமதேனு, கௌஸ்துபம் ஆகியவை வெளிவந்தன. காமதேனு, பாரிஜாதம் எனப்படும் கல்பகத்தரு, உச்சைசிரவசு எனப்படும் வெள்ளைக் குதிரை ஆகிய மூன்றையும் தேவர்களுக்கு அதிபதியான இந்திரன் எடுத்துக் கொண்டான். கௌஸ்துபம் விஷ்ணுவை அடைந்தது.

முதலில் வருவதை தேவர்கள் எடுத்துக்கொள்ளட்டும். அமிர்தம் வந்ததும் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம் எனத் திட்டமிட்டிருந்தனர் அசுரர்கள். தங்கள் திட்டத்தைத் தேவர்கள் அறிந்து கொள்ளாதிருக்கவே, அவர்களிடம் பிரியம் கொண்டவர்கள் போல், முதலில் வெளிப்பட்டவற்றை தேவர்களே எடுத்துக்கொள்ள அனுமதித்தனர்.

அனைவரும் எதிர்ப்பார்த்திருந்த அமிர்தம் வெளிப்பட்டது. அப்போது அதன் சில துளிகள் நாற்புறமும் சிந்தவே அவற்றிலிருந்து அழகிய ரூபலாவண்யமுள்ள மங்கையர்களாக அப்சரசுகள் தோன்றினர். அசுரர்கள் சட்டென்று தேவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எதிர் பாராத வேளையில் அமிர்த கலசத்தைக் கைக் கொண்டு ஓடினர். தேவர்கள் திகைத்துப்போய் தாங்கள் ஏமாந்து விட்டதை விஷ்ணுவிடம் கூறிப் பிரலாபித்தனர்.

மகாவிஷ்ணு அப்போது செளந்தர்ய தேவதையாக மாயையால் மோகினி உரு எடுத்துக் கொண்டு அசுரர்களிடம் சென்றார். அவர்களிடையே அமிர்தத்தைப் பகிர்ந்து கொள்வதில் தகராறு எழுந்தது. விஷ்ணு, அசுரர்களை அருகில் அழைத்து, தம்மிடம் கலசத்தைக் கொடுத்தால், தேவர்களுக்குத் துளித் துளி கொடுத்து விட்டு அவர்களுக்கு அதிகம் கொடுப்பதாக உரைத்தார்.

மோகினியின் மயக்கும் வடிவைக் கண்ட அசுரர்கள் அந்த அழகிலே மனம் லயித்துப் போய்ப் பாத்திரத்தை அவளிடம் கொடுத்தனர். பாற்கடலிலிருந்து தோன்றிய அப்சரசுகளை அழைத்து அசுரர்களின் மனத்தை மயக்கி அவர்கள் கவனத்தை வேறு பக்கம் ஈர்க்குமாறு சொல்லிவிட்டு, விஷ்ணு அமிர்தம் முழுமையையும் தேவர்களுக்கே கொடுத்துவிட்டார். அமிர்தபானம் முடிந்ததும் தேவர்கள் தேவலோகம் சென்று விட்டனர்.

சிறிது நேரத்துக்குப் பின்னரே அசுரர்களுக்கு அமிர்தம் பற்றிய நினைவு வந்தது. அப்சரசுகளை விட்டுவிட்டு ஓடி வந்த போது காலியான பாத்திரமே இருந்தது. தேவர்கள் போய் விட்டனர்.

தாங்கள் ஏமாற்றப்பட்டதை எண்ணியபோது அசுரர்களுக்குப் பெரும் கோபம் உண்டாயிற்று. அப்சரசுகளைப் பாதாள லோகத்துக்கு அனுப்பிவிட்டுத் தேவர்களுடன் யுத்தத்துக்கு வந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமிர்தம் பருகியதனால் தேவர்கள் புது வலிமை பெற்று விளங்கினார்கள். பலவகை அஸ்திரங்களோடு வந்து அசுரர்களுடன் போரிட்டனர். விஷ்ணுவும் சக்கராயுதத்தை ஏந்தி யுத்தகளத்தில் புகுந்து எதிரிகளை நாசமாக்கினர். அசுரர்களில் அனேகர் தேவர்களால் எய்யப்பட்ட அஸ்திரங்களால் அழிக்கப்பட்டனர். எஞ்சிய சிலர் உயிர்தப்ப எண்ணிப் பாதாள லோகத்துக்குள் சென்று பதுங்கினர். விஷ்ணு அவர்களையும் ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பாதாள லோகத்துள் சென்றார்.

மாயையைத் தோற்றுவித்து அரக்கர்களை ஏமாற்றிய விஷ்ணு தாமே அந்த மா்யையில் சிக்கிக்கொண்டார்.

பாதாளலோகத்தில் இருந்த அப்சரசுகளைக் கண்டதும், அவர்களது ரூப சௌந்தர்யங்களில் மயங்கித் தாம் வந்த வேலையை மறந்துவிட்டார். அவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சி கரமாகப் பொழுதைக் கழிக்கத் தொடங்கினார். விஷ்ணுவுக்கு அப்சரசுகளிடம் அனேக புத்திரர்கள் உண்டானார்கள்.

இப்படியிருக்க, அசுரர்களை அழித்து வருவதாகப் பாதாளலோகம் சென்ற விஷ்ணு திரும்பாததைக் கண்டு தேவர்கள் மிகுந்த கவலை கொண்டனர். அரக்கர்களின் கை ஓங்கியிருக்கிறதோ என்று பயந்தனர். எப்படியும் அவர்களை அழித்து மீளுவார் என்ற நம்பிக்கையில் காத்திருந்தனர்.

பல நாட்கள் ஓடிவிட்டன. விஷ்ணு திரும்பவில்லை. அதன்மீது அவர்கள் சிவபெருமானிடம் ஓடிச் சென்று விஷயத்தை அறிவித்தனர்.

"சர்வலோக சரண்யா, பாதாள லோகம் சென்ற விஷ்ணு திரும்பவில்லை. அவரில்லாமல் அநேக காரியங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தடைப்பட்டு நிற்கின்றன. அவருக்கு என்ன ஆயிற்று என்பதும் தெரியவில்லை'' என்று முறையிட்டனர்.

சிவபெருமானுக்கு விஷயம் தெரிந்து விட்டது. தான் செல்லாமல் விஷ்ணு வெளிப்படமாட்டார் என்பதை உணர்ந்து ரிஷபமாக உருவெடுத்தார். கையில் வில்லைத் தாங்கிச் சென்று பாதாள லோகத்தில் நுழைந்தார்.

உள்ளே சென்றதும் வில்லின் நாணைச் சுண்டி, ஹுங்காரம் செய்தார். அதன் சப்தத்தில் பாதாள லோகமே கிடுகிடுத்தது. விஷ்ணுவின் புத்திரர்கள் யாரோ எதிரி வந்திருக்கிறான் என்று பகவானுடன் யுத்தத்துக்கு வந்தனர். அவர்கள் அனைவரையும் ஈசன் நொடிப் பொழுதில் சம்ஹாரம் செய்தார்.

யாரோ ரிஷப ரூபத்தோடு பாதாளலோகம் வந்து அனைவரையும் அழித்து அட்டகாசம் செய்வதாக விஷ்ணுவுக்குச் செய்தி எட்டியது. சக்கராயுதத்தைக் கூட எடுக்க நேரமில்லாது ஓடி வந்தார் விஷ்ணு. அவரைக் கண்டதும் ஈசன் 'கல கல' வென நகைத்து, "நாராயணா, ரக்ஷிக்கும் தொழில் எல்லாம் நன்றாக நடந்து வருகின்றன போல் தோன்றுகிறது!'' என்று ஏளனமாகக் கேட்டார்.

அந்த க்ஷணத்திலேயே நாராயணன் தாம் சிக்கியிருந்த மாயையிலிருந்து விடுபட்டார். தம்முடைய நிலையைக் கண்டதும் அவருக்கே அவமானமாகிவிட்டது. இரு கைகளையும் கூப்பி சிவபெருமானை வணங்கி, "பிரபோ, என்னை மன்னித்து விடுங்கள். நான் சிருஷ்டித்த மாயையில் நானே சிக்கிக் கொண்டுவிட்டேன்'' என்றார்.

"நாராயணா, நீயில்லாமல் வைகுந்தத்தில் எத்தனையோ வேலைகள் தடைப்பட்டு இருக்கின்றன. இப்போதே புறப்படு'' என்றார் சங்கரன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பிரபோ, சுதர்சனம் அரண்மனையில் இருக்கிறது, எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்றார் நாராயணன்.

"தேவையில்லை. நான் உனக்கு வேறு சக்கராயுதம் தருகிறேன். அது இங்கேயே இருக்கட்டும். இங்கு தவறு செய்பவர்களைத் தண்டித்து நல்வழிப்படுத்த, அது இங்கேயே இருக்கட்டும்" என்ற ஈசன் மனத்தாலே சுதர்சனம் ஒன்றை வரவழைத்து நாராயணனுக்கு அளித்தார்.

வைகுந்தம் திரும்பிய நாராயணனிமிடருந்து பாதாள லோக நிகழ்ச்சிகளைத் தேவர்கள் அறிந்துபோது பரவசமானார்கள். அங்குள்ள அழகிகளைத் தாங்களும் அடைந்து அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினார்கள். தேவர்களின் எண்ணத்தை அறிந்த பரமேசுவரனோ, யாரும் பாதாளலோகம் செல்லக் கூடாதென்றும், அவ்வாறு மீறிச் செல்பவர்கள் அழிந்து போவார்கள் என்றும் கட்டளையிட்டார். பகவானின் கட்டளையை மீறிச் செல்ல யாருக்குத்தான் துணிவு வரும்?

பகவானின் கட்டளை, தேவர்களைத் தடுத்து நிறுத்தியதால் பாதாள லோகத்திலுள்ள அப்சரசுகளுக்கு அதுவே பெரும் தடையாகிவிட்டது. ஆண்கள் யாரும் வர வழியில்லாது போய் விட்டதால் அவர்கள் தனிமையில் வாடினர். லோக க்ஷேமத்துக்காகத் தேவர்கள் தங்கள் கொள்கைகளிலிருந்து வழுவிவிடக் கூடாதே என்பதற்காகப் பகவான் விடுத்த கட்டளை அவர்களைப் பாதித்துவிட்டதாக எண்ணி மனம் வருந்திக் கைலாசநாதனை வேண்டினர்.

ஈசனோ தாம் விடுத்த கட்டளையைத் தாமே மாற்ற விருப்பம் கொள்ளவில்லை. ஆகவே, அதற்கு ஓர் உபாயம் செய்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகுந்த கவலையுடன் அமர்ந்திருந்த நாதனைப் பார்த்ததும் பார்வதி வேதனையோடு அவரை நெருங்கி, காரணம் கேட்டாள்.

"பிரியே, பாதாளலோகத்தில் உள்ள அப்சரசுகளின் அழகிலே மயங்கி, காம வசப்பட்டுத் தேவர்கள் தங்கள் காரியங்களை மறந்து அவர்களோடு இருந்துவிடப் போகிறார்களே என யாரும் போகக்கூடாதெனத் தடை விதித்தேன். அதன் பலன் அப்சரசுகள் ஆண் துணையின்றித் தவிக்கின்றனர். என்ன செய்வதென்று புரியவில்லை. நீ சென்று அவர்களைப் பார்த்து ஆறுதல் சொல்லி வா" என்றார் பரமேசுவரன்.

அதன்படி பார்வதி பாதாள லோகம் சென்றாள்.

ஜகஜ்ஜோதியாக பிரகாசத்துடன் விளங்கும் தேவியைக் கண்டதும் முதலில் அவர்கள் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. காம வேதனையால் அவதியுறும் தங்களை மேலும் துன்பத்துக்கு ஆளாக்க வந்திருக்கும் தேவமாதரில் ஒருத்தியாக எண்ணினர். ஆனால், வந்திருப்பது லோகமாதா என்பதை உணர்ந்தபோது அவர்கள் தங்கள் தவற்றுக்கு வருந்தி அவள் பாதங்களில் விழுந்து மன்னிக்குமாறு வேண்டினர். தாங்கள்படும் துயரங்களை எடுத்துச் சொல்லித் தங்களை ரக்ஷிக்குமாறு வேண்டினர்.

"உங்கள் நிலையை நன்கு உணர்ந்தே நான் இங்கு வந்துள்ளேன். கவலைப்பட வேண்டாம். என் புத்திரர்கள் கையிலாசநாதனுக்குக் கணங்களாக இருக்கின்றனர். அவர்களிடம் சென்றால் உங்கள் வாழ்வு மேம்படும்" என்று அனுக்கிரகித்தாள் தேவி.

அவ்வாறே அப்சரசுகள் பாதாளலோகத்தை விட்டுக் கைலயங்கிரியை அடைந்து சிவகணங்களைத் தங்களது கணவர்களாக அடைந்து துயரம் நீங்கியவர்களாய் ஆனார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

38. காமன் கதை

"முனிவர்களே, நாராயணன் காமவசப்பட்டுப் பாதாள லோகத்திலேயே தங்கிவிட, சிவபெருமான் ரிஷப மூர்த்தியாக உருவெடுத்துச் சென்று அவரை வைகுந்தத்துக்கு அழைத்து வந்த விருத்தாந்தத்தைக் கேட்டீர்கள். காமனுக்கு அடிபணியாதவர்கள் இல்லை என்று சொல்லலாம். எத்தனையோ தேவர்களும், ரிஷிகளும் கூட அவன் பிடியில் சிக்குண்டிருக்கிறார்கள்" என்று சொல்லி அந்த விருத்தாந்தங்களைச் சொல்லத் தொடங்கினார் சூதர்.

சப்தரிஷிகளின் மனைவியரைக் கண்டு மோகித்த அக்கினித் தேவன் விரகதாபத்தால் வருந்தினான். அவன் நிலையைக் கண்ட கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அவனை அடைந்து அவன் விரகத்தைப் போக்கினர்.

பிரம்மாவின் புத்திரன் குசன். அவன் மகன் குசநாபன். அவனுக்கு நூறு பெண்கள். அதி அற்புதமாக இருப்பார்கள். வாயுதேவன் அவர்களைக் கண்டு மோகித்தான். அவர்கள் தனியாக இருக்கும்போது அவர்கள் முன்னிலையில் சென்று தன்னை மணக்குமாறு கேட்டான். அவர்களோ ரூபமற்ற அவனை மணக்க மறுத்து விட்டனர். வாயுவுக்குப் பெரும் கோபம் வந்து விட்டது. ரோகிகளாகப் போகும்படி அவர்களைச் சபித்தான். அவ்வாறே குசநாபனின் நூறு பெண்களும் ரோகிகளாகி விட்டார்கள்.

இந்த விஷயத்தை அறிந்த அவர்களது பாட்டனான குசன் தன் தபோவலிமையால் அவர்கள் இழந்த ரூபலாவண்யத்தைத் திரும்பவும் அடையச் செய்தான். அத்துடன் அவர்கள் அனைவரையும் வாயுதேவனுக்கே மணம் செய்து கொடுக்கச் செய்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவஷ்டா என்ற முனிவரின் மகள் சமிஞ்ஞா. அவளை மணக்க விருப்பம் கொண்டான் சூரியன். அவளோ சூரியனின் வெப்பத்தைத் தன்னால் தாங்க முடியாதென்று மறுத்து விட்டாள். அவளிடம் கொண்ட ஆவலைக் கட்டுப்படுத்த முடியாது அவளைத் திரும்பவும் வற்புறுத்தினான் சூரியன்.

"இந்த நிலையில் மணம் செய்து கொள்ள முடியாது. உன் பிரகாசத்தைக் குறைத்துக் கொள்ளச் சம்மதமானால் உடன்படுகிறேன்" என்றாள் சமிஞ்ஞா.

அவள் என்ன சொன்னாலும் அதற்குக் கட்டுப்படத் தயாராக இருந்தான் சூரியன். துவஷ்டா முதலானோர் சூரியனைச் சாணைக் கல்லில் உரைத்தனர். அவன் உக்கிரம் குறைந்தது. அப்போது உதிர்ந்தவற்றிலிருந்து தேவர்கள் பற்பல ஆயுதங்களைச் செய்து கொண்டனர்.

சாணைக்கல்லில் உரைக்கப்பட்ட சூரியனை சமிஞ்ஞா மணந்து கொண்டாள். அப்போதும் அவளால் சூரியனுடைய வெப்பத்தைத் தாங்கமுடியவில்லை. ஆகவே, அவனைப் பிரிந்து பெண் குதிரையாகிக் கானகம் சென்றாள். சூரியன் அவளை விடவில்லை. ஆண் குதிரையாகத் தானும் உருவெடுத்து அவளைத் தொடர்ந்தான்.

கானகத்தில் அவர்கள் இருவரும் இன்புற்று இருக்கையில், சமிஞ்ஞாவின் நாசியிலிருந்து அசுவினி தேவர்கள் தோன்றினர். நாளடைவில் அவர்களுக்கு வைவசுதமனு, யமன், யமுனை ஆகியோர் தோன்றினார்கள்.

இன்னமும் சூரியனின் வெப்பத்தை அவளால் தாங்க முடியவில்லை. ஆகவே தன்னுடைய சாயையை அவனிடம் நிறுத்திவிட்டுத் தான் புறப்பட்டு வந்து விட்டாள். சாயா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவிக்கும் சூரியனுக்கும் சாவனி மனு, சனி, பத்திரை என்னும் குழந்தைகள் பிறந்தனர்.

....

மித்திரா, வருணர் என்னும் முனிவர்கள் இருவரும் ஊர்வசியைக் கண்டு அவளை அடைய விரும்பினர். மோகம் காரணமாக இருவருடைய தேஜஸ்ஸும் வெளிப்பட்டன. ஒருவர் கும்பத்திலும் மற்றொருவர் ஜலத்திலுமாக அவற்றை விட்டனர். கும்பத்திலிருந்து அகஸ்தியரும், ஜலத்திருந்து வசிஷ்டரும் உண்டானார்கள்.

....

சவன மகரிஷிக்கு இரு கண்களும் தெரியாது; அவர் பகவானைக் குறித்துக் கடுமையாகத் தவம் மேற்கொண்டார். அவர் உடல் புற்றால் மூடிவிட்டது. ஒரு நாள் வேடப்பெண் ஒருத்தி அப்புற்றைக் கலைத்தாள். உள்ளே முனிவர் இருப்பதைக் கண்டதும் அவரை அழைத்துச் சென்று அரசனிடம் விட்டாள். அரசன் அவரை வரவேற்று உபசரித்தான். அவருக்கு இரு கண்களும் இல்லாமலிருப்பதைக் கண்டு அசுவினி தேவர்களை வரவழைத்துப் பார்வையைக் கொடுக்குமாறு வேண்டினான். பார்வை வரப்பெற்ற முனிவர் வேடப் பெண்ணைக் கண்டதும் அவள் அழகில் மோகம் கொண்டு அவளையே மணந்து கொண்டார்.

....

காசியபருக்கும் விருதைக்கும் பிறந்தவர் பக்ஷிசுவரன் என்னும் முனிவர். அவர் ஒருநாள் தடாகம் ஒன்றுக்குச் சென்றார். அதில் மீன்கள் மகிழ்ச்சியோடு வளைய வருவதைக் கண்டதும் தாமும் திருமணம் செய்து கொண்டு இல்லறம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடத்த வேண்டும் என்ற ஆசை தோன்றிற்று. சுதன்மன் என்னும் அரசனிடம் சென்று அவன் குமாரத்திகளைத் தமக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கேட்டார்.

அரசனோ விகார ரூபம் கொண்டிருக்கும் அவருக்குத் தன் புத்திரிகளைக் கொடுக்க மனமில்லாதிருந்தான். முனிவரிடம் முடியாதென்று சொன்னாலோ அவர் சபித்து விடுவார். ஆகவே, அவன் ஓர் உபாயம் செய்தான்.

"முனிசிரேஷ்ட, எனக்கொரு ஆக்ஷேபணையும் இல்லை. அந்தப்புரத்துக்குச் சென்று அவர்களைக் கேளுங்கள். யார் விருப்பம் தெரிவிக்கிறார்களோ அவர்களை பணக்கலாம்" என்றான்.

முனிவர் தமது யோகபலத்தால் மன்மத வடிவு கொண்டு அந்தப்புரம் சென்றார். அங்கே சுதன்மனுடைய குமாரத்திகள் பதினைந்து பேரும் இருந்தனர். அவரைக் கண்டதும் அனைவரும் அவருடைய அழகு வடிவிலே மயங்கி அவரை மணக்கச் சம்மதித்தனர். அரசனும் அவ்வாறே முனிவருக்குத் தன் குமாரத்திகளை மணம் செய்து கொடுத்தான்.

....

கருடன் ஒரு சமயம் சாண்டிலீ என்பவளைக் கண்டு மோகித்தான். அவளை அடைந்து இன்புறவேண்டுமென்று அவளை நெருங்கினான். அவளோ மகாதபஸ்வி. தன் உள்ளத்தில் அவனுக்கு இடமில்லை எனத் தெரிவித்தாள். கருடன் அதைக் கேட்காது அவளை வற்புறுத்தினான். கோபம் கொண்ட சாண்டிலீ கருடனின் இரு சிறகுகளும் அறுந்து விழட்டும் எனச் சாபமிட்டாள். அப்போதே அவனுடைய இரு சிறகுகளும் அறுந்து விழுந்தன. கருடன் தன் தவறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணர்ந்து அவள் பாதங்களில் பணிந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். அவளும் அவன் கோரிக்கையை ஏற்று அவனை மன்னித்ததோடு தனது சக்தியினால் அறுந்த இரு சிறகுகளும் மீண்டும் அவனுக்கு உண்டாக அருளினாள்.

....

விபாண்டர் என்றொரு முனிவர் இருந்தார். அவர் ஒரு சமயம் நீராடத் தடாகத்துக்குச் சென்றிருந்தார். அங்கே யௌவன மங்கை ஒருத்தியைக் கண்டார். அவர் மனம் பேதலிக்கவே, அவரது தேஜஸ் வெளிப்பட்டு நீரில் விழுந்தது. அதைப் பெண் மான் ஒன்று நீரோடு பருகிவிடவே அதன் வயிற்றிலிருந்து ரிஷியசிருங்கர் உண்டானார்.

....

பராவசு என்றொரு ரிஷி இருந்தார். அவர் மகா தபஸ்வியானவர். அரசன் அவரை அழைத்து வந்து யாகம் ஒன்று செய்யச் செய்தான். யாகத்துக்கு வந்திருந்த யவக்கிரீதன் என்னும் முனிவர் பராவசுவின் மனைவியைக் கண்டார். அவள் அழகிலே மயங்கிவிட்ட அவர் பலவந்தமாக அவளைக் கவர்ந்து சென்று விட்டார்.

இதை அறிந்த பராவசுவின் தந்தையான ரைப்பியர் என்னும் ரிஷி பெரும் கோபம் அடைந்தார். தம் மருமகளைக் கொன்று அவள் உடலைத் துண்டித்து அதைக் கொண்டே ஹோமம் செய்தார். பின்னர், அவள் தோலைத் தமது சக்தியால் பயங்கர அரக்கியாக மாறச் செய்து, "இப்போதே சென்று யவக்கிரீதனைக் கொன்று வா!" என்று உத்தரவிட்டார்.

முனிவரின் உத்தரவைப் பெற்றுப் புறப்பட்ட அந்த அரக்கி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன் மாயையால் அழகிய பெண்ணாக உருவெடுத்தாள். யவக்கிரீதனிடம் சென்று, இன்பமுறலாம் என ஆசை வார்த்தைகள் பல கூறிக் கானகத்துக்கு அழைத்து வந்தாள்.

இதற்குள் அந்தக் கானகத்துக்கு அரக்கன் ஒருவன் வந்து சேர்ந்தான். முனிவரோடு செல்லும் அழகு மங்கையைப் பார்த்ததும் அவளைத்தான் கொள்ள வேண்டுமென்ற ஆசையில் முனிவரைக் கொன்று அவளை இழுத்துச் சென்று விட்டான்.

யவக்கிரீவ முனிவரின் தந்தை தம் மகன் இறந்தது கண்டு அவர் ரைப்பியராலேயே கொல்லப்பட்டுள்ளார் என்பதை உணர்ந்து அவரிடம் வந்தார்.

"அடே, என் மகனைக் கொன்று என்னை வருத்தத்துக்கு உள்ளாக்கிய நீ, உன் மகனாலேயே கொல்லப்படுவாய்" என்று சாபமிட்டுச் சென்றார்.

ஒருநாள் பராவசு அரசனிடம் சென்று அனேக மரியாதை களைப் பெற்று ஆசிரமத்துக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது ரைப்பியர் கானகத்தில் ஓரிடத்தில் மான்தோலைத் தமது உடலில் போர்த்துக்கொண்டு சந்தியா வந்தனம் செய்து கொண்டிருந்தார். பராவசுவுக்கு அங்கிருப்பது தமது தந்தை என்பது தெரியாது. மான் பதுங்கியிருக்கிறது என்ற எண்ணத்தில் தூரத்திலிருந்து அதை அம்பால் அடித்தார். உடலிலே பாய்ந்த அம்பு அப்போதே ரைப்பிரியரின் உயிரைக் குடித்தது.

அருகில் நெருங்கிப் பார்த்த பின்னரே பராவசுவுக்குத் தாம் தம் தந்தையையே கொன்று விட்டோம் எனத் தெரிந்தது. இரவு முழுவதும் அவர் பித்துப் பிடித்தாற் போலத் தம் செய்கையை எண்ணி எண்ணி அழுது கொண்டிருந்தார். விடிந்ததும் தமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகோதரராகிய பரத்துவாஜரிடம் சென்று நடந்ததைத் தெரிவித்துப் பரிகாரம் வேண்டினார்.

பரத்துவாஜர் பெரிதும் துக்கித்து, "சகோதரா, உன்னால் செய்ய முடியாது, நீ இங்கே ஆசிரமத்தில் இரு. நான் கானகம் சென்று உனக்காகத் தவம் இருந்து உன் பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கச் செய்து திரும்புகிறேன்" என்று அவரைத் தேற்றினார். பின்னர் அவர் கானகம் சென்று கடுமையாகத் தவம் செய்து சகோதரனின் தோஷம் நீங்கச் செய்தார்.

ஆசிரமம் திரும்பிய பரத்துவாஜரை பராவசு உள்ளே நுழைய விடவில்லை.

"அடே, கொலைகாரா, தந்தையைக் கொன்றுவிட்ட உனக்கு இங்கு இடமில்லை, போய்விடு" என்று கடிந்து உரைத்தார் பராவசு.

சகோதரனின் வார்த்தையைக் கேட்ட பரத்துவாஜர் ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டார். இதை அவர் எதிர்பார்க்கவில்லை. அதே சமயம் அந்தப் பக்கமாக வந்திருந்த அரசனுடைய காவலர்கள் பராவசு தன் சகோதரரைக் கொலைகாரன் எனக் குற்றம் சாட்டுவதைக் கேட்டனர். உடனே அவரைக் கயிறுகளால் பிணைத்து அரசனிடம் இழுத்துச் சென்றனர்.

"ஹே சர்வேசா, இது நியாயமா? நான் என்ன குற்றம் செய்தேன்? என் சகோதரன் அடைந்த தோஷத்தை நானல்லவா கடுமையாக விரதம் இருந்து நீங்கச் செய்தேன். அப்படியிருக்க என்னையே கொலைகாரனாக்கி விட்டானே! இது உனக்குச் சம்மதமா? நான் நிரபராதி என்பது உண்மையா னால் அமிர்ததாரை பெய்யச் செய்து என் பேரில் சுமத்தப்பட்ட தோஷத்தை நீக்கு!" என்று பகவானை நோக்கிக் கதறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சர்வேசுவரன் முனிவரின் நிரபராதத் தன்மையை அறிவிக்க அவர்மீது அமிர்த தாரை பெய்யச் செய்ததோடு, இறந்து போன ரைப்பியரையும், யவக்கிரீவரையும் உயிர் பெற்று எழச்செய்தார்.

....

கௌதமர் ஒரு சமயம் கடுமையான தவம் செய்தார். அவர் தவத்துக்கு இடையூறு விளைவிக்க இந்திரன் அப்சரசுகளில் ஒருத்தியை அனுப்பினான். அவள் சுந்தரவடிவிலே மனம் பேதலித்த முனிவரின் தேஜஸ் வெளிப்பட்டு விடவே அவர் அதைத் துரோணத்தில் விடவே அதிலிருந்து துரோணர் தோன்றினார்.

....

ஒரு சமயம் உலகிலே தர்மகாரியங்கள் சரிவர நடக்காது அழிந்துபோகக் கூடிய நிலை உண்டாயிற்று. அப்போது பிரம்மதேவன் சூரியனை அழைத்து பூலோகம் சென்று சிலகாலம் இருந்து தர்மங்களைக் காப்பாற்றி அவை சரிவர நடந்துவர ஏற்பாடு செய்யும்படி தெரிவித்தார்.

அதன்படி சூரியன் அயோத்தி நகரிலே உபரிசிரவசு என்னும் பெயரில் பிறந்து வளர்ந்து பின் நாட்டை ஆண்டான். நாட்டிலே நசித்து விடக் கூடிய நிலையில் இருந்த தர்மங்களை மீண்டும் நிலை நிறுத்தி, அவற்றை முறை பிறழாது நடந்துவரச் செய்தான். அடிக்கடி அவன் இரதத்திலேறி நாடு முழுமையும் சுற்றிப் பார்த்து வருவான்.

ஒருசமயம் அவன் அவ்வாறு சுற்றி வரும்போது வசந்தருது வந்தது. உலகமே பூரண இன்பத்தில் திளைத்திருக்கும் போது தன் அருகில் மனைவி இல்லையே என்ற ஏக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபரிசிரவசுக்கு உண்டாயிற்று. அந்த க்ஷணமே அவன் வீரியம் வெளிப்பட்டு விட்டது. உடனே இலை ஒன்றைப் பறித்துத் தொன்னையாகத் தைத்து அதில் விழச் செய்தான். அதை எவ்வாறு அரண்மனையிலிருக்கும் தன் மனைவியிடம் சேர்ப்பது என்று தெரியாது திண்டாடினான். அப்போது அவனுடன் வந்திருந்த சேனம் என்றொரு வகைப் பறவை, அதைத் தன்னிடம் கொடுத்தால் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகச் சொல்லிற்று. அரசனும் தொன்னையை அதனிடம் கொடுக்க, பறவை அலகினால் அதைக் கொத்திக் கொண்டு பறந்து சென்றது.

யமுனை நதியின் மீது பறவை பறந்து செல்லும்போது அதை மற்றொரு பறவை கண்டது. மூக்கில் பிடித்திருப்பது மாமிசமாக இருக்கக்கூடும் என்று எண்ணி அதைத் தாக்கியது. அந்தச் சண்டையின்போது தொன்னை நழுவி ஆற்று நீரிலே விழுந்து விட்டது. அதிலிருந்த அரசனின் வீரியத்தை அவ்வழியே வந்த பெண் மீன் ஒன்று விழுங்கி விட்டது.

அந்த மீன் பூர்வத்தில் ஓர் அப்சரசாக இருந்தவள். பிரம்மதேவனின் சாபத்தால் கிரிகை என்ற அவள் மீனாக யமுனை ஆற்றிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். சில நாட்களுக்கெல்லாம் அந்த மீன் கருவுற்றது.

ஒருநாள் நதியிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த செம்படவன் ஒருவன் வலை வீசவே, அதில் கிரிகை அகப் பட்டுக் கொண்டாள். அளவில் பெரிதாகவும் தளதளவென்று பொன்னிறத்தோடு ஜொலித்த அம்மீனை அவன் வீட்டுக்குக் கொண்டு சென்று அறுத்தான். அதன் வயிற்றிலே ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள் இருந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புதையல் கிடைத்தால் அதில் சரிபாதி அரசனிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்று விதி. அவ்வாறே ஆண் குழந்தையை அரசனிடம் கொண்டு போய் கொடுத்தான் செம்படவன்.

ராஜகளையோடு விளங்கிய அந்த ஆண் குழந்தையைக் கண்டதும் அரசனுக்கு அதனிடம் வாஞ்சை உண்டாயிற்று. மீனவனை அழைத்து அக்குழந்தை அவனுக்குக் கிடைத்த விதத்தைத் தெரிவிக்குமாறு கேட்டான். அவனும் யமுனை ஆற்றிலே மீன் பிடிக்கையில் பெரிய மீன் ஒன்று கிடைத்ததையும் அதை அறுத்தபோது அதன் வயிற்றில் உயிரோடு குழந்தை இருந்ததையும் தெரிவித்தான். உபரிசிரவசுக்கு அந்தக் குழந்தை தன் மைந்தனே என்பது தெரிந்து விட்டது. குமாரனை வாஞ்சையோடு வளர்த்து மச்சதேசத்துக்கு அரசனாக முடிசூட்டினான்.

மீனவன் அந்தப் பெண் குழந்தையைத் தன் மகளாகவே எண்ணி வளர்த்து வந்தான். யமுனையில் பிறந்ததால் அதன் பல பெயர்களுள் ஒன்றான கோதினி என்ற பெயரையும், தன் முன்னோர்களில் ஒருத்தியின் பெயரான மார்த்தாண்டி என்ற பெயரையும் அவளுக்குச் சூட்டினான். கிரிகையின் பெண் என்பதால் கிரிஜா என்ற பெயரையும் அடைந்திருந்தாள். அதுமட்டுமில்லாமல் அவளைச் சத்தியவதி என்றும் அன்போடு அழைத்து வந்தான்.

சத்தியவதி வளர்ந்து பெரியவளானதும் தந்தையின் வேலையில் பங்கு கொண்டு அவருக்கு உதவி செய்து வந்தாள். ஒருநாள் அவள் யமுனையின் இக்கரையிலிருந்து அக்கரைக்கு மக்களை ஏற்றிச் செல்லும்போது, பயணியாக அங்கே வந்து சேர்ந்தார் பராசரர். சத்தியவதியின் அழகிலே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயங்கி மனதைப் பறிகொடுத்த பராசரர் அவளைத் தம் விருப்பத்துக்கு இணங்கச் செய்தபோது அவர்களுக்கு வேத வியாசர் தோன்றினார். தேவர்களின் நன்மைக்காக வியாசர், விசித்திர வீரியன் இறந்ததும் அவன் மனைவியின் மூலம் திருதராஷ்டிரன், பாண்டு, விதுரர் ஆகியோரை உண்டு பண்ணினார். பின்னர் ஒரு சமயம் கானகத்தில் அரளிக் கட்டையைக் கடையும்போது அதிலிருந்து சுகர் உண்டானார். அவர் பிரம்மஞானி. அவர் கௌரவர், கபிலர், கிருஷ்ணர், நீலர் என்னும் நான்கு புத்திரர்களையும் ஒரு புத்திரியையும் பெற்றார்.

அதுபோலவே, தேவதானவர்களாலும் வெல்வதற்கரிய, சும்பர், நிசும்பர் இருவருக்கும் சுந்தர், உபசந்தர் என்னும் புத்திரர்கள் பிறந்தனர். அவர்கள் இருவரும் திலோத்தமை யைக் கண்டு அவளை அடைய விரும்பினர். அதனால் இருவருக்கும் விரோதம் உண்டாகி ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு மாண்டனர்.

....

இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்த அரசன் ஒருவன் சுக்கிராசாரியாரின் மகளைக் கண்டு அவள் அழகில் மனம் மயங்கியவனாய் அவளைக் காந்தர்வ மணம் செய்து கொண்டான். இதைப் பொறாத சுக்கிராசாரியார் அரசனோடு எட்டு நாட்கள் கோர யுத்தம் செய்து அவனைப் பாசத்தால் கட்டித் தண்டித்ததோடு அவனையும் அவன் ராஜ்ஜியத்தையும் அழித்தார்.

ஆங்கிரஸர் என்றொரு முனிவர் இருந்தார். அவர் புத்திரி வேகவதி. ஒரு சமயம் அவளை இராவணன் கண்டு விட்டான். அவளிடம் மோகம் கொண்ட அவன் அவளை அடைய எண்ணி, அவள் தனிமையில் இருக்கையில் நெருங்கிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்று அவள் கையைப் பிடித்து இழுத்தான். கடும் கோபம் கொண்ட வேகவதி தன் வாழ்வை வீணாக்கிவிட்ட அவனைக் கொல்வதாகச் சபதம் செய்து, பெரும் பாபியால் தீண்டப்பட்டு விட்ட உடலை இனியும் வைத்திருக்கக்கூடாது எனத் தீக்குளித்து விட்டாள்.

அடுத்த பிறவியில் வேகவதி மிதிலையில் அரசு புரிந்து வந்த ஜனகராஜனின் மகளாக அவதரித்தாள். அயோத்தி மன்னன் தசரதனின் குமாரன் ஸ்ரீராமனாக மகா விஷ்ணு அவதரித்து ஜனகபுத்திரியான சீதையை மணந்தார்.

இதற்குள் இராவணன் கைலயங்கிரியில் இருந்து வரும் குபேரன் மகனான நளகூபனுடைய மனைவியான ரம்பையின் சௌந்தர்யத்தைக் கண்டு மயங்கி அவள் தனக்கு மருமகள் உறவுமுறை கொண்டவள் என்பதையும் கருதாது அவளைப் பலவந்தமாகக் கவர்ந்து சென்று இன்புற்றான். இதை அறிந்த நளகூபன் மிகுந்த கோபங்கொண்டு, பிற ஸ்திரீயை இராவணன் தீண்டுவானாகில் அப்போதே அவன் தலை ஆயிரம் சுக்கல்களாக வெடித்துச் சிதறிவிடச் சாபம் அளித்தான்.

தசரதர் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய எற்பாடு களைச் செய்யும்போது அவர் மனைவி கைகேயி தனக்கு முன்னம் ஒரு சமயம் அவர் அளித்த இரு வரங்களை அப்போது கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒரு வரத்தால் தன் குமாரன் பரதனுக்குப் பட்டாபிஷேகமும், மற்றொரு வரத்தால் ஸ்ரீராமன் பதினான்கு வருஷம் கானகத்தில் வசிக்க வேண்டும் என்றும் கேட்க, தந்தையின் வாக்கைக் காப்பாற்றும் நிமித்தமாக ஸ்ரீராமன் அரசுரிமையைத் துறந்து மனைவி சீதையுடனும் தம்பி லக்ஷ்மணனுடனும் கானகம் வந்தார்.

அங்கே ஆசிரமம் ஒன்றை அமைத்துத் தங்கியிருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போது சீதையின் அழகு வடிவத்தைக் கேள்விப்பட்ட இராவணன், அவளை அடைய வேண்டுமென்று தகாத ஆசை கொண்டான். தன் மந்திரியான மாரீசனை அழைத்து அழகிய பொன்மான் வடிவம் கொண்டு சீதையின் முன் நடமாடி, மெல்ல ஸ்ரீராமனையும் லக்ஷ்மணனையும் அங்கிருந்து அப்பால் அழைத்துச் செல்லுமாறு உத்தரவிட்டான்.

மாரீசன் பொன் மானாகி ஆசிரமத்தின் முன் நடமாட அதைக் கண்ட சீதை அந்த மானைப் பிடித்துத் தருமாறு கணவனை வேண்டினாள். மெல்லப் போக்குக் காட்டியபடி மாரீசன் ஸ்ரீராமனை ஆசிரமத்திலிருந்து அப்பால் அழைத்துச் சென்றான். மானை உயிருடன் பிடிக்க முடியாதென்பதை அறிந்த ஸ்ரீராமன் அதை அம்பால் அடிக்க, மாரீசன் உயிர்விடும்போது மாயையால் ஸ்ரீராமனுடைய குரலில் 'ஹா சீதே, லக்ஷ்மணா' என்று கத்திக் கொண்டே உயிர்விட்டான்.

ஆசிரமத்திலிருந்த சீதை அதைக் கேட்டுக் கணவனுக்குத் தான் ஏதோ அபாயம் நேரிட்டு விட்டதென்று பயந்து லக்ஷ்மணனை அனுப்பினாள். லக்ஷ்மணன் அகன்றதும் இராவணன் கபட சந்நியாசியாக வந்து அவளைப் பர்ண சாலையோடு இலங்கைக்குத் தூக்கிச் சென்று அசோக வனத்தில் காவல் வைத்தான்.

திரும்பி வந்த ஸ்ரீராமன் மனைவியைக் காணாது, கானகம் முழுவதும் தேடி வரும்போது ஹனுமானைச் சந்தித்து அவன் மூலம் வானரர் தலைவன் சுக்கிரீவனின் நட்பைப் பெற்று வானர வீரர்களுடன் சீதை இருக்கும் இலங்கையை அடைந்தார். இராவணன் தன் சகோதரன் கும்பகர்ணன் முதலிய வீரர்களை ஹனுமனுடன் யுத்தம் செய்ய அனுப்ப அவர்கள் அனைவரும் அழிந்தனர். இராவணனுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகோதரன் விபீஷணண் சீதையைக் கவர்ந்து வந்தது தகாத செயல் என்று எடுத்துச் சொல்லி, அவளைத் திரும்பவும் ஸ்ரீராமனிடமே கொண்டு போய் விட்டு விடுமாறும் வேண்டினான். இராவணன் அவன் வார்த்தையைக் கேளாது விபீஷணனைப் பலவாறு ஏசினான். அதனால் வேதனை கொண்ட விபீஷணன் சகோதரனை விட்டு விலகி ஸ்ரீராமனையே சரண் அடைந்தான். அவன் உதவியால் இராவணனின் சைன்னியம் முழுவதும் அழிந்தது. முடிவில் ஸ்ரீராமனின் அம்புக்கு இரையாகி இராவணன் உயிர் இழந்தான். ஸ்ரீராமன் சீதையை மீட்டு, இலங்கைக்கு அரசனாக விபீஷணனை முடிசூட்டிவிட்டு தமது பட்டணம் திரும்பினார்.

அநேக விருத்தாந்தங்களைச் சொல்லி வந்த சூதர், “நைமிசாரண்ய வனத்து முனிவர்களே, காமன் மிகுந்த சக்தி வாய்ந்தவன். அவனை ஜெயிப்பது என்பது இயலாத காரியம். மனத்திலே காமனுக்குச் சிறிது இடம் ஒருவன் அளித்து விடுவானாகில், அவன் எவ்வளவு பெரிய மனிதனாக இருந்த போதிலும் காமன் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆட வேண்டிய நிலை உண்டாகிவிடுகிறது. அதனால் தான் பகவானை ஏகாக்கிரசிந்தையோடு தியானிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அழியக்கூடிய இவ்வுலகத்து இன்பங்களில் மனம் செல்ல அனுமதிக்கக் கூடாது; எத்தனை ரிஷிகள் தகாத ஆசை காரணமாகத் தவப்பலன் குறைந்து இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள்!” என்று கூறி மேலே சிவபெருமானின் அனேக விருத்தாந்தங்களைச் சொல்லத் தொடங்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. சிலாதருக்கு அருளுதல்

ஒரு சமயம் சிவபெருமான் பார்வதியோடு குகை ஒன்றில் சந்தோஷமாக இருந்து வந்தார். தக்ஷனுடைய யாக குண்டத்தில் குதித்து உயிர்விட்டதன் காரணமாகத் தான் பெற்றிருந்த கானவ வடிவத்தைப் போக்கிக் கொள்ள தேவி தவம் செய்ய விரும்பினாள். தான் பிரிந்திருக்கும் வேளையில் எதுவும் அசந்தர்ப்பம் நேரிடாதிருக்கத் தன்னுடைய தோழி களில் ஒருத்தியான உத்தாம குசுமை என்பவளையும் நந்தி தேவரையும் குகை வாசலில் காவலுக்கு வைத்துச் சென்றாள்.

ஆடி என்றொரு அசுரன் இருந்தான். அவன் பிரம்ம தேவனைக் குறித்துத் தவம் இயற்றி இறவாமை வேண்டும் என வரம் கோரினான். அவன் விரும்பிய வரத்தை அளிக்க இயலா தென்பதைப் பிரம்மதேவன் தெரிவித்து வேறு வரம் கேட்குமாறு சொன்னார். சந்திரதேவதாகமான நக்ஷத்திரத்தில் கூடிய ருத்திரதேவ தாகமான முகூர்த்தத்திலே இந்திரன் மழை பெய்யச் செய்யும்போது தனக்கு மரணம் சம்பவிக்கலாம் என்று வேண்டி னான் அசுரன். பிரம்மதேவன் அந்த வரத்தை அளித்தார்.

அவன் வனாந்திரங்களில் சஞ்சரித்து வரும்போது சிவபெருமான் தங்கியிருக்கும் குகையை அடைந்தான். நந்தி தேவரும், உத்தாம குசுமையும், வாயிலில் காவல் இருந்தனர். அவர்களிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்து தேவி தவம் செய்யச் சென்றிருக்கிறாள் என்பதை அறிந்தான். தனித்திருக்கும் ஈசனைக் கொல்ல இதுவே தருணமென்று எண்ணிய அசுரன் ஒரு பாம்பாக மாறி வாசலில் காவலுக்கு இருந்த இருவரும் அறியாது குகையினுள் நுழைந்தான். உள்ளே சென்றதும் அதிரூப லாவண்யத்தோடு கௌரியின் ரூபம் எடுத்து ஈசனை நெருங்கினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“நாதா, என் உள்ளம் காம வசப்பட்டு அலைகிறது. என்னால் தவம் செய்ய முடியவில்லை” என்று பெண் குரலில் கூறினான் அசுரன்.

சிவபெருமான் அவன் உண்மை சொரூபத்தை நன்கு உணர்ந்தார். இருப்பினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனைப் பார்வதியாக எண்ணித் தழுவியது போல் தழுவி சூலத்தால் அவன் உடலைப் பிளந்து எறிந்தார். அரக்கன் அழிந்தான். அதன் பின்னர் அங்கிருந்து வெளிப்பட்டுக் கைலாயம் சென்றுவிட்டார்.

தவம் செய்ய வனத்துக்குச் சென்ற பார்வதி தான் விரும்பியபடி கருமை நிறம் நீங்கி, பிரகாசமான காந்தியையுடைய தேகத்தைப் பெற்றுத் திரும்பினாள். உத்தாமகுசுமை தேவியை வழியிலேயே சந்தித்து நந்தி தேவரின் அஜாக்கிரதையால் யாரோ பெண் ஒருத்தி குகையில் நுழைந்து ஈசனோடு லயித்திருந்தாள் எனச் சொல்லி அவள் கோபத்தைத் தூண்டி விட்டாள். இம்மாதிரி ஏதும் நிகழ்ந்து விடக்கூடாது எனத் தேவி எதிர்பார்த்தே அவர்களைக் காவலுக்கு வைத்துச் சென்றாள்.

தேவியால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்த க்ஷணமே நந்திதேவர் அஞ்ஞானத்தோடு பூலோகத்தில் சிலாதன் என்னும் வேதியன் ஒருவனுக்குப் புத்திரனாகப் பிறக்கட்டுமென்று சாபமிட்டாள்.

கைலயங்கிரிக்குத் தேவி திரும்பியதும் நந்தி தேவர் குகையில் நடந்த விவரங்களைத் தெரிவித்து, சிவபெருமானால் அரக்கன் அழிக்கப்பட்டதைக் கூறினார். அப்போதுதான் பார்வதி தான் அவசரப்பட்டு சாபமிட்டுவிட்டதை உணர்ந்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“குமாரா, உன் நேர்மையில் நான் அவசரப்பட்டுக் குற்றம் கண்டு சபித்துவிட்டேன். அதை மாற்ற முடியாது. எனினும் பன்னிரண்டு வருடங்களுக்குப், பிறகு நீ சாப விமோசனம் அடைந்து என்னை அடைவாயாக” என்றாள்.

நந்திதேவர் பூலோகத்தில் சிலாதன் என்னும் அந்தணருக்குப் புத்திரனாக வந்து பிறந்தார்.

சிலாதர் பெரும் தபஸ்வி. அவர் சிறு வயதில் ஒரு நாள், யாசகம் கேட்டு வந்தவருடைய பிச்சை தட்டிலி சிறு கற்களைப் போட்டுவிட்டார். அந்த யாசகரும் அதை அறியாது உணவோடு கற்களைப் புசித்துவிட்டார். பிச்சைக்கு வந்தவருடைய பாத்திரத்திலே சிறு கற்களைப் போட்டுவிட்டார். அவரும் அதை அறியாது உணவோடு கற்களைப் புசித்துவிட்டார்.

சிலாதர் வளர்ந்து பெரியவரானதும் தனது தபோ பலத்தினால் ஒரு சமயம் யமலோகத்துக்குச் சென்றார். தர்மராஜன் அவரை அழைத்துச் சென்று எல்லா இடங்களையும் காட்டினான்.

தர்மராஜனின் ஆசனத்துக்குச் சமீபத்தில் ஒரு பெரும் பாறை கிடந்தது. சிலாதர் தர்மராஜனைப் பார்த்து, “அந்தப் பாறை அங்கே ஏன் கிடக்கிறது” என்று வினவினார்.

“பூஜிக்கத் தகுந்த பெரியவரே! பூலோகத்திலே ஒருவர் இருக்கிறார். அவர் தம்முடைய சிறு வயதில் பிச்சைக்கு வந்தவரின் பாத்திரத்தில் அவருக்குத் தெரியாது விளையாட்டாகக் கற்களைப் போட்டார். அந்தப் பரதேசியும் அதை உணராது சாப்பிட்டுவிட்டான். அந்தக் கற்களே பெரும் பாறையாக வளர்ந்து இருக்கிறது. அந்த மனிதர் தம் கால திசை முடிந்து இங்கு வரும்போது இப்பாறையைப் பொடிசெய்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்ணவேண்டும் அதற்காகவே இங்குக் கிடத்தப் பட்டிருக்கிறது'' என்றான் தர்மராஜன்.

அதைக் கேட்டதும் சிலாதரின் முகம் வாடியது. தர்மராஜன் குறிப்பிட்ட மனிதர் தாமே என்பதைத் தெரிந்து கொள்ள அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை.

“தர்மராஜா, இதற்குப் பரிகாரம் ஏதுமில்லையா?'' என்று கேட்டார் அவர்.

“இருக்கிறது. அந்த மனிதன் தம்முடைய ஜீவிய தசையிலேயே இந்த அளவு பாறையைப் பொடி செய்து கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துக் குடித்து ஜீரணம் செய்துவிட வேண்டும்'' என்றான் தர்மராஜன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூலோகம் திரும்பிய சிலாதர் யமலோகத்தில் தாம் பார்த்த பாறை அளவுள்ள பாறை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதைப் பொடி செய்து கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துக் குடித்து வந்தார். தினமும் சிவயோகத்தில் அமர்ந்து யோகம் முடிந்ததும் பாறையைப் பொடிசெய்து நீரிலே கரைத்துக் குடிப்பார். இப்படியாகக் கொஞ்ச நாட்களில் அந்தப் பாறை முழுவதும் தீர்ந்துவிட்டது. அதன் காரணமாகவே அவருக்குப் பாறையைப் பொடி செய்து ஜீரணித்தவர் என்ற பொருள்படி சிலாதர் என்னும் பெயர் ஏற்பட்டது.

தபோ பலம் நிரம்பப் பெற்ற அவருக்குப் புத்திரப்பேறு மட்டும் கிட்டவில்லை. திருவையாறு எனப்படும் க்ஷேத்திரம் சென்று அங்குள்ள அயனரி தீர்த்தத்தில் நீராடி பகவானைப் பூஜித்து பஞ்சாக்ஷரம் ஜபித்து, ஒற்றைக்காலில் பஞ்சாக்கினி மத்தியில் நின்று பிள்ளை வரம் வேண்டினார்.

அவர் தவத்தில் மகிழ்ந்த சிவபெருமான், அற்பு ஆயுளே ஜீவிக்கக் கூடிய புத்திரனை அருளினார். ஒரு நாள், யாகம் செய்வதற்காகச் சிலாதர் பூமியை உழும்போது மாணிக்கப் பெட்டி ஒன்று கிடைத்தது. அவர் ஆவலோடு அதை எடுத்து மேல் மூடியைத் திறக்க பார்வதியின் சாபத்தால் நந்தி தேவர் அங்கே குழந்தையாகப் படுத்திருந்தார்.

சிலாதர் மகிழ்ச்சியோடு குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டார். அவனுக்கு செப்பேசுவரன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். குமாரனும் வளர்ந்து வந்தான்.

புத்திரனிடம் எவ்வளவுக்கு வாஞ்சை கொண்டிருந்தாரோ, அந்த அளவுக்கு அவன் வளர்ந்து வருவதைக் காணும்போது வருத்தம் கொண்டார். குமாரனின் அற்ப ஆயுளை எண்ணும் போது அவர் உள்ளம் வேதனையால் துடித்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செப்பேசுவரன் தந்தையின் வருத்தத்தை அறிந்த போது "அப்பா, வருந்தாதீர்கள். இப்போதே நான் பரமேச்வரனை ஆராதித்து நீடித்த ஆயுளைப் பெற்றுத் திரும்புவேன்" என்று சொல்லி அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டான்.

ஆலயத்துக்குச் சென்று புண்ணிய தீர்த்தத்தில் நீராடி பகவானை ஏகாக்கிர சிந்தையுடன் தியானித்தான். பகவான் அவன்பால் மகிழ்ச்சி கொண்டு அவனுக்குக் குறைவில்லாத ஆயுளை அளித்து சுயசை என்ற பெண்ணையும் மணம் செய்வித்தார். செப்பேசுவரன், நந்திதேவர் என்ற பெயரோடு சிவ கணங்களின் தலைவனாகத் தனது முந்தைய பதவியை அடைந்தான்.

40. சிவாலயம் எழுப்புதலால் அடையும் பலன்கள்

நைமிசாரண்யத்துவாசிகளைப் பார்த்து சூதர், சிவாலயம் எழுப்புவதால் ஒருவன் அடையும் புண்ணியங்களை விவரிக்கத் தொடங்கினார்.

எவனொருவன் சிவபெருமானுக்கு ஆலயம் எழுப்புகிறானோ அவன் தினந்தோறும் அப்பெருமானைப் பூஜித்தால் உண்டாகும் பலனை அடைகிறான். அது மட்டுமல்ல அவன் குலத்தில் சிறந்த முன்னோர்களில் நூறு தலைமுறையினர் சிவலோகம் செல்வார்கள். பெரிதாக இருந்தாலும் சரி, சிறியதாக இருந்தாலும் சரி, ஒருவன் மனத்தால் ஆலயம் எழுப்ப வேண்டும் என நினைத்தாலே அவன் ஏழு ஜன்மங்களில் செய்த பாபங்களினின்று விடுபடுவான். அவன் ஆலயம் கட்டி முடித்தானாகில் சகலமான போகங்களையும் அடைவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருங்கற்களைக் கொண்டு ஆலயம் எழுப்புவானாகில், அக்கற்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆயிரம் வருஷம் சிவ லோகத்தில் இருக்கும் பாக்கியத்தைப் பெறுவான். சிவலிங்கத்தைச் செய்விப்பவன் சிவலோகத்தில் அறுபதினாயிரம் வருஷம் இருப்பான். அவன் வமிசத்தவரும் சிவலோகத்தை அடையும் பலனைப் பெறுவார்கள்.

சிவலிங்கம் பிரதிஷ்டை செய்ய எண்ணியவன் எட்டுத் தலைமுறைக்கு இறந்த தன் முன்னோர்களைத் தன்னுடன் சிவலோகத்தை அடையச் செய்வான். ஒருவனால் செய்ய முடியவில்லையென்றாலும், பிறர் செய்ததைக் கண்டு, நாமும் செய்திருந்தால் நற்கதி அடையலாமே என்று நினைத்தாலே போதும், அவன் முக்தி அடைவானாம்.

பிரம்மதேவன், யமதர்மனுக்குப் பாசமும் தண்டமும் கொடுத்துப் பாபம் செய்பவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அளித்தபோது சிவபக்தர்களை அண்டக் கூடாது என எச்சரித்திருக்கிறார்.

எந்த நேரமும் சிவபெருமானையே மனத்தால் தியானித்து வருபவர்கள், பகவானை மலர்களால் அர்ச்சிப்பவர்கள், சிதிலமாகிக்கிடக்கும் சிவாலயத்தைப் புதுப்பித்து நித்திய வழிபாடுகளைச் செய்விப்பவர்கள், காலையும் மாலையும் ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்பவர்கள், சிவாலயத்தை நிர்மாணிப்பவர்கள், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்பவர்கள் ஆகியோரிடம் நெருங்கக் கூடாது என எச்சரித்துள்ளார். அவர்கள் வமிசத்தவர்கள் கூட யமதூதர்களால் நெருங்கப் படாதவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

சிவாலயம் சென்று பகவானைத் தேன், பால், தயிர், நெய் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து பூஜிப்பவன் ஆயிரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பசுக்களைத் தானம் செய்த பலனை அடைவான். கிருஷ்ண பக்ஷ சதுர்தசியில் சிவலிங்கத்துக்கு நெய்யினால் அபிஷேகம் செய்தால் செய்த பாபங்கள் விலகும். பௌர்ணமி, அமாவாசை ஆகிய நாட்களில் சிவலிங்கத்துக்கு அபிஷேக ஆராதனைகள் செய்பவன் சகல பாபங்களினின்றும் விடுபடுவான். பிரதோஷ காலங்களில் நெய்யால் அபிஷேகம் செய்தால் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாபங்கள் கூட விலகிவிடும்.

பசுவின் பாலால் ஒருவன் அபிஷேகம் செய்தால், அவன் சிவலோகத்தை அடைந்து மகிழ்ச்சியோடு ஸ்வஸ்தசித்தமும் ரோகமின்மையும் சுந்தர வடிவமும் பெற்று வாழ்வான். நவக்கிரகங்களும் அவனுக்கு அனுகூலம் செய்யட்டுமென்று அருளுகிறார்.

ஒரு சமயம் பூஷணன் என்பவனும் அவன் மனைவி சுயதி என்பவளும் சிவலோகத்தை அடைந்து ஆனந்தமாக இருந்து வந்தனர். கௌதமி என்பவள் அவர்களைப் பார்த்து ஆச்சரியமுற்று, "இந்திராதி தேவர்களுக்கும் இல்லாத தேகக்காந்தி உங்கள் இருவருக்கும் இருக்கிறதே. உங்கள் இருவரைப்போல் மனமொற்று நடக்கும் தம்பதிகளை நான் தேவலோகத்திலும் பார்த்ததில்லை. இந்தப் பாக்கியம் உனக்கு எப்படி கிட்டியது ? என்ன தவம் செய்தாய் ?" என்று கேட்டாள்.

"அம்மா, சொல்லுகிறேன் கேள், என் கணவரின் மூதாதையர்கள் சிவபெருமானை ஆராதித்து வந்தவர்கள். என் கணவரும் அனேக யாகங்கள் செய்தார். பகவானுக்கு நெய்யினாலும் பாலினாலும் அனேக அபிஷேகங்கள் செய்தோம். பகவானுக்கு மலர் மாலைகளும், இரத்தினம் முதலிய பொன்னாலான ஆபரணங்களும் பட்டாடைகளும் சமர்ப்பித்தோம். அந்த பலனே இப்போது சொர்க்க லோகத்திலே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எங்களுக்குக் கிட்டியுள்ளது. அபிஷேகம் செய்ததாலேயே எங்களுக்குக் காந்தியோடு கூடிய தேகமும், மனமொற்று நடக்கும் தம்பதிகள் எனப் பிறரால் கொண்டாடப்படும் பாக்கியமும் கிட்டியது" என்றாள் சுயதி.

சிவபெருமானை மனத்திற்குப் பிடித்த மலர்களால் அர்ச்சிக்கலாம். தாமரை மலர், நீலோற்பலம், ஜாதி புஷ்பம், மல்லிகை, பாடலம், கரவீரம், (அலரி) அத்தி, கொன்றை, கொங்கு, முல்லை, இருவாக்ஷி, பலாசம், ஆகத்திப்பூ, துளசி, சத பத்திரம், வில்வம் ஆகியவற்றினால் அர்ச்சிக்கலாம். வில்வ பத்திரம் உலர்ந்திருந்தாலும் அர்ச்சனைக்கு உரியதே. முள்ளை உடையதும், உக்கிரமான வாசனை கொண்டதுமான ஊமத்தை முதலிய மலர்களாலும் சிவனை அர்ச்சனை செய்யலாம்.

மலர்கள் கிடைக்காவிடில் ப்ருங்கராஜபத்திரம், அறுகம் புல், சலேத்திரம் ஆகியவற்றால் பூஜிக்கலாம். தாழை மலரைக் கொண்டு பகவானைப் பூஜிக்கக் கூடாது.

சங்கராந்தி விஷு புண்ணிய காலம், வ்யதிபாதம், தக்ஷிணாயன உத்தராயண காலங்கள், கிரஹண காலம், பௌர்ணமி, அமாவாசை சதுர்தசி, அஷ்டமி ஆகிய புண்ணிய காலங்களில் சிவபெருமானைப் பூஜிப்பவர்கள் நித்ய பூஜையை விட ஆயிரம் மடங்கு அதிகமான பலனை அடைவார்கள்.

சிவனடியார் ஒருவனுக்குச் செய்யும் சேவை சிவபெருமானுக்கு மிகவும் பிரீதியாகும். தபோ நிஷ்டர்களுக்குத் தானம் செய்தால், நூறு பிறவிகள் எடுத்துத் தானம் செய்தால் அடையும் பலனைக் கொடுக்கும். ஆனால் சிவனடியார்களுக்குத் தானம் செய்தாலோ லக்ஷம் பிறவிகளில் தானம் செய்த பலன் கிட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவனடியார் ஒருவருக்கு இடும் பிக்ஷை அவன் வமிசத்தாரையே சிவலோகம் செல்ல வழி வகுக்கும்.

சிவனடியார் ஒருவர் எவன் வீட்டுக்கு வருகிறாரோ அப்போதே அவ்வீட்டுக்குத் தன தானிய சம்பத்துக்கள் உண்டாகும். சிவபக்தர்களைச் சிவபெருமானாகவே எண்ணி உபசரிக்க வேண்டும். சிவனடியார்களைத் துவேஷிப்பவன் பெரும்பாவியாகிறான்.

ஏழையான யாசகன் வந்தபோது அவனை விரட்டி விட்டு, இன்னொருவனை அழைத்து வந்து அனேகவித ருசி மிகுந்த அன்னமிட்டால் அதனால் பலன் ஏதுமில்லை. தானம் செய்யச் சக்தி இல்லாதவன் வந்தவனுக்கு நல்ல வார்த்தைகள் கூறி அனுப்பினால் போதும், அதுவே ஓரளவு பலன் அளிக்குமாம்.

பிற ஸ்திரீகளை அடைய விரும்புதல், அந்நியர் பொருளை அபகரித்தல், விரும்பாத பிறருக்கு அபகாரம் செய்ய வேண்டுமென்று நினைத்தல், செய்யத் தகாத காரியங்களைச் செய்ய விரும்புதல் இந்நான்கும் மானசீகப் பாபங்களாகும். சம்பந்தமின்றிப் பேசுதல், பொய் பேசுதல், பிரியமற்ற சம்பாஷணை, புறங்கூறல் ஆகிய நான்கும் வாசிக பாவங்களாகும், புசிக்கத் தகாதவற்றைப் புசித்தல், துன்புறுத்தல், நிஷித்த காரிய சரணம், பிறர் பொருளை அபகரித்தல் ஆகிய நான்கும் சாயிக பாவங்களாகும். இந்தப் பன்னிரண்டு பாவங்களும் நரகத்துக்கு அழைத்துச் செல்பவையாகும்.

பிரம்மஹத்தி, பொன் திருடுதல், மதுபானம் செய்தல், குரு பத்தினியிடம் தகாத நடத்தை ஆகியவை மகாபாதகங்களாகும்.

வேதியனைக் கொல்ல விரும்புவது, ஆசை வார்த்தைகள் கூறிப் பின்னர் வேதியனை ஏமாற்றுவது, காரணமின்றிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறரைத் துவேஷிப்பது, இறுமாப்பால் படித்தவர்களை நிந்திப்பது, பிறரிடம் தன்னைப் பற்றித் தற்புகழ்ச்சியாகப் பேசுவது, பிறருடைய நற்குணங்களை விட்டுவிட்டு, அவர்களுடைய துர்க்குணங்களை மட்டுமே எடுத்துக் கூறுவது, பசி தாகத்தால் வருந்தி வீடு தேடி வந்த மனிதனை வீட்டினுள் சேர்க்காது விரட்டுவது, பிறருக்குப் பயத்தைக் கொடுப்பது, பிறர் ஜீவனத்தைக் கெடுப்பது, தேவ பூமி, பிராமண பூமி ஆகியவற்றைப் பலாத்காரமாகக் கைக்கொள்வது ஆகியவை பிரம்மஹத்திக்குச் சமம் ஆகும்.

பிராமணருடைய சொத்துக்களை அபகரித்தல், பெற்றோர்களை நிர்க்கதியாக விடுதல், பொய் சாக்ஷி கூறுதல், சிவ பக்தர்களை நிந்தித்தல், நிரபராதிகளைக் கொல்லுதல், பிறர் வீடுகளுக்கு நெருப்பு வைத்தல் ஆகியவை பிரம்ம ஹத்திக்குச் சமமான பாபங்களாகும்.

வேதியனுக்குக் கொடுப்பதாகச சொல்லிவிட்டுப் பின்னர் பொருளைக் கொடுக்காமலிருத்தல், தானம் செய்த பின்னர் தானம் செய்துவிட்டோமே என்று வருந்துதல், பதிவிரதைகளைத் தூஷித்தல், மூத்தவனிருக்க இளையவன் மணம் முடித்தல், புத்திரர் மித்திரர் ஆகியோரை நிர்க்கதியாக விடுதல், பசுக்களை வதைத்தல், சிவாலயத்திலுள்ள விருக்ஷங்களை வெட்டுதல், சொல்லத் தகாதவர்களுக்கு வித்தையைக் கற்பித்தல், தானம் வாங்கிய பொருள்களை விற்றல், மனைவி, புத்திரன் முதலானோரை விற்றல், பாவியின் பொருள்களைத் தானம் வாங்குதல், விலையுள்ள பொருள்களைக் கபடமாகக் குறைந்த விலையில் வாங்குதல், குலாசாரங்களை விட்டுவிடுதல், ஏரி, குளம் முதலியவற்றின் கரைகளை இடித்தல் ஆகியவை உப பாதகங்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்ளல், பிறருக்குத் துன்பம் இழைப்பதிலேயே விருப்பமுடையதாயிருத்தல், பிறர் மதிக்க வேண்டிக் காரியங்களைச் செய்தல், பசு கட்டுமிடம், அக்கினி காரியம் செய்யுமிடம், சிவாலயம், சத்திரம் ஆகிய இடங்களில் அசுத்தப்படுத்தல், வழியை அடைத்தல், தகுதியில்லாத பொருள்களைத் தானம் கொடுத்தல், வண்டி மாடு, குதிரை, முதலிய பிராணிகளுக்கு ஓய்வு கொடுக்காது எந்நேரமும் வேலை வாங்குதல், வேலைக்காரர்களிடம் கடுமையான உழைப்பைப் பெறுதல், பிறரிருக்கத் தான் மட்டும் உணவருந்தல் ஆகியவை உபபாதகங்களுக்குச் சமமாகும்.

பாவம் செய்த மனிதன் உயிர் நீங்கியதும் யாதனா சரீரம் பெற்று யமலோகத்தை அடைந்து அங்கே தான் செய்த பாவங்களுக்கேற்ப நரக வேதனைகளுக்கு உள்ளாகிறான்.

சிவாலய வழிபாட்டால் ஏற்படும் பலன்களை விவரித்த சூதர் அடுத்துப் பாப காரியங்களை விவரித்தார். அவற்றைக் கூறி முடித்ததும் பாபிகள் தங்கள் தங்கள் பாபங்களுக்கு என்னென்ன தண்டனைகளைப் பெறுவார்கள் என்பதையும் எடுத்துக் கூறத் தொடங்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

41. நரகவேதனையும் தான விசேஷமும்

புண்ணியாத்மாக்களும் தானம் செய்தவர்களும் யம பட்டணத்தைக் கிழக்கு வாசல் வழியாக அடைவார்கள். பாபிகளோ தென் வாசல் வழியாக அடைவார்கள். கிழக்குப் பக்கமாகச் செல்லும்வழி சுலபமானதாகவும் அதிக தூரமில்லாததாகவும் இருக்கும். தெற்குப் பக்க வழியோ மிகுந்த தூரமுள்ளது. வழியெல்லாம் கூரிய முட்கள் நிறைந்திருக்கும். பாதத்தைக் கீழே வைக்க முடியாது. சுடும் மணல் கொட்டப்பட்டிருக்கும். கிடுகிடு பாதாளமாக இருக்கும். கொதிக்கக் கொதிக்க இரும்புக் குழம்பு ஓடும். ஒவ்வொரு இடத்தையும் தாண்டிச் செல்வதற்குள் அந்த ஆத்மா சொல்லொணா வேதனை அனுபவித்து விடும். யம கிங்கரர்களோ கும்மாளமிட்டபடி 'நன்றாக அனுபவி' என்று கைகொட்டுவார்கள். வர முடியாதென்றாலும் அவர்கள் விடமாட்டார்கள். அடித்து உதைத்து இழுத்துச் செல்வார்கள். தாகம் நாவை வாட்டி எடுக்கும். ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கொடுக்கமாட்டார்கள். நடக்க முடியாது சோர்ந்து விழுந்தாலோ கயிறு கொண்டு கழுத்திலோ காலிலோ கட்டித் தரதரவென்று இழுத்துச் செல்வார்கள். மாடுகளுக்கு மூக்கணாங்கயிறு போடுவதுபோல் மூக்கிலே பொத்தலிட்டுக் கயிற்றைக் கட்டி இழுத்துச் செல்வார்கள்.

புண்ணியாத்மாக்களுக்கு இந்த வேதனையெல்லாம் கிடையாது. வழியில் சிரமம் ஏற்பட்டால் நிழலில் தங்கச் செய்து சிரமப் பரிகாரம் செய்து கொண்ட பின்னரே அழைத்துப் போவார்கள். தாகம் ஏற்பட்டால் குடிக்க நீர் கிடைக்கும். நடக்க முடியாவிட்டாலோ பல்லக்கிலோ, குதிரை மீதோ, யானை மீதோ ஏற்றி அழைத்துப் போவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்மராஜன் சந்நிதானத்தை அடைந்ததும் அவரவர் செய்த பாப புண்ணியங்களுக்கு ஏற்பத் தண்டனையோ சொர்க்க வாசமோ கொடுக்கப்படும். முதலில் தான் செய்திருக்கும் புண்ணியங்களுக்கான பலனை அனுபவித்துப் பின்னர் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

பாபிகளுக்குத் தர்மராஜனையும் அவன் தூதர்களையும் பார்க்கவே பயமாயிருக்கும். கோரமான ரூபத்தோடு அனல் கக்கும் விழிகளோடு தோன்றுவார்கள். புண்ணியாத்மாக் களுக்கு அவர்கள் நண்பர்களாகவும் இதம் செய்வர்களாகவும் தோற்றம் கொண்டிருப்பார்கள்.

பாபிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டதும் கிங்கரர்கள் அவர்களை இழுத்துச் சென்று அவர்கள் செய்த குற்றங்களைக் கூறி தண்டனையைக் கொடுப்பார்கள். தண்டனையின் கொடுமையைத் தாங்கமாட்டாது துடிக்கும் போதும், கதறும் போதும் அவர்கள் ஏளனம் செய்வார்கள்! 'பாபம் செய்யும்போது எத்தனை குதூகலமாக இருந்தது! இப்போது அனுபவிக்கும் போது அந்தக் குதூகலம் எங்கே போய்விட்டது?' என்று குத்திக் காட்டுவார்கள். தண்டனையின் கொடுமையைத் தாங்க முடியாது மூர்ச்சித்துப் போனாலும் அவர்கள் விடமாட்டார்கள். மூர்ச்சையைத் தெளியவைத்து மறுபடியும் தொடர்ந்து தண்டனையை அனுபவிக்கச் செய்வார்கள்.

நரகங்களில் முக்கியமானவை இருபத்தெட்டு ஆகும். கோரம், சுகோரம், அதிகோரம், மகாகோரம், கோர ரூபம், தலாதலம், பயாநகம், காளராத்திரி, பயோத்கடம், சண்டம், மகா சண்டம், சண்ட கோலாகலம், பிரசண்ட தரநாயகம், பத்மம், பத்மவதி, பிஷ்டை, பீமப் பிரணாயகம், கராளம், விகராளம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வச்சிரிம், திரிகோணம், பஞ்சகோணம், சுதீர்க்கம், பரிவர்த்துலம், ஸப்தபௌமம், அஷ்டபௌமம், தீப்ரம், மாயை ஆகியவை அவை.

இந்த நரகங்கள் இருபத்தெட்டுக்கும் ஒவ்வொரு வகையிலும் கோடி ஸ்தானங்கள் உண்டு. ஆனால் முக்கியமாக ஐந்து ஐந்து ஸ்தானங்கள் சொல்லப்படும். அவை பின் வருமாறு.

ரௌரவம், மகா ரௌரவம், தமசு, சீதம், உஷ்ணம், சகோரம், மகா தீக்ஷணம், பத்ம ஸஞ்சீவனம், சிவம், மகாதம விலேபம், சுலோமம், கண்டகம், தீவிர வேகம், கராளம், விகராளம், பிரகம்பனம், மகா வக்கிரம், வக்கிரம், காலம், பிரகர்ஜனம், ஸுசி முகம் , ஸுநேமி, காதகம், சுப்பிரபீடனம், கும்பி பாகம், சுபாகம், கிரகசம், தாருணம், அங்கார ராசி, பவனம், மேதப் பிரஹிதம், அஸ்ருக்பிரஹிதம், தீக்ஷண துண்டம், சகுனி, மகா சம்வர்த்தகம், கிரது, ஸப்த ஜந்து, பங்கலேபம், பிரதிமாசஸ்ரம், பூத்பவம், உச்வாஸம், நிருச்வாசம், ஸுதீர்க்கம், கூடசால்மலி, பிரதீபத்மம், ஸுமஹாநாதம், பிரவாஹம், சுப்பிரவாகனம், மேகம், விருஷம், சல்லியம், சிம்மம், வியாக்கிரம், கஜம், சுவராஜம், சூகராஜம், மகிஷம், அவிகாரம், விருகரணனம், கிரஹாக்யம், மீனவக்திரம், சர்ப்பம், கூர்மம், வாயசம், குர்த்ரம் (பருந்து), உலூகம் (ஆந்தை), ஜலௌகம் (அட்டை), சார்த்தூலம், விகர்க்கடகம், மண்டுகம், பூதிவக்த்ரம், ரஜிதம், பூதம், ருத்திகை, கணதூமம், கணாக்னி, கிருமிசமுகம், அக்கினிகாஸம், பிரதிஷ்டம், ருதிராம்பம், ஸ்வபோஜனம், லாலாபக்ஷணம், ஆத்மபக்ஷணம், ஸர்வபக்ஷணம், ஸுதாருணம், ஸுகண்டம், ஸுவிசாலம், விகடம், கடபூதனம், அம்பரீஷம், கடாஹம் கஷ்டம், வைதரணி நதி, சுதப்ல லோகசயநம், ஏகபாதம், பிரபூரணம், அசிதாலவனம், கோரம், அஸ்தி பங்கம், ஸுபூரணம், கிலோதசி, சுயந்திரம், கூடபாசம், பிரமர்த்தனம், மகாசூர்ணி, சசூர்ணி, தப்தலோக மயம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பர்வதத்திலிருந்து விழும் நீர் அருவி, மல வர்த்ததம், மூத்திர விஷ்டம், சுக்லபம், தாரகூபம், சீதலம், முசலம், உலூகலம், யந்திரம், சிலை, சாகடம், லாங்கலம், தாலபத்திரம், கஹணம், மகாசகட மண்டபம், ஸம்மோஹம், ஹஸ்தி பங்கம், தப்தம், மலயம், குடம், பஹு துக்கம், மகாதுக்கம். கஸ்மலம், ஸ்யமலம், மலம், ஹாலஹலம், விரூபம், கரூபம், யமானுகம், ஏகபாதம், திரிபாதம், வாலுகவிதளம், தீவிரம், அர்வீசரம், ஆக நூற்று நாற்பது ஸ்தானங்கள்.

யமகிங்கரர்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சங்கிலிகளில் கட்டித் தலைகீழாகத் தொங்க விடுவார்கள். இரும்புப் பாறைகளைக் காலிலே கட்டிச் சுமக்கச் செய்வர். கூரிய முனைகளை உடைய ஆயுதங்களால் உடலிலே சல்லடைக் கண் போலத் துளைப்பார்கள். கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் தள்ளி வதக்கி எடுப்பார்கள். திகு திகுவென்று எரியும் நெருப்புக் குண்டங்களில் ஈட்டியில் குத்தி வாட்டி எடுப்பார்கள். செக்கிலிட்டு ஆட்டுவார்கள். மல மூத்திரக் குழிகளில் தள்ளி அங்கேயே சிறிது காலம் கிடக்கச் செய்வார்கள். ஊசிகளால் உடலெங்கும் குத்திக் கழுவேற்று வார்கள். பாபம் செய்த அவயங்களைத் தனித்தனியே துண்டித்துச் சித்திரவதைக்குட்படுத்துவார்கள். வேதனைப் பொறுக்க முடியாது கூக்குரலிட்டாலோ, ஓடினாலோ, கதறினாலோ, கெஞ்சினாலோ கிங்கரர்கள் கொஞ்சமும் பரிதாபம் காட்ட மாட்டார்கள். அவரவர் செய்த பாபங்களின் கடுமைக்கேற்பத் தண்டனையும் கடுமையாக இருக்கும்.

புண்ணியம் செய்தவர்கள் சொர்க்கலோகத்தை அடைவதற்கு யமலோக வேதனை ஏதுமின்றி அடையலாம். அவர்கள் செல்லும் வழி அவர்களுக்குச் சுகம் கொடுப்பதாகவே அமைந்திருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சத்பிராம்மணர்களுக்குப் பாதுகை, குடை முதலிய தானம் கொடுத்தால் அவன் குதிரையிலேறிக் குடையின் நிழலில் யமலோகத்தைக் கடந்து செல்வான். பாதைகளில் விருக்ஷங்களை வளர்த்து மக்களுக்கு உதவுபவன், யமலோகம் கடந்து செல்லும் வழியில் அநேக நிழல்களோடு கூடிய விருக்ஷங்கள் அவன் தங்கி இளைப்பாறக் காத்திருக்கும். தேவாலயங்கள், சத்திரங்கள், அனாதாசிரமங்கள் ஆகியவற்றைக் கட்டுவித்தவர்கள் எவ்வித சிரமமுமின்றிக் கடந்து செல்வார்கள். தீபதானம் செய்தவர்களுக்குப் பாதை நெடுகிலும் ஜோதி வழிகாட்டி வரும். பூதானம் செய்தவர்கள் செல்லும் வழியில் குளிர்ந்த சோலைகளும், தடாகங்களும் நிறைந்து மனத்துக்கு இன்பம் விளைவிக்கும்.

தானங்களில் சிறந்தது அன்னதானம். அன்னத்தைக் கொடுப்பவன் பிராணனைக் கொடுத்தவனாகிறான். ஆகவே, அவன் சகல தானங்களையும் கொடுத்தவனாக விளங்குகிறான். அன்னதானம் செய்தவனுக்கு யமலோகத்தைக் கடந்து செல்கையில் பசி, தாகம், களைப்பு ஏதுமிருக்காது. அன்னதானம், பானதானம், கோதானம், வஸ்திர தானம், படுக்கை தானம், குடை தானம், ஆசன தானம், பாதுகா தானம் ஆகிய எட்டும் பிரேத லோகத்தில் சிறந்த பலனைக் கொடுக்கக் கூடியவை.

தவம் செய்பவருக்கு ஞானம், சுவர்க்காதி பதவிகள், பாபநாசம், சிவலோகப் பதவி ஆகியவை கிட்டும்.

குடிமக்களின் உபயோகத்துக்காகத் தடாகமோ சிறு குளமோ ஒருவன் வெட்டுவிப்பானாகில் அவன் வமிசத்தார் அனைவரும் தாங்கள் செய்த பெரும் பாவங்களிலிருந்து விடுபட்டுப் புண்ணியவான்களாவார்கள். குடிதண்ணீருக்காக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிணறு தோண்டுவிப்பது விசேஷமாகச் சொல்லப்படுகிறது. ஆயிரம் கோதானம் செய்த பலனை அவன் அடைகிறான். பாதசாரிகளுக்கு உபயோகமாக நிழல் கொடுக்கக் கூடிய மரங்களை நட்டு வளர்ப்பவனுக்கு, பரலோகத்தில் அம்மரங்கள் புத்திரர்களைப் போன்று அவனுக்கு உதவுகின்றன.

42. புராணச் சிரவணம்

பாப புண்ணியங்களையும், தான விசேஷங்களையும் விவரித்து வந்த சூதர், நைமிசாரண்ய முனிவர்களுக்குப் புராணச் சிரவணத்தின் பலனைச் சொல்லத் தொடங்கினார்.

ஒரு சமயம் பிரம்மதேவன் யமலோகத்துக்குச் சென்றிருந்தார். யமதர்மனும் நான்முகனை வரவேற்று உபசரித்தான். அவர்கள் இருவரும் அமர்ந்து வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் கண்ணைப் பறிக்கும் ஜோதியோடு கூடிய விமானம் ஒன்று அங்கே வந்தது. அதிலிருந்து திவ்விய தேஜஸ்ஸை உடைய புருஷன் ஒருவன் இறங்கினான். அவனைக் கண்டதும் தர்மராஜன் சட்டென்று எழுந்து சென்று அவனை நமஸ்கரித்து வரவேற்றான்.

“ஐயா, சுகமாக இருக்கிறீர்களா ? தாங்கள் வருகையால் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். தங்கள் விருப்பம் போல் இங்கே தங்கியிருந்து பின்னர் பிரம்மலோகம் செல்லலாம்” என்று வேண்டினான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அதே போன்று மற்றொரு விமானம் வந்தது. அதிலும் ஓர் திவ்விய புருஷன் அமர்ந்திருந்தார். அவனையும் தர்மராஜன் சந்தோஷத்தோடு வரவேற்று முன் போலவே உபசார வார்த்தைகள் சொல்லி மகிழ்ந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதைக் கண்டபோது பிரம்மதேவனுக்கு ஆச்சிரியமாயிருந்தது. யமனைப் பார்த்து "தர்மராஜா, இவர்கள் யார்? உன்னால் பூஜிக்கப்பட வேண்டிய காரணம் என்ன? அந்தப் பாக்கியம் இவர்களுக்கு எப்படிக் கிட்டியது?" என்று கேட்டார்.

தர்மராஜன் அதைக் கூறினார்.

பூலோகத்தில் வைதிசம் என்னும் பட்டணம் இருக்கிறது. அப்பட்டணத்தை தராபாலன் என்னும் அரசன் ஆண்டு வந்தான்.

ஒரு சமயம் பார்வதிதேவி, தவறு செய்த தம் தோழியரில் ஒருத்தியை நரியாகத் திரியுமாறு சபித்தார். 'அவள் பன்னிரண்டு வருட காலம் பூலோகத்தில் சுற்றி அலைந்து விட்டு அதன் முடிவில் விதஸ்தா, வேத்திரந்தி ஆகிய இரு நதிகளின் சங்கம ஸ்தலத்திலே சாப விமோசனம் அடைந்து மீண்டும் பழைய உருவை அடையட்டும்' என்று உத்தர விட்டாள். அவ்வாறே அந்தத் தோழியும் நரியாகிப் பூமியில் பன்னிரண்டு வருட காலம் அலைந்து திரிந்து, முடிவில் அவ்விரு நதிகளின் சங்கம ஸ்தலங்களை அடைந்தாள். ஆகாரம் ஏதும் கிடைக்காமையால் பட்டினி கிடந்து அங்கேயே உயிரை விட்டாள். அப்போது திவ்விய விமானம் ஒன்று மேலிருந்து வந்து இறங்கியது. திவ்விய தேகம் பெற்ற அவள் அதிலேறிச் சென்றாள்.

தராபாலன் இதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அந்த இடம் மிகவும் உத்தமமான இடம் என்று எண்ணி அங்கே ஒரு சிவாலயம் கட்டுவித்து அதில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து கோபுரம், மதில் சுவர் முதலானவற்றையும் கட்டுவித்து நித்திய பூஜைக்கு ஏற்பாடு செய்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்போது ஒரு நாள் சகல சாஸ்திரங்களையும் கற்ற வேதியன் ஒருவன் அங்கே வந்தான். அவன் பாண்டித்தியத்தை அறிந்த அரசன் அவனை வரவேற்று உபசரித்து "ஐயா, இந்தச் சிவாலயம் என்னால் கட்டப்பட்டது ஆகும். கட்டி முடிக்கவும் தாங்கள் வரவும் சேர்ந்ததானது என் பாக்கியமே. தாங்கள் தினமும் இவ்வாலயத்தில் புராணம் சொல்ல வேண்டும். தங்கள் ஜீவனத்துக்காக வருடம் ஒன்றுக்கு நூறு பொன் நிஷ்கம் கொடுக்கச் செய்கிறேன். என் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு என்னைக் கிருதார்த்தனாக்க வேண்டும்" என்று வேண்டினான்.

அதைக் கேட்ட அந்த வேதியன் மகிழ்ச்சியோடு அரசனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டான். தினமும் இரவிலே சிவாலயத்திலுள்ள மண்டபத்தில் புராணம் சொல்லப்பட்டது. அரசன் குடிமக்களோடு பக்தி சிரத்தையுடன் புராணம் கேட்டு வந்தான்.

ஆறு மாதங்கள் சென்றன. அரசனது கால தசை முடிந்து விட்டது. அரசன் இறந்ததும் அவனை அழைத்துவர யமலோகத்திலிருந்து விமானம் வந்து சேர்ந்தது. திவ்விய ரூபத்தைப் பெற்ற அரசனை அழைத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றது, அந்த விமானம்.

இந்த விருத்தாந்தத்தைச் சொல்லி முடித்த தர்மராஜன், "நான்முகா, புராணச் சிரவணம் செய்ததால் அரசன் மிகுந்த பாக்கியவானானான். ஆகவே அவன் என்னால் பூஜிக்கப் பட்டான். மற்றொருவனும் புராணச் சிரவணம் செய்தவனே. புராணச் சிரவணத்தால் எவரொருவர் தேவர்களைத் தகுந்தபடி கௌரவித்து அவரைத் திருப்திப்படுத்துவார்களோ அவர்கள் பிரம்ம லோகத்தில் நித்திய வாசத்தை அடைவார்கள்' என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

43. பூதான விசேஷம்

சித்திராதன் என்னும் அரசன் இருந்தான். அவன் பிரதாபம் இந்திரலோகத்திலும் பரவியிருந்தது. இந்திரனோடு சண்டையிட்டு இந்திரனையும் வென்று தன் அதிகாரத்துக்குட்படச் செய்தான்.

அழகிய மனைவியையும், புத்திரர்களையும் பெற்றிருந்தான். அவனுக்குக் குறைவு என்பதே இல்லாமலிருந்தது. இதே பாக்கியத்தை அடுத்தப் பிறவியிலும் தான் அடைய என்னென்ன மார்க்கங்கள் இருக்கின்றன என அறிய விரும்பினான்.

அவனுடைய குலகுருவான வசிஷ்டரிடம் சென்று பணிந்து, "முனிசிரேஷ்டா, பொருளிலோ, பதவியிலோ, மோகத்திலோ ஒரு குறைவுமின்றி இருந்து வருகின்றேன். இந்தப் பாக்கியம் இந்தப் பிறவியில் நான் செய்த புண்ணியத்தால் அடைந்த தன்று. முற்பிறவியில் நான் செய்துள்ள புண்ணியங்களால் அடைந்த பலனே. இதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. தயவு செய்து முற்பிறவியில் நான் செய்த புண்ணிய காரியங்களைத் தாங்கள் சொல்ல வேண்டும்" என்று வேண்டினான்.

வசிஷ்டரும் தனது யோகபலத்தால், அரசனின் முற்பிறவியைக் கண்டு அறிந்து சொல்லுகிறார்.

"அரசே! நீ முற்பிறப்பில் அவந்தி பட்டணத்தில் தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தாய். நாட்டிலே மழையில்லாது வறுமை தாண்டவமாடியது. அப்போதும் நீ அரசன் தர்மபாலனிடம் யாசகத்துக்குச் செல்லவில்லை. அவன் தர்மவான் என்பதும் அவனை அடைந்தால் ஏதாவது பெறலாம் என்று உனக்குத் தெரியுமென்றாலும் நீ அரசனிடம் செல்லவில்லை. உழைத்துப் பிழைக்கவே விரும்பிய நீ, காட்டிற்கு உன் மனைவியுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்றாய். அங்குக் கிடைக்கும் காய் கனி கிழங்குகளைக் கொண்டு உயிர் வாழலாம் என்பது உன் எண்ணம். அங்கும் நிலைமை சரியில்லை. உன்னைப்போல் எத்தனையோ பேர் வந்திருந்ததால் தேவையான அளவு காய், கனி உனக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, காய்ந்த மரங்களை வெட்டி எரித்துக் கரியையும், சுள்ளிகளையும், சிறு சிறு கட்டைகளையும், விறகுகளாக கட்டி எடுத்துச் சென்று விற்று ஜீவித்து வந்தாய்.

“அப்படி இருந்துவரும்போது ஒருநாள் தலைச்சுமை விறகோடு நகரத்துக்கு வந்த உனக்கு அன்றைய தினம் சோதனை போல ஒரு விறகும் விலையாகாது போய்விட்டது. தெருத் தெருவாக அலைந்துவரும் போது ஓரிடத்தில் வைசியன் ஒருவன் வீட்டில் வேதியர் சிலர் ஹோமம் செய்து கொண்டிருந்தனர். அன்றைய தினம் மாசி மாதம் பௌர்ணமி சந்திர கிரகணம் அவர்கள் ஹோமம் செய்து வருவதை உன் மனைவியோடு நீ வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாய். ஹோமத்தின் முடிவில் வைசியன் வேதியர்களுக்கு நூறு பலம் உள்ள பொன்னைப் பூதானம் பிரதியாகக் கொடுத்ததைக் கண்டாய்.

“அப்போது உன் உள்ளத்தில் வருத்தம் தோன்றியது. இந்தப் புண்ணிய காலத்தில் நாமும் தானம் செய்து விசேஷ பலனை அடைய முடியாதிருக்கிறதே என்று வருந்தினாய். மானசீகமாகத் தானம் செய்து மகிழ்ச்சி அடைந்தாய். அந்தப் புண்ணியத்தின் பலன் தான் இந்தப் பிறவியில் உனக்கு இந்தச் சுகபோக வாழ்க்கை. தன்னால் முடியாவிட்டாலும், முடியவில்லையே என மனப்பூர்வமாக வருந்தி, அவ்வாறு செய்ததாக மானசீகமாக எண்ணி ஆறுதல் கொண்டதற்கு இந்தபலன் என்றால், உண்மையாகவே தானம் செய்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்தனை மடங்கு பலன் கிட்டும் என்பதை எண்ணிப்பார். இந்தச் சுகபோக வாழ்க்கை நீ எத்தனை பிறவி எடுத்தாலும் உனக்கு நிலைத்திருக்க, நீ பூதானம் செய்" என்று தெரிவித்தார் வசிஷ்டர்.

அரசனும் அவ்வாறே பட்டணம் திரும்பி சத்புருஷர்களுக்குப் பூதானம், சொர்ணதானம் முதலியன செய்து மகிழ்ந்திருந்தான்.

44. தில ஹஸ்தி தானம்

பூமி தான விசேஷத்தைத் தெரிவித்த சூதர் மேலும் ஒரு விருத்தாந்தத்தைச் சொல்லத் தொடங்கினார்.

பிருது சக்கரவர்த்தி அரசாட்சி செய்து வந்தபோது அவன் புகழ் சகல லோகங்களிலும் பரவியிருந்தது. நாட்டிலே மக்கள் சந்தோஷத்தோடு வாழ்க்கை நடத்தி வந்தனர். நோயாளிகள், திருடர்கள், பரிசுத்தமற்றவர்கள், வஞ்சகர்கள் ஆகியோர் நாட்டில் இல்லை. எங்கும் தருமம் செழித்தது.

இதைக்கண்ட அவன் மனைவி பெரிதும் களிப்புற்றுக் கணவரிடம் தெரிவித்தாள். அரசனும் மனம் களித்தவனாய், "பிரியே, நமக்குக் கிட்டியிருக்கும் பாக்கியம் சர்வ சாதாரணமாகக் கிடைத்தது அல்ல. நாம் முற்பிறப்பில் பெரும் புண்ணிய தர்மங்கள் செய்திருக்க வேண்டும். அதனாலேயே நாமும் நம் நாட்டு மக்களும் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறோம்" என்றான்.

பின்னர் அரசன் வேதப் பிராமணர்களை அழைத்து "பெரியோர்களே, பகவத் பிரசாதத்தால் நான் சுகபோகத்தில் திளைத்து வருகிறேன். குடிமக்களும் மகிழ்ச்சியோடு இருந்து வருகிறார்கள். பூர்வ ஜென்மத்தில் நான் என்ன புண்ணிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்மா செய்தேன் ? என்பதை விவரிக்க வேண்டும்'' என்று வேண்டினான். அவர்களும் மரீசி முனிவரை அடைந்து அவரைக் கேட்குமாறு தெரிவித்தனர்.

அரசன் முனிவரிடம் சென்று அவரைப் பூஜித்துத் தான் அறிய விரும்புவதைப் பற்றிக் கேட்டான். அரசன் முன் ஜன்மத்தில் செய்த புண்ணிய கர்மாவைத் தன் தபோபலத்தால் உணர்ந்து விவரித்தார் முனிவர்.

“அரசே, முன் ஜன்மத்தில் நீ நான்காம் வருணத்தில் பிறந்தவன். உன் மனைவி உன்னிடம் நீங்காத பக்தி கொண்டாள். ஏழ்மையால் நீ உன் மனைவியை விட்டு விட்டு ஒருவரிடம் வேலைக்கு அமர்ந்தாய். அப்படியிருந்தும் அவள் உன்னை விட்டு விலகாமல் அவ்வப்போது உன்னைக் கண்டு பணிவிடை செய்து, நீ செய்யும் ஊழியங்களில் உனக்கு உறுதுணையாக இருந்தாள்.

அப்போது அரசன், விஷ்ணுவுக்கு ஓர் ஆலயம் எழுப்பித்தான். நீயும் உன் மனைவியும் தினமும் ஆலயத்தை சுத்தம் செய்து தரையைச் சாணமிட்டு மெழுகி வந்தீர்கள். அந்தத் தொண்டின் பலனே இப்பிறவியில் நீங்கள் அரச போகத்தோடு வாழ்ந்து வருகிறீர்கள். இந்தப் போக பாக்கியங்கள் உங்களுக்கு என்றும் நிலைத்திருக்க, சத்பிராமணர்களுக்குப் பூதானம், சொர்ண தானம் செய்யுங்கள். தருமார்த்த காம மோக்ஷம் எனப்படும் சதுர்வித புருஷார்த்தங்களும் பூதானம், சொர்ண தானம் செய்யும் ஒருவரிடம் ஒருங்கே அமையும்'' என்றார் மகரிஷி.

தான விசேஷங்களைச் சொல்லி வந்த சூதரைப் பார்த்து முனிவர்கள் கேட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஸர்வக்ஞ! பிரம்மஹத்தி முதலான பெரும் பாபங்கள் நீங்க, பூதானம், சொர்ண தானம் செய்யும் வழிகளை எடுத்துக் கூறினீர்கள். சக்தி உள்ளவர்களாலேயே இம்மாதிரி தானங்கள் செய்ய முடியும். வசதி இல்லாதவர்கள் என்ன செய்வது? அதற்கு வழி இருக்கிறதா? அப்படியானால் அதை விளக்கிக் கூற வேண்டும்'' என்று வேண்டினர்.

சூதரும் மகிழ்ச்சி அடைந்து சொல்லத் தொடங்கினார்.

கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமியின் போதோ, நாக சதுர்த்தியின் போதோ எள்ளினால் யானை வடிவம் செய்து அதற்குச் சந்தனம், குங்குமம் முதலான இட்டு பூஜை செய்ய வேண்டும். யானையின் முன் குங்குமத்தால் அஷ்டதள பத்மம் வரைந்து அதன் மேலே சிவனையும் விஷ்ணுவையும் ஆவாஹனம் செய்ய வேண்டும். பின்னர் தாமரையின் கிழக்குப் பக்கத்திலிருந்து வரிசையாக இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோரையும் அந்தந்தத் திக்கிலே ஸ்தாபிதம் செய்து பூஜிக்க வேண்டும். வசதி உள்ளவர்கள் பக்கத்திலே கன்றோடு கூடிய பசுவையும் கட்டிவைத்துப் பூஜை செய்யலாம். எள்ளால் செய்யப்பட்ட யானையின் கண்களுக்கு முத்துக்களும், பற்களுக்கு வெள்ளியும், நெற்றியில் திலகமாய்ப் பொன்னும், கண்களில் தாமரையும், கழுத்திலே வெண்கல மணியையும், உடலுக்குப் பட்டு வஸ்திரமும் சாற்றி, முத்துமாலை, பாதுகை, குடை, கிண்ணம், ஆசனம், கண்ணாடி ஆகியவற்றையும் வைக்கலாம்.

பூஜை முடிந்ததும் சத்பாத்திரன் ஒருவனுக்கு இப்பொருள் களைத் தானம் செய்து, தில ஹஸ்தியையும் தானம் செய்ய வேண்டும். இதனால் அவன் யமலோகத்தை எவ்விதக் கஷ்டமுமின்றிக் கடக்கலாம். அவன் செய்த பிரம்மஹத்தி முதலான பெரும்பாவங்கள் நசித்துப் போகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்று முழுவதும் அவன் உபவாசமிருந்து மாலையில் தீப தானம் செய்து பின்னரே உணவருந்தலாம்.

தான விசேஷங்களைக் கூறி முடித்த சூதர், அடுத்து சதுர்தசி விரத மகிமையைக் கூறத் தொடங்கினார்.

45. சதுர்தசி விரத மகிமை

ஜம்புத் தீவில் சதாநீகன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த தர்மவான். தினமும் அதிதிகளுக்குப் பொன், வஸ்திரம் முதலியவற்றைத் தானமாக அளித்து வந்தான். அவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான்.

அரசன் இறந்ததும், அவன் மகன் அரசனாக முடிசூட்டப் பெற்றான். அவனும் தந்தையைப் போலத் திறமை உடையவனாய் எண்திசையும் புகழ்பரவ, சத்துருக்கள் பயமின்றி, நாட்டை ஆட்சி புரிந்து வந்தான்.

ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவன் விருப்பமில்லாதிருந்தான். தந்தையைப் போல் ஏழை மக்களுக்குத் தானம் செய்வதில்லை.

அரசனால் கொடுக்கப்படும் தானங்களைக் கொண்டே வாழ்ந்து வந்த வேதியர்கள், இந்த மாறுபட்ட நிலையில் மிகவும் கஷ்டப்பட்டனர். முன்பெல்லாம் ஜீவனத்துக்குக் கவலை இல்லாதிருந்ததால் அவர்கள் நித்திய கர்மாக்களில் முழு நேரமும் ஈடுபட்டு வந்தனர். இப்போது அவர்கள் நேரம் முழுவதும் ஜீவனத்தைப் பற்றிய கவலையிலேயே கழிந்தது. அதனால் அவர்களில் சிலர் ஒன்று கூடி அரசனிடம் சென்று இதைத் தெரிவிக்கலாமென்று தீர்மானித்தனர். அவ்வாறே அவர்கள் அரசனைச் சந்தித்துத் தங்கள் கஷ்டங்களை எடுத்துக் கூறினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் வார்த்தைகளைக் கேட்ட அரசன் மெல்ல அவர்களை நோக்கிப் புன்னகை செய்தான். பின்னர் அவர்களிடம் தன் சந்தேகம் ஒன்றை விளக்குமாறு கேட்டான்.

"இப்பிறவியில் சொர்ணம், வஸ்திரம், அன்னம் முதலானவற்றை சத்புருஷர்களுக்குத் தானம் செய்பவர் விண்ணுலகில் சுகபோகங்களுடன் வாழ்ந்து அடுத்த பிறவியிலும் நல்ல குலத்தில் பிறந்து மேன்மையாக இருப்பார்களென்று சொல்லப்படுகிறதல்லவா! என் தந்தை எத்தனையோ தான தருமங்களைத் தினமும் செய்து வந்திருக்கிறார். அவர் இப்போது எந்த லோகத்தில் எவ்வாறு இருந்து வருகிறார் என்பதை எனக்கு விளக்கிக் கூற முடியுமா? இந்த சந்தேகத்தைப் போக்க முடியுமானால் நானும் என் தந்தையின் வழக்கத்தைக் கடைபிடிக்கிறேன்".

அரசனின் வார்த்தைகளுக்கு அவர்கள் என்ன பதில் சொல்வார்கள்? வாடிய முகத்தோடு திரும்பிய அவர்கள் மற்றவர்களோடு கூடி என்னென்ன வழிகளிலெல்லாமோ யோசித்துப் பார்த்தார்கள். அறிஞர்களைச் சந்தித்து விசாரித்தார்கள். அவர்களுக்கு யாராலும் தகுந்த பதில் சொல்ல முடியவில்லை. அரசனின் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க முடியாதென்பதை உணர்ந்தபோது அவர்கள் வருத்தம் மேலும் அதிமாகிவிட்டது. அவர்களால் நித்திய கர்மாக்களை முழு மனத்தோடு செய்யமுடியவில்லை. அவற்றை விட்டு விட்டார்கள்.

வேதியர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை விடாது செய்து வந்தால்தானே தேவர்கள் பிரீதி கொண்டு லோகம் க்ஷேமமாயிருக்க அருளுவார்கள். இந்த நிலையைக் கண்ட சூரியன், வேதனை அடைந்தான். ஒரு பிராமணனாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேடம் கொண்டு, அவர்களிடம் வந்து, அவர்கள் படும் துக்கத்துக்கான காரணத்தைக் கேட்டான்.

அவர்களும் நடந்த விஷயங்களைத் தெரிவித்தனர். அதனைக் கேட்ட சூரியன் நகைத்து, "சகல சாஸ்திரங்களிலும் பாண்டித்தியம் பெற்றுள்ள உங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கப் போகிறது? உங்களுக்கு மட்டும் க்ஷேமமா? இந்த உலகம் அனைத்துக்கும் க்ஷேமமாக அல்லவா உங்களுக்கு நித்திய கர்மாக்கள் விதிக்கப்பட்டுள்ளன. அரசன் தானம் அளிக்காவிடில் அவன் இறந்துவிட்டதாகவே எண்ணுங்கள். தானம் எதையும் விரும்பாது அரசனின் உதவி இல்லாது நித்திய கர்மாக்களைச் செய்து வருபவனே சிரேஷ்டமானவன். அத்தகைய சிரேஷ்டரை அணுகி பூஜித்து உபசரித்தால் நீங்கள் சகல போகங்களையும் அடைவீர்கள்" என்றான் சூரியன்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட வேதியர்களும் மனம் சாந்தி அடைந்தனர். அந்த க்ஷணமே சூரியன் அங்கிருந்து மறைந்தான். சிறந்த சத்புருஷனை நாற்றிசைகளிலும் அவர்கள் தேடிவரும் போது தவம் செய்துகொண்டிருந்த பார்க்கவ முனிவரைக் கண்டனர். அவரை அடைந்து வலம் வந்து வணங்கினர். உச்சி வேளைவரை நிஷ்டையிலிருந்த முனிவர், சூரியன் மேற்குத் திசையில் இறங்கத் தொடங்கியதும் நிஷ்டை கலைந்து எழுந்தார். தம் எதிரில் அமர்ந்திருக்கும் வேதியர்களைக் கண்டதும் அவர்களை இன்முகத்தோடு வரவேற்று, அவர்கள் வந்திருப்பதன் காரணத்தைக் கேட்டார்.

வேதியர்களும் தாங்கள் வந்திருந்த காரணத்தை முனிவரிடம் விளக்கினர். முனிவரின் உள்ளம் வேதனையுற்றது.

"அன்பர்களே, வருத்தத்தைக் கைவிட்டு உங்கள் காரியங்களைச் செய்து வாருங்கள். என் தபோபலத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்போதைய அரசனின் தந்தை எங்கிருக்கிறார் என்பதை அறிந்து நான் திரும்புவேன்'' என்று ஆறுதல் வார்த்தை சொல்லி அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

அங்கு நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த சூரியன், வேதியனாக முனிவர் முன்பு வந்து அவர் சொல்லும் காரியத்தில் தான் வழி காட்டுவதாகத் தெரிவித்தான். அவர்கள் இருவரும் போய்க்கொண்டிருக்கும்போது வழியில் ஒரு பிராமணன் முனிவரின் முன்பு வந்து அவரை மேலே செல்லவிடாது தடுத்தான்.

“எனக்குக் கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்தாலன்றி உன்னை மேலே செல்ல விடமாட்டேன்'' என்றான் அவன்.

முனிவருக்கு ஒன்றும் புரிவில்லை. அவனைப் பார்த்து “நீ யார்? உனக்கு நான் கொடுக்க வேண்டியது என்ன? நீ எனக்கு என்ன கொடுத்தாய்?'' என்று கேட்டார்.

“நான் முன் ஜன்மத்தில் புராணச் சிரவணம் செய்தபோது நீ அருகிலிருந்து கேட்டாய். அப்போது எனக்கு எதுவும் நீ கொடுக்க வில்லை. நான் கேட்டதற்கு, வீட்டிற்குச் சென்று கொண்டு வருவதாகச் சொல்லி சென்றாய். அப்புறம் திரும்பவேயில்லை'' என்றான் அவன்.

“ஐயா, எனக்குத் தெரிந்தவரையில் அப்படியொன்று நிகழ்ந்ததாக என் நினைவில் இல்லை. இருப்பினும் அது பூலோகத்தில் நிகழ்ந்ததல்லவா? அங்கே சென்று நாம் தீர்த்துக் கொள்வோம். இப்போது என் கையில் எதுவும் இல்லை'' என்றார் பார்க்கவர்.

“உன் புண்ணியத்தில் பாதியைக் கொடு. அப்போது தான் மேலே செல்லலாம்'' என்றான் அவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முனிவரோ முடியாதென்று மறுத்தார். பக்கத்திலிருந்த சூரியன், அவர்களிடையே தகராறை மத்யஸ்தம் செய்து வைப்பது போல் நல்ல வார்த்தைகளைக் கூறி, முனிவரின் புண்ணியத்தில் ஆறில் ஒருபங்கைத் தரச் செய்தான். அதன் பின்னரே அந்த வேதியன் அவர்களை மேலே செல்ல அனுமதித்தான்.

தொடர்ந்து மேலே செல்லும் போது ஒரு யாதவன் வந்து தடுத்தான். பார்க்கவரின் பசுக்களை மேய்த்ததில் அவனுக்குப் பணம் பாக்கியிருக்கிறதென்று தெரிவித்தான். அவன் பக்கத்திலிருந்த சூரியன், அவர்கள் தகராறை தீர்த்து வைத்து மறுபடியும் முனிவரின் புண்ணியத்தில் ஆறில் ஒரு பங்கைத் தரச் செய்து மத்யஸ்தம் செய்தான்.

இன்னும் சிறிது தூரம் சென்றதும், சாலியன் ஒருவன் வந்து தடுத்தான். வஸ்திரங்கள் வாங்கிய வகையில் பாக்கி இருப்பதாக அவன் கூறினான். வஸ்திரங்களை வாங்கிப் பணம் கொடாதிருப்பது பெரும் பாவம். ஆகையால் முனிவரின் புண்ணியம் அனைத்துமே தரச் செய்து சாலியனைத் திருப்திப் படுத்தினான் சூரியன்.

முனிவர் தாம் பெற்றிருந்த புண்ணியம் அனைத்தையும் இழந்து விட்டதால், அவர் மேலே செல்லும் சக்தியை இழந்து அங்கேயே நிற்கும்படியாகிவிட்டது. அதன் பிறகு சூரியன் முனிவரின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று யமலோகத்தை அடைந்தான். அங்கே ஓரிடத்தில் சதாநீக ராஜனை, யமகிங்கரர்கள் ஒரு பாத்திரத்தில் தள்ளி அடுப்பிலேற்றிக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தனர். அரசன் படும் வேதனையைக் கண்ட முனிவர் பெரிதும் துக்கித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மகராஜனே! தினமும் தவறாது வேதியர்களுக்கு அனேக தானங்களைச் செய்து வந்த தங்களுக்கா இந்தக் கதி? எத்தனையோ புண்ணியங்களைச் செய்து வந்த தங்களுக்கு இத்துன்பம் வரக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

மகரிஷியின் வார்த்தைகளைக் கேட்ட அரசன், கண்ணீர் விட்டவனாய், "முனிசிரேஷ்டா, தாங்கள் கூறியபடி நான் நாள்தோறும் எத்தனையோ தான தருமங்கள் செய்து வந்திருக்கிறேன். எந்தச் சொத்தை நான் தானம் செய்தேனோ அச்சொத்து முழுவதும் குடி மக்களை வருத்தி அவர்களிட மிருந்து பெற்றதாகும். அதனால்தான் இந்தத் தண்டனையை அனுபவிக்கிறேன். தயவு செய்து என் மகனைக் கண்டு இப் பெரும் துன்பத்திலிருந்து நான் விடுபட, உகந்த காரியங்களைச் செய்யச் சொல்லுங்கள்" என்று வேண்டினான்.

பார்க்கவர் சூரியனைப் பார்த்து, "ஐயா தங்களைத் தேவ புருஷராகவே மதிக்கிறேன். ஏனெனில் சத் ஜனங்களின் சம்பந்தம் ஏற்படும் போதுதான் ஒருவனுடைய மனம் ஞான மார்க்கத்தில் திரும்புகிறது. புண்ணிய கர்மாக்களைச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் தோன்றுகிறது. நான் செய்த புண்ணியம் அனைத்தும் இழந்து நின்றபோது, தங்கள் சம்பந்தத்தினாலேதான் இந்த இடத்துக்கு வரமுடிந்தது என எண்ணுகிறேன். அல்ப விவகாரங்களில் ஆசை வைத்துத் துன்புறுவோர் கடைத்தேறவும், தர்மங்களைச் செய்யாது இருப்பவர்களையும் உத்தாரணம் செய்யக் கூடியதுமான விரதம் இருக்குமானால் அதைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டினார்.

சூரியனும் மிக மகிழ்ந்து "ஐயனே, தருமத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்பவன், அந்தத் தருமத்தைச் செய்த பலனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைகிறான். லோகத்துக்கு க்ஷேமம் உண்டாகத் தருமத்தைச் செய்ய வேண்டும். நீ கேட்டபடி பலன் அளிக்கத் தக்க விரதம் ஒன்றிருக்கிறது. அதைக் கூறுகிறேன் கேள்'' என்று சொன்னான்.

சித்திரை மாதம் பரமசிவனுக்கு மிகவும் விருப்பமானது. ஆகவே அந்த மாதத்தில் தேவர்களும் பரம பிரீதியுடன் இருப்பார்கள். பகவான் அந்த மாதத்தில் பால ரூபத்தோடு தேவியுடன் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருப்பார்.

சித்திரை மாதத்தில் வரும் சதுர்தசி அன்று தீபதானம் செய்வதானது சகலமான தேவர்களுக்கு இஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதாகும். பூர்வ பக்ஷத்திலோ, அமர பக்ஷத்திலே சதுர்தசி அன்று விரதமிருந்து பகவானை ஆராதித்துத் தீபதானம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்பவர்கள் சகல பாபங்களினின்றும் நீங்கிப் புனிதத் தன்மையை அடைவார்கள்.

சூரியன் தெரிவித்த சதுர்தசி விரதத்தைத் கேட்ட பார்க்கவர் பூலோகம் திரும்பி, சதாநீக ராஜன் அனுபவித்து வரும் தண்டனையையும், அதிலிருந்து அவன் மீள்வதற்கான உபாயத்தையும் வேதியர்களிடம் தெரிவித்தார்.

"இப்போதே சென்று அரசனிடம் விஷயத்தைத் தெரிவியுங்கள். அவர் தந்தையின் பாபம் தீருவதோடு உங்களுக்கும் பயன் ஏற்படும் வகையில் அவன் நடந்து கொள்வான்'' என்றார் பார்க்கவர்.

அவர்களோ தங்களோடு அவரையும் அழைத்துச் சென்று அரசனிடம் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்தனர். அரசன் உடனே பக்கத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரம் ஒன்றை அடைந்து, தன் செலவிலேயே பெரும் தடாகம் ஒன்று எடுத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதன் கரையில் சிவபெருமானைத் தியானித்து சதுர்தசி விரதம் இருந்து வேதியர்களுக்கும் பண்டிதர்களுக்கும் அனேக பசுக்களையும் தீபங்களையும் தானம் செய்தான். அதன் பலனால் நரகத்தில் வேதனைப்பட்டு வந்த சதாநீகராஜன் அத்துன்பத்திலிருந்து விடுபட்டு சொர்க்கலோகத்தை அடைந்து மகிழ்ந்திருந்தான்.

ஏகாதசி அன்று ஒரே கால போஜனமும் நீரும் அருந்தி துவாதசியில் எவரிடமும் யாசிக்காது உணவருந்தி, திரயோதசியில் பகலில் உபவாசமிருந்து இரவில் உணவு உட்கொண்டு சதுர்தசி அன்று சுத்த உபவாசத்தோடு இருந்து, பௌர்ணமி அன்று பூதானம் செய்வதால் சகலவிதமான நற்பலன்களையும் அடைவான். அவன் விஷயத்தில் சர்வேச்வரன் பரம பிரீதி உடையவராவார். வசதி இல்லாதவர்கள் அன்றையத் தினம் ஒரு பாத்திரத்தில் அது நிறையும்வரை நெய்யைவிட்டு அதற்கு வஸ்திரமோ அல்லது நூலோ, சுற்றி, சிவபெருமானைத் தியானித்து "என் பாவங்கள் அனைத்தும் ஒழிய அருள வேண்டும்" எனப் பிரார்த்தித்துத் தானம் செய்ய வேண்டும். அவ்விதம் செய்வதால் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் செய்த பாவங்களிலிருந்து விடுபட்டுச் சுகத்தை அடைவர்.

46. துலா புருஷ தானம்

சதுர்தசி விரதத்தைச் சொன்ன சூதர், அடுத்து துலா புருஷ தானத்தையும் சொல்லத் தொடங்கினார்.

பலரைக் கொன்றவனும், பரஸ்திரியைப் புணர்ந்தவனும், மது மாமிசத்தைப் பக்ஷணஞ் செய்தவனும், சிசுஹத்தி புரிந்தவனும், குருபக்தியைக் கெடுத்தவனும், யாகம் செய்யத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தகாதவருக்கும் யாகம் செய்வித்தவனும் கடைத்தேற, துலா புருஷ தானம் செய்ய வேண்டும். ஒரு நாள் உபவாசமிருந்து பின்னரே இத்தானத்தைச் செய்யவேண்டும்.

இந்திரன், வருணன், வாயு, நிருதி, சுக்கிரன் முதலிய தேவர்களைத் திருப்திப்படுத்த முதலில் ஹோமம் செய்ய வேண்டும். பின்னர் கிரகதேவதை, இஷ்டதேவதை ஆகியோரைக் குறித்து ஹோமம் செய்ய வேண்டும். பின்னர் இரண்டு யாக ஸ்தம்பங்களை நிறுவி, அவற்றில் விக்ன ராஜரையும், ஸ்கந்தரையும் ஆவாகனம் செய்ய வேண்டும். அடுத்து சிவபெருமானைக் குறித்து, ருத்ர சூக்தத்தால் ஷோடசோபசார பூஜைகளைச் செய்து, பூஜையை அங்கீகரிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

பூர்ணாஹுதி முடிந்ததும் தராசைக் கொண்டுவந்து நிறுத்தி, ஒரு தட்டில் திரவியங்களை வைத்து மற்றொரு தட்டில் தான் ஏறி நின்று, தன் பாவங்கள் நீங்கி தானம் பூர்த்தியாகப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

இத்தானத்தை இரண்டு முறை செய்பவன், சிவகணங்களில் ஒருவனாவான். மூன்று முறை செய்பவன், சிவ சாரூப்பியத்தை அடைவான். பௌர்ணமி, வருஷப்பிறப்பு, கிரகண புண்ணிய காலங்களில் இத்தானத்தைச் செய்தால், மிகுந்த விசேஷ பலனை அடைவார்கள். இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரிய வம்சத்தைப் பூண்டோடு அழித்த பரசுராமர் தம் பாவம் தொலைய இத்தானத்தைச் செய்தார்.

ஒரு சமயம் குசிகன் என்னும் அரசன் இருந்தான். அவன் இந்திரனைக் குறித்துத் தவம் செய்து அவனையே புத்திரனாக அடைந்தான். அப்புதல்வனுக்குக் காதி என்று பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காதிக்கு ஸத்தியவதி என்று ஒரு பெண் பிறந்தாள். அவளை நிசித முனிவருக்கு மணம் செய்து கொடுத்தனர். காதிக்குப் புதல்வன் பிறக்காததால் அந்தக் குறை நீங்க, நிசித முனிவர் ஓர் யாகம் செய்தார். யாககுண்டத்திலிருந்து இருகருக்கள் உற்பத்தியாயின. அவற்றை மனைவியிடம் கொடுத்த முனிவர், "இவ்விரண்டையும் உன் தாயும் நீயுமாகப் புசித்தீர்களானால், உன் தாய்க்கு எவராலும் ஜெயிக்க முடியாத க்ஷத்திரிய வீரனும், உனக்கு பிராமண தர்மங்களில் குறைவின்றி என்னைப் போல் விளங்கும் ஞானப் புதல்வனும் பிறப்பார்கள்" என்று சொல்லி, வனத்துக்குத் தவம் செய்யச் சென்றார்.

அப்போது காதி தன் மனைவியோடு புதல்வியின் வீட்டுக்கு வந்தான். ஸத்தியவதி சந்தோஷத்தோடு தாயை வரவேற்று அழைத்துச் சென்று தன் கணவர் கூறியதை எடுத்துச் சொல்லி இரு கருக்களையும் அவளிடம் கொடுத்தாள்.

ஸத்தியவதியின் தாய் தன் மகளையே வஞ்சிக்க எண்ணம் கொண்டு தான் புசிக்க வேண்டியதை மகளுக்குக் கொடுத்து விட்டு அவள் சாப்பிட வேண்டியதைத் தான் புசித்துவிட்டாள். ஸத்தியவதிக்கு இது தெரியாது. அவள் கர்ப்பத்திலே க்ஷத்திரியர்கள் அனைவரையும் வெல்லக்கூடிய புத்திரன் உருவாகி வந்தான்.

முனிவர் ஞானதிருஷ்டியால் மனைவியின் கர்ப்பத்தில் இருக்கும் புத்திரனை உணர்ந்து, மனைவியை அழைத்து "பிரியே, உன் தாய் உன்னை வஞ்சித்து விட்டாள். தான் புசிக்க வேண்டியதை உனக்கு அளித்துவிட்டு, உனக்குக் கொடுக்க வேண்டியதை அவள் உட்கொண்டு விட்டாள். உனக்கு மகா தபஸ்வியான தம்பி பிறக்கப் போகிறான். உன் வயிற்றிலோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராமண தர்மத்துக்கு விரோதமாக க்ஷத்திரியக் கரு வளர்ந்து வருகிறது'' என்றார்.

கணவனின் வார்த்தைகளைக் கேட்ட ஸத்யவதி மிகவும் வருந்தி, ''நாதா, நம் தர்மாசாரங்களுக்கு விரோதமாக நடக்கப் போவதைத் தாங்கள் அனுமதிப்பீர்களா? இதற்கு ஒரு உபாயம் செய்ய வேண்டும்'' என்று வேண்டினாள்.

''பிரியே, நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை, ஹோமம் செய்யும் போது உன் தாய்க்கு க்ஷத்திரியனான மகனும், உனக்கு பிராமணோத்தமனான மகனும் பிறக்கவே மந்திரம் ஜபித்தேன். உன் தாய் செய்த வஞ்சனை இது. இதில் மாற்றம் செய்வது இனி இயலாத காரியம்'' என்றார் நிசித முனிவர்.

ஸத்தியவதி கண்ணீர் விட்டபடி, ''நாதா, அப்படியானால் ஒன்று செய்யுங்கள். நமக்குப் பிள்ளையாகப் பிறந்தால் என்ன? பேரனாகப் பிறந்தால் என்ன? நமது பேரனாகவே அக்குழந்தை பிறக்கட்டும்'' என்று வேண்டினாள்.

நிசித முனிவரும் அவ்வாறு ஆக அனுக்கிரகித்தார். ஆகவே நிசித முனிவரின் புத்திரரான ஜமதக்னி முனிவரிடம் பரசுராமர் தோன்றினார்.

ஹைஹய வமிசத்தில் கிருதவீர்யனுக்குப் புத்திரனாகப் பிறந்த கார்த்தவீரியன் ஆயிரம் கைகளும் சூரியனைப் போன்ற தேக காந்தியும் கொண்டிருந்தான். அவன் திரிஷிதர் என்னும் முனிவரைப் பூஜித்து அவர் அருளால் அக்கினியே அஸ்திரமாக இருக்கும் வரம் பெற்றான்.

அதனால் கர்வம் அடைந்த கார்த்தவீரியன் அனேக கிராமங்களையும் நகர்ங்களையும் கொளுத்தி அட்டகாசம் செய்து வந்தான். அவன் சென்ற இடமெல்லாம் அவனுக்குப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணிந்தன. அதனால் மேலும் செருக்குற்று அவன் முனிவர்களின் ஆசிரமங்களையும் கொளுத்தி அவர்களுக்குப் பெரும் தொல்லைகள் விளைவித்தான். ஆபஸ்தம்ப முனிவரின் ஆசிரமத்துக்கு வந்த அவன் அவருடைய ஆசிரமத்தையும் கொளுத்த முயற்சிக்கையில், முனிவர் பெரிதும் சினந்து 'விரைவிலேயே ஸ்ரீ பரசுராமனால் சிரம் அறுக்கப்பட்டு உயிரிழப்பாய்' எனச் சாபமிட்டார்.

அப்போதும் அவன் இறுமாப்பு அடங்கவில்லை.

ஒரு சமயம் கார்த்தவீரியன், ஜமதக்னி முனிவரது ஆசிரமத்துக்கு வந்தான். முனிவர் அவனை வரவேற்றுப் பலவாறு உபசரித்தார். திடீரென்று பரிவாரங்களுடன் வந்த தன்னை முனிவர் வரவேற்று, எப்படி அறுசுவை உண்டி



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளித்தார் என்று யோசித்தான். அதற்கு அவரிடம் இருக்கும் காமதேனுவே காரணம் என்பதை அறிந்தபோது அவனுக்குத் தானும் அதை அடைந்திருக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. முனிவரைப் பணிந்து அவருக்கு ஆசை வார்த்தைகள் பல கூறினான். காமதேனுவை தன்னிடம் கொடுத்துவிடும்படி கேட்டுக் கொண்டான். அதற்குப் பதிலாக அனேக பசுக்களைக் கொடுப்பதாகக் கூறினான். முனிவர் அதற்கு இணங்க மறுத்துவிட்டார்.

அரசனோ காமதேனுவை விட்டுப் பிரிய மனமில்லாது முனிவரிடமிருந்து எவ்வகையிலாவது அதைக் கைப்பற்றிச் செல்ல வேண்டுமென்று முயற்சித்தான். அஸ்திரங்களால் முனிவரை அருகே நெருங்க விடாது செய்து, காமதேனுவைக் கைப்பற்றினான்.

இதற்குள் விஷயமறிந்து பரசுராமன் அங்கு வந்து சேர்ந்தான். கார்த்தவீரியனோடு போரிட்டு அவன் ஆயிரம் கரங்களையும் துண்டித்து விரட்டியடித்துக் காமதேனுவை மீட்டான்.

பரசுராமனிடம் தோல்வியுற்ற கார்த்தவீரியன் அப்போதும் காமதேனுவிடம் வைத்த ஆசையை விடவில்லை. பரசுராமன் தவம் செய்யச் சென்றிருக்கும் நேரத்தில் தன் புத்திரர்களை அனுப்பிக் காமதேனுவைப் பிடித்து வரச் செய்தான். அவர்கள், தடுத்த முனிவரை அஸ்திரங்களால் அடித்துக் கொன்று விட்டுக் காமதேனுவை ஓட்டிச் சென்றனர்.

தவம் முடிந்து பரசுராமன் ஆசிரமம் திரும்பியதும் அங்கே நிகழ்ந்திருந்த கோரச் செயல்களைக் கண்டு கோபமடைந் தான். தன் தந்தையைக் கொன்ற க்ஷத்திரிய குலத்தையே நிர்மூலம் செய்து விடுவதாகச் சபதம் செய்து கிளம்பினான். கார்த்த வீரியனையும் அவன் குமாரர்களையும் கொன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டான். அப்போதும் அவன் கோபம் தணியவில்லை. உலகெங்கிலும் க்ஷத்திரியப் பூண்டு இருக்கக் கூடாதென்று அனைவரையும் அழித்தான். ராஜ்ஜியங்களைப் பிராமணர்களுக்குத் தானம் செய்து விட்டு மீண்டும் தவம் செய்யச் சென்றான்.

க்ஷத்திரிய ஸ்திரீகள் அந்தப் பிராமணர்களையே மணந்து அவர்கள் மூலம் புத்திரர்களைப் பெற்று வம்சம் க்ஷீணமாகாது தடுத்தனர். தவத்தைப் பூர்த்தி செய்து கொண்டு வந்தபோது பரசுராமன் இந்த விஷயத்தை அறிந்தான். க்ஷத்திரியர் குலம் தலையெடுக்க விடக்கூடாதென்ற ஆத்திரம் அவனுள் இன்னமும் கொதித்துக் கொண்டிருந்தது. பிராமணர்களின் மூலம் பிறந்தவர்களையும் அழித்தான். இவ்வாறு இருபத்தொரு தலைமுறையினரை அழித்துத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டான்.

முடிவில் தான் செய்த கொலைகளின் பாவம் தன்னைச் சூழாதிருக்க, பூமண்டலம் முழுமையும் காசிப முனிவருக்கு தானம் செய்தான். அப்போதும், அவன் புனிதனாக முடியவில்லை. அசுவமேத யாகம் செய்தும் அவன் பாவம் நீங்கவில்லை. கடைசியில் சிவபெருமானைக் குறித்துத் தவம் மேற்கொண்டான். பகவானும் அவனுக்குப் பிரத்தியக்ஷமாகித் துலாபுருஷ தானம் செய்தால் அன்றி அந்தத் தோஷம் நீங்காது என்று சொல்லி விட்டார். அவ்வாறே பரசுராமன் விதிப்படி துலாபுருஷ தானம் செய்து தன் பாவங்கள் நீங்கிப் புனிதத் தன்மையை அடைந்தான்.

துலா புருஷ தானத்தை ஒரே ஒரு வேதியனுக்கு மட்டும் கொடுக்கக் கூடாது. அந்தத் திரவியங்களைப் பல பகுதிகளாகப் பிரித்து பல பேருக்குக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பலன் சித்திக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

47. அஷ்ட வக்கிராின் மன உறுதி

அஷ்ட வக்கிரர் என்னும் முனிவர் இருந்தார். அவர் வதான்யன் என்பவரின் புத்திரியான பிரபா என்பவளைக் கண்டார். சகல நற்குணங்களோடும் அதிரூபத்தோடும் விளங்கிய அவளை மணக்க ஆசைப்பட்டார். வதான்யனிடம் சென்று அவன் புத்திரியைத் தனக்கு மணம் செய்து தருமாறு கேட்டார். அவன் முனிவரைப் பார்த்து, "நீர் வடதிசைக் கன்னிகையைக் கண்டு திரும்பி வருவீர்களானால் என் புத்திரியை மணம் செய்து தருகிறேன்" என்றான்.

"அக்கன்னிகையை நான் எங்கே காண்பேன்? அங்கு செல்லும் மார்க்கம் எது?" என்று கேட்டார் முனிவர்.

"ஹிமாசலத்தைக் கடந்து குபேரப் பட்டணத்தை அடைய வேண்டும். அதன் பின்னர் அதையும் கடந்து ருத்திர லோகத்தையும் தாண்டிச் செல்வீரானால் அங்கோர் அழகிய வனம் இருக்கக் காண்பீர்கள். அவ்வனத்தில் பேரழகியாய் விளங்கும் மங்கை ஒருத்தி இருக்கிறாள். அவளே வடதிசைக் கன்னி எனப்படுபவள். அவளைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்தால் என் பெண்ணை மணம் செய்து தருகிறேன். சத்தியம் தவறாது போய் வரவேண்டும்" என்றான் வதான்யன்.

முனிவர் அதற்குடன்பட்டுத் தாம் போய் வருவதாகவும் அதேபோல் சத்தியம் தவறாது அவரும் புத்திரியை மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிப் புறப்பட்டார்.

இமாசலத்தைத் தாண்டிச் செல்கையில் மந்தாகினி நதி தீரத்தை அடைந்து அதன் கரையில் நீராடி அனுஷ்டானத்திலிருந்த முனிவரை யக்ஷர்கள் கண்டு வணங்கினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"முனிசிரேஷ்ட, தங்களை எமது தலைவன் குபேரன் சந்தித்துப் பேச விரும்புகிறார். ஆகவே தாங்கள் சற்று நேரம் இங்கு தங்கியிருக்க வேண்டும்" என்று வேண்டினர்.

அவ்வாறே சிறிது நேரத்துக்கெல்லாம் குபேரன் அங்கு வந்து முனிவரைப் பணிந்து வணங்கித் தன் பட்டணத்துக்கு வந்து பூஜையை ஏற்க வேண்டுமென்று கோரினான். முனிவர் குபேரனோடு அவன் பட்டணத்துக்குச் சென்றார். அங்கே அவருக்கு ராஜோபசாரம் நடந்தது. அவரைத் தமது சபையில் உட்காரவைத்து அழகிய மாதர்களைக் கொண்டு நடனம் முதலானவற்றால் மகிழச் செய்தான். தேவ வருஷம் ஒன்று ஓடி விட்டது.

அஷ்டாவக்கிரர் தான் புறப்பட்டு வந்த காரியத்தைத் தெரிவித்துப் புறப்பட்டுச் செல்ல விடைகொடுக்குமாறு கேட்டார்.

அங்கிருந்து புறப்பட்ட முனிவர் வதான்யன் தெரிவித்த மனோகரமான வனத்தை அடைந்தார். அதன் மத்தியில் ஓர் ஆசிரமத்து வாசலில் அதியற்புத ரூபலாவண்யங்களைக் கொண்ட ஏழு அழகிகளைக் கண்டார். அவரைக் கண்ட மாத்திரத்திலேயே அவர்கள் எழுவரும் கைகூப்பி அவரை வணங்கி "ஸ்வாமி, தாங்கள் எங்கள் கிருகத்துக்கு எழுந்தருளி எங்களைக் கிருதார்த்தர்களாக்க வேண்டும்" என்று பிராத்தித்தனர். அவர்கள் அழைப்பைத் தட்ட முடியாது அவர்களோடு உள்ளே சென்றார்.

அங்கே மஞ்சம் ஒன்றில் சர்வாலங்கார பூஷிதையாக வனிதை ஒருத்தி படுத்திருக்கக் கண்டார். முனிவரைக் கண்டதும் அவள் துள்ளியெழுந்து அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தாள். முனிவர் அவளை ஆசீர்வதித்தார். பின்னர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவள் முனிவரை அழைத்துச் சென்று உயரிய ஆசனம் கொடுத்து பழவகைகளைக் கொண்டு வந்து வைத்து உபசரித்தாள்.

சற்று நேரம் சென்றதும் முனிவர் அவர்களைப் பார்த்து "பெண்களே, எனக்குக் களைப்பாக இருக்கிறது. சிறிது நேரம் படுக்க வேண்டும். உங்களில் ஒருத்தி மட்டும் இங்கிருந்து எனக்கு விசிறி கொண்டு பணிவிடை செய்தால் போதும். மற்றவர்கள் உங்கள் இருப்பிடத்துக்குப் போகலாம்" என்றார்.

எழுவரும் போய்விடவே, அங்கிருந்த ஒருத்தி மட்டும் முனிவருக்கு பணிவிடை செய்து வந்தாள்.

இரவு வந்தது. முனிவர் தமக்கு நித்திரை வருகிறது என்றும், அவளை வேறு படுக்கையில் படுத்து உறங்குமாறும் தெரிவித்தார். அவள் சற்றுத் தள்ளியிருந்த மஞ்சத்தில் படுத்தாள். அவளுக்கு உறக்கம் வரவில்லை. விரகத்தால் வருந்தியவளாய் முனிவரை நெருங்கி தன்னை மகிழ்ச்சி அடையச் செய்யுமாறு வேண்டினாள். அவரோ கட்டை போல அவளுக்கு முகம் கொடுத்துப் பேசாது படுத்திருந்தார். அவள் பலவாறு அவருக்கு ஆசை காட்டினாள். அவள் விருப்பத்தை அவர் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அவருக்கு சகல சுகபோகங்களையும் தான் உண்டாக்கச் செய்வதாக கூறினாள். விரகத்தால் வேதனைப்படும் ஒரு பெண் வந்து வேண்டும்போது அதைப் பூர்த்தி செய்வதால் அவருடைய தபோ பலத்துக்கு பங்கம் எதுவும் நேராது என்று பலவாறாக எடுத்துக் கூறினாள்.

முனிவரோ, அவள் விருப்பத்துக்குக் கொஞ்சமும் இணங்க வில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அழகியே, என் விஷயத்தில் உன் விருப்பம் நிறைவேறப் போவதில்லை. நான் பிற ஸ்திரீகளைக் கையால் தொடுவதில்லை என்ற விரதத்தில் உள்ளவன். எத்தனையோ தபம் செய்து யோக பலத்தைப் பெற்றாலும் குலம் விளங்கப் புத்திரனில்லா விட்டால் பிரயோசனமில்லை. ஆகவே சந்ததி வளர ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள உத்தேசித்துள் ளேன். கல்யாணம் செய்து கொள்ளப் பெண்ணையும் பார்த்தாகி விட்டது. ஆகவே, என்னைத் தொந்தரவு செய்வதால் உன் விருப்பம் ஈடேறப் போவதில்லை" என்றார் முனிவர்.

அவளோ விடவில்லை. அவர் பாதங்களில் விழுந்து தன்னை ஏற்றுக் கொண்டாக வேண்டுமென்று மன்றாடினாள். தன் விருப்பத்தை ஈடேற்றாவிடில் பெரும் பாவம் சூழுமென்று தெரிவித்தாள்.

"பெண்ணே, உன் சாகசங்களுக்கு நான் அடிமையாக மாட்டேன். ஒரு பெண்ணை மணக்க விரும்பி அத்திருமணத் துக்கு ஏற்பட்டுள்ள தடையை நீக்கவே நான் இங்கே வந்தேன். அப்படியிருக்க அதன் நடுவே நான் இன்னொரு பெண்ணை மணப்பது என்பது இயலாத காரியம். உன் விருப்பத்துக்குப் பணியாவிடில் என்னைப் பாபம் சூழுமென்று தெரிவித்தாய். அந்தப் பாபம் என்னை ஒருக்காலும் சூழாது. மாறாக உன் இச்சைக்கு அடிபணிந்தேனானால்தான் என்னைப் பாபம் சூழும்" என்றார் முனிவர்.

அவரை எந்த விதத்திலும் மயக்க முடியாதென்பதைக் கண்ட அவள் முனிவருக்கு தன் தெய்வீக வடிவத்தைக் காட்டி, "சுவாமி, நான்தான் நீங்கள் காண வந்திருக்கும் வட திசைக் கன்னி என்பவள். உமது மன உறுதியைப் பரிசோதிக்கவே நான் இவ்வாறு உம்மைப் பரிசோதித்தேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வதான்யனும் உமது மன உறுதியை அறியவே என்னிடம் அனுப்பினார். நீங்கள் அவர் குமாரத்தியை மணந்து சத் புத்திரனைப் பெற்று க்ஷேமமாக இருப்பீர்" என்று அருளினாள்.

அங்கிருந்து புறப்பட்ட அஷ்டவக்கிரர், வதான்யனை அடைந்து அவனிடம் நடந்த விருத்தாந்தங்களைக் கூறிப் பிரபாவை மணம் செய்து கொடுக்குமாறு கேட்டார். அவன் அவரது இந்திரிய நிக்கிரகத்தைப் பெரிதும் பாராட்டி அவருக்குத் தன் புத்திரியைத் திருமணம் செய்து கொடுத்தார்.

48. அருந்ததியின் சிறப்பு

ஒரு சமயம் இந்திரன், அக்கினி, சூரியன் மூவரும் வசிஷ்டரின் மனைவி அருந்ததியின் கற்புத் தன்மையைப் பரிசோதிக்க எண்ணம் கொண்டனர்.

ஒருநாள் அருந்ததி நீர் கொண்டுவரத் தடாகத்துக்குச் சென்ற போது அவள் முன்பு மூவரும் வந்து நின்றனர். அருந்ததி அவர்களைத் தேவ புருஷர்கள் என்று அறிந்து வலம் வந்து வணங்கினாள். பின்னர் அவர்களைப் பார்த்து "பரம புருஷர்களே, என்னை நாடிவந்த காரணம் என்ன?" என்று கேட்டாள்.

"உன்னிடம் ஒரு கேள்வி கேட்டு அதற்கான பதிலைத் தெரிந்து செல்ல விரும்பியே வந்துள்ளோம்" என்றனர் மூவரும்.

"அப்படியானால் பர்ணசாலையில் சென்று தங்கியிருங்கள். அதற்குள் நீர் கொண்டு வந்து விடுகிறேன்" என்றாள் அருந்ததி.

"நீ போக வேண்டாம். இப்போதே குடத்தில் நீர் நிறையச் செய்து விடுகிறோம்" என்றனர் அவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்கு அருந்ததி சம்மதித்தாள்.

“பிறப்பினால் பிராமணனிடத்தில் எனக்குப் பயமில்லா திருப்பதும், தவம், பிரம்மசரியம், அக்னிஹோத்ரம் முதலான அனுஷ்டானங்களால் என் பதவியை ஒருவன் அடையலாம் என்பதும் சத்தியமானால் இந்தக் குடம் கால்பங்கு ஜலம் நிரம்பியதாக ஆகட்டும்” என்றான் இந்திரன்.

குடத்தில் கால் பங்கு ஜலம் நிரம்பிற்று.

“யாகம், பிதுர்சிரார்த்தம் இவைகளால் அடையும் திருப்தியை விட அதிதிக்கு அன்னமளிப்பது எனக்கு அதிகப் பிரீதியைக் கொடுப்பது சத்தியமானால் குடத்தில் இன்னொரு பங்கு ஜலம் நிரம்பட்டும்” என்றான் அக்கினி.

குடத்தில் பாதி வரை நீர் நிறைந்தது.

“தினந்தோறும் அதிகாலையில் வேதியர் செய்யும் அர்க்கியப் பிரதானம், அஸ்திரமாகி மந்தேஹால் என்று அரக்கரை நீக்குவது சத்தியமானால் குடத்தில் கால்பங்கு நீர் நிறையட்டும்” என்றான் சூரியன்.

குடத்தின் முக்கால் பகுதிவரை நீர் நிறைந்தது.

“இரகசியமாக இருக்கக்கூடிய சூழ்நிலையும் பிற புருஷர்களோடு சகவாசமும் கிடைக்கும் வரையில் ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும் என்பது சத்தியமானால் குடத்தில் நீர் நிரம்பி வழியட்டும்” என்றாள் அருந்ததி.

குடம் முழுவதும் நீர் நிரம்பி வழிந்தது.

இந்திரன், அக்கினி, சூரியன் மூவரும் மகிழ்ந்து அவளைக் கொண்டாடிச் சென்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னர் ஒரு சமயம் அக்கினி சப்தரிஷிகளின் மனைவியரைக் கண்டு மோகித்து விரகதாபத்தால் துடித்தான். அப்போது அவன் மனைவியான ஸ்வாஹாதேவி அவனைத் திருப்தி செய்ய, தன் சக்தியால் சப்தரிஷிகளின் மனைவியரைப் போலத் தான் உருக்கொண்டு அவன் உள்ளத்தைத் திருப்திப் படுத்தினாள். ஆறு பேர்களைப் போல் தான் அவளால் உருவம் கொள்ள முடிந்தது. அருந்ததியைப் போல் அவளால் உருவம் எடுக்க முடியவில்லை. அவள் மகிமையை உணர்ந்து ஸ்வாஹா தேவி அவளைக் கண்டு வணங்கி, "அருந்ததி, நீ ஒரு உத்தமி. எவனொருவன் தன் திருமணக் காலத்தில் அக்கினி, பந்துமித்திரர் முன்னிலையில் உன்னைத் தரிசிக்கிறானோ, அவன் சுகத்தையும், தனத்தையும் பெற்று நீண்டகாலம் மனைவியோடு சுகித்திருப்பான். அந்தப் பெண், வைதல்ய கோலம் இல்லாமல் சுமங்கலியாகவே தன் வாழ்நாளை முடித்துக் கொண்டு கணவனுடன் புண்ணிய லோகத்திலும் சேர்ந்திருப்பாள்" என்று அனுக்கிரகித்தாள்.

49. யமனிடம் வாதாடிய சாவித்திரி

மந்திர தேசத்தில் அஸ்வபதி என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு வெகுகாலம் வரை குழந்தை ஏதும் பிறக்காததால் அரசன் சரஸ்வதியைக் குறித்து உபாசித்தான். சரஸ்வதி அவன் பூஜையில் மகிழ்ச்சியுற்று அவன் முன்பு தோன்றி அவன் விரும்புவது யாதெனக் கேட்டாள். அரசன் தேவியைப் பணிந்து தனக்குத் குழந்தை பிறக்க அருளுமாறு கோரினான். சரஸ்வதி அவன் வம்சம் வளரப் புத்திரி பிறப்பாள் என்று அருளி மறைந்தாள். அவ்வாறே சிறிது காலத்துக் கெல்லாம் அரசனுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு சாவித்திரி எனப் பெயரிட்டுக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாவித்திரி மங்கைப் பருவத்தை அடைந்தபோது அரசன் அவளுக்குத் திருமணம் செய்ய விரும்பினான். அவள் புத்தி சாதுரியத்துக்கும் அழகுக்கும் தகுந்த கணவன் எங்கிருக்கி றானோ என எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒருநாள் அரசனின் அரண்மனைக்கு நாரதர் வந்தார். அரசன் முனிவரை வரவேற்று உபசரித்தான். அவன் முகம் வாட்ட மடைந்திருப்பது கண்டு நாரதர் அதற்கான காரணத்தைக் கேட்டார். அரசன் தன் பெண்ணின் திருமண விஷயமே கவலைக்குள்ளாக்கியுள்ளதென்பதைத் தெரிவித்தான்.

"அஸ்வபதி! சாவித்திரியின் அழகுக்கும் அவள் அறிவுக்கும் ஏற்ற வரன் எங்கிருக்கிறான் என்பதைப் பற்றி நீ ஏன் கவலைப்பட வேண்டும்? அவள் உள்ளத்தில் யாரை விரும்பியிருக்கிறாள் என்பதை அறிந்து அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கலாமே" என்றார்.

அரசனும் அவ்விதமே தன் மகளைத் தனியே அழைத்து அவள் மனத்தில் யாரையாவது விரும்பியிருக்கிறாளா என்பதைக் கேட்டான். சால்வ தேசத்தரசன் சத்தியவானே தனக்குக் கணவனாக வர வேண்டுமென்று விரும்புவதாகக் கூறினாள் சாவித்திரி.

அஸ்வபதி திரும்பி வந்து நாரதரிடம் மகளின் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தான். அதைக் கேட்ட நாரதர் திடுக்கிட்டார்.

"அஸ்வபதி, வேடிக்கையாக இருக்கிறதே, சத்தியவானுக்கு இன்னும் ஓராண்டுதான் ஆயுள் இருக்கிறது. மேலும் அவனுக்கு இப்போது நாடு எது? சத்துருக்களிடம் நாட்டை இழந்துவிட்டு பார்வையற்ற தந்தையோடு கானகத்திலல்லவா இருக்கிறான். உலகத்தில் வேறு அரசர்களே இல்லையா?" என்று சொன்னார் நாரதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஸ்வபதி மகளை அழைத்து நாரதர் கூறியதைத் தெரிவித்து அவள் விருப்பம் நிறைவேறக் கூடியதல்ல என்பதைச் சொன்னான். வேறு அரசகுமாரனைக் குறிப்பிட்டால் திருமணத்துக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினான்.

"அப்பா, என் உள்ளத்தில் அவரையே மணாளனாக வரித்த பிறகு இன்னொருவருக்கு எப்படி இடம் அளிக்க முடியும்? அவரைப் பற்றி என் தோழிகள் எத்தனையோ சிறப்பாக கூறியுள்ளார்கள். அதைக் கேட்டு அவரையே கணவனாக அடைவதென்று முடிவு செய்துவிட்டேன். எப்படி இம்முடிவை மாற்றுவது? அது நேர்மையுமல்ல?" என்றாள் சாவித்திரி.

"கண்ணே, அவனுக்கு ஜீவியமே ஓராண்டுதானே!" என்றான் அரசன் வருத்தத்துடன்.

"எப்படியிருந்தாலும் அதற்காக நான் வருத்தப்படவில்லை" என்றாள் சாவித்திரி.

அவள் மன உறுதியை மாற்ற முடியாதென்பதைக் கண்ட நாரதர், "அஸ்வபதி, உன் குமாரத்தி கற்பிற் சிறந்தவளாக இருப்பாளாகில் கணவனின் ஆயுளை விருத்தி செய்து கொள்ளட்டுமே. அவள் மனம் கோணாதபடி சத்தியவானுக்கே திருமணம் செய்து கொடு" என்றார்.

முனிவரின் வார்த்தையை ஏற்று சத்தியவானுக்கே தன் மகளைத் திருமணம் செய்து கொடுப்பதென முடிவுக்கு வந்தான் அரசன். மனைவி மாளவியையும் புத்திரியையும் அழைத்துக் கொண்டு இரதத்திலேறி சத்தியவான் தன் பெற்றோர்களுடன் தங்கியிருக்கும் நீரத வனத்துக்குச் சென்றான் அஸ்வபதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திர தேசத்து அதிபதி வந்திருக்கிறான் என்பதை அறிந்ததும் சத்தியவானின் தந்தை முன் வந்து அவனை வரவேற்று உபசரித்தான். அஸ்வபதி அவனிடம் தான் வந்திருக்கும் விஷயத்தைப் பற்றித் தெரிவித்தான்.

"அஸ்வபதி, உன் முடிவு அவசரப்பட்டுச் செய்த முடிவு என்றே நினைக்கிறேன். எனக்கோ நாடும் இல்லை, பார்வையும் இல்லை. சத்தியவான் ஜீவித்திருக்கப் போவது ஓர் ஆண்டுதான். உன் குமாரத்திக்கு எத்தனையோ நல்ல வரன்கள் கிடைப்பார்களே!" என்றான் சால்வாதிபதி மிகுந்த துக்கத்துடன்.

"எல்லா விஷயங்களையும் நாங்கள் நன்கு அறிவோம். தீர ஆலோசித்தே தங்களிடம் வந்துள்ளோம். தட்டாது என் கோரிக்கையை ஏற்க வேண்டும். என் குமாரத்தியின் விருப்பமே எங்கள் விருப்பமும்" என்று சத்தியவான் தந்தையின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு வேண்டினான் அஸ்வபதி.

சால்வாதிபதி என்ன சொல்வான்? அஸ்வபதியின் கோரிக்கைக்கு இணங்கினான். ஒரு நல்ல சுப முகூர்த்தத்தில் சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது.

திருமணத்துக்குப் பிறகு சாவித்திரி தந்தையின் அரண்மனையில் இருக்கவில்லை. கணவன் இருக்குமிடமே சிறந்ததென நீரத வனத்துக்கே வந்துவிட்டாள். அரச போகங்களைத் துறந்துவிட்டுக் கணவனுக்கும் மாமியார் மாமனாருக்கும் பணிவிடைகள் செய்து கொண்டு மகிழ்ச்சியோடு இருந்து வந்தாள். கணவனின் ஆயுள் விருத்தியாக வேண்டுமென அவள் உமாதேவியைக் குறித்து விரதம் இருந்து வந்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருநாள் சாவித்திரி தன் கணவன் சத்தியவானுடன் காட்டிற்குக் கனி கொய்துவரச் சென்றாள். அவர்கள் இருவரும் பழங்களைப் பறித்துக் கொண்டும், சமித்து, தர்ப்பை முதலான வற்றைச் சேர்த்துக் கொண்டு வரும் போது, சத்தியவான் தனக்கு மிகவும் களைப்பாக இருப்பதாகவும், எங்காவது மர நிழலில் ஒதுங்கலாமென்றும் தெரிவித்தான். சாவித்திரி கணவனை அழைத்துக் கொண்டு மர நிழலை அடைந்தாள். அங்கே சென்றதும் அவன் தனக்கு மயக்கமாக வருகிறதென்று அவள் மடியில் படுத்தான். அந்த க்ஷணமே அவன் ஆவி பிரிந்து விட்டது.

மார்பிலே வாடாத மலர் மாலையோடும் கையில் தண்டமும் பாசமும் கொண்ட தர்மராஜன் நெருங்கி வந்து சத்தியவானின் உயிரைக் கவர்ந்து கொண்டு புறப்பட்டதைக் கண்டதும் சாவித்திரி, "தேவ புருஷா!..." என்று அழைத்தாள்.

தர்மராஜன் நின்று அவளைத் திரும்பிப் பார்த்தான். சாவித்திரி கணவனின் உடலை மடி மீதிலிருந்து நகர்த்தித் தரையில் கிடத்தி விட்டு எழுந்திருந்தாள்.

"தேவ புருஷா! என் கணவரின் உயிரைக் கவர்ந்து செல்லக் காரணம் என்ன?" என்று கேட்டாள்.

"பெண்ணே, அவன் ஆயுட்காலம் முடிந்துவிட்டது. மிகவும் தருமவானான அவனை நானே அழைத்துச் செல்ல வந்தேன்" என்றான் தர்மராஜன்.

"அவரை என்னிடமே விட்டுவிடு" என்று கேட்டாள் சாவித்திரி.

தர்மராஜன் அதற்கு இணங்காது சென்றான். அவனைப் பின் தொடர்ந்து சென்ற சாவித்திரி, "தர்மராஜா! என்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலையைப் பார். நான் என்ன பாபம் செய்தேன்? எனக்கு ஏன் இந்தத் துன்பம்? என் மீது இரக்கம் கொண்டு அவரை விட்டுவிடு" என்று கேட்டாள்.

"சத்தியவானின் பூலோக வாழ்வு முடிந்துவிட்டது. இனி அவன் இங்கிருக்க முடியாது" என்றான் தர்மராஜன்.

"அப்படியானால் நானும் வருகிறேன். என்னையும் அவரோடு கூட்டிச் செல். கற்புடைப் பெண்டிர் கணவனை விட்டுப் பிரிந்திருக்க மாட்டார்களே!" என்றாள் சாவித்திரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"உன்னை அழைத்துச் செல்வது முடியாது. உனக்கு இன்னும் பூலோக வாழ்வு முடிவு பெறவில்லை. அதனால் நீ திரும்பிச் செல்" என்றான் தர்மராஜன்.

சாவித்திரி அப்போதும் விடாது அவனைப் பின் தொடர்ந்தாள்.

"ஐயா, தர்மத்துக்கு அதிபதியே, எனக்கொரு விஷயத்தைத் தாங்கள் விளக்க வேண்டும்" என்று கேட்டாள் சாவித்திரி.

"கேள், பெண்ணே!" என்றான் தர்மராஜன்.

"பெரியோர்களின் தரிசனம் கிடைத்தவர்க்கு எவ்விதத் துன்பமும் நேரிடாது என்று வேதம் சொல்லவில்லையா ? அந்த வேதவாக்குப் பொய்த்து விடுமா ?"

சாவித்திரியின் கேள்வி தர்மராஜனுக்கு விளங்கவில்லை.

"என்னம்மா கூறுகிறாய் ? வேதவாக்குப் பொய்த்து விடுமா ? அது ஒருக்காலும் பொய்க்காதே!"

"என் விஷயத்தில் பொய்த்து விடும் என்றே தோன்றுகிறது!"

"எப்படி ?"

"தர்மதேவனான உன்னைத் தரிசனம் செய்த பின்னும் கூட எனக்குக் கைம்பெண்ணாகும் நிலைமை உண்டாகப் போகிறதே, எனக்கேற்படப் போகும் துன்பம் வேதவாக்கைப் பொய்த்துவிடச் செய்துவிடும்."

"சாவித்திரி, கற்பிலே சிறந்தவள் நீ, அதன் காரணமாகவே என் தரிசனம் உனக்குக் கிட்டியது."

"எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டுமே....."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சாவித்திரி, உன் கணவனின் உயிரைத் தவிர வேறு எது வேண்டுமானாலும் கேள். நான் அளிக்கிறேன்" என்றான் தர்மராஜன்.

சாவித்திரி தன் மாம னாருக்குப் பார்வையும் இழந்த நாட்டையும் அளிக்குமாறு கோரினாள். தர்மராஜன் அவள் கேட்ட வரத்தைக் கொடுத்து அவளைத் திரும்பிச் செல்லுமாறு கூறினான்.

சாவித்திரியோ அவனைப் பின் தொடர்ந்து வந்தாள்.

"இன்னொரு வரம் வேண்டும்" என்று கேட்டாள்.

"ஒன்றென்ன ? இரண்டுவரம் கேள். தருகிறேன். என்னைப் பின் தொடர்ந்து வருவதை நிறுத்தி உன் இருப்பிடம் திரும்பு" என்றான் தர்மராஜன்.

"என் தந்தைக்குப் புத்திரர் இல்லை. பிள்ளை பிறக்க அருள வேண்டும்" என்று கேட்டாள் சாவித்திரி.

"நூறு பிள்ளைகள் பிறந்து மேன்மையோடு வாழ்வார்" என்று அருளினான் தர்மராஜன்.

"அடுத்து, நான் கற்பிலிருந்து வழுவாமல்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிள்ளைகளோடும் மாமனார் மாமியாரோடும் மகிழ்ச்சியோடு வாழ அருள வேண்டும்.''

சாவித்திரியின் வரத்தைக் கேட்டுத் தர்மராஜன் அசந்து போய்விட்டான். சாமர்த்தியமாக அவள் தன்னை மடக்கி விட்டதை உணர்ந்தபோது அவன் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

"பெண்ணே, நீ என்னை வெற்றி கொண்டு விட்டாய். உன் கணவன் உயிர் பெற்று எழுவான். நீங்கள் இருவரும் நீண்ட காலம் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருவீர்கள்'' என்று அனுக்கிரகித்து சத்தியவானின் உயிரை விட்டு விட்டுச் சென்றான் தர்மராஜன்.

கணவுனின் உடலைக் கிடத்தியிருந்த மரத்தடிக்குத் திரும்பிய சாவித்திரி ஜலத்தை எடுத்து வந்து அவன் முகத்திலே தெளிக்க, சத்தியவான் தூக்கத்திலிருந்து எழுபவன் போல எழுந்திருந்தான். அவனிடம் நடந்ததை அவள் தெரிவித்த போது சத்தியவான் கொண்ட ஆனந்தம் சொல்லி முடியாது. அவர்கள் இருவரும் பெற்றோர்களிடம் திரும்பினர். சால்வாதிபதி இழந்த பார்வையைத் திரும்பப் பெற்றிருந்தான். சாவித்திரி தன் கற்பின் பலத்தால் கணவனின் உயிரை மீட்டதை அறிந்தபோது அவர்கள் அவளைப் பலவிதத்திலும் கொண்டாடினார்கள். சத்தியவான் படை திரட்டிச் சென்று சத்துருக்களை அழித்து நாட்டையும் மீட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

50. சிருஷ்டி விஸ்தாரம்

சாவித்திரி சத்தியவான் விருத்தாந்தத்தைச் சொல்லி முடித்த சூதரைப் பார்த்து நைமிசாரண்ய முனிவர்கள் கேட்டனர்.

"சுவாமி, முன்னர் உலக சிருஷ்டியை மிகவும் சுருக்கமாகச் சொல்லி விட்டீர்கள். அதைச் சற்று விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

முனிவர்களின் வார்த்தைகளால் மகிழ்ச்சியுற்ற சூதர், உலக சிருஷ்டியை விஸ்தாரமாகச் சொல்லத் தொடங்கினார்.

சிருஷ்டி நிமித்தமாகப் பிரம்மதேவன் ஜலத்திலே தன் வீரியத்தைவிட அது ஓர் கண்டமாயிற்று. அதை இரண்டாக்கி ஒன்றை சுவர்க்க லோகமாகவும் மற்றொன்றை பூமி முதலான பதினான்கு லோகங்களாகவும் சிருஷ்டித்தார். பூமியில் காலம், மனது, வாக்கு, காமம், குரோதம், ஆசை முதலானவற்றைத் தோற்றுவித்தார். பின்னர் மரீசி, அத்திரி, ஆங்கிரஸ், புலஸ்தியர், புலதர், கிருது, வசிஷ்டர் ஆகிய ஏழு புத்திரர்களை மானசீக மாகத் தோற்றுவித்தார். அவர்கள் ஸப்தப் பிரம்மாக்கள் என்று அழைக்கப்படுவர். அவர்களுக்குப் பின் சனத்குமாரரைத் தோற்றுவித்தார். அந்த ரிஷிகள் எழுவர் மூலமும் அனேக வம்சங்கள் உண்டாயின. நான்கு வேதங்களையும், மின்னல், இடி, மேகம், இந்திர தனுசு ஆகியவற்றையும் உண்டாக்கினார்.

பிரம்மனின் முகத்திலிருந்து தேவர்கள் உண்டானார்கள், மார்பிலிருந்து பிதுர் தேவர்கள் தோன்றினார்கள். மானிடர்கள் அவருடைய இடையிலிருந்து உண்டானார்கள். புட்டத்திலிருந்து அசுரர்கள் பிறந்தனர். இதர அவயவங்களிலிருந்து அனேகவித பூதங்கள் தோன்றின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு பிரம்ம தேவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகள் மேலும் விருத்தியடையாது க்ஷீணிக்கத் தொடங்கின. அதனால் வருத்தமுற்ற பிரம்மதேவன் தமது தேகத்தையே இரண்டாக்கி ஆணும் பெண்ணுமாகச் செய்து மனுவைத் தோற்றுவித்தார். வைராஜன் என்னும் பெயர் பெற்ற அம் மனு உலக சிருஷ்டியை விருத்திபெறச் செய்தார்.

பிரம்ம தேவனால் உண்டாக்கப்பட்ட சதரூபையென்னும் பெண் சுவாயம்பு மனுவை மணந்து பிரியவிரதன், உத்தான பாதன் என்னும் இரு புதல்வர்களைப் பெற்றாள். சுவாயம்பு மனுவினால் தான் எழுபத்தோறு யுகங்கள் ஒரு மனுவின் காலம் என்று வரையறுக்கப்பட்டது. மேலும் அவர்கள் இருவருக்கும் அனேகப் பெண்கள் பிறந்தனர். காம்யை என்பவள் காத்தம பிரஜாபதிக்குப் பிறந்தாள். அவளுக்கு சாம்ராட், அஷி, விராட், பிரபு என்னும் பிள்ளைகள் பிறந்தனர். உத்தான பாதனுக்கும் சுநீதிக்கும் துருவன் தோன்றினான்.

துருவனுக்கு இருவர் பிறந்தனர். பெண்ணுக்குப் புஷ்டி என்றும், பிள்ளைக்கு தான்யன் என்றும் பெயர். புஷ்டியின் மூலம் ரிபுஞ்சயன், லிப்பிரன், விரகலன், விரகதேஜஸன் ஆகிய ஐவர் பிறந்தனர். புஷ்கரிணி என்பவளை ரிபு மணந்தான் அவனுக்கு சாக்ஷீஸன் என்னும் மனு பிறந்தான்.

வைராஜ மனு, அநத்கலை என்பவளை மணந்தான். அவர்களுக்குப் பத்து குமாரர்கள் உண்டானார்கள். அவர்கள் ருரு, பூரு, சதத்திவிம்னன், தமஸ்வி, கத்யஜித்து, கவி, அக்னிஷ் டோமன், அதிராத்திரன், அதிமன்யு, சுயேசசன் ஆகியோர் ஆவர்.

ருரு என்பவன் ஆக்நேயி என்பவளை மணந்து அங்கன், சுமனஸ், கியாதி, கிருதி, ஆங்கிரஸ், ஸ்ரஜி என்னும் ஆறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிள்ளைகளைப் பெற்றான். அங்கன் ஸு்நீதியை மணந்து வேனராஜனைப் பெற்றான். வேனராஜனுக்குச் சந்ததி கிடையாது. ஆகவே வேதியர் அவன் கையிலிருந்து பிருது சக்கரவர்த்தியைத் தோன்றச் செய்தனர். அவன் பெயரிலிலேயே பூமிக்குப் பிருதிவீ என்ற பெயர் ஏற்பட்டது. அவனுக்குச் சூதர், மாகதர் என்னும் இரு புத்திரர்கள் பிறந்தனர். பின்னும் சிறிது காலத்துக்கெல்லாம் ஹவிர்த்தானி, ஹவிர்த்தாமன் என்னும் இரு பிள்ளைகள் பிறந்தனர்.

ஹவிர்த்தாமனுக்கும் சிகண்டிக்கும் பிராசீனபர்ஹி என்பவன் பிறந்தான். பிராசீனபர்ஹி, சமுத்திர தனயை என்பவளை மணக்க அவர்களுக்கு பிரசேதன் முதலான பத்துக் குமாரர்கள் பிறந்தனர்.

அக்காலத்தில் உலகிலே பிரஜைகள் குறைந்து வருவது கண்டு தசப்பிரசேதர்களும் பெரும் கோபம் கொண்டனர். சந்திரன் அவர்கள் கோபத்தைத் தணித்து, தான் வளர்த்து வரும் பெண்ணை அளிக்க, அவர்கள் அவளை மணந்து அவளிடம் தக்ஷப் பிரஜாபதியை உண்டாக்கினார்கள். தக்ஷன் அனேகப் பெண்களை உண்டாக்கி அவர்கள் மூலம் பிரஜைகளை விருத்தி செய்தான்.

தக்ஷனுக்கு அறுபது பெண்கள் பிறந்தனர். அவர்களுள் பத்துப்பேரைத் தர்ம பிரஜாபதிக்கும், பதிமூன்று பேரைக் காசிப முனிவருக்கும், இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும், நான்கு பெண்களை அரிஷ்ட நேமிக்கும், பிரம்மபுத்திரர் ஆங்கிரஸ், கிருசாசுவர் ஆகிய மூவருக்கு இரண்டு இரண்டு பெண்களையும் திருமணம் செய்து கொடுத்தான்.

தர்மப்பிரஜாபதி மணந்த பத்துப் பெண்களில் விசுவை, என்பவள் விசுவே தேவர்களையும், ஸாத்யா என்பவள் ஸாத்யர் களையும், மருத்துவதி மருத்துகளையும், வசு, வசுக்களையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பானு, பானுக்களையும், முகூர்த்தம் முகூர்த்தங்களையும், லம்பை என்பவள் கோஷத்தையும், ஜாமி என்பவள் நாகவீதி என்னும் பெண்ணையும் அருந்ததி என்பவள் பூப் பிரதேசங் களையும் சங்கல்பா சங்கற்பத்தையும் சத்தியத்தையும் பெற்றனர்.

வசுக்கள் எட்டு பேர். அயன், துருவன், சோமன், தரன், அநிலன், அநலன், பிரத்தியூஷன், பிரபாசன் ஆகியோரே அவர்கள்.

அயனுக்கு நான்கு பிள்ளைகள். அவர்கள் வேதண்டன், சிரமன், சாந்தன், முகி என்பவர். துருவனுக்குக் காலன், வேதப் பிரபாலன் என இருவர் பிறந்தனர். சோமனுக்கு வர்ச்சான் என்ற ஒரே பிள்ளைதான்.

தரன் மனோஹரை என்பவளை மணந்தான். அவளிடம் திரவிணன், ஹூதஹவ்ய வரஹன், சிசிரன், பிராவான், ரமஸன் ஆகியோர் பிறந்தனர். அநிலனுக்கும் சிவை என்பவளுக்கும் புரோஜவன் பிறந்தான். அநலன் கார்த்திகைப் பெண்கள் அறுவரை மணந்தான். அக்கினி புத்திரன், குமாரன் சரஸ்தம்பன், சாகன், விசாகன், நைகமேயன் என்னும் ஆறு பிள்ளைகள் அவர்களுக்குப் பிறந்தனர். பிரத்தியூஷனுக்குத் தேவலன் என்னும் ரிஷி பிறந்தார். தேவலனுக்கு இரு பிள்ளைகள்.

பிரகஸ்பதியின் தங்கையை பிரபாசன் மணந்தான். அவர்களுக்குத் துவஷ்டா என்பவன் பிறந்தான். துவஷ்டாவுக்கு விசுவகர்மன் பிறந்தான்.

காசியபரின் மனைவியர் பதின்மூன்று பேர். அவர்கள் அதிதி, திதி, தநு, அரிஷ்டை, சுரசை, இலை, சுரபி, விந்தை, தாமரை, குரோதை, சமை, கத்துரு, சனி ஆகியோர் ஆவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிதி என்பவளிடத்தில், சாக்ஷீச மன்வந்திரத்தில், விஷ்ணு சக்ரன், அரியமான், தரதா, த்வஷ்டா, பூஷா, விஸ்வான், சவிதா, மித்ரா வருணர், அம்சோபகன், அதிதேஜன் என்பவர்கள் பிறந்தனர். இவர்களே ரைவதமன்வந்திரத்தில் துவாதச ஆதித்தர்களாக விளங்கினார்கள்.

திதி என்பவளிடம் ஹிரண்யகசிபு, ஹிரண்யாஷன் என்ற இரு புதல்வர்களும், சிம்ஹிகை என்னும் கன்னிகையும் தோன்றினார்கள். அவர்களில் ஹிரண்ய கசிபுவுக்கு அனுக்கிலாதன், ஹிலாதன், பிரகலாதன், ஸம்கிலாதன் என்று நான்கு பிள்ளைகள் பிறந்தனர். ஹிலாதனின் பிள்ளை ஸ்ரீவதன். அவனுக்கு மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் ஆயுஷ்மான், சிபி, தாலன் எனப்படுவர். பிரகலாதனுக்கு விரேசனன் என்னும் மகன் பிறந்தான். அவனுக்குப் பலி பிறந்தான். பலிக்கு வாணாசுரன் முதலான நூறு பிள்ளைகள் பிறந்தனர்.

ஹிரண்யாக்ஷனுக்கு ஐந்து புத்திரர்கள் பிறந்தனர். குருகரன், சகுனி, பூதசந்தாபனன், மகாநாதன், காலநாபன் எனப்படும் ஐவரே அவர்கள்.

காசியபரின் மற்றொரு மனைவி தநு, நூறு புதல்வர்களைப் பெற்றாள். அவர்களுள் முக்கியமானவர்கள் திவிமூர்த்தன், சகுரன், பலி, சிவன், பிரபு, அயோமுகன், சம்பரன், கபிலன், வாமனன், விகுவாநரன், புலோமன், வித்திராவணன், மகாசரன், ஸ்வர்ப்பானா, விருஷபர்வன், விப்பிரஜித்து ஆகியோர் ஆவர். அவர்களுள் ஸ்வர்ப்பானுக்கு பிரபாவை என்ற பெண் பிறந்தாள், புலோமனுக்கு பெண்தான் பிறந்தாள். அவள் பெயர் சசி என்பதாகும். விருஷபர்வாவின் புத்திரி சர்மிஷ்டை என்பவள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விப்ரஜித்து, சிம்ஹிகை என்பவளை மணந்தான். அவர்களுக்கு சைமிகேயர்கள் எனப்படும் பதின்மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். சல்லியன், சுபலி, பலன், மகாபலன், வாதாபி, நமுச்சி, வில்வன், சுவசுருபன், அரசன், நரசன் காலநாபன், சரமாணன், சரகற்பன் ஆகியோர் சைமிகேயர்கள் எனப்படுபவர்.

தாமரை, காசியபரிடம் பக்ஷி ஜாதிகளைப் பெற்றாள். வினதைக்குக் கருடனும் அருணனும் பிறந்தனர். கத்துருவுக்கு நாகர்களான சேஷன், வாசுகி, தக்ஷகன், ஐராவதன், மகாபத்மன், கம்பளன், அசுவரதன், ஏலாபுத்திரன், பத்மன், கார்க்கோடகன், தனஞ்செயன், மகாநீலன், மகாவர்ணன், திருதராஷ்டிரன், பலாக்கன், குகன், புஷ்பதந்தன், துர்முகன், சுமுகன், பகுசன், கரரோமன், வாணி முதலானோர் பிறந்தனர். சுரபை என்பவளுக்கு முயல்களும் எருமை வகைகளும் பிறந்தன. இலை என்பவளின் மூலம் புல் பூண்டு ஔஷதிகள் விருத்தியாயின. சுரசைக்கு யக்ஷர், ராக்ஷதர் முதலானோர் தோன்றினர். சனி என்பவள் அப்சரசுகளையும், அரிஷ்டை என்பவள் இதர ஜந்துக்களையும் பெற்றனர்.

சந்திரன் மூலம் அனேக புத்திரர்கள் பிறந்தனர். அரிஷ்ட நேமி தன் மனைவியர் நால்வரிடமும் பதினாறு பிள்ளைகளைப் பெற்றாள். கிருகாசுவன் அஸ்திர சாஸ்திரங்களைத் தோற்று வித்தான்.

பிராமணர், நக்ஷத்திரம், நவக்கிரகம், ஔஷதிகள், யக்ஞம், தவம் முதலியவற்றிற்குச் சந்திரன் அதிபதியானான். ஜலத்திற்கு அதிபதி வருணன். குபேரன் அரசர்களுக்கு அதிபதி. ஆதித்தர்களுக்கு விஷ்ணு, அஷ்டவசுக்களுக்கு அக்கினி, பிரஜாபதிகளுக்குத் தக்ஷன், மருத்துக்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரன், அசுரர்களுக்குப் பிரகலாதன், பிதுர்களுக்கு யமன், விரதங்கள், மாதாக்கள், மந்திரம், யக்ஷர், ஆகியோருக்குப் பரமசிவன், பர்வதங்களுக்கு ஹிமவான், நதிகளுக்குச் சமுத்திர ராஜன், மிருகங்களுக்குச் சார்த்துலம், பசுக்களுக்கு ரிஷபம், கொடி செடிகளுக்கு விருக்ஷங்கள் ஆகியோர் அதிபதிகளானார்கள்.

பிருது சக்கரவர்த்தி ஆட்சி புரிந்து வருகையில், ஒருமுறை பிரம்மதேவன் ஓர் யாகம் செய்தார். பூர்ணாஹுதி சமயத்தில் யாகக் குண்டத்திலிருந்து சூதர், மாகதர் என்னும் இருவர் தோன்றினர். அங்கிருந்த மகரிஷிகள் அவ்விருவரையும் பார்த்து, "பிருது சக்கரவர்த்தியைத் துதியுங்கள்" என்றனர். அவர்களோ, "மகரிஷிகளே, நாங்கள் இருவரும் இப்போது தான் உண்டானோம். அப்படியிருக்கச் சக்கரவர்த்தியின் பிரபாவத்தை எவ்விதம் அறிந்திருக்க முடியும்?" என்று கேட்டனர்.

"அப்படியானால் நடக்கப் போவதை எடுத்துச் சொல்லித் துதியுங்கள்" என்றனர் முனிவர்கள்.

இருவரும் அவ்வாறே துதிக்க, அதைக்கேட்ட பிருது பெரிதும் மகிழ்வுற்றான். அநுப தேசத்தை சூதனுக்கும் மகத தேசத்தை மாகதனுக்கு அளித்து அவர்களை அரசராக முடி சூட்டினான்.

அக்காலத்தில் பூமி சீர்திருத்தப்படாதிருந்தது. எங்கும் பேதமின்றி இருந்தது. கிராம, நகர, அக்ரகாரம் முதலான பாகுபாடு ஏதும் இல்லாமலிருந்தது. ஆகவே சூதர், மாகதர் இருவரும் பிருது சக்கரவர்த்தியை அடைந்து தங்களுக்கு ஜீவனோபாயத்துக்கு வழி வகுக்க வேண்டுமென்று கேட்டனர். பிருது வில்லையும் அம்பையும் எடுத்து பூமியைப் பிளக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணம் கொண்டான். அதை உணர்ந்த பூமாதேவி பசுவாக உருவெடுத்து ஓடத்தொடங்கினாள். அரசனோ அவளை விடாது துரத்தினான். பூமாதேவி தேவர்களைச் சரண் அடைந்தாள். அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை என்பதைக் கண்டதும் கடைசியில் பிருது சக்கரவர்த்தியையே சரண் அடைந்தாள்.

"அரசே! என்னை ஹிம்ஸிக்காதே. நான் பெண் என்பதை மறந்து விட்டாயா?" என்று வேண்டினாள்.

"பிறருடைய நன்மைக்காகப் பெண்ணாக இருந்தாலும் உன்னை ஹிம்சிப்பது தர்மமே" என்றான் அரசன்.

"அரசே! என்னை ஒன்றும் செய்யாதே. உயரமான சிகரங்களும் கிடுகிடு பாதாளங்களும் நிறைந்த இப்பூவுலகைச் சீர்திருத்து. நான் என் பாலை வர்ஷிக்கிறேன். அதனால் பயிர் முதலான வளரும் மக்களின் ஜீவனத்துக்காக ஆகார வகைகள் உண்டாகும்" என்று பிரார்த்தித்தாள்.

அவ்வாறே பிருது தன் வில்லின் முனையால் சிகரங்களையும் மலைகளையும் தகர்த்துப் பள்ளங்களை நிரப்பி பூமியைச் சீர்படுத்தினான். அதன் காரணமாகவே பூவுலகத்துக்கு அவன் நினைவாகப் பிருதிவீ என்ற பெயர் உண்டாயிற்று.

அரசனின் பிரார்த்தனைக்கிணங்க சுவாயம்பு மனு கன்றாக வந்து பசுவின் பாலை பருகினான். பசுவின் மடியிலிருந்து பால் பெருகி பூவுலகம் முழுமையும் நனைத்தது. அதிலிருந்து பயிர்கள் வளர்ந்தன. காய் கனிகளோடு விருக்ஷங்கள் தோன்றின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முனிவர்கள் சந்திரனைக் கன்றாகக் கொண்டு, கோமாதாவிடமிருந்து வேதம், தவம், விரதம் முதலானவற்றைப் பெற்றார்கள். இந்திரனைக் கொண்டு தேவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெற்றார்கள். சூரியன் தங்கப் பாத்திரத்தில் பாலைக் கறந்து தன் தேஜஸை விருத்தி செய்து கொண்டான். பிதுர்தேவர்கள் மயனைக் கன்றாக்கி அந்தகன் மூலம் வெள்ளிப் பாத்திரத்தில் சுதாவென்னும் பாலைக் கறந்தனர். நாகர்கள் ஐராவதனால் தக்ஷகனைக் கன்றாக்கி சுரை பாத்திரத்தில் விஷத்தைக் கறந்து கொண்டார்கள். அசுரர்கள் விரோசனனைக் கன்றாக்கி, மதுவென்னும் அசுரனைக் கொண்டு இரும்புப் பாத்திரத்தில் மாயையாகிய பாலைக் கறந்தனர். யக்ஷர்கள் குபேரனைக் கன்றாக்கி ஆம பாத்திரத்தில் மறைதலாகிற பாலைக் கறந்தனர். இராக்ஷதர்கள் சுமாலியைக் கன்றாக்கி இரத்தமயமான பாலைக் கறந்தனர். அப்சரசுகளும், கந்தர்வர்களும் சித்ராதனைக் கன்றாக்கி வசுர்ஜியைக் கொண்டு தாமரை இலையில் தங்களுக்கு வேண்டிய பாலைக் கறந்தனர். பர்வதங்கள் ஹிமவானைக் கன்றாக்கி மேருவைக் கொண்டு இரத்தினங்களையும் ஔஷதிகளையும் கறந்து கொண்டனர்.

இந்தப் பிருது சக்கரவர்த்தியின் பிரபாவம் சிறப்பாக வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய சிறப்புடைய பிருது சக்கரவர்த்தியின் புகழை, க்ஷத்திரியன் போர்முனையில் ஸ்மரித்தால் போரில் வெல்வான், வைசியன் ஸ்மரித்தால் தன லாபம் அடைவான், சூத்திரன் ஸ்மரித்தால் புண்ணியம் அடைவான். கீர்த்தியை அடைய விரும்புவோர் யாராயினும் பௌர்ணமியில் பிருது சக்கரவர்த்தியைத் தியானித்து பலன் அடையலாம்" என்ற சூதர், நைமிசாரணிய முனிவர்களுக்கு வைவசுதமனுவைப் பற்றி கூறத் தொடங்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைவசுதமனுக்கு ஒன்பது புத்திரர் பிறந்தனர். அவர்கள் இஷ்வாகு, சிபி, அம்பரீஷன், திருஷ்ரை, சையாதி, நரிஷியந்தன், நாபாகன், கருஷன், பிரியவிரதன் ஆகியோர் ஆவர். மேலும் புத்திரர்களை அடைய விரும்பி மனு, யாகம் செய்தான். யாகத்தின் முடிவில் இளை என்னும் பெண் தோன்றினாள். தன்னை மணந்து புத்திரர்களை உண்டாக்கும்படி அவளை மனு கேட்டான். அவளோ தான் மித்திரா வருணருக்காக உண்டானவள் என்பதைத் தெரிவித்து, அங்கிருந்து புறப்பட்டு மித்திரா வருணரை அடைந்தாள். அவர்களிடம், "நான் உங்களுக்காகவே மனுவின் யாகத்தில் உண்டாக்கப்பட்டேன். ஆகையால், என்னை ஆதரிக்க வேண்டும்" என்றாள். அதற்கு மித்திரா வருணர்கள், "தர்மம் தெரிந்தவளே! உன் ஒழுக்கத்தையும், நேர்மையையும் கண்டு வியக்கிறோம். நீ மனு சக்கரவர்த்தியின் குலத்தை விருத்தி செய்யக் கூடிய சுத்தியும்னன் என்னும் பெயருடைய புத்திரனாவாய்" என்று அருளினார்கள்.

அவர்கள் வார்த்தையைக் கேட்டு இளை, வரும் வழியில் சந்திரனின் புதல்வனான புதன் அவளைக் கண்டு மோகித்து அவளோடு கூட, புரூவரன் என்னும் புதல்வன் அவர்களுக்குத் தோன்றினான். அதன் பின்னர் இளை ஆண் வடிவம் பெற்று சுத்தியும்னன் என்ற பெயரோடு மனுவை அடைந்தாள். பின்னர் அவள் தன் ஆண் பெண் இரு வடிவங்களின் மூலம் உத்கலன், கயன், விருதாசுவன் ஆகிய மூன்று புத்திரர்களை உண்டாக்கினாள். உத்கலன் தென் பகுதியையும், விருதாசுவன் மேற்குப் பகுதியையும் அடைந்தனர். கயனுக்கு கயநாடு கொடுக்கப் பட்டது.

வைவசுதமனு தன் நாட்டைப் பத்துப் பிரிவாக்கித் தன் புத்திரர்களுக்குப் பிரித்துக் கொடுத்தான். மூத்தவனான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இஷ்வாகு மத்திய நாட்டை அடைந்தான். அங்கே பிரதிஷ்டானம் என்னும் ஊரை உண்டாக்கி அதிலிருந்து ஆட்சி புரிந்து வந்தான்.

சுத்தியும்னன் பிரதிஷ்டம் என்னும் நகரத்தைத் தோற்றுவித்து அதில் புரூவரனை அரசனாக்கினான்.

புரூவரனுக்கு ஷகை என்னும் பெண்ணை மணம் செய்து வைத்தான் சுத்தியும்னன்.

அம்பரீஷனுக்கு மாக்கிலீகன் என்னும் பிள்ளை பிறந்தான். சையாதிக்கு அநர்த்தன் முதலானோரும், சுகன்யா என்னும் பெண்ணும் பிறந்தனர்.

சுகன்யா, சியவன மகரிஷியை மணந்தாள். அநர்த்தனுக்கு ரேவன் என்னும் புதல்வன் பிறந்தான். அநர்த்த ராஜ்ஜியத்தில் உள்ள குசஸ்தலி என்னும் பட்டணத்துக்கு ரேவன் அரசனாக்கப் பட்டான். அவனுக்கு ரைவதன், ககுத்மி என்னும் இரு பிள்ளைகள் பிறந்தனர். ரைவதனுக்கு ரேவதி என்றொரு மகள். அவளைப் பலராமனுக்கு மணம் செய்து கொடுத்தான் ரைவதன்.

ககுத்மி இறவாப்பேற்றை அடையக் கருதித் தவம் செய்யக் காட்டுக்குச் சென்றிருக்கையில் அரக்கர்கள் அவன் நாட்டைக் கைக்கொண்டனர். அவன் புதல்வர்கள் நூறுபேரும் பல இடங்களிலும் பரவி வாழ்ந்தனர்.

நாபாகனுக்குக் காரூடன் என்றொரு மகன் பிறந்தான்.

இஷ்வாகுவுக்கு நூறு புதல்வர்கள். அவர்களில் மூத்தவன் விருஷி என்பவன். ஒரு சமயம் சிரார்த்த தினத்தன்று சமைக்கப் பட்ட உணவை விருஷி முன்னதாகச் சாப்பிட்டு விட்டான். அதனால் மனம் வருந்திய இஷ்வாகு இது குறித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசாரியரைக் கேட்க, அவர் அரசுரிமையை விட்டு நீங்கும்படி தெரிவித்தார். ஆகவே, இஷ்வாகுவுக்குப் பிறகு அயோத்தியில் ஆயோதனன் என்பவன் அரசனானான். ஆயோதனன் பிள்ளை சகுத்ஸன்; அவன் மகன் அரிநாபன். அவன் மகன் பிருது, பிருதுவின் பிள்ளை விஷ்டராதிவன். அவன் மகன் இந்திரன்; இந்திரனின் புதல்வன் யுவநாகவன்; அவன் பிள்ளை சிராவன் ஆகியோர் அடுத்தடுத்து அரசாண்டனர். சிராவன் தன் பெயரில் சிராவஸ்தி என்னும் பட்டணத்தை உண்டாக்கினான்.

சிராவனுக்குப் பிறகு அவன் மகன் பிரகதாசுவன் பட்டம் ஏறினான். அவனுக்குப் பிறகு அவன் பிள்ளை குவலாசுவன்.

குவலாசுவனுக்கு நூறு பிள்ளைகள். அவர்களிடம் நாட்டை ஒப்புவித்துவிட்டுக் குவலாசுவன் காட்டுக்குத் தவம் செய்யச் சென்றான். அப்போது உத்தங்க முனிவர் வந்து எதிர்ப்பட்டு குவலாசுவனிடம், "அரசே, மது என்னும் அசுரனின் மைந்தனான துந்துபி என்பவன் பூமியின் கீழ் இருந்துகொண்டு தேவர்களாலும் வெல்ல முடியாத வல்லமையைப் பெறத் தவம் செய்கிறான். வருஷத்துக்கு ஒருமுறை அவன் விடும் சுவாசத்தால் பூமி ஏழு நாட்கள் வரை நடுங்குகிறது. அவனைக் கொல்ல நான் தவம் இயற்றியபோது விஷ்ணு உன்னைக் கொண்டு அசுரனைக் கொல்லுமாறு தெரிவித்தார் " என்றார்.

"முனிசிரேஷ்ட, நான் ஆயுதங்களை இனித் தொடுவதில்லை எனச் சபதம் எடுத்துள்ளேன். என் புதல்வர்களை அனுப்புகிறேன்" என்று சொல்லி முனிவரோடு புதல்வர்களை அனுப்பி வைத்தான் குவலாசுவன். ஆனால், "புதல்வர்களால் அசுரனை மாய்ப்பது அரிது" என்று முனிவர் தெரிவிக்கவே தானும் உடன் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசுரன் அவர்களைப் பார்த்ததும் சுவாசம் விட, அதன் வேகத்தில் முனிவர் தவிர அனைவரும் இறந்தனர். முனிவர் விஷ்ணுவைப் பிரார்த்தித்தார். விஷ்ணு தம் அம்சத்தைக் குவலாசுவன் உடலில் செலுத்த, குவலாசுவன் உயிர் பெற்று எழுந்து துந்துபியுடன் போரிட்டு அவனைக் கொன்று துந்துமாரன் என்ற பெயரை அடைந்தான்.

துந்துபியால் கொல்லப்பட்டவர்களில் குவலாசுவனின் புத்திரர்கள் மூவர் மட்டும் உயிர் தப்பினர். அவர்கள் திருடாசுவன், ஹம்சன், கபிலன் என்போர் ஆவர்.

திருடாசுவனுக்கு, ஹரியசுவன் பிறந்தான். ஹரியசுவனுக்கு நிகும்பனும், நிகும்பனுக்கு அங்கதாசுவனும் பிறந்தனர். அங்கதாசுவனுக்கு அக்ஷாசுவன், கிருதாசுவன் என்ற புத்திரர்களும், திருஷ்தவதி என்னும் பெண்ணும் பிறந்தார்கள். திருஷ்தவதிக்கு பிறந்தவன்தான் பிரசேனஜித்.

பிரசேனஜித், கௌரி என்னும் பெண்ணை மணந்து, யுவனாசுவன் என்னும் பிள்ளையை பெற்றான். யுவனாசுவனுக்கு மாந்தாதா பிறந்தான். மாந்தாதா, சசிபிந்துவின் மகளான சைத்திராதை என்பவளை மணந்து அவள்மூலம் புருகுற்சன், முசுகுந்தன் என்னும் இரு புதல்வர்களை அடைந்தான். புருகுற்சனுக்கு நர்மதை என்னும் பெண்ணிடத்தில் திரிசதசியு என்பவன் பிறந்தான். அவன் மகன் திரிதன்வா. அவன் மகன் திரையாருணி. அவனுக்குச் சத்தியவதனன் என்பவன் பிறந்தான்.

சத்தியவதனன் துஷ்திருந்தியங்களில் ஈடுபடவே, அவனை நாட்டைவிட்டுக் காட்டிற்குத் துரத்தினான் திரையாருணி. அப்போது துவாதச வருஷ க்ஷாமம் உண்டாயிற்று. அதாவது பன்னிரண்டு வருடங்களுக்குத் தொடர்ந்து பஞ்சம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டாயிற்று. அதனால் மக்கள் பெரும் கஷ்டப்பட்டனர். அப்போது அங்கே தவம் செய்து கொண்டிருந்த விசுவாமித்திரர், தன் புதல்வர்களை விட்டுவிட்டுச் சமுத்திர தீரத்தை அடைந்து அங்கே தவம் செய்யத் தொடங்கினார். முனிபத்தினியோ தன் புதல்வர்களை வைத்து ரக்ஷிக்க முடியாமல், அவர்களில் ஒருவனைக் கழுத்தில் கட்டிக் கொண்டு போய் சத்தியவதனுக்கு விற்றாள். களமாகிய கழுத்தில் கட்டிக் கொண்டு வந்ததால், காலவன் எனப்பெயர் பெற்ற அப்புதல்வனை சத்தியவதனன் காப்பாற்றி வந்தான். அத்துடன் காட்டிலே மிருகங்களை வேட்டையாடி முனி பத்தினிக்கும் அவளுடைய மற்ற புதல்வர்களுக்கும் கூட உதவி வந்தான்.

திரையாருணி, வசிஷ்டரை அடைந்து தன் மகன் சத்திய வதனின் நடத்தையைப்பற்றிக் கூறி, தனக்குப்பின் அரசாட்சியை ஏற்கச் சந்ததி இல்லையே என வருந்தினான். வசிஷ்டர் அவனைத் தேற்றி, இன்னும் சிறிதுகாலம் அவன் வனத்திலிருந்தால் நல்லவனாக மாறி விடுவான் என்றும் அதன் பின்னர் அவனிடமே அரசாட்சியினை ஒப்புவிக்க லாமெனத் தெரிவித்தார்.

பின்னர், வசிஷ்டர் சத்தியவதனனிடம் தான் பன்னிரண்டு வருஷம் தீக்ஷையிலிருக்கப் போவதாகவும், அதுவரை தனக்குப் பணிவிடை செய்துவருமாறும் கேட்க, அவனும் அதற்குச் சம்மதித்து அவருக்குத் தொண்டு செய்து வந்தான். அப்போது ஒரு சமயம், விசுவாமித்திரரின் குடும்பம் உணவின்றித் தவித்தபோது, சத்தியவதனன் வசிஷ்டர் ஆசிரமத்திலிருந்த காமதேனுவின் வம்சத்தில் வந்த ஓர் பசுவைக் கொன்று அதன் மாமிசத்தை அவர்களுக்குக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடுத்ததோடு, தானும் புசித்து விட்டான். இதை அறிந்த வசிஷ்டர் பெரும் கோபம் அடைந்தார்.

“அடே, துஷ்டா, உன் தீயச் செய்கைகளுக்காக இப்போதே உன்னைக் கொன்றுவிடுவேன். ஆனால் உன் தகப்பனுக்கு நான் வாக்குக் கொடுத்தது தடையாயிருக்கிறது. முதலில் நீ அன்னிய ஸ்திரீகளைக் கெடுத்துத் துஷ்கிருத்தியம் செய்து அதனால் காட்டுக்கு விரட்டப்பட்டாய். இங்கும் நீ ஜீவஹிம்சை செய்து வந்துள்ளாய். இப்போது பசுவைக் கொன்றுவிட்டாய். இம்மூன்று குற்றங்களுக்கும் உன் சிரசில் மூன்று சங்கினை அடிக்க வேண்டும். இப்போதே அவை மூன்றையும் சேர்த்து அடித்து விடுகிறேன். இனி உன் பெயர் திரிசங்கு என அழைக்கப்படட்டும்” என்று சொல்லி அவனை திரிசங்கு எனக் கூப்பிட்டார். அது முதல் அவனுக்குத் திரிசங்கு எனப்பெயர் உண்டாயிற்று. அங்கிருந்து விலகி அவன் விசுவாமித்தரரின் ஆசிரமத்தில் இருந்து வந்தான்.

தவம் முடிந்து ஆசிரமம் திரும்பிய விசுவாமித்திரர், தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தமைக்காகத் திரிசங்குவிடம் மிகுந்த பிரியம் கொண்டார். அவன் அவரைப் பணிந்து நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி, “சுவாமி, வசிஷ்டர் எனக்கு ராஜ்ஜியமின்றிச் செய்துவிட்டார். என் நாட்டை நான் அடையக் கிருபை செய்யவேண்டும்” என்று வேண்டினான்.

விசுவாமித்திரர் தமது தபோபலத்தால் அவனுடைய பாபங்களை ஒழித்து, நல்லவனாக்கி நாட்டின் மன்னனாகப் பட்டம் கட்டச் செய்தார். கேகய வமிசத்தில் பிறந்த சத்தியரதை என்பவளை மணந்த திரிசங்கு, அரிச்சந்திரன் என்னும் மகனைப் பெற்றான். மகனுக்கு வயது வந்ததும் அவனை நாட்டின் அரசனாக முடிசூட்டிவிட்டுக் காட்டுக்கு வந்த திரிசங்கு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருவான வசிஷ்டரைக் கண்டு மானிட தேகத்தோடு சுவர்க்கம் செல்ல அருளவேண்டுமென்று கேட்டான். அது சாத்தியமானதல்ல என்பதைத் தெரிவித்தார் வசிஷ்டர். அவருடைய குமாரர்களை அடைந்து அவர்களிடம் கேட்டான் திரிசங்கு. அவர்களும் முடியாதென மறுத்துவிட்டனர். அதனால் கோபம் கொண்ட அவன் தன் விருப்பத்தை யார் பூர்த்தி செய்கிறார்களோ அவர்களையே தன் குருவாக வரிக்கப் போவதாகத் தெரிவித்தான். வசிஷ்டர் கடும் கோபம் கொண்டு அவனை நீசனாகப் போகுமாறு சபித்தார்.

திரிசங்கு நேராக விசுவாமித்திரரிடம் வந்து தன் விருப்பத்தைத் தெரிவித்து, வசிஷ்டர் முதலானோர் முடியாதென நிராகரித்ததையும் கூறினான். விசுவாமித்திரர் அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாகக் கூறி யாகம் செய்வித்தார். அதன் பயனால் திரிசங்கு மானிட ரூபத்துடனேயே சுவர்க்கம் சென்றான். தேவர்கள் அவனை உள்ளே விடாது தடுத்துத் திரும்பவும் பூமிக்குச் செல்லுமாறு தள்ளினர். தலைகீழாக வந்து கொண்டிருந்த திரிசங்கு விசுவாமித்திரரை நோக்கிக் கதறினான். அவரும் தமது யோக பலத்தால் அவனை நடு வழியிலேயே நிற்கச் செய்து அவனுக்காக ஒரு சுவர்க்கத்தையே உண்டாக்கிக் கொடுத்தார். அதுவே திரிசங்கு சுவர்க்கமாயிற்று.

மூவுலகங்களிலும் சத்தியவான் எனப் பெயரெடுத்த அரிச்சந்திரனுக்கு லோகிதாசன் என்னும் மகன் பிறந்தான். அவனுக்கு விருகனும், விருகனுக்கு பாகுவும் பிறந்தனர்.

பாகு ஆட்சி புரிகையில் எதிரிகள் அவனை வென்று துரத்தி விட்டு நாட்டைக் கைக்கொண்டனர். பாகு கானகம் சென்று ஔர்வர் என்னும் முனிவர் ஆசிரமத்தில் தங்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனக்கொரு புதல்வன் வேண்டுமென்று தவம் செய்தான். முனிவர் அவனிடம் பழம் ஒன்றைக் கொடுத்து அவன் மனைவியிடம் கொடுக்குமாறு கூறினார். அரசனின் மற்றொரு மனைவி யாருக்கும் தெரியாமல் அந்தப் பழத்தில் நஞ்சைக் கலந்து விட்டாள். அதை அறியாது மூத்த மனைவி பழத்தைச் சாப்பிட்டுவிட்டாள். அவள் வயிற்றில் விஷத்தோடு கூடிய கரு வளர்ந்து வந்தது.

கொஞ்ச காலத்தில் பாகு இறந்தான். அவனோடு அவன் மனைவியர் இருவரும் உடன்கட்டையேற விரும்பினர். கர்ப்பிணியான மனைவி உடன்கட்டை ஏறக் கூடாதென முனிவர் தடுத்து நிறுத்தியதோடு அவள் உதரத்தில் வளரும் கருவுக்கு விஷத்தால் ஏற்படக்கூடிய ஆபத்தை மந்திரத்தால் தடுத்தார். விஷத்தோடு பிறந்த அந்தக் குழந்தைக்குக் சகரன் எனப்பெயர் உண்டாயிற்று.

சகரன் முனிவரிடம் வேத சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்து, எதிரிகளுடன் போரிட்டு வென்று தன் தந்தை இழந்த ராஜ்ஜியத்தை மீட்டான். முனிவர் அனுக்கிரகத்தால் அவன் பெற்ற ஆக்னேயாஸ்திரத்தைக் கொண்டு அனைவரையும் வென்று ஏக சக்ராதிபதியாய் விளங்கினான். பின்னர் சந்ததி விருத்திக்காக அவன் வனம் சென்று தவம் செய்து மூத்த மனைவியிடம் அசமஞ்சன் என்னும் பிள்ளையையும், இளையவளிடம் அறுபதினாயிரம் பிள்ளைகளையும் பெற்றான்.

அசமஞ்சன் நாட்டிலுள்ள குழந்தைகளை நதியில் தள்ளிக் கொலை செய்து வந்தான். அதனால் வேதனையுற்ற சகரன் வசிஷ்டரைக் கண்டு சொல்ல, அவரும் அவனைக் காட்டிற்கு அனுப்பி விடுமாறு தெரிவித்தார். அசமஞ்சன் காட்டிற்கு அனுப்பப்படும்போது அவன் மனைவி கர்ப்பவதியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்தாள். அவளுக்குப் பிறந்த பிள்ளைக்கு அம்சுமான் எனப் பெயரிடப்பட்டது.

சகரன் முன்போலவே ஆட்சி புரிந்து வருகையில், அசுவமேத யாகம் செய்ய விரும்பினான். யாகக் குதிரையை அவிழ்த்து விட்டுப் பூவுலகம் முழுமையையும் சுற்றி வரச் செய்தான். சகரனிடம் பொறாமை கொண்ட இந்திரன், யாகக் குதிரையைக் கவர்ந்து சென்று பாதாள லோகத்தில் தவம் செய்து கொண்டிருந்த கபில முனிவரின் ஆசிரமத்தில் கொண்டு போய்க் கட்டிவிட்டான். குதிரைக்கு காவலாக வந்த சகரன் புத்திரர்கள் பூமண்டல முழுமையும் குதிரையைத் தேடிக் காணாது, பாதாளலோகம் செல்கையில் அங்கே கபிலர் ஆசிரமத்தில் குதிரை இருப்பதைக் கண்டனர். முனிவரே குதிரையை அபகரித்தவர் என்று எண்ணி அவரைப் பலவாறு தூஷித்தனர். முனிவர் கடுங்கோபம் கொண்டு ஹுங்காரம் செய்ய, அந்த க்ஷணமே அவர்கள் அனைவரும் எரிந்து சாம்பலாகி விட்டனர்.

குதிரையோடு சென்ற புத்திரர்கள் வெகுகாலமாகத் திரும்பாதது கண்ட சகரன், தன் பேரனான அம்சுமானை அழைத்து "பௌத்திரா, நான் யாகதீக்ஷையுடன் இருப்பதால் செல்ல முடியாது. ஆகவே, நீ சென்று மற்றவர்களின் கதி என்ன ஆயிற்றென்பதைக் கண்டு வா" என்றான்.

அம்சுமான் தன் சிறிய தகப்பன்மார்கள் யாகக் குதிரையைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காகச் சென்ற வழியை விசாரித்தறிந்து அதைத் தொடர்ந்து சென்றான். முடிவாக கபில முனிவர் தவம் செய்த இடத்தை அடைந்து, யாகக் குதிரையைக் கண்டுபிடித்தான். ஆனால் முனிவர் அங்கில்லை. ஒரு பெரிய சாம்பல் மேடுதான் காணப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குதிரையைக் கண்டு பிடித்த மகிழ்ச்சியும், சகர புத்திரர்களைக் காணாமல் சாம்பல் மேட்டைக் கண்டதில் திகைப்பும் அடைந்து நின்றான் அவன். அந்த நேரம் சகரனின் இரண்டாவது மனைவியான சுமதியின் சகோதரனான கருட பகவான் அங்கே வந்து கபிலரின் சாபத்தால் சகர குமாரர்கள் பஸ்பமானதைத் தெரிவித்து அவர்கள் நற்கதி அடைய வேண்டுமானால், 'தேவலோக கங்கையை வரவழைத்து, அதில் அந்தச் சாம்பலைக் கரைக்க வேண்டும்' என்றும் கூறினான்.

அரண்மனை திரும்பிய அம்சுமான் தன் பாட்டனிடம் குதிரையை ஒப்புவித்துப் பாதாள லோகத்தில் நிகழ்ந்ததைத் தெரிவித்தான். சகரன் யாகத்தை முடித்து, ராஜ்ஜியத்தை அம்சுமானுக்கே அளித்து அவனுக்கு முடி சூட்டினான். அவன் காலத்திலும் ஆகாச கங்கையை வரவழைக்க முடியவில்லை. அம்சுமான் காலத்திற்கு பிறகு அரியனை ஏற்ற திலீபன், பகீரதன் போன்றவர்களில் பகீரதன், கோகர்ண க்ஷேத்திரத்தில் வெகு காலம் தவம் இருந்து கங்கையைத் தருவித்து, மூதாதையரின் சாம்பலை அதில் கரைத்து அவர்களை நற்கதியை அடையுமாறு செய்தான்.

பகீரதனுக்குப் பிறகு, ரகு வம்சம் என்ற பெயர் வரக் காரணமாக இருந்த, இராமாயணத்தின் காதாநாயகனான ஸ்ரீராமனின் முன்னோர்களில் ஒருவரான ரகு மட்டுமல்லாமல், பெரும் பராக்கிரமசாலிகளான சுருதசயனன், நாபாகன், சிந்துத்வீபன், ருதுபர்ணன், கல்மாஷபாதன், மஹாபக்த சிரோ மணியான அம்பரீஷன், அஜன் போன்றோரும், ஸ்ரீ ராமனுக்குப் பிறகு குசன், அதிதி, நிஷதன், நளன், நபசு, புண்டரீகன், வீரசேனன் போன்ற பலருமாக, வெரு நேர்த்தியுடனும், கீர்த்தியுடனும் இப்பூமண்டலத்தை ஆண்டு வந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

51. பிதுர் தேவர்கள்

முதலில் பிரம்மதேவன் சில தேவர்களைத் தோற்றுவித்தார். அவர்கள் பிரம்மாவின் உபதேசத்தை மறந்து தங்களைத் தாங்களே பூஜித்துக் கொண்டனர். அதனால் அவர்கள் அறிவு மழுங்கிப் போகுமாறு பிரம்மதேவன் சாபமிட்டார்.

அறிவிழந்த அவர்கள் தங்கள் அறியாமையை உணர்ந்து பிரம்மதேவனைப் பணிந்து, தங்களை மன்னித்து அருளுமாறு வேண்டினர். அதற்குப் பிரம்மதேவன் தம் புத்திரர்களிடம் சென்று பரிகாரம் கேட்குமாறு சொன்னார். அவ்வாறே அவர்கள் பிரம்மபுத்திரர்களை அடைந்தனர். பிரம்மபுத்திரர்களும் அவர்களது சாபத்தை விலக்கி, "புத்திரர்களே, உங்கள் சாபம் நீங்கி விட்டது. இனி நீங்கள் மகிழ்ச்சியோடு போகலாம்" என்று தெரிவித்தார்கள். அப்போது பிரம்மதேவன் அத்தேவர்களைப் பார்த்து, "அமரர்களே, உங்களை என் புத்திரர்கள் 'புத்திரர்களே' என்று அழைத்ததால் அவர்கள் பிதுர்களாகிறார்கள். நீங்கள் புத்திரர்களாகிறீர்கள். பிதுர்களைத் திருப்தி செய்பவன் இஷ்ட காரியங்களை அடைகிறான். பிதுர் தேவர்களும் தாங்களும் திருப்தி அடைவதோடு, தங்களைத் திருப்திப்படுத்தியவரின் பிதுர்களையும் திருப்தி செய்விப்பர்" என்று அருளினார்.

பிதுர்தேவர்கள் எழுவர். கவ்வியவாகன், கனலன், சோமன், யமன், அரியமன், அக்கினாவர்த்தன், பர்ஹிஷதன் ஆகியோர் ஆவர். இவர்களில் நால்வர் தேகத்தோடும் மூவர் தேகமின்றியும் இருப்பர். தேகமின்றி இருப்பவர்களைத் தேவர்கள் வணங்குவார். மற்ற நால்வரை பிராமணர் முதலானோர் வணங்குவர். இறந்த காலங்களில் பிதுர்கட்குச் சிராத்தம் செய்ய வேண்டும். தேவகாரியத்தை விடப் பிதுர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரியம் சிறந்ததாகும். அதைப் பக்தியோடு செய்விக்க வேண்டும். யோக பலத்தால் அடைய முடியாததுகூடப் பிதுர் காரியத்தால் அடையலாம். இம்மையில் சகல சுகபோகங் களோடு வாழ்ந்திருந்து மறுமையிலும் நற்கதியோடு வாழலாம்.

பிதுர் காரியங்களின் சிறப்பு பற்றி முன்பு நடந்த சரிதத்தின் மூலம் அறியலாம்.

பரத்துவாஜ முனிவருக்கு, வாக்துஷ்டன், குலோதனன், ஹிம்சிரன், பிகனன், கபி, பிதுர்வர்த்தி, ஸ்வஸ்ரூபன் என ஏழு புத்திரர்கள் இருந்தனர். அவர்கள் தங்களது துர்நடத்தை களால் பிரஷ்டர்களானார்கள். அடுத்த பிறவியில் கௌசிக முனிவருக்குப் புத்திரர்களாகப் பிறந்த அந்த எழுவரும் கர்க்க முனிவரிடம் சிஷ்யர்களாக இருந்தனர்.

ஒருசமயம் மற்றொரு ஆசிரமத்திலிருந்து பசுவையும் கன்றையும் ஒட்டி வருமாறு அவர்களை அனுப்பினார் முனிவர். பசுவையும் கன்றையும் ஒட்டி வரும்போது அவர்கள் பசியால் வாடினார்கள். பசுவைக் கொன்று புசித்து விடலாமென்று அவர்களில் சிலர் கூறினார்கள். கபி, ஸ்வஸ்ரூபன் இருவரும் அதைக் கூடாதென்று தடுத்ததோடு, குருவுக்குத் துரோகம் செய்ததாக ஆகுமென்றனர். பிதுர்வர்த்தி ஏன்பானோ, பிதுர் தேவருக்கு அர்ப்பணித்துப் புசிப்பதால் பாவம் தொடராது என்றான்.

அவ்வாறே ஏழுபேரும் பசுவைக் கொன்று புசித்து விட்டு, முனிவரிடம் புலி அடித்துக் கொன்றுவிட்டது என்று பொய் சொன்னார்கள். முனிவரும் அதை நம்பிவிட்டார். அந்தத் தோஷத்தால் அவர்கள் எழுவரும் அடுத்த பிறவியில் வேடுவ ஜாதியில் பிறந்தார்கள். இருப்பினும் பூர்வஞானம் பெற்றிருந்தமையால் அவர்கள் தங்கள் செய்கைக்கு வருந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த ஜன்மத்தைக் கழித்தனர். அடுத்த பிறவியில் அவர்கள் காலஞ்சரமென்னும் மலையில் மிருகங்களாகப் பிறந்து அந்த ஜன்மத்தையும் கழித்து, சரத் தீபத்தில் சக்கரவாகப் பக்ஷிகளாகப் பிறந்தனர். சுமனஸ், சுவாக், சுத்தன், பஞ்சாலன், சித்ரத்ரிசகன், சுநேந்திரன், சுநந்திரன் என்ற பெயர்களோடு, சக்கரவாக பறவைகளாக இருந்து வரும்போது நிபதேசத்து அரசன் அவ்வனத்துக்கு வேட்டையாட வந்தான். அவனைக் கண்ட சுநந்திரன் அந்த அரசனைப் போன்று போக பாக்கியங்களோடு வாழ என்ன வழி இருக்கிறதென்று மற்றவர்களைக் கேட்டது. அதைக் கேட்ட மற்ற இரு பறவைகளும், "நீ அரசனானால் நாங்கள் உன் மந்திரியாகிறோம்" என்றன.

அம் மூன்று பறவைகளின் வார்த்தையையும் கேட்டதும் பெரும் வேதனை அடைந்த ஒரு பறவை, "நாமோ குருத்துரோகம், கோஹத்தி முதலான பாபங்களால் அடுத்தடுத்துப் பல பிறவிகளை எடுத்து வருகிறோம். இந்தப் பாபத்தை ஒழித்து நாம் நற்கதி அடைய விரும்பாது மேலும் அல்ப சுகத்துக்கு ஆசைப்படுகிறீர்களே!" என்றது.

அடுத்த பிறவியில் அவர்கள் அன்னங்களாய்ப் பிறந்தனர். அவர்களுள் நால்வர், ஞானமுடையவர்களாகவும், மற்ற மூவர் மோகத்தில் விருப்பமுடையவர்களாகவும், இருந்து அந்த ஜன்மத்தையும் முடித்தனர். அடுத்த பிறவியில் காம்பில்லிய நகரத்து அரசர் புதல்வன் ஹநூஹனாகச் சுநந்திரன் பிறந்தான். சித்ரத்ரிசகன், சுநேந்திரன் இருவரும் அந்நகரிலேயே வேதியன் ஒருவனுக்கு மகனாகப் பிறந்து, வேத சாஸ்திரங்களில் வல்லவர் களானார்கள். பஞ்சாலன் ருக்வேதியாகத் தோன்றிச் சிறந்த ஆசாரியனாக விளங்கினான். சுத்தன் வேதியனாகப் பிறந்து, இரு வேதங்களை நன்குணர்ந்திருந்தான். சுவாக், சாம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதியாகப் பிறந்தான். சுமனஸ்ஸூம், வேதியர் குலத்தில் பிறந்து யாகம் செய்யும் ஆசாரியனாக விளங்கினான்.

சிறிது காலம் சென்றதும் ஹநூஹன் ஆட்சியைத் தன் பிள்ளைகளிடம் ஒப்புவித்து விட்டுக் காட்டுக்குத் தவம் செய்யச் சென்றான். பஞ்சாலனும், சுத்தனும் அவனோடு கானகம் சென்று தவம்செய்து உயர்ந்த பதவியை அடைந்தார்கள். மற்ற நால்வரும் அந்த ஜன்மத்தை விடுத்து அடுத்த பிறவியில் ஏழைப் பிராமணன் ஒருவனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்து யோக மார்க்கத்தைக் கடைப்பிடித்து முக்தி அடைந்தனர்.

பெரும்பாவிகளான அம்மூவரும் பிதுர்தேவர்களைத் திருப்தி செய்ததால் அனேகப் பிறவிகளை எடுத்தாலும், பூர்வஜன்ம உணர்ச்சியோடு இருந்து கடைசியில் நற்கதியை அடைந்தார்கள். சிரார்த்தங்களை விடாது செய்து பிதுர் தேவர்களைத் திருப்திப் படுத்துபவன் சகல பாக்கியங்களுடன் வாழ்ந்திருந்து நற்கதியை அடைவான் என்பது திண்ணம்.

52. அஷ்டமி விரத மகிமை

சிருஷ்டிப் பிரபாவத்தை விஸ்தாரமாகச் சொல்லி முடித்த சூதர் அடுத்து, சிவபெருமானுக்குப் பிடித்தமான அஷ்டமி விரதத்தைப் பற்றி விவரிக்கலானார்.

ஒவ்வொரு மாதமும் அஷ்டமிகளில் உபவாசமிருந்து சிவபெருமானைப் பூஜிப்பவன் அவரைத் திருப்திப் படுத்தியவனாகி சகல சௌபாக்கியங்களையும் அடைகிறான்.

மார்கழி மாதம் கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமியில் கோமூத்திரத்தை அருந்தி உபவாசமிருந்து, மறுநாள் பாரணை செய்தவன் சகல பாவங்களிலுமிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைகிறான். தை மாதத்தில் பசுவின் நெய்யை அருந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபவாசமிருந்து பகவானைப் பூஜிப்பவன், பிரம்மஹத்தி முதலிய பாவங்களிலிருந்து விடுபடுவான். மாசி மாதம் பசும்பாலில் பாயசம் செய்து தக்ஷிணாமூர்த்திக்கு நிவேதனம் செய்து விரதம் இருப்பவனுக்கு சுவர்க்கலோக வாசம் கிடைக்கும். பங்குனி மாதம் எள்ளுப் பொடியைச் சாப்பிட்டு விரதம் இருந்தால் நல்ல கதி கிடைக்கும். சித்திரை மாதம் வால்கோதுமையால் செய்யப்பட்ட ஆகாரத்தை மட்டும் அருந்தி விரதம் இருந்தால் அனேக தர்மங்களைச் செய்த பலன் கிட்டும். அதேபோல வைகாசி மாதம் சுத்த ஜலம், ஆனி மாதம் கோமூத்திரம், ஆடியில் பழங்கள், ஆவணியில் உப்பு ஜலம், புரட்டாசியில் தயிர், ஐப்பசியில் வெந்நீர், கார்த்திகையில் தேன் ஆகியவற்றை மட்டும் உட்கொண்டு விரதமிருந்து சிவபெருமானைப் பூஜிப்பவர்கள் அனேக பாவங்களிலிருந்து விடுபட்டு நற்கதி அடைவார்கள்.

மார்கழி மாதத்தில் வரும் அஷ்டமிக்கு சங்கராஷ்டமி என்று பெயர். தை மாத அஷ்டமிக்கு தேவதேவாஷ்டமி என்று பெயர். மாசி மாத அஷ்டமிக்கு மகேசுவராஷ்டமி என்று பெயர். திரியம்பகாஷ்டமி என்பது பங்குனி மாதத்தில் வரும் அஷ்டமிக்குப் பெயர் ஆகும். சித்திரையில் வரும் அஷ்டமிக்கு ஸநாதனாஷ்டமி என்று பெயர். வைகாசி அஷ்டமிக்கு சதாசிவாஷ்டமி என்றும், ஆனியில் வரும் அஷ்டமிக்கு பகவதாஷ்டமி என்றும் பெயர். நீலகண்டாஷ்டமி ஆடியிலும், ஸ்தாணு அஷ்டமி ஆவணியிலும் வரும் அஷ்டமிகளுக்குப் பெயர். சம்புகஷ்டமி புரட்டாசி மாதத்தில் வரும் அஷ்டமிக்குப் பெயர். ஈசுவராஷ்டமி, ருத்திராஷ்டமி இரண்டும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும் அஷ்டமிகளுக்குப் பெயர். தக்ஷிணாமூர்த்தியின் சந்நிதியில் பகவானை அர்ச்சித்து விரதமிருந்து, பிராமண போஜனம் செய்வித்து மறுநாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரணை செய்தல் வேண்டும். இவ்விதம் பன்னிரண்டு அஷ்டமிகளிலும் விரதம் இருந்து பகவானைத் தியானிப்பவர்கள் முக்தி அடைவார்கள். பூஜை செய்யும்போது பகவானைப் பாதாதிகேசமாக அங்கங்களை முறைப்படி பூஜை செய்ய வேண்டும். அவ்விதம் செய்பவர்கள் சுந்தர வடிவத்துடன் அங்கஹீனம் ஏதுமின்றிச் செல்வத்தோடு வாழ்வார்கள்.

பகவானைக் குறித்து விரதம் இருப்பவர்கள் நியமத்தோடு இருந்து விரதத்தை முடிக்கவேண்டும். நியமத்தில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. அவற்றில் இந்திரிய நிக்கிரகமே முக்கியமானது. நியமப்படி நடப்பவர்களே தெய்வத் தன்மை அடைகிறார்கள்.

முன்பு காசி நகரத்தில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் குரூர சுபாவம் உடையவனாய் இருந்தான். சகல விதமான தீய குணங்களும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அவனைப் பார்த்தவர்கள் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். அத்தனை பெரும்பாவியாக இருந்தான் அவன்.

அந்நகரத்தில் உள்ள ஓங்காரேசுவரரை ஒரு சித்தன் தினமும் பஞ்சாக்ஷர ஜபம் செய்து பூஜித்து வந்தான். ஒரு நாள் அவனைப் பாபியான அந்த பிராமணன் கண்டான். சித்தனை நெருங்கி, "ஐயா, நீர் யார்? உன்னைப் பார்த்தால் விண்ணுலக வாசியோ என எண்ணத் தோன்றுகிறது" என்று கேட்டான் அந்தணன்.

"ஆம், ஐயா, நீர் நினைப்பதுபோல நான் சுவர்க்கத்திலிருந்து வந்தவனே. தினமும் இங்கு வந்து ஓங்காரேசுவரரைத் தரிசித்துச் செல்வேன். என்னை எப்படி அறிந்தாய்? உனக்கு வேண்டியவர் சுவர்க்கத்தில் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார் சித்தன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தணன் சிறிது யோசித்துவிட்டு "ஐயா, சுவர்க்கத்தில் அப்சரசுகள் இருக்கிறார்களல்லவா? அவர்களில் ரம்பை என்பவளை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும், அவளிடம் ஏதாவது செய்தி தெரிவிக்க வேண்டுமா?" என்று கேட்டார் சித்தன்.

சித்தன் பிராமணனைப் பற்றி ஒன்றும் அறியாதவன். ஆகவே, உண்மையில் அவனுக்கு ரம்பை தெரிந்தவளே என்று எண்ணினான். அந்தணனோ, வேடிக்கையாக "அவளை நான் விசாரித்ததாகச் சொல்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அன்றைய தினம் பூஜை முடிந்து சுவர்க்கலோகம் திரும்பிய சித்தன், ரம்பையைக் கண்டு பிராமணனின் வார்த்தையைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிவித்தான். அவளோ தனக்கு யாரையும் தெரியாது என்று சொல்லிவிட்டாள்.

மறுநாள் சித்தன் பிராமணனைக் கண்டபோது ரம்பை அவனைப் பற்றித் தெரியாதென்று கூறியதைத் தெரிவித்தான்.

"நீ திரும்பவும் அவளைப் பார்த்தால் தினந்தோறும் நான் அவளை விசாரித்து வருவதாகச் சொல்" என்றான் பிராமணன்.

சித்தன் மறுபடியும் ரம்பையைக் கண்டு பிராமணன் நாள் தவறாமல் அவளை விசாரிப்பதாகக் கூறினான். அப்சரஸ் பெண்களின் ரூபலாவண்யம் பற்றி அறிந்து, அந்த ஆசையினால் தன்னோடு வாழ வேண்டுமென்று விரும்பும் பிராமணனது எண்ணத்தை அறிந்து அவள், "அவனைப் பார்த்தால், நியமத்தோடு இருந்து என்னை அடையலாம் என்று தெரிவி" என்றாள்.

சித்தனிடமிருந்து ரம்பையின் பதிலை அறிந்த பிராமணன் அன்று முதல் தீய காரியங்களை விடுத்து அவளை அடைய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் நியமமாக இருந்துவரத் தொடங்கினான். கொஞ்ச நாட்களில் அவன் புனிதத்தன்மை அடையவே ரம்பை அவனை அடைந்து மகிழ்ச்சியுறச் செய்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

53. ஈசன் சுடலையாண்டியான விருத்தாந்தம்

ஒரு சமயம் பார்வதி தன் நாதனைப் பார்த்து, "சுவாமி எத்தனையோ ஆபரணங்கள் இருக்க, அவை அனைத்தையும் துறந்துவிட்டு விபூதியை உடலெங்கும் பூசிக்கொண்டு பூத கணங்களுடன் மயானத்தில் நடனம் செய்து கொண்டிருப்பது ஏன் ? " என்று கேட்டாள். தேவியின் சந்தேகத்தைப் பரமசிவன் நிவர்த்திக்க இந்த விருத்தாந்தத்தைச் சொன்னார்.

ஒரு சமயம் பிருகு வமிசத்தில் பிறந்த வேதியன் ஒருவன் தீவிரமாக நியமநிஷ்டைகளை வகுத்துக் கொண்டு கடுமையான தவம் செய்தான். அவன் தவத்துக்கு இரங்கி பக்ஷிகள் பழங்களைக் கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்தன. அவனோ சருகாக உலர்ந்தவற்றை மட்டுமே உண்டு வந்தான். அதனால் அவனுக்குப் பர்ணாதன் என்ற பெயர் விளங்கலாயிற்று.

பின்னர் சிறிது காலத்தில் அவன் அதையும் விடுத்து எதையும் உண்ணாது உடலில் உள்ள இரத்தம் சுண்டிப் போகுமளவு கடுமையாக விரதம் இருந்தான்.

ஒருநாள் அவன் தர்ப்பை அறுக்கும்போது, அது அவன் கையில் பட்டுக் கிழிக்கவே காயம் ஏற்பட்டு இரத்தம் பெருக்கெடுத்தோடியது. அதைக் கண்ட அவன் ஆனந்தம் தாங்காமல் குதிக்கத் தொடங்கினான்.

சிவபெருமான் ஓர் பிராமணனாக வேடம் கொண்டு அவன் முன்பு தோன்றி, "ஏனப்பா, இவ்விதம் குதிக்கிறாய் ? உன் தவம் சித்தியாகிவிட்டது என்ற ஆனந்தமோ ?" என்று கேட்டார். அவனோ அவரைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் தன் மகிழ்ச்சியிலேயே குறியாயிருந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் இரத்தம் கொட்டும் அவன் கையை இறுகப் பிடித்தார். அப்போது இரத்தம் வழிவது நின்று பால் வழியத் தொடங்கியது. சிறிது நேரத்துக்கெல்லாம் அதுவும் நின்று விபூதி கொட்டியது. அதைப் பார்த்ததும் ஆச்சரியம் அடைந்த அவன் "ஐயா, தாங்கள் யார் இதென்ன மாய வித்தையாக இருக்கிறது ?" என்று கேட்டபடி அவர் முன்பு சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தான்.

சிவபெருமான் அவனுக்குத் தரிசனம் கொடுத்து சிவ கணங்களில் ஒருவனாக ஆகும் பாக்கியத்தையும் அருளினார்.

பர்ணாதனுக்காகப் பகவான் உண்டாக்கிய விபூதி அவருக்குச் சந்தனம்போல அதிக விருப்பம் உடையது. பிரயாகை, புஷ்கரம், ருத்திரவாசம், துவாரகை, ஹரித்துவாரம், பிரபாசம் ஆகிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனை ஒருவன் தன் உடலில் விபூதியைத் தரித்துக் கொள்வதால் அடைகிறான். விபூதி தரிப்பவர்கள், பூதப் பிரேத பிசாசங்களால் பயமுறுத்தப்பட மாட்டார்கள்.

வாயவியம், வாருணம், ஆதபம், ஆக்நேயம், அவகாஹம் ஆகிய ஐந்துவகை ஸ்நானங்களில் விபூதி தரிப்பது ஆக்நேயம் எனப்படும் வகையைச் சேர்ந்ததாகும். கங்கைக்குச் சமமான தீர்த்தம் இல்லை. வேதத்துக்குச் சமமான பிரமாணம் கிடையாது. மிருத்யுவுக்கொத்த தண்டிப்பான் இல்லை. அதேபோல விபூதி தரிப்பதற்கு ஒப்பான ஸ்நானம் இல்லை. அசுயாய் இருப்பவர்களும், வியாதியால் பீடிக்கப்பட்டவர்களும் விபூதியைத் தரிப்பதால் புனிதம் அடைவார்கள்.

உலகிலுள்ள பிராணிகளுக்குப் பிரளயம் நான்கு வகைப் பட்டு நிகழ்கின்றது. நித்தியம், நைமித்திகம், பிராகிருதம், ஆத்தியந்திகம் என அவை நான்கும் வழங்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நித்தியம் என்பது ஒருவனுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் முடிந்து அவன் இறப்பதாகும். நைமித்தகமோ, சில காரணங்களால் பலர் கூடி மரிப்பதாகும். பிராகிருதம் பிரம்ம கற்பம் அழிவதாகும். இவ்வகையாக அழிந்து அழிந்து தோன்றும் அனைத்தும் முக்தியடையும்படி சர்வ சம்கார காலத்தில் அண்டாண்ட பிரமாண்டங்களையும், பிரம்மன் முதலான சகலமான தேவர்களையும் அழிக்கத்தக்கதாகப் பஞ்ச பூதங்களில் ஒன்றால் சம்கரித்து யாவும் அழியும்படி ஒருவனாகவே நின்று சர்வேசுவரன் சம்கார நிருத்தியம் செய்வது ஆத்தியந்திகம் எனப்படும். அப்போது தேவி பகவானின் பக்கத்தில் இருந்து அவர் நடனத்திற்கு ஏற்பக் கைத்தாளம் போடுவாள். தேவர்களுடைய உடல்கள் விழுந்து கிடக்கும் மயானம் முழுவதும் சுற்றி ஆடுவதால் பகவானுக்குச் சுடலையாண்டி என்ற பெயர் விளங்குவதாயிற்று.

ஒரு சமயம் பகவான் அவ்வாறு மயானத்தில் நடனம் செய்கையில் பூதப் பிரேதப் பிசாசங்கள் யாவும் அவரைச் சுற்றி நின்று அவருக்குத் தொண்டு செய்தன. பகவானின் நர்த்தனத்தைக் காண, தேவர்களுடன் வந்த விஷ்ணு அவரைப் பணிந்து, "சர்வேச்வரா, தாங்கள் இங்கு நடனமாடுவதால் பூதப் பிரேதப் பிசாசங்கள் தங்கள் சந்நிதானத்திலேயே தங்கி உள்ளன. அவை மக்களுக்குக் கெடுதல்கள் எதுவும் செய்யாதிருக்கத் தாங்கள் அதனுடனேயே இங்கே இருப்பது உத்தமம்" என்று வேண்டினார். பகவானும் அதற்குச் சம்மதித்து மயானத்தைத் தமது இருப்பிடமாகக் கொண்டார்.

சகலரையும் பயமுறுத்தும் பூதப்பிரேத பிசாசங்களைக் கட்டுப்படுத்தியிருப்பதால் ருத்திரன் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. சர்வ சம்கார காலத்தில் அனைவரையும் சம்கரிப்பதால் ஹரன் என்றும் அவருக்குப் பெயர் உண்டாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூதர் நைமிசாரண்ய முனிவர்களுக்குச் சிவபெருமான் விபூதியை சர்வாபரணமாகத் தரிப்பது பற்றியும் மயானத்தில் நிருத்தியம் செய்வது பற்றியும் விளக்கிவிட்டு மேற்கொண்டு அறுபத்தெட்டு ஸ்தலங்களில் எழுந்தருளியிருப்பது பற்றிக் கூறத் தொடங்கினார்.

54. சிவ க்ஷேத்திரங்கள்

சிவபெருமான் அறுபத்தெட்டு க்ஷேத்திரங்களில் எழுந்தருளியுள்ளதை விசேஷமாகக் கூறுவர். அந்த க்ஷேத்திரங்களும் அங்கே எழுந்தருளியுள்ள பகவானின் திருநாமங்களும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

வாரணாசியில் மகாதேவன்; பிரயாகையில் மகேசுவரன்; நைமிசாரண்யத்தில் தேவதேவன்; கயையில் பிதாமகன்; குரு க்ஷேத்திரத்தில் காலேசன்; பிரபாசத்தில் சசிபூஷணேசன், புஷ்கரத்தில் கந்தேசன்; விமலேசுவரத்தில் விசுவேசன்; அட்ட காசத்தில் மகாநாதேசன்; மருகோடத்தில் மகோற்கடேசன்; சங்கு கர்ணத்தில் மகாதேஜசன்; கோகர்ணத்தில் மகாபலேசன்; ருத்திர கோடியில் மகாயோகீசன்; ஸ்தலேசத்தில் மகாலிங்கேசன்; அவந்தியில் மகாகானேசன்; மத்தியமேசத்தில் சர்வேசன்; கேதாரத்தில் ஈசானேசன்; ஹிமாசலத்தில் ருத்திரேசன்; சுவர்ணாக்ஷத்தில் காசிராசன்; விருக்ஷத்தில் ரிஷபத்துவ ஜேசன்; பைரவத்தில் பைரவேசன்; பத்திரபதத்தில் பத்திரேசன்; கனகலையில் உக்கிரேசன்; பத்திர கர்ணத்தில் இடுதபேசன்; தேவதாரு வனத்தில் பின்னேசன்; கபிஜங்கலத்தில் சண்டேசன்; சுரண்டத்தில் ஊர்த்துவகேது; மங்களாண்டத்தில் அமர்த்தீசன்; கிருத்திவாசத்தில் வரதேசன்; ஆமிராடிகத்தில் சூக்ஷமேசன்; காளஞ்சரத்தில் நீலகண்டேசன்; மண்டலேசுவரத்தில் ஸ்ரீகண்டேசன்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தேசத்தில் தியான சித்தேசன்; உத்தரதேசத்தில் காயத்திரி ஈசன்; காஷ்மீரத்தில் விஜயேசன்; சமருகேசத்தில் ஜயேசன்; யமசியங்கத்தில் தாணேசன்; காவீரகத்தில் காபிலேசன்; காயாவதாரத்தில் லகுளீசன்; தேவி காவில் உமாபதி; ஹரிசந்திரத்தில் ஈசுவரன்; புரசந்திரத்தில் சங்கரன்; காலேசுவரத்தில் ஜடேசன்; குக்குடேசத்தில் கௌமியேசன்; சந்தியாக்ஷேத்திரத்தில் தாமிரேசன்; வெதிரியில் திரிலோசனேசன்; ஜலேசத்தில் திரிசூலி; ஸ்ரீசைலத்தில் திரிபுராந்தகேசன்; லேபனத்தில் பசுபதி; அங்கேசத்தில் தீப்தேசன்; கங்காசாகர சங்கமத்தில் அமருகேசன்; அமரகண்டத்தில் ஓங்காரேசன்; சப்த கோதாவரியில் பீமேசன்; பாதாளத்தில் ஆமகேசன்; கர்ணிகாரத்தில் கணத்தியக்ஷன்; சைலாசத்தில் திரிபுராந்தகேசன்; ஹேமகூடத்தில் விரூபாக்ஷன்; சந்தமானத்தில் பூர்ப்புவஸ்ஸுவஸ்வேசன்; திடீசத்தில் அனலேசன்; தலேசத்தில் ஜ்வலலிங்கேசன்; கிராதத்தில் கைராதேசன்; விந்தகிரியில் வாரகேசன்; கங்காஹ்ருதத்தில் ஹிமஸ்தானேசன்; வடவா முகத்தில் மானவேசன்; தீர்த்தத்தில் சிரேஷ்ட கோடீசன்; இஷ்டகா பதத்தில் விசிஷ்டேசன்; குசுமபுரத்தில் பிரகாசேசன்; இலங்கையில் அளகேசன்.

இந்த விதமாக அறுபத்து எட்டு இடங்களில் பகவான் எழுந்தருளியிருப்பது சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த க்ஷேத்திரங்களுக்குச் சென்று தரிசிக்க முடியாதவர்கள் இந்தப் பெயர்களை ஸ்மரித்தாலே அந்தப் பலனை அடைவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

55. ஹரிகேசனின் சரிதை

பூர்ணபத்திரன் என்றொரு யக்ஷன் இருந்தான். அவனுக்கு ஹரிகேசன் எனப் பெயர் கொண்ட மகன் இருந்தான். ஹரிகேசன் பிறந்தது முதல் சிவபெருமானிடம் பக்தி கொண்டு தர்மவழியில் நடந்து வந்தான். தங்களுடைய குலதர்மத்துக்கு மாறாக மகன் நடப்பதைக் கண்ட பூர்ணபத்திரன் கோபம் கொண்டு அவனைத் தன் வீட்டை விட்டு விரட்டி விட்டான்.

தந்தையால் விரட்டப்பட்ட ஹரிகேசன் நேராகக் காசி க்ஷேத்திரம் சென்று அங்கொரு உத்தியான வனத்தில் ஓரிடத்தில் சிவபெருமானைக் குறித்துக் கண்மூடி நிஷ்டையில் அமர்ந்தான். நாட்கள் சென்றன. ஹரிகேசன் தான் அமர்ந்த இடத்தை விட்டு நகரவே இல்லை. அவன் உடலைச் சுற்றிலும் புற்று வளர்ந்து அதில் பாம்புகள் வசிக்கத் தொடங்கின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்தனின் பெருமையைப் பார்வதிக்கு உணர்த்த நினைத்த சிவபெருமான், தேவியை அழைத்துக் கொண்டு உத்தியான வனத்துக்கு வந்தார். ஒவ்வோர் இடமாகச் சுற்றிக் காண்பித்து வருகையில் ஹரி கேசன் தவம் செய்யும் புற்றை நெருங்கியதும், "தேவி, இப்புற்றினுள் என் பக்தன் வெகு காலமாகத் தவம் செய்து வருகிறான்!" என்று சொல்லிப் புற்றைக் கலைத்து, "ஹரிகேசா!" என்று அழைத்தார்.

கண்களை விழித்த ஹரிகேசன் தன் எதிரில் ரிஷபாரூடராகக் காட்சி அளித்த பரமசிவனைப் பார்வதியோடு கண்டு களித்துப் பணிந்தான்.

"ஹரிகேசா! உன் பக்திக்கு மெச்சுகிறேன்! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார் பகவான்.

"பிரபோ, தங்களைத் தரிசித்த எனக்கு என்ன வேண்டியிருக்கப் போகிறது? அழிவில்லாத பேறும் இந்தக் காசி க்ஷேத்திரத்திலே தங்கள் அருகிலேயே நித்தியவாசம் செய்யும் பாக்கியமும் கொடுக்க வேண்டும்" என்று வேண்டினான் ஹரிகேசன்.

பகவான் மகிழ்ந்து, "ஹரிகேசா, உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். இன்று முதல் நீ தண்டபாணி என்ற பெயரோடு சிவகணமாக இந்த க்ஷேத்திரத்தில் என்றும் விளங்கி வருவாயாக. என்னைத் தரிசிப்பவர்கள் உன்னையும் தரிசித்தால் தான், தாங்கள் கோரிய பலனை அடைவார்கள். உத்பிரமன் சம்பிரமன் என்ற இரு அடிமைகளோடு இந்த க்ஷேத்திரத்தில் என் பக்தர்களை ரக்ஷித்து வருவாயாக" என்று அருளி மறைந்தார்.

******

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

56. பிரதாப மகுடன் முக்தி அடைந்தது

பிரதாப மகுடன் என்றொரு அரசன் இருந்தான். அவனுக்கு வெகு நாட்களாகப் பிள்ளை பிறக்கவில்லை. எத்தனையோ தான தருமங்களுக்குப் பின்னர் சிவபெருமான் அருளால் அவனுக்கு ஓர் ஆண்மகன் பிறந்தான்.

அந்தப் பிள்ளை பிறந்தது முதலே ஞான மார்க்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தான். எந்தக் காரியத்திலும் கொஞ்சமும் விருப்பமின்றி விரக்தியோடு பகவானை ஸ்மரிப்பதிலேயே அவன் மனம் சென்றது. அதைக் கண்ட அரசன் பெரிதும் வருந்தி, "குமாரா, எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு, எத்தனையோ தான தருமங்களுக்குப் பிறகு, உன்னைப் பிள்ளையாகப் பெற்றேன். நம் முன்னோர்கள் கடைத்தேற நீ கிருகஸ்தனாகி புத்திர பௌத்திரர்களோடு தருமங்களை நடத்தி வர வேண்டும். இவ்வாறு விரக்தியோடு இருப்பது சரியல்ல" என்றான்.

அதைக் கேட்ட அரசகுமாரன், "அப்பா, உங்கள் வார்த்தைகளைக் கேட்க எனக்குச் சிரிப்புதான் வருகிறது. இந்த ஜன்மம் எத்தனையாவது என்பது தெரியாது. எத்தனையோ பிறவி எடுத்தேன். எத்தனையோ திருமணங்கள் செய்து கொண்டு புத்திர பௌத்திரர்களைப் பெற்றெடுத்தேன். எத்தனையோ பிதுர்களைக் கரையேற்றியுள்ளேன். இந்தப் பிறவி போதும், பிறந்து பிறந்து மரணத்தை அடையும் இந்த வாழ்க்கை போதும், பிறவாப்பேற்றை அடையவே எண்ணம் கொண்டுள்ளேன். அதற்காகவே பகவானைத் தியானித்து வருகிறேன்.

"இதற்கு முன் மூன்றாவது ஜன்மத்தில் நான் ஒரு துரிதனின் குமாரனாகப் பிறந்தேன். தீர்த்த யாத்திரை செய்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரும் போது காசி க்ஷேத்திரத்தை அடைந்தேன். அங்கு இருக்கும் போது ஒருநாள் இரவு நித்திரை வராது கண் விழித்திருக்கையில் தேவர்கள் யக்ஷர்கள் முதலானோர் வந்து ஓங்காரேசுவரரைத் தரிசித்துச் செல்வதைக் கண்டேன். அந்தப் புண்ணியத்தால் அடுத்த பிறவியில் ஓர் அரசகுமாரனாகப் பிறந்து பூர்வஜன்ம ஞானத்தால் காசியை அடைந்து அங்கேயே உயிரை விட்டேன். இந்த ஜன்மத்திலும் அரச குமாரனாகப் பிறந்திருக்கிறேன். இத்துடன் என் பிறவியையே ஒழித்து மோக்ஷத்தை அடைய முயற்சிக்கப் போகிறேன். என்னைத் தயவு செய்து இன்றே காசிக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்'' என்று வேண்டினான்.

அதைக்கேட்ட பிரதாப மகுடன், "மைந்தா, எனக்கும் மோக்ஷத்தை அடைய வேண்டும் என்பதே ஆசை. ஆனால் இந்த சம்சார பந்தத்திலுள்ள ஆசையை ஒழிக்க முடியவில்லை. உன்னோடு நானும் வருகிறேன். என்னையும் அழைத்துச் சென்று முக்திக்கான வழியைக் காட்டு'' என்றான்.

பின்னர் தன் இளைய மகனுக்கு முடிசூட்டி விட்டு, மூத்த மகனுடன் காசிக்குச் சென்ற பிரதாப மகுடன் அங்கே பகவானைத் தியானித்து உயிரை விட்டு முக்தியை அடைந்தான்.

57. வேடன் பெற்ற அருள்

ஒரு சமயம் நாட்டிலே மிகுந்த வறட்சி உண்டாயிற்று. மக்கள் ஜீவனத்துக்கு வழி இன்றித் திண்டாடினர்.

அப்போது காட்டிலே வேட்டையாடி ஜீவித்து வந்த வேடன் ஒருவன், தன் மனைவியோடு பசியால் வருந்தியபடி திரிந்து கொண்டிருந்தான். ஓரிடத்தில் தாமரைத்தடாகம் ஒன்றிருந்தது. அதில் பூத்திருந்த தாமரை மலர்களைக் கண்டதும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவைகளைப் பறித்துக் கொண்டு பக்கத்திலிருந்த காசி நகரத்தை அடைந்தான்.

விதிவசத்தால் அன்றைய தினம் நகரம் முழுவதும் சுற்றியும் மலர்கள் விலை போகவில்லை. சுற்றிக்கொண்டு வரும்போது ஓங்காரேசுவரர் ஆலயத்துக்கு வந்தான். அங்கு நடக்கும் பூஜையைக் கண்டு, சுவாமி தரிசனத்துக்கு வருபவர் யாராவது மலர்களை வாங்கக்கூடும் என்று ஆலயத்தில் காத்துக் கிடந்தான். அங்கு நடைபெறும் பூஜையையும், மக்கள் பகவானிடம் காட்டிய பக்தியையும் கண்ட வேடன் சிவபெருமானிடம் பக்தி கொண்டான். மலர்களை விற்க மனமின்றி பகவானின் பாதங்களில் பக்தியோடு சமர்ப்பித்து விட்டு அன்றிரவு முழுவதும் பட்டினியோடு அங்கேயே இருந்து



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜையைக் கண்டான். விடியற்காலை நேரத்தில் அவ்விருவருக்கும் பகவானின் திவ்விய தரிசனம் கிடைத்தது.

அதன் பின்னர் வேடன் அந்த ஆலயத்தை விட்டுப் போக மனமில்லாதவனாய் அங்கேயே இருந்து ஆலயத்தைச் சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டு வந்தான். அவனுக்கு உதவியாக அவன் மனைவியும் இருந்து வந்தாள்.

சிறிது காலத்துக்கெல்லாம் வேடன் இறந்து போனான். அவன் மனைவி அவனோடு உடன்கட்டையேறினாள்.

அடுத்த பிறவியில் அந்தத் தம்பதிகள் அரச குலத்தில் பிறந்து ஒன்றாக இணைந்தனர். அவனுக்கு முன் ஜன்ம புண்ணியத்தால் ஓங்காரேசுவரரைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. காசிக்குச் சென்று ஓங்காரேசுவரரைத் தரிசித்து, பகவானைப் பிரத்தியக்ஷமாகத் தரிசிக்க விருப்பம் கொண்டு காற்றையே உணவாகப் புசித்துக் கடும் தவம் செய்தான். பகவானும் அவன் தவத்திற்கு மெச்சி அவனுக்குத் தரிசனம் அளித்தார். முன் ஜன்மத்தில் தாமரை மலர்களைச் சமர்ப்பித்ததால் அவனுக்குப் பொற்றாமரை மலர் ஒன்று கொடுத்தார். அதுவே அவனுக்கு வாகனமாகி நினைத்த இடத்துக்கு அவனை அழைத்துச் சென்றது. அதன் காரணமாக அவனுக்குப் புஷ்பவாகனன் என்ற பெயர் உண்டாயிற்று.

லாவண்யவதி என்ற தன் மனைவியோடு புஷ்பவாகனன் சகல லோகங்களையும் சுற்றி வரும்போது, பிரம்மதேவன் அவனைப் புஷ்கரதீபத்துக்கு அரசனாக்கி அங்கேயே இருந்து வருமாறு செய்தார். அரசனுக்குப் பதினாயிரம் பிள்ளைகள் பிறந்தன.

சகல சௌபாக்கியங்களுடன் ஆட்சி புரிந்துவம் சமயத்தில் ஒரு நாள் பிரசேதஸ முனிவர், புஷ்பவாகனின் அரண்மனைக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தார். அவரை வரவேற்று உபசரித்த புஷ்பவாகனன், அவர் மூலம் தன் முன் விருத்தாந்தங்களை அறிந்தான். தன்னை இந்நிலைக்குக் கொணர்ந்த ஓங்காரேசுவரரைத் தரிசிக்க விரும்பி பிள்ளைகளிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு மனைவியுடன் புறப்பட்டான்.

காசியை அடைந்த அரசன் தேவாஹ்ருதம் என்னும் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி ஓங்காரேசுவரரைத் தரிசித்தான். தன் ஆயுட்காலம் முழுவதும் அங்கேயே மனைவியுடன் தங்கியிருந்து பகவானின் பாதார விந்தங்களை அடைந்தான்.

58. உபமன்யு அருள் பெறுதல்

வியாக்கிரபாதர் என்னும் முனிவர், வசிஷ்டரின் சகோதரியை மணந்து கொண்டார். அந்தத் தம்பதிகளுக்கு வெகு காலம் பிள்ளை பிறக்கவில்லை. முனிவருக்கு பரமேச்வரனிடம் மிகுந்த பக்தி உண்டு. அவர் தினமும் ஈசனிடம் தன் வம்சம் விளங்கப் புத்திரன் பிறக்க அனுக்கிரகிக்குமாறு வேண்டி வந்தார்.

பகவானின் அனுக்கிரகத்தால் வியாக்கிரபாதருக்கு ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு உபமன்யு எனப் பெயரிட்டு வளர்ந்து வந்தனர். குழந்தையும் தாயும் வசிஷ்டரின் ஆசிரமத்திலேயே சிறிது காலம் இருந்து வந்தனர். அப்போது குழந்தைக்கு அந்த ஆசிரமத்திலிருந்த காமதேனுவிடமிருந்து பாலைக் கறந்து வந்து கொடுத்தனர்.

குழந்தை ஓரளவு பெரியவனானதும் வியாக்கிரபாதரின் மனைவி உபமன்யுவோடு தன் ஆசிரமத்துக்குத் திரும்பினாள். ஒரு நாள் உபமன்யு பாலுக்காக அழுதான். ஆசிரமத்திலோ பசுக்கள் இல்லை. ஆகவே, குழந்தைக்கு மாவைக் கரைத்துப் பால் எனப் புகட்டினாள் தாய்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழந்தைக்குப் பாலில் காணப்பட்ட வித்தியாசம் புரிந்து விட்டது. வசிஷ்டர் ஆசிரமத்தில் காமதேனுவின் பாலைக் குடித்து ருசி அறிந்திருந்த அவன், அந்தப் பாலே வேண்டும் என அடம்பிடித்தான்.

தாயார் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவன் கேட்கவில்லை.

"நம்முடைய ஆசிரமத்தில் பசுக்களே இல்லையடா. நான் பாலுக்கு எங்கே போவேன்? நம் வசதிக்கு ஏற்பத்தானே நாம் இருக்க முடியும்" என்று ஆறுதல் கூறினாள் தாய்.

உபமன்யுவின் பிடிவாதம் அடங்கவில்லை.

"அம்மா, இந்தப் பால்தான் நமக்குக் கிடைக்கவில்லை. அதனாலென்ன, திருபாற்கடலையே நான் பெற்று வருகிறேன்" என்று கூறி சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்ய அனுமதி கேட்டான்.

தாயார் என்ன செய்வாள்? மகனின் பிடிவாதத்தை அவள் நன்கு அறிவாளே! வருத்தத்தோடு அனுமதி கொடுத்தாள். மகனுக்குப் பஞ்சாக்ஷரி உபதேசித்துத் திருநீறும் கொடுத்து அனுப்பினாள்.

காட்டுக்கு வந்த உபமன்யு சிவபெருமானைக் குறித்துத் தவம் மேற்கொண்டான். உள்ளத்தில் ஈசனைத் தியானித்துக் கண்மூடி ஜபத்தில் அமர்ந்தான். அவனுடைய தவத்தின் பலத்தால் அங்குப் பேயுருவில் சுற்றிக் கொண்டிருந்த மரீசி முனிவரின் புத்திரர்கள் தாங்கள் பெற்ற சாபம் நீங்கப் பெற்றவர்களாய் பேயுருவை விட்டு மானிட உருவை அடைந்தார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடு உபமன்யுவின் தவம் பூர்த்தியாகும்படி ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபமன்யுவின் தவத்தால் மகிழ்ச்சியடைந்த பரமசிவன், தம் பக்தனைப் பரிசோதிக்க விரும்பினார். இந்திரனைப் போன்று வேடம் கொண்டு அவனிடம் வந்தார்.

“குழந்தாய், இந்தக் கானகத்தில் துஷ்ட மிருகங்கள் சஞ்சாரம் செய்கையில், நீ பயமின்றித் தவம் செய்கிறாயே! யாரைக் குறித்துத் தவம் செய்கிறாய்!” என்று கேட்டார்.

“கையிலாசநாதனான மகேச்வரனைக் குறித்துத் தவம் செய்கிறேன்” என்றான் உபமன்யு.

“அவரோ ஆண்டி, உனக்கு என்ன வரம் கொடுக்கப் போகிறார்? இருக்க இடமில்லாது மயானத்திலே திரிகிறார். வேறு தேவர்கள் இல்லையா? அவர்களில் யாரையாவது குறித்துத் தவம் செய்வதுதானே” என்றார் இந்திரன் வடிவில் வந்திருந்த ஈசன்.

அத்துடன் நின்றுவிடவில்லை. சிவனைப் பற்றித் தூஷணையாகப் பேசினார்.

உபமன்யுவுக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது.

“பகவானின் மகிமையை உணராது அவரை நிந்தித்துப் பேசும் நீ, பெரும் பாவியாகிறாய். உன்னைத் தண்டிக்காது விடக்கூடாது” என்று கடிந்து பேசியபடி அகோராஸ்திரத்தை அவர் மீது ஏவித் திருநீற்றையும் வாரி இறைத்தான் உபமன்யு.

சட்டென்று நந்திதேவர் அங்குத்தோன்றி, பகவானின் மீது உபமன்யு ஏவிய அஸ்திரம் படாது தடுத்தார். அப்போது தான் உபமன்யுவுக்குத் தம்மைச் சோதிக்கவே பகவான் அவ்வாறு வந்தார் என்பது புரிந்தது. அவன் உள்ளம் வேதனையால் துடித்தது. “ஆஹா, பகவான் மீதே அஸ்திரத்தை ஏவிப்பெரும் பாதகத்தைச் செய்து விட்டோமே!” என்று அனலிலிட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெழுகுபோல் துடித்தான். இனி உயிருடன் இருப்பது எதற்கும் பிரயோசனமில்லை என்று முடிவு செய்து தீ முட்டி அதில் விழுந்து உயிரைவிடத் தயாரானான்.

தீயிலே குதிக்க யத்தனிக்கும் போது கையிலாசநாதன் பார்வதி சமேதராய் அங்குத் தோன்றி அவனைத் தடுத்து நிறுத்தினார்.

"தேவி, உபமன்யு விரும்பியது போல் அவனுக்குத் திருப்பாற் கடலையே இருப்பிடமாக அளிக்கப் போகிறேன். உன் விருப்பம் என்ன?" என்று பார்வதியைக் கேட்டார்.

தேவிக்கு விருப்பமில்லாதிருக்குமா? அவன் மன உறுதியைப் பெரிதும் பாராட்டி, உயர்ந்த ஞானம் உண்டாக அருளினார்.

திருப்பாற் கடலை அடைந்த உபமன்யு பகவானைத் தியானித்து அவர் நினைவிலேயே தம் பொழுதைக் கழித்து வந்தான்.

இந்த உபமன்யு முனிவரிடம்தான், கண்ணன் உபதேசம் பெற்று சிவபூஜை செய்து தன் சந்ததி வளர சாம்பன் என்ற பிள்ளையைப் பெற்றார்.

59. நாரதர் கர்வ பங்கம்

ஒரு சமயம் நாரதர், பரமசிவனைக் குறித்து வெகு காலம் தவம் புரிந்தார். நாரதரின் தவத்தைக் கலைத்து அவர் நோக்கம் நிறைவேறத் தடை செய்ய விரும்பினான் இந்திரன். அழகில் சிறந்த ஆரணங்குகளான அப்சரசுகளில் சிலரைத் தேர்ந்தெடுத்து நாரதரிடம் சென்று அவர் தவத்தைக் கலைக்குமாறு அனுப்பி வைத்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவ மங்கையரும், நாரதர் தவம் செய்யுமிடத்தை அடைந்து அவர் முன்பு ஆடிப்பாடிப் பலவிதங்களிலும் அவர் உள்ளத்தைத் தங்கள்பால் திருப்ப முயன்றனர். நாரதர் தம் உள்ளத்தில் பரமசிவனைத் தியானித்து ஏகாக்கிர சிந்தையுடன் தவம் செய்து வந்ததால் அவரிடம் அப்சரசுகள் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை. ஆடி ஆடி முடிவில் அவர்கள் களைத்துப்போய் இந்திரலோகம் திரும்பினர்.

நாரதரின் தவம் முடிந்தது. பரமசிவன் அவருக்குத் தரிசனம் கொடுத்து அவர் விரும்பிய வரத்தை அளித்தார். மகிழ்ச்சியோடு திரும்பிய நாரதர், தாம் தவத்தில் ஈடுபட்டிருக்கையில் இந்திரன் அப்சரசுகளை அனுப்பித் தவத்தைக் கலைக்குமாறு செய்த முயற்சி பலிக்காமல் போனதை அறிந்தார். அப்போது அவர் உள்ளத்தில், தாம் காமனை வென்றுவிட்டதாக ஓர் எண்ணம் உண்டாயிற்று.

பிரம்மலோகம் சென்ற நாரதர், இந்திரன் தம்மிடம் தோல்வியுற்றதைச் சதுர்முகனிடம் பெருமையாக எடுத்துச் சொல்லி, தாம் காமத்தை, ஜெயித்துவிட்டதாகக் கூறினார். அதைக் கேட்ட பிரம்மன், நாரதரின் வெற்றிக்கு முக்கிய காரணம் பரமசிவனின் அனுக்கிரகமே என்று கூறினார். நாரதர் அதை ஏற்கவில்லை.

அங்கிருந்து புறப்பட்டு நேராக வைகுந்தத்தை அடைந்தார். விஷ்ணுவிடமும் அவர் தம் பெருமையைக் கூறிக் கொண்டார்.

மகாவிஷ்ணுவும் பிரம்மதேவனைப் போலவே, ‘பரமசிவனின் அனுக்கிரகமே அப்சரசுகள் தோல்வியுற்றுத் திரும்பக் காரணம்’ என்பதை நாரதரிடம் எடுத்துக் கூறினார். நாரதரோ தம் சொந்த முயற்சியாலேயே காமத்தை வென்றதாகக் கூறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாரதரின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் தவற்றைத் திருத்த விரும்பினார் மகாவிஷ்ணு. பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டினால்தான் நாரதர் தம் தவற்றை ஒப்புக்கொள்வார் என்பது விளங்கியது. அதற்குத் தகுந்த சந்தர்ப்பமும் உடனே கிட்டியது. ஸ்ரீபுரத்தில் இருக்கும் அம்பரீஷ சக்கரவர்த்தி தம் குமாரத்தி ஸ்ரீமதிக்கு விவாகம் செய்ய ஸ்வயம்வரத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

மகாவிஷ்ணு நாரதரைப் பார்த்து, "நாரதா, உனக்கு விஷயம் தெரியுமோ? ஸ்ரீபுரத்து அரசன் தன் குமாரத்திக்கு விவாகம் செய்ய ஏற்பாடுகள் செய்கிறானாமே?" என்று கேட்டார்.

நாரதருக்குப் பூலோகம் செல்ல விருப்பம் உண்டாகி விட்டது. நாராயணனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட அவர், ஸ்ரீபுரத்திலுள்ள அரண்மனையை அடைந்தார். அரச குமாரத்தி ஸ்ரீமதியின் அழகு வடிவத்தைக் கண்டதும் அவர் உள்ளம் சலனம் கொண்டது. வைகுந்தத்திலிருந்து நாராயணன் அல்லவா அவரை ஆட்டுவிக்கிறார்!

அரசகுமாரியைத் தாமே மணந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் பிறந்தது, அவரிடம். அரசனை அழைத்து அவன் குமாரத்தியைத் தமக்கு மணம் செய்து கொடுக்குமாறு கேட்டார்.

"மகரிஷி, தங்களுக்கு என் பெண்ணைக் கொடுப்பதற்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? ஆனால்..." என்று இழுத்தான் அரசன்.

"பின் ஏன் இந்தத் தயக்கம்!" என்று கேட்டார் நாரதர்.

"என் குமாரத்தியோ ஹரியையே மணப்பேன் என்று பிடிவாதம் கொண்டிருக்கிறாளே!..."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசனுடைய வார்த்தைகளைக் கேட்டதும் நாரதரின் உற்சாகம் அடங்கி விட்டது. அடுத்த கணமே அவருக்கு ஓர் யோசனை தோன்றியது.

"ஸ்ரீமதியின் விருப்பத்தைக் கெடுப்பானேன். இதோ விரைவிலேயே வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வைகுந்தத்துக்கு ஓடினார் நாரதர்.

வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்த நாரதரைக் கண்டதும் நாரயணன் வியப்போடு, "நாரதா, என்ன விஷயம் ? ஏன் இந்தப் பரபரப்பு ?" எனறுகேட்டார்.

"பிரபோ, எனக்கொரு வரம் தரவேண்டும். தாமதிக்கக் கூடாது ?" என்று வேண்டினார் நாரதர்.

"என்ன வரம் வேண்டும், நாரதா ?" என்று ஒன்றுமே தெரியாதவர் போலக் கேட்டார் நாராயணன்.

"பிரபோ, நான் நினைக்கும் நேரத்தில் யார் என்னைப் பார்த்தாலும் ஹரியின் முகமாக என் முகம் தோற்றம் அளிக்க வேண்டும்" என்று வேண்டினார் நாரதர்.

"எதற்கு இந்த வரம் ?..." என்று கேட்டார் நாராயணன்.

"நின்று சொல்ல நேரமில்லை, பிரபோ. பூலோகத்திலே முக்கிய காரியம் ஒன்றிருக்கிறது. முடித்துக் கொண்டு வருகிறேன். வந்ததும் எல்லாவற்றையும் சாவகாசமாகச் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஓட்டமாக ஓடினார் நாரதர்.

பொங்கி எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு "போய் வா, நாரதா ?" என்றார் நாராயணன்.

ஸ்ரீபுரத்தை அடைந்ததும் நாரதர் நேராக அரசனிடம் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நாளைக்கே திருமணத்துக்கு ஏற்பாடு செய். உம்முடைய குமாரத்தி எனக்கே மாலையிடுவாள்" என்றார்.

அரசனோ தயங்கினான். வைகுந்தவாசனைத் தவிர வேறு எவரையும் மாலையிடுவதில்லை என ஸ்ரீமதி உறுதி கொண்டிருப்பதை அவன் நன்கு அறிவான்.

"கொஞ்சமும் தயக்கம் வேண்டாம். ஸ்ரீமதி எனக்குத் தான் மாலையிடுவாள்" என்றார் நாரதர்.

அரசன் தன் புத்திரியை அழைத்தான். அவளுடைய சம்மதம் பெறாது அவன் என்ன செய்ய முடியும்?

நாரதரோ, ஸ்ரீமதி தனக்குதான் மாலையிடப் போகிறாள் என்று எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தார். அவள் வரும்போது தம்முடைய முகம் ஹரியின் முகமாகத் தோன்றட்டுமென விரும்பினார்.

உள்ளே நுழைந்த ஸ்ரீமதியின் பார்வை நாரதர் பக்கம் திரும்பியது. அடுத்த க்ஷணம் அலறிக்கொண்டு தந்தையிடம் ஓடிவந்தாள்.

"என்னம்மா, குழந்தை? என்ன விஷயம்?" என்று அவளை அணைத்துக் கொண்டு கேட்டான் அரசன்.

"அப்பா, அவரைப் பாருங்கள்!..." என்று ஸ்ரீமதி, நாரதரின் பக்கம் கையைக் காட்டினாள்.

அனைவரின் பார்வையும் நாரதர் பக்கம் திரும்பியது. நாரதரின் முகம் குரங்கு முகமாகத் தோற்றமளிப்பதைக் கண்டு அனைவரும் சிரித்தனர்.

நாரதருக்கு ஒன்றும் புரியவில்லை. மற்றவர்கள் சிரிப்பதற்கான காரணத்தை விளக்குமாறு அரசனைக் கேட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மகரிஷி, தங்கள் முகத்தைக் கண்ணாடியில் பாருங்கள். விஷயம் புரியும்" என்றான் அரசன்.

கண்ணாடியிலே தம் முகத்தைப் பார்க்கும்போதுதான் நாரதருக்கு உண்மை வெளிப்பட்டது. ஹரி என்பதற்குக் குரங்கு என்றொரு பொருள் உண்டு. ஹரியின் முகமாகத் தோன்றுவதற்கு பதிலாகக் குரங்கு முகமாகத் தோற்றமளிக்கச் செய்து நாராயணன் தம்மை ஏமாற்றிவிட்டார் என்பதை அப்போதுதான் உணர்ந்தார். நாராயணன் மீது அவருக்குச் சொல்ல முடியாது கோபம் உண்டாயிற்று. நேராக வைகுந்தத்துக்கு ஓடினார்.

அங்கே அவரைத் திடுக்கிட வைக்கக்கூடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்திருந்தது. எந்த ஸ்ரீமதியை மணக்க விரும்பியிருந்தாரோ அவள் நாராயணன் மடிமீது மணக் கோலத்தோடு அமர்ந்திருக்கக் கண்டார். அவர் ஆத்திரம் பன்மடங்காகிவிட்டது.

"பிரபோ, என்னை ஏமாற்றி விட்டீர்கள். அந்தப் பாபம் உம்மைச் சும்மா விடாது. நீங்களும் மனிதனாகப் பிறந்து உங்கள் மனைவியும் பிறன் ஒருவனால் தூக்கிச் செல்லப்பட்டு இழந்து வருந்துவீர்கள். உங்களுக்கு உதவ வானரங்களையே நாடுவீர்கள்" என்று சபித்தார்.

நாராயணன் புன்சிரிப்போடு நாரதரின் சாபத்தை ஏற்றுக் கொண்டு, "நாரதா, பூலோகத்தில் என் காரியம் நிறைவேற உன் சாபம் தேவை. அதிருக்கட்டும், முற்றும் துறந்த முனிவனான உனக்கு ஏன் திருமணத்தில் விருப்பம் ஏற்பட்டது? காமத்தை ஜெயித்த நீயா இவ்விதம் அடிமையாக நிற்பது?" என்று கேட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்போதுதான் இது நாராயணன் திருவிளையாடல் என்பதை உணர்ந்த நாரதர் தம் தவறுக்கு வருந்தினார்.

60. ஸ்ரீராமனைப் பரீக்ஷித்த பார்வதி

ஒரு சமயம் சிவபக்தன் ஒருவன் சிவபெருமானையும் தேவியையும் ஒருங்கே தரிசனம் செய்ய விரும்பினான். பக்தனுக்கு அருளப் புறப்பட்ட ஈசன், தம்மோடு தேவியையும் வருமாறு அழைத்தார்.

ஈசனால் தமக்கு உபதேசிக்கப்பட்ட விஷ்ணு சகஸ்ரநாம பாராயணத்தில் தேவி அப்போதுதான் ஈடுபட்டிருந்தாள்.

"பிரபோ, பாராயணம் முடியவில்லையே!" என்றார் தேவி.

"லகுவான பாராயணம் செய்து வா?" என்றார் ஈசன்.

"பாராயணத்தை லகுவாக முடிக்கும் உபாயம் என்ன?" என்று கேட்டாள் தேவி.

ஸ்ரீராம, ராம என்பதைக் கூறுவதே விஷ்ணு சகஸ்ரநாம பாரயணத்தில் லகுவான பாராயணம் என்பதை எடுத்துக் கூறினார் ஈசன்.

தேவியும் அவ்விதமே பாராயணத்தை முடித்துக் கொண்டு அவரோடு புறப்பட்டாள்.

போகும் வழியில் அவர்கள் தண்டகாரண்யத்தை அடைந்தனர். அங்கே சீதையைப் பிரிந்த ஸ்ரீராமன் பித்தனைப் போல் 'சீதே, சீதே' எனக் கதறி அழுதுகொண்டிருப்பதைக் கண்டாள் தாக்ஷாயணி.

"பிரபோ, பித்தனைப் போல் கதறும் இவர் நாமமா ஸஹஸ்ர நாம ஜபம்?" என்று கேட்டாள் ஈசனிடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தேவி, நீயே அதைப் பரீக்ஷித்துப் பாரேன்" என்றார் சிவன்.

தாக்ஷாயணியும் சீதையைப் போன்று வேடம் கொண்டு ஸ்ரீராமனின் முன் சென்றாள்.

அவளைக் கண்டதும் ஸ்ரீராமன், "தேவி, இதென்ன கோலம்? சிவனை விட்டுப் பிரிய எண்ணம் கொண்டா இந்த வேஷம் பூண்டாய்?" என்று கேட்டார்.

தேவிக்கு அவமானமாகிவிட்டது. தான் பூண்ட வேடத்தை விட்டு விட்டு சிவனிடம் வந்து ஸ்ரீராமனின் வார்த்தைகளைக் கூறினாள்.

அந்த வார்த்தைகள் விரைவிலேயே பலித்துவிட்டன. தக்ஷன் சிவபெருமானிடம் விரோதம் கொண்டு அவருக்கு அவிர்ப்பாகமில்லாது யாகம் செய்ய, தேவி அவமானம் பொறுக்காது யாக குண்டத்திலேயே தம் உடலை விடுத்துப் பர்வதராஜனுக்குப் புத்திரியாகப் பிறந்தாள்.

61. சிவன் சந்திரசேகரராதல்

தக்ஷனின் யாக குண்டத்தில் தேவி தன் உடலை விட்டு விட்டுப் பர்வதராஜனின் குமாரியாக அவதரித்தாள் என்பதைக் கேட்டதும் ஈசன் பெரும் சீற்றம் கொண்டார். தம்மை அவமதித்த தக்ஷனைக் கொன்று அவன் யாகத்தை அழிக்க வீரபத்திரரைத் தோற்றுவித்து அனுப்பி வைத்த பின்னர் அவர், பித்துப் பிடித்தாற் போல் வனாந்திரங்களிலும் மலைச்சாரல்களிலுமாகத் திரிந்து கொண்டிருந்தார். ஸதி தேவியைப் பிரிய நேர்ந்த வருத்தம் அவர் உள்ளத்தைத் தகித்தது. அவரிடமிருந்து வெளிப்பட்ட அந்த உஷ்ணம், சகல லோகங்களையும் தகிக்கச் செய்தது. அதன் காரணத்தை அறியாத தேவர்கள் வெப்பம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாங்கமாட்டாதவர்களாய்த் தவித்தனர். அனைவரும் பிரம்ம தேவனைச் சரண் அடைந்தனர்.

"பிரபோ, எங்கும் ஒரே வெப்பமாக இருக்கிறதே. காரணம் என்னவென்று தெரியவில்லை. எங்களால் அதன் உஷ்ணத்தைத் தாங்க முடியவில்லை. தாங்கள் தான் வெப்பத்தைத் தணித்து எங்களை ரக்ஷிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

"தேவர்களே, இந்தத் தாங்க முடியாத வெப்பத்துக்குக் காரணம் கைலாசநாதனே. தாக்ஷாயணியைப் பிரிந்த வேதனையால் மனம் போனபடித் திரிந்து வருகிறார். அவர் உள்ளம் பிரிவாற்றாமையால் இப்படி உஷ்ணத்தைக் கொட்டுகிறது. என்னால் செய்யக்கூடியது ஏதுமில்லை. நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சந்திரனை வேண்டி அவர் சிரசிலே என்றும் தங்கச் செய்தால், அதன் குளிர்ச்சியால் அவர் உள்ளம் சாந்தமடையும்; நம்மைத் தகித்து வரும் உஷ்ணமும் குறையும்" என்றார் பிரம்மதேவன்.

நான்முகனின் வார்த்தைப்படி தேவர்கள் சந்திரனைப் பிரார்த்தித்தனர். பகவானின் சிரசிலே தங்கி அவர் உஷ்ணத்தை மட்டுப்படுத்திக் குளிர்ச்சியுறச் செய்யுமாறு வேண்டினர். சந்திரன் அவர்கள் கோரிக்கைக்குச் சம்மதித்தான்.

பின்னர் எல்லோருமாகப் பகவானை தேடிச் சென்றார். அவரைக் கண்டதும் பலவித ஸ்தோத்திரங்களால் அவரைத் துதித்தனர். பிறகு அவரைப் பணிந்து,

"பிரபோ, சர்வேச்வரா, தாங்கள் எங்கள் கோரிக்கைக்கு மனம் களித்து சந்திரனைத் தங்கள் சிரசிலே தரித்துக் கொள்ள வேண்டும். லோக க்ஷேமார்த்தம், எங்கள் கோரிக்கையை மறுக்கக் கூடாது" என்று கோரினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசனும் அவர்கள் வார்த்தைகளால் மகிழ்ச்சி அடைந்து, சந்திரனைத் தமது சிரசிலே தரித்துக் கொண்டார். அப்போதே அவரை வாட்டி வந்த வேதனையின் உஷ்ணம் மட்டுப்பட்டது. தேவர்கள் திருப்தி அடைந்தவர்களாய்ப் பகவானை, 'சந்திரசேகரன்' என்று கொண்டாடினர்.

62. ஜாலந்தரன் வதம்

ஒரு சமயம் பரமேச்வரனைத் தரிசிப்பதற்காகத் தேவேந்திரன் கையிலயங்கிரிக்குச் சென்றான். அவன் சென்ற சமயத்தில் சிவன் மிகவும் உக்கிரமாகவும், திகம்பரனாகவும் இருந்தார். அவரைத் தேவேந்திரனால் கண்டுகொள்ள முடியவில்லை.

"அடே, திகம்பரனாகத் திரியும் நீ யார்? கையிலாசபதி எங்குச் சென்றார்?" என்று கேட்டான் இந்திரன்.

ஈசன் அவன் கேள்விக்குப் பதில் கூறவில்லை. இந்திரன் சினம் கொண்டு மறுபடியும் அவரை அதட்டிக் கேட்டான். அப்போதும் ஈசன் வாய் திறக்கவில்லை. இந்திரன் பொறுமை இழந்து மூன்றாம் முறையாக அவரைக் கேட்டான். அப்போதும் அவர் பதில் சொல்லாதிருக்கவே, தன்னிடமிருந்த வஜ்ஜிராயுதத்தை எடுத்து அவர் மீது வீசினான்.

கைலாசநாதன் கோபத்தோடு இந்திரனை நோக்கினார். அப்போதே இந்திரன் சாம்பலாகி விட்டான்.

சிவகோபத்துக்கு இந்திரன் பலியாகிவிட்டதை அறிந்ததும் பிருஹஸ்பதி ஓடி வந்தார்.

"பிரபோ, சர்வேச்வரா, சாந்தம் கொள்ள வேண்டும். இந்திரன் இல்லாவிடில் தேவர்களுக்கு நன்மை இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவுலகமும் அதனால் பாதிக்கப்படும். கருணாமூர்த்தியான தாங்கள் அவன் செய்த தவறை மன்னித்து அவனை உயிர்பெற்று எழச் செய்யவேண்டும். உங்கள் கோபத்தைக் கடலிலே எறியுங்கள்' என்று வேண்டினார்.

சர்வேச்வரனான சங்கரனும் அவர் கோரிக்கையை ஏற்று இந்திரனை உயிர்பெற்று எழச் செய்து, தம்முடைய கோபத்தைக் கடலிலே எறிந்தார். கடலிலே விழுந்த சிவகோபம் பயங்கர ராக்ஷஸக் குழந்தையாகி மூவுலகங்களுக்கும் கேட்கும்படி அழத்தொடங்கியது.

குழந்தையின் அழுகுரலைக் கேட்டுப் பிரம்மதேவன் சமுத்திர தீரத்துக்கு வந்தார். சமுத்திர ராஜன் அவர் வருகையை அறிந்து ஓடி வந்து நான்முகனை வரவேற்றான்.

"பிரபோ, இந்தக் குழந்தையை ஆசீர்வதித்து நாமகரணம் செய்ய வேண்டும்" என்று வேண்டியவனாய் அசுரக் குழந்தையை எடுத்து வந்து அவர் மடி மீது கிடத்தினான். குழந்தை சட்டென்று எழும்பி பிரம்மதேவனின் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு விட்டது. நான்முகனின் கண்களில் ஜலம் தளும்பிவிட்டது. அதையே காரணமாகக் கொண்டு அவர் குழந்தைக்கு ஜாலந்தரன் எனப் பெயரிட்டார். சிவபெருமான் ஒருவரால்தான் மரணம் சம்பவிக்கும் என்று அக்குழந்தைக்கு வரம் கொடுத்து சென்றான் பிரம்மதேவன்.

ஜாலந்தரன் காலநேமி என்பவரின் மகளான பிருந்தையை மணம் செய்து கொண்டான். பிருந்தை கற்பு நெறி தவறாதவள். அதன் காரணமாக ஜாலந்தரன் பெரும் பலத்தைப் பெற்றான். சமுத்திரத்தைக் கடைந்து அதிலிருந்து உண்டான பொருள்களான அமிர்தம், கல்பகவிருக்ஷம் ஆகியவற்றைத் தேவர்கள் கைகொண்டது அநியாயம் எனச் சீறினான் அவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடலிலிருந்து தோன்றிய தனக்கே அவை உரிமை என்றும், சுவர்க்கலோகத்தோடு அனைத்தையும் தன்னிடமே திருப்பிக் கொடுத்து விடுமாறும் இந்திரனிடம் சண்டையிட்டான் ஜாலந்தரன். இந்திரனின் உதவிக்கு வந்த தேவர்கள் எல்லோரையும் கொன்று குவித்தான்.

தேவர்களின் குருவான பிரஹஸ்பதி துரோணாசலத்தில் உள்ள ஔஷதங்களைக் கொண்டுவரச் செய்து அவற்றால் இறந்த தேவர்களை உயிர் பிழைக்கச் செய்தார். இதைக் கேள்விப்பட்ட ஜாலந்தரன் பெரும் சீற்றத்தோடு சென்று அந்த மலையையே பெயர்த்துக் கடலிலே எறிந்து விட்டான்.

தேவர்களால் அவனை எதிர்த்துப் போரிடவே முடியவில்லை. வைகுந்தத்துக்குச் சென்று நாராயணனிடம் சரண் புகுந்தனர். அவர்களைக் காப்பாற்ற விஷ்ணு, அசுரனோடு யுத்தத்துக்கு வந்தார். அவர் புறப்படும்போது லக்ஷ்மி ஓடி வந்து தடுத்தாள்.

"பிரபோ, ஜாலந்தரன் என் உடன் பிறந்தவன். அவன் உயிருக்கு ஆபத்து ஏதும்வராமல் காக்க வேண்டும்" என்று வேண்டினாள்.

மகாவிஷ்ணுவாலும் அசுரனை வெற்றி கொள்ள முடியவில்லை. அவனிடம் தம் தோல்வியைக் காட்டாது சாமர்த்தியமாக, "அசுரேந்திரா, உன் வலிமையைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். உனக்கு வேண்டிய வரம் என்ன? அதைக் கேள் நான் தருகிறேன்" என்றார்.

அசுரனுக்கு மகாவிஷ்ணுவின் தந்திரம் புரிந்து விட்டது. ஆகவே, அவன் அவரை நோக்கி, "நாராயணா, என்னிடம் மகிழ்ச்சி கொண்டு எனக்கு வரம் கொடுக்க முன் வந்திருப்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மையானால், தாங்கள் எப்போதும் பாற்கடலிலேயே சயனம் கொண்டிருக்க வேண்டும், என்பதே என் வரம்" என்றான்.

விஷ்ணு அவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவனை எதிர்ப்பதை விட்டுப் பாற்கடலுக்குச் சென்றார்.

நாராயணனாலும் அசுரனை வெற்றி கொள்ள முடியவில்லை என்பதைக் கண்ட தேவர்கள், நாரதரைத் தூண்டி கைலாச நாதனிடம் தங்கள் நிலைமையை எடுத்துக் கூறி அசுரனின் அழிவுக்கு வழி செய்யுமாறு வேண்டினர். தேவர்களைக் காப்பாற்றுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கத் தயாராக இருப்பதாகச் சொல்லி நாரதர் பரமசிவனிடம் சென்றார்.

"கைலாசபதே, அரக்கனைத் தாங்கள் ஒருவர்தான் சம்கரிக்க முடியும் என பிரம்மதேவன் ஏற்கனவே அவனுக்கு வரம் கொடுத்திருக்கிறார். நாராயணனும் அசுரனிடம் வெற்றி காண முடியாது திரும்பி விட்டார். பிரபோ, இனி நீங்கள் தான் தேவர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டினார்.

"நாரதா, உனக்குத் தெரியாத வழியா ? இப்போதே சென்று அசுரனுக்கு என்மீது கோபம் ஏற்படும்படி செய்; உன்விருப்பம் தானே முடிந்துவிடும்" என்று கூறினார்.

நாரதர் ஜாலந்தரனின் அரண்மனையை அடைந்தார்.

என்றும் இல்லாத திருநாளாகத் தன்னை தேடி நாரதர் வந்திருக்கிறாரே என அவரை அன்போடு வரவேற்று உபசரித்தான் அசுரன்.

நாரதர் அசுரனின் உபசாரங்களைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்தார். அவனுடைய உன்னதமான நிலைமையைப் பாராட்டினார். பேச்சின் நடுவே தாம் வந்த காரியத்தையும் அவர்முடித்துக் கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“ஜாலந்தரா, உன்னைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால், இங்கு வந்து நேரில் பார்த்த பின்னர் அவை அனைத்தும் மிகவும் குறைவாகவே கூறப்பட்டுள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. இத்தனை போகங்களுடன் வாழும் உன்னிடம் சகலமான ரத்தினங்களும் இருக்கின்றன. ஆனால் கைலாயத்தில் உள்ள உமா ரத்தினம் அதாவது பார்வதி உன்னிடம் இருப்பாளேயானால் உன் பெருமைக்கு இணை சொல்ல முடியாது” என்று புகழ்ந்தார்.

நாரதரின் புகழ்ச்சி ஜாலந்தரனின் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது. பார்வதியை அடைய வேண்டுமென்ற ஆசை அவனைப் பற்றிக் கொண்டது. உடனே வீரர்களுடன் யுத்தத்துக்குப் புறப்பட்டான்.

“பார்வதியை என்னிடம் ஒப்படைத்துவிட்டால் யாருக்கும் தீங்கு செய்யாது திரும்பி விடுகிறேன். இல்லையேல் கைலாசத்தையே நொறுக்கித் தவிடாக்கி விடுவேன்” என சிவபெருமானிடம் தூதுவர்களை அனுப்பினான் அசுரன்.

ஈசனும் கணங்களோடு யுத்தத்துக்குத் தயாரானார். இரு தரப்பினரும் கடுமையாக மோதிக் கொண்டனர். சிவகணங்கள் அரக்கர் படைகளினூடே புகுந்து, வீரர்களை அழித்து துவம்சம் செய்தனர். கணங்களால் அழிக்கப்பட்ட அசுர வீரர்களை, சஞ்ஜீவனி மந்திரத்தால் எழுப்பிக் கொண்டிருந்தார், அசுர குருவான சுக்ராச்சாரியார். அதனால் அசுரர்கள் முன்னிலும் பன்மடங்கு வேகத்துடன் கணங்களோடு சண்டையிட்டனர். பார்த்தார் ஈசன். சுக்கிராச்சாரியார் இருக்கும் வரை அசுரப் படைக்கு அழிவு உண்டாகாது என்பதைக் கண்டார். தாமதிக்காமல் உடனே தமது முகத்திலிருந்து ஒரு பெண்ணை உண்டாக்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுக்கிராச்சாரியை மயக்கிக் கொண்டு செல்லுமாறு பணித்தார். அவளும் இட்ட வேலையை செவ்வனே செய்து முடித்தாள்.

பின்னர் சிவபெருமான் பெரும் கோபத்தோடு ஜாலந்திரனை எதிர்த்தார். அவனது இரதத்தை முறித்துத் தள்ளினார். அசுரனும் மயங்கிக் கீழே விழுந்தான். ஆயினும், ஒரு கணத்தில் சமாளித்து எழுந்து விட்டான். மாயாஜால வித்தையில் பெயர் பெற்றவர்களாயிற்றே அசுரர்கள். அவனும் தனது மாய சக்தியினால் மோகினியை உருவாக்கி சிவனை மயக்க அனுப்பினான்.

மோகினி சிவனை மயக்கி விடுவாள் என்ற நம்பிக்கையில், சிவனின் வேடம் பூண்டு பார்வதியிடம் சென்றான். ஆனால், வந்தது அசுரன்தான் என்பதை சட்டென்று உணர்ந்த பார்வதி அங்கிருந்து உடனேயே மறைந்தாள். பார்வதியும் அவன் மாயையில் சிக்கவில்லை. போர் முனையிலிருக்கும் சிவனும் மோகினியின் மாயையில் சிக்கவில்லை.

அசுரனை அழிப்பது சுலபமான காரியமல்ல என்பதை அறிந்தாள் பார்வதி. மனைவியின் கற்பே அவனுக்குப் பெரும் பாதுகாப்பாக இருப்பதை உணர்ந்த தேவி விஷ்ணுவை நினைத்தாள். நாராயணனும் அங்கே தோன்றினார். நாராயணனை சிவனுக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டாள். உடனே, நாராயணனும் மாயையின் உதவியால் ஜாலந்திரனின் மனைவியான பிருந்தை நித்திரை செய்யும் வேளையில் துர்ஸ்வப்னம் தோன்றச் செய்தார்.

கண்விழித்த பிருந்தை, தான் கண்ட பயங்கரக் கனவை எண்ணி மனம் கலங்கினாள். ஏதோ பெருத்த அபாயம் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருப்பதையே கனவு கோடிட்டுக் காட்டியிருக்கிறதென்றும், அதற்குப் பரிகாரம் ஏதாகிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்ய வேண்டுமென்றும் அவள் விரும்பினாள். யாராவது பெரிய மனிதரைக் கண்டு விசாரிக்கலாமென அவள் புறப்பட்டு வரும்போது, அந்த வழியில் விஷ்ணு, முனிவராக அமர்ந்திருந்தார். அவரைக் கண்ட பிருந்தை அருகில் நெருங்கி, வணங்கினாள்.

"யாரம்மா, நீ ? என்ன வேண்டும் ?" என்று கேட்டார் விஷ்ணு.

"சுவாமி, நான் அசுரேந்திரனின் மனைவி பிருந்தை. நேற்றிரவு நான் பயங்கரக் கனவு ஒன்று கண்டேன். அதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. அதனால் ஏதும் ஆபத்து ஏற்படாதிருக்கப் பரிகாரம் செய்தால் தேவலை. அது பற்றித் தெரிந்து செல்லவே வந்தேன்" என்றாள் பிருந்தை.

அதே சமயம் விஷ்ணுவின் மாயையால் இரு அரக்கர்கள் திடீரென்று தோன்றி பிருந்தையைத் தூக்கிச் செல்ல முயற்சித்தனர்.

"சுவாமி, இந்தப் பாதகர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கதறினாள் பிருந்தை.

முனிவராக அமர்ந்திருந்த விஷ்ணு, "பெண்ணே, கவலைப்படாதே. நான் காப்பாற்றுகிறேன்" என்று அபயம் அளித்து, அந்த அரக்கர்களைப் பார்த்து ஹுங்காரம் செய்தார். அந்த க்ஷணமே இரு அரக்கர்களும் எரிந்து சாம்பலானார்கள்.

பிருந்தைக்கு முனிவரிடம் அசைக்க முடியாத பக்தி உண்டாக்கி விட்டது. அவரைப் பலவாறு போற்றிப் புகழ்ந்தாள்.

"சுவாமி, என் கணவர் கைலாசநாதனோடு யுத்தம் செய்யச் சென்றுள்ளார். அவர் நிலைமை எப்படி இருக்கிறது ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யுத்தத்தில் அவர் ஜயம் பெறுவாரா? தயவு செய்து உங்கள் யோக பலத்தால் அறிந்து சொல்லுங்கள், சுவாமி" என்று அவரை வேண்டினாள்.

"இதோ காட்டுகிறேன், பெண்ணே!" என்று சொன்னார் நாராயணன்.

அப்போது இரு குரங்குகள் வெட்டுண்டு இறந்த ஜாலந்தரனுடைய உடலை அங்கே கொண்டு வந்து போட்டன. கணவனது உடலைக் கண்டதும் பிருந்தை கண்ணீர் விட்டுக் கதறினாள்.

"சுவாமி, இன்னொரு வேண்டுகோள். இந்த அபலையைப் பாருங்கள். எனக்காக என் பதியை எழுப்பித் தாருங்கள்" என்று முனிவரை வேண்டினாள் பிருந்தை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாராயணன் அந்த உடலிலே புகுந்து ஜாலந்திரனாக மாறி அவளோடு கூடினார். பிருந்தையின் கற்புக்கு பங்கம் உண்டாகி விட்டது.

அதை உணர்ந்தபோது பிருந்தை துடிதுடித்து விட்டாள். தன்னைக் கபடமாக வஞ்சித்துவிட்ட நாராயணனைச் சபித்தாள். மனிதனாகப் பிறந்து, மனைவியை ராக்ஷஸனிடம் இழந்து திரியும்படியும், உதவிக்குக் குரங்குகளையே நாடவேண்டியதாயும் சாபமிட்டாள். இதுவரை கற்புக் கரசியாகத் திகழ்ந்து வந்த அவள், தன் உடலைப் பிறர் தீண்டியதால் ஏற்பட்டக் களங்கத்தைப் போக்கத் தீ முட்டி அதிலே குதித்து உயிரை விட்டு விட்டாள். நாராயணன் பித்துப் பிடித்தாற்போல் "பிருந்தே பிருந்தே" என்று கூவிக் கொண்டு அவள் சாம்பலில் விழுந்து புரண்டார்.

நாராயணனின் துக்கத்தைப் போக்கப் பார்வதி, பிருந்தையின் சாம்பலைத் துளஸியாக்கினாள். அந்த துளசியைத் தரித்துக் கொண்டு பித்தம் நீங்கியவரானார் மகாவிஷ்ணு.

இங்கு ஜாலந்திரனுடனான போர் தொடர்ந்து கொண்டிருந்தது. மனைவியின் கற்பு பலம் தான் அவனை இதுவரை காப்பாற்றிக் கொண்டு வந்தது. இனி அவனை கொல்வது எளிது என்பதை ஞானத்தால் உணர்ந்த ஈசன், தரையிலே கால் கட்டைவிரலால் ஒரு சக்கரத்தை எழுதினார்.

"ஜாலந்தரா, நீ சுத்த வீரனானால் இந்தச் சக்கரத்தை எடு, பார்க்கலாம் "என்றார்.

அசுரன் அதை எடுக்க எவ்வளவு முயன்றும் முடிய வில்லை. அதைப் பெயர்க்கக்கூட அவனால் இயலவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் அதை அநாயாசமாக எடுத்து அசுரன் மீது எறிந்தார். அப்போதே அவன் அழிந்தான். தேவர்கள் மலர்மாரி பெய்து ஈசனைப் போற்றிக் கொண்டாடினர்.

63. தேவர்கள் கர்வ பங்கம்

தேவாசுர யுத்தத்தில் வெற்றிபெற்ற தேவர்களுக்கு அளவில்லாத அகங்காரம் ஏற்பட்டுவிட்டது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சக்தியாலேயே அசுரர்களை வென்றதாகக் கூறிக் கொண்டனர்.

அப்போது அவர்களுக்கு நடுவே ஒரு யக்ஷம் தோன்றிற்று. அதன் நுனியோ, அடியோ தெரியவில்லை.

தேவர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அதைப் பார்த்து, "நீ யார்? எதற்கு இங்கு வந்திருக்கிறாய்? " என்று கேட்டனர்.

யக்ஷமோ அவர்களைப் பார்த்து, "நீ யார் என்பதை முதலில் சொல்" என்று கேட்டது.

ஒவ்வொரு தேவரும் தங்கள் பெருமைகளைக் கூறிக் கொண்டார்கள்.

யக்ஷம் ஒரு தர்ப்பையைத் தரையில் போட்டது.

"எத்தனையோ பெருமைகளைக் கூறிக்கொள்ளும் நீங்கள் அனைவருமே முயற்சி செய்து பாருங்கள். யாராவது இதை எடுக்க முடிகிறதா என்பதைப் பார்ப்போம்" என்றது.

தேவர்கள் அலட்சியமாக அந்தப் தர்ப்பையை எடுக்கக் குனிந்தனர். ஹூஹூம். தர்ப்பையைக் கொஞ்சமும் அசைக்க முடியவில்லை. வருணன் மழையைக் கொட்டினான்; தர்ப்பை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நனையவில்லை. அக்கினி அனலைக் கக்கினான்; தர்ப்பையைக் கொளுத்த முடியவில்லை. வாயுதேவன் புயலாக வீசினான்; தர்ப்பையோ இருந்த இடத்தைவிட்டுக் கொஞ்சமும் நகரவில்லை.

இந்த விதமாக ஒவ்வொரு தேவரும் முயற்சித்துத் தோல்வி கண்டனர்.

அவர்கள் கர்வம் கொஞ்சம் கொஞ்சமாக அகன்றது. அவர்கள் அனைவரும் இவையெல்லாவற்றையும் ஒரு பக்கமாக நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நந்தி தேவனிடம் சென்றார்கள்.

"இதென்ன மாயையாக இருக்கிறது. எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லையே, இந்த யக்ஷம் யார்? " என்று கேட்டனர்.

"சர்வேச்வரனே இவ்வாறு தோன்றியிருக்கிறார். அவரில்லாமல் எதுவுமே இல்லை. தேவாசுர யுத்தத்தில் அவருடைய அனுக்கிரகத்தாலேயே நீங்கள் வெற்றி கண்டீர்கள். அதை உணராது அகங்காரத்தோடு இருந்த உங்களுக்கு நிலைமையை விளக்கவே பகவான் இம்மாதிரி தோன்றினார்" என்றார் நந்திதேவன்.

தேவர்கள் உண்மை உணர்ந்து தங்கள் தவறுக்கு வருந்தி, மன்னிக்கும்படி சர்வேச்வரனை வேண்டித் துதித்தனர்.

64. அத்ரி முனிவருக்கு அருளுதல்

அத்ரி முனிவர் வமிச விருத்திக்காகப் பரமசிவனை குறித்துத் தவம் செய்தார்.

அவர் முன்பு மும்மூர்த்திகளும் ஒருங்கே தோன்றித் தரிசனம் கொடுத்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“நான் பரமசிவனைக் குறித்துத் தானே தவம் செய்தேன். மூவரும் வந்திருக்கிறீர்களே” என்று ஆச்சரியத்தோடு கேட்டார் முனிவர்.

“நாங்கள் மூவரும் ஒருவரே அன்றி வேறல்லர். எங்கள் மூவருடைய அம்சங்களாக உமக்கு மூன்று பிள்ளைகள் உண்டாவார்கள்” என்று அனுக்கிரகித்துச் சென்றனர் மும்மூர்த்திகளும்.

சிவனுடைய அருளால் துர்வாசரும், விஷ்ணுவின் அருளால் தத்தாத்ரேயரும். பிரம்மதேவன் அருளால் சந்திரனும் முனிவருக்கு உண்டானார்கள்.

துர்வாசர் மிகுந்த சிவபக்தர். அருகம் புல்லால் அவர் ஜலத்தை அருந்தியதால் துர்வாசர் என்ற காரணப்பெயரைப் பெற்றார். சிவபெருமானின் அனுக்கிரகம் அவருக்குப் பரிபூரணமாகக் கிட்டியிருந்தது. சாபம் அளிக்க அளிக்க அவர் தவம் பெருகும்.

ஒருசமயம் அவர் நதியில் நீராடிக் கொண்டிருக்கும் போது பிரவாகத்தின் வேகத்தில் அவர் அணிந்திருந்த வஸ்திரம் இழுத்துக் கொண்டு போகப்பட்டுவிட்டது. இடுப்பில் வஸ்திரம் இல்லாமல் வெளியே வர வெட்கப்பட்டுக் கொண்டு அவர் வெகு நேரம் ஜலத்திலேயே நின்றார்.

இதை அறிந்த திரௌபதி உடனே தன் பட்டு வஸ்திரத்தைக் கிழித்து அவரிடம் செல்லுமாறு பிரவாகத்தில் விட்டாள். அதை அணிந்து கொண்டு கரையேறினார் தூர்வாசர்.

சமயம் அறிந்து வாய் திறவாமல் உதவி செய்ததற்காக அவர் திரௌபதியைப் பலவாறு கொண்டாடினார்.

“திரௌபதி, என் மானத்தைக் காத்தாய். சமயத்தில் உன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானத்தைக் காக்க இது ஆயிரம் வஸ்திரமாக வரும்'' என்று அனுக்கிரகித்தார்.

பின்னர் ஒரு சமயம் துரியோதனன் சபையில் துச்சாதனன் அவளைத் துகில் உரியும்போது வஸ்திரம் முடிவே இல்லாது நீண்டு அவனைச் சோர்ந்து விழச் செய்தது முனிவரின் அனுக்கிரகமே.

65. க்ரஹபதி பெற்ற அனுக்கிரகம்

நர்மதா நதி தீரத்தில் சாண்டில்ய கோத்திரத்தில் விச்வநாதன் என்ற வேதியர் பிறந்தார். அவர் சக்ஷீஷ்மதி என்னும் பெண்ணை மணந்து கொண்டார். தம்பதிகள் இருவரும் காசி விஸ்வநாதரை மிகவும் பக்தியோடு ஆராதித்து வந்தனர்.

விச்வநாதருக்குப் பகவானிடம் அளவில்லாத பக்தி. ஒரு நாள் பகவானைத் துதித்து அவர் பெருமையை எட்டுச் சுலோகங்களால் வர்ணித்தார். அபிலாஷாஷ்டகம் எனப் பெயர் பெற்றது அந்த ஸ்துதி. சிவபெருமான் அத்துதியால் பெரிதும் மகிழ்ந்தவராய் விச்வநாதருக்குத் தரிசனம் தந்தார்.

“நானே உனக்குப் புத்திரனாகத் தோன்றுவேன்'' என்றும் அனுக்கிரகித்தார்.

சிறிது நாட்களிலேயே விச்வநாதருக்கு ஆண் மகவு பிறந்தது. பெரிதும் மகிழ்ச்சியுற்ற அவர், குழந்தைக்கு வைச்வாநரன் அல்லது கிருஹபதி எனப் பெயரிட்டு கண்ணும் கருத்துமாக வளர்த்து வரலானார்.

நாரதர் ஒரு சமயம் விச்வநாதரிடம் வந்தார். நாரதரை வரவேற்று உபசரித்து குழந்தையை எடுத்து வந்து ஆசீர்வாதம் செய்யுமாறு கோரினார், விச்வநாதர். குழந்தையைப் பார்த்ததும் நாரதரின் முகம் வாட்டமுற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மகரிஷி ஏன் இந்த முகவாட்டம்?" என்று பதட்டத்தோடு கேட்டார் விச்வநாதர்.

"நான் என்ன சொல்வேன்? குழந்தையை ஆசீர்வதிக்குமாறு வேண்டினாய். குழந்தைக்கோ ஆயுள் ஆறு வயதுதான். ஆறாம் வயதில் இவன் இடிமின்னலால் தாக்குண்டு உயிரிழப்பான்..." என்றார் நாரதர்.

நாரதரின் வார்த்தைகளைக் கேட்ட விச்வநாதர் மிகவும் வேதனை கொண்டவராய், "மகரிஷி, விச்வநாதனே எனக்குப் புத்திரனாகத் தோன்றுவதாக அனுக்கிரகித்துள்ளார். இந்தக் குழந்தைக்கு ஆறாவது வயதில் மரணம் சம்பவிக்குமென்று தாங்கள் கூறுகிறீர்கள். நான் என்ன செய்வேன்? இந்தக் கஷ்டத்திலிருந்து மீள வழி இல்லையா?" எனக் கேட்டார்.

"நீ ஆராதிக்கும் அந்தக் காசி விச்வநாதனையே பரிபூரணமாக நம்பு. அவர் அனுக்கிரகிப்பார்" என்று சொல்லி விட்டுச் சென்றார் நாரதர்.

விச்வநாதர் அது முதல் சதா நாரதரின் வார்த்தைகளையே நினைத்து நினைத்து வருந்தி வந்தார். நாட்கள் செல்லச் செல்ல அவர் துக்கமும் அதிகரித்து வந்தது. 'மகனை இழக்க வேண்டிய நாள் நெருங்கி வருகிறதே' என்று எண்ணிக் கவலை கொண்டார்.

ஒருநாள் வருத்தத்தோடு அமர்ந்திருந்த தந்தையைக் கண்ட குமாரன் அவரை நெருங்கி அவர் கவலைப் படுவதற்கான காரணத்தைக் கேட்டான். விச்வநாதரும் அவனிடம் தம்முடைய மனக் கவலையைத் தெரிவித்தார்.

"அப்பா, இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? காசி விச்வநாதரின் அருளால் நான் பிறந்ததாகக் கூறுகிறீர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான் காசிக்குச் சென்று தவமிருந்து, அந்த விச்வநாதனின் அனுக்கிரகத்தாலேயே நான் நீண்ட ஆயுளைப் பெற்றுத் திரும்புவேன்'' என்று தந்தையிடம் அனுமதி கேட்டான் கிருஹபதி.

''குழந்தே, வேண்டாம் இதெல்லாம். நாங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். உன்னை இழந்து துக்கிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருப்பதை நாம் மாற்ற முடியுமா'' என்றார் தந்தை.

கிருஹஸ்பதி தன் உறுதியைக் கைவிடவில்லை. பிடிவாதமாகத் தந்தையிடம் அனுமதி பெற்றுக் காசியை அடைந்தான். அங்கே ஒரிடத்தில் சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து அதனருகே அமர்ந்து சிவபெருமானைக் குறித்துக் கடும் தவம் மேற்கொண்டான்.

சிறுவனின் மன உறுதியைக் கண்ட சிவபெருமான் அவனுக்கு அனுக்கிரகிக்க எண்ணம் கொண்டார். முதலில் அவன் உள்ளத்தைப் பரிசோதித்துப் பார்க்க விருப்பம் கொண்டு இந்திரனைப் போன்று உருவமெடுத்து அவன் முன்பு தோன்றினார்.

''குழந்தாய், உன் தவத்துக்கு மெச்சினேன். நீ விரும்பும் வரம் யாது?'' என்று கேட்டார்.

கண்விழித்துப் பார்த்த கிருஹபதி தன் எதிரில் இந்திரன் இருப்பதைக் கண்டான்.

''ஐயா, நான் உம்மைக் குறித்துத் தவம் செய்யவில்லை. மேலும் நான் விரும்பும் வரத்தை உம்மால் அளிக்க முடியாது'' என்று சொல்லிக் கண்களை மூடிக் கொண்டான் கிருஹபதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அடே, நான் வந்து கேட்கும்போது உனக்கு அத்தனை ஆணவமா? வரம் கேட்கிறாயா, இல்லையா? இல்லையேல் இப்போதே வஜ்ராயுதத்தால் உன்னை அடித்துக் கொன்று விடுவேன்" என்றார் ஈசன்.

சிறுவன் 'கலகல' வென்று நகைத்தான்.

"ஐயா, நான் யார் என்பதை அறியாமல் பேசுகிறீர்கள். நான் சிவபக்தன். சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்கிறேன். உமது வஜ்ராயுதம் சிவபக்தனை ஒன்றும் செய்யாது என்பதை நான் சொல்லித் தெரியவேண்டிய அவசியமிருக்காது" என்றான் அவன்.

பகவானின் உள்ளம் திருப்தியால் நிறைந்தது. இந்திரனாகத் தோன்றிய அவர் மறைந்து அடுத்த கணம் அங்கே ரிஷபரூபனாகப் பார்வதி தேவியோடு தரிசனம் தந்தார். கிரஹபதி அளவில்லா ஆனந்தம் கொண்டு அவரை வலம் வந்து நமஸ்கரித்து துதித்தான்.

"குழந்தாய், உன் விருப்பம் நிறைவேறும். என்றும் அழிவின்றி என் சரீரமான அக்னியாக விளங்குவாய். இந்திரனுக்கும் யமனுக்கும் இடையில் உள்ள திக்குக்கு நீ தலைவனாக இருப்பாயாக. வேதியர் உன்னைக் கிருஹபதி என்று காரிஹபத்தியத்தில் பூஜிப்பர்" என்று அனுக்கிரகித்து மறைந்தார்.

அவ்வாறே கிருஹபதி அனைவராலும் போற்றப்பட்டு அழியாப் பெருமையை அடைந்தார்.

நைமிசாரண்ணிய வனத்து முனிவர்களுக்குச் சிவபெருமானுடைய மகாத்மியங்களை எடுத்துரைத்து வந்த சூதர், அவர்களைப் பார்த்து மேலும் சொல்லத் தொடங்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அன்புள்ள முனிவர்களே, கையிலாசநாதனின் மகிமையை எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் போதாது. அதற்கு முடிவே இல்லை. தம்மை ஆராதிப்பவரை அவர் ஒருபோதும் கைவிடுவதில்லை. தம்மைப் பூஜிப்பவர்களின் கஷ்டங்களை அவர் நீக்கி அவர்களுக்குச் சகல நன்மைகளையும் அளிக்கிறார்.

"பகவானைப் பூஜித்து நன்மைகளை அடைந்தவர்களின் சரித்திரங்களை நீங்கள் கேட்டீர்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பேர் அவரை ஆராதித்து நற்கதி அடைந்துள்ளனர்.

"சதமகன் என்னும் அசுரன் சிவபெருமானைக் குறித்து நூறு வருஷம் கடும் தவம் செய்து அவர் அனுக்கிரகத்தால் ஆயிரம் நகரங்களை அடைந்தான்.

"யாஜ்ஞவல்கியர் என்னும் முனிவர், பகவானை ஆராதித்து உத்தம ஞானத்தை அடைந்தார்.

வாலகில்லியர் பகவானின் அனுக்கிரகத்தால் ஒருவராலும் வெல்ல முடியாத கருடனை வெற்றி கண்டார்.

"இன்னும் எத்தனையெத்தனையோ ? அதற்கு முடிவே கிடையாதெனலாம். சர்வகாரண பூதரான சர்வேச்வரனை நீங்களும் ஏகாக்கிர சிந்தனையுடன் ஆராதித்து, அவர் அருள் பெற்று சகலவிதமான நன்மைகளோடு வாழ்ந்து வருவீர்களாக" என்று சூதர் தமது புராண பிரவசனத்தை முடித்தார்.

ஆரண்யம் முழுவதும் கிடுகிடுக்க, சிவகோஷம் எழுப்பினர் முனிவர்கள். அதன் தெய்வீக நாதத்தில் அவர்கள் தங்கள் தங்கள் உள்ளங்களிலே பகவானின் திருமேனியை நிறுத்தி அதன் தரிசனத்திலே மெய்மறந்து நின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

66. ருத்ராட்ச மகிமை

சிவ சின்னங்களில் ஒன்றான ருத்ராட்சம், சிவ பக்தர்களால் மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. சகலவிதமான சௌபாக்கியங்களையும் தரும் ருத்ராட்சம் எப்படி தோன்றியது என்பதை ஸ்ரீதேவி பாகவதம், ருத்ராட்ச ஜாபாலா உபநிஷதம் மற்றும் ஸ்காந்த புராணம் போன்ற புராணங்கள் அனைத்தும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

திரிபுர அசுரர்களை (தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி) சம்ஹாரம் செய்வதற்கு முன்னதாக தனது திருக்கண்களை மூடாமல் தியானம் புரிந்தாராம் ஈசன். அவ்வாறு தியானத்தில் அமர்ந்திருந்த வேளையில், அவரது திறந்த விழிகளிலிருந்து விழுந்த நீர்த்துளிகள் பூமியில் விழுந்து ருத்ராட்ச மரங்களாகத் துளிர்த்தன.

இம்மரங்களில் காய்க்கும் காய்களே ருத்ராட்சம் எனப்படுகிறது. பாவங்களைக் கண்டிப்பதால் இதற்கு 'கண்டிகை' என்று மற்றொரு பெயரும் உண்டு. நன்கு கனிந்த ருத்ராட்சத்தைக் கண்ணால் பார்த்தாலே புண்ணியமாம். உடம்பில் அணிந்து கொண்டாலோ நூறு கோடி புண்ணியம் என்கின்றன புராணங்கள்.

ருத்ராட்சத்தின் மேலே உள்ள கோடுகளைக் கொண்டு அது எத்தனை முகம் கொண்ட ருத்ராட்சம் என்பதை அறியலாம். ஒவ்வொரு முக ருத்ராட்சத்துக்கும் ஒவ்வொரு விதமான சக்தி உண்டு. ஒரு முக ருத்ராட்சம் சிவனின் அம்சமாகவே பார்க்கப்படுகிறது. அதேபோல 14 முக ருத்ராட்சத்தை அணிபவர் சிவனின் அம்சமாகவே பார்க்கப்படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

108 அல்லது 54 அல்லது 27 என்ற எண்ணிக்கை கொண்ட ருத்ராட்சங்களை மாலையாக அணிந்தாலும் அந்த மாலையைக் கொண்டு ஜபம் செய்தாலும் அசுவமேத யாகம் செய்த பலன் கிட்டும் என்கிறது தேவி பாகவதம்.

சிகையில் 1 ருத்ராட்சம், தலையில் 36, கழுத்தில் 32, மார்பில் 5, கையில் 16, மணிக்கட்டில் 12 அணிய வேண்டும் என்கிறது பேரூர் புராணம்.

இத்தகைய அற்புத பலன் தரும் ருத்ராட்சங்களை புனிதப்படுத்தி அணிவது சிறந்த பலனைத் தரும், என்கிறார்கள் சான்றோர்கள். அவ்விதம் புனிதப்படுத்துவதற்கு சில வழிவகைகள் இருக்கிறது. முதல் நாள் இரவே ருத்ராட்சத்தை எண்ணெயில் ஊற வைத்து, மறுநாள் ஆசனத்தில் கிழக்கு முகமாக உட்கார்ந்தபடி 'ஓம் நமசிவாய' என்று சிவபெருமானின் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே பக்தியுடனும், சிரத்தையுடனும் பஞ்சகவ்யத்தாலும் (பசுஞ்சாணம், கோமியம், பசும்பால், பசு நெய், பசுந்தயிர்) மற்றும் சந்தனத்தாலும் அபிஷேகம் செய்து, முறைப்படி மந்திரங்களால் உருவேற்றிய பிறகே அணிய வேண்டும் என்று சான்றோர் கூறுவர்.

இயற்கையாகவே துவாரம் உள்ள ருத்ராட்சமே சிறந்தது. முண்டு முடிச்சில்லாமல், பளபளப்பாகவும், திடமானதாகவும் உள்ள ருத்ராட்சங்கள் மங்கலமானவை. புழுக்கள் அரித்தவை, பிளவுபட்டவை, உடைந்தவை, முட்களில்லாதவை, மூடப்பட்டவை ஆகிய ருத்ராட்சங்களை விலக்கிவிட வேண்டும். அரிநெல்லிக்காயளவு உள்ள ருத்ராட்சமே மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தகைய சிறப்புமிகு ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு செல்வம், ஆரோக்கியம், அதிர்ஷ்டம், சக்தி மற்றும் சௌபாக்கியங்களும் பெருகும். ருத்ராட்சத்தையும், விபூதியையும் அணிந்தவர்களை பேய், பிசாசு அண்டாது. விஷப் பாம்பு தீண்டாது.

சிவ பூஜை செய்யும் போது ருத்ராட்சம் அணிந்து கொண்டு செய்தால் பல கோடி பயனுண்டாகும் என்கின்றனர் சாஸ்திரம் அறிந்தவர்கள்.

ருத்ராட்சத்தை உறங்கும் போதும், தேக உபாதைகளைத் தீர்க்கச் செல்லும் போதும், ஜனன, மரண தீட்டு காலங்களிலும் அணியக்கூடாது என்கின்றன புராணங்கள்.

67. ருத்ராட்ச முகங்களும், அதன் பயன்களும்

எத்தனை முக ருத்ராட்சங்கள் இருக்கின்றன என்று இதுவரை முழுமையான தகவலில்லை. என்றாலும், 21 முகங்கள் உள்ள ருத்ராட்சங்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

ஒரு முக ருத்ராட்சம்

இது சிவனின் அம்சம் என அறியப்படுகிறது. இதை அணிவதால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும். மோட்சம் கிடைக்கும் என்கின்றன புராணங்கள்.

இரு முக ருத்ராட்சம்

சந்திரனின் அம்சமான இந்த ருத்ராட்சத்தை அணிந்தால் குடும்ப உறவு மேம்படுமாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்று முக ருத்ராட்சம்

அக்னியின் ஆதிக்கம் பெற்ற இந்த ருத்ராட்சத்தை அணிவதால், இரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய் போன்ற நோய்களும் குணமாகும் என கூறப்படுகிறது.

நான்கு முக ருத்ராட்சம்

நான்முகனின் ஆசி பெற்ற இந்த ருத்ராட்சத்தை அணிவதால் மனம் சாந்தியும், வாழ்வு நிலையும் உயர்வடையுமாம்.

ஐந்து முக ருத்ராட்சம்

ருத்ரனின் அம்சமான இந்த ருத்ராட்சத்தை அணிந்தால் விபத்துக்களால் மரணமோ, அகால மரணமோ ஏற்படாது என நம்பப்படுகிறது.

ஆறு முக ருத்ராட்சம்

கார்த்திகேயனின் அருள் பெற்ற இந்த ருத்ராட்சத்தை அணிவதால், மன ஆரோக்கியமும், பேச்சாற்றலும் கிடைக்கப் பெறுமாம்.

ஏழு முக ருத்ராட்சம்

ஈசன், சூரியன், சப்த மாதர்கள், ஆதிசேஷன், மன்மதன், முருகன் ஆகியோரின் ஆசி பெற்ற இந்த ருத்ராட்சத்தை அணிவதால், விஷ ஜந்துகள் அண்டாது, எதிரிகள் அழிவர் என்கின்றன புராணங்கள்.

எட்டு முக ருத்ராட்சம்

கணபதியின் ஆசி பெற்ற இந்த ருத்ராட்சம் வாழ்வில் எதிர்ப்பட்ட தடைகளை நீக்கி புகழடையச் செய்யுமாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்பது முக ருத்ராட்சம்

துர்க்கா தேவியின் ஆதிக்கம் நிறைந்த இந்த ருத்ராட்சம் பயமின்றி வாழ வழிவகுக்குமாம்.

பத்து முக ருத்ராட்சம்

சேஷசயனனின் ஆசி பெற்ற இந்த ருத்ராட்சத்தை வழிபடுவதால் பில்லி சூனியம் போன்ற துர்பலன்களிலிருந்து விடுபடுவது நிச்சயம் என்கின்றன புராணங்கள்.

பதினொரு முக ருத்ராட்சம்

வாயு புத்திரனின் அருள் பெற்ற இந்த ருத்ராட்சத்தை அணிவதால் நீண்ட ஆயுளும், செய்யும் முயற்சிகளால் வெற்றியும் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

பன்னிரண்டு முக ருத்ராட்சம்

மகாவிஷ்ணுவின் ஆளுமை நிறைந்த இந்த ருத்ராட்சம், வியாதிகளைப் பற்றிய பயத்தை நீக்கி, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழிவகுக்குமாம்.

பதிமூன்று முக ருத்ராட்சம்

தேவேந்திரன், மகாலட்சுமி, முருகன் மற்றும் மன்மதனின் ஆசி பெற்ற இந்த ருத்ராட்சம் சொர்க்க வாழ்வை அளிக்கவல்லதாம்.

பதினான்கு முகங்கள்

ஈசனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியதால் தனிச் சிறப்பு வாய்ந்த இந்த ருத்ராட்சத்தை அணிபவர்கள், தர்மத்தை நிலைநாட்டும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பார்களாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதினைந்து முகங்கள்

சிவனின் அம்சமான இந்த ருத்ராட்சம் இகபர சுகங்களை தரும் என நம்பப்படுகிறது.

பதினாறு முகங்கள்

ஸ்ரீ மகாகாளேசுவரரின் ஆசி பெற்ற இந்த ருத்ராட்சத்தை அணிந்தாலே வெற்றிதான் என்கின்றன புராணங்கள்.

பதினேழு முகங்கள்

விஸ்வகர்மாவின் அம்சமாகக் கருதப்படும் இந்த ருத்ராட்சத்தை பூஜிப்பவர், மிகப்பெரும் செல்வந்தராவாராம்.

பதினெட்டு முகங்கள்

பூமி ,மாதாவின் அம்சம் எனப் போற்றப்படும் இந்த ருத்ராட்சம், நோயற்ற வாழ்வை அளிக்கும் என நம்பப்படுகிறது.

பத்தொன்பது முக ருத்ராட்சம்

ஸ்ரீ மகா விஷ்ணுவின் ஆதிக்கம் பெற்ற இந்த ருத்ராட்சம் செல்லும் இடங்களிலெல்லாம் வெற்றியைத் தரும் என்கிறார்கள் சான்றோர்கள்.

இருபது முக ருத்ராட்சம்

நான்முகனின் அம்சமான இந்த ருத்ராட்சம் சகலவிதமான நற்பலன்களையும் அளிக்கவல்லதாம்.

இருபத்தியொரு முக ருத்ராட்சம்

குபேரனின் அம்சமான இந்த ருத்ராட்சத்தை தரிப்பவர்களை பில்லி சூன்யம் போன்ற துர்பலன்கள் அண்டவே அண்டாதாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

68. விபூதி மகிமை

உலகில் உள்ள எந்தப் பொருளாக இருந்தாலும் (சங்கைத் தவிர) நெருப்பில் போட்டவுடன் கருமையாகி விடும். ஆனால் கருமையான சாண உருண்டையை நெருப்பில் போட்டவுடன் வெண்மையாகி விபூதியாகிறது. வெள்ளையான விபூதியை அணிந்தவுடன் உள்ளத்திலுள்ள கருமை நீங்கி ஞான ஒளி பெறுகிறது.

சாமானிய சாம்பலுக்கே ஆற்றல் அதிகமிருக்கும்போது விதிப்படி தயாரித்த விபூதிக்கு எத்தனை பெருமை இருக்கும் என்பதை யூகிக்கலாம்!

“தங்கத்தை விட தங்க பஸ்பத்துக்கு சக்தி அதிகம். சாணத்தை விட சாணத்தின் பஸ்பத்திற்கு (விபூதிக்கு) ஆற்றல் அதிகம்” என்கிறார் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்.

பொன்னையும் பொருளையும் காப்பாற்றுவதைப் போல இந்த விபூதியைப் பாதுகாக்க வேண்டும். எந்த நல்ல காரியங்களை செய்ய ஆரம்பிக்கும் போதும் விபூதி அணிந்த பிறகே ஆரம்பிக்க வேண்டும்.

‘திருப்புகழ்’ அருளிய அருணகிரிநாதர் அதில் பழனியைப் பற்றி பாடும்போது, ‘ஆறுமுகம் ஆறுமுகம் என்று ஆறு முறை சொல்லிய பிறகு விபூதி இட்டுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறார். அதே பாடலில், முருகனே திருநீறு இட்டுக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

விபூதியை அணியும் முறை :

விபூதியைக் குழைத்து காலையில் கிழக்கு முகமாகவும், மாலையில் வடக்கு முகமாகவும் பார்த்தபடி மந்திரங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உச்சரித்துக் கொண்டே தண்ணீர்விட்டு குழைக்க வேண்டும். தலை, நெற்றி, மார்பு, தொப்புள், வலது முழந்தாள், இடது முழந்தாள், வலது தோள், இடது தோள், வலது முழங்கை, இடது முழங்கை, கணுக்கைகள் இரண்டு, விலாப்புறங்கள் இரண்டு, முதுகு, கழுத்து முதலான 16 இடங்களில் விபூதியை அணிந்து கொள்ள வேண்டும். மோதிர விரல், நடு விரல் மற்றும் ஆள்காட்டி விரலால் விபூதியை 3 கோடுகளாக இட்டுக் கொள்ள வேண்டும். 3 கோடுகளில் மேல் கோடு சாம வேதமாகவும், நடு கோடு யஜுர் வேதமாகவும், அடிக்கோடு ரிக்வேத வடிவமாகவும் இருக்கிறது. அதனால் இதை 'த்ரயாயுஷம்' என்றும் அழைக்கின்றனர்.

தெய்வ சந்நிதியிலும், குரு சந்நிதானத்திலும், கட்டை விரலும், மோதிர விரலும் சேர்த்துக் கொடுக்கப்படும் விபூதியை அணிந்து கொள்வதே நல்லது.

உயிருக்கு உண்டான குற்றங்களை நீறாக்குவதால் 'திருநீறு' என்றும் சம்பத்தைத் தருவதால் 'பூதி' என்றும் அழைக்கப்படுவதாக ஆகமங்கள் கூறுகின்றன.

திருநீறு அணிந்து கொண்டு அறத்தை செய்யும் போது அதற்கான முழு பலனும் கிடைக்கப் பெறுகிறது.

69. ஈசனின் ஐவகைத் தோற்றம்

1. சத்தியோசாதம் : சுவாத லோகித கற்பத்தில், பிரம்மனுக்கு அழகிய இளம் பாலகனாய் காட்சியளித்தார். இது 'சத்தியோசாதம்' எனும் தோற்றம்.

2. வாமதேவம் : இரத்த கற்பத்தில், சடையில் பாம்பணிந்து, கரங்களில் மானும், மழுவும் ஏந்தி, பிரம்மனுக்கு ஈசன் காட்சியளித்த தோற்றம் 'வாமதேவம்'.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. தத்புருஷம் : பீத கற்பத்தில், சடையில் இளம் மதியை அணிந்து கொண்டு, நான்முகனுக்கு காட்சி கொடுத்த தோற்றம் 'தத்புருஷம்'.

4. அகோரரூபம் : நீல கற்பத்தில், நெருப்பும், வாளும் கையிலேந்தி கரிய ரூபத்துடன் ஈசன் தோற்றமளித்ததே 'அகோர ரூபம்'.

5. ஈசானம் : விஸ்வரூப கற்பத்தில், சடையில் பிறைச் சந்திரன், நெற்றிக் கண், கோரைப் பற்கள் கொண்டு இருபுறமும் இரு மாதர்களோடு தோன்றினார்.

70. பஞ்சபூத ஸ்தலங்கள்

1.	காஞ்சிபுரம்	பிருத்வி	ஏகாம்பரேஸ்வரர்
2.	திருவானைக்கா	நீர்	ஜம்புகேஸ்வரர்
3.	திருவண்ணாமலை	அக்னி	அருணாச்சலேஸ்வரர்
4.	திரு காளஹத்தி	வாயு	காளத்தீஸ்வரர்
5.	சிதம்பரம்	ஆகாயம்	நடராஜர்

71. நடன ஸ்தலங்கள்

சிதம்பரம்	கனக சபை
மதுரை	ரஜத சபை
திருநெல்வேலி	தாமிர சபை
திருவாலங்காடு	ரத்தின சபை
திருக்குற்றாலம்	சித்திர சபை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

72. பன்னிரு ஜோதிர்லிங்கங்களின் விவரங்கள்

வ. எண்.	மாநிலம்	தலப்பெயர்	லிங்கங்களின் பெயர்
1.	தமிழ்நாடு	இராமேஸ்வரம் (சேது)	இராமேஸ்வர லிங்கம்
2.	ஆந்திரா	ஸ்ரீசைலம்	மல்லிகார்ஜுன லிங்கம்
3.	மஹாராஷ்டிரா	பீமாசங்கர் (டாகினி)	பீமசங்கர லிங்கம்
4.	மஹாராஷ்டிரா	வெரூல்	குஷ்மேச லிங்கம்
5.	மஹாராஷ்டிரா	கோதாவரி தீரம் திரியம்பகம்	திரியம்பக லிங்கம்
6.	குஜராத்	சௌராஷ்டிரா சோமநாதம்	சோமநாத லிங்கம்
7.	குஜராத்	தாருகாவனம்	நாகேசுவரலிங்கம்
8.	மத்தியப்பிரதேசம்	ஓம்காரேஷ்வர் மாந்தாதா	ஓம்காரேஷ்வர்
9.	மத்தியப்பிரதேசம்	உஜ்ஜயினி	மகா காளலிங்கம்
10.	ஜார்கண்ட்	தேவ்கர்ஹ் சிதாபுரம்	வைத்தியநாத லிங்கம்
11.	உத்தரப்பிரதேசம்	வாரணாசி	விச்வேச்வர லிங்கம்
12.	உத்தரப்பிரதேசம்	ஹிமோத்திரி (திருக்கேதாரம்)	கேதார லிங்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

SRI SHIVA PURANAM

(TAMIL)

धर्मो रक्षति रक्षितः

GIRI

SINCE 1951

FOR INDIAN CULTURE & TRADITION

GIRI®

Easwari Library
001-E26787

ISBN : 978-81-7950-194-8
9 788179 501948

91001194

Price ₹ 100.00